
# சித்த மருத்துவ நோய்நாடல் நோய்முதனாடல் திரட்டு

முதல் பாகம்



©
தமிழ்நாடு அரசு
1967


LC:4:6
NB3.1
143266




# சித்த மருத்துவ நோய்நாடல் நோய்முதனாடல் திரட்டு

## முதல் பாகம்.

ஆக்கியோன் :

டாக்டர் ம. சண்முகவேலு, எச்.பி.ஐ.எம்.,

முன்னாள் பேராசிரியர்,

அரசினர் இந்திய இணைப்பு மருத்துவக் கல்லூரி, சென்னை-10.

முன்னாள் சித்த ஆராய்ச்சியாளர், சித்த ஆராய்ச்சி நிலையம்

(I.L.W.A., Ltd,) கோயமுத்தூர்.

©

தமிழ்நாடு அரசு

1987

தமிழ்நாடு சித்த மருத்துவ வாரிய வெளியீடு

[விலை ரூ. 26-95

## பதிப்புரை

மருத்துவர் ம. சண்முகவேலு, எச்.பி.ஐ.எம்., அவர்கள் உருவாக்கிய **சித்த மருத்துவ நோய் நாடல் நோய் முதல் நாடல் திரட்டு பாகம்—1** என்ற பி.எஸ்.எம். & எஸ். பாட நூலை மறுபதிப்பாக வெளியிடுவதில் வாரியம் மகிழ்ச்சியடைகிறது.

தமிழ் மருத்துவமாம் சித்த மருத்துவ வளர்ச்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் தந்துதவும் தமிழக முதல்வர் **மாண்புமிகு எம். ஜி. இராமச்சந்திரன்** அவர்களுக்கு நெஞ்சார்ந்த என் நன்றி உரித்தாகட்டும். முதல்வர் வழி நின்று செவ்வனே செயல்புரிந்து வரும் மாண்புமிகு நல்வாழ்வுத் துறை **அமைச்சர் ப. உ. சண்முகம்** அவர்களுக்கு என் நன்றிகள்.

சித்த மருத்துவம் சிறக்க சிந்தித்து செயல்படும் வாரியத் தலைவர் **முத்தமிழ்க் காவலர் கி. ஆ. பெ. விசுவநாதம்** அவர்களை என் இதயம் என்றென்றும் நின்று பணியும். விரும்பி இன்முகத்தோடு கேட்டவைகள் அனைத்தையும் எங்களுக்களித்திடும் இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதித்துறை ஆணையர் மற்றும் அரசு செயலாளர் திருமிகு. டி. முருகராஜ், இ.ஆ.ப., அவர்களுக்கும் நன்றியை உரியதாக்குகிறேன்.

இந்நூல் உருவாக்கத்திற்கு பெரிதும் துணை நின்ற தனி அலுவலர், ஆய்வு மருத்துவ அலுவலர் அவர்கட்கும் என் அன்புநிறை நன்றி நிறைக. இந் நூலாக்கம் நிறைவு பெறத் துணை நின்ற தமிழ்ப்புலவர்கள், அலுவலகப் பணியாளர்கள், மற்றும் நன்முறையில் அச்சிட்டுத் தந்த அரசு மைய அச்சகத்தார்க்கும் நான் நன்றி நவில்கின்றேன்.

(ஓம்.) குத்சியா காந்தி,

உறுப்பினர்—செயலாளர்,

தமிழ்நாடு சித்த மருத்துவ வாரியம்,

சென்னை—600 106.

## முன்னுரிமை.

எல்லாம் வல்ல இறைவன் திருவருளை முன்னிட்டு **"சித்த மருத்துவ நோய் நாடல் நோய் முதனாடல் திரட்டு"** என்னும் இந்நூல், நான் எழுதி வரும் சில சித்த மருத்துவ நூல்களில் முதன் முதலாகப் பதிப்புக்குக் கொடுக்கப்படும் நூலாகும். இஃது சித்த மருத்துவ முன்னேற்றத்தில் சிரத்தை கொண்ட உயர் திருவாளர் நவீன மருத்துவப் பேராசிரியர் இராவ் பகதூர் ம. ரா. குருசாமி முதலியார் அவர்கள், B.A., M.D., (முன்னாள் இந்திய மருத்துவ இலாக்காவின் கௌரவ டைரக்டர் 1949-1955), இந்திய மருத்துவக் கல்லூரி சித்த வகுப்பு மாணவர்களுக்கு பாடப் புத்தகங்களை முறையாக அச்சிட்டு வழங்க அக்காலத்தில் ஏற்பாடுகள் செய்தனர். அங்ஙனம் அவர்களது உத்தரவுக்கு இணங்கிச் சிற்சில பாடப் புத்தகங்களை அத்தந்தப் பாடத்தைக் கற்றுக் கொடுக்கும் ஆசிரியர்களைக் கொண்டு எழுதி முடித்தனர்.

நான் 1931-ம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் 1952-ம் ஆண்டு நவம்பர் மாதம் வரை இராமநாதபுரம் ஜில்லா போர்டைச் சேர்ந்த திருக்கோட்டியூர் சித்த மருத்துவ சாலையில் மருத்துவ அலுவலராகப் பணியாற்றி வரும்போது என்னை இக் கல்லூரியில் சித்த வகுப்பு ஆசிரியர்களிலொருவராய்ச் சேர்த்துக்கொள்ள வேண்டிய ஏற்பாடுகளை மேற் குறிப்பிட்ட மேன்மை தங்கிய கௌரவ டைரக்டர் அவர்கள் செய்தார்கள். என்னிடம் நேரிலும் இவ் விடயம்பற்றி உற்சாகமாய்ச் சொல்லி இக் கல்லூரியில் ஆசிரியராகச் சேர்ந்து தொண்டு புரியும்படி அன்புடன் ஆக்ஞாபித்தார்கள். அங்ஙனம் பிறப்பித்த அரசினர் உத்தரவுக் கிணங்கி 1952-ம் ஆண்டு நவம்பர் மாதம் 26-ந் தேதி முதல் 1960-ம் ஆண்டு செப்டம்பர் வரை இக்கல்லூரியில் சித்த வகுப்பு ஆசிரியர்களிலொருவனானேன். மாணவர்களுக்குக் கற்றுக் கொடுக்கும் பணியில் எனக்குக் கட்டளையிட்ட பாடங்களைக் கற்றுக் கொடுத்து வந்தேன்.

1953-ம் ஆண்டு இறுதியில் மேற்படி கௌரவ டைரக்டரவர்கள் ஆசிரியர்கள் அனைவர்களுடையவும் "பாடக் குறிப்புகளை" (Notes prepared by all Lecturers in their concerned subject) அவர்களது பார்வைக்கு அனுப்பி வைக்கும்படி சுற்றறிக்கை (Cirular) பிறப்பித்தார்கள். என்னுடைய பாடக் குறிப்பு களைப் பார்வையிட்டு அதன் மேல் கீழ்கண்ட அவர்களது அபிப் பிராயக் குறிப்பு (Remarks) எழுதி என்னிடம் அதற்குரிய நகல் கொடுக்கும்படி உத்தரவளித்தனர். (Extract from the remarks of the Honorary Director of Indigenous Medicine).

The remarks of the Honorary Director of Indigenous Medicine are as follows.—Laborious Collection of information—May be used for the benefit of Students—May be analysed and published".

என்னிடம் நேரிலும் பன்முறை சொல்லி உற்சாகப்படுத்தினார்கள். சித்த மருத்துவத்தில் எனக்குத் தெரிந்த யாவற்று அனுபவங் களையும் புத்தக ரூபமாக இயற்ற வேண்டுமெனவும் சிறந்ததோர் யோசனை கூறினார்கள்

அவர்களது சீரிய அன்பு கனிந்த கட்டளையை சிரமேற் கொண்டு எனக்குத் தெரிந்தளவில் சில சித்த மருத்துவ அனுபவ நூல்களை எழுதத் துணிந்தேன். அவற்றுள் முதன் முதலாக அச்சுக்கு வருவது இந்திய மருத்துவக் கல்லூரி சித்த வகுப்பு மாணவர்களுக்குப் பயன்படும்படியான "சித்த மருத்துவ நோய் நாடல், நோய் முதனாடல் திரட்டு" என்னும் பாடப்புத்தகமே யாம்

அவ்விதம் என்னை உற்சாகப்படுத்திய அன்பு மிகுந்த பெரியார் அவர்கட்கு நான் என்றென்றும் நன்றியுடன் கடமைப்பட்டுள் ளேன். இதனை நான் மாணவர்களின் நன்மையைக் கருதி இப் பாடப் புத்தகம் இல்லாத குறையை நிவர்த்திக்கும் பொருட்டு மிகுந்த பிரயாசையுடன் எழுதி அரசினர் பதிப்பகத்தில் அச்சிடு வதற்கு தயாரானேன். அதற்குள் முன்னாள் இந்திய மருத்துவ இணைப்புக் கல்லூரி மூடப்படும்படியாயிற்று. அதன் பின் 1961-ம்

ஆண்டு ஜனவரி மாதம் முதல் நாள் வரை கோவை சித்த ஆராய்ச்சி நிலையத்தின் தலைவராகப் பணிபுரிந்து வருகிறேன். இந்நிலையம் கோவை ஸ்ரீ. ஜி. டி. நாயுடு அவர்கள் தலைமையில் Industrial Labour Welfare Association Limited, ஆதரவில் நடை பெற்று வருகிறது.

இப்புத்தகத்தைத் தொகுப்பதற்கு பல நூல்கள், பல கை எழுத்துப் பிரதிகள், ஏட்டுப் பிரதிகள் இவைகளிலிருந்து சேகரிக் கப்பட்ட விடயங்களை ஆதாரமாகக் கொண்டு மாணவர்களுக்குப் பயன்படும் வகையில் "திரட்டு நூல்" போலாக தொகுக்கப்பட்டிருக் கின்றனவேயொழிய என் சொந்தமான பாத்தியதை யாதொன்று மில்லை என்பதைச் சந்தேகமறத் தெரியப்படுத்திக் கொண்டேன். ஆங்காங்கு நூல்களின் பெயர், கை எழுத்துப் பிரதி, ஏட்டுப் பிரதி என்ற விவரங்களைக் குறிப்பிட்டு முள்ளேன். சிற் சில இடங் களில் என் சொந்தக் கருத்துக்களை விளக்கியுள்ளேன். கை எழுத்துப் பிரதிகளில் பெரும்பாலானவை பண்டிட் வைத்திய ரத்னா சி. எஸ். முருகேச முதலியாரவர்கள், பண்டிட் வில்லை செந்தமிழ் ரத்னா கரம் மருத்துவமணி சண்முக சுந்தர முதலியா ரவர்கள், டாக்டர் கே. கண்ணையா நாயுடு அவர்கள் ஆகிய இவர் கள் இந்திய மருத்துவப் பள்ளி ஆரம்ப காலத்தில் சித்த வகுப்பு ஆசிரியர்களாயிருந்து பணியாற்றிய காலத்தில் எழுதிவைத்துள்ள பாடக் குறிப்புகளாகும். அன்றியும் பல இடங்களில் ஏட்டுப் பிரதிகள் சேகரித்து அவற்றிலிருந்தும் குறிப்புகள் எடுத்து இந் நூலில் சேர்க்கப்பட்டுமுள்ளன. அவர்கள் அனைவருக்கும் என் நன்றி உரித்தாகுக !

"சித்த மருத்துவாங்கச் சுருக்கத்திலிருந்து" சில விடயங்களை இந் நூலுக்குப் பொருந்தும் வகையில் ஆங்காங்கு சேர்க்கப்பட்டி ருப்பதோடு ; "சித்த மருத்துவம் (முதற் பாகம்)" என்னும் பாடப் புத்தகத்தில் கூறியுள்ள நோய்களையும் ஒழுங்குபடுத்தி வெவ்வேறு குறிப்புகளுடன் (மருத்துவம் மட்டிலும் நீங்கலாக) மற்றப் பகுதி களை இந் நூலில் விளக்கியுள்ளேன். நோய்நாடல் நோய் முத னாடல் எனயிருப்பதால் நோய்களைப்பற்றிய வரலாறுகள் யாவும

இதில் விளக்க வேண்டியிருக்கின்றன. மேற்கூறிய நூல்களை இயற்றிய பெரியார்கள் டாக்டர் சி. எஸ். உத்தமராயன் அவர்கள், H.P.I.M., டாக்டர் சி. என். குப்புசாமி அவர்கள், H.P.I.M., ஆகிய இவர்களுக்கு என் நன்றி உரியதாகுக!

இந் நூலை யான் தொகுப்பதற்கு தூண்டுகோலாகவும் அனுசரனையாகவுமிருந்த என் நண்பர் முன்னாள் சித்த வகுப்புத் தலைமை ஆசிரியரும், அப்பால் சித்த ஆராய்ச்சித் தலைமை ஆபீசருமான டாக்டர் சி. எஸ். உத்தமராயன், H.P.I.M., அவர்களுக்கும், இதனை தற்சமயம் பாளையங்கோட்டை இந்திய மருத்துவக் கல்லூரி சித்தா பி.ஐ.எம். மாணவர்களுக்குப் பாடப் புத்தகமாகப் பயன்பெறும் பொருட்டு சித்தா கல்வி சம்மந்தமான பாடப் புத்தகக் குழுவினர்களின் விருப்பத்திற் கிணங்க மீண்டும் பதிப்புக்கு எடுத்துக் கொள்ளுவது பற்றி மகிழ்ச்சியடைவதோடு அன்னார் அனைவர்களுக்கும் என் நன்றியைச் செலுத்துகிறேன்.

நிற்க இந் நூலை நல்ல தாளில் அழகுபெற பதிப்பித்துக் கொடுக்கும் அரசினர் அச்சகத் தலைவர் அவர்கட்கும் என் நன்றி உரிமை பெறற்பாலதாம்.

இந் நூலைத் தொகுப்பதற்கு அடிப்படையாகயிருந்த நூற் களின் பெயர்கள் தனியாகவும் குறிக்கப்பட்டுள்ளன. அந் நூல் களை இயற்றிய பெரியார்கட்கு மீண்டும் என் நன்றியைத் தெரிவித் துக் கொள்ளுகிறேன்.

**ம. சண்முகவேலு, எச். பி. ஐ. எம்.,**
முன்னாள் பேராசிரியர்,
அரசினர் இந்திய இணைப்பு மருத்துவக் கல்லூரி, சென்னை-10,
தற்சமயம் சித்த ஆராய்ச்சியாளர், சித்த ஆராய்ச்சி நிலையம்,
(I.L.W.A. Ltd.), கோயமுத்தூர்.

கோயமுத்தூர்,
12—4—1967.

இந் நூலைத் தொகுப்பதற்கு அடிப்படையான இதர நூல்களாவன :—


1. சித்த மருத்துவாங்கச் சுருக்கம்.
2. சித்த மருத்துவம் (முதற் பாகம்).
3. யூகிமுனி சிந்தாமணி.
4. பதினெண்சித்தர் தாடி நூல்.
5. தேரர் மருத்துப் பாரதம்.
6. தேரர் யமகம்.
7. கண்ணுசாமியம்.
8. சிகிச்சா ரத்னதீபம்.
9. வயித்திய சிந்தாமணி.
10. வயித்திய சாரசங்கிரகம்.
11. அனுபவ வயித்திய பிரமரகசியம்.
12. அனுபவ வைத்திய நூல்.
13. ஏட்டுப் பிரதிகள்.
14. கை எழுத்துப் பிரதிகள்.
15. அகத்தியர் வைசூரி நூல்.
16. "The Secrets of Indian Medicine" by Dr. R.S. Agarwai

## பொருளடக்கம்.

### அத்தியாயம் I.


| | பக்கம் |
|---|---|
| ஆரம்ப உரை | 1 |
| இரு வினைப்பயன் | 2 |
| இன்பதுன்பங்கள் யாவை? | 3 |
| மருத்துவம் | 4 |
| இன்பதுன்பங்களை நுகர்வது எது? | 4 |


### அத்தியாயம் II.


| | |
|---|---|
| ஐம்பூதக் கொள்கையும் மருத்துவமும் | 4 |
| ஐம்பொறி, புலன்கள் யாவும் அதனதன் பூதத்தின் இயற்கையளவாயுண்டானவை | 5 |
| நுண்ணிய ஐம்பூதங்கள்—ஐம்பெரும் பூதங்கள்—தோற்றமும், பஞ்சீகரிக்கும் விதமும் கூறுகிறார் | 5—6 |
| பஞ்சபூதத் தோற்றம் வரிசை | 7 |
| இனிப் பஞ்சிகரிக்கும் விதம் கூறுகிறார் | 8 |
| "சூக்கும சரீரம் பஞ்சீகரிக்கப்படும் விதமும் அவற்றிற்குக் கோளக ஸ்தானங்களும்" கூறுகிறார் | 9—10—11 |
| சீவ சூக்கும சரீரங்கள் அல்லது சீவ சூக்கும தேகேந்திரியங்கள் | 11 |
| ஸ்தூல பஞ்சபூதங்களின் பஞ்சீகரணம் (அல்லது ஐம்பெரும் பூதங்களின் சேர்க்கை). | 12 |
| "தேகம் ஐம்பூதக்கூறு" அல்லது "புறக்கருவிகள் இருபத்தைந்து" | 13 |
| இயங்கும், இயங்காப் பொருள்கள் யாவை யெனல் | 14—15 |
| சுவை | 15 |
| வீரியம் | 16 |
| நிறம் | 16 |
| தேகம் பஞ்சபூதம் | 17—18 |

பக்கம்

திருமூலர் நாடி 18—19

ஐம்பூதக் கூறுபாட்டையுடைய பொருள்களின் பண்புகள் 19

ஐம்பூதங்கட்கும், அறுசுவைகட்கும், முக்குற்றங்களுக்கு முள்ள ஒற்றுமை, வேற்றுமை யாவன? 20

திரி தோடங்களும் சுவைகளும் 21

முத்தோடங்களை மிகுதிப்படுத்தும் சுவைகள் 22

முத்தோட மிகுதியைச் சமனஞ் செய்யும் சுவைகள் 22—23

திரி தோடங்களும் ஏழு உடற்றாதுகளுக்கு முள்ள பொருத்தம் 23

அத்தியாயம் III.

கரு உற்பத்தி விளக்கம் 23—26

கரு அமையும் விவரம் 27

பிண்டோற்பத்தியில் ஐம்பூதங்களின் சேர்க்கை அல்லது ஐம்பூதங்களின் தொழில் நடைபெறும் விதமும் கூறுகிறார் 27

"கரு" தரிப்பதற்கு சாதகமாயிருப்பது எது? மலடு உண்டாவதற்குக் காரணம் யாது? 28

ஆண், பெண், அலி முதலிய பிறவிக்குக் காரணமென்ன? 29

சுக்கில சுரோணிதம் கருப்பையில் உறையும் விதம் 30

வினைகள் மூன்று என்பவை யாவை? 30

கருவளருமிடமும், விதமும் பிரண்டும் விளக்குவோம் 31—32

கரு வளர்ச்சியில் அங்கங்களுண்டாகும் கிரமம் எங்ஙன மெனில் 33—41

சிசுவின் போஷிப்பு 41—43

அத்தியாயம் IV

வாழ் நாள் விவரம் 43—45

ஆயுள் தோட நிர்ணயம் 45—46

மூன்று பிராயங்களிலும் தொந்ததோடம் நிகழ்தல் கூறுகிறார் 46—47

இடையில் மரணம் ஏன்? 47—48

ஆதாதாரப் பட்டி 73

## அத்தியாயம் V


| | பக்கம் |
|---|---|
| சரம் என்பதென்னை? | 49—50 |
| "சரம்" ஐம்பூதங்களிலும் பகிர்ந்து நடக்கும் அளவு விவரம் | 50—51 |
| "சரப் பழக்கம்" என்னும் பிராணாயாமம் பற்றிய விளக்கம் | 51 |
| சுவாசம் சரியாக நடை பெற்றால், நாடிகள் மூன்றும் சரியான மாத்திரையளவோடு நடை பெறும், மானிடருக்குப் பினியுமில்லை என்கிறார் | 51—52 |
| சுவாச பந்தனம் (பிராணாயாமம்) செய்து வந்தால் எப்போதும் பாலராயிருக்கலாமென்கிறார் | 52—53 |
| பிராணாயாமம் சரியாகப் பழகி வந்தால் நாடிகளையும் உள் தத்துவங்களையும் நன்கு அறியலாம் என்கிறார் | 53—54 |
| "சரம்" பற்றிய விளக்கம் | 54—56 |
| உயிரெழுத்தைப் பற்றிய விவரம் | 57 |
| வாசியினாலேற்படும் பயன் யாது? | 57—58 |


## அத்தியாயம் VI


| | |
|---|---|
| கெர்ப்பிணிகளுக்கு மாதந்தோறும் உண்டாகும் நோய் களும் பரிகாரமும் கூறுகிறார் | 59—61 |


## அத்தியாயம் VII


| | |
|---|---|
| உயிர்த் தோற்றம் தத்துவங்கள் 96. அவற்றின் தொழில் கள்—உயிர்த்தோற்றம் அல்லது உருத்தோற்றம் | 62 |
| கருவின் மூலமாக ஏற்பட்ட உடைமையாகிய 96 தத்துவங்கள் யாவை? | 62—63 |
| தத்துவங்கள் தொண்ணூற்றாறின் தொழில்கள் கூறுகிறார் | 64—77 |
| ஆறாதாரப் படம் | 73 |

## அத்தியாயம் VIII


பக்கம்

நாடியைக் குறிக்கும் தாதுவின் தத்துவ விளக்கம் 77—81

உயிர்த்தாதுவாகிய "சிவசக்தி" என்ற ஒரே சக்தி தேகத்தில் வாத, பித்த, கபமாக பிரியும் தத்துவம் எங்ஙனம்? 81—82

வாத, பித்த, கபம், வளி, அழல், ஐயம், இம்மூன்றும் வாயு, தேயு, அப்பு பூதங்களின் செயல் அல்லது கூறுபாட்டை அடைவதெங்ஙனம்? 82—85

ஓரே "சிவசக்தி" மூன்றுவித்தத் தொழில்களைப் புரியும் கிரமித்தினை அறிவதெங்ஙனம்? 85—86

நாடிகளின் மாத்திரையளவு? 86—87

மாத்திரையின் இலக்கணமென்ன? 87

சுபாவமான நிலையில் மூன்று நாடிகளின் மாத்திரை யளவு வித்தியாசமாகயிருப்பதின் காரணம் கூறுகிறார் 88—89

உயிர்த்தாதுவென்னும் சீவாத்மாவை சிவதத்துவம் அல்லது சிவபரம் பொருளுக்குச் சமானமாக ஒப்பிடுவது எங்ஙனம்? 89—91

தேரையர் மருத்துப் பாரதத்தில் கூறிய "வாதமாய்ப் படைத்துப்பித்த—வன்னியாய்க் காத்துச் சேட்ப—சீதமாய்த் துடைத்து"—என்பதின் மேற்கோள் பற்றி ஆராய்வது 91—93

"விந்து நாதமாங்கிருட்டிணமூர்த்தி" என்பதான தேரன் கூறிய வாக்கியக் கருத்து என்ன? 94

தேகத்தில் நிகழும் முத்தொழில்களும் நடைபெறும் விதம் எங்ஙனம்? 95—96

தேரன் கூறிய படைத்தல், காத்தல், அழித்தல் தொழில்கள் பற்றிய விளக்கம் 96—98

பொருட் சுருக்கம் 98—99

உடற்றாதுக்களுண்டாகும் விதம் அல்லது அன்ன ரசம் ஏழு உடற்றாதுக்களாக மாறும் விதம் எங்ஙனம்? 72

தேகத்தில் முத்தோடங்கள் அல்லது மூன்று விதச் சக்திகள் உண்டாகும் விதம் எங்ஙனம்? 100—101

## அத்தியாயம் VIII —தொடர்ச்சி.


| | பக்கம் |
|---|---|
| நோய் என்பதென்ன? உண்டாகும் விதம் எங்ஙனம்? | 101—110 |
| நோயின்றி வாழ்வதற்கு மக்கள் ஊண் விஷயத்தில் அனுசரிக்க வேண்டிய விதிகள் என்ன? | 110—111 |
| நோய்வாய்ப் படின் மருத்துவனின் கடமை என்ன? | 111—112 |
| நோயின்றி வாழ்வதற்குக் காயகற்பம் சிறந்ததெனல் | 112—115 |
| மணிமந்திர அவிழ்தம் பற்றிய வேறு கருத்துக்கள் | 115—117 |
| நாடி நடையின் இலக்கணம் (நாடி நடை உண்டாகும் விதம்) | 117—118 |
| நாடி நடையின் குணங்கள் யாவும் இருதயத்தின் நடைக்கு ஒத்திருக்கும் | 118 |
| நாடி நடையைப் பரீட்சிக்கக் கூடிய இடங்கள் | 118—119 |
| நாடி பார்ப்பதற்குக் கரத்தின் நாடி சிறந்ததெனல் | 119—120 |
| வாத, பித்த, ஐயதோடங்களின் நிலை | 120 |
| வளி, அழல் ஐயதோடங்கள் அடங்குமிடம் | 120 |
| வாத, பித்த ஐய உடல் நிறம் | 120 |
| மரணக் குறியைக் காட்டும் உடல் நிறம் | 121 |
| மூவகை நாடிகளை ஆராய்ந்தறியும் விதம் | 122—123 |
| பஞ்ச நாடிகள் | 124 |
| ஆண் பெண் இவர்களுக்கு முறையே வலது இடது கை நாடியைப் பார்த்தல் நல்லது | 124—125 |
| புருடருக்கு வலது கரமும், பெண்களுக்கு இடது கரமும் நாடியை ஆராய்வது ஏன்? | 126 |
| நாடி நடையை சிவசெந்துக்களின் நடைக்கு ஒப்பிடப் பட்டு அதனைக் "குறியடையாள நாடி" எனக் கூறுவர், இதன் தாற்பரியம் என்னை? | 127—128 |
| நாடி ஆராய்ச்சியில் முக்கிய கவனிப்பு | 128—129 |
| நாடி—எண்வகைத் தேர்வுகளில் நாடியின் கணிப்பைப் பிரதானமாகக் கூறுவதேன்? | 130—132 |
| சுகதேகியில் மூவகை நாடியறியு மாத்திரைக் கிரமம் | 133 |
| நாடி நடை மாத்திரையின் இலக்கணம் | 134 |

## அத்தியாயம் VIII —தொடர்ச்சி.


பக்கம்

வளி, அழல், ஐயம் மூன்றும் தத்தம் நிலையில் மிகுதல், மீறி நடத்தல், கதித்தல், தோடத்தில் தோடம் இவை போன்ற சொற்களின் பொருள் கூறுகிறார் 135

தொந்தம் நாடி இன்னதெனல்—அல்லது தொந்த நாடிகளின் மாத்திரை விகிதம் இன்னதெனல் 135—137

பிணியை நாடியாலறிந்து ஊட்டு மருந்தே சிறந்ததெனல் 137

நாடி நடையளவையறியு உபாயம் 138

நாடி கணிப்பால் நோய் தணியுங் கிரமம் அறிய உபாயம் 138

நோயை நன்கு ஆராய்ந்தறிந்து மருந்து கொடுத்தல் இன்றியமையாதது 138—139

பஞ்ச நாடி (பஞ்ச பூத நாடி) என்றாலென்ன ? 139—141


## அத்தியாயம் IX


குரு நாடி பற்றிய விளக்கம் 141—145

குரு நாடியின் தன்மையால் நோய்களைக் குறிக்கும் குணம் 145—147


## அத்தியாயம் X


மூத்தோடங்களின் மாத்திரை விகிதம் சுபாவமான நிலையில் ஒன்றுக்கொன்று வித்தியாசப்படுவதின் காரணமென்ன ? 148

மூத்தோடங்களின் குணம் 149

வாத தோடம் வன்மையடையும் ஆறு குணங்கள்—வன்மையை நீக்கக்கூடிய ஆறு எதிர்க்குணங்கள் 150

பித்ததோடம் வன்மையடையும் ஆறு குணங்கள்—வன்மையை நீக்கக்கூடிய ஆறு எதிர்குணங்கள் 150—151

ஐயம் வன்மைபெறும் குணங்கள் ஆறு—வன்மையை நீக்கக்கூடிய எதிர்க்குணங்கள் ஆறு 151

மூத்தோட குணம் (மேற்கோள்) 152

வாதம், பித்தம், ஐயம் மூன்றும் தனித்தனி வன்மையடையும்போது அவற்றின் மிகுதியைச் சமனஞ் செய்யுந் சுவைகளாவன 153

## அத்தியாயம் XI


பக்கம்

நாடியைப்பற்றிய விளக்கம் (வேறு)—நாடியால் பிணி வராமையும், வருகையுமறிதல். 155—157

நாடிகள் மூன்றும் தினந்தோறும் சிறப்புறுங்காலம் 155—156

நாடிகள் மூன்றும் வாரங்கள்தோறும் சிறப்புறுஞ் சமயம் 157—158

நாடிகள் மூன்றும் வாரங்களில் மாறி நடந்தாலுண்டாம் பிணியின் தோற்றம். 158

நாடிகள் மூன்றும் மாதங்கள்தோறும் சிறப்புறுஞ் சமயம். 158—159

நாடி பார்க்கும் மாதமும் காலமும் 159—160

நாடி நடை காணப்படாமை 160—161

நாடி நடை படபடத்து ஓடும் நிலைமைகள் 161—162

நாடி நடை குறையும் நிலைமை 162

நாடி நடை சரியாகத் தோற்றாத வேறு சில நிலைமைகள். 162—163

வளி, அழல், ஐயம் தொந்தம் இவற்றின் மிகுதிக்குறி குணங்கள். 163

நாடி பற்றிய முக்கிய கவனிப்பு 164—177

வளி, அழல், ஐயமாகிய மூன்று தோடங்களின் மிகுதியுடன் உஷ்ணமும் சேர்ந்தாலுண்டாம் குறி குணங்கள்.—வாத மிகுதியுடன் உஷ்ணம், பித்த மிகுதியுடன் உட்டிணம், ஐய மிகுதியுடன் உட்டிணம் சேர்ந்தாலேற்படும் குறிகுணங்கள். 178—180

வளி, அழல், ஐயம் ஆகிய மூன்று தோடங்களின் மிகுதியுடன் வாயுவும் சேர்ந்தாலுண்டாகும் குறி குணங்கள்.—வாத மிகுதியுடன் வாயு, பித்த மிகுதியுடன் வாயு, ஐய மிகுதியுடன் வாயு, சேர்ந்தாலுண்டாம் குறிகுணங்கள். 180—181

## அத்தியாயம் XI —தொடர்ச்சி.


பக்கம்

வளி, அழல், ஐயம் என்னும் மூத்தோடங்களின் மிகுதியுடன் சீதளமும் சேர்ந்ததாலுண்டாம் குறிகுணங்கள்—வாத மிகுதியுடன் சீதளம், பித்த மிகுதியுடன் சீதளம், ஐயமிகுதியுடன் சீதளம் கூடி கூடினாலேற் படும் குறிகுணங்கள். 181—182

வளி, அழல், ஐயம் ஆகிய மூன்று தோடங்களும் கூடி ஏக காலத்தில் பேதித்து நின்றாலுண்டாகுங் குறி குணங்கள். 182

சாத்தியா சாத்திய தொந்த நாடிகளிவையெனல் 183

## அத்தியாம் XII

அசாத்திய நாடி 184

அமிர்த மூண்டுஞ் சாகுங்குறி 184—191

சில மரண குரல்கள் 191—193

மரணக்குறி குணங்கள் (வேறு) 193—194

சன்னி பாதங்களிலுண்டாம் தோடக் குறிகுணங்கள் 195—196

சன்னி பாதத்தின் அசாத்தியக் குறிகுணங்கள் (வேறு) 196

மரணக்குறிகள் (வேறு—வயி. சா. சங்கிரகம்) 196—200

மரணக்குறி குணங்கள் (வேறு) 201

எந்தெந்த நோய்களில் இளைப்புடனே சுவாசம், விக்கல் இவை சேர்ந்து தோன்றில் அசாத்தியமாகும். 201—202

எந்தெந்த நோய்களில் வீக்கங் கண்டால் அசாத்திய மாகும். 203

எந்தெந்த நோய்களில் வயிற்றுளைவு கண்டால் அசாத்தியமாகும். 204

எந்தெந்த நோய்களில் மிகுந்த வாயுதோன்றில் மரண மாகும். 204—205

எந்தெந்த நோய்களில் சிறு நீர் அதிகரித்தாலும் குறைந்தாலும் தீது என்பர். 205

## அத்தியாயம் XII —தொடர்ச்சி.


பக்கம்

மேகரோகத்திலுண்டாம் தோடக்குறிகுணங்கள் 205—207
(இளைப்பு, சுவாசம், விக்கல், வீக்கம், மயக்கம் இவை சேர்ந்துண்டாகில் சாவு நிச்சயம்).

மாந்த நோயிலுண்டாம் தோடக்குறி குணங்கள் 207

பெரும் பாட்டிலுண்டாம் தோடக்குறி குணங்கள் 207—208

குன்மரோகத்திலுண்டாம் தோடக்குறி குணங்கள் 208

சோபை ரோகத்திலுண்டாம் தோடக்குறி குணங்கள் 208—209

சுர நோயிலுண்டாம் தோடக்குறி குணங்கள் 209—210

அத்தி சுரத்திலுண்டாம் தோடக்குறி குணங்கள் 210

க்ஷயரோகத்திலுண்டாம் தோடக்குறி குணங்கள் 210—211

மரணக்குறி குணங்கள்—சதக நாடி (வேறு) 211—214

சாத்தியா சாத்திய நாடிக்குறிகுணங்கள் பற்றிய சில பொதுவான அபிப்பிராயம் 214

நோய்கள் அசாத்தியமாயினும் குணமாக வேண்டின் சில விதிகளை அனுசரித்தல் நலம். 214

அவத்தை பத்தின் விவரம் (திரட்டு நாடி) 215

அவத்தை பத்தின் விவரம் (திரட்டு நாடி) 215—216


## அத்தியாயம் XIII


மூக்குற்ற இயல் 218

வளி, வடிவத்தன்மை, வாழுமிடம், இயற்கைப் பண்பு, உடலில் செய்தொழில் பிரிவுகள். 218—219

பிரானன், அபானன், வியானன், உதானன், சமானன், நாகன். கூர்மன், கிருகரன், தேவதத்தன், தனஞ்சயன். 219—221

வளியைப் பற்றிப்பிற நூலுடையார் கொள்கைகளாவன 221—222

அழல் (தீ), வடிவத்தன்மை, வாழுமிடம், இயற்கைப் பண்பு, உடலில் செய்தொழில் பிரிவுகள். 222—223

பாசகம், இரஞ்சகம், சாதகம், ஆலோசகம், பிராசகம் 223—224

## அத்தியாயம் XIII —தொடர்ச்சி.


பக்கம்

ஐயம் வடிவத்தன்மை, வாழுமிடம், இயற்கைப் பண்பு, உடலில் செய்தொழில் பிரிவுகள். 224

அவலம்பகம், கிலேதம், போதகம், தற்பகம், சந்திகம் 225

இரு குற்றக்கலப்பு, மூவகைப் பிரிவுகள், அறுவகைப் பிரிவுகள். 225—226

மூக்குற்றம் (சன்னி வாதம்) 226

வாதத்தின் இருப்பிடம் தொழில் முதலியன (வேறு—சதக நாடி). 226

பித்தத்தின் இருப்பிடம் தொழில் முதலியன (வேறு—சதக நாடி). 227

ஐயத்தின் இருப்பிடம் தொழில் முதலியன (வேறு—சதக நாடி). 227

மூக்குற்றங்கள், உடற்றாதுக்கள் ஏழு—இவற்றின் சேர்க்கையாலுண்டாகும் வேற்றுமை. 228

தன்னிலை, தன்னிலை வளர்ச்சி, வேற்று நிலை வளர்ச்சி. 228

தன்னிலை வளர்ச்சியின் இலக்கணம் 228

வேற்று நிலை வளர்ச்சியின் இலக்கணம் 228—229

வளிக்குற்றம் தன்னிலை வளர்ச்சி, வேற்று நிலை வளர்ச்சி தன்னிலையடையுங்காலம். 229

அழல் குற்றம் தன்னிலை வளர்ச்சி, வேற்று நிலை வளர்ச்சி தன்னிலையடையுங்காலம். 229

ஐயக் குற்றம் தன்னிலை வளர்ச்சி, வேற்று நிலை வளர்ச்சி தன்னிலையடையுங்காகும். 229

மூக்குற்றங்கள் காலம் இயல்பைக் கடந்து நிற்கும் வேளை. 229

மூக்குற்றங்கள் வேற்று நிலை வளர்ச்சியினின்றும் தன் னிலைப்படும் இலக்கணம். 230

வளி, அழல், ஐயம் ஆகிய மூக்குற்றங்களே எல்லாப் பிணிகளுக்குங்காரணமெனல். 230

யாக்கையின் இயற்கை இலக்கணம் 230

| | பக்கம் |
|---|---|
| வளி உடலினன் இலக்கணம் | 231 |
| அழல் உடலினன் இலக்கணம் | 231—232 |
| ஐய உடலினன் இலக்கணம் | 232—233 |
| தூய உடலினர், கலப்பு உடலினர் இவை எனல் | 233 |
| ஐய உடலினன் பண்புகள் (வேறு) | 233 |
| வளி, அழல், ஐயம், கலப்புக் குற்றம் முதலிய தேகிகளின் இலக்கணம் (வேறு—சதக நாடி) ஒன்பது பிரிவு தேகிகள். | 234—237 |
| வளி, மிகு குணம், குறை குணம் | 238 |
| அழல், மிகு குணம், குறை குணம் | 239 |
| ஐயம், மிகு குணம், குறை குணம் | 239 |
| ஏழு உடற்றாதுக்களின் இயற்கைப் பண்பு, சாரம், செந்நீர், ஊன், கொழுப்பு, எலும்பு, மூளை, வெண்ணீர். | 240 |
| சாரம், மிகு குணம், குறை குணம் | 240 |
| செந்நீர், மிகு குணம், குறை குணம் | 241 |
| ஊன், மிகு குணம், குறை குணம் | 241 |
| கொழுப்பு, மிகு குணம், குறை குணம் | 242 |
| என்பு, மிகு குணம், குறை குணம் | 242 |
| மூளை, மிகு குணம், குறை குணம் | 242 |
| வெண்ணீர், மிகு குணம், குறை குணம் | 242 |
| மலம், இயற்கைப் பண்பு | 242 |
| மலம், மிகு குணம், குறை குணம் | 243 |
| சிறுநீர், மிகு குணம், குறை குணம் | 243 |
| வியர்வை, மிகு குணம், குறை குணம் | 243 |
| உடல்வன்மை : இயற்கைவன்மை, காலவன்மை, செயற்கை வன்மை | 243 |
| மூப்பண்புகளையுடைய உடலினர்களின் இயல் : (சத்துவம், இரசோ, தமோ குணங்களையுடைய உடலினர் இயல்) | 244 |

பக்கம்

பதினான்கு வேகங்களாவன (விரைவுகள்) 244

பதினான்கு வேகங்களைத் தடுப்பதாலுண்டாகும் நோய்கள்: அபானவாயு, துப்மல், சிறுநீர், மலம், கொட்டாவி, பசி, நீர் வேட்கை, இருமல், இளைப்பு, ஊக்கம், வாந்தி, கண்ணீர், வெண்ணீர், மூச்சு (உயிர்ப்பு) 245—249

உடற்றீ விளக்கம்: சமாக்கினி, விஷமாக்கினி, தீக்ஷ்ணாக்கினி, மந்தாக்கினி 249—250

ஐவகை நிலங்களும் பிணிகளும்: குறிஞ்சி, பாலை, முல்லை, நெய்தல், மருதம் நிலங்கள் 250

ஐந்திணைக் குணத்தின் தொகுப்பு 251

மருந்துண்ணும் காலம் 250

பிணியாளன் தலைவைத்துப்படுக்க வேண்டிய திசை இன்னதெனல் 252

## அத்தியாயம் XIV

எண்வகைத் தேர்வு (பிணியறி முறைமை)—விதியும், ஒழுக்கமும், பொறி புலன், வினா இவற்றால் நோய்களை அறிதல் 252—253

எண்வகைத் தேர்வுகளாவன, அவற்றின் விளக்கம், மலம், நீர் சுக்கிலம், கண், காது, மூக்கு, நா (வாய்), மெய் மயிர், நகம், உதடு, நெற்றி, பல், புருவம், அண்ணம், தோல், மருத்துவன் செவி, சரீரதை இவற்றைக்கொண்டு ஆராய்தல் 253—255

மலக்குறி, மலத்தால் முக்குற்றமறிதல் 255

மலப் பரிசோதனை (தேரையர் யமகம்) 255—256

மலக் குறியால், சாதல் சாவாமை யறிதல் 256

மலத்திலுண்டாகும் சுரக்குறியும் சாக்குறியும் 256

மூக்குற்றங்களின் மெய் நிறம் 257

மெய் நிறத்தால் சாதலை யறிதல் 257

உடலின் தன்மை வெம்மையால் மூக்குற்றங்களறிதல் 258

பக்கம்

உடலின் பரிசத்தால் சாதலை யறிதல் 258

வியர்வை ஐவகைப்படும், வியர்வையுண்டாம் நோய்களும், இடங்களும் 259

முகநிறமும் முக்குற்றங்களும் 259

பல் நிறமும் முக்குற்றங்களும் 259

வாய்நீர்ப் பரிசோதனை 260

எச்சில் (வேறு) பரிசோதனை 261

சுவையைக் கொண்டு சாதல் குறியறிதல் 261

சொல் ஒலியும் முக்குற்றங்களும் 262

ஒலியினால் சாதல் குறியறிதல் 262

கண்ணின் குறியால் பிணிகளையறிதல் 262

காதின் தோற்றத்தால் முக்குற்றமறிதல் 263

மணத்தன்மையால் சாதலையறிதல் (மூக்கின் வாசனையைக்கொண்டு சாதலை யறிதல்) 263

சுக்கிலத்தன்மை—உத்தமம், மத்திமம், அதமம் முதலிய குறிகளும், தீராநோய்க் குறிகளும் அறிதல் 263—264

உறுப்புகளின் துடிப்பினால் சாதல் குறியறிதல் 264

காது, கண், மூக்கு, பேச்சுஒலி இவற்றின் தன்மையினால் சாதல் குறியறிதல்—வேறு 264

## அத்தியாயம் XV

சிறு நீர்ப் பரிசோதனை 265

நிறக்குறி நெய்க்குறி நிச்சயித்தற்குரிய நீர் இலக்கணம் 265

நோயுற்றோர்க்கு அவ்விதி விலக்காம் 265

நீரின் பொதுக் குணம் 265

நிறத்தொகை 266

ஒவ்வொரு நிறத்திலும் காணும் உட்பிரிவுகள் 266

மஞ்சள் நீர் விகற்பம் 266

சீரண அபக்குவ நீர் நிறம் 260

| | பக்கம் |
|---|---|
| சீரணப் பக்குவ நீரின் நிறம் | 266 |
| மிகு வெம்மையாலுண்டாகும் நீரின் நிறம் | 266 |
| சூட்டைத் தரற்குரிய நீர் நிறம் | 267 |
| அதிவுட்டிண நீர் நிறம் | 267 |
| மூன்னிலும் அதிவுட்டிண நீர் நிறம் | 267 |
| செம்மை நிற நீர் வேற்றுமை | 267 |
| இரத்தம் பொங்கிய நீர் நிறம் | 267 |
| மிகு இரத்தக் கொதிப்பாலுண்டாகும் நீர் நிறம் | 267 |
| மூன்னிலும் அதிகமாகப் பொங்குதலாலுண்டாகும் நீர் நிறம் | 267 |
| பச்சை நீர் வேற்றுமை இயல் | 268 |
| சீதள நீர் நிறம் | 268 |
| விஷத்தாலுண்டாகும் சீதள நீர் நிறம் (இடு மருந்து விடம், தாவரவிடம், சங்கம விடம்) | 268 |
| மிகு சீதள நீர் நிறம் | 269 |
| வாத பித்த கபங்களைக் கெடுக்கும் நீர் நிறம் | 269 |
| மேற்கூறிய மும்மலங்களை மிகவும் அதிகமாகக் கெடுக்கும் நீர் நிறம் | 269 |
| கருமை நீர் நிற வேற்றுமை இயல் | 269 |
| காமாலை நோயைத்தரும் நீர் நிறம் | 269 |
| உதிரக்கெடுதி நீர் நிறம் | 270 |
| உதிரத்தழுக்கைக் காட்டும் நீர் நிறம் | 270 |
| சிலேட்டும வாதக்கெடுதி நீர் நிறம் | 270 |
| வெண்மை நீர் விகற்பம் | 270 |
| சுத்த சீதள நீர் நிறம் | 270 |
| சிலேட்டுமத்தின் கொதிப்பு நீர் நிறம் | 271 |
| கூயநோய் நீர் நிறம் | 271 |
| கருப்ப விரண நோய் நீர் நிறமுந்தன்மையும் | 271 |
| சுபம், சன்னி பாதம் இவற்றைக் காண்பிக்கும் நீர் | 271 |

| | பக்கம் |
|---|---|
| உப்பு உறையாத நீர் | 272 |
| கொடிய வெப்ப நோயைக் காட்டும் நீர் | 272 |
| நீர்க்குண்டிக்காய்த் துர்ப்பலம் காட்டும் நீர் (பருக்கம்) | 272 |
| தீராநோய் நீரின் தன்மை | 272 |
| நிற இலக்கணம் (மதாந்தரம்) | 272 |
| வாதப் பிணி நீர், பித்தப் பிணி நீர், பித்த காமாலை நீர், கபப்பிணி நீர், தொந்தப்பிணி நீர், இவற்றின் நிறம் | 273 |
| மேக ரோகம், மகாரோகம் நீர் நிறம் | 274 |
| சுரப்பிணி நீர் நிறம் | 274 |
| அசாத்திய நீர் நிறம் | 274 |
| நிறை இலக்கணம் | 274 |
| நீர்ப்பை, இந்திரியவழி இவற்றின் மிக்கப் பலவீனத்தைக் குறிக்கும் நீர் | 274 |
| மும்மலங்களின் கெடுதி நீர் | 275 |
| இயற்கை நீர் இலக்கணம் | 275 |
| மண விலக்கணம் | 275 |
| சிறு நீர்ப்பை நாளப்புண்ணீர் மணம் | 275 |
| உட்டிண ரோக நீர் மணம் | 276 |
| உதிரம் மிகுதியாலுண்டாகும் நீர் மணம் | 276 |
| பித்த சுபாவக் கெடுதி நீர் மணம் | 276 |
| சரீரப் பசைக் கெடுதி நீர் மணம் | 276 |
| நுரை இலக்கணம் | 277 |
| காமாலை நீர் நுரையின் நிறம் | 277 |
| வாத முதலிய மூக்குற்றங்களின் வன்மை குறையும் நீரின் நுரை இலக்கணம் | 277 |
| எஞ்சலி லக்கணம்-பாண்டு நோயைக் காட்டும் நீரின் எஞ்சல் | 277 |
| நெய்க்குறியின் சிறப்பு | 278 |

பக்கம்

எண்ணெய் விட்டுப் பார்க்கும் நீரின் விதி 279
வாதம், பித்தம், கபம், இந்நோய்களைக் காட்டும் நெய்க் குறி 279—280
தொந்த தோட நெய்க்குறி 280
மூக்குற்ற நெய்க் குறி 280
தீரும் நோயின் நெய்க் குறி 280
இதுவுமது (மூன்று உதாரணங்கள்) 280—281
தீரா நோயின் நெய்க்குறி 281
இதுவுமது (நாலு உதாரணங்கள்) 281—282
தீரும், தீரா நோயின் நெய்க்குறி (வேறு) 282
கருமசாந்தியின் பயன் 283
நீர்க்குறி (வேறு) வாதம், இத்தம், கபம், தொந்தம் உடலினர்களின் நீரின் தன்மை 283
வேறு அபிப்பிராயங்கள் 284
வேறு—நீர் நெய்க்குறி 284—285
தீரும், தீராமை நோய்களின் நெய்க்குறி—(வேறு) 286
வாதம், பித்தம், காமாலை, நோய்களைக் காட்டும் நீர் நிறம் (வேறு) 287
கப நீர் நிறம், வாதம், பித்தம், இவற்றின் நெய்க்குறி (வேறு) 287
கபம், மூக்குற்றம், சாத்தியம், அசாத்தியம் இவற்றைக் காட்டும் நீரின் நெய்க்குறி (வேறு) 288
கௌதமர்—தேர் நெய்க்குறி பற்றிய கருத்து வேற்றுமை 288
தீரா நோயின் நெய்க்குறி (வேறு) 289
தீரும் நோயின் நெய்க்குறி (வேறு) 289—290
தீரும் நோயின் நெய்க்குறி (வேறு) 290
காமத சாத்திய நெய்க்குறி 291
தீராநோய் நெய்க்குறிகள் (வேறு) 291—292

பக்கம்

சன்னி, வாத நோய், தீரும் நோய் நெய்க்குறி (வேறு) 292—293
தீரும், தீரா நோய்களின் நெய்க்குறி (வேறு) 293
தீரா நெய்க்குறி, தீருங்குறி (வேறு) 293
சுர நீர்விகற்பம் (வேறு) 294
வெகு மூத்திரக்குறி இலக்கணம் 294
மேக நீர் விகற்பம் (வேறு) 295
மூத்திர விலக்கணம் (வேறு) 295
நீர்க்குறிச் சிறப்பு 295—296
இரத்த மிகுதி நீர் இலக்கணம் 296
பித்த கோப நீர் நிறம் 296
சேத்தும கோப நீர் நிறம் 297
வாத கோப நீர் நீறம் 297
இரத்த மிகுதி பித்த வாதக் கலப்பு நீர் 297
மக்கள் ஆண்டுக்குத் தக்க நீரின் மாற்றம் 297—298
உட்டிண நீர் (வேறு)—சுர நீர் 298
மூறைக்காய்ச்சல் நீர் 298
மூன்று நாள் மாறல் சுர நீர், கபால உட்டிண நீர் 298
தலைகனப்பும், மயக்கமும் காட்டும் நீர் 298—299
இடத்தலை நோய் நீர் 299
வலத்தலை நோய் நீர் 299
காய்ச்சலுடன் கூடிய மார்பு நோயைக் காட்டும் நீரின் நிறம் 299
நீர்க்குண்டிக் காயில் கல்லிருப்பின் அதனையுணர்த்தும் நீர் 300
இரத்த தொந்த வியாதி, ஈரல் சுரம் இவற்றைக் காட்டும் நீர் 300
இதய நோய் நீர் 300
நெய்க்குறி—இதற்குரிய நீரைச் சேகரிக்கும் நேரம் 301
இரத்த மிகுத்த வெப்பு நீர் நெய்க்குறி 301

பக்கம்

இரத்தக் குறைவு நீர் நெய்க்குறி 301

பித்தமிகுதி நீர் நெய்க்குறி 301

சீதமிகுதி நீர் நெய்க்குறி 302

அசாத்திய நீர் நெய்க்குறி 302

குளிர்மை நீர் (அதிசீதள நீர்) 302

மூலைப்பால் நீர்க் குறியைக் கொண்டு நீரும் நீராமையறிதல் 302

பன்றிக் கொழுப்பால் மரணமறிய 303

குருதிக்குறியினால் நீரும் நீராமையறிதல் 303

மூத்திர நிறப் பரிட்சை (வேறு). 303

எண் வகைத் தேர்வுகளால் நோய்களை நிச்சயித்தல் சிறந்ததெனல்—

(I) பிணியாளரின் நோய் வரலாறுக் குறிப்பு 304
Case-sheet— Sidha,

(II) நோய் வரலாறுக் குறிப்பு (வேறு) 307—310

(III) நோய் வரலாறுக் குறிப்பு (வேறு) 311—316


## அத்தியாயம் XVI.


தூது லட்சணம் (கண்ணுசாமியம்) 316—317

தூது லட்சணம் (வேறு) 317

மருத்துவன் செயலால் நன்மை தின்மையறிதல் 317

தூதனாலறிந்து கொள்ளவேண்டிய தீராக்குறிகள் 317—318

தோடுகுறி (வேறு) 318—321


## அத்தியாயம் XVII.


மணிக்கடை நூல் (அகத்திய சூடாமணிக்கயறு சூத்திரம்) 322—329


## அத்தியாயம் XVIII


கிருமிகள் (புழுக்கள் அல்லது பூச்சிகள்) பற்றிய விளக்கம் 329

அத்தியாயம் XVIII.—தொடர்ச்சி.

பக்கம்

குடற் கிருமிகளின் பொதுக்குறி குணங்கள் 330

குரு நாடி நூலில் கூறிய கிருமியும் அதனாலுண்டாகும் நோய்களும். 330—332

கிருமியாலுண்டாம் பவுத்திரம் வரலாறு 332

கிருமியாலுண்டாகும் குட்டம் வரலாறு 333

கிருமியால் வரும் நோய்கள் (வேறு)—குரு நாடி நூல் 333

கிருமியாலுண்டாகும் கிராணி வரலாறு 334

கிருமியாலுண்டாகும் சுக்கில பிரமேகம் வரலாறு 334

அத்தியாயம் XIX.

பிணி தொகுப்பு 335—338

அத்தியாயம் XX.

பிணிகளின் முதற் காரணம் 340

அத்தியாயம் XXI.

ஒட்டு நோய்கள் Infetions diseases) 341

அத்தியாயம் XXII.

உயிரனல் அல்லது உயிரக்கினி, அல்லது சீவாக்கினி, அல்லது குக்கியனல் என்பதென்ன? 341—343

CHAPTER XIX

CHAPTER XX

CHAPTER XXI

Infections diseases)

CHAPTER XXII

# சித்த மருத்துவ நோய்நாடல் நோய்முதனாடல் திரட்டு.

குருவே துணை.

## கடவுள் வணக்கம்.

1. "வேலீருக்குஞ் சரவண சடாக்ஷரத்துள்
மெய்ப்பொருளுக் கமுதூட்டி வளர்த்த கொங்கை
பாலிருக்குங் கௌரி சதாநந்தி சத்தி
பராபரையை சங்கரனைப் பாணைத்தண்டை
காலிருக்குங் கடம்பனை சண்முகமயூர் வாழ்
**காங்கேயனைக் கதிர் வேலைக் கருத்தில் வைத்து**
நூலீருக்கு மாணவர்க்குப் பொறுக்கிச் சேர்த்த
நூலுக்குத் தந்தி முகன் நந்தீசர் காப்பே."

## சித்தர்கள் வணக்கம்.

2. "நந்தீசர் மூலரகத்தியருஞ் சட்டை
நாதரொடு பதஞ்சலி வியாக்கிரமபாதர்,
சுத்தரானந்தர் மச்சமுனி புண்ணாக்கீசர்
சுருதிகண்ட கமலமுனி கொங்கணரும் போகர்,
மந்திரஞ்சேர் கோரக்கர் சண்டிகேசர்
வராமர் காலாங்கியார் கூனக் கண்ணர்
தந்திரருஞ்சேர் கருவூரார் ரிஷிகள் தேவர்
தபோதனர்கள் பாதமாதாரமாமே."

## பிரணவ-வணக்கம்.

3. "ஆதார பிரணவத்துள் ளமர்ந்த சோதி
யடிபணிந்து பூவுலகிலறிவுள்ளோர்கள்
பாதாரம் பணிந்து முனி ரிஷிகள் சித்தர்
பாடின முன் நூலாய்ந்தோர் பாதம் போற்றி
காதாரக் கேட்டுக் கருத்தாலுணர்ந்த யிந்நூல்,
நோய் நாடல் நோய் முதனாடல் சித்தி பெற
சீகரகோபுரஞ் சூழ்ந்தெட்சனாயர்
சித்தி விநாயகனருளால் செப்புவேனே."

## காப்பு.

"மருத்துவ நோய் நாடல் நோய்முதனாடல் நூலை
திருத்தமதாய்ச் செப்புதற்குத் திறமை தன்னை
அற்புதமா யின்றளிக்க யான் போற்றும்
சிற்பரவேலனுக்கு மூத்த சித்தி விநாயகன் காப்புத்தானே."

**சித்த மருத்துவ நூலால் வரும் பயனும் பெருமையும் :—**

(வெண்பா)

1. "சீராங்குளவி சிறுபுழுவைக் கொண்டப்பால்,
வேறாமொரு கூட்டில் விட்டேதன்—பேறா
முருவதனைத் தான் நோக்கவுற்ற சீர்போலக்,
கருத நூலாலாகுங் கற்று."
2. "கற்ற குருவாக்குங் காதலித்தவா கடமும்,
பற்றுக் கோலென்றே பரிகாரம்—மூற்ற
அவன் பொறுப்பல்லாலொன்று மாவதில்லை யென்றே
இவனுணரக் கீர்த்தி இங்கு."

என்பதற்கிணங்க சிறப்புற்ற குளவியானது சிறு புழுவைக் கொண்டுவந்து வேறொரு கூட்டிலடைத்துத் தன்னுருவையே எப்பொழுதுங் கருத, அஃது அவ்வாறே திருவருளால் ஆவது போல, மருத்துவ நூல்களையும் பலனடைய வேண்டிக் கற்கும் போது, அஃது வீண்போகாது பெரும் பயனையே அளிக்கும்.

மேலும், மருத்துவ நூல்களைக் கற்கப்புகும் மாணவன் குருவினிடமாக அறிந்த விஷயங்களையும், வைத்திய நூன்முகமாய்க் கற்றவைகளையும். நடைதளர்ந்த காலத்தில் கோலை ஆதரவாகக் கொண்டது போல் தான் செய்யும் பரிகாரமும், அத்தகையதே என்றெண்ணித் தான் என்ற அகம்பாவத்தை யொழித்து எல்லாம் சிவன் செயலல்லால், தன்னாலாவது ஒன்று மில்லை என்று உணர்ந்து நடப்பானாயின் எவ்வகையானும் பெருமையை அடைவன் என்பதாம்.

(பக்கம் 3. கண்ணுசாமியம்)

# சித்த மருத்துவ நோய்நாடல், நோய் முதனாடல் நிரட்டு

## முதல் பாகம்.

## அத்தியாயம் I

### ஆரம்ப உரை

சித்தர்களியற்றிய சித்தமருத்துவத்தைக் கற்கும் மாணவர்கள் உணவாதி செயல்களாலுண்டாகும் பிணிகள் எத்தகையன, எக் குற்றங்களின் வேறுபாடுகளாலுண்டானவை என்பதான குறிப்பு களை நன்கு ஆராய்ந்து அளவிட்டுத் தேர்ச்சி பெறும் பொருட்டு. பற்பல சித்தர்களது நூல்களில் கண்ட உண்மைக் கருத்துக்களைத் திரட்டி இந்நூன்முகமாகச் சுருங்கச் சொல்லி விளங்க வைப்பதே இந்நூல் எழுதியதின் நோக்கமாகும்.

நோய்நாடல், நோய்முதனாடல் விவரங்களைத் தெரிவதற்குமுன் சிற்சில ஆரம்ப விஷயங்கள் மருத்துவாங்கச் சுருக்கத்தில் படித்தவற்றை இங்கு ஞாபகப் படுத்திக் கொள்ளல் அவசியமாகும்.

"நோய்நாடல், நோய்முதனாடல்" இவ்விரண்டும் பிணியை அறிவதற்கு இன்றியமையாதது பற்றியும், அதன் பிறகுதான் மருந்தைக் குறிப்பிடல் வேண்டும் என்பது பற்றியும் கீழ்க்காணும் மேற்கோள்களால் அறிக :—

1. "நோய்நாடி நோய்முதனாடியது தணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல்"—(திருக்குறள்).

என்பதினாலும் ;

2. "புவனநாயகனிருந்தும் கௌரவர் முன்
பாண்டவர் பின் போனதென்ன,—விவாமெனின்
நோய்க்கவிழ்தமென்பதன்றி மருந்திற்கு
வினையுமுண்டோ,
கவலையுறு நோயாளி முன்னாயுள் வேதியன்பின்,
—காட்சி போனோய்,
துவரவடிப்பது போலக் கவுரவ
நோய்களைக் கொல்லத் தொடங்கினானே."

என்பதாகத் தேரையர் மருத்துப் பாரதத்தில் கூறியுள்ள பிரகாரம் நோய்க்கு மருந்தேயொழிய மருந்திருப்பதினால் நோயைத் தேடித் திரிய வேண்டாமென்பதும்; உலகில் நோய்கள் பரவியிருப் பதினாலேயே, எல்லாம் வல்ல இறைவன் சித்தர்களது அட்டமா சித்து, ஆத்மஞானம், பக்தி, யோகம் முதலிய சாதனைகளின் மூலம் வாதம், வைத்தியம், சோதிடம், மாந்திரிகம் முதலிய யாவற்றையும் நமக்கு அளித்து மருத்துவ உலகுக்கு ஓர் பேருதவி செய்திருக்கிறார்களென்பதும், பிணிகளை நன்றாய் ஆராய்ந்து அறிந்து தேர்ச்சி பெறுவதற்குப் பதினெண் சித்தர்களும் அருமையான நூல்களை இயற்றியிருப்பதினால், நோய்களை அறிந்த பின்னரே மருந்துகள் குறிப்பிடல் சரியான முறை என்பதையும் அறிகிறோம்.

## வேறு.

(அறுசீர்க் கழிநெடிலாசிரிய விருத்தம்)—பக்கம் ஈ-சிகிச்சா ரத்ன தீபம்:—

3. "மதித்திடற்கருமை வாய்ந்த
மாண்பரிகாரமெல்லாந்
துதித்திட வுணர்ந்தானேனுந்
துகளறப் பிணியின்றன்மை,
பதித்திடவுணரானாகிற்
பயனுறானாகாலானே,
விதித்திடு பிணித்திறத்தை
விளம்புது முதற்கண்மன்னோ"

என்பதினால், பரிகார முறைகள் யாவும் தெரிந்திருந்தாலும் நோய் நாடல், நோய்முதனாடலென்னும் பிணியின் தன்மை தெரியா திருப்பின் சிறிதும் பயனில்லை எனவும், பிணியின் விவரங்களை நன்றாய்க் கற்றுணர்தல் அவசியம் என்பதையும் வற்புறுத்தி யுள்ளார்.

## இருவினைப் பயன்.

மக்களுக்கு நல்வினை, தீவினை என்ற இருவினைப் பயனால் ஏற்படுவது இன்பமும் துன்பமுமாகும். "பேறுபிளமையின்பம் பிணி மூப்பு சாக்காடு, ஆறுங்கருவிலமைப்பு"—என்பதற்கிணங்க, மக்களுக்கு நல்வினை, தீவினையின் பயனாக இன்பமும் துன்பமும் பிறவியில் ஏற்படுவது இயல்பு.

## இன்பதுன்பங்கள் யாவை?

"கடவுளையறியும் வழியினை நாடி சிவநிலையெய்தலே" இம்மானிடப் பிறவி எடுத்ததன் பயனும், இன்பமுமாகும். "அறம் பொருள் இன்பம் வீடும்பயக்கும்" என்பதினால் சகல சீவாத்மாக்களையும் சிவமெனப் பாவித்துத் தன்னுயிர்போல் எண்ணிச் சீரும் சிறப்பும் மனமார்ந்த உண்மையான அன்பினால் பாதுகாப்பது "அறம்" எனப்படும். "அன்பே சிவம்" என்பதினாலறிக! இதன் மூலம் சீவாத்மாக்களின் நன்றியையும் நல்லாசியையும் பெறுதலே "பொருள்" எனப்படும். இவ்விரண்டும் நிகழுங்கால் கடவுள் கருணை கூர்ந்து, மகிழ்ந்து தனது செகசோதி மயமான தெரிசனம் தந்து, அச்சீவனிடம் குடிபுகுந்து ஆதரிப்பதே "இன்பமாம்". அதற்கப்பால் கடவுளின் அருட் சக்தியினால் சீவாத்மாவை இரண்டறக் கலக்கச் செய்தலே "வீடுபெறுதல்" எனவும் கூறுவர்.

"சீவனெனச் சிவனென வேறில்லை" என்பதாலும்;
"அவனேதானேயாகிய அந் நெறி,
ஏகனாகி இறைபணி நிற்க,
மலமாயை தன்னோடுவல் வினையின்றே."

என்பதாலும், இல்லறம், அறவறம் எதுவாயிருப்பினும் சிவன் வேறு, கடவுள் வேறுயில்லை என்ற தமிழர் கொள்கையை அனுசரித்து, எல்லாப் பொருள்களிடத்தும் தான் என்று சொல்லக் கூடியதாய், உயிருக்குயிராய் நின்று தன்னோடு கூடிய "நான்" வேறு, "கடவுள்" வேறுயில்லை என்பதை உறுதிப்படுத்தி, ஒருவனாய் ஆணவம், மாயை, கன்மம் ஆகிய மும்மலங்களும் நீங்கப்பெற்று நிற்கில், அதுவே சீவாத்மா சிவநிலை எய்தற் கொப்பாகும்.

இவற்றை அடைவதற்கு உடல்-உயிர் பேதமின்றி, நோயின்றி வறுமையின்றி வாழ்தல் வேண்டும். நீண்ட ஆயுள் வேண்டும். அதாவது பிணி, மூப்பு, சாக்காடுயின்றி உடலில் உயிர் நீடித்து நன்னிலையில் தரித்திருப்பதற்கு ஏதுவாக உடலை வளர்க்கும் உபாயமறிந்து உடலை வளர்த்து அதனுள் உயிர்க்குயிராய் வாழ்ந்து வரும் (உயிர், ஆன்மா என்னும்) சீவாத்மாவையும் வளர்த்தலே "இன்பம்" எனப்படும்.

இவற்றிற்கு இடையூறாகயிருக்கும் யாவும் "துன்பம்" எனப் படும்.

**மருத்துவம்.**

துன்பத்தை வேரறக் களைந்து பிணி, மூப்பு, சாக்காடு என்னும் இவற்றையொழித்து வாழக்கூடிய அறிவைப் புகட்டுதலும், உடலில் உயிர் எக்காலமும் நன்னிலையில் தரித்திருக்கக் கூறும் முறையே மருத்துவமாகும். அல்லது பிணிக்கப்பட்ட வளி, அழல், ஐயம் என்னும் மூக்குற்றங்களைத் தன்னிலைப்படுத்துதல் எனவும், பரிகாரம், மாற்று மருந்து, வயித்தியம், சிகிச்சை பிணி நீக்கம் எனவும் கூறுவர்.

**இன்ப துன்பங்களை நுகர்வது எது?**

இன்ப துன்பங்களை நுகர்வது உயிருடன் கூடிய உடலேயாகும். ஐம்பொறி புலன்களால் நுகரப்படுவனவாவும் உடலினுள்ள அறிவு அல்லது ஆன்மா அல்லது உயிரேயாகுமெனவும் அவ்வுயிர் அல்லது ஆன்மாவே அறிவாகயிருத்தலின் தனியாக நின்று இன்பதுன்பங்களை நுகரும் தன்மை இயலாதென்றும், உடலுடன் கூடிய உயிரே இன்பதுன்பங்களை நுகரும் தன்மையுடையதென்றும் கூறுவர்.

## அத்தியாயம் II

**ஐம்பூதக் கொள்கையும் மருத்துவமும்.**

பிரபஞ்சம் (உலகம்) ஐம்பூதமயமானது. தோன்றி, நிலைத்து, அழிந்து அப்பால் மறுபடியும் தோன்றி, நிலைத்து, அழிந்து போகும் பொருள்கள் யாவும் ஓரிடத்தில் ஒடுங்கும். அதுவே "பரப்பிரம்மம்" என்பர். தோன்றும்போதும் அவ்விடத்திலிருந்தே படைத்தல், காத்தல், அழித்தல் என்னும் சக்திகளுக் கிணங்க நிகழும் இவ்வுலகம் ஐம்பூதமயமானது என்பர். தேகமும் ஐம்பூதக் கொள்கைக்கு விலக்கில்லை.

1. "பாரப்பா பூதமைந்து மண்நீர்தேயுபரி வாயு வாகாய
மைந்நினாலே சேரப்பாசடமாச்சி * *"

(சதகநாடி).

2. "நிலம் நீர்தீவளி விசும்போடைந்தும்,
கலந்தமயக் கமுலகம் இது".

3. "தலங்காட்டி யிந்தச் சடமான வைம்பூதம்,
நிலங்காட்டி நீர்காட்டி நின்றிடுந் தீகாட்டி
வலங்காட்டி வாயுவால் வளர்ந்தே யிருந்த
குலங்காட்டி வானிற் குடியா யிருந்ததே."

என்பதினாலறிக! (ப.சி. நாடி).

மேலும், மனிதன் உலகில் தோன்றிய எல்லாப் பொருள் களையும் தன் ஐம்பொறி, புலன்களைக் கொண்டே அறிகிறான்.

**ஐம்பொறி, புலன்கள் யாவும் அதனதன் பூதத்தின் இயற்கை யளவாயுண்டானவை:**

| பொறி | பொருள் | பூதம் | புலன் |
|---|---|---|---|
| கண் | உருவம் | தேயு | பார்த்தல் |
| காது | ஓசை | வெளி | கேட்டல் |
| வாய் | சுவை | நீர் | சுவைத்தல் |
| மூக்கு | நாற்றம் | மண் | மோத்தல் |
| மெய் | ஊறு | வளி | உணர்தல் |

*(பக்கம் 7—சி.ம. சுருக்கம்—திருமூலர் நாடி).*

"பரு நிலை"—"நுண் நிலை" என்பதென்ன?

மேற்கூறிய ஐம்பூதமயமான பொறி, புலன்கள் ஒன்றுபட்டு ஒரு விதத் தன்மையில் கூடி நிற்குங்கால் நமக்குக் கட்புலனாகும் நிலையைப் "பருநிலை" என்றும்; அம்மாதிரி ஒன்றுபட்ட நிலை யில்லாது சூழம்பி நிற்குங் காலத்தில் நமக்குக் கட்புலனாகா நிலையை "நுண் நிலை" என்றும் கூறுவர்.

பரு நிலைகள் யாவும் ஐம்பொறிகளின் வழியாய் ஐம்பெரும் பூதங்களினால் அறியப்படுவனவாகும்.

பருநிலை கெட்டு நுண்ணிலையிலிருப்பவையாவும் நுண்ணிய ஐம்பூதங்களினால் ஐம்புலன்களிடத்தே நிலைபெற்று இருக் கின்றன வென்று அறியவும்.

*(சி. ம. சுருக்கம்).*

**நுண்ணிய ஐம்பூதங்கள்—ஐம்பெரும் பூதங்கள்—தோற்றமும் பஞ்சீகரிக்கும் விதமும் கூறுகிறார்:**

1. சுத்த சைதன்னியமான நித்திய வஸ்து அல்லது சச்சி தானந்த சொரூபமாகிய—"பிரமம்" இதிலினின்றும் "அவ் வியக்த" மென்ற "மூலப் பிரகிருதி" தோன்றியது. இதி

னின்றும் "சத்துவ", "இரசோ", "தமோ" குணங்கள் என்னும் மூப்பண்புகள் தோன்றின. மூலப் பிரகிருதியிலிருந்து சத்துவ குணரூபியாய் "மாயாசக்தி" தோன்றியது. இம் மாயையிலிருந்து இரசோகுண ரூபியாய் "மகதத்துவ" மென்னும் "ஆவர்ண சக்தி" தோன்றியது. இவ் வாவர்ண சத்தியிலிருந்து தமோகுண ரூபியாய் "மகதாங்கார" மென்னும் "விட்சேப சக்தி" தோன்றியது.

விட்சேப சக்தியி னின்றும் "பஞ்ச தன்மாத்திரைகள்" உண்டாயின. அதாவது மூக்குணங்களோடு கூடிய சப்த தன்மாத்திரையாகிய ஆகாயம் தோன்றியது. இதற்கு சப்தம் என்ற ஒரே குணமுண்டு. ஆகாயத்தி னின்றும் பரிசதன் மாத்திரையாகிய வாயு தோன்றியது. இதற்கு சப்தம், பரிசம் என இரண்டு குணங்களுண்டு. வாயுவிலிருந்து ரூபதன் மாத்திரையாகிய தேயு தோன்றியது. ஆகையால் இதற்கு சப்தம், பரிசம், ரூபம் என்ற மூன்று குணங்களுண்டு. தேயுவிலிருந்து ரசதன் மாத்திரையாகிய அப்பு தோன்றியது. ஆதலால் இதற்கு சப்தம், பரிசம், ரூபம், ரசம் என்னும் நான்கு குணங்களுண்டு. அப்புவிலிருந்து கந்ததன் மாத்திரையாகிய பிருதிவி தோன்றியது. ஆதலால் பிருதிவிக்கு சப்தம், பரிசம், ரூபம், ரசம், கந்தம் என்னும் ஐந்து குணங்களுண்டு. இதனைக் கீழ்க்கண்ட சித்திரத்தில் காண்க:—

# பஞ்சபூதத் தோற்றம் வரிசை.

சுத்த சைதன்னியமான நித்திய வஸ்து அல்லது சச்சிதானந்த சொரூபமாகிய—பிரம்மம்.

பிரமத்தி னின்றும் அவ்வியக்தம் என்ற " மூலப் பிரகிருதி " தோன்றியது.

இதிலிருந்து முக்குணங்கள் தோன்றின.

(1) சத்துவ குணம் (அருட்பண்பு).

மாயா சத்தி தோன்றியது. (அதாவது மூலப் பிரகிருதி யிலிருந்து சத்துவ குணரூபி யாய் மாயா சத்தி தோன்றியது). இது ஈசுபர சைதன்னியம்.

(2) இரசோகுணம் (தெருட் பண்பு).

மாயையிலிருந்து இரசோகுண ரூபியாய் மகதத்துவம் என்ற ஆவர்ணசத்தி தோன்றியது. (இதற்கு சைதன்னி யம்,, சூக்கும பிரபஞ்சு நிருபாகரன் அல்லது ஹிரண்ய கொரப்ப சைதன் னியம். ஈசுவரன், ஞானிகளுக் குரியது.)

(3) தமோ குணம் (மருட் பண்பு).

ஆவர்ண சத்தியில் னின்றும் தமோகுண ரூபியாய்

மகதகங்காரம் (சடரூபம்) என்ற விட்சேப சத்தியுண்டானது. (ஸ்தூல பிரபஞ்ச நிரூபா கரன் அல்லது விராட்டு சைதன்னியம்). விட்சேபசத்தியி னின்றும் முக்குணங் களோடு கூடிய சப்ததன் மாத்திரையாகிய குணம்—சப்தம் 1—ஆகாயம் தோன்றியது

ஆகாயத்திலிருந்து பரிசதன் மாத்திரையாகிய குணம்—சப்தம், பரிசம் 2—வாயுவும் :

வாயுவிலிருந்து ரூபதன் மாத்திரையாகிய

குணம் :—சப்தம், பரிசம், ரூபம் 3 தேயுவும் ;

தேயுவிலிருந்து ரசதன் மாத்திரையாகிய குணம் :—சப்தம், பரிசம், ரூபம், ரசம் 4—அப்புவும் ; அப்புவுலிருந்து கந்ததன் மாத்தி ரையாகிய குணம் :—சப்தம், பரிசம், ரூபம், ரசம், கந்தம் 5—பிருதிவியும் தோன்றின.

குறிப்பு :—இஃது " மகாபஞ்சபூத " மெனப் பெயராகும். மேலும் பிருதிவி தோற்றுவிக்க மற்ற தாது, தாவர, சங்கமங்கள் சூதனர், நரர், மக்கள் யாவரும் தோன்றினவென்பர்.

## இனிப்பஞ்சீகரிக்கும் விதம் கூறுகிறார் :
## (சதாசிவப் பஞ்சீகரணம்).

1. ஆகாயாதி பஞ்சபூதங்களின் ( ஆகாயம், வாயு தேயு, அப்பு, பிருதிவி இவற்றின்) சத்துவாம்சத்தை ( சத்துவ குணத்தை) நாலு பங்கு பண்ணி ; மூன்று பங்கைக் கொண்டு "அந்தக்கரணாதிகளையும்" ; ஒரு பங்கைக் கொண்டு ஞானேந்திரியங்களையும் அதன் விடயங்களையும் சிருட்டிக்கப்பட்டன.

2. ஆகாயாதி பஞ்ச பூதங்களின் இரசோவாம்சத்தை (இரசோ குணத்தை) நாலு பங்கு பண்ணி ; மூன்று பங்கைக் கொண்டு பஞ்சப் பிராணாதி வாயுக்களையும், அவற்றின் உப பிராணன்களையும் ; ஒரு பங்கைக் கொண்டு கருமேந்திரியங்களையும் ; அதன் விடயங்களையும் சிருட்டிக்கப்பட்டன.

3. ஆகாயாதி பஞ்ச பூதங்களின் தமோகுணவாம்சத்தை (தமோ குணத்தை) ஒவ்வொன்றையும் இரண்டு பங்குபண்ணி ; ஒருபங்கை அவ்விடத்தில் தானே நிறுத்தி ; மறு பாதியை நாலு பங்கு பண்ணி ஒவ்வொரு பங்கு வீதம் எதிர் பூதங்களுக்குக் கொடுக்கப்பட்டன.

எங்ஙனமெனில் :

இதற்கு விவரம் கூறுகிறார் :

1. ஆகாயத்தின் அர்த்தாம்சத்தை ( பாதியை) அவ்விடத்திற்றானே நிறுத்தி, மறு பாதியை நாலு பங்கு பண்ணி வாயு, தேயு, அப்பு, பிருதிவி ஆகிய இந் நான்கு பூதங்களுக்கும் "அவகாசம்" கொடுக்கப்பட்டது.

2. வாயுவின் அர்த்தாம்சத்தை அவ்விடத்திற்றானே நிறுத்தி, மறுபாதியை நாலு பங்கு பண்ணி ஆகாயம், தேயு, அப்பு, பிருதிவி இந் நான்கு பூதங்களுக்கும் "சலனம்" கொடுக்கப்பட்டது.

3. தேயுவின் அர்த்தாம்சத்தை அவ்விடத்திற்றானே நிறுத்தி, மறுபாதியை நாலு பங்கு வைத்து ஆகாயம், வாயு, அப்பு, பிருதிவி இந் நான்கு பூதங்களுக்கும் "உஷ்ணம்" (வெப்பம்) கொடுக்கப் பட்டது.

4. அப்புவின் அர்த்தாம்சத்தை அவ்விடத்திற்றானே நிறுத்தி, மறுபாதியை நாலு பங்கு வைத்து ஆகாயம், வாயு, தேயு, பிருதிவி இந்நான்கு பூதங்களுக்கும் "திரவகம்" கொடுக்கப்பட்டது.

5. பிருதிவியின் அர்த்தாம்சத்தை அவ்விடத்திற்றானே நிறுத்தி மறு பாதியை நாலு பங்கு வைத்து ஆகாயம், வாயு, தேயு, அப்பு இந்நான்கு பூதங்களுக்கும் "கடினம்" கொடுக்கப்பட்டது.

N.B.—இவை யாவும் "அஷ்டப் பிராகிருதவாத்மாவின் காரண சரீரம்" எனப்படும். ஸ்தூல பூதங்கள் ஒன்றுடன் ஒன்று கலப்பதனால் உலகப் பொருள்கள் யாவும் உருப்பெற்று நிற்கின்றனவென அறியவும்.

அதற்குமேல், காரியங்கள் சிருட்டிக்கப்படுகின்றன: அவை—

1. ஆகாயத்தினுடைய அர்த்தாம்சத்திற்கு:—பூதப்பிரேத, பைசாச, பிரமராக்கத சரீரங்களையும்;

2. வாயுவினுடைய அர்த்தாம்சத்திற்கு:—பட்சிகளையும், சர்ப்பங்களையும்;

3. அக்கினியின் (தேயுவின்) அர்த்தாம்சத்திற்கு:—தேவதைகளையும்;

4. அப்புவின் அர்த்தாம்சத்திற்கு:—ஜலசெந்துக்களையும்;

5. பிருதிவியின் அர்த்தாம்சத்திற்கு.—பருவதங்களையும், விருட்சங்களையும் சிருட்டிக்கப்பட்டதாகவும்; மற்றப் பாதியைக் கொண்டு ஒவ்வொன்றுக்கும் எதிர்ச் சீவன்களையும் சிருட்டிக்கப் பட்டதாக நூல்கள் கூறுகின்றன.

"சூக்கும சரீரம் பஞ்சீகரிக்கப்படும் விதமும், அவற்றிற்குக் கோளக ஸ்தானங்களும்" கூறுகிறார்:

(1) அந்தக்கரணங்கள் 5.

1. ஆகாயத்தின் அர்த்தாம் சத்துடன்—மற்ற வாயு, தேயு, அப்பு, பிருதிவி ஆகிய இவற்றின் அஷ்டாம்சத்தைத் தனித்தனி சேர்த்து மூறையே:

மனதை—கண்டத்திலும்;
புத்தியை—நேத்திரத்திலும்;
சித்தத்தை—நாபியிலும்;

அகங்காரத்தை—இருதயத்திலும் சிருட்டிக்கப்பட்டதோடு; ஆகாயத்தின் அர்த்தாம்சத்தில் அகண்டாகாரமான "அந்தக் காணத்தை" பிரமரந்திரம் முதல் புருவ மத்தியம்வரை சிருட்டிக்கப்பட்டன.

(2) பிராணாதி வாயுக்கள் 5.

2. வாயுவின் அர்த்தாம்சத்துடன்—மற்ற பிருதிவி, தேயு, அப்பு, ஆகாயம் இவற்றின் அஷ்டாம்சத்தைத் தனித்தனி சேர்த்து மூறையே:

பிராணனை—இருதயத்திலும்;
அபானனை—குதாலயத்திலும்;
வியானனை—சர்வாங்கத்திலும்;
சமானனை—நாபியிலும்;

மற்ற—நாகன், கூர்மன், கிருகரன், தனஞ்செயன் என்ற உப பிராணன்களை முறையே மேற்கூறிய பிராணாதிவாயுக்களுடன், (i.e.) பிராணன், அபானன், வியானன், சமானன்) சிருட்டிக்கப் பட்டதோடு—வாயுவின் அர்த்தாம்சத்தில் "தேவதத்தன்" என்ற உபபிராணனுடன் "உதானவாயுவை"-யும் கண்டத்தில் சிருட் டிக்கப்பட்டன.

### (3) ஞானேந்திரியங்கள் 5.

3. அக்கினியின் (தேயுவின்) அர்த்தாம்சத்தோடு, மற்ற ஆகாயம், வாயு, அப்பு, பிருதிவி இவற்றின் அஷ்டாம்சத்தைத் தனித்தனி சேர்த்து முறையே :

கேட்டல்—காதிலும் ;

உணர்த்தல்—சருமத்திலும் ;

சுவைத்தல்—நாவிலும் ;

மோத்தல் (முகர்தல்)—மூக்கிலும் சிருட்டிக்கப்பட்டதோடு—அக்கினியின் அர்த்தாம்சத்தில் பார்த்தல் கண்ணிலும் சிருட்டிக்கப் பட்டன.

### (4) புலன்கள் (அல்லது) விஷயங்கள் 5.

4. அப்புவின் அர்த்தாம்சத்தோடு மற்ற ஆகாயம், வாயு, தேயு, பிருதிவி இவற்றின் அஷ்டாம்சத்தைத் தனித்தனி சேர்த்து முறையே :

சப்தம்—காதிலும் ;
பரிசம்—தோலிலும் ;
ரூபம்—கண்ணிலும் ;

கந்தம்—மூக்கிலும் சிருட்டிக்கப்பட்டதோடு அப்புவின் அர்த்தாம்சத்தில் ரசத்தை நாவிலும் சிருட்டிக்கப்பட்டன.

### (5) கருமேந்திரியங்கள் ஐந்தும், அதன் விடயங்கள் ஐந்தும்.

5. பிருதிவியின் அர்த்தாம்சத்தோடு, மற்ற ஆகாயம், வாயு, தேயு, அப்பு இவற்றின் அஷ்டாம்சத்தைத் தனித்தனி சேர்த்து முறையே :

வசனம் விஷயத்துடன் வாக்கையும், தானம் விஷயத்துடன் பாணியையும், கமனம் விஷயத்துடன் பாதத்தையும், விசர்க்கம் விஷயத்துடன் பாயுரு (குதம்)-வையும் சிருட்டிக்கப் பட்டதோடு—பிருதிவியின் அர்த்தாம்சத்தில் ஆனந்தம் விஷயத் துடன் உபஸ்தம் என்ற குறியையும் சிருட்டிக்கப்பட்டன எனவும் நூல்களில் கூறப்படுகின்றன.

N.B..—மேற்கூறிய அந்தக்கரணங்கள் 5, பிராணாதிகள் 5, ஞானேந்திரியங்கள் 5, அதன் விஷயங்களாகிய புலன்கள் 5, கருமேந்திரியங்கள் 5, அதன் விடயங்கள் 5, ஆகிய இந்த மூப்பது தத்துவங்களும் "சிவசூக்கும சரீரெங்கள்" அல்லது "சீவசூக்கும தேகேந்திரியங்களெனவும்" கூறியுள்ளார். உபபிராணன ஐந்தையும் சேர்த்தால் மூப்பத்தைந்து தத்துவங்களையும் சீவ "சூக்கும் சரீரம் பஞ்சீகரிக்கப்படும் விதமும், அவற்றிற்குக் சித்திரத்தில் காணவும்:—

**சீவசூக்கும் சரீரங்கள் அல்லது சீவசூக்கும் தேகேந்திரியங்கள்.**

அஷ்டாம்சம்.

| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) |
|---|---|---|---|---|---|---|---|
| | ஆகாயம். | வாயு. | தேயு. | அப்பு. | பிருதிவி. | | |
| சாத்துவீக சமட்டி. | அந்தக்கரண (பிரமரந் திரம் புருவ மத்தியம்). | மனம் (கண்டம்). | புத்தி (நேத் திரம்). | சித்தம் (நாபி). | அகங்காரம் (இரு தயம்). | ஆகாயம் | அர்த்தாம் சம். |
| இராசத சமட்டி | சமானன் தனஞ் செயன் (நாபி). | உதானன் தேவ தத்தன் (கண்டம்). | வியானன் கிருகரன் (சர்வாங் கம்). | அபானன் கூர்மன் (குதா லயம்). | பிராணன் நாகன் (இருதயம்) | வாயு. | ஷெ |
| சாத்துவீக வியட்டி. | காது | மெய் | கண் | நாவு | மூக்கு | தேயு | ஷெ |
| விஷயம் .. | சப்தம் | பரிசம் | ரூபம் | ரசம் | கந்தம் | அப்பு | |
| இராசத வியட்டி. | வாக்கு (வாய்) | பாணி (கை) | பாதம் (கால்) | பாயுரு (குதம்). | உபஸ்தம் (குறி) | பிருதிவி | ஷெ. |
| விஷயம் .. | வசனம் | தானம் | கமனம் (நடத்தல்) | விசர்க்கம் | ஆனந்தம் | .. | .. |

## ஸ்தூல பஞ்ச பூதங்களின் பஞ்சீகரணம் (அல்லது ஐம்பெரும் பூதங்களின் சேர்க்கை.)

| பிருதிவீன் கூறு. | அப்புவின் கூறு. | தேயுவின் கூறு. | வாயுவின் கூறு. | ஆகாயக் கூறு. |
|---|---|---|---|---|
| பிருதிவீ—1/2. | அப்பு—1/2. | தேயு—1/2. | வாயு—1/2. | ஆகாயம்—1/2. |
| அப்பு—1/8. | தேயு—1/8. | வாயு—1/8. | ஆகாயம்—1/8. | பிருதிவீ—1/8. |
| தேயு—1/8. | வாயு—1/8. | ஆகாயம்—1/8. | பிருதிவீ—1/8. | அப்பு—1/8. |
| வாயு—1/8. | ஆகாயம்—1/8. | பிருதிவீ—1/8. | அப்பு—1/8. | தேயு—1/8. |
| ஆகாயம்—1/8. | பிருதிவீ—1/8. | அப்பு—1/8. | தேயு—1/8. | வாயு—1/8. |

N.B.—ஸ்தூலமாய்த் தோன்றும் பூதம் ஒவ்வொன்றிலும் முக்குணங்களும் கலந்திருக்கும். ஒவ்வொரு பூதத்தையும் இரண்டு பங்கு பிரதான அல்லது பூர்த்தி மற்ற நான்கு பூதங்களுக்கும் சமமாகப் பிரித்து ஒதுக்கப்பட்டிருக்கும். இம்மாதிரியாக ஸ்தூலமான பூதங்கள் ஒன்றுடன் ஒன்று கலப்பதனால் உலகத்திலுள்ள பொருள்கள் யாவும் உற்பத்தி நிதிகின்றனவென அறியவும். (பக்கம் 8 கி. ம. சுருக்கம்)

## ‘‘ தேகம் ஐம்பூதக்கூறு ’’ அல்லது ‘‘ புறக்கருவிகள் இருபத்தைந்து ’’

அர்த்தாம்சம்.

| ஆகாயக் கூறு. | வாயுக் கூறு. | தேயக் கூறு. | அப்புக் கூறு. | பிருதிவிக் கூறு. | | |
|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| காம குரோதம் | தாண்டல். | பயம் | உதிரம் | மயிர் | ஆகாயம் | [illegible] |
| உலோபம் | ஓடல் | அகங்காரம் | சுக்கிலம் | நரம்பு | வாயு | ஷ |
| மோகம் | நடத்தல் | நித்திரை | கொழுப்பு | தோல் | தேயு | |
| மதம் | இருத்தல் | சோம்பல் | சிறு நீர் | மாமிசம் | அப்பு | ஷ |
| மாச்சரியம் | கிடத்தல் | மைதுனம் | மூனை | எலும்பு | பிருதிவி | ஷ |

N.B.— இதன் விளக்கம் பின்னால் பக்கம் 1-7ல் பார்க்கவும்.

இவ்வாறாக ஈசுபரனானவர் சூக்குமசரிரங்களை ரெட்சிப்பதற்கு ஹிரண்ய கெர்ப்பரையும்; ஸ்தூல சரிரெங்களை ரெட்சிப்பதற்கு விராட்டையும் நியமித்து; தானாகிய ஈசுபரன் இந்தத் தேகங்களிலே பிரவேசித்து, அசேதனங்களைச் சேதனன்போலவே செய்து ( நான், எனது என்னும் ஆணவத்தை உண்டாக்கி), சீவன் என்ற பெயரோடு கருதத்துவம், போக தத்துவம் இவற்றை யடைந்து சாக்கிரம், சொற்பனம், சுழுத்தி யவஸ்தைகளை யடைந்து சென்ன மரணங்களையடைந்து, மறுபடியும் ஞானாசிரிய ரால் ஞானத்தைப் போதிக்கப்பட்டு சீவாவத்தையை விட்டு சிற் சொரூபமாகிய பிரமமேயாகிற தாக நூல்கள் கூறுகின்றன.

இயங்கும், இயங்காப் பொருள்கள் யாவையெனல்.

இயங்கும் பொருள்களாவன :—

1. உயர்திணைப் பொருள்கள். 2. அஃறிணைப் பொருள்களென இரு வகைப்படும்.

உயர்திணைப் பொருள்களாவன :—

மக்கள், தேவர், நரர்.

அஃறிணைப் பொருள்களாவன :—

உயர்திணையல்லாத இயங்கும் பொருள்களும், இயங்காப் பொருள்களுமாம்.

**உயர்திணையல்லாத இயங்கும் பொருள்கள் அமையும் விதம் :—**

1. நகர்வன—பாம்பு முதலியவை;
2. ஊர்வன—அட்டை முதலியவை;
3. நடப்பன—மிருகங்கள் முதலியன;
4. பறப்பன—பறவை முதலியன;
5. நீந்துவன—மீன் முதலியன;

**இயங்காப் பொருள்களாவன :—**

புல், பூண்டு, செடி, கொடி, மரம், உலோகம் முதலியன.

மேலும், உலகப் பொருள்கள் யாவற்றையும் மூன்று வகையாகப் பிரித்துள்ளார். அவை :

1. தாதுப் பொருள்களாகிய ரசம், உபரசம், உப்பு, பாடாணம், உலோகம் முதலியன.

2. தாவரப்பொருள்களாகிய மரம், செடி, கொடி, புல், பூண்டு முதலியன.

*3. சங்கமப் பொருள்களாகிய நட்ப்பன, நகர்வன, பறப்பன, ஊர்வன, நீர்வாழ்வன முதலியவையாம்.*

*குறிப்பு*:—மேற்கூறிய தாது, தாவர, சங்கமப் பொருள்களைப் பற்றிய விவரங்கள் யாவும் மாணவர்கள் கற்றறிதல் வேண்டும். எப்பொருளையும் ஐம்பொறி புலன்களாலறியலாம். அதாவது, காதால் கேட்டும், மெய்யால் பரிசித்தும், கண்ணால் பார்த்தும், நாவால் சுவைத்தும், மூக்கால் மோந்தும் (மூகர்ந்தும்) அறியலாம். ஆகவே ஐம்பூதச் சேர்க்கையாலுண்டான தாது, தாவர, சங்கமப் பொருள்கள் யாவற்றையும் ஐம்பூதச் சேர்க்கையாலான ஐம்பொறி புலன்களைக் கொண்டே அறிய வேண்டுமென்பது தெளிவு. தாது, தாவரப் பொருள்களை அறிவதற்கு ஐம்பொறி புலன்கள் தேவை எனினும், குறிப்பாக அவற்றின் சுவை, வீரியம், பிரிவு இவற்றைக் கொண்டே ஒவ்வொரு பொருளின் ஐம்பூதச் சேர்க்கையை அறியலாமெனவும் கூறியுள்ளார்.

எவ்வாறெனில், ஒவ்வொரு சுவையும் இரண்டிரண்டு பூதங்களின் சேர்க்கையாலானவை. சுவையைக் கொண்டே பொருள்களின் ஐம்பூதக் கூட்டுறவை நிச்சயிப்பதுபோல, மணம், நிறம், உருவம், அமைப்பு, ஸ்பரிசம் இவற்றைக் கொண்டும் ஐம்பூதக் கூட்டுறவை அறியலாம். ஏனெனில், மணமும், நிறமும், உருவமும், அமைப்பும், ஸ்பரிசமும் கூட ஐம்பூதங்களின் ஏற்றத்தாழ்வான சேர்க்கையால் உண்டானவை எனலாம்.

### சுவை.

*ஐம்பூதப் பொருள்களின் சுவைகளாவன*:—*(1) இனிப்பு; (2) புளிப்பு; (3) உவர்ப்பு; (4) கைப்பு; (5) கார்ப்பு; (6) துவர்ப்பு* என அறுவகைப்படும்.

*ஐம்பூதங்கட்கும், அறுசுவைகளுக்குமுள்ள ஒற்றுமை யாவன*:—

| | | |
|---|---|---|
| *(1) இனிப்பு* | *பிருதிவி* | *அப்பு.* |
| *(2) புளிப்பு* | *பிரிதிவி* | *தேயு.* |
| *(3) உவர்ப்பு* | *அப்பு* | *தேயு* |
| *(4) கைப்பு* | *வாயு* | *ஆகாயம்.* |
| *(5) கார்ப்பு* | *தேயு* | *வாயு.* |
| *(6) துவர்ப்பு* | *பிருதிவி* | *வாயு.* |

N.B. இச்சுவைகளின் மீகுதியைக் கொண்டு, தேகத்தில் எப்பூதங்களினளவாக எக்குற்றங்கள் பிணிக்கப்பட்டிருக்கின்றன வென்பதை அறியலாம்.

## வீரியம்.

ஐம்பூதப் பொருள்கள் யாவும் குளிர்ச்சி அல்லது வெப்பத்தைப் பெற்றிருக்கும். ஆதலால் பொருள்களின் வீரியமானது சீதவீரியம், உஷ்ணவீரியம் என இருபிரிவுகளுளடங்கும்.

தேயுபூதம் அதிகமுள்ள பொருள்கள் உஷ்ணவீரியமும்; தேயுபூதம் சேராத பொருள்கள் சீதவீரியம் எனவும் கொள்ளலாம்.

புளிப்பு, உவர்ப்பு, கார்ப்பு இச்சுவையுள்ள பொருள்களில் தேயுபூதம் கலந்திருப்பதால், இவைகள் உஷ்ணவீரியத்தையுடையவை எனவும், அழல் குற்றத்தை மிகுதிப்படுத்துமெனவும் அறியவும்.

இவை யொழிந்த மற்ற மூன்று சுவைகளான இனிப்பு, கைப்பு, துவர்ப்புப் பொருள்கள் யாவும் தேயுபூதக் கலப்பில்லாத காரணத்தால் சீதவீரியமுடையனவாம்.

## நிறம்.

நிறத்தின் வழியாக ஐம்பூதக் கூறுபாடறிதல் :—

| | |
|---|---|
| பிருதிவி (மண்) | பொன்னிறம். |
| அப்பு (நீர்) | படிக நிறம். |
| தேயு (தீ) | செந்நிறம். |
| வாயு (காற்று) | நீல நிறம். |
| ஆகாயம் (வெளி) | புகைநிறம். |

என்பனவாம்.

தேகம் பஞ்சபூதமயம் அல்லது உடல் ஐம்பூதக் கூறுபாட்டையுடையதெனல்.—நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம் ஆகிய ஐந்து பூத மயமான தேகமென்பதை விளக்குகிறார் :—

1. பிருதிவியின் கூறு.—எலும்பு, தோல், தசை, மயிர், நாடி (நரம்பு) முதலிய உடற் கூற்றினையுடையது.

2. அப்புவின் கூறு.—குருதி, கொழுப்பு, வெண்ணீர், சிறுநீர், மூளை முதலிய உடற் கூற்றினையுடையது.

3. தேயுவின் கூறு.—இறுமாப்பு, சோம்பல், மைதுனம், அச்சம், தூக்கம் முதலிய உடற் கூற்றினையுடையது.

4. வாயுவின் கூறு.—ஓடல், இருத்தல், நடத்தல், கிடத்தல், நிற்றல் முதலிய உடற் கூற்றினையுடையது.

5. ஆகாயத்தின் கூறு.—ஆசை, உட்பகை, மோகம், மதம், வஞ்சனை முதலிய உடற் கூற்றினையுடையது.

இவை யாவும் புறக் கருவிகள் இருபத்தைந்தென வகுக்கப்பட்டுள்ளன.

தேகம் பஞ்சபூதம்.

மேற்கோள்.

(சதகநாடி).

1. "பாரப்பா பூதமைந்து மண் நீர் தேயு
பரிவாயு வாகாய மைந்தினாலே,
சேரப்பா கடமரச்சு மண்ணின்கூறு
செறிமயிர் தோல் என் பிறைச்சி நரம்பைந்தாகும்
நேரப்பா அப்புவின் கூறு திரமச்சை
நீர்மூளை சுக்கில மோடைந்தாகும்
காரப்பா தேயுக்கூறு பயமாங்காரங்
கடுஞ்சோம்பல் நித்திரைமை தனங்களஞ்சே."

2. "அஞ்சானவாயுவின் கூறியிருத்தலோடல்
யவை நடத்தல் கிடத்தலுடலிருத்தலஞ்சாம்,
அஞ்சாகுமாகாயக் கூறு காமமதிற் குரோதம்
உலோப மோகமதமஞ்சாகும்,
பிஞ்சாறு விழிமானேயிவை களெல்லாம்
புறக் கருவியிருபத்தைந்தென வகுத்துத்
தஞ்சாத தத்துவங்கள் தொண்ணூற்றாறும்
சொல்வதுகேள் பொறியைந்து நானுண்டாச்சே."

N.B. பூதம் 5, பொறி 5 முதலிய தொண்ணூற்றாறு தத்துவங்கள் பற்றிய விவரங்களை மற்றோரிடத்தில் கூறியுள்ளோம். மேலே கூறியிருப்பது "தேகம் பஞ்சபூதமயம்" என்ற "புறக்கருவிகள்" இருபத்தைந்து மட்டும் என்பதேயாம்.

இதுபற்றி "திருமூலர்நாடி" கூறுவதாவது :

ஐம்பூதமயமான தேகத்தில் மாமிசம் (தசை) போன்ற கடின பதார்த்தங்கள் பிரிதிவியின் கூறு என்றும்; அமிர்தநீர் போன்றவை யாவும் அப்புவின்கூறு என்றும்; தேகத்தில் வெப்பத்தையுணர்த்துவது தேயுவின்கூறு என்றும்; நாசியின் வழியாய் மூச்சு (சுவாசம்)

வாங்கவும் விடவுமாயிருப்பது வாயுவின்கூறு என்றும்; மேற்கூறிய யாவும் நிலைத்து நிற்பதற்கு இடம் கொடுப்பது ஆகாயம் என்றும் கூறப்பட்டுள்ளன.

தவிர, பிருதிவி நாசியில் "நாற்றம்" (வாசனை) யறிவது; அப்பு நாவினிடத்தே "ருசி"-யையறிவது; தேயு கண்ணினிடத்தே "ஒளி" யைக் கொடுப்பது; வாயுவானது தோலில் "ஸ்பரிசம்" உண்டாக்குவது; ஆகாயம் காதில் "சப்தத்தை" உண்டாக்குவது எனவும் கூறியுள்ளார்.

N.B. இதனை, ஐம்பொறி புலன்கள் யாவும் அதனதன் பூதத்தின் இயற்கையளவாயுண்டானவை என்று முன்னமேயே கூறியுள்ளோம்.

மீண்டும் "திருமூலர்நாடி" கூறுவதாவது: இவ்வைம்பூதமயமான தேகத்தில் முக்கியமாக அடங்கியிருப்பது மூன்று பூதங்களாலான முக்குற்றங்களேயாம். அவை "வாயுவின்கூறு வாதம்" எனவும்; "தேயுவின் கூறு பித்தம்" எனவும், "அப்புவின்கூறு ஐயம்" எனவும் குறிப்பிடப்பட்டிருக்கின்றன.

இம்மூன்று குற்றங்களாகிய வளி, அழல், ஐயம் ஆகியவற்றின் ஏற்றத்தாழ்வால் (மிகுதி குறைவுகளால்) எல்லா நோய்களும் பிறக்கின்றனவெனவும்; இவற்றைக் கைநாடி நடையின் குறிப்பால் அளவிட்டு அறிந்து யோகிகளால் விளக்கப்பட்டிருக்கின்றனவெனவும் கூறியுள்ளார்.

## திருமூலர்நாடி.

### மேற்கோள்.

1. "தலங்காட்டியிந்தச் சடமானவைம்பூதம்
நிலங்காட்டி நீர்காட்டி நின்றிடுந்தீகாட்டி
வலங்காட்டி வாயுவால் வளர்ந்தேயிருந்தது
குலங்காட்டிவானிற் குடியாயிருந்ததே."

2. "இருந்திடுமிவ்வைந்தாலெடுத்தசடமிது,
பிரிந்திடு மாமிசம் பிருதிவியின் மயமாகும்,
சொறிந்திடும் அமிர்தநீர்சொற்குரி அப்புவாம்,
வருந்திய வன்னிவளமாய் வெதுப்புமே.

3. "வெதுப்பதுடனே விடுபட்டு நாசியில்,
எதுப்புற்று நிற்குமிது காணும் வாயுவாம்
கதுப்பொத்தே யெல்லாங் கவளத்திடமிட்டு
மதுப்பொத்து நிற்கும் வானின் வளப்பமே."

4. "வளப்பங்கேள் பூமிவசிக்கும் நாசியில்
களப்பமாம் வன்னிதானுங்கண்ணினில்
அளப்பமாமப் போவடங்கிடும் நாவினில்
பளப்ப நல் வாயுவும் பரிசிக்குமேங்குமே."

5. "எங்கிய காதிலிருந்துறுமாகாசம்
பொங்கியரைத்துக்குட்பொல்லாமூன்றுதான்
தங்கிய வாயுச்சமர்த்தன் மகாவாதம்
பங்கியவன்னியார் பகுந்தது பித்தமே."

6. "பகுந்த சலத்திற் பரிசிக்குமையம்
வகுந்தயிம்மூன்றாற் வளர்ந்தது நோயெல்லாம்
அகந்தானறிந்தளவிடயோகிகள்
மகிழ்ந்தேயிதினின்ற மயக்கவறிவதே"

என்பதினால் மேற்கூறிய விவரங்கள் யாவும் அறிகிறோம்.

**ஐம்பூதக் கூறு பாட்டையுடைய பொருள்களின் பண்புகள்.**

**1. மண்கூறுப் பொருள்களின் பண்புகள்.**

சுமை (பாரம்)—பருமன்—பெருகியோடக் கூடாத தன்மையாம்.

நிலைத்து நிற்றல்)—திரட்சி—வளர்ச்சி—மேன்மை என்பனவாம்.

**2. அப்புக்கூறுப் பொருள்களின் பண்புகள்.**

குளிர்ச்சி—நெய்ப்பு—மென்மை—தோய்ந்து போதல்—தளர்ந்து பெருகல்—நனைந்து கசிய வைத்தல்—மனக் களிப்பையுண்டாக்கல்—சிதறிக்கிடப்பவற்றை ஒன்று கூட்டுதல்—என்பனவாம்.

**3. தேயுக்கூறுப் பொருள்களின் பண்புகள்.**

வெப்பம்—கூர்மை—வரட்சி—தெளிவு—துண்துகள் i.e., சூக்குமம்)—எரிதல்—ஒளிர்தல்—நிறமுண்டாதல் என்பனவாம்.

**4. வாயுக் கூறுப் பொருள்களின் பண்புகள்.**

தளர்ச்சி—வறட்சி, எளிமை (இலகு) — ஊறு — மனக்கவலை உடல் வாட்டம் என்பனவாம்.

**5. ஆகாயக் கூறுப் பொருள்களின் பண்புகள்.**

நுட்பம்—தெளிவு—தணிவுத் தன்மையை யுண்டாக்குதல்—தொளையுடைய பாகங்களை அடைத்தல் என்பனவாம்.

**ஐம்பூதங்கட்கும், அறுசுவைகட்கும், மூக்குற்றங்களுக்குமுள்ள ஒற்றுமை, வேற்றுமையாவன :**

| ஐம்பூதங்கள். | அறுசுவைகள். | மூக்குற்றங்கள். |
|---|---|---|
| விண் | இனிப்பு | வளி. |
| கால் | புளிப்பு | தீ. |
| அனல் | உப்பு | ஐயம். |
| புனல் | கைப்பு. | |
| மண் | கார்ப்பு. | |
| | துவர்ப்பு. | |

இரண்டிரண்டு பூதங்களின் சேர்க்கையால் ஒவ்வொரு சுவையும் உண்டாகின்றது. அதுபோலவே தீக்குற்றம் நீங்கலாக மற்ற இரு குற்றங்களும் இரண்டிரண்டு பூதங்களின் சேர்க்கையைப் பெற்றிருக்கின்றன. அவை யாவன :

இனிப்பு = மண் + நீர்.
புளிப்பு = மண் + தீ.
உப்பு = நீர் + தீ.
கைப்பு = வளி + விண்.
கார்ப்பு = வளி + தீ.
துவர்ப்பு = மண் + வளி.

வளி = வளி + விண்.
தீ = தீ.
ஐயம் = நீர் + மண்.
என்பனவாம்.

இதனை மேலே "சுவை" என்னுமிடத்திலும் விளக்கியுள்ளோம். இதினின்றும் நாம் தெரிந்துகொள்வது யாதெனில், சுவைகளின் பூதச் சேர்க்கையையும், குற்றங்களின் பூதச் சேர்க்கையையும் அறிவதனால், எச்சுவையுள்ள பொருள்களை வழங்கினால் எக்குற்றம் வளர்ச்சியடையும் அல்லது எக்குற்றம் சமப்படும் என்பதை எளிதில் அறிந்து கொண்டு, அதற்குத் தக்க பரிகார முறையை அமைக்கமுடியுமென்பது சுலபமாகும்.

உதாரணமாக இனிப்புச் சுவையானது மண்ணும் நீரும் சேர்ந்து உண்டானது. ஐயக்குற்றத்திற்கும் அதே பூதங்கள் தான் சேர்க்கை. ஆகவே இனிப்புச் சுவையைப் பயன்படுத்த ஐயம் வளர்ச்சியடையும் என்பதும்; இதற்கு மாற்றாக தீப் பூதம் சுவையுள்ள பொருள்களை வழங்க ஐயம் சமப்படும் என்பதும் தெளிவாகும். இது போலவே, புளிப்புச் சுவையுள்ள பொருள்களைத் தீயால் வந்த நோயில் வழங்க நோய் மிகுதிப்படும். இதற்கு எதிர்மாறான சுவையையுடைய பொருள்களை வழங்க தீயால் வந்த நோய் சமப்படும் என்பதையும் அறியவும்.

*(பக்கம் 9—14 சி. ம. சுருக்கம்.)*

**திரிதோடங்களும் சுவைகளும்.**

1. "சேத்தும மெழுந்திருக்கிற் கித்திப்பு நாவி லேறும்
ஏத்திய கசப்பு மீறில் எழும்பிடும் பித்தமாகும்
மாத்திய புளிப்பு மீறில் வந்திடும் வாதமாகும்
சேத்துமந் தண்ணீர் பித்தந் தீ காற்று வாதமாமே."

*(அகத்தியர் நாடி)*

*(வேறு)*

2. "வாதமே புளிப்பு வேண்டும் வன்பித்தங் கசப்பு வேண்டும்
தீதிலாசி லேற்பனத்தான் சேர்த்திடும் இனிப்பு வேண்டும்
ஓதிய வாத பித்த சிலேற்பன தொந்தத் தோர்க்குக்
காதலாய்த் துவர்த்தல் காரல் உவர்ப்போடு கருதுங்காணே."

*(இரத்தினச்சுருக்க நாடி)*

என்பதினால்;

இனிப்புச் சுவை கப மிகுதியையும்; கைப்பு சுவை பித்த மிகுதியையும்; புளிப்பு சுவை வாத மிகுதியையும் காண்பிக்கு மெனவும்; தொந்தத்தில் துவர்ப்பு, கார்ப்பு, உவர்ப்பு சுவைகள் முறையே வளி, அழல், ஐயம் ஆகிய குற்றங்களின் சுவையுடன் கலந்து நிற்கும் எனவும்; மேலும், ஐயம் அப்புவின் தன்மையையும்; பித்தம் தேயுவின் தன்மையையும்; வாதம் வாயுவின் தன்மையையும்; குறிக்கு மென்று மறிக, தேகத்தினிடத்தே யமைந்துள்ள ஐம்பூதங்களுள் அப்பு, தேயு, வாயு என்னும் பூதாம்சங்கள் எவையோ, அவையே ஐயம், பித்தம், வாதம் ஆகியவற்றை முறையே குறிக்குமென்பதையும் கவனிக்கவும்.

## முத்தோடங்களை மிகுதிப்படுத்தும் சுவைகள்.

(வேறு)

(வெண்பா)

"புளிதுவர் விஞ்சுங்கறி யாற்பூரிக் கும்வாதம்,
ஓளி யுவர்கைப் பேறில் பித்துச் சீறும்—கிளிமோழியே
கார்ப்பினிப்பு விஞ்சிற் கபம்விஞ்சு ஞ்சட்டிாதச்
சேரப் புணர் நோயணுகாதே."

என்பதினால்; புளிப்பு, துவர்ப்பு அதிகமுள்ள உணவுகளால் வாத மிகுதியையும்; உவர்ப்பு, கைப்பு சுவை அதிகமுள்ள உணவுகளால் பித்த மிகுதியையும்; இனிப்பு சுவையுள்ள உணவுகளால் ஐய மிகுதியையும் உண்டாக்குமென அறிக.

புளிப்பு, உப்பு, கார்ப்பு, இம்மூன்றும் உஷ்ண வீரியம்; இனிப்பு, துவர்ப்பு, கைப்பு இம்மூன்றும் சீத வீர்ய மென்பதை ஞாபகம் வைத்துக் கொள்ளவும்.

## முத்தோட மிகுதியை சமனஞ் செய்யும் சுவைகள்.

(வெண்பா)

1. "வாதமேலீட்டால் மதுரம் புளியுப்பு
சேதமுறச் செய்யுஞ் சிறையம்—ஓதக்கேள்
காரந் துவர்கசப்புக் காட்டுஞ் சுவை யெல்லாம்
சாரப் பரிகாரஞ் சாற்று."

2. "பித்தமதி கரிப்பின் பேசும் பரிகாரம்
சுத்தத் துவரோடு சொல்லீனிப்புச்—சத்தாகும்
கைப்புச் சுவையே கருதவதன் வீறு
எய்ப்படையு மென்றுரைத்தா ரிங்கு."

(கண்ணுசாமியம்)

என்பதினால்;

இனிப்பு, புளிப்பு, உப்பு இம்மூன்று சுவைகளும் வாதத்தைச் சமனப் படுத்துமென்றும்; கார்ப்பு, துவர்ப்பு, கைப்பு இம்மூன்று சுவைகளும் ஐயமிகுதியை சமனப்படுத்துமென்றும்; துவர்ப்பு, இனிப்பு, கைப்பு இம்மூன்று சுவைகளும் பித்த மிகுதியைச் சமனப்

படித்துமென்றும்; ஆதலான் வளி, அழல், ஐயம் பிரகோபமுடையவர்கள் அவ்வவற்றிற்குத் தகுந்த அனுகூலமான சுவைகளை உண்டு வருதல் அவசியம் எனவும் அறிகிறோம்.

| அறுசுவை. | ஐம்பூதம். | முக்குற்றம். |
|---|---|---|
| இனிப்பு. | பிருதிவி + அப்பு. | ஐயம் விருத்தி. |
| புளிப்பு. | பிருதிவி + தேயு. | பித்தம் விருத்தி. |
| உவர்ப்பு. | அப்பு + தேயு. | பித்தம் விருத்தி. ஐய விருத்தி. |
| கைப்பு. | வாயு + ஆகாயம். | வாத விருத்தி. |
| கார்ப்பு. | வாயு + தேயு. | பித்த விருத்தி, வாதம் விருத்தி, |
| துவர்ப்பு. | வாயு + பிருதிவி. | வாத விருத்தி. ஐயம் விருத்தி. |

குறிப்பு: (வேறு).

**வாத மிகுதியாகும் சுவைகள்.**—கார்ப்பு, கைப்பு, துவர்ப்பு.

**பித்த மிகுதியாகும் சுவைகள்.**—புளிப்பு, கார்ப்பு, உப்பு.

**கப மிகுதியாகும் சுவைகள்.**—இனிப்பு, புளிப்பு, உப்பு.

**திரிதொடங்களும் ஏழு உடற்றாதுகளுக்குமுள்ள பொருத்தம்:**

வளி—எலும்பிலும்;

அழல்—செந்நீரிலும்;

ஐயம்—மற்ற தாதுக்களிலும் பொருந்தி நிற்குமென அறியவும்.

## அத்தியாயம் III

### கரு உற்பத்தி விளக்கம்.

**இருவகைச் சேர்க்கையால் பிறப்பவை எவை?**

"தண்ணீருஞ் சுண்ணாம்புந்தானே சேர்ந்தால்,
சகல சித்துங் கைவசமாய்த்தானே சிக்கும்,
மண்ணாரும் விண்ணாருஞ் சேர்ந்தா ராகில்
வாதமடம் வெளியாச்சுமாய் கைபோச்சு,
பெண்ணாரும் புருடருமே சேர்ந்தாராகில்
பிள்ளையது மணிபோலப் பிறக்கலாச்சு."

என்பதற்கிணங்க பெண், ஆண் கலவியால் பிள்ளை பிறக்குமென அறிகிறோம்.

மீண்டும் கூறுவதாவது :

"நாதமுடன் விந்துவுங் கருக்குழியில்,
நலமாகப் பாய்ந்தவுடன் கருவுமாச்சு,
பேதமிலா வுருவாகித் திரளலாச்சு
பின்பு நாளுக்குநாள் காயமாச்சு
மாதமது பத்தானால் விழுவுமாச்சு
மண்ணின் மேல் வந்தவுடன் பசளையாச்சு."

என்பது போல நாதமும் விந்துவும் கருக்குழியில் சந்தித்தவுடன் கருவுருவாகி, நாளுச்சு நாள் திரண்டு, வளர்ச்சியடைந்து உயிருடன் கூடிய உடல் பூரண வடிவம் பெற்று பத்தாவது மாதத்தில் சனனமாகிப் பூமியில் பிறந்தவுடன் குழந்தை என்னும் பெயருமாகுமென அறிகிறோம்.

## கரு உற்பத்தி (வல்லாதி நாடி).

1. "ஆண்மை யென்று மங்கை பூர்க்குங் காலம்
யன்றுமுதல் பதினாறு நாளுமந்தத்,
தாண்மை யன்றிப் பதினாறு யிதழாய் நின்ற,
தாமரை போல் மலர்ந்திருக்குஞ்சாற் றக்கேளு,
காண்மையன்றி த்தினமொன்று இதழ் தானொன்று
கருவான கருக்குழிதான் யிந்நாட்குள்ளே,
பாண்மை என்ற விந்துங்கேளுரும் போது,
பாயுமப்பா வன்னியொடு வாயு தானே."

2. "வாயுவொடு விந்துசென்று மலர்க்குட் சேர்ந்தால்,
மலரிலுள்ள யிதழ்களெல்லாம் மூடிக்கொள்ளும்,
தேயுவொடு வாயு நின்று திரட்டும் பாரு,
செப்பியாதாந்தினமொன்றில் கடுகு போலாம்,
சாயுமடா நாளிரண்டில் மல்லிபோலாம்,
தப்பாமல் நாள் மூன்றில் மிளகு போலாம்,
சேயுமடா நாலாநாளவரை வித்தாம்,
சேர்வைந்தாம் நாள் குமிழிபோலாகும்மே."

3. "ஆகுமே ஆறாநாள் நெல்லிக்காய் போல்,
ஆனநாள் எழுக்குப் புன்னக்காய் போல்
ஏகுமே எட்டா நாள் பஞ்சபூதம்
இதிலுண்டாம் ; பஞ்சவர்ணமிதிலே தோன்றும்
போகுமே நவதினத்தில் காக்கைமுட்டை
போலாகும் ; பத்து முதல் ஐந்து நாளும்
வேகுமே கோழி யண்ட வடிவமாகும்
விள்ளுகிறேன் திங்களொன்றில்வா ழைப்பூவே."

4. "பூவிலே யிரண்டு திங்கள் கழுத்துண்டாகும்
புகழ்ச்சிரசும் உறுப்பாகும்; மூன்றாந் திங்கள்
தாவிலே சந்து கால்கை யுண்டாகிச்
சட்டகம் போல வடிவாகி விரலு முண்டாம்
நாலிலே வாய் நாக்கு மூக்கு முண்டாம்
நவிலுகிறேன் மாதமைந்தில் செவியுண்டாகும்
பாலிலே ஆறுதிங்கள் குய்யத் துவாரம்
பாலுக்கு மேழுக்கும் நரம்புதானே."

5. "நரம்புதான் எழுபத்தீராயிரந் தான்,
நாடியெட்டாந் திங்களுக்கு மயிருண்டாகும்
உரம்பவே தாய்புசிக்கு மன்னசாரம்
உச்சிவழி தாலிறங்கி யுடல் பெருக்கும்
வரம்பெறவே யொன்பதிலே யுயிர்தான் வந்து
மறைஞான முண்டா முச்சி வழிமூடும்
நிரம்பவே தசமாதம் சென்றாலிந்த
நெருப்போடு வாயு மிஞ்சிக்க விழுந்தானே."

6. "தானடா சிரந்திரும்பிப் பிறந்த பிள்ளை
தனக்குப் பிரமசிருட்டி தூராண்டு தன்னில்
ஏனடா வாலையது வீரைந்தாகும்
இருபது தானாகுமட்டும் வளரும் பிள்ளை
நானடா வொளிபோகு மூப்பதாண்டில்
நாற்பதுக் குளழகுபோம் நாடிப்பாரு
வேனடா வைம்பதாம் வயது தன்னில்
விரைந்து பிருதிவியில் அப்புமேவும் பாரே."

என்பதினால்; இதன் கருத்தைப் பின்வருவனவற்றில் காணவும்.
(Further stanzas are mentioned under "age" determination)

## பிண்டோற்பத்தி.

(வேறு)

(குணவாகடம்)

1. "கேளப்பா மணமான வாயுகூடிக்
கெடியான சித்தமாகாசம் பொங்கி
வேளப்பா ஆங்கார சிங்காரமிஞ்சி
மேவுதற்குப் பெண்மேலே மோகமாகும்
நாளப்பா ஐந்துக்கும் பலமே தென்றால்
நலம் பெறவே சொல்லுகின்றேன் நன்றாய்க் கேளு
தாளப்பா மனதோடே வியானன் கூடும்
தனியான நாதத்தில் அபானன் தானே."

2. "தானென்ற விந்துவினிற் சமானன் கூடும்
தனியான சித்தத்தில் பிராணன் கூடும்
கானென்ற ஆங்காரங்கர்ச்சிப் போடு
கலந்து நிற்கும் உதானனப்பா கண்டு கொள்ளு
வேனென்ற பத்து மொன்றாய் மனதுங்கூடி
மேவியவள் கலந்து வந்து விழுகும்போது
மானென்ற மௌன பரவசமேயாவாள்
மருவுகின்ற பெண்ணுக்கு முறைதான் கேளே "

3. "முறையான பெண்ணாணுமௌன முற்றால்
மோசமில்லை கருவங்கே தரிக்கும் பாரு
நிறையாக வலத்தோடில் ஆணேயாகும்
நேராகயிடத்தோடில் பெண்ணேயாகும்
உறையான கருப்பையில் சுக்கிலமாப்ப்பாய
உத்தமனே சுரோணிதந்தானு சைத்து கொள்ளும்
கறையாகப் பாய்ந்த வழிதமருபோலக்
கழற்கொடிக்காய் போற்றிரண்டு சிரசுமாமே."

4. "ஆமப்பா சிரசோடேகையுங்காலும்
அப்பனே தத்துவங்கள் நரம்பு மூளை
ஓமப்பா அத்திமுதல் உரோமத்தோடு
உத்தமனே பதினோரு வாசலுமே காணும்
காமப்பால் விழுந்தவழி சிரசினாலே
கைமுறையாய்த் தாயுண்டயன் னஞ்செல்லும்
சேமப்பா நடுமையத் தொப்பூழாலே
சென்றதெல்லா மலமாகக் கழுயு ந்தானே."

5. "தானென்ற பதினொன்றாற் சடந்தான் மூன்னே
சாதகமாயெடுத்து வருமலடெவ்வாறு?
ஊனென்ற பெண்ணுக்கு மனது வேறாய்
உருதமுற்று மௌன முண்ணாப் பாவத்தாலே
கானென்ற மலடாவாள் புருடனுக்குங்
கைமுறையாயிப்படித்தான் கண்டுகொள்ளு
தேனென்ற மொழியாட் சுப்பரனார் சொன்னார்
செகமெலாமிப்படித்தான் செனித்த வாறே."

(குணவாகட நாடி)

இவற்றின் பொருள்கள் யாவும் ஏற்கே கூறப்பட்டுள்ளன.

## கரு அமையும் விவரம்.

மங்கையர்கள் பூத்த நாள் முதல் நாலு நாள்கள் வரையில் அசுத்தமான காலமாதலாலும், தோடத்தையுண்டாக்குமாதலாலும், அதனை விலக்கிப் பனிரெண்டு நாள்களே சந்தான விருத்திக்கு ஏற்ற காலமாகப் பாவித்தல் வேண்டும். அக்காலத்தில் கருக்குழி மொக்கானது மலத்திருக்கும். இத்தினங்களுக்குள் ஆணும் பெண்ணும் கூடின் சுக்கிலம் வாயு தேயுக்களின் இயக்கத்துடன் கருக்குழியிற் சென்று சுரோணிதத்துடன் சம்பந்தப்பட்டால் (கலந்தால், சேர்ந்தால்) கருமலர் குவியும். இதன் காரணமாகக் கருப்பையிலும், அதன் உறுப்புகளிலும் (ஜனன இந்திரியத்தில்) பலவித மாறுதல்கள் நாளடைவில் தோன்றும். நாதமும் விந்தும் பரமாணுக்களைப் போன்றவை. கருப்பையில் சென்றவுடன் ஊர்ந்து செல்லக்கூடியவை என்பதாகவும் கூறியுள்ளார்.

### பிண்டோற்பத்தியில் ஐம்பூதங்களின் சேர்க்கை அல்லது ஐம்பூதங்களின் தொழில் நடைபெறும் விதமும் கூறுகிறார்.

கருத்தரித்த அந்நாள் தொடங்கி வாயுவானது உருவற்ற கருவைத் தாது வேறு, தோடம் வேறாகப் பிரிக்கும். தேயுவானது வாயுவால் வேறு பிரிக்கப்பட்ட தாது, தோடங்களை உருவாக்கும். அப்பு பூதமானது வாயு, தேயுக்களால் உருவாக்கப்பட்ட தாது, தோடங்களுக்கு வாயு, தேயுக்களின் கூட்டுறவால் உண்டான சுவாலையை (உஷ்ணத்தை)த் தணிக்கும் பொருட்டு ஈரத்தால் காக்கும். பிருதிவி பூதமானது, அப்பு பூதத்தால் காக்கப்பட்ட தாது, தோடங்களுக்கு ஈரத்தால் கெடுதி வரா வண்ணம் காக்கும். ஆகாயமானது சிருட்டிக்கப்பட்டும், வளர்க்கப்பட்டும் வரும் உருவங்களை நாளாவட்டத்தில் கருப்பையில் விருத்தியடைய இடங் கொடுக்கும்.

(சிகிச்சா ரத்னதீபம்)

(வேறு)

"உன்னிய கர்ப்பக் குழியாம் வெளியிலே
பன்னிய நாதம் பகர்ந்த பிருதிவி
வன்னியும் வாயுவும் மாயுறுஞ் சுக்கிலம்
மன்னிய சமனாய் வளர்க்குமுதகமே."

(திருமந்திரம்)

"உதக முதிர முறுங்கனல் வாயுவால்
சிதகுறு மங்கங்கள் செய்து முடித்திடும்."

(திருமந்திரம்)

என்ற திருமூலர் கருத்துப்படி கருக்குழியை ஆகாயமாயும்; நாத பிருதிவியாயும்; சுக்கிலம் வன்னி வாயுவாகவும் பாவித்து; கருவளர் வதற்கு இடமளிப்பது "கருப்பை" எனவும்; கருவைத் தோற்று வித்து அதற்கு உணவை அளிப்பது "நாதம்" எனவும், வளர்ச்சிக்கு வேண்டிய சூட்டையும், வாயுவையும் "விந்து" பெற்றுளது என வும்; இது சூட்டையும், வாயுவையும் நாதத்திற்குத் தந்து தொழில் புரிவதால் நாதம் கருவாக வளரமுடிகிறதென்றும்; "உதகமாகிய நீர்" யாவற்றையும் நேர்மையாகவும், செழிப்பாகவும் வளரச்செய் யும் என்பதாகவும் அறிகிறோம். அன்றியும், "உதகமான நீர்" தனது நீயின் தன்மையாலும், வாயுவின் தன்மையாலும் செந்நீராக மாறி (இரத்தமாக மாறி) அங்கங்களை உண்டாக்குவதாகவும் கூறப் படுகிறது. இதனால் நீர் போன்ற இரச தாதுவிலிருந்து இரத்த தாது முதலில் உண்டாகி அப்பால் மற்ற தாதுக்கள் உண்டா கின்றன என்பதும் புலனாகின்றது.

(சி. ம. சுருக்கம்)

## "கரு" தரிப்பதற்கு சாதகமாயிருப்பது எது? மலடு உண்டாவதற்குக் காரணம் யாது?

ஆண், பெண் கலவி ஏற்பட்டாலும் எல்லோருக்கும் கரு உற்பத் தியாகவோ அல்லது மலடாகவோ யிருப்பதில்லை. சிலருக்குக் கருத்தரிக்கும்; வேறு சிலருக்குக் கெர்ப்பம் தரியாது மலடாகக் கூடும். காரணங்கள் பலயிருப்பினும், குறிப்பாகத் தம்பதிகளுக் குக் கருத்தரிக்க வேணுமென்றால், அவர்களது ஞானேந்திரியம், கருமேந்திரியம், மனசு ஆகிய இப்பதினொன்று தத்துவங்களும் ஒன்று கூடிய சமயம் ஆணும் பெண்ணும் மௌனமாயிருத்தல் அவசியம். அதாவது ஆண் பெண் கலவியில் சுக்கில சுரோணிதங் கலக்கும் காலத்தில் இந்தியாதி ஒன்றுபட்ட நேர்மையுடன் மௌனம் அவசியம்.

**பெண்ணுக்கு மனது வேறாய் மௌனமின்றேல் மலடாவாள்.**

அதே மாதிரி புருடருக்கு முண்டு. இதுபற்றியே அகத்தியர் "உயர் ஞானத்தில்"—"பெண்ணின் பாலிந்திரியம் விடும்போதெல்லாம்— **பேணிவலம்மேல் நோக்கி அவற்றில் நில்லு" எனக் கூறியுள்ளார்.**

**"முறையாகப் பெண்ணாணு மௌனமுற்றால் மோசமில்லை கருவாங்கே தரிக்கும்பாரு"** என்பதினாலும்;

"தானென்ற பதினொன்றாற்சடந்தான் முன்னே
சாதகமாயெடுத்து வருமலடெவ்வாறு?
ஊனென்ற பெண்ணுக்கு மனது வேறாய்
உருதமுற்று மௌனவொண்ணாப்பாவத்தாலே,
கானென்றமலடாவாள் புருடருக்குக்
கைமுறையாயிப் படித்தான் கண்டுகொள்ளே."

(குணவாகடநாடி.)

என்பதினாலும் அறிகிறோம்.

**ஆண், பெண், அலி முதலிய பிறவிக்குக் காரணமென்னை?**

கருத்தரிப்பதற்குரிய நாதமும், விந்துவும் கலக்கும்காலத்தில் ஆண் பெண் இருவருக்கும் "சரம்" என்னும் "பிராணவாயு" வின் இயக்கமானது வலது நாசியில் போய்கொண்டிருப்பின் பிறக்கப் போகும் குழந்தை ஆண் எனவும்; இடது நாசியில் ஓடில் பெண் எனவும்; உபாயமாகச் சுழிமுனையிலோடில் அலியாகவும் பிறக்கு மென நூல்கள் கூறுகின்றன.

"நிறையான வலத்தோடில் ஆணேயாகும்,
நேராகமிடத்தோடிற் பெண் ணேயாகும்"

என்பதினாலறிக.

அன்றியும் ஆண் பெண் கூடும்போது ஆணுக்குப் பெண் மீது அதிக அன்புண்டாகில் தரிக்கும் கரு ஆண் எனவும்; பெண்ணுக்கு ஆண் மீது அதிகம் அன்புண்டாகில் தரிக்கும் கரு பெண் எனவும்; இரண்டும் சமமாகில் அலியாகவும் பிறக்குமென்பர் திருமூலர்:

"ஆண்மிகிலாணாகும் பெண்மிகிற் பெண்ணாகும்,
பூரிரண்டொத்துப் பொருந்தில அலியாகும்"

(திருமந்திரம்)

என்பதினாலுமறிக.

தனிர சுக்கிலம் அதிகமானால் பிறக்கப்போகும் குழந்தை ஆண் எனவும், சுரோணிதம் அதிகமானால் பெண் எனவும், இரண்டும் சமமாகில் இரண்டு கருவாகவும் உண்டாகுமெனவும் சில நூல்கள் கூறுகின்றன. (சி. ம. சுருக்கம்.)

### சுக்கில சுரோணிதம் கருப்பையில் உறையும் விதம்.

கருப்பையில் சுக்கில சுரோணிதம் கலந்தவுடன் விந்துவுடன் சென்ற தேயுவாயுக்களால் உறவாகித்திரளும் (அதாவது உறைந்து போம்) அக்கணமே கரு மலர் குவியும். (அதாவது கருப்பை வாசல் இதுவரையிலும் மலர்ந்திருந்து மூடிக்கொள்ளும்.) அதே சமயம் உரைந்த இடமாகிய கருப்பையில் தமருண்டாகி (Embedding of the Ovrum) அதில் தங்கியுள்ள உறவாகித்திரண்ட சுக்கில சுரோணியத்தைச் சுற்றிலும் வாயுவானது வளைந்துகொண்டு வேலிபோல் பாதுகாக்கும். (அதாவது கருப்பையிலுண்டான தமர் வாசல் வாயுவால் மூடப்படும். அதற்குள் அகப்பட்ட சுக்கில சுரோணிதத் திரட்சியை வாயுவானது வேலிபோல் வளைந்து கொண்டு பாதுகாக்கும்.) எவ்வாறெனில்; அபானவாயு வெளியில் நின்று வாயிலைக் காக்கும். பிராணவாயு விந்துவுடன் உட்சென்று, கருவைப் பல பிரிவுகளாக்குமென்றும்; உதானவாயு கருவை வளர்ப்பதாகவும்; கருவுடன் வினைகள் மூன்றும் சேர்வதாகவும் கூறுவர்.

### வினைகள் மூன்று என்பவை யாவை?

ஆணவம், மாயை, கன்மம் என்னும் மும்மலங்கள் எனவும் கூறலாம். அல்லது சஞ்சிதம், பிராரத்துவம், ஆகாமியம் என்னும் மூன்று கன்ம வினைகள் எனவும் கூறலாம். ஏனெனில் கன்மம் மூன்றின் பலாபலன்களை ஜெனனகாலத்தில் ஆலோசிக்கப்படும் எனக் கூறப்பட்டுள்ளது அல்லது மாதா பிதாக்களின் கலவியால் எற்படக்கூடிய மூக்குற்ற (வலி, அழல், ஐயம்) பிணிகளாகவும், எண்ண இடமுண்டு. அதாவது பழவினையால் வரும் பிணிகள் (Hareditory diseases) எனக் குறிப்பிடினும் பொருந்தும்.

(சில மேற்கோள்கள்.)

1. "உறையான கருப்பையில் சுக்கில மாய்ப்பாய,
உத்தமனே சுரோணிதந்தானுறைந்து கொள்ளும்,
கறையாகப் பாய்ந்த வழி தமருபோல."

என்பதினால்; சுக்கில சுரோணி தம் கலந்தவுடன் உறைந்துபோம் என்பதும், கருப்பையில் தமருண்டாகிறதென்பதும் தெளிவாகிறது.

2. "முனையறுகு னுவிபனிபோல் சுரோணிதத்தில் சேர்ந்து,
தாக்கவே சுரோணிதந்திரண்டு தன்ரூபமாகித்;
தமர்வாசல் தனைமூடும் வாயு தானும்"

என்பதினால் சுக்கில சுரோணிதம் திரண்டு, தன் ரூபமாகி அங்கு உண்டான தமர்வாசல் வாயுவால் மூடப்படும் என அறிகிறோம்.

"
—வாயுதானும்.
வேர்க்கவே வேலிபோல் வளைந்து காக்கும்,
விந்துவுடன் பிராணவாயு, விளக்கலாமே."

என்பதினாலும்;

'விளங்குகின்ற அபானவாயு வெளியில் நிற்கும்,
விந்துவுடன் பிராணவாயு பினங்களாகும்,
கலங்குகின்ற உதானனது கருவளர்க்கும்
கருவதற்குள்வினை மூன்றும் கலக்கும் பாரு."

என்பதினாலும்; மேலே கூறிய விவரங்கள் தெளிவாகும்.

"பின்னுமாம் சுக்கிலத்திற் பிராண
வாயுதான் சென்று,
பின்னமாம் இரத்தம் சூழ்ந்து உதானவாயு வளர்க்கும்."
[தன்வந்திரி நாடி (சி.ம. கருக்கம்.)]

என்பதனாலும்;

"சுக்கிலத்தில் சுரோணிதங்கலக்குமன்று,
புகுந்திடும் வியாதிமூன்றும்."
(—தன்வந்திரிநாடி).

என்பதனாலும்,

மேற்கூறிய சகல விவரங்களும் நன்றாய்ப் புலனாகும்.
கருவுருமிடமும்ல, விதமும் மிரண்டும் விளக்குவோம்.

"உன்னிய கருப்பக் குழியாம் வெளியிலே,
பன்னிய நாதம் பகர்ந்த பிருதிவி,
வன்னியும் வாயுவும்மாயுறுசுக்கிலம்,
மன்னிய சமனாய் வளர்க முதகமே"

என்பதினாலும்;

"உதகமுதிரமுறுங்கனல் வாயுவால்
சிதமுறுமங்கங்கள் செய்து முடித்திடும்.: (—திருமந்திரம்)

என்பதினாலும்;

ஐம்பூதங்களில் கருப்பையை விண்ணாக அமைத்துள்ளார். வெளியானது சகல சீவராசிகளுக்கும், பொருள்களுக்கும் இடம் அளிப்பதுபோல, கருப்பையானது கரு உண்டாவதற்கும் வளர்வதற்கும் இடமளிப்பதென விளங்கும்.

நாதத்தைப் பிருதிவி எனக்கூறியதால், மண்ணானது எவ்வாறு பல சீவராசிகளை தோற்றுவித்து அவைகளுக்கு நேர்முகமாகவோ மறைமுகமாகவோ உணவளிக்கின்றதோ அவ்வாறே நாதமும் கருவைத் தோற்றுவித்து அதற்கு உணவையும் அளிக்கிறதென அறியப்படுகிறது.

விந்துவானது தீ, கால் (வாயு) இவற்றின் தன்மைகளைப் பெற்றுள்ளது. வளர்ச்சிக்கு வேண்டிய சூட்டையும், வாயுவையும், இது நாதத்திற்குத் தந்து தொழில் புரிவதற்கும், இடம் விட்டு இடம் விரைந்து செல்வதற்கும் காரணமாகவும் விளங்குகிறது.

அன்றியும் விந்து இன்றேல் சூடும் வாயுவுமில்லை. ஆகையால் நாதம் தனித்துக் கருவாக வளர முடியாது என்பது நன்கு புரிகிறது.

"சமனாய் வளர்க்குமுதகமே" என்பதனால்; "உதகமாகிய நீர்" யாவற்றையும் நேர்மையாகவும், செழிப்பாகவும் வளரச் செய்யும் என்பதேயாம். இந்த 'உதகநீர்' எங்கிருந்து கிடைக்கிறதென்பது கூறப்படாததால், கருப்பை, நாதம், விந்து இம்மூன்றிலிருந்தும் கிடைக்கிறதென யூகிக்கலாம்.

"அண்டத்திலுள்ளதே பிண்டத்தில்" என்னும் பழமொழிக்கிணங்க நமக்கு எப்படி நீர் விண்ணிலிருந்து மழையாகவும், பூமியிலிருந்து ஊற்று முதலியவைகளாகவும் கிடைக்கின்றனவோ, அப்படியே விண்ணாகிய கருப்பையிலிருந்தும், மண்ணாகிய நாதத்திலிருந்தும் உதகநீரை கிடைக்குமென நம்ப இடமுண்டு.

மேலும், இந்த உதக நீர் தீயின் தன்மையாலும், வாயுவின் தன்மையாலும், செந்நீராக (இரத்தமாக) மாறி அங்கங்களை உண்டாக்கி, அவற்றைச் சமமாக வளர்த்துக் கருவைப் பூர்த்தி செய்யும். இதனால் நீர் போன்ற இரசதாதுவிலிருந்து வாயு, தேயுக்களின் உதவியால் இரத்ததாது உண்டாகி அப்பால் ஒன்றன் பின் ஒன்றாய் (ஏழு உடற்றாதுக்களில்) மற்ற தாதுக்களு மூண்டாகின்றன வென்பது புலனாகிறது. தாயின் அன்னசாரமும் இவ்வளர்ச்சிக்குப் பிரதானமும் இன்றியமையாததுமாகும்.

(சி. ம. சுருக்கம்.)

**கருவளர்ச்சியில் அங்கங்களுண்டாகும் கிரமம் எங்ஙனமெனில் :**

கருவிலுள்ள வாயு, தேயு, அப்பு இவற்றின் தன்மையால் அங்குள்ள நீர்ப்பாகம் (உதகநீர்) இரசம், இரத்த தாதுக்களின் மாறுதலையடைந்து அப்பால் மூறையே மற்ற தாதுக்களாகவு மாகும் என்பதினாலும் "சுரோணிதம் திரண்டு தன்ரூபமாகி" என்றதால் மக்கள் ரூபத்திற்கேற்ற சகல அங்கங்களும் படிப்படி யாக உண்டாக்கப்பட்டு அவற்றைச் சமமாக வளர்த்துப் பூர்த்தி செய்யும் என்பதே இதன் கருத்தாகும். (சி. ம. சுருக்கம்.)

**கருவுற்ற முதல் நாள் கடுகுபோலாம் :**

"செப்பியதாம் தினம் ஒன்றில் கடுகு போலாம்" என்பதினால் சுக்கில சுரோணிதம் திரளும்போது ஆரம்பத்தில் கடுகுபோல் உருண்டை வடிவமும், கனமும் இருக்கிற மாதிரியை அறிகிறோம்.

**இரண்டாம் நாள் மல்லி போலாம் :**

"நாளிரண்டில் மல்லி போலாம்", என்பதினால் ; மல்லியின் வடிவமும், கனமும் தெரிகிறது.

**மூன்றாம் நாள் மிளகு போலாம் :**

"நாள் மூன்றில் மிளகு போலாம்" என்பதனால், மிளகின் தோற்றம், வடிவம், கனம் இவற்றைப் பொருத்தியிருக்கும்.

**நாலாம் நாள் அவரைவித்தைப் போலாம் :**

"நான்காம் நாள் அவரை வித்தாம்" என்பதினால், அவரை விதையை போன்று சற்று நீண்டு, முனைகள் சன்னமாகி, நடுவில் கனத்துமிருக்குமென அறிகிறோம் ; வடிவம், கனம் யாவும் அவரை விதையை ஒத்திருக்கும் என்பதேயாம்.

**ஐந்தாம் நாள் நீர்க்குமிழியைப் போலாகும் :**

"ஐந்தாம் நாள் குமிழி போலாம்" என்பதினால் ; நீர்க்குமிழி யைப் போல் வடிவமும் நாதவிந்து திட்சியுள் வெளியுண்டாகு மெனவும் அறியவும்.

**ஆறாம் நாள் நெல்லிக்காயைப் போல் தோன்றும் :**

"ஆறாம் நாள் நெல்லிக்காயைப் போல்" என்பதினால் : வெளிப்புறம் தெளிவாகவும், உட்புறம் கலங்கலாகவும் தோற்ற மளிக்கும். அளவும் நெல்லிக்காய் போன்றிருக்கும்.

**ஏழாம் நாள் புன்னைக்காயைப் போலாம்:**

"நாள் ஏழுக்குப் புன்னைக்காயைப் போலாம்" என்பதினால், சுக்கில சுரோணிதத் நிரட்சியில் கருத்தோன்றி ஒரு புரையால் மூடப்படும். ஆதலால் ஏழாம் நாள் கரு, புரை என்கிற பேதம் உண்டாகிறது. கருவை குழவியாகவும், புரையே நஞ்சும் கொடியுமாகவும் மாறும் என்பர்.

**எட்டாம் நாள் பஞ்சபூதங்களும், ஐந்து நிறங்களும் தோன்றும்.**

"எட்டாம் நாள் பஞ்சபூதமதிலுண்டாம் பஞ்சவர்ணமதில் தோன்றும்" என்பதால் ஐந்து பிரிவுகள் கருவில் தெரியுமெனவும்; ஐந்து நிறங்களும் அதில் தோன்றும் எனவும் அறிக.

**ஒன்பதாம் நாள் கரு காக்கை முட்டையைப் போல் வடிவமும் அளவுமிருக்கும்.**

"நவதினத்தில் காக்கைமுட்டை போலாகும்" என்பதால், காக்கை முட்டையைப் போல் சற்றேறக்குறைய உருண்டையாயுமிருக்கும்.

**பதினைந்தாம் நாள் கோழிமுட்டை வடிவமும் அளவையும் பெறும்.**

"பத்து முதல் ஐந்து நாளும் வேகுமே கோழி அண்ட வடிவமாகும்" என்பதால், பத்தாம் நாள் முதல் பதினைந்தாம் நாள் வரை பல மாறுதல்கள் உண்டாகிக் கருவானது கோழிமுட்டை வடிவத்தையும் அளவையும் பெறும். இதே கருத்தை யூகி முனியும் "ஈரைந்தாம் நாள் தனிலே திரளும் பாரு மூவைந்தாம் நாள் முட்டைபோலாம்" என்ற அடிகளால் தெரிவிக்கிறார்.

**முதல் திங்களில் வாழைப்பு வடிவமாகும்.**

"திங்கள் ஒன்றில் வாழைப்பூவே" என்பதால், கரு ஒரு மாதத்தில் வாழைப்பூ வடிவமாக நீண்டும், இருமுனைகளில் தலைப்புறம் சற்று கனத்தும், அடிப்புறம் சற்று சன்னமாயும் மாறும் என அறிக. "ஒரு மாதத்தில் பொருந்திய சென்னியுண்டாம்" என்கிறார் பாராச சேகரர்.

ஆகையால் முடி, அடி என்கிற பேதம் முதல் மாதத்திலேயே ஆரம்பமாகிறது என்பதாகக் கூறியிருப்பினும், சிசுவின் அங்க உறுப்புகள் உண்டாவதை மட்டும் குறிக்கும். ஆனால் சிசு,

கருப்பையிலிருக்குங் காலத்தில் அதனைத் தாயோடு இணைத் துள்ள ஓர் நேர்பாகமென்று எண்ணிக்கொள்ளல் நல்லது. ஏனெ னில், சிசு, கருப்பையிலிருக்குங் காலத்தில் அதன் முடி, தலை, சிரசு, கபாலம், உச்சி என்பதெல்லாம் தாயின் கருப்பையில் ஒட்டிக்கொண்டிருக்கும் நஞ்சுப் பாகத்தையே குறிக்கும் என்ற விவரங்கள் யாவும் பின்னாடி விளக்கியிருப்பதைக் கவனிக்கவும்.

"உறையான கருப்பையில் சுக்கிலமாய்ப்பாய,
உத்தமனே சுரோணி தந்தானுறைந்து கொள்ளும்,
கறையாகப் பாய்ந்த வழிதமரு போலக்,
கழற்கொடிக்காய் போற்றிரண்டு சிரசுமாமே."

(அகத்தியர் வைத்திய சாரம்.)

என்பதை ஆதரமாகக் கொண்டு தமர்வழியாகப் பாய்ந்த விந்து வுடன் கலந்த நாதம், திரண்டு சுழற்சிக்காய் போலாகிப் பிறகு சிசு வின் தலையுண்டாகும் எனச் சிலரது தாற்பரியம். ஆனால் இதன் பொருள் வேறு விதமாகவும் யிருக்கலாம். எப்படியெனில், ஆரம்பத்தில் கருப்பையில் சுக்கில சுரோணிதமாகக் கலந்தவுடன் திரண்டு உறைந்துபோம் என்பதும்; அக்கணமே உறைந்தயிடத் தில் தமர் உண்டாகி அதனுள் மேற்கூறிய திரண்ட உரு பொதிந்து வாயுவால் தமர்வாசல் மூடப்படும் என்பதும்; அதே தமரிட்ட இடத்தில் அதே உருவானது கழற்சிக் காய்ப் பருமன் அடையும் போது அதுவே நஞ்சுப் பாகமாக அமையும். அதுவே இனிமேல் வளர்ச்சியடைந்து கொடியில் தொங்கிக் கொண்டிருக்கும் சிசு வுக்கு தலை, சிரசு, முடி, கபாலம், உச்சி முதலிய எல்லாச் சொற்க ளாலும் வழங்குமிடமாகும். இப்போது பேசுமிடம், காலம் ஒரு மாதகாலமான கருவைப்பற்றியது. ஒரு மாதவளவில் சுக்கில சுரோணிதம் திரளுவதும்; தமர்வழியுண்டாவதும் கழற்சிக் காய வளவு ஆவதும் பொருத்தமற்றதாகும். இவை ஆரம்ப காலத்திற் குரிய நிகழ்ச்சிகள். ஒரு மாதமானபோது வாழைப்பூ வடிவத்தில் சிசு உண்டாகும்போது சிசுவுக்கு குரிய "சென்னி" என்ற தலை யும் இருக்கக்கூடும். ஆனால் அதற்குரிய மேற்கோள் "கழற் கொடிக்காய் போல் திரண்டு சிரசுமாமே" என்பதல்ல. "ஒரு மாதத்தில் பொருந்திய சென்னியுண்டாம்" என்பது பொருந்தும். முதலில் கூறிய "சிரசுமாமே" என்பதானது நஞ்சு பாகத்தையே குறிக்கும். பின்னாடிக் கூறிய "சென்னி" என்பது ஒரு மாதப் பிண்டத்தில் தலையும் உருவாகியிருக்கிற தென்பதே தாற்பரிய மாகும்.

**இரண்டாம் மாதம் தலை, கழுத்து, முதுகு, தோள் இவைகளுண்டாகும்.**

"பூவிலே இரண்டு திங்கள் கழுத்துண்டாகும்,
புகழ்சிரசு முறுப்பாகும்."

—அகத்தியர் வல்லாதி.

என்பதினாலும்

"ஆகுமே இரண்டாம் திங்கள் தலை, முதுகு தோன்றும்." எனை யூகி நாடியும் கூறுவதாலறிகிறோம்.

"மதியிரண்டிற் பிடரி தோள் முதுகு மெய்தும்" எனப் பராசர சேகரும் கூறுவதாலறிகிறோம்.

**மூன்றாம் மாதம் இடுப்பு, கால், கைவிரல்களும் உண்டாகும்.**

"மூன்றாம் திங்கள் தாவிலே
சந்து கால்கையுண்டாகிச்
சட்டகம்போல் வடிவாகி
விரலுமுண்டாம்."

(யூகி நாடி.)

என்பதாலும்;

"அடுத்த மூன்றாம் திங்கள்
அரை விரல் கைகளாகும்."

(பராசர சேகர்.)

என்பதாலும்;

"மூன்றாம் திங்கள் உடல் விரல் அரைக்காலாகும்" எனத் தன் வந்திரியாரும் கூறியிருப்பதாலறிகிறோம்.

**நான்காம் மாதம் வாய், நாக்கு, மூக்கு, பாதம் இவையுண்டாகும்.**

"நாலிலே வாய் நாக்கு மூக்கு முண்டாம்" என்பதால் இரண்டாம் மாதம் உண்டான தலையில் வாய், நாக்கு, மூக்கு ஆகிய இவை உண்டாக்கிப் பூரணமடையும்.

"நாலாந் திங்கள் பாதம் மூக்குண்டாம்" என யூகியும்;
"நாலா திங்களுதித்ததோர் மூக்குண்டாமே" எனத் தன் வந்திரியாரும் கூறுகின்றனர்.

**ஐந்தாந் திங்கள் செவி கண்களு முண்டாம்.**

"நவிலுகின்றேன் மாத மைந்தில் செவியுண்டாகும்" என அகத்தியரும்;

"ஐந்தாந் திங்கள்தனில் நாச் செவி கண்ணாம்" என யூகியும்;

"திங்கள் ஐந்திற் செவி நாசி வாயு முண்டாம்" என பராசர சேகரும்;

"அஞ்செனும் திங்கள் தன்னி லாகிடுஞ் செவியு நாவும்" எனத் தன் வந்திரியாரும் கூறியிருப்பதால் அறியவும்.

**ஆறாந் திங்களில் மலசலங்கள் கழியும் துவாரங்களும், நகங்களும், நரம்புகளுமுண்டாகும்.**

"ஆறாந்திங்கள் குய்யத்துவாரம்" என அகத்தியரும்;

"ஆறாந்திங்கள் வரு நகங்காளாம்" என யூகியும்;

"ஆறாந்திங்கள் பொதிந்திடு நகமே யெய்தும்,
உஞ்சிய மலசலங்கள் ஒத்ததோர் நரம்புமுண்டாம்" எனத் தன்வந்திரியாரும்;

"மலசத்து வாரம் பெரிதுண்டாந் திங்களாறில்" எனப் பராசர சேகரும் புகன்றானர்.

**ஏழாம் மாதம் எழுபத்தீராயிரம் நாடி நரம்பு ரத்தக் குழாய்கள் உண்டாகும்.**

**அதாவது நாடி நரம்பு ரத்தக் குழாய்கள் பூர்த்தியாகும் எனவும், மயிர், எலும்புகள், மூச்சுவிடப் பயன்படும் கருவிகள், குடல்கள், கொப்பூழ், அகன்ற கால், கைகள் முதலியன உண்டாகு மெனவும் கூறப்படுகிறது.**

"———ஏழுக்கும் நரம்புதானே
நரம்புதானே எழுபத்தீராயிரத்தான் நாடி"

என வல்லாதியும்;

"மருவியே ஏழாந்திங்கள்
மயிரெலும்பு நரம்பாம்,
தாகுமே சடமொடு சலமலங்கள்,
தயங்கிய தோர்தாது வொடுமூச் சுண்டாமே"

என யூகியும்;

"———திங்களேழில்தான் வருங்குணங்கள் கேளே,
நரம்புடன் நாடி சந்து நண்ணிய குடல்கள் கொப்பூழ்
பரந்தகால் கரங்களுண்டாம்"

என தன்வந்திரியார் நாடியும்;

"திங்களங் கேழு தன்னிற்செறி மயிர் நரம்பு நாடி,
தங்கிய கொப்பூழ் சந்து—குடலு முண்டாம்"

என அங்காதி பாதமும் கூறுகின்றன.

**எட்டாம் திங்கள் தாயுண்ட அன்னசாரம் சிசுவுக்குச் சென்று உடலைப் பெருக்கச் செய்யும் (எவ்வாறென்பதைப் பின்னால் கூறுவோம்). கருவில் தோன்றும் கழிவுப் பொருள்கள் சிசுவின் கொப்பூழ் வழியாக வெளியாகின்றன.**

"———நாடி எட்டாந்திங்களுக்கு மயிரு ண்டாகும்,
உரம்பவே தாய்புசிக்கு மன்னசாரம்
உச்சிவழி தாளிறங்கி உடல் பெருக்கும்"—

என்பதாக வல்லாதி நாடியிலும்;

"———எட்டினிலே தாயுண்ட சாரம்
முனையான கதிர்போலே அருவி பாய்ந்து,
தோச் சுண்டாங்க பாலத்தின் வழியே சென்று,
சுத்தசலம் பிள்ளைக்குத் தொடர்ச்சியாமே."

என யூகி நாடியிலும் கூறியிருப்பதைச் சிலர், தாயுண்ட அன்ன ரசம் (ரசமாகவே—இரத்தமல்ல) சிசுவின் தலையின் வழியாகச் சென்று, பிறகு மற்ற அங்கங்களுக்குப் பரவுவதாகத் தாற்பரியம் கூறியிருக்கிறார்கள். மேற்கண்ட மேற்கோளின் கருத்து அது வல்ல. வேறு யாதெனில்;

தாயிடமிருந்து சிசுவுக்கு அன்னசாரம் என்னும் அன்னச் சத்து (உணவாகிகளின் சத்து) இரத்த மூலமாகவே செல்லுகிறது. இரசமாகவல்ல. தாய்க்கும், நஞ்சுக்கும், கொடியின் மூலம் சிசுவுக்கும், அப்பால் "சுத்த சலம்" என்றழைக்கப்படும் "உதக நீர்" (நீர்க்குடம் அல்லது பனிக்குடத்துத் தண்ணீர்) ஆகிய இதற்கும் தொடர்பு உண்டு என்பதை நன்கு விளக்கியிருக்கிறது. ஆதலால் தாயினிடமிருந்து அன்னச் சத்து, தாயின் இரத்தத்தின் மூலம்,

உச்சி, கபாலம் என்றழைக்கப்படும் நஞ்சுப் பாகத்திலிருந்து கொடியின் வழியாகச் சிசுவுக்குச் செல்லுகிறதென்ற கருத்தே யொழிய, மற்றபடிக்குச் சிசுவினுடைய சிரசுக்கும், பனிக்குடத்து நீருக்கும், தாயினிடமிருந்து சிசுவுக்கு கொப்பூழ் கொடி வழியாக அன்னச்சத்து தாயின் இரத்தத்தின் மூலம் சென்று கொண்டிருப்பதற்கும் சிறிதளவும் சம்பந்தமில்லை என்பதும், பனிக்குடத்து சலமானது சிசுவின் சிரசு வழியாக ஆகாரமாகச் செல்லுகிறதென்ற தாற்பரியம் பொருந்தாது என்பதையும் அறியவேணும்.

"காமப்பால் விழுந்தவழி சிரசினாலே
கைமுறையாய்த் தாயுண்ட அன்னஞ் செல்லும்" என

வைத்திய சாரம் கூறியிருப்பதையும், அன்னசாரம் சிசுவுக்குச் செல்வதற்கு, விந்து பாய்ந்த வழியாகிய தலையின் வழியாகிய எனப் பொருள் கொள்ளலாமெனச் சிலாது அபிப்பிராயம். அதன் கருத்து அவ்விதமில்லை.

முன்சொன்ன பிரகாரம் நஞ்சுயிருக்கப்பட்ட இடமே காமப் பால் விழுந்து, சுக்கில சுரோணிதம் உறைந்து திரண்டு, தமருண்டாகி, தமர்வாசல் வாயுவால் மூடப்பட்டு, கரு, கழற்சிக் காயவாகத் திரளும்போது, கருவானது கருப்பையோடு ஒட்டிப்போய் நஞ்சுப்பாகம் வேறு, சிசுவின் பாகம் வேறாகப் பிரிவுபட்டு, நஞ்சுப் பாகம் கருப்பைத் தசையோடு ஒட்டிப் போயிருப்பதால், அதுவே பின்னாடி அடியில் நீர்க்குடத்தில் கொப்பூழ் கொடியின் ஆதரவில் தொங்கிக்கொண்டிருக்கும் சிசுவுக்கு தலை, மூடி, சிரசு, கபாலம், உச்சி என்னும் சொற்களையுடைய பாகமாகும். ஆதலால் மேலே கூறிய மேற்கோளில் "சிரசு" என்னும் சொல் நஞ்சுப் பாகத்தையே குறிக்குமென அறியவும்.

அதற்குமேல் மீண்டும்,

"சேமப்பா நடுமையத் தொப்பூழாலே,
சென்ற தெல்லாம் மலமாகக் கழி யுந்தானே."

என அதே வைத்திய சாரம் கூறியிருப்பதால் சிசுவின் உடலில் தோன்றும் கழிவுப் பொருள்கள் யாவும் கொப்பூழ் கொடியிலுள்ள காரிசத்தக் குழாய் மூலம் வெளிப்படுத்தப்படுகின்றன வென்றும் தெரியவருகிறது.

**ஒன்பதாம் திங்கள் போதுமான உயிர் ஏற்படும்;**
**உச்சி வழி மூடும்; அறிவு தோன்றும்:**

"———ஒன்பதிலே உயிர்தான் வந்து
மறைஞான முண்டாகு மூச்சிவழி மூடும்."

என வல்லாதியும்;

"ஒன்பதிலே யறிவு தோன்றி"

என யூகியும்;

"ஒன்பதாந்திங்கள் தன்னிலுணர்ச்சியு மறிவு முண்டாம்"

எனத் தன்வந்திரியாரும் கூறியுள்ளார்.

மேலும்,

"ஒன்பதிலே யறிவு தோன்றிப் பிறப்பித்தோன்,
தனை நினைந்து தவமேசெய்து
கூச்சுண்டாம் கும்பிட்டு அருள்தா வென்று,
கொடிய பத்தாம் திங்கள் குரு பார்வையாமே."

என யூகி முனியும் கூறியதைக் கவனிக்கவும்.

"தம்பிரான் தனைநினைந்து தவமுறு நிலையாய் நின்று" எனத் தன்வந்திரியாரும்; "தவம் உறும் நிலை" எனக் கூறியதால், சிசுவானது தலைவணங்கிக் கண்கள் மூடிக் கைகளைக் கூப்பி அல்லது கட்டி மார்பு முன் வைத்துக் கால்களை மடக்கியிருப்பதாம் என அறிக!

"உச்சிவழி மூடும்" என்பது சிசுவின் சிரசிலுள்ள பிரமரந்திர வாயிலாக (அதுவே உச்சிவழி) சிசுவுக்குச் சென்று கொண்டிருந்த "ஞானம்" இப்போது இயற்கையில் சிசுவினிடமே தங்கி மேற்படி ஞானம் சிசுவின் மூளைக்கு இதுவரைக்கும் வந்து கொண்டிருந்த "உச்சி வழி" (பிரமரந்திரம்) மூடிக்கொள்ளும் என்பதே கருத்து. சிசுவுக்கு ஞானம் போதுமானதாக இம்மாதத்தில் வந்தமைந்த வழியே "உச்சிவழி" என இந்தயிடத்தில் தாற்பரியம் செய்துகொள்ளல் சிறந்ததாகும். இதற்குமுன் "ஞானம்" போதுமான அளவில் இல்லை. ஆதலால் உச்சி வழி திறவையாகவே யிருந்திருக்கும். இம்மாதத்தில் போதுமான ஞானம் வந்துவிட்டபடியால் உச்சிவழி மூடிக்கொண்டது என்பதே யாம்.

பத்தாம் திங்கள் தியும், வாயுவும் அதிகரித்து அபான வாயுவின் உதவியால் தலைகீழாகத் திரும்பி யோனி வழியாகக் குழவி சிரம் திரும்பி உதிக்கு மென்பது தெரிகிறது.

இதனையே,

"திங்கள் பத்தாகில் தேயுவொடு வாயுசேர்ந்
தங்கி மலர்த்தி யமனியாய்க் கிழ்நோக்கிப்
பொங்கிப் பிறந்தநாள் புகழ்வார் வெறுவீணர்,
தங்கிச் செனிக்கையிற்றா னோயுமுற்றதே."

எனத் திருமூலரும்;

"பத்தாந்திங்க ளீசனாருளினாலே
சென்னிதான் கீழதாகச் சிறந்திடுமபான வாயு."

எனப் பராசர சேகரும் கூறியிருப்பதிலிருந்து தெரிய வருகிறது.

குறிப்பு:—இப்பகுதி டாக்டர் கோ. துரைராசனாரால் எழுதியுள்ள "கருவுற்பத்தியும் வளர்ச்சியும்" என்னும் நூலிலிருந்து எடுத்து சி. ம. சுருக்கத்தில் எழுதியுள்ளதைச் சிறிது மாறுதல்களுடன் இங்கு வரைந்துள்ளேன்.

## சிசுவின் போஷிப்பு.

தாயுண்ட அன்னசாரம் (ஆகாரத்தின் சத்து) "மூடி"ப் பாகமாகிய நஞ்சுவிலிருந்து, கொடியின் மூலமாய் (Placenta and Umbilical Chord) சிசுவின் கொப்பூழ் வழியாகச் சிசுவின் கெற்பத்தில் ஊறும். அதே சிசுவினது கழிவுப் பொருள்கள் யாவும் கொப்பூழ் கொடி வழியாக மலமாகக் கழியும். இதுபற்றிக் கூறுமிடத்து,

"உரம்பவே தாயாசிக்ரு மன்னசாரம்
உச்சிவழி தானிறங்கி யுடல்பெருக்கும்."

என வல்லாதியும்;

"எட்டினிலே தாயுண்ட சாரம்
மூனையான கதிர்போலே அருவி பாய்ந்து,
தோச்சுண்டாங் கபாலத்தின் வழியே சென்று,
சுத்தசலம் பிள்ளைக்குத் தொடர்ச்சியாமே."

என யூகியும்;

"காமப்பால் விழுந்தவழி சிசினாலே,
கைமுறையாய்த் தாயுண்ட அன்னஞ் செல்லும்."

என வைத்திய சாரம் கூறியிருப்பதாலுமறிகிறோம்.

மேலும்,

"சேமப்பா நடுமையத் தொப்பூழாலே,
சென்றதெல்லாம் மலமாகக் கழியுந்தானே."

என அதே வைத்திய சாரம் மீண்டும் கூறியிருப்பதால் சிசுவிலிருந்து வெளியேற்றப்படும் கழிவுக்குச் சிசுவின் கொப்பூழில் வழியிருக்கும்போது அது தாயின் இரத்தத்துடன் கலக்க தேரிடுகிறதல்லவா? அப்படியானால் தாயுடைய அன்னசாரம் சிசுவுக்குச் செல்லுவதற்குச் சிசுவின் கொப்பூழிலேயே வழியிருக்க வேண்டியதும் இயற்கையாகும். "சிரசு" என்றும் "கபாலம்" என்றும், "உச்சிவழி" என்றும், மேற்கோளில் சொன்னதெல்லாம் சிசுவின் தலையைக் குறித்ததல்ல. சிசுவானது நஞ்சுக் கொடியில் தொங்கிக் கொண்டிருக்கும் பிண்டம். பனிக்குடத்து நீர் (உதக நீர்) சிசுவை மிதக்க வைத்துக்கொண்டிருப்பதைத் தவிர அதில் சிசுவுக்கே அன்னசாரம் கிடையா!

கொப்பூழ் கொடியானது (Imprical Chord) நஞ்சுவில் (Placentra ஒட்டிக்கொண்டும், அதை நஞ்சு, தாயின் கருப்பையில் இணைப்பாய் ஒட்டிக்கொண்டும், தாயுடன் சம்பந்தப்பட்டிருப்பதைக் காண்கிறோம்.

இதே இடம் (Placental site) ஆரம்பத்தில் "காமப்பால் விழுந்த வழி" எனப்படும். இதே இடத்திலிருந்து கருவுற்பத்தியாகித் தமருண்டாய்ப் பொதிந்து உருவமைந்து, அப்பால் நஞ்சுவில் கொடியின் ஆதாவில், தொங்கிக் கொண்டிருக்கும் நிலையை சிசு அடைகிறது.

தாய்க்கும், நஞ்சுக்கும், கொடிக்கும், சிசுவுக்கும், பனிக்குடத்து நீருக்கும் ( சுத்தசலம், உதகநீர்) ஒரே தொடர்பு உண்டு. நஞ்சுவிலும், கொடியிலும் போதிய இரத்தக் குழல்கள், நல்ல ரத்தம் சிசுவுக்குச் செல்வதற்கும், காரி ரத்தம் (அசுத்த ரத்தம்) சிசுவை விட்டு வெளியேறுவதற்கும் ஏதுவாக அமைத்திருக்கின்றன.

ஆதலால் சிசுவுக்கு அன்னசாரம் தாயின் ரத்தத்திலிருந்து நஞ்சு, கொடி இவற்றின் வழியாய்ச் சென்று, அப்பால் சிசுவின் கொப்பூழ் வழியாகவும் சிசுவுகுச் செல்லுகிறதென்பதே சித்தர்களின் தாற்பரியமாகும்.

செய்யுளில் சிசு, முடி, கபாலம், தலை, உச்சி என்பதெல்லாம் "நஞ்சு" தாயின் கருப்பையில் ஒட்டிக் கொண்டிருக்கும் பாகமே யாம். ஆனது பற்றியே நந்திமகாணுடைய சிஷ்யன் தன்வந்திரி பகவான் "முப்பு 48" என்னும் நூலில் கூறியிருக்கும் மேற் கோளைக் கொண்டும் தெரிந்து கொள்ளலாம்.

"காப்பான அண்டமதில் நாதவிந்து
கருணைதரும் அகாரமுடன் உகாரத்தாண்டா,
வாய்ப்பான ஓங்கார பிண்ட மப்பா
மகத்தான கொடி முடியுமதற்குள்ளாச்சு,
ஆப்பான அண்டபிண்டமாதியந்தம்
அன்பான கோசமுடன் பீசமாச்சு,
மாப்பான நாதவிந்தால் ஆண் பெண்பிரண்டும்
மகத்தான சீவனுமாயுதித்தவாறே"

என்பதினால், இங்கே "முடி" என்று கூறப்பட்டிருப்பது நஞ்சுப் பாகமேயாகும். "கொடி" என்பது கொப்பூழ் கொடியும் அத் துடன் கூடிய பிண்டமுமாகும். நஞ்சுக்கு "அண்டமுடி" என்றும்; கொடிக்குப் "பிண்டத்தின் கொடி" என்றும் கூறுவர். முடி, சிசு, தலை, உச்சி, கபாலம் என்னும் சொற்கள் யாவும் நஞ்சுப் பாகத் தையே சிசு கருப்பையிலிருக்கும்போது குறிக்கும் என்பதை அறிந்து கொண்டால் சிசுவின் போஷிப்பு பற்றிய விவரம் சுலப மாய் விளங்கும்.

## அத்தியாயம் IV

### வாழ்நாள் விவரம்.

**(நூறு ஆண்டுகளில் உடல் மாறுதலையும் கிரமமும், இயற்கை, அகால மரணமும் கூறுகிறார்.)**

(வல்லாகி நாடி)

1. "தானடாசிரந்திரும்பிப் பிறந்த பிள்ளை
தனக்குப் பிரமசிருட்டி நூறாண்டுதன்னில்,
ஏனடா வாலையது ஈரைந்தாகும்
இருபது தானாகுமட்டும் வளரும் பிள்ளை,
தானடாவொளி போரு முப்பதாண்டில்
நாற்பதுக்குள் அழகு போம் நாடிப்பாரு
வேனடாவைம்பதாம் வயது தன்னில்
விரைந்து பிருதிவியில் அப்பு மேவும் பாரே."

2. "மேவையிலே வுடல் தளரும் அப்பு சென்று
விளங்குமனல்தனை நோக்கி வெளுக்கும் ரோமம்
தாவையிலேயறுபதாம் வயது தன்னில்
தண்ணீருமண்ணுடனே சார்ந்து கொள்ளும்,
பாவையிலே கண்ணொளியுங் குறைந்து காட்டும்
பால்கனே நடக்கில் வெகு தடைதான் பண்ணும்
கூவையிலே எழுபதென்ற வயதிற்றேயு
கொண்டலைதானெருக்கும் அனல் காற்றிற்காணே."

3. "காண வேதாதுலருமறிவுகுன்றும்
கருதிப்பாரெண்பதென்ற வயதிற்றானும்,
தோணவே வாயுவு வந்து வெளியிற்பாயும்
சுவாசமேல் போகுமடா தொண்ணூறாண்டில்,
பூணவே வாகாயஞ் சீவனோடு
புலன்களைந்து வசமாகப் பொருந்திக் கொள்ளும்,
நாணவே இந்திரிய மற்றுப்போகும்
நலமில்லை நூறாண்டில் மரணந்தானே."

4. தானென்ற பிரமசிருட்டி வயது நூறில்
தந்தைதாய் தான் செய்த கருமந்தன்னால்,
வேனென்ற அபமிருத்து வந்து கூடி
விஷகடிகள் வெட்டுகுத்து மிகவுண்டாகி,
கானென்ற மிருகத்தால் நஞ்சைத்தின்று
கனவயது குன்றுமப்பா கருதிப்பாரு
நானென்ற பிரமசிருட்டி காண்பிக்கவில்லை
நாதனாரெமக் குரைத்தார் நாம் சொன்னோமே".

என்பதினால்,

வயது அளவு நூறுக்கு ஆரம்பம் பிறவி முதல் பத்து வயது வரை பாலபருவம் (இளமை); இருபது வயதளவும் வளரும் பிள்ளை (வாலிபம்); நாற்பது வயதுவரை யௌவனம்; ஆனால் மூப்பது வயதிலேயே உடலிலுள்ள ஒளி குறைந்துவரும்; அழகும் குறைந்து வரும் நாற்பதுக்குள்; 40 முதல் 50 வயதுவரை கௌமார நிசை; இதில் ஐம்பூதமயமான தேகத்தில் பிருதிவியில் அப்பு கூடும். உடல் தளரும். அப்பால், அறுபதில் அப்புவானது தேயுவைக் கூடும். உரோமம் வெளுக்கும்: அதே அறுபதில் தண்ணீரும், மண்ணும் சார்ந்து கொள்ளும். கண் பார்வை குறைந்து காட்டும். நடையும் குறையும். எழுபது வயதில் தேயுவானது

வாயுவை நெருக்கும்; தேயுவாயு கூட்டுறவால் தாதுக்கள் யாவும் உலர்ந்து வரும்; அறிவு குன்றும்; எண்பதில் வாயுவானது ஆகாயத்தை நெருக்கும்; மேல் சுவாசமுண்டாம்; ஆகாயம் சீவனை நெருக்கும். புலன்கள் ஐந்தும் சீவனைச் சார்ந்து கொண்டு, தேகத்தில் (உடற்றாதுக்களில்) இந்திரியங்கள் வேலை செய்யா. நலமில்லை. நூறாண்டில் ஆன்மா (சீவன்) வந்த வழியை நோக்கும். மரண நிச்சயமென்கிறார்.

மேலும், பிரம சிருட்டியில் வயது நூறு குறிப்பிட்டிருக்க இடையில் மரணம் நேரிடுவதற்குக் காரணங்களும் கூறுகிறார்.

மாதா, பிதா, தான் உள்படச் செய்த கன்மவினையினாலும், அபமிருத்துகளாகிய, விஷகடி, வெட்டு, குத்துக்காயங்கள், மிருகங்களாலும், நஞ்சாலும் ஏற்பட்ட விஷங்கள், ஆபத்துக்கள் இவற்றால் வயது குறைந்து மரணம் சம்பவிக்குமென்றும் கூறப்பட்டுள்ளது. இதுபற்றி சதகநாடியில் கூறியிருப்பதை பின்னால் கவனிக்கவும்.

### ஆயுள்தோட நிர்ணயம்.

(வேறு)—சதகநாடி.

1. "தானவனுமமைத்தபடி வயது நூறு
சகலருக்குமிளமையிலே சிலேத்துமமாகும்,
ஆனநடுவயது பித்தமப்பால்வாதம்
ஆறஞ்சு மூவாண்டு மாதம் நான்கு,
ஈனமற மூவருமே மூன்று பங்காய்
இப்படியே நடந்து கொள்வாரிறையோன் முன்னால்,
ஏனமுறயமைத்த வணணம் ஆண்டுமாதம்
இயைவான நாள்கள் தப்பி மரிப்பதாமே."

(வேறு)—இரத்தினச் சுருக்க நாடி.

2. "முன்னோர்களுரைத்தார்கள் மானிடர்க்கு
மொழிந்த வயது நூறென்று,
இன்னமூன்று பங்காகவியம்
பிளமை சிலேற்பனமே,
வன்ன நடுவிற் பித்த மதா மப்பால்
வாதமதுவாகும்,
பொன்னே யிந்தக் காலத்தில்
யற்றைய ரோகம் பொல்லாதே."

(இதின் பொருள்.)

மானிடருக்கு மொத்தம் வயது நூறு என்றும்; அதனை மூன்று சரி பாகமாக்கி இளமையில் ஐயதூலமும் (பருவம்), நடுப்பிராயம் பித்தகாலமும், அப்பால் இறுதிப் பிராயம் வாத காலமுமாக நிர்ணயித்திருக்கிறார்கள். ஒவ்வொரு பிராயமும் முப்பத்து மூன்று ஆண்டுகள், நாலு மாதங்களாகக் கணக்கிடப்பட்டிருப்பதில்; இதற்கு மத்தியில் பிராயம் தப்பி மரிப்பதுண்டு எனவும்; அந்தந்தப் பிராய காலங்களில் அதே தோட வியாதிகள் தேகத்தினிடத்தேயுண்டானால் கஷ்ட சாத்தியமாகுமெனவும் கூறியுள்ளார்கள்.

**மூன்று பிராயங்களிலும் தொந்ததோடம் நிகழ்தல் கூறுகிறார்:**
(சதகநாடி.)

"மரிப்பான் நூறாண்டு சிலேற்பனபித்த
வாதமிவை மூன்றாய் நடக்கும்போது,
தரிப்பான் ஆண்டு பதினொன்று மாதந்தானொன்று
நாள் பத்துஞ் சமர்த்தாய் மூவர்,
இருப்பான் சிலேற்பனத்திலிறங்கல்வாதம்
இயல்பான பித்தத்திலிறங்கலையம்,
கதிப்பான வாதத்திலிறங்கல் பித்தம்
கலந்து முறைமுறையாகக்கையாளும் பாங்கே."

(இதின் பொருள்.)

நூறு ஆண்டுகளைச் சிலேட்டுமம், பித்த, வாத பருவங்களாக மூன்று பங்காய்ப் பிரித்து மேலே கூறிய மூன்று பிராயங்கள் நடைபெறுவதில் ஒவ்வொரு பிராயமாகிய முப்பத்து மூன்று ஆண்டு, நாலு மாதங்களை மறுபடியும் மூன்று உட்பிரிவாக மூன்று பாகமாக்கி வருடம் பதினொன்று, மாதம் ஒன்று, நாள்கள் பத்து என்னும் இந்தக் காலங்களில் மூன்று தோடங்களும் இரண்டிரண்டாய்க் கலப்புற்று ஐயத்துடன் வாதமும், பித்தத்துடன் ஐயமும், வாதத்துடன் பித்தமும் கலந்து முறைப் பிரகாரமாக நடைபெறுமெனவும் கூறியுள்ளார். இதிலிலின்றும் நாம் அறிவது யாதெனில்; மூன்று பருவ காலங்களிலும் கனிக்குற்றவளவாய் மட்டும் சிறப்பு அல்ல வென்பதும்; மற்றத் தோடங்களும் கலந்து வயதை உருவாக்குவதில் பங்கெடுத்துக்கொள்ளுகின்றனவென்பதும் தெரிய வருகிறது.

நூறு ஆண்டுகள் வயது ஏற்பட்டிருக்கிறபோது இடையில் மரணம் சம்பவிப்பதின் காரணம் இன்னதென்ற விவரம் மேலே "வல்லாதி நாடி" பிரகாரம் கூறியுள்ளோம். இதனை ஆதரித்துச் சதகநாடியிலும் கூறியிருப்பதையும் கீழே காணவும்:

(சதக நாடி.)

**இடையில் மரணம் ஏன்?**

1. "பாங்காகயிப்படியே நடக்கும்போது
பழவினையால் கன்மத்தால் பல நோய்தன்னால்,
தீங்கான பூதமஞ்சிற் பிதாமாதாக்கள்
செய்வினையால் ருத்திரதோடத்தால் பேயால்,
ஆங்காணுங்கருவிகளா லூறுபட்டால்,
ஆனபல் விஷத்தாலும் நஞ்சினாலும்,
தேங்காணு முயிரழிவாம்விதியே சேர்ந்து,
உறுமாதமாண்டு நாட்குறையுந்தானே"

என்பதினாலும்,

(வல்லாதியின் நாடி.)

2. "தானென்ற பிரமசி ருட்டிவயது நூறில்
தந்தை தாய்தான் செய்தகருமந் தன்னால்,
வேனென்ற அபமிருத்து வந்துகூடி
விஷகடிகள் வெட்டுகுத்துமிக வுண்டாகி,
கானென்ற மிருகத்தால் நஞ்சுதின்று
கனவயது குன்றுமப்பாக கருதிப்பாரு,
நானென்ற பிரமசிருட்டிகாண்பிக்கவில்லை
நாதனாமெக்குரைத்தார் நாம் சொன்னோமே."

என்பதினாலும்;

(இதின் பொருள்.)

நூறு ஆண்டுகள் வயது ஏற்பட்டிருக்கும்போது இடையில் மரணம் சம்பவிப்பதேதெனில்: பிரம சிருட்டியால் வயது நூறு ஏற்பட்டிருந்த போதிலும், தந்தையும், தாயும், தானும் செய்த பூர்வ சென்ம கன்மவினையினாலும், பல நோய்களால், பூதமைந் தால், ருத்ரதோடம், பேய், அபமிருத்துகள், கருவிகளால் வெட்டு

குத்துக் காயங்கள், விஷகடிகள், மிருகங்கள், செந்துக்கள் இவற்றின் பல்கடி விஷங்கள், நஞ்சு வீடத்தால் ஆகிய இத்தியாதி காரணங்களால், விதியும் சேர்ந்து வயது குன்றிப்போய் மரணம் சம்பவிக்குமெனவும்; அதனை அகால மரணம் எனவும் சதகநாடியும், வல்லாதி நாடியும் ஏக அபிப்பிராயமாகக் கூறியுள்ளார்.

**சிசுவின் வாழ்நாள் விவரம் (வேறு).**

"பாய்ந்து முனஞ்சோடி.ற் பாராயுளும் நூறாம்
பாய்ந்து பினாலோடிற்பார் வயதெண்பதாம்,
பாய்ந்திடும் வாயுபகுத்தறிந்தவ்வகைப்
பாய்ந்திடும் யோகிக்குப்பாய்ச்சலுமாமே"

(—திருமந்திரம்.)

(க-ரை) இச்செய்யுள் ஈண்டு ஆண் பெண் கலவியில் ஆனின் சரம் செல்லும் அளவைக் கொண்டு வாழ்நாளின் அளவைக் கூறுகின்றது.

(பொ-ரை) கலவியில் இடைகலையிலானாலும், பிங்கலையிலானாலும், பிருதிவிதொட்டு ஐந்து பூதங்களிலும் சரம் செல்லுமானால், அப்பொழுது செனிக்கும் கருவுக்கு நூறு ஆண்டுகள் வாழ்நாள் (ஆயுள்) உண்டு. அப்புதொட்டு நான்கு பூதங்களிலும் சரம் செல்லுமானால், அப்பொழுது கருவாகிப் பிறக்கும் குழந்தைக்கு எண்பது ஆண்டுகளாகும்.

ஆகையால் இரேசக பூரகமாய்ச் செல்லும் சரத்தின் வகை விரிவுகளை ஆராய்ந்தறிந்து, அவ்வாராய்ச்சியில் ஏற்படும் விதிப்படி பழகிச் சரஞ்செல்லும் வழியே செல்கின்ற யோக வழக்கமுள்ள வனுக்குத்தன் விருப்பப்படிக்குச் சரத்தை ஏற்றலும், இறக்கலும், மாற்றலும், அவற்றின் பயனாய்ப் பல்லாண்டுகள் வாழ்தலும், வெளியிற்பாய்ந்து செல்லுமான தொழில்கள் கைகூடுவனவாம்.

"பாய்ந்து முன் அஞ்சோடல், பாய்ந்து
பின் நாலோடல்."

என்பதின் விளக்கம் கூறுகிறார்.

# அத்தியாயம் V

## சரம் என்பதென்னை ?

"சரம்" என்பது உயிர்க்காவின் (பிராணவாயுவின்) இயக்கம். அது மூக்கின் இரண்டு தொளைகளின் வழியாக உள் நுழைதலும் வெளிச் செல்லலுமாயிருக்கும். இம்மூக்குத் தொளைகளில் இடப் பக்கத் தொளை "இடகலை" எனவும், வலப்பக்கத் தொளை "பிங்கலை" எனவும் சொல்லப்படுவனவாம். இடகலை, பிங் கலைகளாகிய இரண்டு தொளைகளிலும் ஒரே காலத்தில் மூச்சு உள்நுழைதலும், வெளியிற் செல்லலும் நிகழ்வதில்லை. ஒவ் வொரு மூக்குத் தொளையிலும் ஐந்து நாழிகை (இரண்டு மணி நேரம்) தான் மூச்சு நடக்கும். அவ்வாறு நடப்பதும் திங்கட் கிழமை, புதன்கிழமை, வெள்ளிக்கிழமைகளில் இட மூக்குத் தொளையில் விடியற்காலை நான்கு மணியிற்றொடங்கி ஐந்து ஐந்து நாழிகைகளாக ஒவ்வொரு மூக்குத் தொளையாக மாறி மாறி நடக்கும். இதனை,

"வெள்ளி வெண்டிங்கள் விளங்கும் புதனிடம்."

என்றும்,

"வெள்ளி புதனோடு திங்களிடமெனத், தள்ளுமின் கால சரம்." (ஔவைக் குறள்.) என்றும் கூறியிருப்பதால் அறிதல் வேண்டும்.

செவ்வாய்க்கிழமை, சனிக்கிழமை, ஞாயிற்றுக் கிழமைகளில் வலமூக்குத் தொளையில் விடியற்காலை நான்குமணியிற் றொடங்கி ஐந்தைந்து நாழிகைகளாக ஒவ்வொரு மூக்குத் தொளையாக மாறி, மாறி நடக்கும்.

வியாழக் கிழமையில் வளர்பிறையில் இடமூக்குத் தொளையி லும், தேய்பிறையில் வல மூக்குத் தொளையிலும் விடியற்காலை யில் நான்கு மணியிற் தொடங்கி ஐந்தைந்து நாழிகைகளாக ஒவ் வொரு மூக்குத் தொளையிலும் மாறி, மாறி நடக்கும்.

இவ்வாறு இடகலையாகிய சந்திரனில் நடந்தாலும், பிங்கலை யாகிய சூரியனில் நடந்தாலும், பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம் என்னும் ஐந்து பூதங்களிலும் பாய்ந்தே நடக்கும்.

**" சரம் " ஐம்பூதங்களிலும் பகிர்ந்து நடக்கும் அளவு விவரம் :**

மேற்கூறிய பிரகாரம் இடகலை, பிங்கலையில் " சரம் " மாறி மாறி ஐம்பூதங்களிலும் பாய்ந்து நடந்தால் :

பிருதிவியில்—ஒன்றரை நாழிகையும் ; அப்புவில்—ஒன்றே கால் நாழிகையும் ; தேயுவில்—ஒரு நாழிகையும் ; வாயுவில்—முக்கால் நாழிகையும் ; ஆகாயத்தில்—அரை நாழிகையுமாக ஐந்து நாழி கையாகிய இரண்டு மணி நேரம் நடக்கும்.

**இவ்வாறு " பிராணவாயு " என்னும் " சரம் " நடந்தாலும் பிரு திவி முதலிய ஐம்பூதங்களில் நடப்பதின் குறியை நன்கு தெரிந்து கொள்ள வேண்டும்.**

அதாவது : (1) பிருதிவியில் ஒன்றரை நாழிகை மூக்குத் தொளையில் வாழும் வாயு மூக்குத் தண்டில் தாக்கிக் கொண்டும் ; (2) அப்புவில் ஒன்றேகால் நாழிகை கீழ் பக்கமாய் இறங்கியும் ; (3) தேயுவில் ஒரு நாழிகை மேற்பக்கமாய் ஏறியும் ; (4) வாயுவில் முக்கால் நாழிகை மூக்குத் தண்டுக்கு அருகாயும் ; (5) ஆகாயத் தில் அரை நாழிகை எதிலும் படாமல் நேராய் ஓடும் என்பதை உணரவேண்டும்.

ஈண்டு பிருதிவி முதல் ஐந்து பூதங்களிலும் சரஞ்-செல்ல தரித்த குழவிக்கு நூறாண்டென்றும் ; அப்பு முதல் நான்கு பூதங் களிலும் சரஞ்செல்லத் தரித்த குழவிக்கு எண்பது ஆண்டுகளென் றும் ;

" பாய்ந்து மூன் அஞ்சோடில் "—

என்னும் மூதற் குறிப்புள்ள முதற் செய்யுளின் கருத்தாகும்.

" பாய்ந்துபின் நாலோடில் "

என்பது பிருதிவியை நீக்கி அப்பு, தேயு, வாயு, ஆகாயம் என்னும்

நான்கு பூதங்களில் "சரம்" செல்லுங்கால் குழவி தரித்தல் என்னும் பொருளாகிறது. "பார்வய தெண்பதாம்" என்பதினால், அக்குழவிக்கு வயது எண்பது எனப் பொருளாகும்.

(—சி. ம. சுருக்கம்).

## "சரப் பழக்கம்" என்னும் பிராணாயாமம் பற்றிய விளக்கம்.

(வேறு.)

"பிராணாயாமம்" என்பது மூச்சுவிடல், மூச்சு வாங்கல், மூச்சு அடக்கல் ஆகிய இவற்றைப் பழகிவரின் பிராணவாயு ஆறு ஆதார நிலைகளிலும் ("மூலாதாரம்" தொடங்கி "ஆஞ்ஞை" வரையிலும்), உள்ள உறுப்புகளை வன்மைப்படுத்தி, மனதை அலைய விட்டாதபடி தடுத்து, அறிவினை விளக்கி, உடலை அழியாதிருக்க செய்தற்கும்; இறைவன் தன்மைகளை மக்களும் பெறக் கூடும் என்பதேயாம்.

"மந்திரம்" என்பது எட்டியோக நிலைகளையும் (அட்டாங்க யோக நிலைகள்) குறிக்குமென்பதாம். அவை :

1. நன்னடக்கை (இயமம்),
2. நற்செயல் (நியமம்),
3. இருக்கை (ஆதனம், ஆசனம்),
4. சரப்பழக்கம் (பிராணாயாமம்),
5. புலனடக்கல் (பிரத்தியாகாரம்),
6. மூச்சடக்கல் (மனமடக்கல், தாரணை),
7. தன்னையடக்கல் (தந்திரம், தியானம், ஆத்ம சொரூபம் அறிதல்),
8. இரண்டறக் கலத்தல் (சமாதி),

என்பனவாம்.

மேலும்,

சுவாசம் சரியாக நடைபெற்றால், நாடிகள் மூன்றும், சரியான மாத்திரையளவோடு நடைபெறும். மானிடர்க்குப் பிணியுமில்லை என்கிறார்.

எங்ஙனமெனில் :

1. "சொல்லுவேன் மானிடர்க்கு நாழியொன்றில்,
சுவாசமதுமூன்நூற்றுமூறோடறுபதாகும்,

வெல்லு வேன் இருபத்தோராயிரத்தான்,
விளங்கிநிற்குஞ்சுவாசமது அறுநூறாக,

புல்லுவேன் கலைமூன்று நாடி மூன்றாய்,
புகழான மாத்திரையுஞ்செப்பலாகும்,

மல்லுவேன் நாடியது சரியாயோடில்,
மானிடர்க்குப் பிணி யுமது மருங்கிடாதே."

என்பதினால்.

மானிடர்க்கு நாழிகையொன்றுக்கு 360 சுவாசமாக நாளொன்றுக்கு 21,600 சுவாசமும் பூரக, கும்பக, ரேச்சகமாய் நடைபெறுகின்றது. இம்மாதிரி நடைபெறுவதற்கு, இந்நூலில் கூறிய பிரகாரம் கலை மூன்று, வாயுக்கள் மூன்று, நாடி மூன்று இவற்றின் தத்துவம் ஒழுங்காய் நடந்தால் சுவாசமும் சரியாக நடைபெறும். நாடிகளின் மாத்திரையளவும் பொருத்தமாகயிருக்கும். மானிடருக்குப் பிணியுமில்லை என்பதையும் அறிகிறோம்.

குறிப்பு.—கலை மூன்று, வாயுக்கள் மூன்று, நாடிகள் மூன்று இவைகளின் ஒற்றுமையான தொழிலால் நாடிகளின் மாத்திரை விகிதம் அமையும் தன்மையும் பின்னால் விளக்கியுள்ளோம்.

**சுவாச பந்தனம் (பிராணாயாமம்) செய்துவந்தால் எப்போதும் பால ராயிருக்கலாமென்கிறார் :**

2. "நாளொன்றுக்கு இருபத்தோராயிரத்து அறுநூறு
நலமான சுவாசந்தானெழுந்திருக்கும் ;
கோளொன்றிப் பதினாலாயிரத்து நானூறு
குவித்த மூலாதாரத்துள் ளொடுங்கும்
பாளொன்றி யேழாயிரத்திருநூறு சுவாசம்
பாழினிற்பாய்ந்திடுமென்றறிகப் பின்னை ;
ளொன்றியிதனையே யுட்சாதித்தால்
எப்போதும் பாலராயிருக்கலாமே."

(—யூகி சிந்தாமணி.)

என்பதினால் ;

நாளொன்றுக்கு இருபத்தோராயிரத்து அறுநூறு சுவாசம் உண்டாய், அவற்றில் பதினாலாயிரத்து நானூறு சுவாசம் இழுப் பதனால் உள்ளுக்குத்திரும்பிப்போய் மூலாதாரத்துள் ஒடுங்கு மெனவும் ; ஏழாயிரத் திருநூறு சுவாசம் வெளியே போய்ப்பாழா கும் எனவும் ; இந்த ஏழாயிரத்திருநூறு சுவாசமும் வீணா காமல் பிராணாயாமம் செய்வதின் மூலம் உட்சாதித்தால் அவர்கள் எக்காலமும் பிணி, மூப்பு, சாக்காடுயின்றிப் பாலாயுமிருக்கலா மெனவும் கூறியுள்ளார்.

மேலும் ;

**பிராணாயாமம் சரியாகப் பழகி வந்தால் நாடிகளையும் உள் தத்துவங்களையும் நன்கு அறியலாம் என்கிறார்.**

3. "சொல்லிய வாதனங்கள் பலவற்றுணன்றிற்
துய்யபங்கயாதனமாயிருந்துதோன்றும்,
அல்லலறுத்தேகமனமாக்கியொட்டி
யானபந்தபிராணாயாமங்கள்பண்ணி,
எல்லையிலுத்தியின் கீழாமெழுத்தைப் பற்றி
எழுபத்தீராயிரம் நாடியிலீரைந்து
நல்லனவாமதில் மூன்று நாடி யோடு
நலந்தரும் போர்வ்வெழுத்தை நவிலப்பாரே."

(ஞானசர நூல், பக்கம் 376—சிவயோகசாரம், பக்கம் 27).

என்பதினால் ;

சுவாச பந்தனம் என்னும் பிராணாயாமம் பழகுவோர், துய்ய பங்கயாசன மாகிய "பத்மாசனம்" அல்லது "சித்தாசனத்தில்" அமர்ந்து கொண்டு, மனதை ஒன்று படுத்தி (கட்டுப்படுத்தி) ஒரே மனதாய் ஒட்டியானபந்தமென்னும் பிராணாயாமங்கள் செய்து பழகி வந்தால் எல்லையற்ற திருவருளுக்கிருப்பிடமாகிய உத்தியின் கீழிருக்கும், அவ்வெழுத்தைத் தொடர்ந்து எழுபத்தியீராயிரம் நாடிகள் தேகத்திலுண்டாயிருப்பவை நன்றாய்த் தெரியும் என வும் ; அந்நாடிகளில் பெருநாடி எனக் கூறப்படும் பத்து நாடிகளும், அதன்பின் அதில் முக்கியமாக வள்ள மூன்று மூலாதார நாடிக ளாகிய இடகலை, பிங்கலை, சுழி முனை என்னும் நாடிகளையும், அவை ஒவ்வொன்றும் அபானன், பிராணன், சமானன் என்னும்

வாயுக்களால் முறையே தூண்டப்பட்டு வளி, அழல், ஐய நாடிக ளாக மாறும் தத்துவத்தையும் நேரில் காண, "சரம்" இடங் கொடுக்கும் எனவும் கூறியுள்ளார்.

**நிற்க, அகத்தியர் உயர்ஞானம் கூறுவதாவது :**

"உண்ணும் போதுயி ரெழுத்தை யுயரவாங்கு
உறங்குகின்றபோதெல்லாம துவேயாகும்
பெண்ணின் பாலிந்திரியம் விடும்போதெல்லாம்
பேணி வலம் மேல் நோக்கி அவற்றில் நில்லு,
தின்னுங்காயிலையருந்தும்போதெல்லாமதுவேயாகும்
தினந்தோறுமிப்படியே செபிக்கவல்லார்
மண்ணுழிகாலம்மட்டும் வாழ்வார்பாரு
மறலிகையில சப்படவுமாட்டார்தானே."

என்பதினால் ;

பிராணாயாமம் பழகுவோர் உண்ணும்போதும், உறங்கும் போதும், ஸ்திரி சம்போக காலத்திலும், இலை, காய் முதலிய வற்றை யருந்தும் போதும், மற்றும் எல்லாக் காலங்களிலும் வலது நாசியின் வழியாய் சுவாசத்தை உள் இழுத்து (16 மாத்திரை யளவு), மேல் நோக்கி (பேணி வலம் மேல் நோக்கி), ஸ்தம்பித்து நிறுத்தி (32 மாத்திரையளவு) அப்பால் வெளியில் விட்டும் (16 மாத்திரையளவு)—இதே மாதிரியாக இடது நாசியின் வழியாய் சுவாசத்தை நடத்தியும், நாளடைவில் பழக்கத்தினால் சுவாசம் மூற்றிலும் உட்தங்கும்படி அப்பியாசித்து வந்தால் அவர் நீடுழி காலம் வாழலாம் எனவும் ; எமன் கையிலகப்படவுமாட்டா ரெனவும் ; பிராணாயாமம் பழகுவோர் அவ்வெழுத்துக்களாகிய உயிரெழுத்தைச் செபித்தல் வேண்டுமெனவும் அறிகிறோம். வலது நாசியில் மட்டும் சரம் பழகுவது மிகவும் இலாபகரமானது.

**"சரம்" பற்றிய விளக்கம் (வேறு).**

**வேறு பெயர்கள்.**—பிராணவாயு, மனம் ; சீவன் ; மூச்சு ; சுவாசம் ; ஆவி ; உயிர் ; வாசி ; என்பனவாம்.

இதனை இடகலை, பிங்கலை, சுழிமுனை என்றும் ; **சோம, சூரிய, அக்கினி** என்றும் ; மதி, ரவி, அங்கி என்றும் ; **சந்திரக்கலை, சூரியக்கலை,** சுழி முனை என்றும் கூறுவர்.

"பூரகம்" என்பது வெளியிலிருந்து பிராணவாயுவை உள் சுவாசித்து இழுப்பது. இதற்கு 16 மாத்திரையளவு என்பர்.

"இரேசகம்" என்பது உள்ளே இழுத்த பிராணவாயுவை உடலில் நிறுத்திவைத்து (கும்பித்து) அப்பால் மெதுவாக வெளியில் விடுவது. இதற்கு 16 மாத்திரை அளவு என்பர்.

"கும்பகம்" என்பது உள்ளே இழுத்த பிராணவாயுவை உள்ளேயே உடலில் கும்பித்து (நிறுத்திவைத்தல்) வைப்பது. இதற்கு 32 மாத்திரையளவாகும். "ஓம் சிவய நம" என்னும் மந்திரத்தை மனதிற்குள்ளேயே ஒரு முறை செபித்தால் 8 மாத்திரை எனக் கணக்காகும். இருமுறை செபித்தால் 16 மாத்திரையும், நாலு முறை செபித்தால் 32 மாத்திரையுமாகும்.

வலது நாசியில் "வாசி" யோட்டம் செய்து பழகுவது மிகவும் நல்லது. இலாபத்துக்குரியது. இதன் காரணமாகவே இடது கையில் படுக்க வேண்டியது அவசியம் என்பதும்; யோகிகள் மாத்திரைக்கோல் ஒன்றை இடது கக்கத்திற்கு ஆதாரமாய் வைத்துக் கொண்டு பிராணாயாமம் செய்வதும் பொருத்தமாகும்.

பிராணாயாமம் அப்பியாசிக்கும் மந்திரம் **"ஓம் சிவய நம"** என்னும் அட்சரங்களை ஒரு முறை மனத்திற்குள்ளேயே செபிக்க 8 மாத்திரையளவு எனக் கணக்கிடப்பட்டிருக்கின்றது. பூரகத்தில் இருமுறையும்; இரேசகத்தில் இருமுறையும், கும்பகத்தில் நான்கு முறையும் இம் மந்திரத்தை மனதிற்குள்ளேயே செபிக்க **பிராணாயாம செபம் பூர்த்தியாகும்.**

மேலும் பலபேர் பலவிதமான அட்சரங்களை மந்திரமாகப் பழகுவதுமுண்டு, "சோ-கம" பூரகத்திலும்; "ந-ம" இரேசகத்திலும்; "சி.வ." பூரகத்திலும்; "ந-ம" இரேசகத்திலும்; "ரா-மா பூரகத்திலும்: "ந-ம்" இரேசகத்திலும் ஆகிய இம் மாதிரியான மந்திரங்களைச் செபித்தலுமுண்டு.

மேலும், பிரம்மா, விஷ்ணு, ருத்திரன் மூவரும் பூரகம், கும்பகம், இரேசகம் ஆகிய மூன்றுக்கும் முறையே அதி தேவதைகளாகுமென்பர்.

**ஆசனம்.**—பத்மாசனம் அல்லது சித்தாசனம்; மான் தோல் மேல் உட்கார்ந்து வடக்கு முகமாகயிருந்து மனதை அடக்கி, ஒடுக்கி, ஒட்டியான பந்தனம் பண்ணி "வாசி" யைப் பழகல் வேண்டும்.

முதலில் இடது நாசித் துவாரத்தை அடைத்துக் கொண்டு வலது நாசியின் வழியாக 16 மாத்திரையளவு பிராண வாயுவை உள்ளே இழுக்க வேண்டும். அதாவது "ஓம் சிவய நம" என்னும் மந்திரத்தை மனதிற்குள்ளேயே இரு முறை செபித்தல் வேண்டும். இம் மந்திரம் ஒரு முறை செபித்தால் 8 மாத்திரையளவுக்குச் சமானமாகும். இதனை பூரகம் என்பர்.

உள் இழுத்த காற்றை உடலில் கும்பித்து நிறுத்தி வைப்பது 32 மாத்திரையளவாகும். அதாவது "ஓம் சிவாய நம" என்னும் மந்திரத்தை மனதிற்குள்ளேயே நான்கு முறை செபிக்க வேண்டும். இதனை "கும்பகம்" என்பர்.

பிறகு கும்பித்து நிறுத்தி வைத்த வாயுவை இடது நாசியின் வழியாக மெதுவாக வெளியிடல் வேண்டும். இதற்கு மாத்திரை யளவு 16 ஆகும். அதாவது "ஓம் சிவாய நம" என்னும் மந்திரத்தை மனதிற்குள்ளேயே இரு முறை செபிக்க வேண்டும். இதனை "இரேசகம்" என்பர்.

இதே மாதிரியாகப் பிறகு வலது நாசியை அடைத்துக் கொண்டு இடது நாசியில் மூச்சு உள் இழுத்துக் கும்பித்து, அப்பால் வெளியில் விடல் வேண்டும். மேலே வலது நாசிக்குச் சொன்ன பிரகாரம் நடந்து கொள்ளல் வேண்டும். திரும்பத் திரும்ப நாசித் துவாரங்களில் மாறி மாறி பிராணாயாமம் செய்து பழகி வர வேண்டும். குறிப்பாக வலது நாசியில் வாசியோட்டம் செய்து பழகுவதே சிறந்தது என்பது சிலரது அனுபவமான கருத்தாகும்.

எத் தொழிலைச் செய்தாலும், எதவத்தைப் பட்டாலும், சிந்தையையடக்கி அவ் வெழுத்துக்களாகிய உயிரெழுத்தை அல்லது உயிர் நிலையை மறவாது செபித்து, சுவாச பந்தனத் துடன் செபமும் இரண்டரக் கலந்த மேலான பதவியை அடைய உதவும் எனவும் நூல்கள் கூறுகின்றன. "சரம்" பழகுவோர்க்கு ஆயுள், விருத்தியும், பிணி, மூப்பு, சாவு முதலியவையில்லை எனவும், ஆனால் இப் பயிற்சியானது வெளிக் காட்சிகளில் பற்றில்லாதவர் களுக்கே எளிதில் சித்தியாகு மென்றும் சித்தர் நூல்கள் கூறுகின்றன.

**உயிரெழுத்தைப்பற்றிய விவரம் :—**

*(அகத்தியர் தனி ஞானம்)*

*"அண்ணான உச்சி வெளிதாண்டி தின்று,*
*உமையவளும் கணபதியு முந்தியாகி,*

*விண்ணொளியாமம் பரமாம் **ஓம் அவ்வும் உவ்வும்***
*விதித்த பரமொருவருக்கு மெட்டாதப்பா,*

*பண்ணான உண்ணுயிர்தான் சிவமதாச்சு,*
*பாற்கடலில் பள்ளிகொண்டோன் விஷ்ணுவாச்சு,*

*கண்ணான கணபதியைக் கண்ணில் கண்டால்*
*கலந்துருகி யாடுமடா ஞானமுற்றே"*

என்பதினால்; "ஓம் அவ்வும் உவ்வும்" என்னும் அட்சரங்களே உயிருக்கு ஆதாரமான பிரணவ மந்திர மாகும். "அகாரம், உகாரம், மகாரம்" என்பதே "ஓம்" என்னும் பிரணவ மந்திரமாகும். இதன் கருத்து யாதெனில் சீவாத்மாவே பரமாத்மாவென்னும் "அத்வைத" கொள்கையும்; சீவாத்மாவுக்கு பரமாத்மா சேதனன் என்னும் "விசிட்டாத் வைத" கொள்கையும் கூறுவதுண்டு. இதனால் நாம் தெரிந்து கொள்ளுவது யாதெனில், அசேதனனாகிய தேகத்தில் சேதனனான "சீவாத்மா" ஒன்று உண்டு என்பதும், அதற்கு மேல் "பரமாத்மா" ஒன்றுள்ளது என்பதும் அறிகிறோம். இதன் பிரகாரம் "பரமாத்மா" சேஷி; "சீவாத்மா" சேஷபூத னாகிறான். இதேபோலாக அசேதனனாகிய தேகம் சேஷபூதன் "சீவாத்மா" சேஷி எனவும் பொருளாகும். உடலையும் உயிரையும் காப்பாற்றி வருவதற்கோ அல்லது உடலுக்குள் உயிர் தரித்திருட் பதற்கோ எல்லாம் சீவாத்மாவின் இயற்கையான தத்துவமேயாகும் என்பதையும் அறிகிறோம்.

**வாசியினாலேற்படும் பயன் யாது?**

*(சுந்தரானந்தர் அதீதம் 71—பாட்டு 49, 50).*

1. *"பாட்டெல்லாஞ் சொன்னதினாலென்ன வுண்டு*
*பார்மகனே வாசி கட்ட மனதைக் கட்டே."*

2. *"மனங் கட்டினாலல்லோ யோகங் கிட்டும்,*
*மகத்தான ஞானமதுதானே எய்தும்,*

சினங்கட்டினாலல்லேவோ தவமுங் கிட்டும்,
சித்தியெட்டு மெய்துமடா சிவமு மெய்தும்,

தனங்கட்டினாலல்லாவோ வறுமைமட்டுஞ்,
சார்வான செகச்சால வித்தையெய்தும்,

கனங் கட்டுமறிவல்லோ குருவேயாசான்
கைமுறையாய்ச் செய்து கொண்டு அறிவில் கூடே."

என்பதினால், வாசியைக் கொண்டு சகல நன்மைகளும் பெற ஹேதுவுண்டு. வாசியைக் கட்டுவதனால் மனம் கட்டுப்படும். பொறி புலன்களும் வெளித் தோற்றத்திலீடுபடா. உள் நோக்கி மனதோடு சேர்ந்து கட்டுப்படுவனவாகும். மனம் கட்டுப்பட்டால் யோகஞ் சித்தியாகும். "அறிவு" தானே விருத்தியாகும். இங்கே "அறிவு" என்பது சீவாத்மா, பரமாத்மாவைப் பற்றிய ஞானமெனக் கொள்க. சினமும் கட்டுப்படும். அதாவது ஆணவம், மாயை, கன்மமாகிய மும்மலங்களும் ஒழியும். தவமும் கிட்டும். அதாவது மனம் போல் வாழ ஹேதுவாகும். அட்டாங்கயோகம்: அட்டமாசித்து யாவும் கைகூடும். சிவ நிலையையும் அடையலாம். ஐசுவரியமுண்டாகும். வறுமையிரா. செகச்சால வித்தைகளும் கைகூடும். கனங்கட்டு மறிவாகிய இரசத்தைக் கட்டக்கூடிய அறிவைப் போதிப்பவரே "குரு" அல்லது "ஆசான்" எனப்படுவர். இதனைக் கைமுறை யாய்ச் செய்து அனுபவித்து, அனுபவ சித்தமான அறிவைப் பெறல் வேண்டும் என்பதே முன் செய்யுளின் கருத்தாகும்.

மேலும்,

சுப்பிரமணியம் சுத்தகியானம்: பாட்டு 55-ல் கூறியிருப் பதாவது:

"ஐம்பத்தோரெழுத்தெல்லாமோ ரெழுத்தையாகி
அண்டபிண்டந்தானாகியமர்ந்த நாதன்
எண்பத்து நான்கு நூறாயிர லட்சமுயிரேயாகி
ஏகமதுதானாகி நின்றார்பாரே".

என்பதினால், சீவாத்மாவின் பிரபாவத்தை நன்கு எடுத்துக் காட்டியுள்ளார். கடவுள் ஒருவரேயாயினும் அவர் எல்லா வஸ்துக் களிடத்தும் எல்லா சீவன்களிடத்திலும் உயிருக்குயிராய் நிற்கிறார் என்பதே இதன் கருத்து.

# அத்தியாயம் VI

## கெர்ப்பிணிகளுக்கு மாதந்தோறும் உண்டாகும் நோய்களும் பரிகாரமும் கூறுகிறார்

*(பக்கம் 12 அகத்தியர் பிண்டோற்பத்தி—பக்கம் 47. வயி. சாரசங்கிரகம்) :*

*(கலிவெண்பா.)*

1. "அத்தியுரித்தோனிடத்திலமர்ந்து மையாள் ஈன்ற
சக்திக்கணபதியின் தாள் போற்றி—எத்திசையுங்."

2. "கெர்ப்பமின்னாருக்குக்கிளைத்த பிணிதான் தீர
கற்பமதாங்கிரியைக்கண்டுரைப்பேன்—உற்பத்தி."

3. "திங்கள்முதற் கர்ப்பஞ் சிறு வலியாய்த் தான் வலிக்கில்
எங்கள் மரைப்பூசந்தனுமிலாமிச்சு—மங்கை நன்னீர்."

4. "வார்த்தரைத்து ஆப்பாலில் வாகாகவே கொடுக்க
சேர்திரண்டாமாதஞ்சிறுகினால்—மாற்றிக்கொள்."

5. "தக்கோலத்தாமரையின் தன் பூவும் நீராரைத்து
அக்காலமே கொடு நீ ஆவின்பாலில்—எக்காலம்."

6. "மூனாந்திங்கள் தன்னில் முறுக்கி வயிறுளைக்கில்
வாணிமலர் செங்கழு நீர்வன் கிழங்கு—பேணி."

7. "பாலிலரைத்தே கொடுக்கப்பாவையர்க்குக் கர்ப்பம்
நாலில் வலித்துத் துரத்தம் நாடினால்—சூலியர்க்கு."

8. "நெய்தற்கிழங்கு நொச்சில் நீர் வார்த்ததனை
உய்தபசும்பாலில் உண்ணவே—ஐந்தாம்."

9. "மாதம் வலிக்கில் வரும் ஆம்பலின் பூவும்
வேதமையவிலாமிச்சுவேரும்—போத."

10. "நீர் வார்த்தரைத்து நிச்சயம் பாலிற் கொடுக்க
கூர் ஆறில் கெர்ப்பக் குடலமன்று—நெரே."

11. "சுற்றிக்குடல் வலித்துச் சுழன்றுமே நீர்சுருக்கில்
பற்றியிதற்கு மருந்து பகரக்கேள்—உற்ற."

12. "திப்பிலியுமுந்திரிகைசேர்ந்த நெய்தற்கிழங்கு
அப்பிலரைத்துப் பாலிலே யருந்த—ஒப்பில்லா."

13. "ஏழில் வலிக்கில் இலாமிச்சு சந்தனமும்
வாழுந்தக் கோலம் வகை மூன்று—சூழும்."

14. "கோவினது பாலில் கொடுக்க வெட்டாமாதம்
பாவை கைகாலயரும்பசிக்கன்னந்—தேவை."

15. "இல்லைதானின்னமிதற்கு மரைப்பூவும்
தொல்லை நெய்தற்கிழங்குந் தொந்தித்து—நல்லாவின்."

16. "பாலிலதைக் கொடுக்கப் பாவை நவமாதம்
சூலின் வலி காணில் அசுந்தோலுங்—கோவி."

17. "மருதந்தோல் நீரில் வாகாகவே யரைத்து
கருத்தாயாவின் பாலில் கண்டு கொடு—பருக்கப்."

18. "பத்தாகு மாதமதிற்பாவை வயிறு களக்கிற்
எத்தாகுஞ்சர்க்கரையினுப்பைப்பூ—சித்தாக."

19. "நீரிலரைத்துப்பாலில் நினைவாகத்தானருந்த
பேருமதித்தோர்க்குப் பேசுவேன்—கூறும்."

(இதின் பொருள்.)

**1. கெர்ப்பிணிகளுக்கு முதற்றிங்களில் கெர்ப்பம் சிறு வலியாய் வலிக்கில்.**—தாமரைப்பூ, சந்தனம், விலாமிச்சம்வேர் இம் மூன்றையும் சமவளவில் தக்க யளவாக எடுத்து நீர்வார்த் தரைத்துப் பசுவின் பாலிற் கலக்கிக் கொடுக்கத் தீரும்.

**2. இரண்டாந் திங்களில் வலித்தால்.**—தக்கோலமும், தாமரைப் பூவும் சேர்த்து நீர் வார்த்தரைத்துப் பாலில் கலக்கிக் கொடுக்கத் தீரும்.

**3. மூன்றாந் திங்களில் முறுக்கி வயிறுளைக்கில்.**—வெண் தாமரை மூலரும், செங்கழுநீர்க் கிழங்கும் சேர்த்து நீர் விட்டரைத்துப் பாலில் கலந்துகொடுக்கக் குணமாகும்.

**4. நான்காம் மாதம் கெர்ப்பத்தில் வலித்தும் ரத்தமும் வெளி யானால்.**—நெய்தற்கிழங்கும், நொச்சி வேரும் சேர்த்து மூன் போலரைத்துப் பாலில் கலந்து கொடுக்கக் குணமாகும்.

**5. ஐந்தில் வயிறு வலித்தால்.**—ஆம்பல் பூவு, விலாமிச்சுவேரும் சேர்த்து நீர் வார்த்தரைத்துப் பாலிற் கொடுக்கத் தீரும்.

**6. ஆறாம் மாதத்தில் கெர்ப்பக் குடலழன்று சுற்றி வலித்துச் சுழன்று நீர்ச் சுருக்கில்.**—திப்பிலி, முந்திரிபபழம், நெய்தற்கிழகு இம்மூன்றும் சேர்த்து நீர் வார்த்தரைத்துப் பாலில் கலந்து கொடுக்கக் குணமாகும்.

**7. ஏழில் வயிறு வலிக்கில்.**—விலாமிச்சுவேர், சந்தனம், தக்கோலம் இம்மூன்றும் சேர்த்து நீர்வார்த்தரைத்துப் பாலில் கலந்து கொடுக்கக் குணமாகும்.

**8. எட்டில் கைகால் அயர்ந்து பசியில்லாதிருந்தால்.**—தாமரைப்பூவும், நெய்தற்கிழங்கும் அரைத்துப் பாலில் கலந்து கொடுக்க நிவர்த்தியாகும்.

**9. ஒன்பதாம் மாதம் சூல் நோகில்.**—அரசந் தோலும், மருதம் பட்டையும், நீர்வார்த்தரைத்துப் பசுவின் பாலில் கலக்கிக் கொடுக்க நிவர்த்தியாகும்.

**10. பத்தாம் மாதத்தில் வயிறுளைக்கில்.**—சர்க்கரையும், இலுப்பைப்பூவும், நீர் வார்த்தரைத்துப் பாலில் கலந்து கொடுக்கக் குணமாகும். பத்தியமுமில்லை.

**குறிப்பு.**—இதனை இங்கே கூறியிருப்பதின் நோக்கம் கெர்ப்பிணிகளுக்கு மாதந்தோறுமுண்டாகக்கூடிய நோய்களைத் தெரிந்திருக்கும் பொருட்டே இங்கே விவரித்துள்ளோம். பரிகாரம் சேர்த்துப் பாவிலிருப்பது பின்னால் மிகவும் உபயோகமாக விருக்கும்.

இதன்றியும், கெர்ப்ப காலத்தில் துவாலை காணல், தாகம், மூர்ச்சை, சுரம், நீர்ச்சிறப்பு, நீர்ச்சுரப்பு, நீரடைப்பு, கல்லடைப்பு முதலிய நோய்களுமுண்டாகக்கூடும். அவற்றின் குறி குணங்கள், மருத்துவம் யாவும் கெர்ப்ப சம்பந்தமான நூல்களிலும், ஆத்ம ரட்சாமிர்தமென்னும் வயித்திய சாரசங்கிரகத்திடமும் காணலாம்.

## அத்தியாயம் VII.

**உயிர் தோற்றம்; தத்துவங்கள் 96. அவற்றின் தொழில்கள்.**

**"உயிர்த் தோற்றம்" அல்லது "உருத் தோற்றம்".**

"உருபொருள் தாங்குமுடலுமுயிரும்
உடற்காதாரமொன்பஞ்சபூதப்
பஞ்சீகரணப் பாண்மையாமெனவும்
உயிர்க்காதாரமுயிர்த்தாதெனவும்,
மூப்பிரிவாகிமுக்குணமணுகி
உடலையுமுயிரையுமோம்பிக் காத்து,
வருமெனமுதுமறைவகுக்குந்துணிபே"

என்பதினால்;

(இதின் பொருள்.)

கரு உடைமையைத் தாங்குவது சரீரமும் ஆன்மாவுமாகும். சரீரத்திற்கு அடிப்படையாவது ஐம்பெரும் பூதக்கூட்டங்களைப் பஞ்சிகரணப்படுத்தும் தன்மை சொல்லலாகும். ஆன்மாவுக்கு நிலை "சீவதாது" அல்லது "உயிர்த்தாது" எனப்படும். சீவ தாது மூன்று பிரிவுகளையடைந்து (அதாவது வளி, அழல், ஐயம்), மூன்று குணங்களாகிய வாயு, தேயு, அப்பு ஆகியவற்றைப் பெற்று, சரீரத்தையும் சீவனையும் வளர்த்துக் காப்பாற்றி வருமெனப் பழைமையான வேத நூல்கள் விரிவாகக் கூறும் தீர்ப்பு என்பதே யாம்.

**கருவின் மூலமாக ஏற்பட்ட உடைமையாகிய 96 தத்துவங்கள் யாவை?**

(வேதாந்தத் தத்துவக் கட்டளையிற் கூறியபடி.)

I. முதல் தத்துவம்—30.

| | |
|---|---|
| பூதம் | 5 |
| பொறி | 5 |
| புலன் | 5 |
| கன்மேந்திரியம் | 5 |
| கன்மலிடயம் | 5 |
| கரணம் | 4 |
| அறிவு | 1 |
| ஆக | 30 |

II. இரண்டாம் தத்துவம்—30.

| | | |
|---|---|---|
| நாடி | | 10 |
| வாயு | | 10 |
| ஆசயங்கள் | | 5 |
| கோசம் | | 5 |
| | ஆக | 30 |

III. மூன்றாம் தத்துவம்—36.

| | | |
|---|---|---|
| ஆதாரம் | | 6 |
| மண்டலம் | | 3 |
| மலம் | | 3 |
| தோடம் | | 3 |
| வடணை | | 3 |
| குணம் | | 3 |
| இராகம் | | 8 |
| வினை | | 2 |
| அவத்தை | | 5 |
| | ஆக | 36 |

தத்துவங்கள் தொண்ணூற்றாறின் தொழில்கள் கூறுகிறார்.

• முதல் தத்துவம் 30-ன் வரலாறு.

ஐம்பூதங்கள் (ஐந்து பருவப்பொருள்கள்).

| | இயற்கை செயல். | வடிவு. | நிறம். | பண்பு. | சுபாவம். | தொழில். |
|---|---|---|---|---|---|---|
| (மண்) பிருதிவி | உரத்துத்ஃ தரிக்கும். | நாற்கோணம் | பொன்மை | கடினம் | கிடத்தல் | பொறுத்தல் |
| (புனல்) அப்பு | குளிர்ந்து பதஞ் செய்யும். | இருகோணம் | வெள்ளை (படிக நிறம்) | நெகிழ்ச்சி | பரத்தல் | கட்டுண்டல் |
| (அனல்) தேயு | சுட்டொன்று விக்கும். | முக்கோணம் | செம்மை | சுட்டொன்று வித்தல். | வனவுதல் | உலர்த்தல் |
| (கால்) வாயு | சலித்து எவையும் திரட்டும். | அறுகோணம் | கருப்பு | சலித்துத் திரட்டல். | நிறைத்தல் | விம்முதல் |
| விசும்பு (ஆகாயம்) | நிரந்தரமாய் இடங் கொடுக்கும். | வட்டம் | புகை | இடம் கொடுத்தல். | நிற்றல் | போக்குதல் |

இதற்கு மேலும் ஒவ்வொரு பூதத்திற்கும் குறி, தேவதை, அட்சரம், சூக்குமப் பஞ்சாட்சரம், கலை முதலிய விவரங்களும் சித்த மருத்துவாங்கச் சுருக்கத்தில் கூறப்பட்டுள்ளன. இங்கே அவற்றைக் குறிப்பிடத் தேவையில்லை. ஐம்பெரும் பூதங்களுக்குரிய இயற்கைச் செயல், வடிவம், நிறம், பண்பு, சுபாவம், தொழில் முதலிய விவரங்கள் மாணவர்களுக்குத் தெரிந்திருந்தால் போதுமானது.

2. **ஐம்பொறிகள்** (ஞானேந்திரியம் 5).

1. செவி : விசும்பினிடமாக நின்று செவியைப் பொருந்தி ஒலியை அறியும்.

2. மெய் : வளியினிடமாக நின்று உடலைப் பொருந்தி ஊற்றை அறியும். (ஊறு—உணர்வு).

3. கண் : அனலினிடமாக நின்று கண்ணைப் பொருந்தி உருவத்தை அறியும்.

4. நாக்கு : புனலினிடமாக நின்று நாவில் பொருந்தி உருசியை அறியும்.

5. மூக்கு : பிருதிவியினிடமாக நின்று மூக்கில் பொருந்தி வாசனையை அறியும்.

3. **ஐம்புலன்கள்** (ஐந்து நுண்ணிய பொருள்கள்; ஐம்பொறிகளின் உயிர்க்கூறு).

செவி, மெய், கண், நாக்கு, மூக்கு முதலியவற்றிற்கு அறியப்படத்தக்கவையாயிருக்கும், அவை :

1. ஓசை (கேட்கப்படுவது).

2. ஊறு (தொடுதலையறிவது).

3. ஒளி (காணப்படுவது).

4. சுவை (அறுசுவையறிவது).

5. நாற்றம் (வாசனையறிவது).

**4. கன்மேந்திரியங்கள்** (ஐந்து தொழில் உறுப்புகள்).

1. வாய் : விசும்பிடமாய் நின்று வாய் வசனிக்கும்.

2. கால் : வாயுவினிடமாய் நின்று பாதங்கள் (கால்கள்) நடக்கும்.

3. கை : அனலினிடமாய் நின்று கை இடுதலும் ஏற்றலும் செய்யும்.

4. எருவாய் : அப்புவினிடமாய் நின்று எருவாய் மலத்தைக் கழிக்கும்.

5. கருவாய் : பிருதிவியினிடமாய் நின்று கருவாய் அல்லது குறி சுக்கிலத்தைக் கழித்து ஆனந்திக்கும்.

**5. கண்மவிடயம்—5.**

இவை வாய், கால், கை, எருவாய், குறி முதலியவற்றின் உயிர்க்கூறு. இவற்றால் தொழில் புரியப்பட்டவை. அவை யாவன :

1. வசனம் (வார்த்தையாடல்).

2. கமனம் (நடப்பது).

3. தானம் (கொடுக்கல், வாங்கல்).

4. விசர்க்கம் (மலம் விடுதல்).

5. ஆனந்தம் (மகிழ்தல்).

**6. அந்தக்கரணங்கள்** 4 (அகக் கருவிகள்).

1. மனம் : ஒன்றை நினைப்பது.

2. புத்தி : அதனை விசாரிப்பது.

3. அகந்தை (அகங்காரம், மூளைப்பு).

ஒன்றை நினைத்து, விசாரித்த பின் அதனை மென்மேலும் எழுப்புவது.

**4. சித்தம் : அதனைச் செய்து முடிப்பது.**

7. அறிவு 1 (தன்னைக் கண்டு மகிழ்ந்திருத்தல்).

ஆக முதல் தத்துவம்—30.

குறிப்பு.—மேற்கூறிய பூதம் 5. பொறி 5. புலன் 5. கண்மேற் திரியம் 5. அந்தக்கரணம் 4.—ஆக இருபத்திநாலு தத்துவங்களும் சேர்ந்து "ஆன்மதத்துவம்" என்றும் "அசுத்த தத்துவம்" என்றும் கூறுவர். இதில் அந்தக்கரணம் நாலில் "அறிவு" ஒன்று சேர்த்தும், "சித்தம்" என்பதை நீக்கியும் கூறுவாருமுளர்.

## II இரண்டாம் தத்துவம்—30-ன் வரலாறு.

### 1. நாடிகள் பத்து (தச நாடிகள்).

(1) இடகலை : வலக்காற் பெருவிரலின்று கத்தரிக்கோல் மாறலாக இடது மூக்கைப் பற்றி நிற்பது.

(2) பிங்கலை : இடக்காற் பெருவிரலின்று கத்திரிக்கோல் மாறலாக வலது மூக்கைப் பற்றி நிற்பது.

(3) சுழுமுனை : மூலாதாரத்தைத் தொடர்ந்து எல்லா நாடிக்கும் ஆதாரமாய் நடு நாடியாய்ச் சிரசளவு முட்டி நிற்பது.

(4) சிகுவை : உண்ணாக்கில் நின்று சோறு தண்ணீரை விழுங்கப் பண்ணுவது.

(5) புருடன் : வலக்கண்ணளவாய் நிற்பது.

(6) காந்தாரி : இடக்கண்ணளவாய் நிற்பது.

(7) அத்தி : வலக்காதளவாய் நிற்பது.

(8) அலம்புடை : இடக்காதளவாய் நிற்பது.

(9) சங்கினி : குறியினளவாய் நிற்பது.

(10) குரு : அபானத்தளவாய் நிற்பது.

2. **வாயுக்கள் பத்து (தசவாயுக்கள்)** : பத்துவகிகள் அல்லது காற்றுகள் எனவும் பெயராகும். வளி (வாயு) ஒன்றாயிருப்பினும் ; தன் இடம், தொழில் முதலியவற்றால் பத்து வகைப்படும். மேற்கூறிய தச நாடிகளுக்கும் தசவாயுக்கள் உதவி புரிவதாகக் கூறப்படுகிறது. பத்து வாயுக்களாவன :—

1. **பிராணன்** : இது தலைநடுவே தோன்றி, சித்திரநாடி வழியே மூலாதாரம் சென்று, திரும்பி நாடியை முட்டி இடகலை, பிங்கலை, சுழுமுனையாகிய மூன்று மூலாதார நாடிகளுள் பிங்கலை நாடியுடன் சேர்ந்து கபாலத்தைச் சுற்றி மூக்கின்

வழியாய் மூச்சு விடலாற் பன்னிரண்டங்குலம் சென்று, மீண்டும் எட்டங்குலம் உள்புறம் பாய்ந்து மீதி நாலு அங்குலம் வீணாய்ப் போகும் என்பர்.

மூச்சு விடுதல், மூச்சு வாங்குதல் செய்யும். புசிக்கும் பலான உணவுகளை எல்லாம் செரிக்கப் பண்ணும். நீல நிறமாயிருக்கும். நாழிகை யொன்றுக்கு முந்நூற்றறுபது சுவாசமாக இரவு பகல் அறுபது நாழிகைக்கு (நாளொன்றுக்கு) இருபத்தோராயிரத்து அறுநூறு சுவாசம் நடைபெறும். இந்தச் சுவாசம் 21,600-க்கும் விவரம் கூறுகிறார் :—

| | |
|---|---|
| 1. மூலாதாரத்தில் சுவாசம் | 600 |
| 2. சுவாதிட்டானத்தில் சுவாசம் | 6000 |
| 3. மணிப்பூரகத்தில் சுவாசம் | 6000 |
| 4. அனாகதத்தில் சுவாசம் | 6000 |
| 5. விசுத்தியில் சுவாசம் | 1000 |
| 6. ஆக்கிணையில் சுவாசம் | 1000 |
| 7. நாதாந்தத்தில் சுவாசம் | 1000 |
| ஆக சுவாசம் | 21,600 |

இவ்விதமாக 21,600 சுவாசம் இயங்குவதில் பதினாலாயிரத்து நானூறு (14,400) சுவாசம் உள்ளுக்குத் திரும்பிப் பாய்ந்தும்; ஏழாயிரத்து இருநூறு (7,200) சுவாசம் வெளியில் போய்ப் பாழாகும் என்றறிக! **"பிராணவாயுவை உயிர்க்கால்"** என்பர்.

(2) **அபானன்.**—இது சுவாதிட்டானத்திலிருந்து வெளிப்பட்டுக் கீழ் நோக்கி மலசலத்தைத் தள்ளும். பச்சை நிறம், ஆசன வாயைச் சுருக்கும். அன்னச்சாரத்தைச் சேரவேண்டிய இடங்களில் சேர்ப்பிக்கும். **"அபான வாயுவை கீழ்நோக்குங்கால்" என்பர்.**

(3) **வியானன்.**—இது தோலிருந்து எழுபத்திரொயிரம் நாடி நரம்பு ரத்தக் குழாய்களிலும் சென்று இவ்வுடலிலுள்ள அசையும் பொருள், அசையாப்பொருள் என்னும் இவ்விரண்டிலு மிருந்து உறுப்புகளை நீட்டவும், மூடக்கவும் செய்து பரிசங்களை யறியும். உண்ணும் உணவின் சாரத்தை அவ்வவ்விடங்களில் நிறைப்பித்து உடலைக் காக்கும். பால் நிறம். **"வியான வாயுவை பரவுகால்"** எனவும் கூறுவர்.

(4) **உதானன்.**—இது உதராக்கினியிலிருந்து தோன்றி உணவின் சாரத்தைக் கூடியிருந்து அதனை அங்கங்கே நிறுத்தும். அதனை வெளிப்படுத்தியும் கலக்கியும் வருதல் செய்யும். மின்னல் நிறம். "**உதான வாயுவை மேல் நோக்குங்கால்**" எனவும் கூறுவர்.

(5) **சாமனன்.**—இது நாபியிலிருந்து கால்வரைக்கும் சமனாய்ப் பரவிப்பாய்ந்து, மற்றவாயுக்களை மிஞ்சவொட்டாமற் மடக்கிச் சரிப்படுத்திச் சேரப்பண்ணும். அறுசுவைகளையும், தண்ணீர், அன்னம் ஆகியவற்றையும் சமப்படுத்தி உடலில் எங்கும் சேரும்படி செய்யும். புட்பராகநிறம்: "**சாமன வாயுவை நடுக்கால்**" என்பர்.

(6) **நாகன்.**—இது எல்லா கலைகளையும் கற்கும் படி அறிவை எழுப்பும். நல்லபண்களைப் பாடுவிக்கும், கண்களைத் திறக்கவும், இமைக்கவும் செய்யும். மயிர்களைச் சிலிர்க்க செய்யும் பொன்னிறமுள்ளது.

(7) **கூர்மன்.**—இது மனதிலிருந்துக் கிளம்பிக் கண்ணில் நின்று இமையைக் கொட்டுவிக்கும். கொட்டாவி விடப்பண்ணும். வாயை மூடப் பண்ணும்.

(8) **கிருகரன்.**—இது நாவிலிருந்து நாவிற்கசிவையும், நாசியிற் கசிவையும் உண்டாக்கும். மிகுந்தபசியையுண்டாக்கச்செய்யும். ஒன்றை நினைத்திருக்கச் செய்யும். தும்மல், இருமல் ஆகியவற்றை உண்டாக்கும்.

(9) **தேவதத்தன்.**—இது வளைவு வடிவமாகக் கிளம்பி சோம்பலையும், உடல் முரித்தலையும் உண்டாக்கும். தூங்கி எழுந்திருக்கும்போது அதிர்ச்சியையுண்டாக்கும். கண்களையும் பல விடங்களில் ஓட்டி உலாவவிக்கும். தாங்குதல், சண்டை கொள்ளல், தர்க்கம் பேசல், மிகுந்த கோபம் முதலியவற்றையுண்டாக்கும். பல பொருள்களைக் குறிக்கச் செய்யும். குதம், குய்ய மென்னுமிடங்களில் இருக்கும். படிகநிறம்.

(10) **தனஞ்செயன்.**—இது மூக்கிலிருந்து தடித்து உடம்பு முழுமையும் வீங்கப்பண்ணும். காதில் கடல்போன்றிரைச்சலிட்டு, இறந்தவிடின் காற்றெல்லாம் வெளிப்பட்ட பின்னர் மூன்றாவது நாளில் தலை வெடித்தபின்தான் போகும். **நீல நிறம்.**

*பஞ்சப்பிராணாதி வாயுக்களைப் பற்றி பிற தூல்கள் கூறும் கொள்கைகளாவன :—*

*(1) வியானன்.*—இது வெளியின் (ஆகாயக்கூறு) கூறானபடியால் இஃது உடல் முற்றும் பரவியிருக்கும். இதற்கு இருப்பிடம் தமரகம் (இருதயம்). இதின் தொழில் நடத்தல், உடல் உறுப்புக்களை அசைத்தல், கண் இமைத்தல், விழித்தல் முதலியனவாம்.

*(2) பிராணன்.*—இது வளியின் (வாயு) கூறானபடியால் வளியைப்போல் தமரகத்தின்று மூக்குவரை அலைந்து நிற்கும். இஃது உயிருடன் கலந்து தலையை இடமாக பெற்று, மார்பு, கழுத்து இவ்விடங்களில் வாழ்வதுமன்றி மனம், புத்தி, உள்ளம், ஐம்பொறி இவைகளைத் தன்வயப்படுத்தி, காரியபரித்தல், இருமல், தும்மல், ஏப்பம் விடல், மூச்சு விடல் வாய்கல், உண்ணும் உணவை உட்செலுத்துதல் என்னும் தொழில்களை நடத்தும்.

*(3) அபானன்.*—இது நெருப்பின் (தேயு) கூறானபடியால், எரு வாயினின்று அடிவயிறு, இடுப்பின்பூட்டு, நீர்ப்பை, ஆண் பெண் குறிகள், தொடை ஆகிய இவ்விடங்களில் வாழ்ந்து, வெண்ணீர் (விந்து), நாதம், மலம், சிறுநீர், கரு இவற்றை வெளிப்படுத்தும்.

*(4) சமானன்.*—இது நீரின் (அப்பு) கூறானபடியால் உடலின் நடுவான பக்குவாசயமே இடமாய்ப்பெற்று, வயிறு முற்றிலும் வாழ்ந்து, உண்ட உணவு, நீர்ப்பொருட்கள் இவற்றைச் செரிப்பதற்குரிய தீயை விருத்தி செய்து சாரத்தையும், நிப்பியையும் வெவ் வேறாகப்பிரித்து, சாரத்தை உடலின் எல்லாப் பாகங்களுக்கும் பகிர்ந்து கொடுத்து வளர்க்கும்.

*(5) உதானன்.*—இது மண்ணின் (பிருதிவி) கூறான படியால் மார்பையே இடமாகக்கொண்டு கொப்பூழ், கழுத்து, மூக்கு இம் மூவிடங்களிலும் வாழ்ந்து பேச்சுக்கு முதற்காரணமாய் இருப்பதன்றி முயற்சி, மனதிடம், உடல் வன்மை, உடல் நிறம், உடல் ஒளி, நினைப்பு ஆகிய இவற்றையும் உண்டாக்கும்.

*3. ஆசயம் ஐந்து.*

*1. இரைக்குடல் (அமர்வாசயம்) :* உண்ட அன்னசாரம் அமரு மிடம்.

*2. செரிகுடல் (பகிர்வாசயம்) :* அன்னம் சீரணித்தபின் சாரம் வேறு, நிப்பிவேறாகப் பிரியுமிடம் அல்லது அன்னசாரம் பகிரு மிடம்.

3. நீர்க்குடல் (சலவாயசம்) : நீர்க்குழியும் நீரிறங்குமிடமும்.

4. மலக்குடல் (மலவாசயம்) : மலக்குழியும் மலமிறங்குமிடமும்.

5. வெண்ணீர்க்குடல் (சுக்கில வாசயம்) : வெண்ணீர் பிரியுமிடம்.

4. கோசம் ஐந்து.

1. உணவுடம்பு.—பருவுடம்பு (அன்னமயகோசம்) எழுஉடற் றாதுகளாலாக்கப்பட்ட உடல் அன்னமயக்கோசமாகும்.

2. வளியுடம்பு (பிராணமயகோசம்) : பிராணனும் கன்மேந் திரியங்களும் கூடி நிற்பது.

3. மனவுடம்பு (மனோமயகோசம்) : மனமும் ஞானேந்திரியங் களும் கூடி நிற்பது.

4. அறிவுடம்பு (விஞ்ஞானமயகோசம்) : புத்தியும் ஞானேந்திரி யங்களும் கூடி நிற்பது.

5. இன்பவுடம்பு (ஆனந்தமயகோசம்) : பிராணவாயுவும் சுழுத் தியும் கூடி நிற்பது.

ஆக இரண்டாம் தத்துவம் 30.

## II. மூன்றாம் தத்துவம் 36-ன் வரலாறு.

1. ஆதாரம் ஆறு.

1. மூலாதாரம் (மூலம் : கால் எலும்பு இரண்டும், கதிர் எலும்புங் கூடிய இடம் குய்யம், குய்யத்திற்கும் குதத்திற்கும் நடுவே "குண்டலி" வட்டமாய் அந்த வட்டத்துக்கு நடுவே திரிகோண மாய் தோன்றுவது—மாணிக்க நிறம்.

2. சுவாதிட்டானம் (கொப்பூழ்) : மூலாதாரத்திற்கு இரண்டு விரற்கடைக்கு மேலிருப்பது. நாற்சதுரமுள்ளது. பொன்னிறம்.

3. மணிபூரகம் (மேல்வயிறு) : சுவாதிட்டானத்திற்கு மேல் எட்டு விரல் பிரமாணத்திலிருப்பது மணிபூரகம். இது கோழி முட்டையைப் போன்று 1,008 நாடி நரம்பு நத்தக் குமாய்கள் சூழ,


நாடிகளுக்கெல்லாம் வேர்போல உள்ளது. இதனை அகக்கண் ணுற்றோர் "உந்திக்கமலம்" எனவும் சொல்லுவர். இது கொப்பூ முக்கு நேரில் அப்புஸ்தானத்தில் இருக்குமாம் பச்சை நிறம்.

4. அனாகதம் (நெஞ்சம்) : மணீபூரகத்திற்கு பத்துவிரற் கடைப் பிரமாணமுள்ள இடத்துக்கு மேல் உள்ளது அனாகதமாம். இஃது "இருதயகமலம்" எனவும் சொல்லுவர். தேயுஸ்தானம்— முக்கோணம்—அக்கினி நிறம்.

5. விசுத்தி (மிடறு) : அனாகத்திற்கு பத்துவிரற்கடைப் பிரமாணமுள்ள இடத்துக்குமேல் உள்ளது விசுத்தியாம். இது "கண்டஸ்தானத்திலே" வாயுஸ்தானத்தில் உள்ளது. அறு கோணம். கறுநிறம்.

6. ஆக்கினை (புருவநாடு) : இது விசுத்திக்குப் பன்னிரண்டு விரற்கிடை பிரமாணமுள்ள இடத்திற்கு மேல் "ஆக்ஞை" லலாட பீடத்தில் இருக்கிறது. நெற்றிப் புருவத்தின் வெளியாய் ஆகாய தானத்தில் உள்ளது. படிக நிறம். சட்டம் போன்றது.

மூலாதாரம் : குதத்திற்கும் இலிங்கத்திற்கும் நடு.
சுவாதிட்டானம் : கொப்பூழ்.
மணிபூரகம் : மேல்வயிறு.
அனாகதம் : இருதயகமலம்.
விசுத்தி : கண்டஸ்தானம்.
ஆக்கினை : லலாடத்தானம்




2. மண்டிலம் மூன்று.

1. தீமண்டிலம் (அக்கினிமண்டிலம்) : இது பிருதிவியும் அப்புவும் கூடிய இடத்தில் நாற்சதுரமாய் நடுவே முக்கோணமாய் உள்ளது. இது மூலாதாரத்திற்கு இரண்டு விரற்கடைக்குமேல் இருக்கின்றது. மூலாதாரம் முதல் நாபிக்கமலம் வரையிலுமுள்ள இடம் எனவும் கூறுவர்.

2. ஞாயிறுமண்டிலம் (ஆதித்த மண்டிலம்) : இது இருதயகமலத்தில் அறுகோணமாய் வாழைப்பூப் போன்று கீழ்நோக்கி இருக்கும். உந்திக்கு நாலுவிரற்கடைக்கு மேலிருக்கின்றது. இருதயகமலம் முதல் கண்டதானம் வரையிலுமுள்ள இடம் எனவும் கூறுவர்.

3. திங்கள் மண்டிலம்: (சந்திர மண்டிலம்): இது கோடி சந்திர சூரியர் உதயமானதுபோலத் தலை நடுவில் நிலையாய் நிற்கும். இதை "அமுதகலை" என்றும் வழங்குவதுமுண்டு. அமுதம் மேல்நோக்கியும் அக்கினி கீழ் நோக்கியும் சரியாய் நிற்கும். இதற்கு லலாடதானம் அல்லது கபாலம். எனவும் கூறுவர்.

**3. மலம் மூன்று.**

1. ஆணவம்: இது ஆன்மாவின் அறிவை மறைத்து "யான்" "எனது" என்பவற்றையும், அறியாமையையும் பிறப்பித்து, ஒருவனுக்குத் தன் உடைமை, பெண்டு, பிள்ளை, நண்பர் முதலியவர்களிடம் ஆசையை உண்டாக்கி, எதுவும் தனதென்று இருக்குமாறு செய்வது. (உடம்பை நானென்றிருக்கை எனலாம்.)

2. மாயை: இது வேறொருவருடைய பொருளைத் தனதென்று நினைக்கும் இடையூற்றை விளைவிப்பதும் துன்பத்தை வருவிக்க முயலுவதுமாம். (தனக்கு வருவது தெரியாது கோபங் கொண்டிருக்கை எனவும் கூறுவர்.)

3. காமியம்: இது, முந்திய இரண்டு விதத்திற்கும் ஒத்திருப்பதுமன்றி இதாகிதத்தினால் புண்ணிய பாவங்களை உண்டாக்குவதுமாகும் (கண்டவற்றிற்கெல்லாம் ஆசைப்படுதல் எனவும் கூறுவர்.)

**4. தோடம் மூன்று.**

1. வாதம் (வளி)—வாயுவின் கோபம்.

2. பித்தம் (அழல்)—தேயுவின் கோபம்.

3. ஐயம் (கபம்)—அப்புவின் கோபம்.

இம் மூன்று கோபத்தால் சகல நோய்களும் உண்டாகும்.

**5. முப்பற்றுக்கள் (ஏடணைகள் மூன்று).**

1. பொருட்பற்று (அர்த்தவேடணை): பொருள் முதலியவற்றால் வரும் பிணக்கு. திரவியத்தைத் தேடி ஆசைப்படுதல் எனவும் கூறுவர்.

2. புதல்வர்பற்று (புத்திரவேடணை): பிள்ளைகள் முதலான சுற்றத்தாரால் வரும் பிணக்கு. புத்திரனைத் தேடி ஆசைப்படுதல் எனவும் கூறலாகும்.

3. உலகப்பற்று (உலகவேடனை): உலகம் முதலாயவிடங்களைத் தேடி ஆசைப்படுவதால் வரும் பிணக்கு.

6. குணம் மூன்று (முக்குணம்).

1. சத்துவமாவது : அருள், ஐம்பொறியடக்கல், ஞானம், தவம், பொறை, மேன்மை மோனம் (மௌனம்), வாய்மை முதலிய நற் குணங்களால் நாட்டங்கொண்டிருப்பது. அடக்கம், அன்பு, விவேகமுமுடையது.

2. இராசதமாவது : ஊக்கம், ஞானம், வீரம், அறம், தவம், ஈகை, கல்வி, கேள்வி ஆகிய எண்குணங்களுடையது.

3. தாமதமாதவது : ஒழுக்கமின்மை, காமம், சினம், கொலை, சோம்பு, நீதிவழுவல், தெடுந்துயில், பேருண்டி, பொய், மறதி, வஞ்சகம் முதலிய தீக்குணங்களுடையது.

7. வினை இரண்டு.

1. நல்வினை : புண்ணியஞ் செய்தல்.

2. தீவினை : பாவஞ் செய்தல்.

8. இராகம் எட்டு.

1. காமம் (ஆசை).

2. குரோதம் (பிணக்கு).

3. உலோபம் (பிடிபாடு).

4. மோகம் (பிரியம்).

5. மதம் (கர்வம்).

6. மாற்சரியம் (உட்பகை) : உறவு போலிருந்து உதட்டில் நட்பைக் காட்டி உட்பகை விளைவித்தல்.

7. இடும்பை : தானே எல்லாவற்றினும் தலைவன் என்று நினைத்து யாரையும் இகழ்தல்.

8. அகங்காரம் : தன் குற்றங்களை அறியாது பிறர் சொல்லைக் கேட்டுக் கோபித்தல்.

9. அவஸ்தைகள் (பஞ்சாவத்தைகள் அல்லது ஐவகை நிலைகள்) :

(1) நனவு (சாக்கிரம்) : இது சிரத்தானம்; அல்லது புருவ மத்தியில் சந்த—பரிச—ரூப—ரச—கந்தமென்னும் ஐந்துடனும்;

வசனம், கமனம், தானம், விசர்க்கம் ஆனந்தமென்னும் ஐந்தோடனும்; மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என்னும் நான்குடனும் சேர்ந்து பதினான்கு கருவி கரணாதிகளுடன் சேர்ந்து; இப்பதினான்கு கருவிகரணாதிகளுடன் இன்பதுன்பங்களை அறிந்து நிற்கும்போது உள்ள நிலை.

(2) கனவு (சொப்பனம்) : இந்நிலையில் கருவி கரணாதி பதினான்கனுள் கரணம் நாலு நீக்கி கருவி பத்தும் கண்டத்தில் நிற்கும்.

(3) உறக்கம் (சுழுத்தி) : இது மற்றக் கரணாதி நான்கும் சுழுத்தியோடு சீவான்மாவைக் கூடி, சுவாசம் இருதயத்தில் நின்ற போது, கண்டவை கேட்டவைகளுள் ஒன்றையும் பிறர்க்குச் சொல்ல இயலாத நிலை.

(4) பேருறக்கம் (துரியம்) : சுழுத்தியைவிட்டுக் கரணமொன்றுடனே (அந்தக்கரனம்) சீவான்மா நாபித்தானத்தில் நின்ற போது மூச்சுவிடல் மூச்சுவாங்கல் பிறக்கும். இதற்குத் துரியம் எனப் பெயர்.

(5) உயிர்ப்படக்கம் (துரியாதீதம்) : கருவி கரணாதிபதினான்கும் பற்றற்று சீவான்மாதானே மூலாதாரத்தில் சென்றோங்கி, மலம் மத்தம், மாய்கை பரிசங்கள் இவற்றை அறியாமல் நிற்கும் நிலைக்குத் "துரியாதீதம்" எனப் பெயராம்.

ஆக மூன்றாம் தத்துவம் 36.

N.B.—மேற்கண்ட தத்துவங்கள் தொண்ணூற்றாறின் தொழில்கள் முதலிய வரலாறு யாவும் சில கையெழுத்து பிரதிகளிலிருந்தும், மற்றும் சில சித்தமருத்துவாங்கச் சுருக்கத்திலிருந்தும் எடுத்து எழுதப்பட்டன.

"மூப்பது மூப்பது மூப்பத்தறுவரும்,
செப்புமதிலுடைக் கோவிலுள் வாழ்பவர்,
செப்புமதிலுடைக் கோவில் சிதைந்தபின்,
ஓப்பிலையைவரும் ஓடெடுத்தாரே"

(வேதாந்த தத்துவக்கட்டளை.)

இதன் பொருள் :

மேற்கூறிய 96 தத்துவங்களைக் கொண்ட மக்களது தேகம் கோவிலுள் வாழும் தெய்வங்கள் போலாம். கோவிலுடைந்து பாழாயின் தத்துவங்கள் யாவும் நிலைத்திடாவென அறிகிறோம்.

இவ்வாறாகிய தொண்ணூற்றாறு தத்துவங்களைப் பற்றியும் அதில் வசிக்கும் ஆன்மாவைப் பற்றியும்; ஆசாயப்புகின் சரீரத்திற்கு அடிப்படையான பொருத்தங்கள் ஐம்பூதவம்சக் கூட்டங்கள் பஞ்சீகரணப்படுத்தும் பான்மையேயாகும்.

நிற்க; ஆன்மாவுக்கு நிலைக்களனாகவுள்ளது "சீவதாது" வென்றும் அஃது மூன்று பிரிவுகளைடைந்து, அதுவே மூன்று குணங்களைப் பெற்று சரீரத்தையும் சீவனையும் வளர்த்துக் காப்பாற்றி வருமெனவும் பழமையான நூல்களில் விரிவாகக் கூறியதோர் தீர்மானமாகும். மூன்று பிரிவுகளென்பது வளி, அழல், ஐயம் எனவும்; மூன்று குணங்களென்பது வாயு, தேயு, அப்பு எனவும் கூறுவர். சிலர் இதனை சத்துவ, இராசத், தாமதகுணங்களாகவும் கூறுவர்.

*N.B.*—The above seven chapters are meant for recapitulation of fundamental principles studied in the lower class and these points are considered essential for the study of Noi-Nadal and Noi-mudal Nadal.

## அத்தியாயம் VIII

### நாடியைக் குறிக்கும் தாதுவின் தத்துவ விளக்கம்.

நாடி என்றால் தாது எனவும், வாத, பித்த, ஐயங்களைக் குறிக்கும் தாது எனவும், நாடி நரம்பு ரத்தக் குழாயிலேற்படும் துடிப்பு எனவும் வழங்கும். நாடி என்னும் சொல் தச நாடிகளையும் குறிக்கும், தாது என்றால் ஆதி எனவும் மூலம் எனவும் பொருள்படும். தாது என்னும் சொல் உயிர்த்தாது, உடற்றாதுக்களையும் குறிக்கும். உயிர்த் தாதுவை ஆதிசிவ பரம் பொருளுக்குச் சமானமாகவும், மூலப் பிரகிருதிக்குச் சமானமாகவும் பாவிக்கிறபடியால் "**ஆதி**" என்றும் "**மூலம்**" என்றும் கருதுவர். அதுவே "**சீவாத்மா**" என்னும் பெயரோடு வழங்குவதாகவும் கூறுவர்.

நாடி என்பது இருதயத்தின் தொடர்பு. இருதயத்தின் தொழில் வேறுபாடுகளை நாடியின் மூலம் நாம் அறிகிறோம். இருதயத்தினுடைய நடை (heart beat) தேகஸ்திதிக்கு ஒத்திருக்கும். நாம் குறிப்பிடும் நாடி நரம்பு ரத்தக்குழாய் (Pulse) இருதயம்

இவ்விரண்டும் ஸ்தூல சூக்கும சரீரங்கள் யாவற்றுடன் ஒரே தொடர்பு உண்டு. தேகத்தின் கண் உண்டாம் நோயை இருதயம் தெரிந்துகொண்டு நாடிகளின் மூலம் நமக்கு அறிவிக்கின்றது.

சுருங்கக் கூறில், நாடியைக் குறிக்கும் தாது என்பது **உடலில் உயிர் தரித்திருப்பதற்குக் காரணமான சக்தி எதுவோ அதுவே தாது அல்லது நாடி எனப்படும்.**

சற்றுட விரிவாகக் கூறின் மக்கள் பிறவியில் உடல் ஒன்று, உயிர் ஒன்று உடல் ஸ்தூல பஞ்ச பூதம் உயிர் சூக்குமம். உடற்கு ஆதாரம் தேக பஞ்சீகரண பஞ்ச பூதம். உயிருக்கு ஆதாரம் உயிர்த்தாது எனப்படும். ஆதலால் உடலில் உயிர்த் தரித்திருந்து இயங்கச் செய்யும்சக்தி எதுவோ அதுவே உயிர்த்தாது எனவும், அதுவே சிவதாது, தாது, நாடி, **சிவன்** ஆன்மா சிவசக்தி சிவாத்மா ஆத்ம நாடி ஆத்ம சக்தி, குருநாடி எனப் பல பெயர்களால் வழங்கப் படும். உயிர்த்தாது என்பது ஒரே சீவசக்தியேயொழிய வேறில்லை என்பதைக் கீழ்க்கண்ட மேற்கோள்களால் அறியவும் :—

(மேற்கோள்.)

**உருத்தோற்றம்.**

"உருபொருள் தாங்குமுடலு முயிரும்
உடற்காதார மொன் பஞ்சபூதப்
பஞ்சீகரணப் பான்மையா மெனவும்
உயிர்க்காதார முயிர்த்தாதெனவும்
முப்பிரிவாகி முக்குணமணுகி
உடலையுமுயிரையுமோம்பிக்காத்து
வருமென முதுமறைவகுக்குந்துணிபே"

என்பதினாலும் ;

"காரப்பா உடலுக்குளுயிராய் நின்ற,
கருவான குருநாடி ஒன்றுகானே"

என்பதினாலும் ;

"தருநாடி தசநாடி திறமாய்திற்கும்
தாக்கு முடலுயிராக நிற்கும்பாரே"

என்பதினாலும் அறிகிறோம்.

மேலும், இதே சீவசக்தி மூன்று பிரிவுகளைடைந்து மூன்று குணங்களைப் பெற்று, உடலையும் உயிரையும், ஒன்றுபட In separable வளர்த்துக் காப்பாற்றி வருகிறதென்பதையுமறி கிறோம்.

மேற்கூறிய மூப்பிரிவும், மூக்குணமும், சீவசக்தியின் பிரபாவத் தால் தேகத்தின்கண் நிகழும் முக்கியமாகவுள்ள மூன்றுவிதத் தொழிலை நாம் புரிந்துகொள்ளும் பொருட்டு வளி, அழல், ஐயம் (வாதம்-பித்தம்-கபம்) என மூன்று பிரிவுகளாகவும், அவற்றால் பிரதிபலிக்கும் வாயு, தேயு, அப்பு பூதங்களின் செயல்களையும் குறிப்பதாகும். மூக்குணங்களென்று சொல்லியிருப்பதை சத்துவ, இராசத, தாமத குணங்களாகவும் பொருள் கொள்ள இடமுண்டு.

உயிர்த்தாதுவாகிய "சீவாத்மாவை", சிவபரம் பொருளுக்குச் சமானமாக ஒப்பிடுவர் என மேலே கூறியுள்ளோம்.

"சீவனென்னச் சிவனென்ன வேறில்லை"

—(திருமூலர்).

"அவனேதானேயாகிய அந்நெறி
ஏகனாகி இறைபணி நிற்க
மலமாயைதன் னோடு வல்வினையின்றே"

—(சிவஞானபோதம்).

"எப்பொருள் யார் யார் வாய் கேட்பினும்
அப்பொருள் மெய்ப் பொருள் காண்பதறிவ"

—(திருக்குறள்).

என்பதினாலுமறிக.

"சிவம்" என்னும் பரம்பொருள் தானே பிரம்மா, தானே விஷ்ணு, தானே ருத்திரனாக நின்று படைத்தல், காத்தல், அழித்தல் என்னும் தொழில்களை முறையே புரிவதுபோல, உயிர்த் தாதுவும் தானே, வளி, அழல், ஐயமாக நின்று உடல் உயிருக்கு வேண்டிய மூத்தொழில்களை வாயு, தேயு, அப்பு பூதங்களின் வடி வத்தில் புரிந்து வருவதாகவும் கூறுவர்.

மேலும் ;

"ஊனைப்பா உடலாச்சு உயிருமாச்சு
உயிர்போனாற் பிணமாச்சு உயிர் போமுன்னே
பூணப்பா வாத பித்தசேத்ம மத்தாற்
பூண்டெடுத்த தேகவளம் புகலுவேனே."

என்பதினாலும் ;

"நாடி என்றால் நாடியல்ல நாம்பில் தானே,
நலமாகத் துடிக்கின்றதுடிதானுமல்ல,
நாடி என்றால் வாத பித்தசிலேற்பனமுமல்ல
நாடி எழுபத்திரண்டாயிரந்தானுமல்ல
நாடி என்றால் அண்டசெண்டமெல்லாம்
நாடி எழுவகைத் தோற்றத்துள்ளாய்நின்ற
நாடியதுயாராய்ந்து பார்த்தாரானால்
நாடியுமும் பொருள்தெரிந்து நாடுவாரே"

—(ப. சி. சதகநாடி நூல்).

என்பதினாலும் ;

"தெளிந்துவிட்டநாடியது ஞானம் போலே
சிறப்பான புரிமூன்று மொன்றாய்க்கூடி,
மொழிந்திட்டவாதபித்தசிலேற்பனமென்று
மூன்கையில் பூண்டிருக்கு முறைமையாக."

—(சதகநாடி)

என்பதினாலும் ; நாம் தெரிந்துகொள்வது யாதெனில்; தொண்ணூற்றாறு தத்துவங்களையுடைய உடல் ஒன்று ; ஞானேந்திரியம், கருமேந்திரியம், மனசு ஆகிய பதினொன்றாற்கூடியதான சூக்கும மாகிய உயிர் ஒன்று (இதனை, பதினான்கு கருவி கரணாதிகளுடன் கூடிய உயிர் ஒன்று என்றும் சொல்லலாகும். கருவி கரணாதிக ளென்பது : சப்தம், பரிசம், ரூபம், ரசம், கந்தம், வசனம், கமனம், தானம், விசர்க்கம், ஆனந்தம், மனம், புத்தி, சித்தி, அகங்காரம் என்னும் பதினான்கு சூக்கும தத்துவங்கள் சேர்ந்தவையாம்).

உயிர் பிரிந்தால் உடல் பிணமாகிவிடும். அச்சமயம் உயிருள்ள காலத்தில் தேகத்தின்கண் ஏற்பட்ட நிகழ்ச்சிகள் ஒன்றும் நடை பெறா. இதுவே பிணம் எனப்படும்.

உயிர் போவதற்கு முன்னே தேகத்தின்கண் நிகழும் இயக்க சக்தியானது வளி, அழல், ஐயம் என்ற முத்தாதுகளின் தொழில் களால் தேகம் வளர்ச்சியடைகிறதென்ற விவரமும்; அச்சக்தியே நாடி அல்லது தாது வென்பதையும் அறிகிறோம்.

இதுபற்றியே தாது ஒன்றாயிருப்பினும் அதன் தொழில் காரணமாக மூன்று பிரிவுகளாக அல்லது ஒன்றாய்க்கூடிய மூன்று புரிகளாகப் பாவிக்கப்படுகின்றன. அவையே வளி, அழல், ஐயம் எனப்படும். இதே தத்துவம் அண்டரெண்டமெல்லாம் நால்வகைப் பிறப்பு ஏழுவகைத் தோற்றம், எண்பத்திநான்கு நூறாயிர எவ் வுயிர்க்கும் பொருந்துமென்பதையும் கூறியுள்ளார். எவ்வுயிர்க்கும் என்பது "எல்லாச் சீவன்களுக்கும்" என்பதேயாம். இதுவே நாடியைப்பற்றிய ஞானம் அல்லது அறிவு எனவும் கூறியுள்ளார். "அறிவே" "ஆன்மா" வாகும் என்பர்.

**"உயிர்த்தாது" வாகிய "சீவ சக்தி" என்ற ஒரே சக்தி தேகத்தில் வாத பித்த, கபமாகப் பிரியும் தத்துவம் எங்ஙனம்?**

(கண்ணுசாமியம்.)

வெண்பா.

1. "இருப்பான நாடி எழுபதோடீரா
யிரமானதேகத்தில் ஏலப் பெருநாடி
ஒக்கதசமத்தொழிலை ஊக்கதச வாயுக்கள்
தக்கபடி என்றே சாரும்."

2. "சாருந்தசநாடிதன்னில் மூலம் மூன்று
பேருமிடம் பிங்கலையும் பின்னலுடன்—மாறும்
உரைக்கவிரற்காற்றொட்டுணத்துமே நாசி
வரைச் சுழியோமையத்தில் வந்து".

3. "வந்தகலை மூன்றில் வாயுவாமபானனுடன்
தந்த பிராணன் சமானனுக்குஞ் சந்தமறக்
கூட்டுறவு சேர்த்தல் உறும் வாதம் பித்தம்
நாட்டுங்கபமேயாம் நாடு"

என்பதினால்:

(இதன் பொருள்.)

தேகத்தில் எழுபத்தீராயிரம் நாடி நாம்பு ரத்த குழாய் உந்திச் சுழியிலிருந்தெழுந்து கீழ் மேலாகப் பேய்ப்பீர்க்கும் குடுவையைப்

போல் ஆக்கை எல்லாம் பற்றி நிற்கும். இவற்றில் பெருநாடிக ளென அழைக்கப்படுபவை பத்து நாடிகள் (தச நாடிகள்). இப் பத்து நாடிகளும் பத்து வாயுக்களால் (தசவாயுக்களால்) உதவி புரியப்பட்டு (தூண்டப்பட்டு) தம் தம் தொழில்களைப் புரிகின்றன. அவற்றுள் ஏழு நீக்கி முக்கியமானவை மூன்று மூலாதார நாடி களாகிய இடகலை, பிங்கலை, சுழி முனை என்பவையாம். இம் மூன்றும் முறையே அபானன், பிராணன், சமானன் என்னும் வாயுக்களின் கூட்டுறவால் தொழில் புரியும்போது வாத பித்த கபம் (வளி, அழல், ஐயம்) என்ற மூன்று புரிகளான சக்திகள் தோன்று வதாகக் கூறப்பட்டுள்ளது.

**வாத, பித்த, கபம்** (வளி, அழல், ஐயம்) இம்மூன்றும் வாயு, தேயு, அப்பு பூதங்களின் செயல் அல்லது கூறுபாட்டை அடைவதெங்ஙனம்?

"நிலம் நீர் தீவளி விசும் போடைந்துங்
கலந்த மயக்க மூலகமாதலின் ".

என்பது போலவும்;

"பாரப்பா பூதமைந்து மண் நீர் தேயு
பரிவாயுவாகாயமைந்தினாலே
சேரப்பாசடமாச்சு "

என்பதினாலும்;

"தலங்காட்டியிந்தச்சடமான வைம்பூதம்,
நிலங்காட்டி நீர்காட்டி நின்றிடுந் தீ காட்டி
வலங்காட்டி வாயுவால் வளர்ந்தே யிருந்த
குலங்காட்டி வானிற் குடியாயிருந்ததே".
"இருந்திடுமிவ்வைந்தாலெடுத்த சடமிது "

என்பதினாலும்; பிரபஞ்சம் பஞ்சபூதமயம் என்பது போலத் தேகமும் பஞ்சபூதமயம் என்பதை அறிகிறோம்.

"பிரிந்திடும் மாமிசம் பிருதிவி
யின் மயமாகும்,
சொரிந்திடும் அமிர்த நீர் சொற்
குறி அப்புவாம்,
வருந்தியவன்வினவனமாய்
வெதுப்புமே".

எனவும் ;

"வெதுப்பதுடனே விடுபட்டு
நாசியில்,

எதுப்புற்று நிற்குமிது காணும்
வாயுவாம்,

கதுப்பொத்தே எல்லாங்கவளத்
திடமிட்டு

மதுப் பொத்து நிற்கும் வானின்
வளப்பமே"

(திருமூலர் தாடி.)

என்பதினாலும் ;

தேகத்தின்கண் மாமிசம் போன்ற கடின உறுப்புகள் யாவும் பிருதிவியின் கூறு எனவும் ; அமிர்தம் போன்று நீர்மயமாகயிருப் பவை அப்புவின் கூறு ; உஷ்ணத்தைக் காட்டுவது தேயு எனவும் ; மூக்கு வழியாய் மூச்சு வாங்கல் விடுதல் வாயும் எனவும் ; எல்லா வற்றிற்கும் இடமளிப்பது ஆகாயக்கூறு எனவும் அறிகிறோம்.

நிற்க ; இதனை ஆதரித்துச் சதக நாடியிலும் கீழ்க்கண்டபடி கூறியுள்ளார் :—

"சேரப்பாசடமாச்சு மண்ணின்கூறு,
செறிமயிர் தோல் எலும்பிறைச்சி நரம்பைத்தாகும்,

நேரப்பா அப்புவின் கூறுதிரமச்சை
நீர் மூளை சுக்கிலமோட ஞ்சாகும்

சாரப்பாதீக்கூறு பயமாங்காரங்
கடுஞ்சோம்பு நித்திரை மைதுனங்களுஞ் சே".

"அஞ்சானவாயுவின் கூறிருத்தலோடல்
யவை நடத்தல் கிடத்தலுடனிற்றலஞ்சாம்,

அஞ்சாகுமாகாசக்கூறு காமமதிற்குரோதம்,
உலோப மோக மதமஞ்சாகும்."

இதிற்கூறிய இருபத்தைந்து ஐம்பூதக்கூறுபாடுகள் தேகத்தின் புறக்கருவிகளெனப் பெயரிட்டனர்.

மேலும் திருமூலர் நாடி கூறுவதாவது :—

"வளப்பங்கேள் பூமி வசிக்கும் நாசியில்,
களப்பமாம் வன்னிதானுறுங் கண்ணினில்
அளப்பமாமப் போவடங்கிடும் நாவினில்,
பளப்ப நல்வாயுவும் பரிசிக்குமெங்குமே"
"எங்கிய காதிலிருந்துறுமாகாயம்".

என்பதினால் ;

மூக்கிலிருந்து வாசனையை அறிவிப்பது பூமி எனவும் ; கண்ணிலிருந்து பார்வையை அறிவிப்பது தேயு எனவும் ; நாவிலிருந்து சுவையை அறிவிப்பது அப்புவெனவும் ; தோலிலிருந்து பரிசத்தை உணர்த்துவது வாயுவெனவும் ; காதிலிருந்து சப்தத்தைக் கேட்க வைப்பது ஆகாயம் எனவும் அறிகிறோம்.

அதற்கு மேல்,

"பொங்கியிரைந்துக்குட் பொல்லா மூன்று தான்
தங்கியவாயுச் சமர்த்தன் மகாவதம்,
பங்கியவன்னியார் பகுந்தது பித்தமே"

என்பதினாலும் ;

"பகுந்தசலத்திற் பரிசிக்கும் நல் கலையம் ;
வகுந்தயிம்மூன்றால் வளர்ந்தது நோயெல்லாம்"

என்பதினாலும் ;

நாம் தெரிவது யாதெனில் ; இவ்வாறு அமைந்த ஐம்பூதமயமான தேகத்தில் முக்கியமாகத் தொழில் புரிபவை மூன்று பூதங்களாலான முக்குற்றங்களேயாகும் ; அவை :—

வாயுவின் கூறு வாதம் (வளி)
தேயுவின் கூறு பித்தம் (அழல்)
அப்புவின் கூறு கபம் (ஐயம்)

எனக் கூறுவர். இம்மூன்று பூதங்கள் நீங்கலாக மற்ற இரண்டு பூதங்களில் "விண்" (ஆகாயம்) வாதத்திற்குரிய வாயுவோடு கூடும். "மண்" (பிருதிவி) கபத்திற்குரிய அப்புவோடு சேருமென அறிக. வளி, அழல், ஐயம் மூன்றும் மூறையே வாயு, தேயு, அப்பு என்னும் பூதங்களின் குணங்களைப் பெறுகின்றன. அன்றியும், முக்குற்றங்களும் (வளி, அழல், ஐயம்) மூறையே அபானன், பிராணன்,

சமானன் என்னும் வாயுக்களால் இடகலை, பிங்கலை, சுழி முனை நாடிகள் தூண்டப்படும்போது உண்டாவனவை என்பதை ஞாபகப் படுத்திக்கொள்ள வேண்டும்.

**"சேத்துமந் தண்ணீர், பித்தந்தீ காற்றுவாதமாமே"** என்பதினாலும் அறிகிறோம்.

(குறிப்பு)

தண்ணீர் என்றும், தீ என்றும், காற்று என்றும் கூறியிருப்பதை வெளித்தோற்றமாகவுள்ள தண்ணீர், தீ, காற்று என்பதாகக் கொள்ளல் கூடாது. உபமானமாகக் கூறியதே யொழிய வேறல்ல. வெளித்தோற்றமாகவுள்ள தண்ணீர், தீ, காற்று முதலியன மிகுந்தாலோ, குறைந்தாலோ எவ்விதம் கஷ்டத்திற்குள் ளாவோமோ, அதே விதமாக தேகத்தின் கண் நிகழும் முக்கியமாக வுள்ள மூன்று பூதமயமான வாயு, தேயு, அப்பு என்னும் சத்துக்கள் அல்லது ஐம்பூதமயமான உணவுச் சத்துக்களைப் பிரதிபலிக்கும் வளி, அழல், ஐயம், சுத்தம் தொழிலில் மிகுந்தாலும் குறைந்தாலும் நோயை உண்டாக்குமென அறிக! இவையே வளி, அழல், ஐயம் என்னும் மூன்று சூற்றங்களும் வாயு, தேயு, அப்பு பூதங்களின் கூறுபாடுகளையுடையவை என்பதற்கு அத்தாட்சியாகும். இச் சத்துக்கள் சப்த தாதுக்களையும் போஷிக்கக்கூடியவை. ஸ்தூலமாகிய சப்த தாதுக்களிடத்தே சூட்சுமமாக நின்று தத்தம் தொழிலை நிகழ்த்தும் பாவனையே வளி, அழல், ஐயம் என்னும் மூக்குற்றங்களைக் குறிக்குமென அறிக!

**ஓரே "சிவசக்தி" மூன்று விதத் தொழில்களைப் புரியும் கிரமத்தினை அறிவதெங்ஙனம்?**

"ஆரை" என்பின் மேலோடும் நாடி நரம்பு சுத்தக்குழாயின் மேல் விரல்களை வைத்து அழுத்தியும் தளர்த்தியும் பார்க்கும் போது 1 : ½ : ¼ என்ற மாத்திரையளவில் தேகம் நன்னிலை யிலிருப்பதைச் சித்தர்கள் கணக்கிட்டிருக்கிறார்கள். கணிக்கும் விரல்கள் கருவி போன்றவை.

(மேற்கோள்)

"குறியாய் வலக்கரங்குவிந்த பெருவிரல்,
வறியாயதன் நீழ் வைத்திடு மூவிரல்
பிரிவாய் மேலேறிப் பிலத்தவாதமாம்
அறிவாய் நடுவிரலமர்ந்தது பித்தமே".

என்பதினாலும்;

"பித்தத்தின் கீழே புரண்டதையமாம்,
உற்றுற்றுப் பார்க்கவோர் நரம்பேயோடிடும்
பத்தித்த மூவரும் பாய்கின்ற வேகத்தால்
மத்தித்த நாளம்போல் வழங்கும் நரம்பிதே".

(திருமூலர் நாடி)

என்பதினாலும்;

"கரிமுகனடியைவாழ்த்திக்
கைதனில் நாடி பார்க்கில்,
பெருவிரலங்குலத்தில்
பிடித்தடி நடுவே தொட்டால்,
ஒரு விரலோடில் வாதம்
உயர்நடுவிரலிற் பித்தம்,
திருவிரல் மூன்றிலோடில்
சிலேத்தும் நாடி தானே".

(அகத்தியர் நாடி)

என்பதினாலும்;

பெருவிரல் பக்கமாக மணிக்கட்டுக்கு ஒரு அங்குலத்திற்கு மேல் ஆரை என்பின் மேலோடும் நாடி நரம்பு ரத்தக்குழாயின்மேல் மூன்று விரல்களை வைத்துச் சற்று அழுத்தியும் தளர்த்தியும் பார்க்க ஆள்காட்டி விரலாகிய முதல் விரலில் உணர்த்துவது வாதம் எனவும்; நடுவிரலில் உணர்த்துவது பித்தம் எனவும்; பெளத்திர விரலில் உணர்த்துவது கபம் எனவும் அறியவும். தவிர ஒரே நாடி நரம்பு ரத்தக்குழாயிலேயே மேற்கண்ட பிரகாரம் நாடியின் துடிப்பை நாம் அறியக் கூடியதா. நாட்கள் மூன்றும் ஏகோபித்து ஓடும் வேகத்தில் மூன்று வித அளவில் நம் விரல்களில் துடிப்புகள் உணர்த்துவதையும் அறியக்கூடும். நாடி ஓடிக்கொண்டிருக்கும் உறுப்பு குழல் போன்றது எனவும் கூறியுள்ளார்.

நாடிகளின் மாத்திரையளவு :—

1. வழங்கியவாதம் மாத்திரையொன்றாகில்
தழங்கியபித்தந்தன்னிலரைவாசி
அழுங்குங்கபந்தானடங்கியே காலோடில்
பிழங்கிய சீவர்க்குப் பிசகொன்றுமில்லையே."

(குணவாகட நாடி).

2. "வளி வன்னியைக்குவழங்கிடு மாத்திரை
ஒன்றரை காலாயோதினர் சித்தரே."

Manuscript

3. "மெய்யளவு வாதமொன்று
மேல்பித்தமோரரையாம்
ஐயங்காலென்றே அறி."

(கண்ணுசாமியம்).

என்பதினால்;

வாதம் ஒரு மாத்திரை, பித்தம் அரை மாத்திரை, கபம் கால் மாத்திரை விகிதமாக மூன்று நாடிகளும் முறையே தன்னிலையில் காண்பிக்கும் அளவாகும்.

**மாத்திரையின் இலக்கணமென்ன?**

1. "செய்கின்ற நாடி பெருவிரலின் மேலாய்,
திருந்திழை மூன்றங்குலத்தினடுவதாக
தைகின்ற கோதுமையரிசி போலச்
சர்வம் வியாபித்திருக்குமதுதான் கூறில்"

* * *

என்பதினாலும்; (குணவாகட- நாடி-).

2. * * *

* * *

அரைந்தார் முனிவர் யளவுகேள் தோற்றும்
விரை கோதுமையாம்வியந்து".

(கண்ணுசாமியம்).

என்பதினாலும்;

ஒரு மாத்திரை என்பது ஒரு கைநொடி அல்லது கண்யிமைக்கும் காலஅளவு எனச் சிலரது அபிப்பிராயமாக யிருப்பினும், சித்த மருத்துவ நூல்களை ஆராயுங்கால், மாத்திரை என்றால் நாடியின் துடிப்பு ஒரு கோதுமையரிசிப் பிரமாணம் உயரம் எழுந்து அடங்குவதற்குரிய கால அளவு எதுவோ அதுவே நாடி நடையின் மாத்திரையளவைக் குறிக்குமென அறிக;

**சுபாவமான நிலையில் மூன்று நாடிகளின் மாத்திரையளவு வித்தியாசப்படுவதின் காரணம் கூறுகிறார் :**

(மேற்கோள்—கண்ணுசாமியம்.)

வெண்பா.

1. "இருப்பான நாடி எழுபதோடீரா
யிரமானதேகத்தில் எலப்—பெருநாடி-
ஒக்கத சமத்தொழிலை யூக்கதசவாயுக்கள்
தக்கபடியென்றே சாரும்."

2. "சாருந்தசநாடி- தன்னில் மூலம் மூன்று
பேருமிடம்பிங்கலையும் பின்னலுடன்—மாறும்
உரைக்கவிரற்காற்றொட்டுணர்த்துமே நாசி
வரைச்சுழியோமையத்தில்வந்து."

3. "வந்தகலை மூன்றில் வாயுவாமபானனுடன்
தந்த பிராணன் சமானனும்—சந்தமுறக்
கூட்டுறவுரேசித்தல் கூறும் வாதம் பித்தம்
நாட்டுங்கபமேயாம் நாடு."

4. "நாடுமிடகலை நானான்குயங்குலமாய்
ஓடுமே பிங்கிலையுமூய்யபத்—தோடிரண்டு
போக நடுச்சுழியோ போற்றவு பாயமூமாய்ப்
பாகம் பகிர்ந்திடுமே பார்."

5. "பாருங்கலை மூன்றில் பற்றிய வாயு மூன்று,
சாரும் வன்மைக் குறையான் சாற்றக்கேள்—தேருமதின்
மெய்யளவுவாதமொன்று மேல் பித்தமோரையாம்
ஐயங்காலென்றே அறி".

என்பதினால் மூன்று நாடிகள் உண்டாகும் விதமும், மாத்திரைக் கிரமமும், மாத்திரையளவு ஒன்றுக்கொன்று வித்தியாசப்படுவதன் காரணமும் விளக்கியுள்ளார்.

(இதன் பொருள்)

தேகத்தில் எழுபத்தீராயிரம் நாடி நரம்பு ரத்தக் சூழாய்கள் (நாடிகள்) உள்ளன. அவற்றுள் பெருநாடி எனச் சொல்லப் பட்டவை பத்து. இவை தச நாடி எனப் பெயராகும். இப் பத்து நாடிகளையும் தொழில் புரியச் செய்வதற்குப் பிராணாதி வாயுக்கள் பத்து ஏற்பட்டிருக்கின்றன. இப் பத்து நாடிகளுள் ஏழு நீக்கி

மூக்கியமான மூலாதார நாடிகள் என வழங்கும் இடகலை, பிங்கலை, சுழிமுனை ஆகிய மூன்றும் முறையே அபானன், பிராணன், சமானன் என்னும் வாயுக்களின் உதவியால் (கூட்டுற வால்) தொழில் புரியும்போது, இடகலையும் அபான வாயுவும் சேர்த்தலால் வாதமும்; பிங்கலையும் பிராண வாயுவும் சேர்த்த லால் பித்தமும்; சுழிமுனையும் சமான வாயுவும் சேர்த்தலால் கபமும்; ஆகிய மூன்று நாடிகள் அல்லது மூன்று புரிகளான சக்திகள் தோன்றுவதாக முன்னமேயே ("உயிர்த்தாது" வாத-பித்த-கபமாகப் பிரியும் தத்துவம் எங்ஙனம் என்பதில்) கூறியுள்ளோம்.

இப்போது மாத்திரையின் அளவு வித்தியாசப்படுவதற்கு மூக்கியமான காரணத்தைக் கூறுமிடத்து: இடகலை அபானன் சேர்க்கையால், பிராண வாயு (மூச்சு, சுவாசம்) இடது நாசியின் வழியாய் 16 அங்குலம் பாய்ந்தும்; பிங்கலை பிராணன் சேர்க்கை யால் வலது நாசியின் வழியாக மூச்சு (சுவாசம்) 12 அங்குலம் பாய்ந்தும்; சுழிமுனை சமானன் சேர்க்கையால் மூச்சு இரண்டு மூக்குத் துவாரங்களுக்கு மிடையேயிருந்து உபாயமாகவும் இரண் டிலும் பகிர்ந்தோடும் எனவும்;

இடகலை, பிங்கலை, சுழிமுனை ஆகிய மூன்று கலை நாடி களும் முறையே அபானன், பிராணன், சமான வாயுக்களின் சேர்க்கையால் மூக்குத் துவாரங்களில் சுவாச நடை உண்டாகும் போது, மேலே கூறிய பிரகாரம் ஒன்றுக்கொன்று வன்மை, குறைவு ஏற்படுவதன் காரணமாக வாதம் மாத்திரை ஒன்றாகவும்; பித்தம் மாத்திரை அரையாகவும்; கபம் மாத்திரை காலாகவும் சுபாவமான நன்னிலையில் நாடிகளின் மாத்திரையளவு உண்டாவதாகவும் வித்தியாசமான அளவு காணப்படுவதாகவும் கூறியுள்ளார்.

**"உயிர்த் தாது" வென்னும் "சீவாத்மாவை" சிவ தத்துவம் அல்லது சிவபரம் பொருளுக்குச் சமானமாக ஒப்பிடுவது எங்ஙனம்?**

1. சீவனென்னச் சிவனென்ன வேறில்லை"

(திருமூலர்).

2. "அவனே தானே யாகிய அந்நெறி
எனாகி இறைபணி நிற்க
மலமாயை தன்னோடு வல்வினையின்றே"

(சிவஞானபோதம்.)

என்பதினாலும்;

3. "எப்பொருள் யார் யார் வாய் கேட்பினும்
அப்பொருள் மெய்ப்பொருள் காண்பது அறிவு"

(திருக்குறள்.)

4. "அரியானை யந்தணர்தம் சிந்தையானை,
யருமறையில கற்றானை யணுவை யார்க்கும்,
தெரியாத தத்துவனைத் தேனைப் பாலைத்
திகழொளியை தேவர்கடங்கோனை மற்றைக்
கரியானை நான்முகனைக் கனலைக் காற்றைக்
கனகடலைக் குலவரையிற் கலந்து நின்ற
பெரியானை பெரும்பெற்ற புலியூரானை

* * *

என்பதினாலும்;

5. "அங்கிங்கெனாதபடி எங்கும் பிரகாசமா
யானந்த பூர்த்தியாகி,
அருளொடு நிறைந்ததெது
தன்னருள் வெளிக்குள்ளே
அகிலாண்ட கோடி எல்லாம்;
தங்கும் படிக்கிச்சை வைத்து யிர்க்குயிராய்
தழைத்து நின்றது * * * "

என்பதினாலும்;

6. "ஐம்பத் தோரெழுத் தெல்லாம்
மோரெழுத் தேயாகி
அணட பிண்டந் தானாகி யமர்ந்த நாதன்
எண்பத்து நான்கு நூறாயிர லெட்சமுயிரே யாகி
ஏகமது தானாகி நின்றார் பாரே"

என்பதினாலும்;

எல்லாப் பொருள்களிலும் சிவன் இருக்கிற தென்பதையும், கடவுள் நீக்கமின்றி ஒவ்வொரு வஸ்துவிலும் தன்இச்சை கொண்டு நிறைந்திருக்கிறாரென்றும்; வஸ்து ஒன்று; அதுவே எல்லாப்

பொருள்களிலும் கனல், காற்று, நீர் இவற்றிலும் கூடக் கலந்து நிறைந்து நிலையாய் நிற்கின்றதென்பதையும்; அதுவே மெய்யான பரம்பொருள் என்பதையும் அறிகிறோம். பிரபஞ்சத்தின் தோற்றமும் ஒடுக்கமும் ஒரே வஸ்துவாகிய சிவ பரம்பொருளின் கருணையாலேயே நடைபெறுகிறதென்பதும் மனிதன் அதற்கு விலக்கில்லை என்பதையும் ஞாபகத்தில் வைத்துக்கொள்ளல் வேண்டும்.

"நான்" வேறு "கடவுள்" வேறு என இன்றி ஒருவனாய் ஆணவம், கன்மம், மாயைகளை நீக்கி நிற்கில் அந்நிலையில் உயிர்க்குயிராய் நிற்கும் சிவனே கடவுள் ஆவார் என்னும் அறிவு தானே உண்டாகும்.

தேரையர் மருத்துப் பாரதத்தில் கூறிய கீழ்க்கண்ட மேற்கோள் பற்றி சற்று ஆராய்வோம் :—

"வாதமாய்ப் படைத்துப் பித்த வன்னியாய்க் காத்துச் சேட்ப
சீதமாய்த் துடைத்துப் பாராந் தேகத்திற்குடியா மைந்து
பூதவிந்தியாமைவர் பூசை கொண்டவர்பால்விந்து

நாதமாங் கிருட்டிண மூர்த்தி நமக் கென்றும் துணையாவாரே"

எனக் கூறியுள்ளதை சித்த மருத்துவத்தில் ஐம்பூதப் பொருள்களாலாக்கப்பட்ட எல்லாப் பொருள்களிலும் இறைவன் நீக்கமின்றி நிலைத்துத் துணையாய் நின்று, அவற்றினை வாதமாய்ப் படைத்தும், பித்தமாய்க் காத்தும், ஐயமாகத் துடைத்தும், உயிருக்குயிராகயிருந்து அவைகளால் போற்றப்படுவது போலக் கடவுளாகிய கிருட்டிணன் ஐவராகிய பாண்டவரிடத்தில் இணைபிரியாது உயிர்க்குயிராய் நின்றனன் எனப் பொருள்பட கூறியுள்ளார் நூலாசிரியர்.

ஆனால் இங்கே நாம் கவனிக்க வேண்டியது யாதெனில்: கிருட்டிணன் பஞ்சபாண்டவரிடத்தில் உயிருக்குயிராக நின்றனன் என்று மட்டிலும் மேலே சொல்லப்பட்டிருக்கிறதே யொழிய அவர்களிடத்தில் படைத்தல், காத்தல், அழித்தல் எவ்வித மென்பது கூறப்படவில்லை. கவனிக்கவும். பாண்டவர்களை மற்ற சிவாத்மாக்களைப் போலவே பாவிக்க வேணும். ஆனால் கிருஷ்ண அபிராகிருத சரீரத்துடன் கூடிய கடவுள் (பகவான்) என்பதும்; அவரது கடமை ஆக்கல், காத்தல், அழித்தல் என மூன்றாகும். அப்படிப்பட்ட கிருட்டிண பகவான் இங்கே பாண்டவர்களிடம்

அதிகமான நட்புக் கொண்டிருந்தார் என்பதும்; அவரது (1) ஆக்கல் சக்தியைக் குறிப்பிடும் போது பஞ்சபாண்டவர்களுக்குக் கிருஷ்ணன் ஊக்கம், உதவி, உற்சாகம், தைரியம் ஆகியவற்றைக் காட்டியதேயாகும். இதனால் பாண்டவர்களுக்கு பலம் அதிக மாயிற்று எனலாம். (2) காத்தல் சக்தி என்பது முன் காட்டிய ஊக்கம், உதவி, உற்சாகம், தைரியம் இவற்றினாலேற்பட்ட பலத்தை நிலைக்கச் செய்தல் எனலாம். (3) அழித்தல் சக்தி என்பது தனது ஆக்கல், காத்தல் கடமையான தொழில்களுக்குச் சத்துரு ஏற்பட்டால் அந்த சத்துருக்களாகிய கௌரவர்களை அழித்தலேயாகும். இதுவே நோயை ஒழிப்பது போலாகும். இதுவே உவமை உவமானமுமாகும்.

பொதுவாக "ஆக்கல்" என்பது சிவபரம்பொருளாகிய பகவான் சீவாத்மாவுக்கு ஸ்தூல சூக்கும தேகத்தை அளித்தலேயாகுமென்றும் (தனுகரணம்); "அழித்தல்" என்பது அதே சீவாத்மாகிய சூக்கும தேகத்தை மறுபடியும் மாயையில் ஒடுங்கச் செய்வது என்றும் "காத்தல்" என்பது ஸ்தூல சூக்கும தேகத்தோடு படைக்கப் பட்ட சீவாத்மாவுக்கு புவன போகங்களையும் கொடுத்து நல்வினை தீவினைகளுக்கேற்றவாறு அனுபவிக்கச் செய்தலுமாகுமென சைவ சித்தாந்த நூல்கள் கூறுகின்றன.

இங்கே வாத, பித்த, கபம் என்ற மூக் குற்றங்களுக்கு ஒப்பிட்டு ஆக்கல், காத்தல், அழித்தல் தொழில்களைக் கூறியிருப்பதால் அதற்கேதுவான முறையில் நாம் ஆலோசிக்க வேண்டும்.

ஆகவே கடவுள் ஒன்று; செயல்கள் மூன்று எனப்படும். ஆக்கல், காத்தல், அழித்தல் போன்ற செயல்களை அதே கடவுள், தானே பிரம்மா, தானே விஷ்ணு, தானே சிவன் என்ற திருநாமங்களோடு முறையே மூன்று தொழில்களையும் ஜகத்தின் காரணமாகப் புரிந்து வருவதாகவும்; அவ்வாறே சித்த மருத்துவத்திலும் அமைந்து உடலையும், மனதையும் இயங்கச் செய்யும் சிவன் சிவத்திற்குச் சமானமாகவும்; வாதம், பித்தம், கபம் என்னும் மூத் தொழில்கள் இயங்குவதை முறையே ஆக்கல், காத்தல், அழித்தல் தொழில்களுக்குச் சமம் எனவும் பெயர்களையமைத்து, சிவத்தைப் போலவே சீவனும் உடற்கட்டாகிய சப்த தாதுக்களுக்கு வேண்டிய பொருள்களை ஆக்குவதற்கான சக்தியையும்; நிலைத்தற்கான சக்தியையும்; அழித்தற்கான சக்தியையும் பெற்று; அவை முறையே வளி, அழல், ஐயம் எனப் பெயர்களைப் பெற்றன.

அப்பேர்ப்பட்ட சக்தி யாதென்றால், உடற்கு வன்மை தர வேண்டிய குருதி நுண்ணணுக்களைத் தோற்றுவிப்பதும், நிலைக்கச் செய்வதும, அழிக்கச் செய்வதுமான தொழில்களை உடலில் உயிருள்ள வரையில் உலகப் பொருள்கள் தோன்றுவதும், நிலைத்திருப்பதும்; அப்பால் அழிவதுமாகிய தன்மையைப் போல் தொழில்கள் புரியும் எனவும் சித்த மருத்துவ நூலில் கூறியுள்ளார்கள். மற்ற சித்தர் நூல்களில் குருதியில் மட்டிலும் நுண் அணுக்களிருப்பதாக கூறப் பட்டிருப்பதாகத் தெரியவில்லை.

**விளக்கம் (வேறு).**

1. உலகப் பொருள்கள் தோற்றுவிப்பதும், நிலைத்திருப்பதும், அப்பால் அழிவதும் ஆகிய இவை கடவுளின் தொழில்கள்.

2. ஒரே கடவுள், தானே பிரம்மாவாகவும், விஷ்ணுவாகவும், சிவனாகவும் (மும்மூர்த்திகளாக) யிருந்து முத்தொழில்கள் புரிவ தாக நூல்கள் வாயிலாக அறிகிறோம்.

3. இதே மாதிரியாக உடல், உயிர் தோன்றுவதும், நிலைத்திருப் பதும், அப்பால் அழிவதுமாகிய தொழில்கள் "**உயிர்த்தாது**" வால் ஏற்படுகின்றன.

4. ஒரே உயிர்த்தாது தானே வாத வாயுவாகயிருந்து உடலில் உயிரைத் தோற்றுவிப்பதும், பித்த வன்னியாகயிருந்து அதனைக் காப்பாற்றுவதும், சேத்தும சீதமாகி அதனை அழிப்பதுமான முத் தொழில்கள் நிகழ்வதாகக் கூறவேண்டும்.

5. இம்மட்டிலும் கடவுளுக்குச் சமானமாக சிவனும்; இவ் வீரண்டினாலும் நடைபெறக் கூடிய முத்தொழில்களையும் உவமை யாகக் கூறினோம். இது ஆதி செய்வீகமாக அறியக்கூடிய விஷயம். ஸ்ரீ கிருஷ்ண பகவானைச் சர்வேசுபரனாகக் கூறிய விடத்து, அவரது பிரபாவம் முத்தொழில்களென்றும்; அதே மாதிரியாக சிவாத்மாவாகிய உயிர்த்தாதுவும் மூன்று தொழில் களை மேற்கூறியவாறு புரிகிறதாகவும் கூறப்பட்டுள்ளது.

பஞ்ச பாண்டவர்களிடத்தில் ஸ்ரீ கிருஷ்ண பகவான் காட்டிய முத்தொழில்கள் இன்னதென்பதையும் ஒருவாறு புரியத்தக்க வகை யில் மேலே கூறியுள்ளோம்.

6. "விந்துநாதமாங் கிருட்டிணமூர்த்தி"—எனத் தேரன் கூறிய தன் கருத்து என்ன?

விந்து நாதம் கலந்து உருவாகும் பொருள்கள் யாவும் "சிவ மயம்" என்பர்.

"சீவனென்ன சிவனென்ன வேறில்லை" என்பதாலும்;

"அவனே தானேயாகிய அந்நெறி", என்பதாலு மறிக! ஐம்பூதமயமாயும் ஐந்து இந்திரியங்களுக்குச் சமானமாயுள்ள பஞ்சபாண்டவர்களுக்கு உயிர்க்குயிராகயிருந்த பகவான் கிருட்டிணமூர்த்தி, விந்துநாதம் கலந்து உருவாகிய வஸ்துவுக்குச் சமானமென்பர்.

வாதம், வைத்தியம், யோகம், ஞானம் என்னும் மூப்பு வகை யாவற்றிற்கும் ஏற்ற அறிவும், செயலும் புரியவேணுமென்றால் நாத விந்துச் சரக்குகளின் மகிமைகளிலே அறிந்து மருந்துகள் தயாரித் தல் வேண்டும். இதனைக் கீழ்க்காணும் மேற்கோள்களால் அறிக :—

1. "வெல்லும் புவியில் விளங்கிய தாபரம்
புல்லிடுஞ் சங்கமம் பொறியிடும் விந்தே"

2. "விந்தினாலல்லோ மேதினியாச்சு
செந்துக்களெல்லாஞ் சிவமயமாச்சு,
வந்திடும் நாதம் மௌனம் கலந்திது
சிந்தையிலுள்ளத் தெளிவாகச் செப்புமே"

என்பதினாலும்;

3. "வாமென்ற நாதமதில் விந்து சேர்க்க,
மாருதம் போல் வயித்தியமெல்லா மிதற்குள்ளாகும்,
காமென்ற நாதவிந்தால் சடமுமாச்சு
கருநியதோர் சித்தியெல்லாம் நாத விந்தாலாச்சு
நாதவிந்தின் செயலறியாச் சண்டாளன் சட்டு மாள்வாள்"

என்பதினாலும் அறிக.

**7. இதற்கு மேல், தேகத்தில் நிகழும் முத்தொழில்களும் எங்ஙனம் நடைபெறுகிறதென்பதை நாம் தெரிந்து கொள்ளல் வேண்டும் :—**

சித்த மருத்துவ நூலில் உடற்கு வன்மை தரக்கூடிய குருதி நுண் அணுக்களைத் தோற்றுவிப்பதும், நிலைக்கச் செய்வதும், அழிக்கச் செய்வதுமான முத்தொழில்கள் உயிர்த்தாதுவின் சக்திகளான வாத-பித்த-கபம் எனக் கூறப்பட்டிருக்கும் உதாரணம் பொருத்தமன்று.

ஏனெனில், குருதியில் நுண் அணுக்கள் யிருப்பதாக சித்தர் நூல்கள் வேறு எதிலும் காணவில்லை. எனினும், வார்த்தையளவில் குருதியில் நுண் அணுக்கள்யிருப்பதாக வைத்துக்கொள்வோம். நுண் அணுக்களைத் தோற்றுவிப்பது குருதியில் மட்டுமானால் அவற்றை நிலைக்கச் செய்வதும், அழிப்பதும் எங்கே? எத் தாதுவில்? எப்போது? ஆகிய விவரங்கள் குறிக்கப்பட்டவில்லை. குருதியில் நுண் அணுக்களைத் தோற்றுவிப்பதாகவே வைத்துக்கொள்வோம். அப்படி யானால் அவைகளை நிலைக்கச் செய்வதும், அழிக்கச் செய்வதுமான தொழில்களும் கூடக் குருதியில் நடைபெறுகின்றனவா? அப்படியானால் ஏழு தாதுக்களும் தேகத்தில் ஏழு கருவிகளாக யிருந்து தொழில்கள் புரியும் போது குருதிக்கு மட்டிலும் ஆக்கல், காத்தல், அழித்தல் என்னும் முத்தொழில்கள், ஒரு மிக்க யிருப்பதாகக் கூறுவது எங்ஙனம் பொருந்தும்? எங்ஙனம் சாத்தியமாகும்? பல நூல்களை ஆராயுங்கால் ரச தாது முதல் சுக்கில தாது ஈறாக ஏழு உடற்றாதுக்களிலும் முத்தொழில்களும் நடைபெறுகின்றன வென்பது தெரியவருகிறது.

சப்த தாதுக்களிலும், ஐம்பூதப் பொருள்களாலான சத்துக்கவிருக்கின்றன, எத்தாதுக்களில் எப்பூதக்கூறுப் பொருள்களாலான எச் சத்துக்கள் மிகுதியோ குறைவாகவோ அல்லது இயற்கையளவாகவோ யிருக்கின்றனவோ, அவற்றிற்குத் தகுந்தாற்போல் சத்துக்கள் சப்த தாதுக்களில் கிரகிக்கப்படும்.

அவற்றுள் முக்கியமானவை வாயு-தேயு-அப்புப் பொருள்களாலான சத்துக்களேயாகும். இவற்றை முறையே வாதசத்து, பித்த சத்து, கபச்சத்துக்களென அழைக்கப்படும்.

இச்சத்துக்களைக் கவர்ந்து செல்லுவது முறையே வாயு, தேயு, அப்பு பூதங்களேயாகும். இவை இரச தாது முதல் சுக்கில தாது ஈறாக எல்லாத் தாதுக்களையும், அவ்வவற்றின் தேவைக்குத்

தகுந்தவாறு வளர்க்கின்றன. இவ்விதச் சத்துக்கள் சப்த தாதுக்களிலும் பரவச் செய்வதற்கு ஆதாரமாகயிருப்பது "உயிர்த்தாது" வேயாகும்.

இதுவே இடகலை, பிங்கலை, சுழிமுனை என்னும் மூன்று மூலாதார நாடிகளாகி முறையே அபானன், பிராணன், சமானன் என்னும் மூன்று வாயுக்களுடன் கூட்டுறவு ரேசித்தலால் (தூண்டப் படுவதால்) வாத-பித்த-கபம் என்ற பெயர்களைப் பெற்று விளங்குகின்றதென்பதை ஏற்கனவே அறிந்திருக்கிறோம். **உயிர்த் தாது யில்லை யென்றால் இத்தியாதி செயல்கள் அல்லது தொழில்கள் ஒன்றும் நிகழா.**

"ஊனப்பா உடலாச்சு உயிருமாச்சு
உயிர்போனால் பிணமாச்சு—உயிர் போமுன்னே
பூனப்பா வாத பித்த சேத்துமத்தாற்
பூண்டெடுத்த தேகவளம் புகலுவேனே"

என்பதினால்; உடலில் உயிர் தரித்திருக்கும் வரையில்தான் உயிர்த் தாதுவின் பிரபாவம் என்பது நன்கு விளங்கலாயிற்று.

இதனிலின்றும் நாம் தெரிந்து கொள்வது யாதெனில், குருதி நுண் அணுக்களை மட்டிலும் ஆக்கல், காத்தல், அழித்தல் தொழில் களுக்கு உதாரணமாகக் கூறுவது சரியில்லை என்பதும்; சப்த தாதுக்களிடத்திலும் மூன்று விதச் சக்திகளும் நிகழ்வதாகவும் கருத வேண்டும்.

**8. கடையாக தேரன் கூறிய படைத்தல், காத்தல், அழித்தல் தொழில்கள் யாவை என்பதைக் கவனிப்போம்.**

"வாதமாய்ப் படைத்து" என்பதானது "வாதவாயுவாய்ப் படைத்து" என்றிருப்பது பொருத்தமானது. ஏனெனில், அடுத்தடுத்து வரும் வாக்கியங்கள் "பித்த வன்னியாய்க் காத்து" என்றும், "சேட்பசீதமாய்த் துடைத்து" என்று மிருப்பதால் "வாத வாயு" வென்று கூறுவது பொருத்தமானது.

(i) உடலில் உயிர்தரித்திருந்து இயங்குவதற்கு ஆதாரமாகிய "உயிர்த் தாது" உண்டாகும்போதே அதாவது கருவுற்பத்தி காலம் முதல் தானே மூவகைத் தொழில்களையும் புரியும் பொருட்டு, முக்குணங்களையுடைய (சத்துவ-ரஜோ-தமோ குணங்கள்) அல்லது (வாயு, தேயு, அப்பு குணங்கள்) மூன்று பிரிவுகளை யடைகிறது. சொல்லளவில் வளி, அழல், ஐயம் (வாத-பித்த-கபம்)

என்ற் மூன்று பிரிவுகளாக வைத்துக்கொள்ள வேணுமேயொழிய, மூன்று பிரிவுகளும் தனித்தனி அல்ல. மூன்றும் ஒன்றாய்ச் சேர்க்கப்பட்ட புரிக்குச் சமானமாகவும் சொல்லலாகும்;

**"உயிர்த்தாது"** முதலில் படைத்தலுக்குக் காரணமாக **"வாத வாயுவாய்"** நின்று நாதவித்து கூட்டுறவால் கருவுற்பத்தியைச் செய்கிறது. மனதோடு கூடிய காரணாதிகளும் வாயுக்களும் சேர்ந்து கருவுற்பத்தி ஆரம்பத்தில் உடல் உயிராகப் பிரிக்கும் (தாது வேறு தோபம் வேறாகப் பிரிக்கும்) தன்மையாலும், அப்பால் சப்ததாதுக்களுக்கு வேண்டிய ஊக்க சக்தியையும் கொடுத்து உதவுகிறபடியாலும் **"வாதவாயுவாய்ப் படைத்து"** மென்றார்.

இது "கருவுற்பத்தியையும், வளர்ச்சியையும் கொடுக்கும் தத்துவம்",

(ii) இரண்டாவதாக அதே வாதவாயுவினின்றும் "பித்த வன்னி" உண்டாகிறது. இது தனது "உயிரனல்" (சீவாக்கினி; உயிரக்கினி) என்ற உஷ்ணசக்தியால் வாதவாயுவால் படைத்த கருவை உருவகப்படுத்தியும் சப்த தாதுக்களுக்கும் போதுமான அளவில் தனது உஷ்ண சக்தியைக் கொடுத்தும்; நடு நிலையில் நின்று வாதவாயுவாலும், சிலேத்தும சீதளத்தாலும், உடல் உயிருக்குக் கெடுதி நேரிடா வண்ணம் காப்பாற்றி வருதலாலும் ஆரம்பப்பருவமான வளர்ச்சி போய் நடுப்பிராயத்தில் மேற் கொண்ட வளர்ச்சியில்லாவிடினும் உடலில் உயிர் நிலைத்து நின்று சப்த தாதுக்களும் சற்றேறக்குறைய ஒரே நிலைமையிலிருந்து வருவதற்கு உதவி புரிகிறபடியாலும், "பித்த வன்னியாய்க் காத்தும்" என்றார். இத்தப் பிராயம் "நடு நிலையாய் நின்று காப்பாற்றும் தத்துவமெனலாம்".

(iii) மூன்றாவதாக அதே வாதவாயுவால் உண்டான பித்த வன்னியினின்றும் "சேத்தும சீதளம்" உண்டாகிறது. இது தனது அப்புசக்தியினால் "வாதவாயுவால்" உற்பத்தி செய்து, தாது வேறு, தோடம் வேறாகப் பிரித்தும்; பித்தவன்னியால் உருவகப்படுத்திக் காப்பாற்றப்பட்ட கருவுக்கு, வாயு, தேயுக் களால் உஷ்ணம் மிகுதிப்படாமல் தனது சீதளத்தால் தணித்தும் (அதாவது தடைத்தும்); இரசதாது முதல் சுக்கிலதாது ஈறாக ஒன்றன் பின் ஒன்றாக மாறுதலடைவதற்கு உதவி புரிவதாலும்; வயது முதிர முதிர சப்த தாதுக்களும் முதுமைக்குரிய மாறுதல் களடைவதாலும்; (Senile Changes) **வாத**மும் பித்தமும்

அடங்கிச் சேத்துமம் அதிகமாகும் போது, மரணத்தை யுண்டு பண்ணியும், மக்களின் அந்திய காலத்தில் உடலை விட்டு உயிர் பிரிவதற்கு ஐயமிகுதியே காரணமாயிருப்பதாலும்; இதனை "யாத்திரை நாடி" எனக் கூறுவதாலும்; "சேட்ப சீலமாய்த் துடைத்து மென்றார்" எனலாம். இதனை "அந்திய காலத்து அழித்தல் தத்துவமெனவும்" கூறலாகும்.

எனவே தேரன் கூறிய பாவின் (விருத்தத்தின்) கருத்து மேற்கூறிய மூன்று பகுதிகளான கருவுற்பத்தி காலம், வாழ் நாள்கள், அப்பால் அந்தியகாலம் ஆகிய பிராயகால தத்துவங் களையே குறிக்குமென்பது தெளிவாகிறது. மேலும்,

"பித்தமடங்கினாற் பேசாதே போய்விடு
எத்தியவையம் எழுந்திடிற் கிட்டாதே,
எத்திய வாதமெழும் பின் மருந்துசெய்,"

என்பதனாலும்;

"பதைக்கின்ற மூவரில் பக்குவம் தப்பியே,
நிதைக்கின்ற வாதமும் பித்தமும் நீங்கிடிற்
சுதைக்கொண்டிருந்தாலும் தோன்றி யுயிர்விடும்,
பிதைக்கொண்ட வாதபித்தம் பெலனாமே."

என்பதனாலும்;

சிவனுக்குப் பெலனாயிருப்பது வாதமும் பித்தமுமாகிய இரண்டும் என்பது குறிப்பிடத்தக்கது. காப்பாற்றும் சக்தியான் பித்தமில்லையேல் பயனில்லை.

வாதம் எழும் பின் மரண தருவாயிருக்கக் கூடியவனானாலும், மருந்துகள் கொடுத்துப் பிரையத்தனம் செய்யலாமென்பதும் தெரியவருகிறது. இதனின்றும் உயிர்த் தாதுவினாலேற்பட்ட மூன்றுவிதச் சக்திகளாகிய ஆக்கல், காத்தல், அழித்தலாகிய சக்தி எது வென்பதையும் புரிந்து கொள்கிறோம்.

## பொருட்குறிப்பு.

### Suremedy

சுருங்கக் கூறில், மக்கள் பிறவியில் (ii) ஆரம்பகாலம் "வர வாயு" வால் கருவுற்பத்தியாகி; உடலுமுயிருமாகி; வளர்ச்சிக் குரிய தத்துவம் அல்லது தன்மையைப் "பெற்றாயிருத்தலால் வாதமாய்ப் படைத்து" என்றும்;

(ii) கரு வளர்ச்சியில் உருவகப்படுத்தியும், சப்த தாதுக்களும் போதிய உஷ்ணத்தை அளித்தும்; நடுப் பிராயம் வளர்ச்சியு மின்றிக் குறைவுமின்றிப் பித்தவன்னியால் நிலைத்திருப்பதும், வாயுவானும் அப்புவாலும் உடல், உயிருக்குக் கெடுதி வராவண்ணம் காப்பாற்றுவதாலும், **"பித்தவன்னியால் காத்து"** என்றும்;

**(iii)** அப்பால் வாதவாயுவாலும், பித்தவன்னியாலும் கரு வளர்ச்சியில் ஏற்பட்ட உஷ்ணத்தைத் தணித்தும், அந்திய காலமாகிய இறுதிப் பிராயத்தில் ஐயம், அப்புமிகுதியால் **(சிலேத்தும் சீதளம் மிகுதியால்)** உடல் உயிர், நாளுக்கு நாள் குன்றி மரணம் சம்பவிக்குமென்பதையும் குறிக்குமெனலாம். இவையாவும், "உயிர்த்தாது" வின் செயல்களேயாகுமென்பதை யறியவும்.

மேலும், பஞ்சபூதங்களில் வாயு, தேயு. அப்பு பூதங்களே பிரதானமாய் வளி, அழல், ஐயம் என்னும் மூக்குற்றங்கள் தொழில் புரிய உதவி செய்கிற தென்றாலும், மேற்கண்ட மூன்று பூதங் களினால் சப்த தாதுக்களுக்குத் தீங்கு விளைவிக்காவண்ணம், மண் பூதம் சப்த தாதுக்களையும் பாதுகாத்து நாளுக்குநாள் பெருக்கச் செய்கிறது. இதுவும் ஐயத்தின் தொழிலைச் சேர்ந்தது தான்.

ஐயம் = அப்பு — பிருதிவி.
அழல் = தீ (தேயு).
வளி = வளி, ஆகாயம்.

என்பதினாலறிகிறோம்.

**உடற்றாதுக்கள் (சப்த தாதுக்கள் உடற்கட்டு) உண்டாகும் விதம் எங்ஙனம்? அதாவது அன்னரசம் ஏழு உடற்றாதுக்களாக மாறும் விதம் எங்ஙனம்?**

உடலானது ஏழு தாதுக்களாலானது. அவை: இரசம், இரத்தம், மாமிசம், கொழுப்பு, எலும்பு, மூளை, சுக்கிலம் என்பவையாம். இவ்வேழு தாதுக்களும் உடற்கு ஏழு வகைக் கருவிகள் போன்றவை. இவைகள் தத்தம் தொழில்களைச் செய்பவும், தீங்குகள் வாராவண்ணம் பாதுகாக்கவும், உண்ணும் உணவினிட மாகவுள்ள சத்தினை பஞ்சபூதங்கள் கவர்ந்து முதல் நாள் ரச தாதுவை நனைத்து அங்கு ஊறித் தங்கும். இரண்டாம் நாள் உண்ணும் அன்ன ரசம் இரச தாதுவிலேற, முன் ஊறி நின்ற

இரசம், இரத்த தாதுவிலேறும்; இங்ஙனமே, மூன்றாம் நாள் மாமிச தாதுவிலும், நான்காம் நாள் கொழுப்பு தாதுவிலும், ஐந்தாம் நாள் எலும்பு தாதுவிலும், ஆறாம் நாள் மூளை தாதுவிலும், ஏழாம் நாள் சுக்கில தாதுவிலும் சென்று ஒவ்வொரு தாதுவிலுமுள்ள ஐம்பூத வக்னியால் தாதுக்களுக்கேற்றவாறு பக்குவப்படுத்தி ஒவ்வொரு தாதுவையும் போஷித்துப் பலப் படுத்தி எட்டாம் நாள் தேகத்திற்குகுன்றாத வலிமையையும் உண்டாக்கும்.

**தேகத்தில் முத்தோடங்கள் அல்லது மூன்று விதச் சக்திகள் உண்டாகும் விதம் எங்ஙனம்?**

உடற் கட்டுவானது ஏழு தாதுக்களாலாக்கப்பட்டதென்பதை அறிந்து கொண்டோம். தேகம் பஞ்சபூதமயம் என்பதையும் தெரிந்துகொண்டோம். உடற்கட்டு பெரும்பான்மையும் பிருதிவி என்னும் பூதத்தாலானது. கேவலம் பிருதிவி மந்த குணமும், கனதியும், அசையாத்தன்மையுமுள்ள பதார்த்தமானதால், இதனை இயங்குவதற்கு வேறு மூன்று பூதங்கள் உபயோகிக்கப் படுவனவாம். எங்ஙனமெனில், அப்பு என்னும் பூதமானது உட்கொள்ளும் ஆகாத்தின் சக்தியிலுள்ள கபத்தை இரையாகக் கொண்டும் தேயு என்னும் பூதமானது ஆகாரத்தின் சத்திலுள்ள பித்தத்தை இரையாகக் கொண்டும் வாயு என்னும் பூதமானது ஆகாரத்தின் சத்திலுள்ள வாதத்தை இரையாகக் கொண்டும் சப்த தாதுக்களையும் போஷித்து வருகின்றன. ஆகையால் இம் மூன்று பூதங்களின் குணங்கள் யாவும், கப-பித்த-வாதத்திற்கு முறையை பொருந்தமாதலால் இவைகளைத் தேகத்தினிடமாக நிகழும் மூன்று விதச் சக்திகளாகக் கொள்ளல் வேண்டும். இம்மூன்று சக்திகளை முறையே சுழிமுனை, பிங்கலை. இடகலையாக மொழங்கும். இம்மூன்று மூலாதார நாடிகளாகிய இடகலை, பிங்கலை, சுழிமுனை நாடிகள் நாசித்துவாரங்களின் வழியாகப் பிராணவாயுவை இயங்குவதற்குரிய தொழில் புரியும் போது, அபானன், பிரானன், சமானன் என்ற மூன்று வாயுக்களும் மேற்கண்ட மூன்று நாடிகளோடு முறையே கூட்டுறவு சேர்த்தலால் வாத—பித்த—ஐயம் பிறப்பதாகவும் கூறுவர். இதனை ஏற்கனவே மற்றொரிடத்திலும் விளக்கியுள்ளோம்.

ஆகாயபூதமானது மற்றெல்லாப் பூதங்களுக்கும் இடம் கொடுக்கும் தொழிலைப் புரிகிறதென ஏற்கனவே அறிந்திருக்கிறோம்.

வாயு, தேயு, அப்பு பூதங்களால் அளிக்கப்பட்ட ஆகாரச் சத்துக்களின் உதவியால் பிருதிவி பூதம் நாளுக்கு நாள் வளர்ச்சியைப் பெறுகிறது.

மேற்கண்ட மூன்று சக்திகளின் குணாகுணங்களை நமது விரல்களால் ஆரை என்பின் மேலோடும் நாடி நரம்பு சதத்தக் குழாயின் மேல் சற்று அழுத்தியும் தளர்த்தியும் பரீட்சித்துப் பார்க்கிறோம். பரீட்சிக்கும் விரல்கள் கருவி போன்றவை.

"சிறப்பான புரி மூன்றுமொன்றாய்க் கூடி—மொழிந்திட்ட வாதபித்த சிலேற்பனமென்று மூன்கையில் பூண்டிருக்கும் முறைமையாக" என கூறியிருப்பதால் மூன்று சக்திகளும் புரியைப் போன்று ஒன்றாய்க் கூடி, மேற்கூறிய நாடி, நரம்பு ரத்தக்குழாயின் மேல் ஓடிக்கொண்டிருப்பதை அவற்றின் துடிப்பு களின்மூலம், நமது விரல்கள் ஒன்றுக்கொன்று ஏற்ற வித்தியாச மான மாத்திரையளவில் அறிவிக்கின்றன.

பஞ்சபூதமயமான தேகத்தில் வாதம் வாயுவின் தன்மையையும், பித்தம் தேயுவின் தன்மையையும், கபம் அப்புவின் தன்மையையும் ஒத்திருக்கும் என்று விவரம் ஏற்கனவே கூறியுள்ளோம். பஞ்ச பூதங்கள் சரீரத்திற்கு ஆதாரமாயிருக்கின்றனவென்பதும் இதன் கருத்தாகும்.

**நோய் என்பதென்ன? உண்டாகும் விதம் எங்ஙனம்?**

(1) ஏழு உடற்தாதுக்களாலான சரீரத்திற்கு வெளிப்புறமிருந்து ஒழுங்கீனமான ஆகாரத்தினாலும்; (2) வளி, அழல், ஐயம் என்ற மூன்று சக்திகள் (மூக்குற்றங்கள்) மிகுதி, குறைவுகளுக்குக் காரணமான தொழிலைச் செய்தலாலும், (3) சரீரத்திற்கு அன்னியமான கபம்—பித்தம்—வாதம் போன்ற ஆகாரச் சத்துக்கள் அளவுக்கு மிஞ்சியும், குறைந்தும் உட்செல்லுமாயினும் நோய்கள் உண்டாகும்; (4) அளவுக்கு மிஞ்சியிருப்பின், அவை களுடன் தேகத்தினிடத்தேயுள்ள மூன்று சக்திகளில் ஒன்று அல்லது இரண்டு அல்லது அனைத்துமோ போராடி, அன்னியமான மிகுதியை வெளிப்படுத்த முயலும். அவை பலவீனப்பட்டிருப்பின், எளிதில் போக்கியும்; மிகுந்திருப்பின் சப்த தாதுக்களின் தொழிலை மாறுபடச் செய்தும்; அவற்றிற்குரிய தன்மைகள் மிகுந்தும் குறைந்தும் போகும். அப்போது தேகத்தின்கண் உண்டாம் குணங்களின் காரியமே "நோய்" எனப்படும்.


LC:4:6 143266
N87:1

இக்கருத்தினைப்பற்றியே தெய்வப்புலமை திருவள்ளுவனாரும்:

"மிகுனுங்குறையினும் நோய் செய்யும் நூலோர்,
வளிமுதலா வெண்ணிய மூன்று."

என்றருளிச் செய்வாராயினர்.

ஆதலால் "நோய்" என்பது எலும்பு சூக்கும சரீரங்களாகிய சப்த தாதுக்களும், வளி—தீ—ஐயமாகிய முக்குற்றங்களும் தம் தம் இயற்கைத் தன்மையினின்றும் வேறுபடும் போது "நோய்" எனப்படும். பிணிக்கப்பட்ட குற்றத்தினளவாக நோயின் பெயரும் அமையும்.

மேலும் கூறியதாவது:

(மேற்கோள்)

"தன்வினைபுறவினை தாழினும் மிகினும்,
உடலைப்பிணிக்கு முண்மையிது தாமே" (manuscript)

என்பதனால்,

அகக் காரணம், புறக்காரணங்கள் மிகினும், குறையினும் நோய் சம்பவிக்கும் என்பர். அதாவது உணவுப் பொருள்களை அளவு கடந்து உண்ணல், அல்லது உடற்கு வேண்டிய அளவு கொள்ளாது சிறு உணவு கொள்ளல்; தன் வன்மைக்கு மிகுந்து உழைத்தல்; அல்லது வேலை ஒன்றுமில்லாது சோம்பிக்கிடத்தல் ஆகிய இவ் விருவகைக் காரணங்களால் வளி, அழல், ஐயம் மூன்றும் தத்தம் நிலையில் மிகுந்தேனும் குறைந்தேனும் (தாழ்ந்தேனும்) பிணிக்கப்படும். அப்போது தேகத்தின்கண் உண்டாம் குறி குணங்களை நோய், பிணி, வியாதி, வினை, தாதுதோட வேறுபாடு, அசுவுக்கியம் எனப் பலபெயர்களால் அழைக்கப்படும்.

After having said so much about the description of *"Dathu"* and *"Thiridathu"* or *"Thridosha"* according to Siddha System of Medicine, it is worth while considering what Dr. R.S. Agarwal has explained in his book called *"The Secrets of Indian Medicine"* regarding the general principles of Indian medicine and particularly the use of the word Vatha, Pitha and Kapha or what each of these terms stand?

History tells us about the supremacy of Indian Culture and medicine in olden days. Evidently the consciousness of Indians of that time must have been more developed than that of other nations. What made those people great in their thoughts and actions? Persons who really discovered something for the good of humanity were the seers, thinkers and men of action. They had creative genius. Their intuitive faculty was highly developed. Their motive of life was the service of God through humanity. On such a sound basis they dare to achieve the highest truths in various aspects of life as well as of medicine.

Today the ancient medicine is in a deplorable condition because its followers have forgotten the spiritual idealism and intuitive faculty and are under the influence of materialistic ideas. The result is that spiritually they have become stagnant and have lost the creative genius. They have lost the true interpretation and application of Ayurvedic principles; hence there is downfall, and this profound, simple system of medicine has become very confusing to the modern mind.

The past knowledge is both a drag and a force for progress. It is the past that has created the present and a great part of it is creating the future. Modern medicine is the development of the ancient medicine. Both Allopathy and Ayurveda are working on the same lines. Ayurveda has given the general outlines of medicine while modern medicine has detailed each part of it with the help of highly developed intellect.

*N.B.*—What is said for Ayurveda is also applicable to Siddha.

If the Indian medicine is to accomplish its real mission it must start a double movement of revival and reform. It must revive its *Tridoshic Theory* on which the whole ancient medicine is based, so that it may appeal to the modern mind and on the basis of this theory modify and purify its forms of application. These form of medicine and modes of application must be simple and scientific to reveal the spirit of ancient medicine.

Ayurveda affirms that along with the gross material body, there is a subtle body also which is quite plastic and mobile, not rigid like the material body. One feels the presence of this

subtle body usually in the sub-conscient state, that is, during sleep in dreams when one finds oneself away from the body moving amongst different persons and at different places. To deal with the diseases of man efficiently the knowledge of both the gross material body and the subtle body is essential.

It is therefore clear that in Indigenous system of medicine, the means of evolution were at first *Sense faculties and intuition.* This was how the original founders of Indian medicine had discovered this medical science. They developed spiritual knowledge.

The central idea is that it is the nature or energy which heals a sick. This energy is either weak, dormant or perverted in a disease, and the physician by his knowledge tries to awaken and properly adjust this energy of healing in his patient. Many people resist to any kind of treatment and get well, while many others go under rigid descipline of treatment and become worse. Every physician experiences such things in his practice.

*What is man?* Man is a product of nature. Every thing including man has had a common origin in matter. Life manifested in matter and mind appeaed in life in the course of evolution. Man harbours within himself "Divine"; without the embraces the "world". The soul resides in the filesh and act as a physician who knows and understand the disease of his patient but is not itself touched by the disease. The soul is also a link between man's past life and future life.

Man develops three distinct personalities namely the *mind* the *vital* or *life force* and the *body.* Through the mind he thinks and wills; through the vital or life force he executes his thought and will; through the physical body he expresses what he thinks and wills. The mind is *vata,* vital or life force is *Pitha* and the body is *kapha.* The mind and vital or life force are hidden in the gross physical body and evolve gradually. Death means the physical body without the subtle physical body or the sushma body of mind and vital. (Mind means மனசு அல்லது அறிவு. அறிவே ஆன்மாவாகும்.)

Again it is said, like the universe man is composed of 5 elements such as earth, water, fire, air and ether. One eats food, drinks water, enjoys the sun, breathes the air and is alive due to the presence of *either or life force.* Therefore Life-force is the basis for man's mental and spiritual activities so that nature may evolve him towards perfection.

1. The *earth* gives shape to the body and release Sits energy. Bones, muscles and tissues represent it in the body.

2. *Water* makes the earth supple and helps in the transmission of energy. Serum, lymph, saliva, etc., represent it in the body.

3. *Fire* makes the form of the body steady and gives vigour and stimulation. Digestion and circulation represent it in the body.

4. *Air* ignites the fire and works as a life carrier and is the support of all contact and exchange. Respiration and Nervous system represent it in the body.

5. *Ether* is the creater of life itself in the body. A harmonious combination and function of these five elements in the body produce a healthy and beautiful life.

Next Vatha, Pitha and Kapha have multiple significance and are symbolical in terms. (1) *Vatha* represents vayu, mind, dryness, pain, flatulence, sensitiveness, lightness and also air.

(2) *Pitha* represents gastric juice, bile, energy, heat, inflammation, anger and irritation, etc.

(3) *Kapha* represents feeling of cold, heaviness, running of the nose, passing of mucoid discharge and also the saliva.

Man has gross physical body (ஸ்தூலம்) and subtle physical body ( சூட்சுமம் ) The subtle physical body is immediately behind the gross physical body and is closely connected with it. It has its subtle nervous sytem, subtle centres of action and subtle sense organs which correspond to the nervous system, ganglions and sense organs of the gross physical body which we see with naked eye, whereas the subtle physical body is not visible.

The Life-force which is different from material energy derived from food, pervades the gross physical through the subtle physical.

The physician and physiologists are unaware of this Life-force and subtle nervous system; because they are not visible to the external sense organs; but they can be vividly seen and experienced through infection and inner vision. This Life-force is the dynamic power of the human body and forms a

subtle vital envelope around the gross physical. An infection attacking an individul should first pierce this subtle envelope which is quite weak ordinarily, but by yogic power and supremental force, this can be greatly strengthened to defend all kinds of infections and adverse forces. In sickness and depressed or disturbed mental conditions the Life-force is priority affected and the function of different organs is disturbed.

*Different types and forms of Vatha, Pitha and Kapha :*

Here the description is anatomical and physiological and each has been described in five forms with five functions :

*(a) Five forms of Vatha :*

These are the five main centres of the subtle physical body and correspond to the nervous plexuses of the gross physical body.

1. *Matedial of muladhar centre (அபானன்) :* This centre corresponds to the pelvic plexus and is the seat of kundalini or material energy and controls excretions.

2. *Navel centre (சமானன்) :* This corresponds to the solar plexus in the navel region and controls digestion.

3. *Heart centre (பிராணன்) :* This refers to the cardiac plexus in the Heart region and controls Heart and circulation.

4. *Throat Centre (உதாணன்)* This corresponds to the pharyngeal plexus in the throat region and controls breathings * and speech.

5. *Forehead centre (வியானன்) :* This corresponds to the Naso-ciliary plexus at the root of the nose and base of the skull and controls " will ".

*(b) Five forms of Pitha :*

1. *Gastric juice (அனலம்) :* This give apetite and helps * Digestion.

2. *Bile (பிராசகம்)* which gives complexion to the skin.

3. *Haemoglobin (இரஞ்சகம்)* which colours the blood.

4. *Aqueous Humour (ஆலோசகம்) :* which brightens the eyes.

5. *Life* energy சாதகம் which controls the whole body.

(c) *Five* forms *of Kapha:*

1. *Saliva (இலேதம்)* : which helps masticaption.

2. *Cerebrospinal fluid (தற்பகம்)* which keeps the head cool.

3. *Lymph (போதகம்)* which gives taste.

4. *Serum (அவலம்பகம்)* which helps the Heart in Pumping.

5. *Synovial fluid (சந்திகம்)* which lubricates and aids free movements of the joints.

The three humours of vatha, pitha and kapha which are absorbed and circulated in the blood have each certain definite qualities: What are they actually *

1. *Vatha.*

| (*Own qualities*—6) | (*Opposite qualities*—6) |
|---|---|
| Vatha is dry—வறட்சி | Unctuous—பசுமை |
| Vatha is cold—குளிர்ச்சி | Hot—அக்கினி |
| Vatha is subtle—அணுத்துவம் | Solid—தெட்டி |
| Vatha is rough—கடினம் | Soft—மிருது |
| Vatha is unstable—அசைதல் | Stable—ஸ்திரம் |
| Vatha is light—இலகு | Heavy—பளுவு |

All these qualities are present in Air and hence *air we inhale is Vatha.*

2. *Pitha.*

| (*Own qualities*—6)— | (*Opposite qualities*—6)— |
|---|---|
| (Pitha is hot—அக்கினி | Cold—குளிர்ச்சி |
| Pitha is acid—புளிப்பு | Sweet—இனிப்பு |
| Pitha is mobile—ஊடுந்தன்மை | Immobile—நிலைத்திருத்தல் |
| Pitha is liquid—கலரூபம் | Solid—தெட்டி |
| Pitha is acute—கூரூரம் | Mild or harmless—சாந்தம் |
| Pitha is pungent—கார்ரம் | Bitter—கசப்பு |

All these qualities are present in the gastric juice and hence the *gastric juice is Pitha.*

3. *Kapha.*

| (*Own qualities*—6)— | (*Opposite qualities*—6)— |
|---|---|
| Kapha is cold—குளிர்ச்சி | Hot—உட்டிணம் |
| Kapha is heavy—பளுவு | Light—இலகு |
| Kapha is immobile—அசைவின்மை | Mobile—அசைதல் |
| Kapha is sweet—இனிப்பு | Pungent—காரம் |
| Kapha is soft—மிருது | Rough—கடினம் |
| Kapha is unctuous—ஈரம் | Dry—வறட்சி |
| Kapha is viscid—வழவழப்பு | Sandy—கரகரப்பு |

All these qualities are present in Saliva.
So *Saliva is Kapha.*

These three humours namely, *air, gastric juice and saliva* circulate in the system in different proportions and help in the digestion of food and general make-up of the body. Each of them has different functions. Yet it is harmony, the right proportion of each, the proper combination of the three humours which are responsible for maintaining good health and good digestion.

When humours are disturbed for some reason or other, bodily disorders take place—for an example: feeling of dryness in the throat, heat and irritation of the eyes, cold and heaviness in the head. Dryness is the quality of Air, i.e. Vatha; Heat and irritation of the eyes are the qualities of gastric juice (i.e., Pitha), cold and heaviness of the head are the qualities of saliva (Kapha).

It is why when such a disorder takes place, it is termed "*provoked vatha*", "*Provoked Pitha*" and "*Provoked kapha*" respectively.

*Now the question is how and from where these symptoms of dryness and cold arose?*

The elements of air, gastric juice and saliva are calculating in the tissues of the body through blood and the above symptoms are the qualities of these humours. Therefore when one or more humours are provoked, their qualities appear as a disturbance in the form of dryness, heat and cold. Such symptoms may appear in the whole body or in any part of

the body. It is specially in this type of disorders that indi genous medicine plays an important role in the treatment and maintains superiority over all other systems.

*Finally the author has answered to a query, namely, what are the values of Vatha, Pitha and Kapha to a modern mind?*

*Answer*: Vatha, Pitha and Kapha are symbolic terms which the Rishies discovered through their inner knowledge to express the art and science of medicine in a simple way. A true grasp of the subject makes the art of medicine easy and simple and initiates the intelligence to adopt the right course of treatment; otherwise the intellect wanders like a thirsty deer in a desert. Nowadays a specialist can treat cases only of those diseaes in which he specialises; his knowledge becomes limited; but *by proper understanding or knowledge of Vatha, Pitha and Kapha one can be an all round good physician and also a specialist.*

These terms can be widely used at each step of medicine and a few illustrations are given below :—

*Some illustrations of Vatha, Pitha and Kapha*:

| Context. | Particulars. | Vatha | Pitha. | Kapha |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1 Gross body. | Head, chest and abdomen—arms and legs. | Head .. | Chest and abdomen. | Arms and legs. |
| 2 Systems .. | Nervous, digestive and circulatory, muscular. | Nervous .. | Digestive and circulatory. | Muscular. |
| 3 Function. | Mind, Vital, Physical. | Mind .. | Vital .. | Physical. |
| 4 Gunas .. | Sattwic, Rajasic thamasic. | Sattwic .. | Rajasic .. | Thamasic. |
| 5 Cell .. | Nucleus, Protoplasm body of the cell. | Nucleus .. | Protoplasm .. | Body of the cell |
| 6 Humours. | Air, gastric Juice, saliva. | Air .. .. | Gastric juice, | Saliva. |
| 7 Excretions | Exhaled air, urine and perspiration, faeces. | Exhaled air. | Urine and perspiration | Faeces. |
| 8 Expulsion of dosha. | Wind, watery or yellow discharge, mucous. | Wind .. | Watery or yellow discharge. | Mucous. |

| Context. | Particulars. | Vatha. | Pitha. | Kapha |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 9 Feeing of dosha. | Pain or dryness. heat, cold. | Pain or dryness. | Heat .. | Cold. |
| 10 Classification. | Painfull or paralytic, inflammatory non-inflammatory. | Painful or pralytic. | inflammatory | Non-inflammatory. |
| 11 Causes .. | Lack of relaxation. low vitality, accumulation of toxic matter. | Lack of relaxation | Low vitality. | Accumulation on taxic matter. |
| 12 Treatment. | Relaxation. stmulation. elimination. | Relaxation .. | Stimulation. | Elimination |
| 13 Nature .. | Air. sun. earth or moon. | Air. | Sun .. | Earth or moon |
| 14 Shapa .. | Gases. liquids. solids. | Gases .. | Liquids .. | Solids. |
| 15 Profession | Judge, Police Scavenger. | Judge | Police | Scavenger. |

*நோயை அணுகவொட்டாமற் தடுப்பதற்கு (நோயின்றி வாழ்வதற்கு) மக்கள் ஊண் விஷயத்தில் அனுசரிக்க வேண்டிய விதிகள் என்ன ?*

1. " மருந்தென வேண்டாவாம் யாக்கைக்
கருந்தியதற்றது போற்றியுண்ணின் "

*என்பதனால், மக்கள் தாம் உண்டது நன்றாகச் சமைக்கப்பெற்று, அகட்டை விட்டுக் கீழிறங்கியபின் வயிற்றுள் அவ்வளவு இல்லாக் குறி அறிந்த பின்னர் உண்ணின், உடலுக்கு மருந்தென்பது வேண்டாவாம் என அறிக !*

2. " அற்றாலளவறிந்துண்க வஃதுடம்பு
பெற்றானடிதுய்க்குமாறு."

*என்பதனால், உடலைப் பெற்ற ஆன்மா (உயிர்) இன்ப துன்பங் களைப் பெற்று அறம், பொருள், இன்பம், வீடும்பயக்கத் துணை யாகவுள்ள உடல், நெடுநாள் உய்யுமாறு அவ்வுடற்குத் தகுந்தாற் போல் அளவறிந்து உண்க ; உயிரை வளர்க்க என வற்புறுத்தி யுள்ளார்.*

3. "அற்றதறிந்து கடைப்பிடித்து மாறல்ல
துய்க்கத்துவரப் புசித்து."

என்பதனால், நோய் வராதிருக்க உடல் அடைந்த வேறுபாடுகளையும் தட்ப வெப்ப வேறுபாடுகளையும் நன்கு அறிந்து அதற்குத் தகுந்தவாறு உணவு வகைகளையமைத்து செரிப்புத் தன்மைக்கு உகந்தவாறு உணவு கொள்க எனக் கூறியதோடு, மீண்டும்;

4. "தீயளவுவன்றித் தெரியான் பெரிதுண்ணின்
நோயாளவின்றிப்படும்."

என்பதனால், உடல் நிலை கெட்டுப் பசித்தீ குறைந்து செரிப்புத் தன்மை இழந்த காலத்திலும், மூன்பு உண்டது போல் பெரிது மூண்ணின் நோய் பெருகும் எனவும் தெரிவிக்கிறார்.

5. "மாறுபாடில்லாத உண்டி மறுத்துண்ணி
னூறுபாடில்லையுயிர்க்கு."

என்பதனால், உணவுப் பொருள்களின் பண்பு அறிந்து உடலின்கண் அமைந்துள்ள வளி, அழல், ஐயம் ஆகிய மூக்குற்றங்களும் மாறுபாடில்லாதபடி (மிகுதல் குறைதல்), தடுக்க வேண்டுவன வற்றைத் தடுத்தும் வேண்டுவனவற்றைக் கூட்டியுமூண்ணின் உயிர்க்கு (வளி, அழல், ஐயம் என்னும் மூத் தோடங்களுக்கு) துன்பம் விளையா ! அதாவது நோயுண்டாகாது.

6. "இழிவறிந்துண்பான் கணின்பம் போலிற்குங்
கழிபேரிரையான் கணோய்."

என்பதனால், மக்கள் தங்கள் உடல், நிலையை நன்கு அறிந்து அதற்கு தகுந்தாற்போல் உண்பாராகில் இன்புற்று வாழ்வார். அவ்வாறன்றி அளவுற்குக் கண்டதை மிக மிகத் கொள்ளின் உடல், உயிர் பினிக்கப்பட்டு நீங்காத துன்பத்தில் மூழ்குவர் என்பதையும் முன்னோர்கள் தெரியப்படுத்தியுள்ளார்கள்.

நோய்வாய்ப்படின் மருத்துவனின் கடமை இன்னது என்பதையும் அறிவிக்கிறார் :

"நோய் நாடி நோய் மூதனாடிப்பது தணிக்கும்,
வாய்நாடி வாய்ப்பச்செயல்"

என்பதற்கிணங்க, உணவாதி செயல்களால் உண்டாம் நோயினை அறியும் பொருட்டு, நோய் அறிதற்கான நாடல் வழியினைக்

கூறுதும்; அஃது உணவு செயல்களின் மிகுதி, குறைவால் வளி, அழல், ஐயம் இம்முன்றில் ஒன்றேனும், இரண்டேனும், மூன்றேனும் மிகுந்து அல்லது குறைந்து பிணிக்கப்படுமாகையால், பிணிக்கப் பட்ட குற்றம் யாது? அதற்கு முதன்மையாகயிருந்தது எது? அதனைத் தணிப்பதற்கு வழி எது? என நாடுதலே மருத்துவனின் நற்செயலாம். மேலும்;

"உற்றானளவும் பிணியளவுங்காலமுங்
கற்றான் கருதிச் செயல்."

என்பதால், நோயினன் அடைந்த குற்ற வேறுபாடுகளின் மிகுதல் குறைதல் அளவையும்; அதனால் நோயுற்றான் பெற்ற நோயின் அளவையும் (நீரும் நீராதென) அறிந்தபின், நோயின் கால அளவை அறிந்து, சிந்தித்து, தகுந்த மருத்துவம் புரிவது அவசியம் என்பதையும் கூறியுள்ளார்.

அதற்கு மேலும் கூறுவதாவது:

"உற்றவன் தீர்ப்பான் மருந்துழைச்செல்வானென்
றப்பனாற் கூற்றே மருந்து."

என்பதனால், நோயுற்றவன் (Patient) நோய் தீர்ப்பான் (மருத்துவன்), மருந்துசெய்பவன் (Pharmacist) மருந்தைச் செலுத்துவோன் (Nurse) இந் நால்வரும் ஒரு மனதோடு கூடி ஒத்துழைப்பின் நோய் நீரும். திருவள்ளுவர் திருக்குறளில் எடுத்துக் காட்டியுள்ளான்.

(சித்த மருத்துவம்)

**நோயின்றி வாழ்வதற்குக் காயகற்பம் சிறந்ததெனல்.**

மக்கள் நோயின்றி உய்ந்து பிறவா நிலையெய்தற்பொருட்டு உடல் (காயம்) அழியாதிருக்கவந்தமையால், பிணிக்கப்பட்டவை (நோய்)-களை நீக்கி உடலை (காயத்தை) காக்க வந்த முறையைக் **காயகற்ப மென்பர்.**

"**காயம்**" என்பது மனம் பழுக்காது காயாகவுள்ள உடல். "**கற்பம்**" என்பது உடலைக் கல் போலாக்கும் முறை எனப் பொருள்படும். இதனை மூன்றாக வகுத்துள்ளார்:—**மணி; மந்திரம்**; அவிழ்தம் என்பனவாம். "ஆனதுபற்றியே;

1. மறுப்பதுடல் நோய் மருந்தெ னலாகும்
மறுப்பதுள நோய் மருந்தெனச்சாலும்
மறுப்பதினி நோய் வாராதிருக்க
மறுப்பது சாவையு மருந்தெனலாமே."
எனத் திருமூலர் திருமந்திரத்திலும் ; இதனையே,

2. "மணி மந்திரவழித மார்க்கந் தெரிந்து
பிணிகளறித்தொதுக்கிப் பின்னும்—தனியா
வுடலை வளர்த்திடாலா
லுத்தியினாலால்,
பிடகர்வைத்தியர்க்குப்பேர்."

(தேரையர்)

3. "தணியாத நோயுந்தணியப்புரியும்
மணி மந்திர வவிழ்த மார்க்கப்—பிணியை
உசாவியியற்றும் அறிவுள்ளவரைக்கண்டால்
மசாவும் பயப்படுமம்மா !"

4. "செய்யுமணி மந்திரவழிதநன் முறைமை
யையமிலாமலறிந்தவரே—வைய
மிசைமானிடரெனினும் விண்மருத்தராகி
யிசைவார்குருவாய் எனக்கு."

(தேரையர்)

எனக்கூறியிருப்பதனால், சித்தமருத்துவத்தின் மருத்துவமுறை யாகிய மணி, மந்திரம், அவிழ்தம் என்பது நோயைத் தடுத்தும், வந்த நோயைப் போக்கியும், உடலை யழியாது காக்கும் காயகற்பத்தினை ஓர் சிறந்த முறை என அறியவும்.

1. **மணி** என்றால் இரசத்தைக்கட்டி மணி போலாக்கிய **இரசமணி** எனவும், இதனை ரசக் குளிகை, சூதக்குளிகை, ககனக் குளிகை எனவும் கூறுவர் சில நூலாகிரியர்கள். மூப்புவைக் கொண்டு இரசத்தை இரசமணியாகவும், இரசச்சுண்ணமாகவும், தயாரிப்பது சிறந்த முறையாகும். மேன்மையான பலனை யுமளிக்கும். காயகற்ப முறை எதுவாயினும் "மூப்பு" யின்றித் தயாரிப்பது சித்தி பெறாது என்பது சித்தர்களது துணிபு. **"மூப்பு தொட்டுக் கற்பமுண்டறியாதார்க்கு—எப்போதுங் காலனெமன்."**

என்னும், அகத்தியர் வாக்காலறிக! தென்னாட்டில் இரசத்தை விட மேலான மருந்து வேறுயில்லை எனவும்; இரசமே எல்லா வியாதிகளையும் குணப்படுத்தக்கூடிய "ஏகசஞ்சீவி" எனவும் கூறுவர்.

"வாத பித்த சேத்து மத்தாற் வரும் நோய்கள்
(இரச) மருந்தினால் வலுவாய் நீங்கும்." என

யூகி முனி வாதக் கோவையில் கூறியிருப்பதாலறிக!

ஆனது பற்றியே உடலை வளர்ப்பதற்குக் காயகற்ப முறையில் "இரசமணி" முதல் ஸ்தானம் பெற்றிருப்பது போலும், இரச மருந்தின் பெருமையை எந்நாட்டவரும் அறியும்படி செய்தவர்கள் தென்னாட்டு சித்தர்களேயாம்.

2. "மந்திரம்" என்பது மனிதன் தரம் எனப் பொருள்படும். இஃது ஐம்பொறிகளையும் அடக்கி, ஒவ்வோர் நிலையையும் (ஆறு ஆதார நிலைகளில்) தன்வயமாக்கு மார்க்கமேயாம்.

"நிறைமொழிமாந்தர் ஆணையிற்கிளத்த
மறைமொழிதானே மந்திரமென்ப,"

என்பதினாலும்;

"நிறைமொழிமாந்தர் பெருமை நிலத்து
மறை மொழி காட்டிவிடும்."

என்பதினாலும்; மற்றும் தொல்காப்பியர்; திருவள்ளுவர், திருமூலம், தாயுமானவர் போன்ற பெரியோர்கள் கூறிய "இன்ன பல அரியவாக முடிக்கவல்ல வழிகளைக் கூறும் நூல்களுமே—" மந்திரம் எனவும் வழங்குவர்.

"பிராணாயாமம்" பற்றிய விவரங்கள் யாவும் யேற்கனவே விளக்கியுள்ளதைக் கவனிக்கவும்.

3. "அவிழ்தம்" (அவிழ்தம்; மருந்து);

அவிழ்தம் என்பது அவிழ்த்தல் தன்மையுடையது. பிணிக்கப் பட்ட முக்குற்றங்கள், ஐங்காற்கள், எழு உடற்றாதுக்கள் ஆகியவைகளை அவிழ்க்குந் தன்மையுடையவைகளே அவிழ்தமாம்.

மூன்னே கூறிய மணி, மந்திரம் இரண்டும் எல்லா மக்களும் எளிதில் பெறக்கூடாமையால் "அவிழுகம்" மூறைகளையும் நோய்களைப்போக்குவதற்காகக் கூட்டியுள்ளார். இதனை அகமருந்தென்றும், புறமருந்தென்றும் இருபிரிவாகக் கொள்வினும், முக்கியமாக தாவரப்பொருள், தாதுப்பொருள், சங்கமப் பொருள் என மூன்று வகையாக வகுத்தனர். இதனை, தேரன் கூறிய பிரகாரம் :—

"கற்பங்களாதி கழறு மருந்து முறை
விற்பனங்களாக விளங்குவதற்கு—முற்பங்கு
மூலிக்கருப் பொருள் மூலப் பொருள் வகைகள்
வேலிக்கு நேராகுமே."

என்பதிற்கிணங்க உடல் நோய்வாய்ப்பட்டு அழியாது உடலைக் காக்கவந்த காயகற்பங்களெனக் கூறும் மருந்து மூறைகளில் பெரும்பாலும் மூன்று பங்கு உடையனவென்பதும்; அவை;

1. மூலி (வேரையுடைய) புல், பூண்டு, செடி, கொடி, மரங்கள்.

2. உயிர்ப்பொருள்கள்.

3. தரைபடுபொருள்களாகிய இரும்பு, செம்பு, பொன், வெள்ளி, ஈயம், இரசம், பாடானம், உப்பு முதலியவற்றைக்கொண்டு மருந்துகள் செய்துண்ணினும்; அல்லது முதலிரண்டினை ஆகாரமாகக்கொண்டாயினும் அல்லது குடி நீர், சாறு, பொடி, இலேகியம் ஆகியவைகளாகத் தயாரித்து உட்கொள்வதும், வெளிப் பிரயோகமாக உபயோகித்தும் நோய்களைப்போக்குவதென்பதை அறியலாயிற்று (சித்த மருத்துவம்). இதுவரைக்கும் "சித்த மருத்துவத்தில்" விளக்கியிருப்பதைக் கூறினோம்.

*(வேறு.)*

மணி, மந்திரம், அவிழ்தம்பற்றிய வேறு கருத்துக்களையும் இங்கு கூறுவோம் :—

1. "மணி" என்பது இரச மணியைக் குறிப்பதல்லவென்றும்; தெய்வ பிரார்த்தனையைப்பற்றிய விளக்கம் அல்லது எச்சரிக்கை யெனவும் கூறுவாருமுளர். எங்ஙனமெனில், நோய்க்குப் பரிகாரம் செய்யுங்கால் முதலில் "அவிழ்தம்" கொடுக்கவேண்டும்.

அதில் குணமில்லாவிடில் இரண்டாவதாக "மந்திரமும்" கையாள வேண்டும். இவ்விருவகையாலும் நோய் குணமில்லையானால் "இறைவனிடம்" பிரார்த்தித்து, தெய்வபக்தியாலும், விரதங்களாலும், தேவாலயங்களில் பூரண நம்பிக்கையுடன் காத்திருந்தும், தெய்வப்பிரீதியாகச் செபம், ஹோமம், அர்ச்சனை முதலிய "தெய்வ வழிபாடுகளை"ச் செய்தும் நோய்களைப் போக்கிக் கொள்ளுவதை நாம் கண்கூடாகத் தென்னாட்டில் பார்க்கிறது மல்லாமல், பெரியோர்கள் காட்டிய வழியுமதுவேயாகும். ஆதலால் இங்கு "மணி" என்று சொல்லப்படுவது "தெய்வமணி"யையும், தெய்வப்பிரார்த்தனை, தெய்வ வழிபாடுகளைப் பற்றிய தேயல்லாமல் "இரசமணி"யைக் குறிப்பதல்ல வென்பதே பெரியோர்களின் கருத்தாகும். "இரச மணி" என்பது அவிழ்தங்களில் ஒன்றேயொழிய வேறல்ல வென்பதும் அவர்களின் அபிப்பிராயமாகும். "அவிழ்தம்", "மந்திரம்" இவ்விரண்டு சக்திகளுக்கு மேலானது "தெய்வமணி", "தெய்வப் பிரார்த்தனை", "தெய்வத்தின் கருணா கடாட்சம்" என்பதே யொழிய மற்றொன்றில்லை என்பதும் பெரியோர்களின் திடமான நம்பிக்கையாகும். இதனை,

"பூர்வசென்மக்ருதம்பாவம் வியாதிரூபேண பீடிதம்,
தத்சாந்த்யை ஔஷதைர் தானைர்
செபஹோமசுரார்ச்சனை :"

என்பதினாலும்;

"கற்றகுருவாக்குங் காதலித்த வாகடமும்
பற்றுக்கோலென்றேபரிகாரம்—மூற்ற
அவன் பொறுப்பல்லா லொன்று மாவதில்லையென்றே
இவனுணரக் கிர்த்தி இங்கு"

என்பதினாலும், பிணி நீக்கம் அடைவதில் கடவுளின் கருணை எவ்வளவு இன்றியமையாத தென்பதை நமக்கு அறிவித்துள்ளார்கள்.

2. "மந்திரம்" என்பது சில அட்சரங்களால் பகவானை ஸ்தோத்திரம் செய்தல் எனவும்; அவ்வாறு பகவானை மனம், வாக்கு காயங்களினால் மந்திரங்களைச் செபித்துப் பிரீதி செய்வதால் பிணி விலகு மெனவும் ஆப்பிராயப்படுவர்களுமுண்டு

பிரணவ மந்திரம், திருமண மந்திரம், த்வயம், சரமச்சுலோகம் பஞ்சாட்சரம், திருவட்டாச்சரம் ஆகிய இவற்றால் கடவுளைப் பிரீதி செய்வித்தல்; சில அட்சரங்களை உருப்போட்டு, அப்பியாசித்து, செபம் செய்வதன் மூலம், பாம்புக்கடி, தேள் கொட்டு, நாய் கடி, எலி கடி வேறு பல கொடிய விட செந்துக்கள் தீண்பம் விளைவிக்காதபடி தடுத்தல், அட்டமாசித்து, பேய், பிசாசு, பில்லி, சூனியம் இவை போன்ற வினைகளுக்குரிய மந்திர செபங்களால் அவ்வவற்றிற்குரிய துன்பம் நீங்குவதையும் அனுபவத்தினால் நாள்தோறும் தமிழ் நாட்டிலும், கேரளா நாட்டிலும் நடைபெறுவதைப் பார்க்கிறோம். நிற்க, விபூதியைக் கொண்டும், தண்ணீர், வேப்பிலை இவற்றைக் கொண்டும் பெரியோர்கள் அல்லது அதில் வல்லோர்கள் பார்வை ஏற்பட்ட மாத்திரத்தில் சில மந்திர அட்சரங்களை உச்சரித்துப் புரோட்சிப்பதின் மூலம் நோய்கள் நீங்குவதும் இயற்கையாகயிருக்கின்றது. ஆதலால் **"மந்திரம்"** என்பது இத்தியாதி செயல்களைக்குறிப்பதாகு மென்பது அறிஞர்களின் கருத்தாகும்.

3. **"அவிழ்தம்"** என்பது தாது தாவர, சங்கமப் பொருள்களால் தயாரிக்கப்படும் மருந்துகளேயாகும். இவற்றுள் "இரச மணி" யும் ஒன்றாகும். இரச மணியை மூப்பு வின் உதவியைக் கொண்டு செய்து முடிப்பது சாலச் சிறந்தது. மூப்புவைக் கொண்டு சீனச் சரக் கறுபத்தினாலும் சுண்ணமாகும். செந்தூரம், பற்பம், செய நீர், திராவகம், பாணத்தினால் குடோரி, கட்டு, களங்கு முதலியயாவும் மூப்புவின் உதவியால் தயாரிக்கக் கூடியதோடு சரக்கு அதிதங்களும் நீறிப்போம் என்பதில் ஐய மில்லை. ஆதலால், "அவிழ்தங்களில்" ஒன்றுதான் "இரச மணி" என்பது கருதவேண்டும். ஆரம்பத்தில் மணி, மந்திரம், அவிழ்தம் எனக் கூறியதினுள்ள "மணி" தெய்வமணியையே குறிக்குமென் பதை அறிவித்துள்ளார்கள்.

**நாடி நடையின் இலக்கணம் (நாடி நடை உண்டாகும் விதம்) :**

தேகத்திலிடத்தேயுள்ள எல்லா உறுப்புகளிலும் சிறந்தது இருதயம். இதன் மூலமாகத்தான் தாதுக்கள் யாவும் போஷிக்கப்படுகின்றன. இதுவே தேகம் தன்னிலையிலிருப்பதற்கும் சுகமில்லாமைக்கும், காரணம். இதன் தொழில் வேறுபாடுகளை நாடிகள் உணர்த்தும். சப்த தாதுக்களுக்கும், இருதயம், நாடி, நரம்பு, ரத்தக் குழாய் முதலியவற்றிற்கும் தொடர்பு உண்டென் பதை முன்னமே தெரிந்திருக்கிறோம்.

இருதயத்தின் இடது சடரம் (Left Ventricle) குவியும்போது இரத்தம் கண்டரையின் வழியாகச் சென்று சகல நாடிகளுக்கும் பரவும்; அப்போது நாடிகள் விரியும்; மறுபடியும் இடது சடரம் விரியும்போது நாடி நரம்பு ரத்தக் குழாய்களிலிருக்கும் குருதி யானது குறைந்து நாடிகள் சுருங்கும். இவ்விதமாக இருதயம் குவியவும், விரியவுமாகயிருப்பதால் அதனுடன் சேர்ந்த நாடி, நரம்பு, ரத்தக்குழாய்களுக்கும் விரிந்து சுருங்கும் தன்மையுண்டு. இந்தச் செய்கையைத்தான் **நாடி நடை** எனக் கூறுவர்.

**நாடி நடையின் குணங்கள் யாவும் இருதயத்தின் நடைக்கு ஒத்திருக்கும், எவ்வாறெனில்:**

இருதயத்தினுடைய நடையின் (துடிப்பு) பேதாபேதங்களை நாடிகள் மூலம் நமக்கு அறிவிக்கின்றது. இருதயத்தினுடைய நடை தேக ஸ்திதிக்கு ஒத்திருக்கும். தேகத்தில் நோய் கண்டால் இருதயத்தின் சுபாவமான நடை இழந்துபோம். தேகத்திலீருக் கும் நோயை இருதயம் தெரிந்து கொண்டு நாடிகள் மூலமாக நமக்கு அறிவிக்கின்றது.

ஆகையால் நாடி நடையின் பேதர பேதங்கள் யாவும் தன்றா கத் தெரியாவிட்டால் தேகத்திலீருக்கும் வியாதியின் கூறு செவ்வையாகத் தோன்றாவாம்.

**நாடி நடையைப் பரீட்சிக்கக்கூடிய இடங்களாவன:**

மானிடர்க்கு ஏற்பட்ட எழுபத்தீராயிரம் நாடி நரம்பு ரத்தக் குழாய்களிலும் நாடி நடைபெறும். நாடியைக் கணிப் பதற்குப் பத்து ஸ்தானங்கள் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. குறிப் பாக கைகளிலும், கன்னச் சுழிகளிலும், மர்ம ஸ்தானங்களிலும், கணுக்கால்களின் உட்புறத்திலும், கால் பெருவிரலின் மேல்பாகத் திலும் நாடி நடையைப் பரீட்சிக்கலாமெனவும்; அவற்றுள் முக்கியமாகக் கை நாடியே சிறந்ததெனப் பிரமமுனி கூறியுள்ளார்.

திருமூலர் வாக்கின் பிரகாரம் குதிங்காலினுட் புறம், மர்ம ஸ்தானம் (காமியம்); உந்தி, மார்பு, காது, மூக்கு, கண்டம் (கழுத்து), காம், புருவம், உச்சி முதலிய பத்து இடங்களில் நாடி யைப் பரீட்சிக்கலாமெனவும், கூறப்பட்டிருக்கின்றன. அன்றியும், எல்லாச் சித்தர்களும். கை நாடிப் பரீட்சையையே பிணிகளைக் கண்டுபிடிப்பதற்குச் சிறந்ததெனக் கூறியுள்ளார்.

(மேற்கோள்.)

1. "கூர்ந்திடவே கன்னமது சுழியிற்றானும்
குறிப்பான கைகளிலும் மர்ம ஸ்தானத்தன்னில்
சார்ந்திடவே கணுக்காலினுட்புறத்தில்
சார்வாகப் பெருவிரற்கால் மேலதாக
தேர்ந்திடவே நாடிதனையுபயோகிக்கத்
தெளிவாக மாந்தருக்குச் செப்பலாச்சு
போர்த்திடவே சகலருங்காதினாடி
பேசினார் பிரமமுனி பேசினாரே"

என்பதினாலும்;

2. "தாதுமுறைகேள் தனித் தகுதிச் சந்தோடு
ஓதுமுகாமியமுந்தி நெடுமார்பு
காது நெடுமூக்குக் கண்டம் கரம்புருவம்
போதுமுமுச்சிபுகழ் பத்தும் பார்த்திடே"

என்ற திருமூலர் நாடி நூல் பிரகாரமும் அறிகிறோம்.

**நாடி பார்ப்பதற்கு கரத்தின் நாடி சிறந்ததெனல்.**

(மேற்கோள்.)

1. "போர்த்திடவே சகலருக்குங் கரத்தினாடி
பேசினார் பிரமமுனி பேசினாரே."

(வெண்பா.)

என்பதினாலும்,

2. "அறியவுந்தி வாதமடு பித்தந்தானும்
அறியுநடுமார்பில் வன்மை—குறிக்குமே
ஐயமுயருச்சி யண்டு நிலையாங்குணரப்
பையக் கரம்பற்றிப்பார்

(கண்ணுச்சாமியம்.)

என்பதினாலும்,

கரத்தின் நாடியே சிறந்ததெனவும், எளிதில் பார்த்தறியக் கூடிய தெனவும் அறிகிறோம். எங்ஙனமெனில், கையில் ஆசை என்பின் மேலோடும் நாடி நரம்பு ரத்தக் குழாயானது மணிக்கட்டு பரியந் தம் சிறுத்து மேல் புறமாகவும், Superficial தூலக்கமாகவும் இருப்பதால் மூன்று விரல்களால் வலி, அழல், ஐயமாகிய நாடி

நடையை எளிதில் அறியலாம். மற்றயிடங்களில் ரத்தக் குழாய்கள் இதைப் போலல்லாது பருத்திருப்பதால் deep seated எளிதில் நாடி நடை அறியக்கூடா.

**வாத-பித்த-ஐய தோடங்களின் நிலை. (வைத்தியசார சங்கிரகம்.)**

"செப்பு முந்தி சிதையும் வாதநிலை
ஒப்பு மார்பு முதையும் பித்தநிலை

கப்புமுச்சி கழறுமைய நிலை
மெய்ப்பு மாமுனி மீண்டுமுரைத்ததே"

என்பதால், அபானன் முதல் உந்தி வரை வாதநிலை; உந்தியின் மேல் மார்பு வரை பித்தநிலை; மார்பு முதல் உச்சி வரை ஐயநிலை என அறியவும். மேலே கூறிய வெண்பாவிலும் இது பற்றிய விவரம் அறியலாம்.

வளி-அழல்-ஐயதோடங்கள் அடங்குமிடம்.

(மேற்கோள்).

"அறிந்திடும் வாதமடங்குமலத்தினில்
பிறிந்திடும் பித்தம் பேராஞ்சலத்தினில்

மறிந்திடுமையம் வசிக்கும் விந்துவில்
உறைந்திமிம்மூன்றுக்குறவாத்தலமிதே"

என்பதனால், வாதம் மலத்திலும், பித்தம் சிறுநீரிலும், ஐயம் விந்துவிலும் அடங்குமென அறிகிறோம்.

**வாத-பித்த-ஐய உடல் திறம்.**

1. வாத நோயாளர்க்கு உடல் கறுப்பாயிருக்கும்.

2. பித்த நோயாளருக்கு உடல் பசுமஞ்சளாகவும், சிவப்பாகவுமிருக்கும்.

3. ஐய நோயாளர்க்கு உடல் வெண்மையாக இருக்கும்.

4. ஐய நோயாளர்களுக்கு உடல் நிறம் கலப்புற்ற குற்றங்கள் அளவாகக் கலந்திருக்கும்.

5. சந்நி நோயாளர்களுக்கு உடல் பல நிறமாக இருக்கும்.

(வெண்பா—மேற்கோள்):

"உரைத்த கறுப்பன் வாதரோகி பித்த ரோகி
அரைத்த மஞ்சளைக்குளித்தோனாவான்—இரத்தம்
குளித்தவனுமாவான் கொடுஞ்சேத்துமரோகி
வெளுத்திடுவான் தொந்தமெல்லாமே."

என்பதினால், முக்குற்ற உடல் நிறமறிகிறோம். (தேரன்.)

**மரணக்குறியைக் காட்டும் உடல் நிறம்.**

1. சூரியனைப்போல் நற்சிவப்பும், மினுமினுப்புங் காணின் இரண்டு மாதத்திலும்;

2. சந்திரனைப்போல் சிறு செந்நிற வெண்ணிறமும், மினுமினுப்பும் சேர்ந்து காணின் மூன்று மாதத்திலும்;

3. செவ்வாயைப் போல (அங்காரகன்) செந்நெருப்பு வருணமும் மினுமினுப்புங்காணில் நான்கு மாதத்திலும்;

4. வியாழனைப் போல பொன்னிறமென்னும் மஞ்சள் நிறமும் மினுமினுப்புமிருக்குமாகில் ஐந்து மாதத்திலும்;

5. சுக்கிரனைப் போல வெண்ணிறமும், மினுமினுப்புங்காணில் ஆறு மாதத்திலும்;

6. சனியைப் போல கருப்பு நிறமும் மினுமினுப்புங்காணில் ஏழு மாதத்திலும்;

7. உமையவள் நிறம் போலக் கரும் பச்சையும், மினுமினுப்புங் காணில் எட்டு மாதத்திலும் மரணம் சம்பவிக்கும் எனவும்;

8. மேற்கூறிய நிறங்கள் தோன்றாமல் வேறு மினுமினுப்பு மாத்திரம் நேருமாகில் மருந்து பயன்படாது எனவும்; அக்கணத்திலேதானே மரணத்தைக் கொடுக்குமெனத் "தேரன் நூல்" கூறுகின்றது.

(வெண்பா—மேற்கோள்.)

"என்றுமதி செவ்வாய் இரணியன் சுங்கன்காரி,
என்றுமதி செவ்வாய் இவையொடுமை—என்றுமதி
அஞ்சுமாதக் கணமேல் ஆறுதிங்களாமினுக்கே,
அஞ்சுமாதக்கணமேயாம்"

என்பதினால், உடல் நிறத்தைக் கொண்டு, மரணக் குறியை அறியக் கூடும்.

**மூவகை நாடிகளை ஆராய்ந்து அறியும் விதம் எங்ஙனமெனில்.**

வைத்தியன் ரோகியின் வலது முழங்கையைத் தனது இடது கையால் முதலில் செவ்வையாகப் பிடித்துத் தனது வலது கையால் ரோகியின் வலது உள்ளங்கையை கோர்த்துப் பிடித்து நெட்டை வாங்கி அனல் பறக்கத் தேய்த்து, அப்பால் வைத்தியனின் இடது கை விரல்களால் ரோகியின் பெரு விரல் பக்கமாக ஆரை என்பின் மேலோடும் நாடி நரம்பு ரத்தக் குழாயின்மேல் மணிக்கட்டுக்கு ஒரு அங்குலம் தள்ளி மேலாக மூன்று விரல்களால் சமமாக மெல்லென அழுத்தியும், தளர்த்தியும் ஆராய்ந்த பின்பு, விரல்களை மாறி மாறிக் கூர்ந்து கவனித்து நாடியின் கதியை ஆராய்ந்து பார்த்து நோயின் தன்மையை அறிதல் வேண்டும்.

இதே விதமாக ரோகியின் இடது கை நாடியை ஆராயும்போது வைத்தியன் தனது கைகளை மாற்றி உபயோகித்தல் வேண்டும். ரோகியின் இடது கைக்கு வைத்தியனின் வலது கையை உபயோகித்து நாடியை ஆராய்தல் உத்தமம்.

மூவிரல்களால் நாடிநடையை ஆராயும்போது ஆட்காட்டி விரலிலுணர்ந்தது வாதம் எனவும்; நடு விரலிலுணர்ந்தது பித்தமெனவும்; பெளத்திர விரலிலுணர்ந்தது ஐயமெனவும் அறிக.

இவற்றுள் வாதம் அதிகமானால், அதற்குரிய நோய்களையும், பித்தம் அதிகமானால் அதற்குரிய பிணிகளையும், ஐயம் அதிகமானால், அதற்குரிய பிணிகளையும் உண்டாக்கும். அன்றியும், பெரு விரலும், சிறு விரலும் உணர்த்தும் நாடி யானது பூதநாடி யாகக் கணக்கிடப்பட்டிருக்கின்றது. இதனையும் சேர்த்து நாடிகள் ஐந்து எனவும், அவை **"பஞ்ச நாடி"** அல்லது **"பஞ்சபூத நாடி"** எனவும் வழங்குவர்.

நாடி நடையைச் சின்னாட் பழக்கத்தில் யாவராலும் அறியக் கூடும். சிரத்தையுடன் கவனித்து அப்பியாசித்தால் சுலபமாக நாடிகளைப் பற்றிய முக்கியமான குறிப்புகளை அறியலாம். இதனைத் தமிழ்நாடெங்கும் வைத்தியர்கள் நன்குணர்வார்கள். "நோய் நாடல், நோய்முதனாடல்" பிரகாரம் நாடியின் ஆராய்ச்சியையே பிரதானமாகவும் கருதுவார்கள்.

(மேற்கோள்—வைத்தியசாரசங்கிரகம்).

1. "பார்க்கவே கைபிடித்து நாடிதன்னைப்
பகர்ந்திடவே நெட்டையது வாங்கிப்பின்னுஞ்
சேர்க்கவே மணிக்கட்டு மேலதாகச்
சிறப்புடனே நாடிதன்னை விரலாற்காண
தீர்க்கவேயமுத்திப்பின் தளர்த்தியேதான்
திறமுடனே விரல்களையுமாறி மாறி,
ஆர்க்கவே நாடிதன்னைப் பார்ப்பாயானால்
அப்பனே நாடி நடை தெரியும்தானே."

என்பதினாலும்,

2. "கரிமுகனடியை வாழ்த்திக் கைதனில் நாடிபார்க்கில்
பெருவிரலங்குலத்தில் பிடித்தடி நடுவே தொட்டால்,
ஒரு விரலோடில் வாதமுயர் நடுவிரலிற்பித்தம்,
திருவிரல்மூன்றிலோடில் சேத்துமம்நாடிதானே."

என்பதினாலும்,

3. "குறியாய் வலக்கரங்குவித்த பெருவிரல்,
வறியாவதன் கீழ்வைத்திடு மூவிரல்,
பிறிவாய் மேலேறிப்பெலத்ததுவாதமாம்
அறிவாய் நடுவிரலமர்ந்தது பித்தமே."

4. "பித்தத்தின் கீழே புரண்டதையமாம்,
உற்றுற்றுப்பார்க்கிலோர் நரம்பேயோடிடும்
பத்தித்த மூவரும் பாய்கின்ற வேகத்தால்
மத்தித்த நாளம்போல் வழங்கும் நரம்பிதே."

என்பதினாலும்,

5. "ஆர்க்குமே தோன்றுமித்தநாடி மூன்றும்,
அறுதினமும் நல்லறிவாலறிந்து தேறே."

என்பதினாலும்,

6. "பார்க்காட்டாற் தெரியாது பழக்கமாகப்
பார்த்தறிந்தோர் தனையடுத்துப் பரிவாய்க்கேளு."

என்பதினாலும்,

*(பஞ்சநாடிகள்.)*

7. "சாற்றுவேன் பெருவிரலிற் பூதநாடி
சங்கையில்லா ஆள்காண்டி வாதமென்க
ஏற்றமுள்ள நடுவிரல்தான் பித்தமாகும்
இசைந்ததொரு பவுத்திரமேயையமாகுந்
தோற்றுகின்ற சிறு விரல்தான் பூதநாடி
சுற்றமுள்ளகுரு நாடியைந்துட் சேரும்."

(ப. சி. நாடி நூல்.)

என்பதினாலும்,

நாடி நடையை ஆராயுங் கிரமமும், முக்குற்றங்களையும், பஞ்ச நாடிகளையும் குறிக்கும் விரல்களையும், நாடி என்பது ஒரே நாடி நரம்பு ரத்தக் குழாயின்மேல் விரல்களால் அழுத்தியும், களர்த்தியும் பார்க்கும்போது, எற்படும் துடிப்பு என்பதைக் குறிக்குமே யொழிய வேறல்ல எனவும், நாடியானது நாளம் போன்றதென்றும் அறிகிறோம். பலமுறை பழகினால், சுலபமாய்க் கற்றுக்கொள்ள லாமெனவும், பழக்கமாகப் பார்த்து வராவிடில் நாடி நடை புலப் படாது எனவும், அதனை நன்றாய்ப் பழுதித் தேர்ச்சியடைந்த அறிவாளிகளையடுத்துக் கற்றுக்கொள்ளல் மிகவும் அவசியம் என் பதையும் வற்புறுத்தியுள்ளார்கள்.

**ஆண், பெண் இவர்களுக்கு முறையே வலது, இடது கை நாடியைப் பார்ப்பது நல்லது.**

1. "கேளப்பா புருடருக்கு வலதுகையைக்
கிருபையுடன்தான் பிடித்து நெட்டைவாங்கி,
சூளப்பா பெருவிரலோரங்குலத்துக்கப்பாற்
சுகமாக மூவிரலாலழுத்திப்பார்க்க
வாளப்பா முதல் விரலே வாதநாடி
வன்மையுடன் நடுவிரலே பித்தநாடி
கேளப்பா அணிவிரலே சேத்துமநாடி
திறமாக நின்னறிவாற் றெளிந்துகாணை."

என்பதினாலும்.

2. "பார்க்கவே பெண்டுகளுக்கிட தாபக்கம்"

(பரிபூரணை நாடி.)

என்பதினாலும்,

3. "கன்னியர்க்கிடப்புறமாம் கணவர்க்கங்கே
மைகின்ற வலப்புறமாம். . . . ."

என்பதினாலும்,

4. "மருவிடு நோயினாடி மதித்திடில்
வலக்கை மைந்தர்க்கு
அரிவையர்க் கிடக்கைதன்னில்
அழுத்தியே சுட்டிக்காட்டும்
விரலதில் வாதமாகுமிகு நடு
விரலிற் பித்தம்
தருமணி விரலில் ஐயந்தானி
யல் பறிந்து ராரே."

(குணவாகட நாடி.)

என்பதினாலும்,

5. "நானெனும் புருடர்க்கெல்லாம்
நாடிதான் வலக்கையாகும்
தேனெனும் மடவார்க்கெல்லாந்
திடம்பெற விடக்கை சித்தே."

(வை. சா. சங்கிரகம்.)

என்பதினாலும்,

6. "செப்பவான் மக்களுக்குச்
சேர வலக்கையாகும்
ஒப்பவரிவையர்க்கோதவிடம்."

(கண்ணுசாமியம்.)

என்பதினாலும் அறிக.

(இதின் பொருள்).

எல்லோருக்கும் வலது, இடது கைகளில் நாடியை ஆராயலா மெனினும், புருடர்க்கு வலது கையிலும், பெண்களுக்கு இடது கரத்திலும், பேடியாக இருந்தால் அவனது குறியை அனுசரித்து வலது அல்லது இடது கை நாடிகளை ஆராய்வது சாத்திரக்கிரம மென்பர்.

**புருடருக்கு வலது கரமும் பெண்களுக்கு இடது கரமும் நாடியை ஆராய்வது ஏன்?**

1. ஏனெனில் நாபிக் கூர்மமானது பெண்களுக்கு மேல் நோக்கியும், ஆண்களுக்குக் கீழ்நோக்கியும் இருக்கிறபடியால் ஆண் பெண்களுக்குக் கைநாடி வித்தியாசமாகவிருக்குமென நூல்களில் கூறப்பட்டிருக்கிறது.

(பக்கம் 41—மூன்றாம் பாகம்—அனுபோக வயித்திய பரமரகசியம்.)

ஆனது பற்றியே ஆண் பெண்களுக்கு முறையே வலது, இடது கை நாடிகளையே முக்கியமாக ஆராய்தல் வேண்டும் என்ற நியதி ஏற்பட்டிருக்கிறது போலும்.

2. மேலும், பின்போற்பத்தியில் கூறியபடி:

"வேனென்ற பத்துமொன்றாய் மனதுங்கூடி
மேவியவன் கலந்துவந்து விழுகும்போது
மானென்ற மௌன பரவசமேயாவான்
மருவுகின்ற பெண்ணுக்கு முறைதான் கேளே."

என்பதினாலும்,

"முறையான பெண்ணாணும் மௌனமூற்றால்,
மோசமில்லை கருவங்கே தரிக்கும்பாரு
நிறையான வலத்தோடில் ஆணேயாகும்
நேராகவிடத் தோடில் பெண்ணேயாகும்
உறையான கருப்பையில் சுக்கிலமாய்ப்பாய
உத்தமனே சுரோணிதந்தா னுரைத்துகொள்ளும்."

என்பதினாலும்,

ஞானேந்திரியம், கருமேந்திரியம், மனசு ஆகிய பதினொன்றும் ஆணுக்கும், பெண்ணுக்கும் ஒன்றுபட்டு, பிராணவாயு வலத் தோடில் (வலது நாசியிலோடில்) ஆண் எனவும், இடத் தோடில் (இடது நாசியிலோடில்) பெண்ணெனவும் கரு உற்பத்தியாகுமென்றும், மத்திய கலையாகிய சுழிமுனை இயங்குமாகில் அலியாக அமையுமென்றும், அதற்கேற்றாற்போல் ஆண் பெண்களது உருவமைப்புகளில் வித்தியாசம் ஏற்படுவது இயற்கையாகும். ஆனதுபற்றியே வலது இடது பாரிசமும் நாடி நடையும் வித்தியாசப்பட்டிருக்குமென அனுமானிக்கப் பொருத்தமுண்டு.

**நாடி நடையை சீவ செந்துக்களின் நடைக்கு ஒப்பிடப்பட்டு அதனைக் குறியடையாள நாடி எனக் கூறுவர் ; இதன் தாற்பரியம் என்ன ?**

உதாரணமாக :

1. "வாகினிலன்னங்கோழி மயிலென நடக்கும் வாதம்
ஏகிய வாமையட்டை யிவையென நடக்கும் பித்தம்
போகிய தவளைபாம்பு போல்வாம் சேத்துமந்தான்
ஆகிய நாடிமூன்றும மர்ந்திடிற் சன்னியாமே."

2. "ஆகியவாதநாடி யன்னம்போற் குயிலைப்போலும்
ஏகியபித்தநாடி எழிலாமை யட்டை போலும்
போகிய சிலேஷ்ம நாடிபொல்லாத தவளை
பாம்புபோலும்
பாகுடன் மூவிவர்தாமும் பாடினார் நாடிதானே."

புருடருக்கு நாடிநடை கூறுமிடத்து :

3. "வந்திடும் வாதநாடி மயில்போலுமன்னம்போலும்
தொந்தமாங் கோழிபோலுந் தொகுப்புடன் பித்தநாடி
முந்தியவாமை போலு முனைப்புடன் யட்டைபோலும்
பிந்திய சிலேத்தும நாடிபே சொணா தவளைபாம்பே."

பெண்களுக்கு நாடிநடை கூறுமிடத்து :

4. "பாம்பென வாதநாடி பகுப்புடன் சர்ப்பம்போலாம்
வேம்பென பித்தந்தானும் விருப்புமண்டூகம்போலும்
சாம்பென சிலேத்துமநாடி சடுதியிலன்னம் போலும்
நாம்பெனப் பெண்களுக்கு நாடிதான் நடக்குந்தானே."

5. "இல்லையே வாதமெழினடை கோழியாம்
எல்லையே பித்தம் எழும்புந் தவளைபோல்
ஒல்லையே வையமூர்ந்திடும் பாம்புபோல்
அல்லையே கண்டறிந்தவர் சித்தரே."

என்பதினால் நாம் தெரிந்துகொள்வது யாதெனில், மூவகை நாடி நடையின் மாத்திரையளவைக் கணித்த சித்தர்கள் அங்காங்கு நால் களில் நாடி நடையின் அளவை அங்காங்கு சீவ செந்துக்களின் நடையின் கால் அளவுக்கு உபமானமாகக் கூறினராயினும், ஒருவர் கூறிய பிரகாரம் மற்றவர்கள் நிலவி ங்களில் கூறவில்லை.

காரணம் யாதெனில், அவரவர்கட்கு உள்ளத்தில் உதித்தவாறு ஒரு நாடிக்கு ஒரு செந்துவையே அளவாகக் கொண்டதாகத் தோணவில்லை. ஆயினும், அச்சீவராசிகளின் நடையை ஒன்றாகவே பாவிக்க வேண்டும். ஏனெனில், நூல்களை ஆராயுங்கால், வாதத்தின் நடையை, மயில், அன்னம், கோழி, ஓணான், குயில், கொக்கு முதலியவற்றின் நடைக்கு ஒப்பிடப்பட்டிருக்கிறது.

பெரும்பான்மையாக இவைகள் யாவும் நிதானித்து மனிதரைப் போல் அடி வைத்து நடக்கக்கூடியவை. அவைகள் கால்களைச் சுபாவமாக உயர்த்தி மறுபடியும் கீழே வைக்கும் காலயளவை ஒரு மாத்திரைக்குரிய அளவாகக் கருத வேண்டும்.

பித்தத்தின் நடை, ஆமை, அட்டை ஆகியவற்றின் நடைக்கு உபமானமாகக் கூறப்பட்டுள்ளது. இவைகள் நகர்ந்து செல்லக் கூடியவை. யாதலால் ஒன்றுக்கொன்று பொருத்தமாகும். இதற்கு மாத்திரையளவு அரை எனக் கூறியுள்ளார்.

சிலேத்துமத்தைக் கூறியவிடங்களில் தவளை, பாம்பு இவற்றை உபமானமாகக் கூறப்பட்டிருக்கின்றன. இவைகள் முறையே குதித்தல், சீறல் என்னும் செய்கையுடையனவாதலால் பொருத்தமாகும். இதற்கு மாத்திரையளவு கூறின் காலாகும்.

சீவ செந்துக்களின் நடையின் உபமானம் ஆண், பெண் இருவருக்கும் சற்று வித்தியாசமாகயிருப்பதைக் "குருநாடி" நூலில் கூறிய பிரகாரம் மேற்கண்ட செய்யுட்களால் அறியலாயிற்று.

(சிகிச்சா ரத்னதீபம் வை. சாரசங்கிரகம்.)

நாடி ஆராய்ச்சியில் முக்கிய கவனிப்பு :

முத்தோடங்களில் நாடி நடையை ஓழுங்காகக் கற்றுணர்தல் அவசியம். காலம், தேசம், வயது, வன்மை முதலியவற்றை ஞாபகத்தில் வைத்துக் கொண்டு ஒரு முறைக்கு இரு முறை வெவ்வேறு காலங்களில் நாடி நடையின் தன்மையைச் சிரத்தையுடன் பகுத்துணர்தல் வேண்டும். நாடி நடையைப் பழகுவோன் அறிவைச் சிதறவிடாமல், மனதை ஓர்மையுடன் நிடப்படுத்திக் கூர்ந்து கவனிப்பதுமன்றி தேசம், காலம், வயது, வன்மை இவற்றிற்குத் தக்கபடி முக்குற்றங்களின் வன்மை மென்மை களையும், ஈன் நடை, புற நடை, நிலைத்தல், கூடித்தல், குதித்தல்,

துள்ளல், அழுந்தல், படுத்தல், கலத்தல், முன்னோக்கு, பின் நோக்கு, பக்கம் நோக்கு, சுழலல், முதலிய நாடி நடைகளின் விசேடக் குறிகளையும், குரு பரம்பரையாக நன்குணர்ந்த தேசிகரிடம் சென்று பழகி நுண்ணறிவாலும், அனுபவத்தாலும் அறிதல் வேண்டும்.

அன்றியும், சித்தர்களியற்றிய நாடி சாத்திரச் செய்யுட்களை செவ்வனே அறிந்த பின்னர் ஒவ்வொரு குற்றத்தையும் குறிக்கின்ற நாடியுடன் வேறு கலப்புகளிருக்கின்றனவா வென்பதையும் அறிய வேண்டும். தனித்தனி நாடி நடையின் வன்மை, மென்மைகளையும், மற்றுமுள்ள குறிப்புகளையும், மாணாக்கன் நன்கு கற்றுப் பழகி உணர்ந்தாலன்றி மேற்கொண்ட கலப்பு நாடிகளின் நடையை (தொந்தங்களை) அறிவது இயலாதெனவும் நூல்கள் வற்புறுத்துகின்றன.

**எண்வகைத் தேர்வுகளால் நோய்களை நிச்சயித்தல் சிறந்ததெனல்.**

(குணவாகட நாடி)

1. "தரணியுள்ள வியாதி தன்னை யட்டாங்கத்தால்
தானறிய வேண்டுவது யேதோ வெனில்
திரணியதோர் நாடி கண்கள் சத்தத்தோடு
தேகத்தினது பரிசம் வருணம் நாக்கு
யிரணமல மூத்திரமாமிவைக ளெட்டும்
யிதம்படவேதான் பார்த்துக் குறிப்புங் கண்டு
பரணருளால் பெரியோர்கள் பாதம் போற்றிப்
பண்பு தவறாமல் பண்டிதஞ் செய்வீரே."

என்பதினாலும்,

(அகத்தியர் நாடி)

2. "நாடியால் முன்னோர் சொன்ன நற்குறி குணங்களாலும்,
நீடிய விழியினாலும் நின்ற நாக் குறிப்பினாலும்,
வாடிய மேனியாலு மலமொடு நீரினாலும்
சூடிய வியாதி தன்னைச் சுகம் பெற வறிந்து சொல்லே."

3. "சுகம் பெற வங்கமெல்லாஞ் சுருங்கிய குணங்களாய்த்து,
முகங்குறி நாவு மூக்கு செவி நாநனயன நாடி,
அகந் துடிதுடிக்கும் நாடி யறுதிகை விடுதி நாடி
உகந்துடி யுந்திநாடி யுண்மையாய் நடைகள் பாரே."

4. "பார்மனக் கவலையற்றுப் பலபல விசாரம் விட்டுத்
தேர்மனந் தெளிந்து நீடிநு செய்குணம் வழியிதென்று
ஊரகமுந்தி தன்னில் ஒளி பல வியாதி செய்யும்,
தீபன வண்டியாலே சேர்ந்திடும் நோய்கள் தானே."

5. "சொல்லிய வந்தி தன்னில் சூழித்ததோ செழுத்தைப்பற்றி
எல்லையி லெழுந்த நாடி எழுபஞ் தீராயிரத்தில்
தல்லதோர் நாடி மூன்று நயக்கு நீயறிந்து பாரே."

என்பதினாலும், நாம் தெரிந்து கொள்ளுவது யாதெனில்; நாடி நூல்களில் முன்னோர்கள் கூறிய நற்குறி குணங்களாலும், விழி, நா, நிறம், மொழி, மெய், மலம், நீர் ஆகிய இவற்றைப் பரிசோதனை செய்வதனாலும்; தேகத்திலேற்பட்டிருக்கும் சகல உபாதைகளையும் ஆராய்ந்தும், முகம், நா, மூக்கு, செவி, புருவம், கண், நாபி, மார்பு ஆகிய இவற்றின் நாடிக் குறிப்புகளையும், மரண நாடி கைவிடுங் குறி முதலிய அசாத்தியக் குறி குணங்களையும் நன்கு ஆராய்ந்து, தெரிந்து அதன்பின் நோய் இன்னதென்பதை முடிவு கட்டுவதே சாலச் சிறந்ததாகும் எனவும்;

மேலும்; பண்டிதன் மனக் கவலையற்று, விசாரமற்றுத் தெளிந்த மனதோடு எல்லாவிதப் பரீட்சைகளையும் (தேர்வுகள்) செய்து பார்த்து, நோய் இன்னதென்றும், அதற்குரிய பரிகாரம் இன்னதென்றும் முடிவு செய்தல் முக்கிய மெனவும்;

தீபன வண்டியாலே நோய்களுண்டாவதைப் பிரதானமாக வளி, அழல், ஐயம் என்னும் நாடிகளின் கணிப்பால் நோய்களை யறிதல் நன்மை பயக்கு மெனவும் அறியலாயிற்று.

## நாடி.

**எண்வகைத் தேர்வுகளில் நாடியின் கணிப்பைப் பிரதானமாகக் கூறுவதேன்.**

ஏனெனில்;

1. நாடியை எண்வகைத் தேர்வுகளில் சேர்த்துக் கூறிய நூல்களிலிருப்பது போல் எண்வகைத் தேர்வுகளில் நாடியைச் சேர்க்காமல், சப்தம், பரிசம், ரூபம், ரசம், கந்தம், மலம், நீர், எச்சில் என்பதான எண்வகைத் தேர்வுகளாகவும் அமைத்துக் கொண்டு. நாடியைத் தனிச் சிறப்பாகவும், முதன்மையாகவும், விவரமாகவும் விரித்துக்கூறும் பொருட்டுத் தனிப் பெரும் நாடி நூலாகச் சித்தர்கள் கூறியுள்ளார்கள்.

2. பிணிகளைக் கணிப்பதற்கு எண்வகைத் தேர்வுகளும் நாடியுட்பட அவசியமே, நாடியே பிரதானமென்பதாக நூல்கள் கூறவில்லை. பல இடங்களில் நாடி நடையை அறியலாமெனிலும் கரத்தின் நாடி விசேட மென்பதுதான் நூல்களில் கூறப்பட்டிருக்கிறது. ஆயினும், நாடியைப் பற்றிய தனி நூல்கள் சித்தர்களியற்றியிருக்கிறகாரணத்தினாலும், மற்றும் கீழ்கண்ட விவரங்களைக் கொண்டும், அனுபவத்தைக் கொண்டும் என்வகைத் தேர்வுகளில் நாடியைப் பிரதானமாக வைத்து நோய்களைக் கணித்தல் துறந்த நாடியைப் பிரதானமாக வைத்து நோய்களைத் தூறந்த முறையெனக் கொள்ளல் அவசியமாகும்.

3. நாடி கணிப்பில் தேர்ச்சி பெற்ற மருத்துவன் பிணியாளன் அல்லது சுற்றத்தாரின் உதவியின்றிப் பிணியாளனின் நாடியைக் கொண்டே பிணியை ஒருவாறு அறியலாம் எங்ஙனமெனில், ஞாபக மற்ற நிலையிலோ, ஊமையும் செவிடுமாயுள்ள பிணியாளரின் நிலைமையை அறிவதற்கு நாடிகணிப்பு பெரிதும் பயன்படும்.

வாதாதி முத்தோடங்களின் குணா குணங்களை நம்து விரல்களால் நாடி நரம்பு ரத்தக்குழாயின் மேல் வைத்து அழுத்தியும், தளர்த்தியும், பார்க்கும் போது நாடியின் துடிப்பின் மூலம் அறிகிறோம். கணிக்கும் விரல்கள் கருவிபோன்றவை. செவிக்குழாய் (Binaural Stethoscope) உதவியைக் கொண்டு இருதயத்தின் நிலைமையை அறிவது போல நாம் நம் கைவிரல்களைக் கொண்டு நாடி நடையை (முக்குற்றங்களின் நிலைமையை) அறிகிறோம்.

4. வாத பித்த ஐயம் என்னும் இவற்றைக் குறிக்கும் நாடி நரம்பு ரத்தக்குழாய்கள் யாவும் இருதயத்தின் தொடர்பு. இருதயத்தின் தொழில் வேறுபாடுகளை நாடியின் மூலம் நாம் அறிகிறோம். இருதயத்தின் நடை தேகஸ்திதிக்கு ஒத்திருக்கும். தேகத்தின் கண் உண்டாம் நோயை இருதயம் தெரிந்துகொண்டு நாடியின் மூலம் நமக்கு அறிவிக்கின்றது. நாடி நடையின் பேதா பேதங்கள் நன்றாகத் தெரியாவிட்டால் தேகத்திலிருக்கும் பிணியின் கூறு செவ்வையாகத் தோன்றாவாம்.

5. "நோய் நாடி நோய் முதனாடி யது தணிக்கும்,
வாய் நாடி வாய்ப்பச் செயல்"

என்பதிற்கிணங்க உண்வாதி செயல்களாலுண்டாம் நோயினை அறியும்பொருட்டு, நோய் அறிதற்கான நாடல் வழி நாடி எனவும், உணவு செயல்களால் வளி, அழல், ஐயம் ஆகிய மூன்றில்

ஒன்றேனும், இரண்டேனும், மூன்றேனும் மிகுந்து அல்லது குறைந்து பிணிக்கப்படுமாகையால், பிணிக்கப்படும் குற்றம் யாது? அதற்கு மூதன்மையாக இருந்தது எது? அதனைத் தணிப்பதற்கு வழி எது என்பதனை முறைகள் நாடுவதே மருத்துவனின் கடமையாகும். ஆகவே நாடியைக் கொண்டே பிணிகளைக் கணிக்க வேண்டுமென்பது ஒருவகையில் பொருத்த மென்பது புலனாகிறது.

**6. மேலும் பிணியை நாடியாலறிந்து ஊட்டு மருந்தே சிறந்த தெனக் கூறிய விடத்து :—**

(i) "முப்பிணி மருவி முனிவு கொள் குறிப்பைத் தப்பா தறியும் தன்மையும் வாத பித்தவையம் பிரிவையு மவைதாம் ஏறியிறங்கி இணைந்துக் கலந்து மாறி மாறி வரும் செயற்கையாற் பிணி நேர்மையறித்து நீட்டுமருந்தே சீரியதாமெனச் செப்புவர் சித்தரே."

**என்பதினாலும்,**

**அதனைக் கணிக்கும் உபாயம் எவ்விதமென்பதைக்கூறுமிடத்து :**

(ii) "நாடி மூன்றையும் நாடிடுங்காலை
நடுவிரல் நாடியை நாடியே கணிப்பார்
நற்றவர்க்குருவென நவிலு மறையே."

**என்பதினாலும்**

**அதன் பயனைப்பற்றி கூறுமிடத்து :**

(iii) "மூன்றிலொன்றுயர்ந்ததை மூன்னாறிந்து,
மூந்தியதனை யொழித்திடு மருந்திடு
தனியும் நோயின் தந்திரமிதுவே
பேணிக் கணித்திடின் பிறவாய் பின் குணம்."

**என்பதினாலும்,**

**நாடிப் பரீட்சையே சிறந்த முறை என்பதையும், நாடிக் கணிப்பால் பெரும்பாலும் பிணிகளை அறிந்து மருத்துவம் புரிவதே கிரமமென்பதையும் மூன்னோர்கள் நன்கு விளக்கி யுள்ளார்.**

7. நாடிப்பரீட்சையால் காணும் தேகப்பிணி அல்லது உடலில் தாக்கும் குறி குணங்களை சத்தம், பரிசம், ரூபம், ரசம், கந்தம், **மலம், சிறுநீர்,** எச்சில், வியர்வை, சுக்கிலம், செவி, மெய், கண், நா,

மூக்கு ஆகிய இவற்றின் ஆராய்ச்சியைக் கொண்டும், பிணியாளனின் சரித்திரத்தைக் கொண்டும் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும்.

ஆயினும், மருத்துவம் என்னும் சிகிச்சை அல்லது பரிகாரம் புரிய ஆரம்பிக்கும் போது நாடியின் குறிப்பைக் கொண்டு அதற்குத் தக்கவாறு மருத்துவம் புரிவதே மேலான முறை என்பதை நாம் ஞாபகத்தில் வைத்துக் கொள்ளல் வேண்டும். முக்குற்றங்களில் எக்குற்றம் பிரதானமாகப் பிணிக்கப்பட்டு நோயாளி துன்புறுகிறாரோ, அதற்கேற்ற மருந்துகளைக் கொடுத்து முதன்மையாகக் கேடடைந்த குற்றம் தணிக்கப் படுமானால், அதுவே நோய் குணமாகும் கிரமத்திற்கு ஏற்றவழி எனவும் பின்னிட்ட துணை வியாதிகளும் கிளைக்காது என்பதற்கு உறுதி கூற இடமுண்டு என்பதை அறியவும்.

இன்னபல காரணங்களால் நாடிப் பரீட்சையே சிறந்த தென்பதை நிரூபிக்கலாயிற்று.

சுகதேகியில் மூவகை நாடியறியும் மாத்திரைக்கிரமம்.

1. "வளிவன்னியைக்கு வழங்கிடுமாத்திரை
ஒன்றரைகாலாய் ஓதினர் சித்தரே".

என்பதினாலும்,

2. "வழங்கிய வாதம்மாத்திரை யொன்றாகில்
தழங்கிய பித்தந்தன்னிலரை வாசி
அழுங்குங்கபந்தானடங்கியே காலோடில்
பிறங்கிய சீவர்க்குப்பிச கொன்றுமில்லையே."

(குணவாகடம்)

என்பதினாலும்;

3. "மெய்யளவு வாதமொன்று
மேல்பித்தமோரையாம்,
ஐயங்காலென்றே அறி."

(கண்ணுசாமியம்)

என்பதினாலும்;

வாதம் ஒருமாத்திரை, பித்தம் அரைமாத்திரை, கபம் கால் மாத்திரையளவு எனக் கூறியுள்ளனர்.

## நாடி நடை-மாத்திரையின் இலக்கணம்.

ஒரு மாத்திரை என்பது ஒருகை நொடி அல்லது ஒரு கண் இமை சிமிட்டலின் (மூடித்திறக்குதல்) கால அளவைக் குறிக்கு மெனச் சிலரது அபிப்பிராயம். ஆனால் மருத்துவ நூல்களை ஆராயுங்கால், மாத்திரை என்றால் நாடியின் துடிப்பு ஒரு கோதுமையரிசிப் பிரமாணம் எழுந்து அடங்குவதற்குரிய கால அளவு எதுவோ அதனையே குறிக்குமென நூல்கள் கூறுகின்றன.

(மேற்கோள்)

1. "செய்கின்ற நாடி பெருவிரலின் மேலாய்
திருந்திழை மூன்றங்குலத்தின் நடுவதாக
தைகின்ற கோதுமையரிசி போலச்
சர்வம் வியாபித்திருக்குமதுதான்கூறில்,
கையடியுங் காலடியும் நாடி நிற்கும்
கன்னியர்க்கிடப்புறமாங்கணவர்க்காங்கே
மைகின்ற வலப்புறமாம்வாத நாடி
வந்து முன்னேநடக்குமப்பால் வகை சொல்வேனே".

2 "சொல்லுகிறேன் பித்தநாடி தோன்றுமப்பால்
தொடர்ந்து சிலேட்டுமநாடி தோன்றுமப்பால்
அல்லு நிறக்குழலாளே நாடி நின்றால்
ஆச்சரிய நாடியொன்றறிந்துசொல்வது."

(ப. சி. நாடி).

(வெண்பா)—

3. "செப்பவாண்மக்களுக்குச் சேரவலக்கையாகும்
ஒப்பவரிவையர்க்கோதவிடம்—தப்பாது
அறைந்தார் மூனிவராயளவு கேள்தோற்றும்
விரைகோதுமையாம் வியந்து."

(கண்ணுசாமியம்).

என்பதினாலும்,

ஆண் மக்களுக்கு வலக்கரத்திலும்; பெண்மக்களுக்கு இடக் காத்திலும் நாடி நடையைக் கணித்தல் கிரமம் என்பதையும்; நாடி நடையின் மாத்திரையளவை நோக்குமிடத்து ஒருகோதுமை விரைப் பிரமாணம் நாடியின் துடிப்பு எழுந்து அடங்கக் கூடிய கால அளவு அல்லது வேகம் உடையதாக யிருக்குமென அறிக!

வளி, அழல், ஐயம் மூன்றும், தத்தம், நிலையில் மிகுதல், மீறி நடத்தல், கதித்தல், தோடத்தில் தோடம் (வாதத்தில் வாதம், பித்தத்தில் பித்தம், ஐயத்தில் ஐயம்) இவை போன்ற சொற்கள் யாவும் ஒன்றே என்பதின் பொருள் கூறுகிறார்.

1. வாதநாடி நடையிருக்கவேண்டிய மாத்திரையளவிற்கு இரண்டு பங்கிருந்தால் வாதமிகுதி, வாதம் கதித்தல், வாதம்மீறி நடத்தல், வாதத்தில் வாதம் என்னும் பதங்களால் வழங்கப்படும்.

2. பித்தநாடி நடை தன்மாத்திரையளவில் இரண்டு பங்கு யிருக்குமானால் பித்தமிகுதி, பித்தம் கதித்தல், பித்தம்மீறி நடத்தல், பித்தத்தில் பித்தம் என்னும் சொற்களால் வழங்கப்படும்.

3. ஐயநாடி நடை தன்மாத்திரையளவில் இரண்டுபங்குயிருக்கு மாகில் ஐயமிகுதி, ஐயம்கதித்தல், ஐயம்மீறி நடத்தல், ஐயத்தில் ஐயம் என்னும் சொற்களால் வழங்கப்படும்.

குறிப்பு.—தோடங்கள் ஒவ்வொன்றும் தன்னளவில் மிகுதியான காலங்களில் அவற்றிற்குரிய மாத்திரையினளவு இரட்டிப்பாக யிருக்கும் போதுமட்டிலும் மேற்கூறிய பிரகாரம் சொற்கள் வழங்கப்படும் என அறிக.

தொந்தம் நாடி இன்னதெனல் அல்லது தொந்தநாடிகளின் மாத்திரை விகிதம் இன்னதெனல்.

1. வாதபித்த தொந்தம் (வளி அழல் கலப்பு)—வாதநாடி தன்னளவில் இரண்டுமாத்திரையும், பித்தநாடி தன்னளவாகிய அரை மாத்திரைக்கு மேலும் அதற்கு இரட்டிப்பாகிய ஒரு மாத்திரைக்குள்ளடங்கியும் நடைபெறும் என்பதேயாம்.

2. வாத ஐய தொந்தம். (வளி ஐயக் கலப்பு)—வாதநாடி, தன்னளவில் இரண்டுமாத்திரையும், ஐய நாடி தன் அளவாகிய கால் மாத்திரைக்குமேலும், அதற்கு இரட்டிப்பாகிய அரை மாத்திரைக்குள்ளடங்கியும் நடைபெறும் என்பதாம்.

3. பித்தவாத தொந்தம். (அழல் வளி கலப்பு)—பித்த நாடி தன்னளவில் இரண்டுபங்கு அல்லது தன் இயற்கைமாத்திரையின் இரட்டிப்பாகிய ஒருமாத்திரையையும், வாதநாடி தன்னளவில் ஒருமாத்திரைக்கு மேலும், இரண்டுமாத்திரைக்குள்ளடங்கியும் நடைபெறும் என்பதாம்.

4. **பித்த ஐய தொந்தம்.** (அழலையக்கலப்பு)—பித்தநாடி தன் அளவில் இரண்டு பங்கு அல்லது தன் இயற்கைமாத்திரையின் இரட்டிப்பாகிய ஒருமாத்திரையும் ஐயநாடி தன்னளவாகிய கால் மாத்திரைக்கு மேலும், அதன் இரட்டிப்பாகிய அரைமாத்திரைக் குள்ளடங்கியும் நடைபெறும் என்பதாம்.

5. **ஐயவாத தொந்தம்.** (ஐய வளிக் கலப்பு)—ஐய நாடி தன் னளவில் இரண்டு பங்கு அல்லது அதன் இரட்டிப்பான மாத்திரை யாகிய அரை மாத்திரையும்; வாத நாடி தன்னளவில் ஒரு மாத்திரைக்கு மேலும் இரண்டு மாத்திரைக்குள்ளடங்கியும் நடை பெறும் என்பதாம்.

6. **ஐயபித்த தொந்தம்.** (ஐயழல் கலப்பு)—ஐயநாடி தன்னளவில் இரண்டு பங்கு அல்லது அதன் இரட்டிப்பான மாத்திரையாகிய அரைமாத்திரையும், பித்தம் தன்னளவாகிய அரை மாத்திரைக்கு மேலும், அதன் இரட்டிப்பாகிய ஒரு மாத்திரைக்குள்ளடங்கியும் நடக்குமென்பதேயாம்.

குறிப்பு.—சில நாடி நூல்களில் கூறியிருக்கிற தொந்தநாடி நடையின் மாத்திரையளவு பொருத்தமன்று. தொந்த நாடி நடை களின் மாத்திரையளவைப்பற்றி "வல்லாதி நாடி" நூலிலும், மற் றும் சில நூல்களிலும், பலவிதமாகக் கூறியுள்ளார். ஆனால் அவை பொருத்தமாகத் தோன்றவில்லை. பதினென்சித்தர் நாடி நூல் பக்கம் 64-ல் கூறியுள்ளதைக் கீழே காணவும்.—

1. "தானென்ற வாதமாத்திரை தானிரண்டு
தப்பாது பித்தமது தானொன்றேறில்,
வேனென்ற வாதபித்தந் தொந்திப்பாகும்
மிகுவாதமிரண்டுஞ் சிலேத்தும மொன்றாகில்,
ஊனென்ற வாதமையந்தொந்திப்பாகும்
உற்றபித்தமிரட்டித்துரைவாத மொன்று சேரில்
கோனென்ற பித்தமூடன் வாதஞ் சேர்த்துக்
கொண்டதித்தரோக மெனக் கூறே"

2. "கூறுவேன் பித்தமாத்திரையிரண்டாகில்
கொடியசிலேற்பன மொன்றுதிக்குமாகில்,
தூறுவேன் பித்தசிலேத்து மந்தானென்றும்.
தலங்குசிலேத்தும மிரண்டு வாதமொன்றுந்
தேறுவேன் சிலேத்தும வாதந்தானென்றும்
சிலேத்தும மிரட்டித்துப் பித்த மொன்று சேரில்
வேறு நீ நினையாதே சிலேத்தும பித்தம்"

எனபதினால்,

வாத பித்த தொந்தத்திற்கு முதன் முதலாகக் கூறியவாதம் இரண்டு மாதிரையும் பித்தம் ஒரு மாத்திரையு மென்ற கணக் கையே மற்றெல்லா வகையான ஐந்து தொந்தங்களுக்கும் நாடி நடையின் மாத்திரையளவாக மேலே கூறிய செய்யுளில் கூறி யுள்ளார் (அதாவது இரண்டுக்கொன்று மாத்திரை விகிதம் கூறி யுள்ளது). இது பொருத்தமாகயில்லை. ஆனதுபற்றியே மேலே வாசகத்தில் விளக்கிய தொந்த நாடிகளின் மாத்திரையளவைச் செய்யுளுக்குமாறுதலாக மாற்றியமைத்து விளக்கியிருக்கிறது. அறிவாளிகள் மிகுந்த நுட்பத்துடன் தொந்தநாடிகளின் மாத் திரை விகிதத்தை அனுபவம் மூலமாக அறிந்துக் கொள்ளல் அவசியமாகும்.

வாத பித்த கப நாடிகள் தொந்தமாக நடைபெறும் காலத்தில் தம் மாத்திரையளவில் இரட்டிப்பாகவும் அல்லது இயற்கையள வுக்கு மேலும் இரட்டிப்பு மாத்திரைக்குள்ளடங்கியுமிருக்கலாமே யொழிய, இயற்கையில் சொற்பமாத்திரையளவாயுள்ள பித்தமும், ஐயமும் இரண்டு முழு மாத்திரையைப் பெற்றும், வாதம் தன் சுபாவமான ஒரு முழு மாத்திரையளவைப் பெற்றுமிருக்குமா னால், இது தொந்தமாகா! இரண்டிரண்டு நாடிகள் தத்தம் அள வில் ஒன்று (முதலில் கூறும் நாடி) இரட்டிப்பாகவும், மற்றொன்று அதன் இயற்கைக்கு மேலும், சற்று இரட்டிப்புக்கு உள்ளடங்கியும் நாடிகள் நடைபெறு மென்பதை இத்தொந்த நாடியின் கருத்து என அறியவும்.

**பிணியைநாடியாலறிந்து ஊட்டுமருந்தை சிறந்ததெனல்.**

"மூப்பிணி மருவி முனிவுகொள் குறிப்பை
தப்பாதறியுந் தன்மையும்வாத
பித்தவையப் பிரிவையுமவைதாம்
வறியிறங்கி இணைந்துக்கலந்து
மாறி மாறிவருஞ் செயற்கையாற் பிணி
நேர்மை யறிந்து நீட்டுமருந்தே
சீரியதா மெனச் செப்புவர் சித்தரே".

என்பதனால், வாத பித்த ஐய நாடிகளின் தன்மை, பிரிவு, மிகுதி, குறைவு, தொந்தம், சன்னிவாதம், மாறி மாறி வரும் செயற்கை ஆகிய இவற்றாலேற்படும் பிணிகளையறிந்து மருத்துவம் செய்தல் சிறந்த முறையாகுமென்பதே இதன் கருத்தாகும். நாடிகளைக் கொண்டு பிணிகளின் நேர்மையறிந்து பரிகாரம் புரிவது அவசிய மென்பதையும் அறியவும்.

**நாடிநடையளவையறிய உபாயம்.**

"நாடி மூன்றையும் நாடிடுங்காலை
நடுவிரல் நாடியை நாடியே கணிப்பான்
நற்றவக்குருவென நவிலு மறையே."

என்பதினால், வாத பித்த ஐய நாடிகளின் தன்மைகள், குறிப்பாக அவற்றின் அளவை அறிய வேண்டின், மூன்று நாடிகளில் நடுவிரல் நாடி தராசு முனைக்குச் சமானமாக மத்தியமாக வைத்து, மற்ற இரு விரல்களின் தன்மையைக் கணக்கிடல் கிரமமென்பதே இதன் பொருளாகும்.

**நாடி கணிப்பால் நோய் தணியுறு கிரமம் அறிய உபாயம்.**

"மூன்றி லொன்றுயர்ந்ததை முன்னரறிந்து
மூந்தியதனை யொழித்திடு மருந்திடு
தணியும் நோயின் தந்திர மதுவே.
பேணிக் கணித்திடின் பிறவாய் பின்குணம்"

என்பதினால், மூன்று நாடிகளில் எது அதிகக் குற்றமடைந்திருக்கிறதோ அதனை அவசரமாகவும், அவசியமாகவும் எண்ணி, முதலில் அதற்கேற்ற மருந்துகளைக் கொடுக்க, அந்த மிகுந்த தோடம் நீங்க மார்க்கமாகும். வியாதியைப் பரிகரிப்பதற்கு அல்லது தணிப்பதற்கு இது தந்திரமும் சுலபமுமான உபாயமென்பது மன்றி, பிற்குணங்களாகிய துணை நோய்கள் (கிளை நோய்கள் (complication) எவையும் தொடராவாம் என்பதையும் தெரியவும். **நோயை நன்கு ஆராய்ந்து அறிந்து மருந்து கொடுத்தல் இன்றியமையாதது.)**

(சிகிச்சாரத்னதீபம்)

"மதித்திடற் கருமை வாய்ந்த
மாண்பரிகாரமெல்லாம்
துதித்திட வுணர்ந்தானேனு
துகளறப் பிணியின்றன்மை,
பதித்திடவுணராவாகிற்
பயனுறாதாகலானே
விதித்திடு பிணித்திறத்தை
விளம்புது முதற்கண்மன்னோ."

என்பதினால், ஒரு பண்டிதனுக்கு எவ்வளவோ பெருமை வாய்ந்த பரிகாரங்கள் (மருந்து வகைகள்) தெரிந்திருந்த போதிலும் நாடியைப் பிரதானமாகக் கொண்ட எண்வகைத் தேர்வு, மற்றுமுள்ள

குறி குணங்கள், நோயின் சரித்திரம் முதலியவற்றால் நோயின் தன்மைகளைத் தீர்க்கமாக அறியானாயின், பண்டிதனது மருந்துகள் பயனற்றதாகி விடுமென்பது திண்ணம். ஆதலால் நோயைப் பற்றியும், நோயாளியைப் பற்றியும் வசலாறுகளை முற்றிலும் பண்டிதன் நன்றாய் அறிந்து, நோய் இன்னதென்பதைத் தெரிந்து அதற்கேற்றவாறு மருத்துவம் புரிவதே பண்டிதனது கடமையாகும். நிற்க,

**தோன் மருத்துவப் பாரதத்தில்—பக்கம் 59-ல் கூறியிருப்பதுபோல்**

"புவன நாயகனிருந்துங் கவுரவர்
முன் பாண்டவர்பின் போனதென்ன,
விவரமெனி னோய்க்கவுழ்தமென்
பதன்றி மருந்திற்கு வினையுமுண்டோ!
கவலையுறு நோயாளி முன்னாயுள்
வேதியன் பின்காட்சி போனோய்
துவரவடிப்பது போலக்கவுரவ
நோய்களைக் கொல்லத் தொடங்கினானே."

என்பதற்கிணங்க, ஜகத்ரக்ஷகனான கிருஷ்ணபரமாத்மா இருந்தும் அவரது உதவியை நாடி முதன் முதலில் கவுரவரும், அதன் பிறகு பாண்டவரும் சென்றதின் தாற்பரியம் யாதெனில்; நோய்க்கு அவுழ்தமேயன்றி மருந்திற்காகப் பிணி ஏற்பட்டதல்ல வென்பதைக் குறிப்பிடுகிறது. ஆதலால் பிணியை நன்கு ஆராய்ந்தறிந்து, அதன் பிறகு அதற்குரியதக்க மருந்துகளைக் கொண்டு நோயை நிவர்த்திக்க வேணுமென்பதும், அதுவே சுலபமென்பதும், இதன் பொருளாகும்.

**பஞ்சநாடி அல்லது பஞ்சபூதநாடி என்றாலென்னை?**

(வை. சா. சங்கிரகம்).

**பக்கம் 10.**

1. "தூண்டிடவே பெருவிரல்தான் பூதநாடி,
தொந்தமாம் ஆள்தூண்டிவாதமென்க
அண்டிடவே நடுவிரல்தான் பித்தநாடி,
அணி விரல் பௌத்திரந்தான் சேத்துமநாடி,
பூண்டிடவே சிறுவிரல்தான் பூதநாடி,
பூட்டினார் குருநாடியைந்து கோர்வை,
நீண்டிடவே யிப்பின்னல் யார்தான் காண்பார்
நிறைந்த பரிபூரணத்தோர் காண் பார்தாமே."

என்பதினாலும்;

மீண்டும், நாடி நூலில் கூறிய பிரகாரம் :

2. "சாற்றுவேன் பெருவிரலிற் பூதநாடி
சங்கையில்லா ஆள்காண்டி வாதமென்க
வற்றமுள்ள நடுவிரல்தான் பித்தநாடி
இசைந்ததொரு பெளத்திரமே ஐயமாகும்
தோற்றுகின்ற சிறுவிரல்தான் பூதநாடி
சுற்றமுள்ளகுரு யைந்துட்சேரும்
மாற்றுமே குருநாடியைந்துட் சேர்ந்து
வளர்ந்து நிற்கும்பேர் பெரிய வண்மைதானே."

என்பதினாலும் ;

மேலும், "பஞ்சபூதநாடி" யின் இலட்சணம் பற்றிக் கூறிய விடத்து :

3. "சொல்லுவேன் ஐந்தாம் விரல் பூதநாடி
சுகமுடன் நாலாம் விரல் வாதமென்க,
எல்லுவேன் மூவிரலாம் பித்தமாகும,
எழிலான இருவிரலையமாகும்
தொல்லுலகில் வழங்குகின்ற சிறீ விரல்தான்
சுத்தமுள்ள குருநாடி யென்று சொல்வார்
மல்லுமொரு நாடிகள் தானொன்றுக் கொன்று
வளர்கின்ற பின்னலின்றன் வண்மை பாரே."

என்பதினாலும்,

வால்மீகர் "பஞ்சபூதநாடி" யெனக் கூறிய விடத்து :

4. "ஐவிரலைந்து நாடியது
செய்யும் வகையைக் கேளீர்,
மெய்விரலொன்று வாத மொழி
விரலொன்று பித்தம்,
நெய் நடுவிரலிலே சிலேத்துமம்
நேர்விரல் பூதநாடி,
மைசிறு விரலே சொன்னபூதநாடி
வகுத்தனர்வால் மீகர்தானே."

என்பதினாலும் ; "பஞ்சநாடி" அல்லது "பஞ்சபூதநாடி" என் பது பெருவிரலில் உணர்த்தும் துடிப்பு பூதநாடி ; ஆள்காட்டி விரலிலுணர்த்தும் துடிப்பு வாதம் ; நடுவிரலில் துடிப்பு பித்தம் ; அணிவிரல் துடிப்பு சிலேத்துமம் ; சிறுவிரல் துடிப்பு பூதநாடி, என்னும் ஐந்து நாடிகளை ஐந்து விரல்களிலும் காட்டியிருப்பதை அறிகிறோம்.

"குருநாடி" இவ்வைந்துக்கும் நடுமையமாக நின்று ஐந்து நாடிகளின் நடைமுறைக்கு ஏற்ற உதவி புரியுமெனவும் கூறப்பட்டுள்ளது.

இப்போர்ப்பட்ட பின்னலான நாடி நடையின் கணிப்பை அறிவது போதிய பயிற்சியுள்ளவர்களுக்கே சாத்திய மென்பதையும் வலியுறுத்தப்பட்டிருக்கிறது.

குறிப்பு :—பூதநாடிகளின் நடை பல விதம். பேய், பிசாசு, பில்லி, சூனியம், பயம், அருட்சி ஆகிய இவற்றால் தேகத்தில் பற்பல குறி குணங்களையுண்டாக்கி அசவுக்கியத்தைத் தரும். இதனைச் "சங்காதோடம்" என்றும் கூறுவர். இது பற்றிய விவரங்களை "வால்மீகர் பூதநாடி சாத்திரத்தில்" விரிவாகக் காணலாம்.

## அத்தியாயம் IX

### "குருநாடி" பற்றிய விளக்கம்.

"குருநாடி" என்பது முன்னர் கூறிய "சீவநாடி" அல்லது "உயிர்த்தாது" வையே குறிக்கும். இதனைவேறுபடுத்திக் கூறுவாருமுளர். இது பற்றிய அபிப்பிராயம் பல. அவை பின் வருவன :—

1. குருநாடி எப்போதும் பித்தத்தின் முன்னே நிற்கும்.

2. தசநாடி பத்துக்கும் திறமாய் நிற்கும்.

3. உடற்குயிராய் நின்ற குருநாடி வாத பித்த ஐயத்திற்கு நடுவிலிருப்பதைப் பார்க்கில், அது மூவிரலுத்தாண்டி, மூளை மூதலாருவிப் பாய்ந்து விசை நரம்பூடே சேர்ந்து, சந்திர மண்டிலம் போய்ச் சார்ந்து, பின்பு பம்பரம்போற் கிறுகிறென்று வாத பித்த ஐயமென்ற நாடி மூதலாடி, ஓடி, மண்டலங்கள் மூன்றுஞ் சுற்றிக் கத்திரிக்கோல் மாறலெனக் கட்டிச்சேர்ந்து, வாத பித்த ஐயம் நடுவிலின்று இம்மூன்று நாடிகளையும் இயல்பாய் நடத்தி வைக்கும் பண்புடையதாம் குருநாடி.

இதிலின்றும் நாம் தெரிந்து கொள்வது யாதெனில், வாத பித்த ஐயம் என்னும் நாடிகளின் நடை ஏற்படுவதற்குக் காரணம் குருநாடியின் தத்துவமேயாகும். அது "சீவநாடி" யைத் தவிர வேறில்லை. நாடிநூல் பக்கம் 74-ல் கூறிய பிரகாரம் "குருநாடி"யே "ஆத்ம நாடி"யாகக் கருதியுள்ளார்.

"சொல்லுகின்ற வாத பித்த சேத்துமந்தன்னில்
சுகமான பித்தமது பூதநாடி,
வெல்லுகின்ற குருநாடி ஆதம் நாடி
வெகு நோயையகற்றி நலங்காட்டும் நாடி,
பல்லுயிர்க்குந்தானாக யிருந்த நாடி
பலகோடி யண்டமெல்லாம் நிறைந்த நாடி,
அல்லலுறு மாங்காரம் பிராண நாடி
அக்கினியைச் சேர்ந்தெழுந்த நாடிதானே."

(சதக நாடி).

என்பதற்கிணங்க, வாத பித்த சேத்துமமென்ற மூன்று நாடிகளில் பித்த நாடியானது "பூதநாடி", "குருநாடி", "ஆத்ம நாடி" யென வழங்கும் எனவும் சகல நோய்களையுமகற்றி நன்மை பயக்கும் நாடி எனவும், அகங்காரம், பிராணன், உயிரக்கினி, இவை எல்லாவற்றிற்கும் குருநாடியே ஆதாரமாயுள்ளது எனவும் கூறியுள்ளார்.

குருநாடி எப்போதும் பித்தத்தின் முன்னே நிற்கும் என்ற கருத்திற்கிணங்க, பித்த நாடியே குருநாடியாகவும் ஆத்ம நாடியாகவும் சீவ நாடியாகவும் நிகழலாமென யூகிக்க வேண்டியிருக்கிறது. குருநாடியைத் தனி நாடியெனக் கூறுவாருமுளர்.

குரு நாடியைத் தனி நாடியாக எண்ணினாலும் சரி அல்லது வாத பித்த ஐயம் ஏற்படுவதற்கு எது ஆதி காரணமோ, அதுவாக வைத்துக் கொண்டாலும் சரி, இவ்விரண்டையும் ஒன்றாகவே பாவிக்க வேண்டும். ஏனெனில் குரு நாடி வாத பித்த ஐய நாடிகளுக்கு வலுவைக் கொடுத்து, அவற்றின் (வாத பித்த ஐயம்) இயற்கை நடைகளெல்லாம் குருநாடியின் தத்துவத்தால் நடை பெறுகின்றன வென்பது தெரியவருகிறபடியால் வாத பித்த ஐயம் நாடிகளின் வரலாறுகளை நன்கு அறிந்தாலே குரு நாடியைப் பற்றிய விவரங்கள் யாவும் அறிந்தது போலாகும்.

நிற்க, குருநாடியானது வாத பித்த ஐய நாடிகளுக்கு நடுவில் தராசு முனைபோலிருந்து, அவற்றிற்கு வலுவைக் கொடுப்பதாகக் கூறும் நூல்கள் குருநாடியைத் தனி நாடியெனக் கருதுகிறார்கள். ஆனால் வாத பித்த ஐயம் நடைபெற்றுக் கொண்டிருக்கிற தருணத்தில் குரு நாடியைத் தனித்து அறிவது சாமான்ய மன்று, மூன்று நாடிகளும் ஓடுங்குங் காலத்து குருநாடி (அதாவது "ஆத்ம நாடி" அல்லது "சீவ நாடி") நடையை உற்றுக் கவனித்தால் ஒருக்கால் பித்தத்தின் முன்னே புலனாகக்கூடும்.

(மேற்கோள்.)

குருநாடியிருப்பிடம். (வை. சா. சங்கிரகம்)

1. "குருநாடி எப்போதும் பித்தத்தின் முன்னே
குறிப்பாக நிற்குமதுபாருபாரு
தருநாடி தசநாடி திறமாய் நிற்கும்
தாக்குமூடல் உயிராக நிற்கும் பாரு
திரிநாடி வாத பித்தமையம் நடுவிற் பற்றி
தீவிரமாய் மூன்று விரல்தாண் டிப்பாயும்
வருநாடி விசைநரம்பினூடே சேர்ந்து
வளர்சந்திரமண்டலம் போய்ச் சாரும் பாரே.

2. "பாரேதான் பம்பரம்போற் கிறுகிறுத்துப்
பகர்வாத பித்தமைய மென்ற நாடி
சேரவே மண்டலங்கள் மூன்றுஞ் சுற்றிச்
செழித்த கத்திரிக்கோன் மாறலெனவே சேர்ந்து
வாரேதான் வாத பித்தமையம் நடுவிருந்து
வாதத்தில் கோழி அன்னம் மயில் போலாகும்
கூரேதான் பித்தத்தில் ஆமையட்டைக்
குறிப்பாகச் சேத்துமத்தில் பாம்பு போற்றவளை
யாமே."

என்பதினாலும்,

வேறு-பரிபூரண நாடி நூல்.

3. "பாரப்பா குருநாடி ஐந்துக்கு நடுவில்
பாரிநிற்கும் வரலாறு தன்னைக் கேளு
சீரப்பா பித்தத்தின் முன்னே நிற்கும்
தசநாடி பத்துக்கும் திறமாய் நிற்கும்
ஏரப்பா வாத மென்றுஞ்சொல்லுவர் மூடர்
இருத்தியங்கே பார்ப்பளவில் வேறாய் நிற்கும்
தாரப்பா கண்ட குருநாடி நேர்மை
தனையறிய வகையுனக்குச் சாற்றுவேனே."

(ப. சி. நாடி).

என்பதினால், இதன் பிரகாரம் குருநாடியைத் தனிநாடியாகக் கூறப்பட்டுள்ளது.

மேலும், பஞ்சநாடிகளிருப்பிடம் கூறுகிறார் :—

4. "சாற்றுவேன் பெருவிரலிற் பூதநாடி
சங்கையில்லா ஆள்காண்டி வாதமென்க
ஏற்றமுள்ள நடுவிரல்தான் பித்தநாடி
இசைந்த தொரு பௌத்திரமே ஐயமாகும்
தோற்றுகின்ற சிறுவிரல் தான் பூத நாடி
சுற்றமுள்ள குருநாடி ஐந்துட் சேரும்
மாற்றுமே குரு நாடி ஐந்துட் சேர்ந்து
வளர்ந்து நிற்கும் பேர் பெரிய வண்மைதானே."

என்பதினால்,

குரு நாடியானது பஞ்ச நாடிகளிலும் கலந்து நின்று அவற்றை வளர்த்து, வலுப்படுத்தி நடைபெறச் செய்கிறதென்பதையும் அறிகிறோம்.

மீண்டும் பக்கம் 8—106—ப. சி. நாடி நூலில் கூறுவதாவது :—

5. "காசப்பா உடலுக்குளுயிராய்நின்ற
கருவான குருநாடி யொன்று காணே."

6. "ஒன்றுக்குமெட்டாத நாடிநேர்மை
யூடருவித்தாலிருக்கு முண்மை கேளீர்
வண்டுகள் தான்மதுவருந்தும் நேர்மைபோல
வாத பித்த சேத்துமத்தின் மதுவையுண்ணும்
என்றைக்கும் வாத பித்தமையம் நடுவே நிற்கும்
ஏறுவதுங்குறைவதுமில்லை யப்பா
கன்றுக்குப் பாலிறக்கும் பசுவைப்போல
காத்திருக்குங் குருநாடி காலைப்பாரே."

என்பதினால்; குருநாடி வாத பித்த ஐய நாடிகளுக்கு மத்திய மாயிருந்து மூன்றுக்கும் ஏற்றக்குறைவான தொழில் ஏற்படாத படி பாதுகாப்பதாகவும் சொல்லப்படுகிறது.

அதற்கு மேலும் கூறுவதாவது :—

7. "குருநாடி நிலையறியாக் குருடரெல்லாம்
கூட்டமிட்டுச் சாத்திரத்துக் குவமை சொல்வார்
குருநாடி வாத பித்த சேத்துமத்தின்
மத்திய மென்றிதை யறியார்வார்த்தை சொல்வார்.

கருநாடி குருநாடி யாகக்காணும்
கைமுறையாய்க் குரு தொட்டுக் காட்டத் தோன்றும்
பெரு நாடி சாத்திரத்தில் மயங்கிடாதே
புலந்தியாதம் குரு நாடி பின்னல்பாரே."

என்பதினால், குரு நாடி வாத பித்த சேத்துமை நாடிகள் மூன்றுக்கும் தராசு முனை போன்றதாகும்.

8. "தம்பமூடன் வாத பித்த ஐய நடுவிலேதான்
தமரகம் போலாடி நிற்கும் குருவிதாமே."

என்பதினால், குருநாடி வாத பித்த ஐயம் நாடிகளின் மத்தியில் தமரகம் போன்றது எனவும் விளங்குகிறது. "தமரகம்" என்னும் "இருதயம்" உடற்கு எவ்வளவு பிரதானமோ அதே போல குரு நாடியானது வாத பித்த ஐயமாகிய உயிர்த்தாதுவுக்குப் பிரதானமான தென்பதையும் அறிகிறோம். இதனை வேறுபடுத்திக் கணிப்பது சாமான்ய மன்று.

9. "ஏற்ற குரு நாடி தன்னையிசைந்து பார்க்கில்
இடையும் பிங்கலையுமே யிசைத்துமாறி
மாற்றமில்லாச் சுழிமுனையைத் தானேபற்றி,
மாறி நிற்குங் கத்திரிக்கைமாறல் போலச்
சீற்றமூடன் வாத பித்த சிலேற்பன மென்றே
தசநாடி திரிநாடி தானாய் நின்று
கோற்ற சிறுகுருநாடி நிலையைப் பார்க்கில்
கோமான்றன் திருக்கூற்றைக் கூறலாமே."

என்பதினால், குருநாடியைப் பற்றி ஆராயுங்கால் தச நாடியில் இடகலை, பிங்கலை, சுழிமுனை என்ற மூன்று நாடிகளும், அபானன், பிராணன், சமானன் என்ற வாயுக்களின் இயக்கத்தால் சுவாசத்தையுண்டாக்கி அதினின்றும் வாத பித்த ஐயம் என்னும் மூன்று நாடிகளும் உண்டாகி, உடலையும் உயிரையும் பொருத்தி நன்னிலையில் வைத்துக் காப்பாற்றி வரக்கூடிய தத்துவத்திற்குக் காரணமான சக்தி எதுவோ அதுவே குருநாடி எனக் கொள்ளலாம். சர்வேசுபரனாலேற்பட்ட அபூர்வமும் நுட்பமுமான தத்துவங்களில் குருநாடியைப் பற்றி விடயமுமொன்றாகும்.

குருநாடியின் தன்மையால் நோய்களைக் குறிக்கும் குணம்:

1. குருநாடி வாதத்தில் அட்டை போற் புரண்டுவரில் வாய்வு மிகும்; இருமல், சொறி, தினவு இவை மிகுதியாயுண்டாகும்.

குறிப்பு.—அட்டை போற் புரண்டு வரில் என்பது வாத நாடி தன் மாத்திரையளவில் குறைவாக நடைபெறின் எனலாம்.

2. குரு நாடி பித்தத்தில் அன்னம் போல் நடக்கில் சுரங்காயும்; வாய் நீர் சுழற்றும்; வியர்க்கும்; நீர் கட்டுப்படும்; கைகாலோயும் என்பனவாம்.

குறிப்பு.—அன்னம் போல் பித்த நாடி நடக்கில் என்பது பித்தம் தன் மாத்திரையளவில் மீறி நடந்தால் என்பதேயாம்.

3. குரு நாடி சிலேத்துமத்தில் சிங்கம் போல் சீறி நிற்கில் சந்நி தோன்றும்.

குறிப்பு.—சிங்கம் போல் சீறி நிற்றல் என்பது சிலேத்தும நாடி தன்னளவில் மீறி நிற்கில் எனப் பொருளாகும்.

4. குரு நாடி சிலேத்துமத்தை ஊடுருவிவருமாகில் (அதாவது வாதம், பித்தம் இவ்விரண்டும் ஒடுங்கி ஐயம் மட்டிலும் தனித் துக்கதித்து நின்றால்) அசாத்திய மரணக் குறிகளுண்டாகும்.

5. குரு நாடி மொத்தத்தில் குன்றிப் போகில் வயிறு கழியும்; கடுப்பெடுக்கும்; கைகால் வீங்கும்.

6. குரு நாடி பக்கம் பாயில் (அதாவது அதன் இயற்கை இருப் பிடமாகிய பித்தத்தின் முன்னே நிற்பதற்குப் பதிலாகப் பக்கத் தில் தோன்றினால்) சிலேத்துமம் எதிரே மோதும். (அதாவது சிலேத்துமம் அதிகரிக்கும்.)

7. குரு நாடி நேரே நிற்கில் வாத பித்த ஐயம் மூன்றும் சேரும். (அதாவது மூன்று நாடிகளும் தன்னிலைப்படும்.)

8. குருநாடி பின் வாங்கில் அசாத்தியங்களுண்டாகும். (அதா வது குருநாடி இயற்கையளவாய் நடைபெறாவிட்டால் அசாத் தியங்களுண்டாகும்.)

9. குருநாடி ஐயத்தில் விட்டிலைப் போல் துடிக்கில் மரண மாம்.

(மேற்கோள்.)

(பக்கம் 12 வயி-சா-சங்கிரகம்:)

(பக்கம் 8, 106-ப. சி. நாடி நூல்.)

1. "பேர்பெரிய குருநாடி குணமே தென்னில்
புரண்டுவரும் வாதத்திலட்டை போலச்
சீறிய வாய்வுமிகுபிருமல் தோன்றும்
தினவு சொறி மிகவும் வரும் தேகம் வாடுஞ்

சூரிய பித்தத்தி லன்னம் போலத்
தோன்றிடிலோ சுரமிருக்குஞ் சுழற்றும் வாய்நீர்
கார்பெருகி மருகி வருவது போல வியர்வை தோன்றும்,
கதித்திடுகில் நீர்கட்டுங்கைகாலோயுஞ் சேத்துமத்திற்
போமே."

2. "சிலேத்துமத்தில் குருநாடி சிங்கம் போலே
சீறிநிற்கிலதின் குணந்தான் சந்நி தோன்றும்
ஆற்பனத்தை யூடுருவித்தமருமாகில்
அசாத்தியமா மரணக்குறி தப்பா தப்பா
கார்ப்பனவே குருநாடி குன்றிப் போகில்
கழியும் வயிறு சுடுப்பெடுக்குங்கைகால் வீங்கும்
ஏற்பனவுமில்லை யில்லை திட்டஞ் சொல்ல
இசைந்த குருநாடிகளை யிருத்திப்பாரே."

3. "பாரப்பா குருநாடிபக்கம்பாயில்
பாரித்த சிலேத்துமந்தான் எதிரே மோதும்
கூரப்பா குருநாடி நேரே நிற்கில்
குற்றமில்லை வாத பித்தமைய மூன்றுஞ்சேரும்
தாரப்பா குருநாடிபின்னே வாங்கில்
தப்பாதே வசாத்தியங்கள் தான் உண்டாகும்
காரப்பா உடலுக்குளுயிராய் நின்ற
கருவான குரு நாடியொன்று காணே."

என்பதினாலும் அறிகிறோம்.

(வேறு.)

4. "காரப்பா குருநாடி சமனாய் நின்றால்
கல்லுடலில் வல்லுயிராய்க் கருதலாமே."

என்பதினால், குருநாடி வாத பித்த ஐயம் நடுவிலிருந்து அவற்றின் நடையை இயல்பாகத் தொழில் புரியச் செய்வதால் உடலும் உயிரும் மென்மேலும் கெட்டிப்பட்டு ஆரோக்கியமான நீண்ட ஆயுளைப் பெறும் என்பது இதன் கருத்தாகும்.

## அத்தியாயம் X

**முத்தோடங்களின் மாத்திரை விகிதம் (1 : ½ : ¼) சுபாவமான நிலையில் ஒன்று, அரை, கால் என ஒன்றுக்கொன்று வித்தியாசப்படுவதின் காரணமென்ன?**

1. தேகத்தினிடமாக எழுபத்தீராயிரம் (72,000) நாடி நரம்புரத்தக் குழாய்கள் தோன்றியிருப்பதாயும், அவைகளில் பெரு நாடிகளெனச் சொல்லப்படும் தச நாடிகள் இயங்குதற்கு தச வாயுக்கள் ஏற்பட்டிருக்கின்றன யெனவும் நூல்கள் கூறுகின்றன. தச நாடிகள் பத்தில் மூலாதாரமாக நின்றது இடகலை, பிங்கலை, சுழி முனை என மூன்று நாடிகளாகும். இம் மூன்றுள் இடகலை, பிங்கலைகளிரண்டும் வலம், இடமாகிய கால் பெரு விரல்களிலிருந்து ஆரம்பித்து இடம், வலம் நாசி வரையில் கத்திரிக் கோல் மாறலாக ஓடி நிற்கும், சுழி முனை நடுவே மூலாதாரத்திலிருந்து உச்சி வரை அச்சுருவாணியாக நிற்கும். இரு நாசிகளிலும் பகிர்ந்து நடுநாயமாக ஓடும்.

இடகலை, பிங்கலை, சுழிமுனை என்ற மூன்று மூலாதார நாடிகளை முறையே அபானன் பிராணன் சமானன் என்னும் வாயுக்களின் இயக்கத்தால் விடும் சுவாசம் (பிராணவாயு) — இடகலை + அபானன்வாத மென்றும்; பிங்கலை+பிராணன்=பித்தம் என்றும்; சுழிமுனை சமானன் ஐயமென்றும் அறியப்படும்.

இடகலை, அபானன் என்னும் வாதமானது இடது நாசியின் வழியாய்ப் பதினாறு அங்குலம் பாய்ந்தும்; பிங்கலை பிராணன் என்னும் பித்தமானது வலது நாசியின் வழியாய்ப் பன்னிரண்டு அங்குலம் பாய்ந்தும்: இவை பொழித்த சுழி முனை சமானன் என்னும் ஐயமானது இரண்டு நாசித்துவாரங்களிலும் நடுநாயகமாக உபாயமாக பகிர்ந்தோடும்.

இடகலை, பிங்கலை, சுழிமுனை என்ற மூன்று மூலாதார நாடி நாடிகளும், அபானன், பிராணன், சமானன் என்னும் வாயுக்களால் முறையே தூண்டப்பட்டு மேற்கூறிய பிரகாரம் சுவாசம் (பிராண வாயு) நடைபெறுங்காலத்தில் ஒன்றுக்கொன்று வலிவு, மெலிவு (வன்மை, குறைவு) ஏற்படுவதால், அம்மாதிரியான வன்மை குறைவு காரணமாக அவற்றால் பிரதிபலித்த வாதம் மாத்திரை ஒன்றாகவும்; பித்தம் மாத்திரை அரையாகவும், ஐயம் மாத்திரை காலாகவும் அளவில் வித்தியாசம் ஏற்பட்டதென்று நூல்கள் கூறுகின்றன:

(மேற்கோள்.)

(கண்ணுசாமியும்—வெண்பா.)

1. "இருப்பான நாடி எழுபதோடீரா
யிரமான தேகத்தில் ஏலப் — பெருநாடி-
ஒக்கத் தசமத் தொழிலை யூக்க தசவாயுக்கள்
தக்கபடியானதே சார்பு."

2. "சாருந் சதநாடி தன்னில் மூலம் மூன்று
பேருமிடம் பிங்கலையும் பின்னலுடன்—மாறும்
உரைக்கவிரற் காற்றொட்டுணர்த்து மேநாசி
வரைச்சுழி யோமையத்தில் வந்து."

3. வந்தகலை மூன்றில் வாய்வாமபானனுடன்
தந்த பிராணன் சமானனும் சந்தமுறக்
கூட்டுறவில் சேரித்தல் கூறும் வாதம் பித்தம்
நாட்டுங்கபமே யரம் நாடு."

4. "நாடுமிடகலை நானான்கு அங்குலமாய்
ஓடுமே பிங்கலையுமூய்யபத்—தோடிரண்டு
போக நடுச்சுழியோ போற்ற வுபாயமூ மாய்ப்
பாகம் பகிர்ந்திடுமே பார்."

5. "பாருங்கலை மூன்றில் பற்றிய வாயு மூன்று
சாரும் வன்மைக் குறையான் சாற்றக் கேள்—தேருமதின்
மெய்யளவு வாதமொன்று மேல் பித்த மோரையாம்
ஐயங்காலொன்றேயறி."

என்பதனால்; நாடிகளின் மாத்திரை விகிதம் வித்தியாசப்படுவதின் காரணமின்னதென அறிகிறோம்.

முத்தோடங்களின் குணம்.

(கண்ணுசாமியம்—பக்கம் 19.)

1. வாதம், பித்தம், ஐயம் மூன்றும் தனித்தனியே தன்னளவிற்கு மேல் மீறுகின்றதென அறியக் கூடிய காலம் "சந்தி சமயம்" என்றும்; மீறி நின்ற போது "பிரகோப சமயம்" என்றும் (தன்னிலை வளர்ச்சி வேற்று நிலை வளர்ச்சி என்பது போல)—அப்பால் மருந்துகளை கொடுத்து குணமாகும்போது "சம்ன சமயம்" என்றும் (அதாவது தன்னிலையாதல்) கூறுவர்.

2. ஒவ்வொரு தோடத்திற்கும் ஆறு குணங்களுண்டு. இதனை மூதலில் கற்றுணர்வது மருத்துவனின் கடமையாகும்.

3. உண்ணும் அன்ன பானாதிகளில் தீய குணங்களிருக்கின்றன. அதனால் தோடங்கள் வன்மை பெறும். அவைகளைக் கண்டறிந்து நீக்கிச் சுகம் பெறுமாறு தோடத்திற்கு எதிர் குணங்களை யுடைய ஆகாரங்களை அருந்தல் வேண்டும்.

**1. வாத தோடம் வன்மையடையும்போது உண்டாகக்கூடிய ஆறு குணங்களாவன :—**

1. கடினம்.
2. வறட்சி.
3. இலேசு.
4. குளிர்ச்சி.
5. அசைதல்.
6. அணுத்துவம்.

வாதம் இந்த ஆறு குணங்களை அறிகுறியாகத் தேகத்தின்கண் நிகழும்போது இதற்குத் தகுந்த பரிகாரம் செய்தல் அவசியம்.

**வாத தோட வன்மையை நீக்கக்கூடிய ஆறு எதிர்க்குணங்களாவன :—**

1. மிருது.
2. பசுமை.
3. பளுவு.
4. அக்கினி.
5. ஸ்திரம்.
6. கட்டி.

வாதகுணம் ஆறுக்கும் எதிரான இந்த ஆறு குணரூபங்களையுடைய ஆகாரம் உட்கொள்ளல் வேண்டும்.

**2. பித்த தோடம் வன்மையடையும்போது உண்டாகக்கூடிய ஆறு குணங்களாவன :—**

1. பசுமை.
2. அக்கினி.
3. குரூரம்.

4. சலரூபம்.
5. புளிப்பு.
6. காரம்.

பித்த வன்மையால் இந்த ஆறு குணங்களை அறிகுறியாகத் தேகத்தின்கண் இயக்குமாதலால் இதற்குத் தகுந்த பரிகாரம் செய்தல் அவசியம்.

**பித்த தோட வன்மையை நீக்கக்கூடிய ஆறு எதிர்க் குணங்களாவன :—**

1. வறட்சி.
2. குளிர்ச்சி.
3. சாந்தம்.
4. கெட்டி.
5. இனிப்பு.
6. கசப்பு.

பித்த குணம் ஆறுக்கும் எதிரான இந்த ஆறு குண ரூபங்களையுடைய ஆகாரம் உட்கொள்ளல் வேண்டும்.

**3. ஐயம் வன்மையடையும்போது உண்டாகக்கூடிய ஆறு குணங்களாவன :—**

1. பளுவு.
2. குளிர்ச்சி.
3. ஈரம்.
4. மிருது.
5. வழுவழுப்பு.
6. இனிப்பு.

ஐயவன்மையால் இந்த ஆறு குணங்களை அறிகுறியாகத் தேகத்தின் கண் இயக்குமாதலால் இதற்குத் தகுந்த பரிகாரம் செய்தல் அவசியம்.

**ஐய தோட வன்மையை நீச்சக்கூடிய ஆறு எதிர்க் குணங்களாவன :—**

1. இலகு.
2. உட்டணம்.
3. வறட்சி.

4. கடினம்.

5. கரகரப்பு.

6. காரம்.

ஐயதோட குணம் ஆறுக்கும் எதிரான இந்த ஆறு குண ரூபங் களையுடைய ஆகாரங்களைக் கொண்டு ஐய தோடத்தைச் சமனம் செய்யலாம்.

(மேற்கோள்.)

முத்தோட குணம் (கண்ணுசாமியம்)

(வெண்பா.)

1. "முந்திய தோடத்தாலே மூன்று சமயமாம்
சந்திப்பிரகோபம் சார்சமனம்—விந்தையிதி
லுற்ற தோடத்திற்கே ஓது குணமோராறை
முற்றுணர்ந்திடுகமுன்."

2. "கொள்ளு மூணவிலுமேகோ துமிருந்தோடமுண்டு
விள்ளவதனால் விருத்தி பெறும்—மெள்ளவதை
நீக்கிச்சுகமருவநேருமெதிர்குணத்தைத்
தாக்கிடவே யாகாரந்தா."

3. "வாதங்கடுமை வறட்சியுடன் நொய்மை
சீதஞ்சலனம் சிதறணுவு—ளதமூட
லிக்குணத்தோடுற்றே யியக்கந் தருமளவிற்
றக்கபரிகாரந்தா."

4. "வாதகுணமாறுக்கும் மாறுகுணமே நோக்கின்
ஓதமிருதீரம் உயர்பாரம்—போதரவா
யுள்ளதீயோடுறுதி யுற்றுத் திரளாக
உள்ள குணத்தையே யூட்டு."

5. "பித்தத்தின் சீர்குணத்தைப் பேசிடிலோராறாகும்
சுத்தப்பசைதீயும் சொல்கடுமை—மெத்த
திரவம்புளியோடு சீர்காரமுற்றிங்
குரமாய் நிலை பெருமாமுன்."

6. "தோன்றிவரும் பித்தந் தொடராதடங்கிடவே
சான்ற வறட்சி குளிர்ச்சி சாந்தமுடன்—ஈன்றதொரு
கெட்டியுடனே கிளரினிப்பு கைப்பினோடு
திட்டும் பரிகாரங்கேள்."

7. "ஐயத்தின் வன்மையாலாகுங் குணமெல்லாம்
உய்யபாரஞ்சிதம் உற்ற பசை—நையு
மிருது வழுவழுப்புமீறுமினிப்புக்
கருதுங்குணமாறாங்காண்."

8. "சொல்லுங் கபந்தன்னைச் சோதிக்கமாறு குணம்
வல்லலகுதீயும் வறட்சியுடன் வெல்லக்
கடினமுடனே கரகரப்புக் காரம்
படியப் பரிகாரம் பார்."

என்பதினாலறிக !

**வாதம், பித்தம், ஐயம் ஆகிய முத்தோடங்கள் வன்மையடையும் போது அவை ஒவ்வொன்றின் மிகுதியைச் சமனம் செய்யும் (தன் னிலைப்படுத்தக்கூடிய) சுவைகளாவன :—**

1. வாதம் மேலிட்டால் : இனிப்பு, புளிப்பு, உப்பு முதலிய சுவையுள்ள பதார்த்தங்கள் வாத மிகுதியைக் குறைத்துச் சமப் படுத்துமென்றும் ;

2. பித்தம் அதிகரிப்பின் : துவர்ப்பு, இனிப்பு, கைப்பு முதலிய சுவையுள்ள பதார்த்தங்கள் பித்த மிகுதியைக் குறைத்து சமனஞ் செய்யுமென்றும் ;

3. ஐயம் அதிகமாயின் : காரம், துவர்ப்பு, கசப்பு முதலிய சுவைப்புள்ள பதார்த்தங்கள் ஐய மிகுதியைக் குறைத்துச் சமனஞ் செய்யுமென்றும் ;

4. தொந்த தோடங்கள் மிகுதியடைந்தபோது அந்தந்தப் பிர கோபமுடைய தோடங்களுக்கேதுவான சுவையுள்ள பதார்த் தங்களைக் கலந்து அருந்தினால் தொந்த தோடங்கள் யாவும் படிப்படியாகக் குறைந்து சமனப்படும் எனவும் கீழ்க்காணும் மேற் கோள்களாலறியவும்.

மேலும் ;

புளிப்பு சுவை பித்த விருத்திக்கு சாதகமாகயிருப்பினும், அதில் சில நன்மை பயக்கக்கூடியவையாகும். எங்ஙனமெனில் ; புளிப்பு மாதுளம் பழம், நெல்லிக்காய், எலுமிச்சம் பழமாகிய இவை புளிப்பாகயிருந்த போதிலும் உட்கொள்ளின் பித்தம் சமப்படும். இப்புளிப்புச் சுவை பித்தத்திற்கு அனுகூலமாய் விருத்தி செய்யும் குணமாகயிருப்பினும் சீரணகாலத்தில் இனிப்பாக மாறுதல் (பிரிவு) அடையும் இயற்கையுடையதாதலால் பரிகாரமாகக் கொள்ளப்பட்டது என்பதாம்.

நிற்க, ஓர் வியாதிக்காக மருந்து கொடுத்து நிவர்த்தி செய்யும் போது அம்மருந்தால் வேறு தோடத்தையுடைய பிணி ஏதேனும் உண்டாகுமாயின் அது எவ்வளவு உயர்தரமான மருந்தாக யிருந்த போதிலும் மருத்துவத்திற்குப் பிரயோசனமற்றதென நூல்கள் கூறுகின்றன.

விரேசனத்திற்காக ஓர் மருந்து உட்கொண்டு அதன் சக்திக் குறைவால் பேதியாகாது சீரணித்துவிட்டாலும், அல்லது அம் மருந்தின் வேகத்தால் வாந்தியாகிவிட்டாலும், மீண்டும் பேதி மருந்து கொடுக்கலாகாது. தேவையாயின் காரணமறிந்து மருந்தின் வீறு தணிய உபசாந்தியாக ஏதேனுமொரு கியாழம் முதலியவற்றைக்கொண்டு பரிகாரம் செய்யலாம்.

உதாரணமாக, இரசகற்பூரம் சேர்ந்துள்ள வெள்ளை எண்ணெய் அல்லது பூர எண்ணெயை மூன்று நாள்களுக்குப் பேதிக்குக் கொடுக்கப்படுங் காலத்தில் பேதியாகாமல் பூரம் உள் தங்கி நஞ்சுக் குறி குணங்கள் ஏற்படின் அக்கணமே மருந்தை நிறுத்திவிட்டு, கருவேலம்பட்டையாதிக் கியாழம் அல்லது திரிபலைக் கியாழம் ஏதேனும் ஒன்றைக் கொண்டு வாய் கொப்பளிக்கச் செய்யவும். படிகார பற்பம் பசு வெண்ணெயில் குழப்பிக் கொடுக்கவும். நஞ்சுத் தன்மை முற்றிலும் குணமாகும்வரைக்கும் வேறு கடுசான மருந்துகளைக் கொடுப்பது கூடாது. நஞ்சுத் தன்மையை குணப் படுத்துவதே மருத்துவனின் கடமையாகும். அதற்குத் தகுந்த சாந்தமான மருந்துகளைக் கொடுக்கவும்.

(மேற்கோள்) (கண்ணுசாமியம்—பக்கம் 20-21).

1. "வாதமேலீட்டால் மதுரம்புளியுப்பு
சேதமுறச் செய்யும் சீறையும்—ஓதக்கேள்
காரந் துவர் கசப்புக் காட்டுஞ்சுவையெல்லாம்
சாரப் பரிகாரஞ் சாற்று."

2. "பித்தமதிகெரிப்பின் பேசும் பரிகாரம்
சுத்தத் துவறோடு சொல்லினிப்புச் சத்தாகும்
கைப்புச் சுவையே கருதவதன் வீறு
எய்ப்புடையுமென்றுரைத்தாரிங்கு."

3. "புளி மாதுளையோடு போற்றுங்காய் நெல்லி
களிக்க வெலுமிச்சங்கருதி யளிக்க
வொழியுமாம் பித்தமுணரவதன் சத்துப்
பொழியுமதுரமாம் போற்று."

4. "கொள்ளும் மருந்தொன்றில் கூறும் நலிதீர்ந்து
கள்ளப்பிணி வேறு கண்டிடின்கேள்—உள்ள
மருந்தாகாதென்றே மருத்துவத்திலான்றோர்
கருத்தமைத்துக் கூறினார் கண்டு."

5. "கொண்டவிரேசனத்தாற் கோருமலங்கழியா
தண்டிடினும் வாந்தி பின்னாகிடினும்—பண்டிதனே
நீட்டாதே மீண்டும் நிகழுமதன் வீறை
ஓட்டவொரு சாந்தியோது."

என்பதனால் மேற்குறிப்பிட்ட விவரங்கள் யாவும் தெரியவரும்.

## அத்தியாயம் XI

*நாடியைப் பற்றிய விளக்கம் (வேறு).*

***நாடியால் பிணி வராமையும், வருகையும் அறிவதெங்ஙனம்?***

1. "வாதபித்தமைய மூன்றும்
வன்பலத்துடனே தத்தம்
பேதமொன்றில்லா வண்ணம்
பேசியதானந்தன்னில்
நீதியாய் நிலைத்து நிற்கில்
நெடும்பிணி சிக்கவில்லை
தாதுவுமொன்றோடொன்று
தாவிடிற் பிணிகள்தானே."

என்பதினால், வாதம், பித்தம், ஐயம் என்னும் மூன்று நாடிகளும், தம் தம் மாத்திரையளவு, இடம் பொழுது இவற்றில் வேறுபாடுகளில்லாமல் நிலைத்து நடைபெற்றால் பிணியில்லை எனவும்; மிகுதியாகவோ, குறைவாகவோ கலப்புற்றோ, இடம், காலம், மாறுபட்டோ, நாடிகள் நடைபெறுமாகில் அவ்வவற்றிற்குரிய நோய்க் குறி குணங்களை காண்பிக்கும் மென்றறிக.

*(வேறு)*

2. "அயனரி யரனாயமர்ந்த மூவரும்
தத்த மாத்திரை தானங்காலம்
பேதியாசரத்திடில் பிணியில்லைகாணே
பேதியாயிவர்கள் பிணிங்கில் பிணியே."

என்பதினாலும்,

(வெண்பா)

3. "மற்று நல் வாதமு மாறாத பித்தகபம்
மூற்றுமவை முரணாமொய்ம்புடனே—உற்றிருக்கில்
நீதியாய் நோயில்லை நின்றவவை மாறிடவே
பேதிக்கும் நாடி யென்று பேசு."

(கண்ணுசாமியம்)

என்பதினாலும்,

வாத பித்த ஐயமென்ற நாடிகள் மூன்றும் தத்தம் மாத்திரை, தானம், காலம் இவற்றில் வேற்றுமையடையாமல் வன்மையுடன் தன்னிலையிலிருப்பின், நோய் என்பதே கிடையாது எனவும்; அவை வேறுபடுமேயானால், நாடி நடையும் பேதப்படும்; பிணிகளும் விளையும் என்பதேயாம்.

குறிப்பு.—அயன், அரி, அரன் என்பதினால், வளி, அழல், ஐயம், மூன்றையும் முறையே பிரம்மா, விட்டுணு, ருத்திரன், ஆகிய மூவருக்கும் ஒப்பிடப்பட்டு ஆக்கல், காத்தல், அழித்தல் என்னும் தொழில்களை முறையே புரிந்துவருவதாகக் கூறப்படுகின்றது. இதன் விவரங்களை மற்றோர் இடத்தில் விளக்கியிருப்பதைக் கவனிக்கவும்.

**தாதுக்கள் மூன்றும் (நாடிகள் மூன்றும்) தினந்தோறும் சிறப்புறுங்காலம்.**

1. "தினகரனுத யஞ் சேரும்வாதம்
எனவாம் நன்பகல் இயலும் பித்தம்
அந்தி வரினே யடைவது ஐயம்
பித்திசவின் மூதற் பேசும் வாதம்
இப்படி நாடிபப்பத்தாங்கடி
கைப்படி செல்லுமென்றறிவீர் பிடகரே"

என்பதினாலும், (Manuscript)

2. "காலையில் வாதநாடி கடிகையில் பத்தாகும்
பாலையில் பித்தநாடி பகருச்சி பத்தாகும்
மாலையாம் சேத்துமநாடி மதிப்புடன் பத்தாகும்
வாலையா மனோன்மணிக்கு வகுத்துமே தொகுத்ததாமே"

(வயி. சார. சங்கிரகம்)

என்பதினாலும்,

பகற்பொழுதில் காலை சூரியனுதய முதல் பத்து நாழிகை வாதமும், பகல் பத்து நாழிகை பித்தமும், மாலை பத்து நாழிகை ஐயமும், ஆகிய இவற்றிற்குரிய காலமாகும். அன்றியும் இரவு சூரியஸ்தமன முதல் பத்து நாழிகை வாதமும், நடு இரவு பத்து நாழிகை பித்தமும், பின் இரவு பத்து நாழிகை ஐயத்திற்குமுரிய காலமென்றறிக! இதனை வாத, பித்த, ஐயம் ஆகிய இவற்றின் "சிறப்பு காலம்" எனவும் கூறுவர்.

**தாதுக்கள் (நாடிகள்) மூன்றும் வாரங்கள் தோறும் சிறப்புறும் சமயம்.**

1. "சந்திரநாட் காலையில் வாதம்
நடந்திடில் சுகமெய்தும்"
2. "சந்திரநாளாஞ் சசிபுகற்புந்தி
சுக்கில பக்கச்சுரற்குரு காலையில்
இறைவனியங்கில் எய்துஞ் சுகமே"

என்பதினால், (Manuscript)

வாதமானது, திங்கள், புதன், வெள்ளி ஆகிய இம் மூன்று தினங்களிலும், கிருஷ்ண பட்சத்து வியாழக்கிழமையிலும் காலை நேரத்தில் சிறப்பாக நின்றால் சுகமுண்டாகும்.

மற்ற தினங்களாகிய ஞாயிறு, செவ்வாய், சனி இவ் வாரங்களிலும், கிருஷ்ண பட்சத்து வியாழக்கிழமையிலும் காலை நேரங்களில் பித்தம் சிறப்பாக நின்றால் சுகமுண்டாகும்.

குறிப்பு.—சந்திரநாட் காலையில் சந்திர கலை அதாவது இடது கலை அல்லது வாதம் சிறப்புறும் என்பர்.

சூரியநாட் காலையில் சூரிய கலை அதாவது பிங்கலை அல்லது பித்தம் சிறப்பாக நடைபெறும் என்பர்.

நிற்க, ஐயநாடி காலை நேரங்களில் சிறப்புறுவதாக நூல்களில் கூறப்படவில்லை. கவனிக்கவும்.

சந்திரன்—உடலதிபன்.
சூரியன்—உயிர்திபன்.
சசி—சந்திரன் (திங்கள்)
புகற்—வெள்ளி.

புந்தி—புதன்
குரு—வியாழன்.
சந்திர நாடி—வாத நாடி.
சூரிய நாடி—பித்த நாடி.
சுழி முனை—ஐய நாடி.
இறைவன்—அரசன், வாத நாடி.

**நாடிகள் மூன்றும் வாரங்களில் மாறி நடந்தாலுண்டாம் பிணியின் தோற்றம்.**

1. **வாதநாடி.**—ஞாயிறு அன்று காலையில் சிறப்புற்றால், சளி, இருமல், இரைப்பு நோய் ஆகிய இவை யுண்டாகும். செவ்வாயன்று காலையில் வாதமோடில் சுரமுண்டாகும். சனிக்கிழமை காலையில் வாதமோடில் சீதளமும், சன்னியுமுண்டாகும். கிருஷ்ண பட்சத்து வியாழக்கிழமை காலையில் வாதமோடில் விலா முதல் தேக மெல்லாம் வலியுண்டாகும்.

2. **பித்தநாடி.**—திங்கட்கிழமை காலையில் சிறப்புற்றால் சலதோடம் உடனே காணும். புதன்கிழமை காலையில் பித்த மோடில் நீரேற்றம், தலைவலி இவையுண்டாகும். வெள்ளியன்று காலையில் பித்தமோடில் கண் நோய், காது நோய் களுண்டாகும். சுக்கிலபட்சத்து வியாழக்கிழமை காலையில் பித்தமோடில் தாபசுரம், தலைவலி இவையுண்டாகும்.

3. **ஐயநாடி.**—காலையில் சிறப்புறுவதாக விவரம் நூல்களில் இல்லை.

**தாதுக்கள் (நாடிகள்) மூன்றும் மாதங்கள் தோறும் சிறப்புறும் சமயம்.**

1. "மூவரு மீறி முனிவுகொளாமல்
தத்தம் நிலையில் தன்னரசியலும்
காலவரைதனைக் கிளறக் கேண்மின்
ஆடியாதியாய் ஐப்பசி ஈராய்
அனிலமதற்கோ ரரசியல் காலம்
மீன் முதலானி லீறுகொள் மந்திரி
தேள் முதன் மாசி சேனாபதிக்கே"

என்பதினாலும், (Manuscript)

(வேறு)

2. "கடக முதல் துலாம் வரையும் வாதமாகும்
கண்ணாடியைப் பசியுமதுவேயாகும்
விடமீனமுதல் மிதுனம் பித்தமாகும்
விரைகமழ் பைங்கூனி ஆனியதுவேயாகும்
திடமான விருட்சிக முதற்கும்பஞ் சேத்துமஞ்
சேர்ந்த கார்த்திகை மாசியதுவேயாகும்
நடை மேவும் வாத பித்த சேத்துமந்தானும்
நலமாக மாத முதல் நடக்குங்காணே"

(பக்கம் 79—ப. சி. நாடி)

என்பதினாலும்,

நாம் தெரிந்து கொள்ளுவது யாதெனில்:

1. வாதம் தன்னிலையில் சிறப்புறும் மாதங்களாவன:—கடக முதல் துலாம் அதாவது ஆடி முதல் ஐப்பசியாகும். இம் மாதங்களில் வாதம் வளர்ச்சி பெறும்.

2. பித்தம் தன்னிலையில் சிறப்புறும் மாதங்களாவன:—மீனம் முதல் மிதுனம் அதாவது பைங்கூனி முதல் ஆனியாகும். இம் மாதங்களில் பித்தம் வளர்ச்சியடையும்.

3. ஐயம் தன்னிலையில் சிறப்புறும் மாதங்களாவன:—விருச்சிகம் முதல் கும்பம். அதாவது கார்த்திகை முதல் மாசியாகும். இம் மாதங்களில் ஐயம் வளர்ச்சி பெறும்.

இத்தியாதி விவரங்களை மேற்கண்ட சூத்திரத்தில் காண்கிறோம்.

N.B,— அனிலம் (காற்று)—வாதம்.
மந்திரி—பித்தம்.
சேனாபதி—ஐயம்.

**நாடி பார்க்கும் மாதமும், காலமும் (எந்தெந்த மாதங்களில் எந்தெந்த நேரங்களில் நாடியைக் கணிப்பது உத்தமம்?)**

1. "சித்திரை வைகாசிக்குஞ்
செழுங்கதிருதயந்தன்னில்
அத்தமாமானியாடி
ஐப்பசி கார்த்திகைக்கும்,
மத்தியானத்திற் பார்க்க
மார்கழி தையு மாசி
வித்தகன் கதிரோன் மேற்கில்
விழுகின்ற நேரந்தானே."

2. "தானது பைங்கூனிக்குந்
தனது நல்லாவனிக்கும்
மானமாம் புரட்டாசிக்கும்
மற்றை ராத்திரியிற் பார்க்கத்
தேனென்ற மூன்று நாடித்
தெளிவாகக் காணுமென்று
கானமா முனிவர் சொன்ன
கருத்தை நீ கண்டு பாரே."

(அகத்தியர் நாடி)

என்பதினால்,

1. சித்திரை, வைகாசியில் சூரியோதயத்திலும்;
2. ஆனி, ஆடி, ஐப்பசி, கார்த்திகையில் மத்தியானத்திலும்;
3. மார்கழி, தை, மாசியில் சூரியனஸ்தமனத்திலும்;
4. பைங்கூனி, ஆவனி, புரட்டாசியில் இராத்திரியிலும், நாடிகளைக் கணிக்க நாடி நடை தெளிவாகத் தோன்றுமென அறிக.

நாடி நடை காணப்படாமை (சதக நாடி).

1. "குறையாக ஸ்திரிபோகர் நெடுநோயாளர்
குதிரை மதகரியேறி நடந்தோர் எய்த்தோர்
நிறைவாக வண்டெழுந்தோர் லாகிரி கொண்டோர்
நீர்ப்பாடு நீரிழிவு குறைநோயுற்றோர்
முறையாக வீக்கமுள்ளோர் அத்நிக்காய்வால்,
மூசித்திளைத்தோர் பயமுற்றோர் விடமணைந்தோர்
அறையாம லோட்டமுற்றோர் கிலேசங்கொண்டோர்
அறப்புசித்தோர் தாது வகுப்புற மாட்டாதே"

2. "மாட்டாங்கியான பெண்கள் கெர்ப்பத்தோர்க்கு
மாதவிடாயானோர்க்கும் பெரும்பாட்டோர்க்கும்
தேட்டாசை யதிக விசாரத்தினோர்க்கும்
தேய்த்தெண்ணெய் மூழுகினர்க்குஞ்
சினங்கொண்டோர்க்கும்
வாட்டாசை கன்னியர்மேல் பறாக்கானோர்க்கும்
வயசாக இளைத்தோர்க்கும் மதங்கொண்டோர்க்கும்
மோட்டாத்துமாக்களுக்குந் தாதுபார்க்க
முறையாக வருநாடி வகுப்பறாதே"

3. "வகுப்பாகக் கைமுறிந்தோர் சோகைகொண்டோர்
மாண்ட பிணந்தனைத் தொட்டோர் வாந்தி விக்கல்
தொகுப்பாக யிவை எடுத்தோர் விரதமுற்றோர்
சோனை மழைதனில் நனைந்தோர் காசங்கீதம்
பகுப்பாகவே படித்தோர் களறிசுற்றிப்
பல நாட்டியங்கள் மிகவாடி எய்த்தோர்
மிகுப்பாக சுவாசமதை யடக்கி னோர்க்கும்
விரைவான நாடியது விளங்குந்தானே"

என்பதினால்,

1. ஸ்திரி போகர், நீண்ட காலம் நோயால் வருந்துபவர், குதிரை ஏற்றம், யானை ஏற்றம், நடந்து எய்த்தவர், அதிகம் உண்டவர், லாகிரி கொண்டோர், நீர்ப்பாடு, நீரிழிவு, பெருவியாதி முதலிய வற்றால் வருந்துபவர், வீக்கம், அத்தி சுரத்தால் இளைத்தோர், பயமுற்றோர், கிலேசங்கொண்டோர், விடந் தீண்டியவர், ஓட்டமுற்றோர், அளவுக்கு மிஞ்சிப் புசித்தோர் ஆகிய இவர் களுக்கு தாதுவின் (நாடியின்) நடை சரியாகத் தோற்றாவாம்.

2. தவிர, கெர்ப்பிணிகள் மாதவிடாயான பெண்கள், பெரும்பாடு அதிகத் துக்கம், எண்ணெய் தேய்த்து மூழுகியவர், சினங் கொண்டோர், மோகங்கொண்டோர், முதிர்ந்த வயதினால் இளைத்தவர்கள், மதங் கொண்டோர், ஸ்தூலமாகப் பெருத்த மேனியர் ஆகிய இவர்களது தாதுவின் (நாடியின்) நடை சரியாகத் தோற்றாவாம்.

3. மேலும், என்பு முறிந்தோர், சோகை, பிணத்தைத் தொட்டோர், வாந்தி, விக்கல் எடுத்தோர், விரதமிருந்தோர், மழையில் நனைந்தோர், சங்கீதம் படித்தோர், களறி சுற்றி நாட்டியமாடிக் களைத்தோர், சுவாசபந்தனஞ் செய்தோர், ஆகிய இவர்களது நாடி நடை விரைவானதாகவிருக்கும். ஆதலால் நாடி நடை சரியாகத் தோற்றாவாம்.

(வேறு)

**4. நாடி நடை படபடத்து ஓடும் நிலைமைகள்: ஆதலால் நாடி நடை சரியாகப் புலனாகா.**

"வெய்யலிலே எப்போதும் நடக்கையாலும்
வெம்பசியி லாகிரி களருந்தலாலும்

துய்ய வெய்யில் புகையிலைகள் கொள்ளலாலும்
துடர்ந்த சுரநித்திரைகள் கொள்ளாதலாலும்

நையவே கோபமது கொள்ளலாலும்
நாள்தோறும் ரத்தமது வடிதலாலும்
துய்யவே நாடி நடை தீர்க்கமாகத்
துடி-துடித்துப் படபடத்து ஓடுந்தானே"

என்பதினால்,

எப்போதும் வெய்யலிலே நடந்து தேகம் அலண்டிருந்தாலும், பசி நேரத்தில் சுடு பதார்த்தங்கள், சாராயம் போன்ற லாகிரி வஸ்துக்கள் அருந்தல், வெய்யில் நேரத்தில் புகையிலைகள் கொள்ளல், விடாச்சுரம், நித்திரை பங்கம், மனச் சஞ்சலம், அதிகப் பலவீனம், இரத்தம் வடிதல் முதலியவற்றால் நாடி நடை தீவிரமாயும், படபடென்றும் ஓடும். ஆதலால், நாடி நடை சரியாகத் தோற்றாவாம்.

(வேறு)

**5. நாடி நடை குறையும் நிலைமை : ஆதலால் நாடி நடை சரியாகத் தோற்றாவாம்.**

அதிகப் பசி, விசனம், குளிர், அதிக நித்திரை முதலியவற்றால் நாடி நடை குறையும். ஆதலால், நாடி நடை சரியாகத் தோற்றாவாம்.

(வேறு)

**6. நாடி நடை சரியாகத் தோற்றாத வேறு சில நிலைமைகள்.**

"கொண்டிடவே கயரோகி காசரோகி
குறிப்பாகச் சிற்றின்பம் செய்த பேர்கள்
அண்டிடவே தரித்திரர்கள் விருத்தர் பாலர்
அன்பாகத் தண்ணீரில் மூழ்கினோர்கள்
கொண்டிடவே இவர்களது உறுப்பின் தாது
கூறவே முடியாது எவர்க்குக் கிட்டும்
பண்டிடவே யிப்பரீட்சை யார்தான் காண்பார்
பாராபரத்தின் மகிமையிது பாருபாரே"

என்பதினால்,

விருத்தர், பாலர், கயரோகி, காசரோகி, தரித்திரர், சிற்றின்பஞ் செய்த பேர்கள், தண்ணீரில் மூழ்கியவர்கள் இவர்களது நாடி நடையின் உண்மை சரியாகப் புலனாகாவாம்.

(வேறு)

7. "செப்பவே நாடிதானுஞ்
சிறப்புடன் பார்க்கும் போதில்
ஒப்புடன் பூமியிற்கை
யூன்றிக்கொண்டிருக்கும் போதும்
துப்புறக் காலைக் கட்டிச்
சோர்வடைந்திருக்கும் போதும்
செப்பவே கட்டிருத்தால்
சிதையுடன் நாடிதோன்றா"

என்பதினால்,

பூமியிற் கரத்தை ஊன்றிக்கொண்டிருக்கும் போதும், காலைக் கட்டிக்கொண்டிருக்கும் போதும், நாடி பார்க்கும் ஸ்தானத்திற்கு மேல் யாதொரு கட்டிருந்தாலும், அச்சமயம் நாடியைக் கணிப்பின், நாடி நடை சரியாகத் தோற்றாவாம்.

(வேறு)

8. "எண்ணெயின் தலையின்போது
மீரமாய் நின்ற போதும் ?
உண்ணும் நல்லுணவின்போது
மூண்டாம் வெம்பசியின் போதும்,
திண்ணமாய் நடக்கும் போதும்
சிற்றின்ப மூட்டும் போதும்
பண்ணிய நாடி பார்க்கில்
பலித்திடாதென்று செப்பே"

(ப. சி. நாடி)

என்பதினால்,

எண்ணெய் தேய்த்துத் தலை முழுகும்போதும், ஈர வஸ்திரத் தோடிருக்கும் போதும், சாப்பிடும்போதும், பசி, நடை, சிற்றின்பம் ஆகிய இக் காலங்களிலும் நாடி பார்க்கில் நாடி நடை சரியாகத் தோற்றாவாம்.

**வலி, அழல், ஐயம், தொந்தம் இவற்றின் மிகுத்திக்குறி குணங்கள்.**

*1. வலி நாடி (வாதம்) மிகுதியால் வரும் குறி குணங்கள் அல்லது நோய்கள்.—(இதனை வாதத்தில் வாதம், வாதம் கதித்தல், வாதம்மீறி நடத்தல் எனவும் கூறுவர்.)*

(சதகநாடி.)

1. "வாதமெனும் நாடியது தோன்றில்
சீதமந்தமொடு வயிறு பொருமல் திரட்சி வாய்வு
சீதமுறுங்கிராணி மகோதரம் நீராமை.
திரள்வாய்வு சூலை வலிகடுப்புத் தீரை.
நீதமுறுங்கி ருமிகுன்மம் அண்டவாதம்
நிலையும் நீர்க்கிரிச்சாங்கள் தந்து மேகம்
பேதகமா முதரபிணி மூலரோகம்
பேசவெருபிணிகளுமே பொருளதாமே."

(வேறு—அகத்தியனார் சிகிச்சாரத்னதீபம்)

2. "வாதமேகதித்தபோது வாய்வு எழும்புங் கண்டீர்
வாதமே கதித்தபோது வந்திடுஞ் சன்னி தோடம்
வாதமே கதித்தபோது வந்திடும் வியாதி மேலும்,
வாதமே கதித்தபோது வல்லுடல் மெலிந்துகொல்லும்."

(வேறு—திருமூலர்.)

3. "அறியவிம்மூன்றின் தாண்மை சொன்னார் நந்தி
எறிய நல்வாதமெறிக்குங் குணங்கேளு
குறியெனக்கை கால் குளச்சு விலாச்சந்து
பறியென நொந்துடற் பச்சைப்புண்ணாகுமே."

4. "புண்ணாய் வலிக்கும் பொருமூங்குடலோடித்
தண்ணாமலத்தைத் தம்பிக்கும் போக்காது
ஒண்ணான ஆசன முறவே சுருக்கிடும்
பண்ணார் குளிர்சீதம்பகுத்திடும் வாதமே."

(வேறு—அகத்தியர்.)

5. "சொல்லவே வாதமது மீறிற்றானால்,
சோர்வடைந்து வாயுவினால் தேகமெங்கும்,
மெல்லவைகைகால் களசதியுண்டாம்
மெய்மூடங்கும் நிமிர வொண்ணாத் திமிருண்டாகும்,
வெல்லவேயுடல் பொருமும் வயிறுளைக்கும்
விரும்பியன்னஞ் செல்லாது விந்து நட்டம்
கொல்லவே நாப்புளிக்குங் கழிச்சலுண்டாம்
கூறினார் மலையமுனி கூறினாரே."

(வேறு—வாத ரோகியின் பொதுக் குறி குணங்கள்.)

(கலி விருத்தம்.)

6. "அறைந்தோம்வாத ரோகியுடல்
அழற்கண்முகமும் பல்மலமும்
நிறைந்த விழியில் நீர் வடியும்
நீண்ட நாவு கறுத்திடவும்
திறைத்தமுள்ளாய் தானிருக்குஞ்
சிறு நீர் பொருமிக்கடுத்து வரும்
உறைந்த நீருங்கருகருத்து
முறையாய் ரோகமு முண்டாமே."

(வேறு—அகத்தியர் நாடி.)

7. "வாதத்தில் வாதமாகில்
வளர்ந்திடு மன்னம் போல
நீதுற்றவுடலினேர்ந்து
நெகிழ்ச்சியாய்ச் சுருங்கும் வாங்கும்
ஆதுற்றுப்பதறுமேனி
யசனமும் அற்பமாகும்
ஏதுற்றதனத்தின் மின்னே
எண்ணியே யறிந்து சொல்லே."

(வேறு—காவியத்தின் நாடி.)

8. "காணப் பாவாத மீறில்
கால்கைகள் பொருந்திநோகும்
பூணப்பாகுடல் புரட்டும்
மலஞ்சலம் பொருமிக்கட்டும்
ஊணப்பா குளிருங்காய்ச்சல்
உடம்பெல்லாங்குத்தும்வாய்வு,
வீணப்பாகுத மிறுக்கும்
வியர்வையும் வேர்க்குந்தானே."

(வேறு—இரத்தினச் சுருக்கம் நாடி.)

9. "மேவியவாதஞ்செய்யுங்
குணந்தனை விரும்பிக்கேளு
தாவிய வயிறு மந்தஞ்
சந்துகால் பொருத்து நோவாம்

சேவியதாது நாசஞ்
சிறுத்துடன் சிறு நீர் வீழும்
காவியங் கண்ணினாளே
மலமது கருகிக் காணும்."

மேற்கூறிய செய்யுள்களிருந்து நாம் தெரிந்துகொள்ளுவது யாதெனில்—

வாத நாடி மீறி நடக்கில் சீதம் விழல், வயிறுப்பல், வாயுத் திரட்சி, கிராணி, மகோதரம், நீராமை, வாய்வு, சூலை, வலி, கடுப்பு, கிருமி, குன்மம், அண்டவாதம், நீர்க்கிரிச்சரம், தந்து மேகம், வயிற்று நோய், மூலரோகம், வாதசன்னி, உடல் மெலிவு, கைகால் குளைச்சு, விலா, சந்துப்பொருத்துக்கள் இவை புண்போல் நோதல், மலக்கட்டு குடற்புரட்டல், ஆசனவாய் சுருங்கல், குளிருண்டாதல், தேகமெல்லாம் குத்தல், கைகால்கள் ஒரு பக்கமாக மூடங்கல், குளியவும், நிமிரவும் வொட்டாமை, அன்னம் செல்லாமை, விந்து நட்டம், நாப்புளிப்பு, கழிச்சல், உடல் குளிர்ந்தும், முகம், விழி, பல், மலம் யாவும் கறுத்திருத்தல், கண் நீர் வடிதல், நாவு கறுத்தல், நாவரட்சி, நாமுள்போலிருத்தல், சிறு நீர் பொருமிக்கறுத்துக்கடுத்துச் சிறுத்து இறங்கல், வியர்த்தல், வயிறு மந்தம் ஆகிய இக் குறி குணங்களை (நோய்களை) விளைவிக்குமென அறிக.

2. அழல் நாடி (பித்தம்) மிகுதியால் வரும் குறி குணங்கள் அல்லது நோய்கள்.—(இதனை பித்தத்தில் பித்தம், பித்தம் கதித்தல், பித்தம் மீறி நடத்தல் எனவும் கூறுவர்.)

(சதக நாடி.)

1. "உறுதியுள்ள பித்தமது தோன்றில் வெப்பு
உஷ்ணவாயுவத்தி சுரமதி சாரங்கள்
மறதியுடன் கிறுகிறுப்பு பயித்திய ரோகம்
வளர் சோகையழலெரிவு காந்தல் கைப்பு
இருதயத்தில் கலக்கமது மறப்பு தாகம்
எழுங்கனவு மேய னைவு மயக்க மூர்ச்சை
சிறிது பெரும்பாடு ரத்தம்பிரமேகங்கள்
சேர்ந்து மிகு பிணி பலவுஞ் சிறக்குந்தானே."

(வேறு—குணவாகடநாடி.)

2. "பித்தமே செனித்தாற் சூடு
பெலத்துடலுலரச்செய்யும்,
பித்தமே மிகுந்தாலீளை
யிருமலும் பெலத்து நிற்கும்,
பித்தமே மிகுந்து தானால் பெலங் குறைந்துடம்பழுத்தும்,
பித்தமே திரட்டிதூலிற்
பேசினார் பெரியோர்தாமே."

3. "பித்தமே கதித்தபோது பெருத்திடும் வாதமுண்டாம்,
பித்தமேகதித்த போது பெருத்திடும் வயிற்றில் வாயு,
பித்தமே கதித்த போது பிதற்றிடும் பித்தே கேளு
பித்தமே கதித்த போது பிறந்திடும் பிணியனேகம்."

(வேறு—திருமூலர்.)

4. "பகுத்திடிற் பித்தம் பலபல சித்தையாம்,
வகுத்திடும் வாந்தியும் வாய் நீர்மிக வூறும்,
மகுத்திடுமேனியில் மாட்டி எரிப் பேறும்,
மிகுத்த வன்னிக்கு மிக விடங்கைக்குமே."

(வேறு—அகத்தியர்.)

5. "கூறிடவே பித்தமது மீறிற்றானால்
கொடுங்காந்தலுட ழுற்சி நடுக்க முண்டாம்
மீறிடவேய ரோசியந்தான் நாவறட்சி
மேலான சோபமது விக்கல் மூர்ச்சை,
தூறிடவே கிறு கிறுப்பு காதடைப்பு
தொந்தமாங்கசப்புடனே மண்டைக்குத்து."

6. "ஆமேதான்யத்தி சுரம்பாண்டு சோகை
ஆழானவிடாச்சுரமும் பிரமேகந்தான்,
போமேதான் காமாலை பித்தவெட்டை
பொல்லாத பாண்டுடனே சிவந்த நீராம்,
தேகமேதான் சிவப்பாயு மஞ்சளாயுஞ்
சிறு சிறுத்துயிருண்டு வருங்குழி வீழுந்து,
நாமேதான் சொன்னோமே பித்தக்கூறு,
நவின்றிட்டார்வாசமுனி நவின்றிட்டாரே."

(வேறு—பித்தரோகியின் பொதுக் குறி குணங்கள்.)

(கலி விருத்தம்.)

7. "பித்தரோகி பெருமூடல் சூடாகும்,
நித்தமாமுகம் நேர் விழி நாவுபல்,
முத்த நீரு முயர்ந்த சிவப்பாகும்
சுத்த மஞ்சளாய்த் தோன்றிடக்கண்டிடே."

(வேறு—இரத்தினச் சுருக்கநாடி..)

8. "ஏவலாய் குழலாய் பித்தஞ் செய்குணம் விளம்பக் கேளாய்,
கோலவேல் விழி சிவந்து குளிர்ந்திடிரிருக்கு மல்லால்,
சீலவே நீர்கடுத்து நொந்து சுறுக்கெனச்சி வந்து வீழும்,
ஞாலமே கிறுகிறென்று நாவுலர்ந்திருக்குங்காணே."

(வேறு—அகத்தியர் நாடி..)

9. "பித்தத்தில் பித்தமாகில் பிதற்றிடுங் கிறுகிறுக்கும்,
சத்தியுமதிகமாகுஞ் சரீரத்திளைப்புண்டாகும்,
அத்தியாயுலருமேனி யாகமும் வேறதாகும்
வற்றியே வெளுத்துக்காயம் வறண்டு பின் வீக்கமுண்டாம்."

(வேறு—காவியத்தின் நாடி..)

10. "தானென்ற பித்த மீறில் சடமெல்லாங் காந்தல் காணும்,
ஊனென்றவாந்தி வாய் நீருறியே ஒழுகுஞ்சாவான்,
வானென்றமட்டில் வெகு மண்டையில் குத்துண்டாகும்
தேனென்ற விக்கல் மூர்ச்சை செவியடைப்புண்டாம்பாரே."

மேற்கண்ட செய்யுள்களால் நாம் தெரிந்துகொள்ளுவது யாதெனில்: பித்த நாடி மீறி நடக்கில் தேகவெப்பு, அத்தி சுரம், உஷ்ணவாயு, அதிசாரம், கிறுகிறுப்பு, பயித்தியம், சோபை, பித்த எரிவு, மனக்கலக்கம், மறதி, தாகம், கனவு, அயர்வு, மயக்கம், மூர்ச்சை, பெரும்பாடு, ரத்தபித்தம், பிரமேகம், உடல் உலர்தல், மிகுந்த சூடு (சுரம்), உடல் வெளுத்தல் (பாண்டு), அப்பால் வீக்கம் (ஊதல் நோய்) உண்டாதல், ஈளை, இருமல், பெலக் குறைவு, பெருவாத நோய், வயிற்றில் வாயு, சிந்தித்தல், வாந்தி, வாய் நீருறல், வாய் நீர் ஒழுகல், வாய் கசப்பு, வாய் வேக்காடு, உட்காந்தல், நடுக்கம், தலைவலி, நாவறளல், அரோசகம், விக்கல், கிறுகிறுப்பு, காதடைப்பு, வயிறு எரிதல், நெஞ்செரிவு, அக்கினி மந்தம், குளிர் சுரம், விடாச்சுரம், காமாலை, பித்தவெட்டை, விழி

சூழலல், விழி குழி விழுதல், கண் இருளல், சிறு நீர் கடுத்து தொந்து சுழுக்கெனச் சிறு சிறுத்து மிறங்கல், முகம், விழி, நா, பல் சிறு நீர் இவை மஞ்சளாயும் சிவப்பாயுமிருத்தல் என்பதேயாம்.

3. ஐய நாடி (கபம்) மிகுதியால் வரும் குறி குணங்கள் அல்லது நோய்கள்.—(இதனை ஐயத்தில் ஐயம், ஐயம் கதித்தல், ஐயம் மீறி நடத்தல் எனவும் கூறுவர்.)

(சதக நாடி.)

1. "தானமுள்ள சேத்து மந்தானிளகில் வெப்பு,
சயமீளையிருமல் மந்தார காசம்,
ஈனமுறுஞ்சந்திவிடதேதோடம் விக்கல்,
யிருத்ரோகங்கரப்பான் விரண தோடம்,
மானனையீர் சூலை திரள் வியாதி வீக்கம்,
வருஞ்சத்தி சுவாசம் நெஞ்சடைப்பு, தூக்கம்,
வன முறுங் காமாலை பாண்டு சோபை
ஏழு சுரங்கள் பலதுக்கம விட முண்டாமே."

(வேறு—அகத்தியர்.)

2. "ஐயமே கதித்த போது யணுகிய வியாதி யுண்டாம்,
ஐயமே கதித்த போது யறிந்திடுந் தோடமாகும்,
ஐயமே கதித்த போதையமாஞ் சந்நியாகும்,
ஐயமே கதித்தபோதவையமே மெலிந்து கொல்லும்."

(வேறு—திருமூலர்.)

3. "விடங்கிய வைய மேலிரைப் பேற்றிடும்,
தடங்கியிருமிடுந்தன் விலா விரண்டும் நோகும்,
அடங்கிச்சுரங்காயுமளவற்ற கோழை நீர்,
இடங்கியுடல்வற்றி யிரத்த முங்கக்குமே."

(வேறு—அகத்தியர்.)

4. "மண்ணியசேத்துமம் மீறில் மாகாயம் வெளுக்கும் வற்றும்,
பண்ணியே அன்னஞ் செல்லா பருவிக்கலிருமல் சத்தி,
உண்ணிய மூர்ச்சை ஈகா யூசிநீர் வழுவழுத்து,
கண்ணியே விலாவும் நெஞ்சும் கடுப்புடன் நோகும் பாரே."

*(வேறு—ஐய ரோகியின் பொதுக் குறி குணங்கள்.)*

*(கலி விருத்தம்.)*

5. "விண்ணில் ரோகி விளங்குஞ் சேத்துமம்,
திண்ணமா முகம்திரைவிழி நாவுடல்,
கண்ணிற் பீளை கருமலந்தான் வெளுப்பாகப்
பண்ணியே பிணி பகர்ந்திடக் காட்டுமே."

*(வேறு—அகத்தியர் திரட்டு நாடி.)*

6. "சேத்துமஞ் செய்குணங்கேள் சில்லெனவுடம்பு வேர்க்கும்,
ஏற்றவாய் விடநீரூறி சுழித்து நாவழு வழுக்கும்,
நாற்ற நீர் மாய்ந்து விழும் நலம்பெற வெளுக்கு மேனி,
தோற்றுமிக் குணங்கள் கண்டால் சிலேற்பனத்
[தொகுதியாமே."

*(வேறு—அகத்தியர்.)*

7. "சேத்துமத்திற் சேத்துமாமாகில் திமிர்தமாயறியுஞ்
[சொன்னோம்,
ஆத்மா நல்லதல்ல அழிவது மெய்கண்டாயே,
கூற்றுவன் வந்திடுவதாகும் குறுவிழி வட்டங்கொள்ளும்,
சாத்திரமறிந்து சொன்னோம் யாத்திரை நாடி தானே."

*(வேறு—காவியத்தின் நாடி.)*

8. "பாரப்பா ஐயமீறில் பாசத்தினனல் தான் மீறும்,
நேரப்பாயிளைக்குந் தேகம் நெஞ்சுடன் விலாவும் நோவாம்,
தாரப்பாசுரமுங்காயுஞ் சாதமுமொடுக்கு நாளில்,
ஓரப்பாரத்தங் கக்கும் உடல் வற்றுஞ் சுரம் பேறாமே."

*(வேறு—பக்கம் 92—ப.சி. நாடி.)*

9. "ஐயமே கதித்த போதறியவே பொருமல் காணும்,
நையுமந்தாரகாசம் நளிர் குளிர் விக்கல் சத்தி,
செய்யுமாமூர்ச்சடைப்பன் தீதுறு காசரோகம்,
தொய்யுமாமிளைப்பு காசம் தோன்று மென்றான்
[சொன்னாரே."

இத்தியாதி மேற் கோள்களால் நாம் தெரிந்துகொள்ளுவது யாதெனில்:—ஐயநாடி மீறி நடக்கில், வெப்புகயநோய், ஈளை **(இளைப்பு)**, இருமல், மந்தாரகாசம், சந்நி, விடதோடம், **விக்கல்,**

இருத்ரோகம் (தமரக நோய்), கரப்பான், விரணம், சூலை நோய், வீக்கம், வாந்தி, திரட்சிவாயு, சுவாசகாசம், மாரடைப்பு, மார்பு வலி, தூக்கம், காமாலை, பாண்டு, சோபை, சுரம், சுப சந்நி, உடல் மெலிவு, விலாவிரண்டிலும் பக்க நோவு (பக்க சூலை), கோழை மிகுதல், உடல் வற்றல், இரத்த வாந்தி, உடல் வெளுத்தல், குளிரும் நடுக்கமு முண்டாதல், அன்னஞ்செல்லாமை, மேல் மூச்சு, திகைப்பு, வியர்த்தல், நாவழுவழுத்தல், இனிப்பாயிருத்தல், வாய் நீரூறல், முகம், விழி, நாவு, பல், மலம், நீர் இவை வெளுப்பா யிருத்தல், கண்ணிற் பீளை கட்டல், உடல் சில்லிடல், சிறு நீர் அதிகமாக இழிதல், உடல் திமிர் பிடித்தது போலிருத்தல், விழிகள் மேல் நோக்கி வட்டங்கொள்ளல், மரணத்தை யறிவிக்கும் யாத்திரை நாடி எனல், உடம்பெல்லாம் அனல் வீசுதல், வயிறு பொருமல், மூர்ச்சை ஆகிய இக்குறி குணங்களை உண்டாக்குமென அறிக!

**4. தொந்த நாடிகள் மிகுதிப்படின் உண்டாகும் பொதுக் குறி குணங்கள்:**

(கலீ விருத்தம்.)

"வெட்டுந்தொந்த ரோகியுடல் பல் முகம்,
கிட்டும் நீர் விழிகளர்மலம் நாவுகள்,
தொட்டுமே பலவிதமாகக் காட்டிடும்,
மட்டும் ரோகியின் மாபிணி கண்டிடே."

என்பதினால், தொந்திரோகியின் உடல், விழி, பல், முகம், நாவு, நீர், மலம் இவைகளின் நிறமும், தன்மைகளும் கலப்புற்ற குற்றங் களுக்குத் தகுந்தாற்போல் பலவிதமாகத் தோன்றுமென்பதேயாம்.

**1. வாத பித்த தொந்த நாடிக் குறி குணங்கள்:**

(சதக நாடி.)

"பொருளான வாதத்தில் பித்தஞ் சேர்ந்து,
பொருந்து குணங்களாமுஷ்ணவாயுசத்தி,
செரியாமை புளித்தேப்பம் பொருமல் நீரிற்,
சிவப்பு மலம் பிடித்தலுருந்தாது நட்டம்,
கருவானதேகமதிலுளைச்சல் சோம்பல்
கை கால் தறிப்பு நாக்கசக்கு மன்னம்,
பரிவான வூண் குறைதல் ருசி கேடாதல்
பல நோயும் வருத்திவைக்கும்பாங்குதானே."

(வேறு—திரட்டு நாடி.)

2. "முந்தியாவாதம் செண்டும் பித்தமொன்றெழுந்ததாகில்,
வந்துதான் வயிறு விம்மும் வலித்திடுந்தாகமோகம்,
சிந்தனை மிகவுண்டாக்கும் பொசிப்பையுஞ்செரியாதாக்கும்,
பைந்தொடிவாத பித்த தொந்தமென்றுதான் பகரலாமே."

(வேறு—திரட்டு நாடி.)

3. "எண்ணியவாதம் செண்டும் பித்தமொன்றெழுந்தாகில்,
புண்ணெனவுடம்பு நோவாம் புகையென எரியும் நெஞ்சு,
திண்மையாய் நாவறண்டு சிவந்து கடுத்து வீழும்,
அண்ணலா ருரைத்தவுண்மை ஆயுருவேதமாமே."

(வேறு—அகத்தியர் நாடி.)

4. "வாதத்தில் பித்தமாகில் வாயது குளறிப்பேசும்,
பேதித்துக்குளிருங்காலில் வீக்கமும் பெருகவுண்டாம்,
தாதுற்றபுத்தி தானுந்தடைப்படுந்தடங்கண்மாதே,
கோதுற்ற வயிறு விம்மிக் குடல்தனைப்புரட்டுந்தானே."

இத்தியாதி மேற்கோள்களிலிருந்து நாம் தெரிந்துகொள்ளுவது யாதெனில்: வாத பித்த தொந்த நாடியில் உஷ்ண வாயு, வாந்தி, செரியாமை, புளித்த ஏப்பம், பொருமல், நீர் எரிச்சல், மலக்கட்டு, தாது நட்டம், தேகவுளைச்சல், சோம்பல், கைகாலசதி, நாக்கசப்பு, அக்கினி மந்தம், அன்னஞ்செல்லாமை, ருசி கேடு, வாய்வு மிகுதல், வயிறு விம்முதல், வயிற்று வலி, மாதரை இச்சித்தல், தாகம், சிந்தனை மிகுதல், உடல் புண்போல் நோதல், நெஞ்செரிவு, நாவறளல், நீர்சிவந்து கடுத்து வீழல், வாய் குளறிப்பேசுதல், சூளிரல், கால் வீங்கல், புத்தி மாறாட்டம், வயிற்றுப் பொருமல், குடற்புரட்டல் ஆகிய இக் குறி குணங்களையுண்டாக்கு மென்றறிக!

2. வாத ஐய தொந்த நாடிக் குறி குணங்கள்.

(சதக நாடி.)

1. "பாங்கான வாதத்தில் சேத்துமநாடிப்
பரிசித்தால் திமிர் மேவு முளைச்ச லாகும்,
தீங்கான இருமலுடன் சந்நி தோடம்
சேர்ந்த விடம் வெடி சூலை யிருத்ரோகம்,

வாங்காத ஈளை மந்தாரகாசம்
வலியுடனே புறவிச்சுயுள் விச்சு வீக்கம்,
ஓங்காஞ்சுர முடனே சுவாசகாசம்,
உண்டாகும் வெகு நோய்க்கு முறுதிதானே."

(வேறு—திரட்டு நாடி.)

2. "மான நோய் வாதம் சண்டும்
சிலேற்பன மொன்றொழுந்ததாகில்,
ஆனதோர் சரீர நாவுங்கைகால் திமிர்த்துக் காட்டும்,
ஊனமாமமிர்தத்துள்ளே பூதத்தையு மிகுந்து விம்மும்,
பாலனங்கண்ணாள் வாதசிலேற்பனம்பரிந்து காணே."

(வேறு—அகத்தியர் நாடி.)

3. "வாதத்தில் சேத்துமமாகில்வலியொடு வீக்கமுண்டாம்,
பேதித்துத் தலையிடித்துப் பிணங்கிய குணங்கள் வேறாய்,
தீதுற்று மெய்வெளுத்துத் திடமுடனசனஞ் செல்லா,
பேதித்து நாவு பேசும் பெருகுவே வீக்கமுண்டாம்."

இவற்றினின்றும் நாம் தெரிந்துகொள்ளுவது யாதெனில்; வாத ஐய தொந்த நாடியில் உடலில் திமிர் உண்டாதல், உளைச்சல், இருமல், சுரம், சந்நி, வெடி சூலை, இருத்ரோகம் (தமரக நோய்), **ஈளை, மந்தாரகாசம், உள் விச்சு, புற விச்சு, உடல் வீக்கம், சுவாச காசம்,** உடல், நா, கை, கால் இவைகள் திமிர்த்தல், **வலி நோய்,** தலைவலி, வெவ்வேறு தோட குணங்கள், மெய் வெளுத்தல், உணவு செல்லாமை, பேச்சுத்தடுமாறல், வீக்கம் நாளுக்கு நாள் அதிகப் படல் ஆகிய இக் குறி குணங்களை விளைவிக்குமென்பதாம்.

**குறிப்பு**:—வாதம் இரண்டும் ஐயம் ஒரு பங்கு மென்று செய்யுளில் கூறியிருப்பது பொருத்தமன்று. ஐயம் தன்னளவுக்கு மேலும், அதனிரு மடங்குக்குள்ளடங்கியுமிருத்தல் என்றே கொள்ளல் வேண்டும்.

### 3. பித்த வாத தொந்த நாடிக் குறி குணங்கள்.

(சதக நாடி.)

1. "சிறப்பான பித்தத்தில் வாத நாடி
சேரிலுறுதாது நட்டமுதர பீடை,
உறைப்பாகச் சொரியாமைக்குன் மஞ்சூலை
யுற்றசுரங்கிராணி வயிற்றிரைச்சல் மந்தம்.

அறைப்பான ஓங்கார புறநீர்க்கோர்வை,
ஆயாசமிரக்க மொடு மயக்க மூர்ச்சை,
முறைக்காய்வு விஷ வீக்கம் மூலவாய்வு,
மூரடான நோய் பலவு முடுகும் பண்பே."

(வேறு—குணவாகட நாடி.)

2. "பித்தந்தான் வாதத் தோடு பிணைந்து நேர் தோன்று மாகில்,
மத்தப சந்நி வாதம் வந்திடும் பிதற்றலுண்டாம்,
உற்றிடும் வாதத்தோடு உறவதாய்ப் பித்த மீறில்,
நித்தமும் பிதற்றிப் பேசி நினை விழுந்திருப்பதென்னே."

(வேறு—அகத்தியர் நாடி.)

3. "பித்தத்தில் வாதமாகில் பிடரியுங்காலுங்கையுங்,
குத்தது போலேயாகுங் குழறி மெய்பதறும் பின்னே,
அத்தியாயுலருமேனியாக மூஞ்சுரத்தால் நோவாம்,
புத்தியுமடியுமிந்தப் பொறுமைபோய்க் கோபமாமே."

இவற்றால் நாம் தெரிந்து கொள்ளுவது யாதெனில்; பித்தவாத தொந்த நாடியில், தாது நட்டம், செரியாமை, சூன்மம், சூலை, சுரம், கிராணி, வயிற்றிரைச்சல், மந்தம், புறநீர்க்கோர்வை, ஆயாசம், மயக்கம், மூர்ச்சை, முறைக்காய்ச்சல், விட வீக்கம், மூலவாய்வு, சந்நி, பயித்திய நோய், நினைவிழுத்தல், பிடரி, கால், கைகள் இவற்றில் குத்தலுண்டாதல், மேனி ஒடுங்கிப் பதறல், மேனி வற்றல், பொறுமை யின்மை, கோப முண்டாதல் ஆகிய இக்குறி குணங்களை விளைவிக்கும்.

**4. பித்த ஐய தொந்த நாடிக் குறிகுணங்கள்.**

(சதக நாடி.)

1. "பண்பான பித்தத்தில் சேத்தும நாடி
பரிதித்தாலத்திசாமிளைப்பு ஈளை,
கண் காது நயன மலம் நீருமஞ்சல்
கனவயிறு பொருமல் மஞ்சள் நோய் கண்ணோவு,
உண்போது மறுத்தல் ரத்தவிப்புருதி தானும்,
உளைமாந்தை பீனசமும் ரத்த வீக்கம்,
நண்பான காமாலை சோகை வெப்பு
நணுகிவந்த பல பிணியும் நண்ணுந்தானே."

(வேறு—திரட்டு நாடி.)

2. "ஏய்ந்ததோர் பித்தமிரண்டுஞ் சிலேற்பன மொன்றெழுந்த தாகில்,
ஆய்ந்ததோர் பசியுமில்லை யடிக்கடி வயிறு விம்மும்,
தோய்ந்ததோர் நயன நீருஞ் சுத்தமாய் மஞ்சள் போலாம்,
பேய்ந்ததோர் பித்தமாகில் பித்த சிலேற்பன மதாமே."

(வேறு—அகத்தியர் நாடி.)

3. "பித்தத்தில் சேத்துமமாகில் பிதற்றும் வாய்குளறுமிக்க,
சத்தியும் வாய்நீர்தானுந் தானறியாமலோடுங்,
கத்தியபேய்கள் போல கழற்றிய வயிற்றில் நோவாம்,
பித்தமுமெடுத்துக் கொட்டிப் பிடரியில் நோவதாமே."

இவ்வகையான மேற்கோள்களால் நாம் தெரிந்து கொள்ளுவது யாதெனில்: பித்த ஐய தொந்த நாடியில், அத்திசுரம், இளைப்பு, ஈளை, கண், காது, இவற்றின் மலம், சிறு நீர் இவை மஞ்சளித்தல் ("கண் காது நயன மலம் நீரு மஞ்சள்" என்பதின் கருத்து இதுவே: மற்றெல்லாம் மஞ்சளிக்கும் போது மலம் மஞ்சளிப்பதில்லை.) வயிறு பொருமல், மஞ்சள் நோய், கண் நோய், ஊண் மறுத்தல், ரத்தவிப்புருதி, உளைமாந்தை, பீனச சோகம், ரத்த வீக்கம், காமாலை, சோபை, வெப்பு, பசியின்மை, பித்த வாந்தி, வாய் பிதற்றல், வாய்குளறல், வாய்நீர்மிகுந்து ஒழுகுதல், வயிற்று நோய், தலை சுற்றல், பிடரியில் நோவு ஆகிய இக் குறிகுணங்களுண்டாமென்றறிக!

குறிப்பு.—பித்தம் தன்னளவில் இரண்டு பங்கும், ஐயம் தன் அளவுக்கு மேலும், அதன் இரட்டிப்புக்கு உள்ளடங்கியும் நாடிகள் நடைபெறும்.

5. ஐயவாத தொந்த நாடிக் குறிகுணங்கள்.

(சத நாடி.)

1. "கண்டாயோ சிலேற்பனத்தில் வாதநாடி
கலந்திடுகில் வயிறு பொருமல் கனத்த வீக்கம்,
உண்டாலோ ஓங்காரஞ்சத்தி விக்கல்
உறுதிரட்சை வாய்வுவலி சந்திதோடம்
விண்டாலே யிளைப்பிருமல் சோபை பாண்டு
விடபாகம் விட சூலை பக்க வாதம்,
திண்டாடு நாசிகாபீ டங்கக்கல்
சிரதோய்கள் பலவும் வந்து சிக்குந்தானே."

(வேறு—திரட்டு நாடி.)

2. "செப்பிய சிலேற்பன மிரண்டும் வாதமொன்றெழுந்ததாகில்,
வெப்புறுங் கபமேலிட்டுயினிப்பையே மிகவும் வேண்டும்,
தப்பில்லாப்பசியுமுண்டு தவனமே பற்றி நிற்கும்,
இப்படிக்குணங்கள் கண்டால் சிலேற்பன வாதமென்னே."

(வேறு—அகத்தியர் நாடி.)

3. "வாட்டிடுஞ்சேத்துமத்தில் வந்திடும் வாதமாகில்,
நாட்டியகால்கள் போல நரம்பெல்லாம் வலித்துநிற்கும்,
கூட்டிய பிடரிதானுங்குன்றவே வலிக்குமாகில்
நாட்டிய விழியுமேலாய் நாவது குளறுந்தானே."

இவற்றினின்றும் நாம் தெரிந்து கொள்ளுவது யாதெனில், ஐயவாத தொந்த நாடியில், வயிறு பொருமல், கனத்த வீக்கம், வாந்தி, விக்கல், வாயுத்திரட்சி, வாதசந்தி, தோடம், இளைப்பு இருமல், சோபை பாண்டு, விட வீக்கம், விட சூலை, பக்கவாதம், நாசிகாபீடம், சிர நோய், இனிப்புப் பண்டங்களையே விரும்புதல், பசியும் தாகமும் மிகுதல், நரம்புகள் வலித்து நிற்றல், பிடரிவலி, விழிமேல் நோக்கல், நாவு குளறல் ஆகிய இக்குறி குணங்களை விளைவிக்கும்.

குறிப்பு.—ஐயம் தன்னளவில் இரண்டு பங்கும், வாதம் தன் அளவிற்கு மேலும் அதன் இரட்டிப்புக்குள்ளடங்கியும் நாடிகள் நடைபெறும்.

6. ஐயபித்த தொந்த நாடிக் குறிகுணங்கள்.

(சதக நாடி.)

1. இடமான சேத்துமத்தில் பித்த நாடி
எழுந்தணுகில் விடமுடனே வீக்கமுண்டாம்,
திடமான குளிர் காய்ச்சல் மஞ்சள் நோவுந்
தேகத்தினுளைச்சலிளைப் பிருமல் வாந்தி
விடமான நெஞ்சடைப்பு சுவாசம் விக்கல்
வெகு சூலமும் நாவறட்சி பாண்டு ரோகம்
அடமான குவளைரத்த மதிசாரந்தான்
அணுகி வெகு பல நோய்க்குத் தடங்கண்டாயே."

(வேறு—திரட்டு நாடி.)

2. "தூங்கிய சிலேற்பன மிரண்டும்
பித்தமென்றெழுந்ததாகில்,
ஓங்கிய சந்நியுண்டா
மூச்சிநோவுஞ் செவியுங்கேளாய்,
பாங்குடன் நாவி னித்துப்
பத்தியுஞ் செரியா தாகும்,
பூங்கொடி யனையாய்ச்
சிலேத்துமபித்தம் புகலுங்காலே."

(வேறு—அகத்தியர் நாடி.)

3. "செத்தும பித்தமாகில் தின்பது கசப்புண்டாகும்,
பார்பெறு நாவு தன்னில் பலவித புளிப்பினிப்பாம்,
சேர்ப்பது பேசுமாறு திடமில்லை கோழையாகும்,
காப்பது கண்ணும் பீளைச் சாறும் பின் சத்தம் வேறாம்."

இவற்றினின்றும் நாம் தெரிந்து கொள்ளுவது யாதெனில்: ஐயபித்த தொந்த நாடியில் விட வீக்கம், குளிர்சுரம், தேக வுளைச்சல், மஞ்சள் நோய், இளைப்பு, இருமல், வாந்தி, மார்படைப்பு, சுவாசகாசம், விக்கல், மிகுசுரம், நாவறட்சி, பாண்டு, கோழையுடன் ரத்தம் விழல், அதிசாரம், சந்நி, உச்சிநோதல், காது கேளாமை, நாவினிப்பு, பத்தியம் செரியாமை, உண்ப தெல்லாம் கசப்பாயிருத்தல், ஒரு சமயம் நாவு புளித்தல் இனித்தல், கசப்பாயிருத்தல், பேச்சுத் தடுமாறல், தொண்டையில் கபங்கட்டல், குரல் வேறு படல், கண் பீளை சாறல் ஆகிய இக் குறிகுணங்களை விளைவிக்கும்.

குறிப்பு.—ஐயம் தன்னளவில் இரண்டு பங்கும், பித்தம் தன்னளவுக்கு மேலும், அதன் இரட்டிப்புக்கு உள்ளடங்கியு மிருக்கு மென்றறிக.

நாடி பற்றிய முக்கிய கவனிப்பு:—இங்ஙனம் வாத பித்த ஐய மாகிய மூத்தோடங்களின் தன்மையைச் சித்தர்களியற்றிய நூன் மூகமாய், இதனை போன்ற பல செய்யுட்களையும் செவ்வனே அறிந்த பின்னர், ஒவ்வொரு தோடத்தையும் குறிக்கின்ற நாடி யுடன் வேறு தொந்தங்களிருக்கின்றனவா வென்பதை ஆராய்தல் வேண்டும். ஆகையால் முன்னர் கூறியது போல் நாடியின்

வன்மை, மென்மையை நன்குணர்ந்தாலன்றித் தொந்தங்களறியப் படாமை பற்றி, நாடியின் துடிப்புக்கு அளவு இன்னதென்பது அறிவிப்பான் வேண்டி (1) "தைகின்ற கோதுமையையரிசி போலச்—சர்வம் வியாபித்ததிருக்குமதுதான் கூறில்" எனக் குணவாகடமும், (2) "அறைந்தார்முனி வரளவுகேள் தோற்றும்—விரை கோதுமையாம் வியந்து" எனக் "கண்ணுசாமியமும்" கூறியிருப்பதால், நாடி நடையின் ஒரு மாத்திரை அளவை ஒரு கோதுமையரிசிப் பிரமாணம் எழுந்து அடங்குவதற்குரிய கால வளவையே மாத்திரையின் இலக்கண மென்று மேற்கூறிய நூல் களும், மற்றும் பல நூல்களும் கூறுகிறபடியால், தேகத்தின் கண் முத்தோடங்களும் இயற்கையாக யிருக்க வேண்டிய மாத்திரைக் கிரமங்களையும் முன்னரே கூறியுள்ளதை ஞாபகத்தில் வைத்து கொள்ளவும் வேண்டும்.

அப்பால் மூன்று நாடிகளும் தனித்து மீறி நடந்தாலும், தொந்தமாக அதிகரித்து நடை பெற்றாலும் உண்டாம் குறிகுணங் களை மேலேகூறிய செய்யுட்கள் மூலம் நன்கு அறிதல் வேண்டும். இவ்விதத் தொந்த தோடங்களின் நடையை ஒழுங்காக உணர்ந்த பின் தேகம், இடம், காலம், வயது, பலம் முதலிய தன்மைகளை யும் கவனித்து, ஒரு முறைக்கு இருமுறை வெவ்வேறு காலங்களில் நாடி நடையின் தன்மையை நுண்மையுடன் பகுத்துணர்தல் மிகவும் அவசியமானது. நாடிகள் மூன்றின் அரசியல் கால உண்மையையும் மனதில் எண்ணி நாடி நடையை ஆராய்தல் சிறந்த முறையாகுமெனப் பலான மருத்துவ நூல்கள் கூறுவதை இங்கே விளக்கியுள்ளேன்.

வளி, அழல், ஐயமாகிய மூன்று தோடங்களின் மிகுதியுடன் உஷ்ணமும் சேர்ந்ததாலுண்டாம் குறிகுணங்களைக் கீழே விளக்கி யுள்ளார் :

**1. வாத மிகுதியுடன் உஷ்ணமுஞ் சேர்ந்ததாலேற்படும் குறி குணங்கள்.**

(சதக நாடி.)

"சிறப்பான வாதத்திலுட்டிணந்தானே,
சேர்ந்திடு கிலதிசாரமுளைச்சல் வாயு,
உரைப்பான பொருமலொடு அக்கினி மந்தம்
உள்ளாகும் நீர்ச்சிறுப்பு பிரமேகங்கள்

பிறப்பாடு மதகரிநீர் கரப்பான் ரத்தம்
பிரமேகம் பெரும்பாடு புறநீர்க்கோவை
அறப்பான் வாயுசூலை சேத்துமசோகம்
ஆனபலபிணிகளுமே வந்தடருத்தானே."

என்பதினால், வாதமிகுதியுடன் உஷ்ணம் சேர்ந்தால் அதிசாரம், தேகவுளைச்சல், வாயு, வயிற்றுப்பொருமல், அக்கினிமந்தம், நீர் சிறுப்பு, பிரமேகங்கள், மதகரிநீர், கரப்பான், ரத்தப்பிரமியம், பெரும்பாடு, புறநீர்க்கோவை, சூலை, கபரோகம், மற்றும் பல பிணிகளும் உண்டாகுமென்பர்.

**2. பித்த மிகுதியுடன் உட்டிணம் சேர்ந்ததாலுண்டாம் குறி குணங்கள்.**

(சதக நாடி..)

"தழைப்பான பித்தத்திலுட்டிணங் கொண்டால்,
சயமத்தி சுரம் வெதுப்பு சத்திகுன்மம்,
களைப்பான பொருத்து ளைவுவதிசாரங்கள்
கடுப்புடனே வயிற்றுவலி மூலவாயு
இளைப்பாகி யூண்மறுத்தல் நாக்கசப்பு
இரவில் கனவுடனே சங்கார தோடம்
பழைப்பான பயித்திய நோயெரிவுதாகம்
வந்தணுகில் பல பிணிக்கும் வகையதாமே."

என்பதினால், பித்த மிகுதியில் உட்டிணஞ் சேர்ந்தால் சயம், அத்திசுரம், வெதுப்பு, சத்தி, குன்மம், நீல்களில் உளைச்சல், அதிசாரம், வயிற்றுக் கடுப்பு, வயிற்றுவலி, மூலவாயு, உணவு செல்லாமை, நாக்கசப்பு, இராக்கனவு, சங்காதோடம், பயித்தியம், உடல் எரிவு, தாகம் மற்றும் பலான நோய்களுமுண்டாகுமென்பர்.

**3. ஐய மிகுதியுடன் உட்டிணஞ் சேர்ந்ததாலேற்படும் குறி குணங்கள்.**

(சதக நாடி..)

"கதிப்பான சேத்துமத்திலுட்டிணங் கூடில்
கலந்த குணஞ்சயமிருமல் சுவாசகாசம்
மதிப்பான கோழை ரத்தம் விப்புருகியுடனே
வளர்நாசிகா பீடமிருக்கோகங்
கொதிப்பான சிங்குவையாக் கிராணவாயு
கொட்டாவி விக்கல் மந்தாரகாசம்
துதிப்பான வீசலத்திக்காய்வுரத்தம்
தோன்றுமிகு பினி பலவுந் தொந்திப்பாமே."

என்பதினால், ஐயமிகுதியுடன், உட்டிணங்கூடில், சயம், இருமல், சுவாசகாசம், கோழை விழல், ரத்தம் விழல், விப்புருதி, நாசிகா பீடம், இருத்ரோகம் (தமரக நோய்), நாவு நோய், ஆக்கிராண வாயு, கொட்டாவி, விக்கல், மந்தாரகாசம், ஈரல்நோய், அத்திசுரம், ரத்தபித்தம் முதலிய அனேகரோகங்களுண்டாகுமென அறிக!

வளி, அழல், ஐயம் ஆகிய மூன்று தோடங்களின் மிகுதியுடன் **வாயுவும் சேர்ந்ததாலுண்டாகும் குறிகுணங்களைக் கீழே விளக்கியுள்ளார்:**

**1. வாத மிகுதியுடன் வாயு கூடினாலுண்டாம் குறிகுணங்கள்.**

*(சதக நாடி.)*

*"அடர்கின்ற வாதத்தில் வாயுவு வந்து*
*யணுகினால் வலுவீச்சித்திமிர் வியாதி,*
*சுரர்கின்ற வானந்தவாயு பக்கசூலை,*
*தடைக்குறுக்குவலி விலா பிடரி நெஞ்சு*
*படர்கின்ற நரம்பி சிப்புயிடங்களோறும்*
*பரந்து குத்திக் கொழுவித்து நெஞ்சடைப்புமாகும்,*
*இடருறவே சீதமுண்டாங் கபம் பெந்திக்கும்*
*யிதினாலே பல பிணிகள் வந்திருக்கும்பாரே."*

*என்பதினால், வாதமிகுதியுடன் வாயுவுசேரில் உள்வீச்சு, புற வீச்சு, திமிர்வியாதி, ஆனந்தவாயு, பக்கசூலை, தடை குறுக்கு, விலா, பிடரி, நெஞ்சு, நரம்பு ஆகிய இவற்றில் வலி, நரம்பிழுப்பு, தேகமெங்குங் குத்தல், மார்படைப்பு, சீதம், கபமடைப்பு ஆகிய இக் குறிகுணங்களையுண்டாக்கும்.*

**2. பித்த மிகுதியுடன் வாயு சேர்ந்ததாலுண்டாம் குறி குணங்கள்.**

*(சதக நாடி.)*

*"வகையான பித்தத்தில் வாயுகூடில்*
*வசமானால் வலீகுன்மம் சூலைவாய்வு,*
*பகையான வாந்தி விக்கல் அருவருப்பு*
*பயித்தியங்கள் செரியாமை புளித்த ஏப்பம்*
*தகையாத ஈரல்வலி நெஞ்சில் நோதல்,*
*தலைகிறுக்கு யசதியாந்தாது நட்டம்*
*துகைமூலவாயுற்றாலுஷ்ணஞ் சோகை*
*தொடர்ந்து வரும் பல் பிணிக்குந் தொணிப்பு*
*காணே."*

என்பதினால், பித்த மிகுதியில் வாயு கூடினால் வலி குன்மம், சூலை, வாயுவு, வாந்தி, விக்கல், அருவருப்பு (அரோசகம்) பயித்தியம், செரியாமை, புளியேப்பம், ஈரல் வலி, மார்பு வலி, தலை கிறுகிறுப்பு, அசதி, தாது நட்டம், மூலவாயு, உட்டிணம், சோகை ஆகிய இக் குறிகுணங்களைக் காணலாம்.

3. ஐய மிகுதியுடன் வாயு சேர்ந்ததாலுண்டாம் குறிகுணங்கள்

(சதக நாடி.)

"தொந்தித்த சேத்துமத்தில் வாயு கூடித் தொடர்ந்த
குன்மம் நெஞ்சடைப்பு சுவாசகாசம்,
வந்தித்த குரல்தனிலே உறுத்தலீளை
வழுவழுப்பு நீரூறல் மலத்தில் சீதம்,
வெந்தித்தல் கொழுத்தல் குத்துந் திமிர் வியாதி
வீச்சுடனே வலி பெட்டுந்திரட்சி பாண்டு,
அந்தித்த கிறுகிறுப்பு மயக்கம் விக்கல்,
ஆனபல பிணிகளுமே வந்தட ருந்தானே."

என்பதினால், ஐயமிகுதியுடன் வாயு சேர்ந்தால் குன்மம், மார் படைப்பு, சுவாச காசம், குரற்கம்மல், நாவழுவழுப்பு, வாய் நீரூறல், மலத்தில் சீதம் வீழல், தேகம் குத்தல், திமிர் வியாதி, உள் வீச்சு, புறவீச்சு, வலி (இழுப்பு) வாயுத்திரட்சி, பாண்டு, கிறு கிறுப்பு மயக்கம், விக்கல் முதலிய பலான ரோகங்களை விளை விக்குமென அறிக!

வலி, அழல், ஐயம் என்னும் முத்தோடங்களினின்மிகுதியுடன் சீதளமும் சேர்ந்ததாலுண்டாம் குறிகுணங்களை விளக்கியுள் ளார்:

1. வாத மிகுதியுடன் சீதளமும் சேர்ந்ததாலுண்டாம் குறி குணங்கள்.

(சதக நாடி).

"இருக்குமந்த வாதத்தில் சீதஞ் சேர்ந்தால்
யிளைப்பிருமல் விடசந்தி தோடம் வீச்சு
மருக்கின்ற குளிர் காய்ச்சல் விரண தோடம்
வாந்தி எடுத்திடுமுளைவும யக்கஞ் சோர்வு
ஒருக்கின் றமலபந்தம் பொருமல் வீக்கம்
உள்வீச்சு சூலையொடு பாண்டு ரோகம்,
தருக்கின்ற தனுர்வாதம் பக்கவாதம்,
சார்ந்து வெகு பிணிபலவுந் தழைக்கும் பாரே."

என்பதினால், வாதமிருதியுடன் சீதளமுங்கூடில் இளைப்பு, இருமல், விடசந்நி, தோடம், உள்விச்சு, புறவீச்சு, குளிர் காய்ச்சல், விரணம், வாந்தி, மயக்கம், சோர்வு, மலபந்தம், வயிறு பொருமல், விக்கம், சூலை, பாண்டு, தனுர்வாதம், பக்கவாதம் முதலிய ரோகங்களை உண்டு பண்ணுமென்றறியவும்.

**2. பித்த மிருதியுடன் சீதளம் சேர்ந்ததாலேற்படும் குறிகுணங்கள்**

(சதக நாடி.)

"தொனிப்பான பித்தத்தில் சீதளங்கூடில்,
தொந்தித்தால் பசிமந்த மிரைச்சல் வாயு,
இனிப்பான கபம் வாய்வுவாத கோபம்,
எழும் மூலக்கடுப்புடனே யிருமல் சத்தி
பனிப்பான குளிர்காய்ச்சல் விடபாரூடம்
பாங்குடனே காமாலை சோபை வீக்கம்,
கனிப்பான நாக்கு வழுவழுப்பு தோடம்,
கலந்துவரும் பிணிபலவுங் கதிக்குந்தானே."

என்பதினால், பித்தமிருதியில் சீதளமுங் கூடினால் பசிமந்தம், மூலக் கடுப்பு, இருமல், வாந்தி, வயிற்றிரைச்சல், வாய்வு, கபம், வாதகோபம், குளிர்காய்ச்சல், காமாலை, பாண்டு, சோபை, வீக்கம், நா வழுவழுப்பு தோடம் முதலிய பலவித ரோகங்களுண்டாகுமென்பதேயாம்.

**3. ஐய மிருதியுடன் சீதளமுங் கூடினாலேற்படும் குறிகுணங்கள்**

(சதக நாடி.)

"அடைவானசேத்துமத்தில் சீதளம் பற்றில்.
அணுகினால் சுவாசமடைப்பு யிளைப்பு மூர்ச்சை,
திடமான வாயாச மயக்கம் வியர்வை
சேர்ந்த விக்கல் சந்நிவிட தோடம், வீச்சு,
இடமான வயிறு பொருமல் குளிர்நடுக்கல்
பிரத்த சுரமோங்காரம், பெருத்த வீக்கம்,
கடலான அவ சூரி வந்தணுகு மென்றே
சார்ந்த பெரியோ ருரைத்த தயவுதானே."

என்பதினால், ஐயமிருதியுடன் சீதளஞ் சேர்ந்தால் சுவாச மடைப்பு, இளைப்பு, மூர்ச்சை, அயாசம், மயக்கம், வியர்வை, விக்கல், சந்நி விடதோடம், உள் விச்சு, புற வீச்சு, வயிறு பொருமல், குளிர் நடுக்கல், ரத்தசுரம், ஓங்காரம், பெருத்த வீக்கம் முதலிய ரோகங்களுண்டாகுமென்றறிக!

**வளி, அழல், ஐயம் ஆகிய மூன்று தோடங்களும் கூடி ஏக காலத்தில் பேதித்து நின்றாலுண்டாகுங் குறிகுணங்கள் :**

(சதக நாடி.)

"தயவானதிரி தோட மூன்றுங்கூடித்
தானெழுந்தாற் சந்நியவகுணை மேயாகும்,
பயமாக மூவருமே பதுங்கினாலும்,
பனிமடர்ச் சந்நியவ குணமேயாகும்,
மயமான சேத்துமத்தில் வாதமானால்,
வாதத்தில் சேத்துமம் வலுக் கொண்டாலும்
நயமான பிணி தீரவெகுநாள் செல்லும்,
நாடி வகுப்புணர்ந்து குறி யறியலாமே."

என்பதினால், வாதம், பித்தம், ஐயம் இம் மூன்று நாடிகளும் ஏகோபித்து மீறி நடந்தாலும், உள்ளடங்கிக்குறைவாக நடந்தாலும் சந்நியைக் குறிக்கும் அவகுணம் எனவும்; அன்றியும் ஐயவாதம், வாத ஐயம் இவ்விரண்டு தொந்தங்களினாலுண்டாம் பிணிகள் குணமாக ஒரு நாள்களாகுமென்றும் கூறியுள்ளார்.

**சாத்தியாசாத்திய தொந்த நாடிகளிவை யெனல் :**

(சதக நாடி.)

"அறிவானவாதத்தில் பித்தமானால்
அடர்ந்த பித்தமதில் வாதமணுகினாலும்,
செறிவான பித்தத்தில் கபமானாலும்,
செறித்த கபம் பித்தத்தில் சேர்ந்திட்டாலும்,
பிறிவாக நோய் தீருங் கபத்தில் வாதம்,
பிரண்டாலும் வாதமையம் பினல் கொண்டாலும்
குறியாக மருந்து பலவிதம் செய்தாலும்
கூண்டவிடம் விட்டுவபிர் கடக்குந்தானே."

என்பதினால், வாத பித்தம், பித்தவாதம், பித்த ஐயம், ஐயபித்தம் இத்தியாதி, தொந்த நாடிகளாறுண்டாம் நோய்கள் குணமாகுமெனவும்; ஆனால் ஐயவாதம், வாதஐயம் இவ்விரண்டு தொந்தங்களாலுண்டாம் நோய்கள் குணமாவது அரிது எனவும் அறிகிறோம்.

# அத்தியாயம் XII

**அசாத்திய நாடியும் மரணக் குறிகுணங்களும் இவையெனல் :**

(அசாத்திய நாடி)

1. "சேத்துமத்தில் சேத்துமந் திமிர்தமாயறியுஞ் சொன்னோம்,
ஆத்மா நல்லதல்ல அழிவது மெய் கண்டாயே
கூற்றுவன் வந்திடுவதாகுங் குறிவழி வட்டங் கொள்ளும்,
சாத்திரமறிந்து சொன்னோம் யாத்திரை நாடிதானே."

(அகத்தியர்)

**அமிர்த முண்டும் சாகுதல் குறி :**

2. "பதைக்கின்ற மூவரில் பக்குவந் தப்பியே,
நிதைக்கின்ற வாதமும் பித்தமுஞ் நீங்கிடில்
சுதைக் கொண்டிருந்தாலும் தோன்றியுயிர்விடுமே,
பிதைக் கொண்ட வாதபித்தம் பெலனாமே."

3. "பித்தமடங்கி னாற்பேசாதே போய்விடு,
எத்தியவையம் எழுந்திடிற் கிட்டாதே,
எத்தியவாத மெழும் பின் மருந்துசெய்,
எத்திய மூன்றினியல்பை யறிந்திடே."

(திருமூலர்)

4. "கண்ட பித்தந்தானடங்கக் காட்டு மருந்தினால்
கொண்ட பயனில்லை குற்றமோ—டண்டு கபம்
ஓடப்பரிகார மோதுவதில்லைத் தெரிய
தேடவாத மோடிற் செய்."

(கண்ணுடையார்)

5. "பேசக்கப மீறிப்பின்பற்றப் பித்தமதைப்
பாசவுலகாசை யறும் பண்டிதரே—வாசலிலே
நாடுவதேன் வாதத்தை நாடுங் கபமாயின்
ஓடுமுயிர் நாழிகையிலொப்பு."

6. "ஒப்ப நாடிப்பதறவுற்று நடுங்கச் சுவைநாச்
செப்பவறண்டு செயலற்றுத்—தப்பவழி
மேனோக்கக் கண்டத்தில் மீது கபம் நின்றுழலுங்
கானோக்கச் சாராதே கண்டி."

7. "செய்ய மூன்றொன்றாகச் சேர நடந்திடினும்
பைய வடங்கிடினும் பற்றற்று—நொய்ய
வாணைவாற் போற்றுடி தானார்ந் திடினு மக்காற்
சுரணையற்றா விபோஞ் சொல்."

(கண்ணுசாமியம்)

8. "இடைதுடைமார்பின் கீழே
யெறிபடப்பதறி யோடில்,
முடுகிட வீங்கு மாகில் மூவரி
லொருவரோடில்
படரவேதாகமிஞ்சிப்பஞ்சிடுங்
கண்ணும் வாயும்
அடாவிக் குணங்கள் கண்டால்
யறிந்து கொள் மாண மென்றே."

9. "எடுக்கும் படுக்கு மெழுந்திருக்கு
மெழுந்தே மூச்சுதனை வாங்கும்,
வடுக்கனொத்த விழியிரண்டும்
மலரவிழிக்கும் வழிபார்க்கும்,
தொடுக்குந் தொடுத்த சேத்துமம்
மூந்தொண்டை தனை யடைப்பிக்கும்,
அடுத்து வருவதிது கண்டாலறிவீர்
மரணம் நிச்சயமே."

(அகத்தியர்)

10. "நடக்கும் நாடி மிகப்பதறும்
நாவும் பல்லும் வறண்டிருக்கும்
மடுக்குங் கெட்டு விழிரெண்டும்
மேலே நோக்கும் விதி பார்க்கும்,
தொடுக்கின்ற சிலேத்துமம்
தொண்டைதனில் நின்றுலவும்
அடுக்கு மதுவே குறியானாலங்கே
செல்லவேண்டாமே."

(குறியடையாள நாடி.)

(N.B.—9 and 10 ஒருத்து ஒன்றே.)

11. "மரணமதை யறிவதற்குக் குறியைக் கேளு
வலுவாக விசைநரம்பு குளிர்ந்து காணும்,
விரண மெனும் பொறிகளெல் லாந்தளர்ந்து மெத்த
விசைநரம்பு தான் தளர்ந்து விரைந்து வாங்கி,
நரணமெனப் பற்கடித்து மணியும் நட்டு,
நாவுலர்ந்து மூச்சயர்ந்து நடுக்க முண்டாய்த்
துரண மெனும் வாத பித்த சிலேத்தும் மெல்லாம்
சோத்தியம் விட்டிலைப்போற் றுடிக்கில் சாவாம்."

12. "துடிகண்ட சேத்துமந்தான் வெள்ளம்போலே
சுறுசுறுக்காய்மடமடென வோடுமாகில்
அடிகண்டு மற்றாம் நாள் மரணமாகும்
அப்பனே பித்தமது சிதறியோடில்
முடிகொண்ட மூன்றாம் நாள் சாவார் சொன்னேன்.
முழுமையுமே வாதமதுசிதறி யோடில்,
இடிகொண்ட எட்டாம் நாள் மரணமாவார்
இன்பமாய்க் கண்டறிந்தே யிசைந்து நில்லே."

13. "நில்லப்பாவாத பித்தமிரண்டுங்கூடி,
நிலைதப்பிச் சிதறியது வோடுமானால்,
கொல்லுமப்பா பதினைந்து நாளிற்றானும்,
குணமாக விதனுடனே ஐயங்கூடில்,
வெல்லும்மப்பாமண்டலத்தில் வாக்கை பாழாம்,
விதமாக மூன்றுமே ஒவ்வொன்றாய்க்கூடி,
அல்லப்பாயரணைவால் துடியே காணில்
அப்பனேயவர் பிழையாரறிந்து பாரே."

14. "பிழையாத வாதபித்தம் சேத்துமங்கூடிப்
பிரண்டு வருந்தேள் கொடுக்குப்போலேயாடி,
உளையாதவோடம் போலே யோடுமானால்,
உத்தமனே இங்களிலே, மரணமாவார்,
குளையாத நாடியின் மெய்குறியைக் காணார்,
கூட்டமிட்டுக் குருவெனப் பிரசங்கிப்பார்
விழியான கண்ணிரண்டும் மற்றக்கண்ணும்
விதியறிந்தார் சன்னியுமே விலகும்பாரே."

15. "சன்னியெழும் போலிருந்த நாடி மூன்றும்,
சாதகமாய்ச் சுழல்வண்டு தண்ணீர்மீதில்,
உன்னியது பராபரத்தே யோடுமாப்போல்,
ஓடியெங்கும் வாதபித்த சிலேத்துமமெல்லாம்,
கன்னிய சாதகமாய் வருமேயாகில்,
கதிப்பாகும் வாதபித்தவையம் பம்பரம் போல்
பின்னியது விட்டிலைப்போல் கற்றறிந்து வீழில்,
பேச்சில்லை, மரணமென்று பிரித்துச்சொல்லே."

(பரிபூரண நாடி)

16. "வெள்ளம் நீரோடும் போல் சிலேத்தும் மீறியோடில்
வள்ளல் தானறியச் சொன்னோம் மரிப்பது மற்றாம்
[நாளில்,
தெள்ளியவாதந்தானுஞ் சிதறியேயோடுமாகில்,
வள்ளிய நாளொரெட்டில் உறுதியாய்ச் சாவாசென்னே."

17. "பித்தமிப்படியே யோடிற் பிதற்றி நாள் மூன்றிற் கொல்லும்,
மூத்தியவாதம் பித்தமுயங்கி யப்படியே யோடில்,
பற்றறச் சொன்னோங்கண்டீர், பதினைந்து
[நாளிற்கொல்லும்
நாற்றியவையங் கூடில் நாற்பது நாளிற் கொல்லும்."

18. "அரணைவாலற்றுடிபோலாடில் யாங்கவன் பிழைப்பதில்லை,
பரவுதேட் கொடுக்குப் போலும் பதைத் திடிற் சாவு
[திண்ணம்
கரையெறும் பதுபோலோடிற் கண்டிடாய் திங்கள் மூன்றில்
வரையணிமூலை நம்பாதே மரணமென்றறிந்து கொள்ளே."

19. "தேளெனத் தெரிந்து சற்றே திரிநாடி செய்யுமாகில்
மாளவே மரணவாதை வந்திடுஞ் சன்னியுண்டாம்,
மீளுவதில்லை முன்னாள் விதிப்படி வந்ததீது
நாளறி திங்கட்குள்ளே நாசமாய்க் கொல்லுந்தானே."

20. "ஏற்றியதீபந் தன்னிலெரி சுடர் தீயைப் போல்,
போற்றிய நாடிதானும் பொலிவரத் தோன்றுமாகில்,
மாற்றறும் வாழ்வு நாளும் மாளுமோர் மாதத்தென்று,
நாற்றிசையுள்ளோர்க் கெல்லாம் நாடி நீ நயந்து சொல்லே."

(குணவாகட நாடி)

21. "உறைத்தது நாசிக்குறுதிக் குறுதி கேள்,
விறைத்திடைப் பிங்கலை விடாதோடின் மூன்று நாள்,
இறைத்த சடமாண்டிலெய்திடு மாகாசம்
பாத்திலிரண்டு நாள் பாயிலிரண்டேனே."

22. "எண்ணியொருநாளி யங்கிடிற் பிங்கலை,
தண்ணியதிரியாண்டிற் தப்பாது மரணம்,
ஒன்றிலுபயத்திலோடிற் பத்து நாள்
மண்ணின் மதியாறின் மரிப்பான் குறியிதே."

23. "குறிகேளு நாசன் குறிக் குலவிவாய் வழியோடில்,
மறிகேளு திரிநாளில் மரித் திடு வன்றப்பாது,
தெறிகேளு மும்மலமும் திரண்டு மிகக் குறைந்து வரில்,
பரிவாகும் பட்சத்தில் பாருயிர் தப்பாதே."

24. "தப்பாது வாய் நீர் தான், றாக்கற்றன் மேல் வீழில்,
ஒப்பாகத் தனு மறையா வொழிந்திடு வன்மதி யாறில்,
செப்பாகத் தாலிருக்கச் சேர்ந்த நிழலைந்திடினும்,
அப்பா கேள் சாவு நிசமறிந்து கற்பங்கொண்டிடே."

25. "கொண்டிடுந்தோடக் குறி சொன்னாரென்னந்தி
தண்டு மூதடுந்தளிப் பல்லு நாக்கொன்றாம்
மண்டிடுந்தாதுவளமாய்க் கறுப்பேறில்,
உண்டிடுமாறாம் நாளுறுதி யாய்ச் சாவானே."

26. "உறுதியாம் பித்தமுடம்பிளைப்பதாகும்
பொறையாகத் தூலிக்கிற் போவான் மதியொன்றில்,
அறுதியாமைய நல்லத்தியுலர்ந்தே,
உறுதியோர் மதியில்யொடுங்கிடுஞ் சீவனே."

(அசாத்திய நாடி)

27. "சீவகலையாய்ச் சேர்ந்திடும் நாடியில்,
ஆவக்கரம் வைத்தமுத்திடின் மேலேறும்,
தாவொத்துடமேனோக்கிற் சாகானொரு நாளும்,
பாவொத்துக் கீழ்நோக்கிற்பதையாமற் சாவானே."

28. "அறிந்திடில் மூன்றுமடங்கியே முற்றிலும்,
எறிந்து மிகவோடிலுமெய்தாதே சாவுதான்
பறிந்து நற்றாது பற்றற்றுக்கீழ்நோக்கில்
மறிந்தேயுயிர் சென்று மறலிகை புக்குமே."

29. "ஐயந்தான் பித்தந்தன்னை யனைத்தெதுத் தேறுமாகில்,
நையவோர் நாளிற்காலன் நாடியே வருவதுண்மை,
பையவே ஐயம்பாய்ந்து வாதத்தைப் பற்றி நின்றாற்
செய்யும் வாறென்ன சாவோர், நாழிகை திண்ணந்தானே."
(வயி. சா. சங்கிரகம்)

30. "காலமே சேத்துமநாடி கட்டுச்சி பித்தநாடி
மாலையில் வாதநாடி வகைதப்பிப் பதறி நின்றால்
ஏலவேயிவர்கட் கெல்லாமியம் பினாரிதுதானென்று
நாலஞ்சில்மரணமென்று நன்மூனியருளிச் செய்தார்."

31. "கடிந்ததோர் நாடிதன்னைக் கருதியே பார்க்கும்போது
விடிந்தபின் சேத்துமநாடி விதறியே துடர்ந்து நின்றால்,
கடிந்தது பித்தநாடி கட்டுச்சி துடிக்குமாகில்,
மடிந்தது வாதநாடி மாலையில் மரணந்தானே."

32. "போற்றிய நாடிதானும், போத்துபோற்புறந்துடித்தால்,
கீற்றுவில் நுதலேமிகக் கிஞ்சுமானே கேளாய்
காத்திடுந்திங்களொன்றில் கருதியே நீராவிட்டால்
மாற்றிய மாதம் பத்தில் மரணமென்றுரைக்கலாமே."

33. "குறித்திடுஞ் சேத்துமநாடி குதிரைபோல் நிமிர்ந்து
[நின்றால்,
கறுத்திடு விழியாள் நல்ல காரிகையாளே கேளாய்,
மறுத்திவை பேசவேண்டாம் வயதிவை முடிந்ததென்று
பொறுப்பில்லை திங்களொன்றில் புகன்றிடு
[மரணமென்றே."

34. "சேத்துமநாடி தானுத்தியங்கிய மஞ்ஞைபோல,
நாட்டியவட்டை போல நடுங்கியே பதறி நின்றால்,
கூட்டவே வேண்டாமேழு நாளில் மரணமென்று,
நாட்டியமுனிவர் சென்னார் நயம்பட்க் குறித்துப் பாரே."
(அகத்தியர்)

35. "வணங்கியதோர் வாதபித்த சிலேத்துமந்தன்னில்
வலுவான பித்தமது தளர்ச்சியாகும்,
பிணங்கிய தோர்வாதமதிற் சிலேத்துமஞ்சேர்
பின்னல் கொண்டுயிளைப்பாகி உடல் வெளுத்து,
இணங்கியதோர் கைகாலுங் குளிர்ந்து நெஞ்சம்
எடுத்தெடுத்துக் கண் மூக்கில் நீரும் பாய்ந்து
உணங்கிய நாவரண்டு பல்லுங் கறுத்து வாந்தி
உண்டாகில் மரணமென வுரைக்கலாமே."

36. "உரையான பித்தமொடு வாதந் தாழ்ந்து,
உற்ற சிலேற்பனமிளகிச் சக்திவிக்கல்,
விரையாகவே யடுத்து நெஞ்சடைத்து
மேலிளைப்பாய்க்குரு குலத்து வியர்வையாகி
வரையாக விழி சொருகி மூக்கடைத்து,
வாயாலே சுவாசமும் நாவறண்டுதானால்
துரையாக விருந்தாலும் மரணம் வந்து
சுருக்காக மரிப்பதுவுந் திண்ணந்தானே."

(சதகநாடி)

## இதன் பொருள்.

1. ஐய நாடி தனித்து இரு மடங்கு ஓங்கி நின்று வாதமும் பித்தமும் அடங்கிவிட்டால் மரணம் நிச்சயமாம்.

2. வாதமும், பித்தமும் அடங்கினால் மருத்துவம் செய்வதில் பயனில்லை.

3. பித்தமடங்கினாலும், ஐயம் நாடி மட்டும் தனித்து மீறி நடந்தாலும் மருத்துவம் புரிவதில் பயனில்லை. வாதம் எழும்பின் மருந்து கொடு.

4. ஐயம் அதிகமாகிப் பித்தத்தைப் பற்றுமாயின் ஒரு நாளிலும், அல்லது பித்தமடங்கிய பின் ஐயமானது வாதத்தைப் பற்றினால் ஒரு நாழிகையிலும், மரணமாவான்.

5. இடை, தொடை, மார்பின் கீழ் இவற்றில் நாடி படபடத்துப் பதறியோடில், அதிக வீக்கம், மூக்குற்றங்களிலே தேனுமொன்று நடைபெற்றானும், அதிகத் தாகம், நாவறட்சி, கண் பஞ்சிடல் ஆகிய இக்குறி குணங்களும் காணில் மரணம் நிச்சயம்.

6. அதே போல் நாடிகள் பதறவும் (நிலை தவறித் தடுமாறவும்) நடுக்கம், நாவறட்சி, கண் விழிகள் அசையாது மேல் நோக்கியும், மேல்மூச்சு தொண்டையில் கபம் ஆகிய இவைகளும் நேரின் குணமாகா.

7. மூன்று நாடிகளும் சேர்ந்து ஒரே மாதிரியாக மீறி நடப்பினும், அல்லது உள் அடங்கினும், அல்லது வெட்டுண்ட அரணை வால் போல் துடிக்கினும் விரைவில் இறுதிக் காலமென அறிக.

8. விசை நரம்பு குளிர்ந்தும், ஐம்பொறிகள் தளர்ந்தும், பற்கடித்தலும், நாவுலர்ந்தும், நடுக்கமுற்றும், மூச்சயர்ந்தும், கண்கள் நிலைக்குத்தியும் வாத, பித்த, ஐயம் மூன்று நாடிகளும் சேர்ந்து விட்டிலைப்போல் துடிக்குமாகில் மரணம் நிச்சயம்.

9. ஐய நாடி தனித்து வெள்ளம்போல் மடமடென்று ஓடினால் மறுநாளிலும், பித்த நாடி தனித்துச் சிதறியோடில் மூன்றாம் நாளிலும் வாத நாடி தனித்துச் சிதறியோடில், எட்டாம் நாளிலும் மரணமாம்.

10. வாத, பித்த, ஐயம் மூன்றும் ஏகோபித்து தேள் கொடுக்கைப் போலாடி ஓடம்போல் ஓடுமானால், மாதம் ஒன்றில் மரணமாம்.

11. வாத, பித்த, ஐயம் மூன்றுங் கூடி சுழல் வண்டு தண்ணீர் மீது ஓடுறாப்போலோடினாலும், பம்பரம் போல் சுழலலுற்றாலும், விட்டிலைப்போல் புரண்டு விழுந்தாலும், மரணம் நிச்சயம்.

12. வாதமும் பித்தமும் சேர்ந்து சிதறியோடில் பதினைந்து நாளிலும் வாத, பித்த, ஐயம் மூன்றுஞ் சேர்ந்து சிதறியோடில் நாற்பது நாள்களிலும் கொல்லும்.

**சில மரணகுரல்கள்.**

13. நாசியில் இடகலை, பிங்கலைகளிரண்டும் இடைவிடாது மூன்று நாள்கள் ஓய்வின்றிப் பாயில் ஓராண்டிலும்;

14. இடகலை, பிங்கலைகளிரண்டும் இரண்டு நாள்கள் இடைவிடாது பாயில் ஈராண்டிலும்;

15. இடகலை, பிங்கலைகளிரண்டும் ஒரு நாள் இடைவிடாது பாயில் மூவாண்டிலும்;

16. ஒரு நாசியில், உபாயமாகப் பத்து நாள்கள் இடைவிடாது பாயில் ஆறு மாதத்திலும்;

17. மூக்கு விட்டு வாய் வழியே சுவாசம் பாயில் மூன்று தினங்களிலும்;

18. மும்மலமும் (மலம், சிறுநீர், வியர்வை) கட்டுப்பட்டு அற்பமாகவரின் பதினைந்து நாளிலும்;

19. எச்சில் உமிழ முடியாமல் தன் பேரிலேயே விழில் ஆறு தினங்களிலும்;

20. தான் உட்கார்ந்திருக்கும்போது தனது நிழல் ஆடினால், உடனேயும்;

21. தண்டு (மூக்குத் தண்டு, செவித் தண்டு), உதடு, பல், நாவு, தாது (உடற் கட்டு) இவை கறுப்பு நிறமானால், ஆறாம் நாளிலும்;

22. பித்த தேகியின் உடல் இளைப்பதற்குப் பதிலாகத் தூலித்தாலும், ஐயதேகி யுடல் இளைத்து வற்றினாலும், ஒரு மாதத்திலும் மரணமாவது நிச்சயமென்றறிக.

## அசாத்திய நாடி.

23. அன்றியும் மூன்று நாடிகளையும் விரலாலழுத்திப் பார்க்கத் துடிப்பு மேலெழும்பிற் சாகமாட்டான் எனவும், துடிப்பு காணாது அழுந்திடிற் சாவது நிச்சயம் எனவும், மூன்று நாடிகளும் மூற்றிலும் அடங்கினாலும் அதிவேகமாக ஓடினாலும், சாவது நிச்சயம் எனவும், நாடிகள் மூன்றும் தன்னிலை தவறிக் கீழ் நோக்கி நடந்தாலும் சாவு நிச்சயமெனவும் கூறியுள்ளார்.

24. சிரமம் தவறி காலையில் ஐயநாடியும், நடுப் பகல் பித்த நாடியும், மாலையில் வாத நாடியும் பதறியோடில் நாலைந்து நாள்களில் மரணம் நிச்சயமாம்.

25. மேலும் கூறுவதாவது, காலைதோறும் ஐயநாடி மீறி துடர்ந்து நின்றால் மரணம் நிச்சயமென்கிறார்.

26. மூன்று நாடிகளும் எறும்புபோல் ஊர்ந்து ஓடில் மூன்று மாதத்தில் மரணமாம்.

27. மூன்று நாடிகளும் தீபத்தில் எரிகிற சுடர்த் தீயைப்போல் தோன்றுமாயின் ஒரு மாதம் சென்று மரணமாம்.

28. நாடிகள் மூன்றும் சமபோத்துபோற் புறந்துடித்தால் பிணியானது திங்களொன்றில் நீங்காவிடில் திங்கள் பத்தில் மரணமாம்.

29. ஐய நாடி குதிரைபோல் நிமிர்ந்து நின்றால் திங்களொன்றில் மரணம் நிச்சயமாம்.

30. ஐயநாடி மயில்போலும் அட்டைபோலும் நடுங்கிப் பதறி நின்றிடில் ஏழு தினங்களில் மரணம் நிச்சயமாம்.

31. மூக்குற்றங்களில் பித்தமடங்கி வாத ஐயம் தொந்தித்து உடல் இளைத்து, வெளுத்து, கைகால் குளிர்ந்து நெஞ்சு தூக்கித் தூக்கி மூச்சு விட்டும், கண்ணிலும், மூக்கிலும், நீர் வடிந்தும், நாவறண்டும், பல்லுங் கறுத்தும், வாந்தியுமுண்டாகில் மரணம் நிச்சயமாம்.

32. பித்தமும் வாதமுமடங்கி ஐயம் இளகி நின்று வாந்தி விக்கல், நெஞ்சடைப்பு, மேல் மூச்சு, வியர்வை, கண்கள் சொருகி, மூக்கடைத்து, வாயால் மூச்சுவிட்டு, நாவறண்டுமிருக்குமானால் சீக்கிரத்தில் மரணமாவது நிச்சயமென்பர்.

**மரணக்குறி குணங்கள். (வேறு).**

1. "கண்ணும் பல்லுந்தான் கறுத்துக் கருது மூச்சு வாய்திறந்து
உண்ணும் வயிற்றில் சேத்துமமும் ஓடிமிக வேதானடந்தால்
பண்ணுமருந்து பலியாது பண்பாய்ச் சுவாசம் மேல்
[வாங்கும்
மண்ணும் விண்ணுந்தானறிய மரணமாவார் கண்டீரே."

2. "ஊசிபோல் முகமும் நீண்டு உடம்பெல்லாம் நரம்பு தோன்றி
பாசிபோற் கண்பஞ்சிட்டுப் பரத்திருள் மூடுமாகில்
பேச நாவரண்டு பேசிப் பித்தது பிதற்று மாகில்
காசினியறியச் சொன்னோம் கண்டுகொள் மரணமென்றே."
(அகத்தியர்)

3. "கண் நாமுகங்கள் வேறுபட்டுக் காலொடு முகமும்
[வீக்கமதாய்
தண்ணீர்த் தாகமிகவண்டாந் தயவாய்ப் பித்த
[மூர்ச்சையுமாம்
விண்ணை மடுக்கத் திமிருண்டா மேவி கறுத்துப்
[படபடக்கும்
எண்ணாக்குறிகளிது கண்டால் யிதுவும் மரணக்
[குறியாமே."

4. "மூக்கு நீண்டு நிலம்புரண்டு முழங்கித் தலையு
[மிகத்தேர்க்கும்
நாக்குக் குன்றிப் பலபேசும் நலமாய்ப் படுப்பான்
[எழுந்திருப்பான்
விக்கலெடுக்கும் மிகப் பதறும் வெறிபோல் பலக்கும்
[பித்தமும்
தக்க தரணமிதுவென்று சாற்றியுரைத்தார் தவமுனியே."

5. "கண்ணை விழித்துப் புரட்டுமெனக் கைகால் நடுக்குந்
[தலை சுழற்றும்
விண்ணைப் பார்த்து விழிபிரட்டு மேனி வறண்டு வெற்றி
[பெறும்
நண்ணி லொருவன் றனைப் பார்த்து நன்மை
[பகுத்துரைப்பான்
எண்ணிப் படுப்பான் எழுந்திருப்பான் இதுவே பராசர்
[நிலைக்குறியே."

(குறியடையாள நாடி)

இதன் பொருள்.

1. கண்ணும் பல்லும் கறுத்தும், வாயால் மூச்சுவிட்டும், வயிற்றில் மந்தம் பற்றியும், ஐயநாடி கதித்து ஓடிக்கொண்டும், மேல் மூச்சு மூண்டானால் மரணம் நிச்சயமாம்.

2. முகம் நீண்டு, உடம்பெல்லாம் பச்சை நரம்பு தோன்றி, கண் பஞ்சிட்டு, இருள் மூடி, நாவறண்டு பேத்தல், பிதற்றல், இவை யுண்டானால் மரணம் நிச்சயமாம்.

3. கண், நா, முகம், இவை வேறுபட்டு, காலும் முகமும் வீங்கி, தாகம் பித்த மூர்ச்சை, உடம்பில் திமிர், மேனி கறுத்துப் படபடத்தலாகிய இக்குறிகள் கண்டால் மரணம் நிச்சயமாம்.

4. மூக்கு நீண்டு, நிலத்தில் புரண்டு, சப்தமிட்டு, தலை கனத்து நாவு குளறி, பல பேச்சுப் பேசி, படுப்பான், எழுந்திருப்பான், விக்கலெடுக்கும், மேனி பதறும், வெறிபோல் பயித்தியம் முதலாகிய இக்குறி குணங்கள் காணில் மரணம் நிச்சயமென்பர்.

5. கண் விழித்துப் புரட்டும், கை கால் நடுங்கும், தலை சுழற்றும் விழிமேல் நோக்கிப் புரட்டும், மேனி வற்றும், ஒருவனைப் பார்த்துச் செய்திகள் பொருத்தமற்றதாய்ச் சொல்லுவான். படுப்பான், எழுந்திருப்பான் ஆகிய இக்குறி குணங்களுண்டாயின் சாவது நிச்சயமென்றறியவும்.

## சந்நிபாத சுரங்களிலுண்டாம் தோடக்குறி குணங்கள்.
(வெண்பா.)

1. "சார்தேக மீதெரிவு சந்நிசுரம் நாவறட்சி
சேர்தாகம் வாந்திச் சிலுவிக்கலார்ந்துடனே
பொல்லா மயக்கம்புகல் பிரமை வாய்பிதற்ற
லெல்லாந் தீமைக்குறியாமே."

2. "தேகங் குளிரத் திகைமிகப் பேசத்
தாகமுடன் பேதி சாரிருமல் வேகமுள
விக்கலிளைப்புவிரும்பவதில் வாந்தி
மிக்க கொடியதாய் விளம்பு."

3. "நாவு தடுந்தான் வெடித்து நச்சுசுரங்காயவதில்
ஏவு மிரத்தக் கழிச்சல் எய்ப்படையதாவு விக்கல்
சித்தப் பிரமை செவி மந்தம் பைந்தொடியே
சுத்தப் பிசகாகுஞ் சொல்."

4. "தேகவலி மூர்ச்சை சேருமிருமல் வாந்தி
தாகமுடன் விக்கல் சார்மயக்கமாகவதில்
மார்புதலை நோயுமாளா நரம்பிழுப்பு
சார்குறி தீதென்றே நீ சாற்று."

என்பதினால், சந்நிபாத குறிகுணங்களைக் கூறுமிடத்து:

(1) தேகத்தில் எரிவு, சந்நி, சுரம், நாவறட்சி, அதிதாகம். வாந்தி, விக்கல், மயக்கம், பிரமை, வாய் பிதற்றல் முதலிய குறி குணங்கள் கஷ்ட சாத்தியத்தை அறிவிப்பனவாம்.

(2) தேகம் குளிர்ச்சியடையினும், பிரமையுடன் வாய் பிதற்றினும், தாகம், பேதி, இருமல், விக்கல், இளைப்பு, வாந்தி முதலியவை ஏற்படினும் மகா அபத்தத்தைத் தெரிவிக்கும் அறிகுறி எனச் சொல்வர்.

(3) நாவும், உதடும் வெடித்துக் காண, சுரம் மேலிட்டிருக்க, அதனுடன் இரத்த பேதி, விக்கல், சித்தப்பிரமை, காது மந்தம் முதலிய இவ்வடையாளங்களோடு பரிகாரத்திற்கு வழி மறிக்கின்ற குறிகளெனக் கூறுவர்.

(4) தேகமாதி எங்கும் ஓயா வலி, இருமல், வாந்தி, தாகம், விக்கல், மயக்கம், மார்பு வலி, தலைவலி, நரம்பு இசிவு அகிய இக்குறி குணங்கள் நோயாளி சுகமடைவதற்கு இடையூறான குறிகளெனச் சொல்வர்.

(கண்ணுசாமியம்.)

## சந்நிபாதத்தின் அசாத்தியக் குறி குணங்கள் (வேறு).

"கையுங் காலு மொருபக்கங் கனத்துத் திமிர்த்து சாய்வாகில்
மெய்யு மறவே வெதும்பி மிகக் கடுத்து நாவுந் தடுமாறும்
செய்யு மென்ன வாய்குளறிச் சீறுஞ் சன்னி வாதமென்க
உய்யும்படியும் வகைகாணோம் உலகோரறியச் சொன்
னோமே."

என்பதினால், கையுங் காலுங் கனத்துத் திமிர்த்து ஒரு பக்கம் போட்டது போட்டபடியே சாய்வாகக் கிடப்பினும், அதிக சுரத் துடனே மேனி கடுத்து, வாய் குளறி, நாவு தடுமாறிப் பேசுமே யாகில், இவைகளைச் சன்னிபாதத்தில் அசாத்தியக் குறிகளென வும், பிழைக்கும் வழியில்லை எனவும் கூற வேண்டுமென்கிறார்.

## அசாத்தியக் குறி குணங்கள் அல்லது மரணக்குறி குணங்கள். (வேறு)

(சிகிச்சாரத்னதீபம் & கண்ணுசாமியம்)

வெண்பா.

1. "கையின் மணிக்கட்டைக் காட்சிநுதனடுவில்
ஐயமறவைத் தணிவிழியான்—மையின்றி
நோக்கிற் பெருத்து நுவ்வளவிற் காட்டுமேல்
காக்குமுயிர் போய்விடுமே காண்."

2. "பிணியாளன்றன் செவியைப் பின்னின்று கிள்ளத்
திணிதோள் துடியாது தோன்றில்—அணியிழாய்
எச்சிற்றனைத் துப்பினேகாது வாய்தவறின்
இச்சையுயிர் போமி யம்பு."

3. "ஓசையடங்கி யுயிர்போமே யேழ்நாளில்
தேசில் விழியடங்கில் தேசழந்தில்—நாசி
யுயிர்ப்படங்கில் மூன்றிலுயர் நாவிரண்டி
லுயிர்க்கு முடல் வெறுக்கென்று."

4. "வண்செவியோடே நாசி வல்லென்று கண்ணைனுந்
தண்புயங்கள் நன்கு சரிந்திடினுந்—திண்மார்பு
மேடிடினுங் கண்மலரில் வெண்மாசி தோன்றிடினும்
தேடு நமன்றமருஞ்சென்று."

5. "கறுத்துமலம் போயின் கலைமாறாதேகின்
வெறுத்துப் புரண்டு மண்வேண்டின்—செறித்துமலம்
நீரிற்குமுன்னர் நிகழ்ந்திடிற் நீதென்று
பார்த்துரைத்தனரே பண்டு."

6. "தன்னறிவு தப்புந்தனைத் தூக்கென மொழியும்
பன்னிப் பெருங்கூரலே பல்பாக்கும்—உன்னியிடின்
நீர்த்தடிக்கும் நெய்யாம்நீ ணெரியிலுமெரியும்
பார்க்கில் உலகொழியும் பண்பு."

7. "வெப்புப் பிணியில் வெம்மேகத்தால் வருந்தின்
தப்புமிகை நீறேதானிறங்கின்—செப்பும்
கிராணியிற் பாண்டில் கிளநீர் சுருங்கிற்
பிராணன் பிரியுமெனப் பேசு."

8. "மண்ணி லிறந்திட்ட மக்களுடன் பேசல்
வண்ண விமானத்தான் வந்ததனல்—நண்ணினர்
தூதரென வுரைத்தல் தூயநலங்கீறல்
ஓதுபிலையாகாவன்."

9. "மூதுகுப் புறங்கை காலுமூன்னுறவே வீங்கிக்
கதமுடனே நஞ்சினிலுங் காணில்—குதமோடு
கோசமிக வீங்கிக் கூறுமவைச் சில்லிடினும்
நாசமவர்க்கெனவே நாடு."

10. "வீங்கிக் கால் கைப்புறமும் விக்கலீளைப்போடு
ஏங்கமலநீருமேந் திழையே—ஓங்கியிட
வாந்தியுடனே வயிறும் பொருமுமேல்
சாந்தியரி தென்றே சாற்று."

11. "நாகிவழி தன்னெனினும் நல்ல திருவாயினின்றும்
வீசுவளி வெம்மைதனில் வீறிடினும்—பாசமிகு
காகமிருந்திடினுஞ் சாறுந் துடியிடையாய்
மாகம்புகுந்தேகு மாண்பு."

12. "படுக்கை பொருந்தாமல் பல்லுங் கறுத்துத்
தொடுக்கவிரி மேற்சுமன்று கோன்ற—வடுக்கை
உயர்முகடு நோக்கவரன் கெட்டேயாவி
தயருற்று நீங்குமாஞ் சொல்."

13. "தாங்கி மலநீருந்தவிக் கவுடற்குளிர்த்
தேங்கியினத்தாரை யெத்திடினும்—ஓங்குகபம்
கட்டி நெஞ்சில் நின்றுழலக் கண்ணீர் ததும்பிடினும்
கட்டுவிடுங் கால மதுகாண்."

இதன் பொருள்.

1. நோயாளியின் கையின் மணிக்கட்டைப் புருவ நடுவில் நாசியோடு சேரும்படி வைத்திரண்டு விழிகளால் நோக்கும்போது, அக்கரமானது தன்னளவில் சிறுத்துக் காணில் நலம்; பெருத்துக் காணில் மரணம் நேரிடுமாம்.

2. நோயாளியின் பின்புறமாக நின்று திடுக்கென்று அவன் செவியைக் கிள்ளும்போது, அவனது இரண்டு தோள்களும் துடிக்கின் நன்று. அங்ஙனம் துடியாவிடின் மரணத்துக்கேதுவாம். அன்றியும் நோயாளி எச்சிலைத் துப்பும் போது சிதறி விழாமல் வாயோடு லயித்து நின்றால் நீதாகுமென்றறிக!

3. நோயாளியின் செவிகளை இரண்டு கைகளாலும் மூடி உற்றுக் கவனித்தால் அவனுக்குக் கடல் ஒலியைப்போன்ற ஒலி கேளாதுவிடின் ஏழு நாள்களிலும்; அத்துடன் கண்கள் பார்வை யிழப்பின் ஐந்து நாட்களிலும்; உடலில் ஸ்பரிச உணர்ச்சியில்லா தொழியின் ஒரு நாளிலும் மரணமாகுமென்று ஐம்பொறி புலன்களின் வகையினை யுணர்ந்த ஆன்றோர் கூறுவாராயினர்.

4. நோயாளியின் செவிகளும், மூக்கும் விரைத்துச் சில்லென் றிருப்பினும், புயங்கள் சரிந்திருப்பினும், கண்களின் மணிகள் வெளுத்திருப்பினும் உயிருக்குக் கெடுதிவருமென அறிக!

5. நோயாளிக்கு மலம் கறுத்துக் கழியுமாயினும், இடகலை பிங்கலை மாறாமல் ஒன்றாகவே ஓடினாலும்; படுக்கையை வெறுத்துப் புரண்டு மண்ணில் படுத்துக் கொள்ளினும்; நீர் போவதற்கு முன்னர் மலம் போகுமாயினும் நீமை விளையுமென்று தொல்லாசிரியர் துணிந்துரைத்தனர்.

6. நோயாளியின் அறிவு மாறித் தாக்குத்தாக்கு என்னும் பதத்தை பிரயோகிப்பினும், விகாரமான ஒலியோடு பெருங் குரலிடினும் மரணம் வரும். அன்றியும், நீராடிய நெய் போலத் தடித்திருப்பினும், நெய்யோடு உறவாகும் தன்மை பெற்றிருப் பினும். அதனை ஒரு வர்த்தியில் புரட்டிக்கொளுத்த எரிந்தாலும் உலகம் விட்டொழியுங் காலமென்னவறிக!

7. நோயாளிக்குச் சுரரோகத்திலும், மேகரோகத்திலும், நீர் அதிகரித்திறங்கினாலும்; கிராணி ரோகத்திலும்; பாண்டு ரோகத்திலும் நீர்வரத் தடையானாலும் உயிருக்குத் தீது என்பர்.

8. நோயாளி முன் இறந்த பெந்துக்களோடு பேசுதல்; விமானம் வந்ததென்று தாவிச் செல்லுதல்; எமதூதர் வந்துவிட்டாரென்று பலகால் சொல்லுதல், நிலத்தைக் கீறுதலாகிய இக்குறி குணங்கள் தீது என்பர்.

9. நோயாளியின் முதுகு, புறங்கை, கால் வீங்கி நெஞ்சு வரை செல்லினும்; குதமும், கோசமும் வீங்கிச் சில்லிட்டாலும் நற்குறி குணங்களென்று கொள்ளலாம்.

10. நோயாளியின் கால் கை மேற்புறமும் வீங்கி, வீக்கல், மயக்கம், மலசலமடைத்தல், வாந்தி, வயிறுப்பிசம், நாவறட்சி ஆகிய இத்தகைய தோடங்கள் காணுமாயின் இதற்குப் பரிகாரம் கஷ்ட சாத்திய மென்றறிக!

11. நோயாளியின் நாசியினின்றுவரும் சுவாசம் குளிர்ந் திருப்பினும், வாயினின்றுவரும் சுவாசம் உஷ்ணமாக விருப்பினும், தாகமதிகரிப்பினும் மரணமென்க.

12. நோயாளி படுக்கையிற் சரீரம் பொருந்தாமலும் பற்கள், ஈறு, உதடுயிவை கறுத்திடினும்; கண் விழிகள் சுழன்று வட்ட மிடினும், சீவனானது மயங்கி நீங்குமென்றறிக!

13. நோயாளிக்கு மலசல மடைத்து, உடலுங் குளிர்ந்து, சுற்றத்தாரைப் பேரவாவுடன் நோக்கும். அத்துடன் தொண்டையில் கபம் கட்டி இழுப்புண்டாகும். கண்ணில் நீர் வடியும். அக்காலமானது தேகத்திற்கும் நரம்புக்குமுள்ள சம்பந்தம் நீங்கிச் சரீரத்தை வீழ்த்தும் காலமென அறிவிர்களாக!

## மரணக்குறிகள் (வேறு).

(வயி-சா-சங்கிரகம்.)

1. பாளமாகக் கிழித்த துணியை நெய்யில் நனைத்த மணிக் கட்டிற் சுற்றி மூன்றேமுக்கால் நாழிகை சென்றவிற்குப் பார்க்கில் வாத நாடியானது:

(a) கதித் தவாங்கில் அப்பொழுதிலும்;

(b) நல்லரவு போல் நெழிந்து ஓடினால் இருபத்திரண்டு நாளிலும்;

(c) உதைத்து வாங்கினால் ஒன்பது நாளிலும்;

(d) அட்டைபோல் நடந்தால் மூன்று தினத்திலும்;

(e) தந்தி போற் சுண்டினால் அன்று பொழுதிலும்:

(f) பக்கஞ் சென்றெதிர்த்து வாங்கினால் முப்பது நாளிலும் மரணம் சம்பவிக்குமென அறிக! அவ்விதமில்லாது அதேவாத தாடியானது:

1. புழுப்போல் நெளிந்தாலும், பஞ்சு போல் மெதுவாயிருந்தாலும், கூடு கொண்டாலும், அன்னம் போல் நடந்தாலும், பிணி தீங்குமென்பதை அறிக!

2. இடது உள்ளங்கால் குளிர்ந்தும், வலது உள்ளங்கால் சூடாயும், குளச்சுகள் குளிர்ந்திட்டாலும் பத்து தினங்களிலும்;

3. குளச்சுகளிரண்டும் குளிர்ந்தும், உச்சி வியர்த்தும், நாசி விரைத்தும் இளைப்பு, விக்கல், உடம்பு குளிர்ந்து விழியு மிருண்டால் மூன்று தினங்களிலும்;

4. பிடரி, நெற்றி, கழுத்தினுட்புறம் இவை குளிர்ந்தும், விழி நீலநிறமாகி நெஞ்சிற் கபம் கட்டுமேயானால் மூன்று தினங்களிலும்;

5. ஒரு நாசியும், முழங்கைப் பள்ளமுங் குளிர்ந்து, இடதுள்ளங்கால், சூடாயும், தொண்டையுங் கறகறத்தால் ஐந்து தினங்களிலும்;

6. அடித்துடையும் இரண்டு உள்ளங்கால் குளிர்ந்து, இரு செவியும் விறைத்து நின்றால் இரண்டு தினங்களிலும் மாண்மாம்.

குறிப்பு.—இவ்வகையில் சாத்தியங் குறிகளையும் கூறுகிறார்:

(1) வலது உள்ளங்கால் சூடாயும், இடது உள்ளங்கால் குளிர்ந்தும், உச்சி வியர்த்தும், உடம்பெல்லாம் கனலாயிருந்தாலும்;

(2) புருவம், நெற்றி, இடது உள்ளங்கை இவை சூடாயும், உச்சி குளிர்ந்தாலும்;

(3) வலது நாசியும், வலது உள்ளங்காலும் வெதும்பி இடது நாசியைத் தேய்க்கும்போது சிவந்தாலும்;

(4) உடல் ஆதியந்தமும் சூடேனினாலும் பிணி தீங்கு மெனவும் கூறியுள்ளார்.

## மரணக் குறி குணங்கள் (வேறு).

1. விழி, நாசி, காது, உச்சி, உந்தி, உள்ளங்கால், கைகள் இவை வெளுத்துப் பாதமுங் குளிர்ந்தால் ஐந்து நாழிகையிலும்;

2. வாதமும் பித்தமுமடங்கி, ஐயங்கதித்து, உடல் வெளுத்து, மார்பு குளிர்ந்திடில் தொண்ணூறு கடிகையிலும்;

3. ஐயநாடி எழுந்து வீழ்ந்திடில் இரண்டு கடிகையிலும்;

4. பித்தமடங்கி வாதமும் ஐயமும் மேலிட்டுக் கண்டத்தில் கபம் அடைத்து, இளைத்து விழிமயங்கிச் சுழன்று, கண்ணில் நீர் வடிந்தால் ஐந்து நாழிகையிலும் மரணமாகுமென அறியவும்.

5. வாத பித்த ஐயம் மூன்றும் வெட்டுண்ட அரணைவால் போற்றுடிக்கினும்; உடல் வேறுபட்டுக் குளிர்ச்சி காணினும்; கையால் முகத்தைத் தடவி மனிதரை ஆவலாய் நோக்கிப் பார்க்கினும்; ஏங்கிப் பருஞ்சுவாச மெய்திடினும்; இரண்டு விலாவு மிளைத்தும், தொண்டையிற் கபம் கட்டி இரைந்தும், கண்ணில் நீர் வடிந்து கொண்டும்; எடு, பிடி என்றெழுந்து விழுந்தும்; உடல் மயங்கியும்; நாசி நீண்டும்; வியர்த்தும்; கண்ணும் பல்லுங் கறுத்தும்; கபம் மேலாடியும் கண்கள் சுழன்றும்; பல பேச்சுப் பேசியும்; சிவனுமயங்குமேயானால் மரணம் தப்பாதென்றறிக!

## எந்தெந்த நோய்களில் இளைப்புடனே சுவாசம் விக்கல் இம்மூன்றும் சேர்ந்து தோன்றில் அசாத்தியமாகும்?

(சதக நாடி)

1. "தானான பிரமேகம் வாதசூலை
சார்வான நீரழிவு குன்மரோகம்
மானான சயரோகஞ் சன்னிதோடம்
யடுத்த விடங்காமாலை பாண்டுசோகை,
மானேகேள் கபரோக மந்திர வியாதி
மஞ்சள் நோய் குலைநோவு பயித்தியரோகம்
ஊனாகும் வருமிடத்தில் யதிசாரங்கள்
உண்டாகில்ய சாத்தியமா முறுதி தானே."

(கண்ணுசாமியம்—வெண்பா)

2. "பாண்டு பிரமேகம் பன்வாத சூலைகுன்மம்
வேண்டா ச்யஞ்சன்னி வெண்சோபை—நீண்ட..
அதிநீரே காமாலை யானபினி தம்மு
ளதி சாரமா காதறி."

என்பதினால்; பிரமேகம், வாதசூலை, நீரழிவு, குன்மம், சயம், சன்னி, காமாலை, பாண்டு, சோபை, கபரோகம், அந்திர வாயு, மஞ்சள் நோய், குலை நோவு, பயித்திய ரோகம் ஆகிய இந்நோய்களில் அதிசாரமும் சேர்ந்துண்டானால் அசாத்தியமென அறியவும்.

அதிசார நோயில் (பெருங்சுழிச்சல்) உண்டாம் தோடக்குறி குணங்கள்.

1. "ஊன்போலடுத்து மலம்ஓகோ கழிந்திடினும்
தேன்போல தன்சாயல் சேரிடினும்—மேன்மேலே
விக்கலுடனீளை வீக்கமதில் வேர்வை
துக்கமுடைத் தென்றே துணி."

2. "சூற்கொண்ட மாதர்க்குஞ் சொல்மகவை யீன்றோர்க்கும்
மேற்கொண்டு பேதி மிகுந்திடினுஞ்—சேற்கண்ணாய்
ஞாலத்து நற்சிகிச்சை நன்மையிலை யாமாயின்
காலந்தாழ் வென்றே கருது'!"

3. "உண்டவுணவுஞ் செறியா தூண்மிகுதி செல்லாது
கொண்டதோர் வாயுங் குடலிற்றா—னண்டிப்
புரண்டு வலித்தே பொருமிவரும் பேதி
பிரண்டு வழி தப்பும் பேசு."

என்பதினால், (1) மாமிசம் கழுவிய நீர் போல் மலம் மிகுதியாய்க் கழிந்தாலும், தேன் போன்ற நிறத்தையும் பெற்றிருப்பினும், மேன்மேலும் விக்கல், ஈளை (கஷ்ட சுவாசம்), வீக்கம், வியர்வை ஆகிய இவை ஏற்படினும் அப்பேற்பட்ட அதிசார நோய் குணமாவது யில்லை.

(2) கெர்ப்பமுடைய பெண்கள், பிள்ளைப்பேறுவுடைய பெண்கள் (Puerperium) இவர்களுக்கு அதிகமாகப் பேதி உண்டாகில் சிகிச்சையால் பயனடைவது நிச்சயமில்லை என்கிறார்.

(3) உண்ணும் உணவு செறியாமலும், உணவைச் சரிவர ஏற்றுக் கொள்ளாமலும், குடலில் வாயு அதிகரித்து புரண்டு வலித்துப் பேதியு மிகுதியாயின் குணமாவது அரிது எனவும் அறிக!

**எந்தெந்த நோய்களில் விக்கம் கண்டால் அசாத்தியமாகும்?**

(சதக நாடி.)

1. "உறுதிகொண்ட வலுவீச்சு சந்நி தோடம்
உரத்தகரம் விடசோபை உள்ளுரோகம்,
மறுதியுள்ள கிராணியதிசாரங் குன்மம்
யத்தி சுரம் வயிற்றுளைவு பிரமேகங்கள்,
பொறுதியுள்ள நீரிழிவு சுவாசகாசம்
பொருந்து சயமீளை யிளைப்பு இருத்ரோகம்,
சுறுதியுடனிந்நோயில் விக்கம் வந்து
தோன்றிடுகில் மரணமென்று தொகுத்துச் சொல்லே"

(வேறு—கண்ணுசாமியம்).

வெண்பா.

2. "சந்நியதிசாரஞ் சாருங்கிராணி குன்மம்,
உன்னிசயகாசம் உட்காய்ச்சல்—துன்னியே,
போக்கும் விடசோபை பொல்லாத நீரிழிவில்,
விக்கங்கூடாதென்றே விள்."

என்பதினால், வலிநோய், உள் விச்சு, புற விச்சு, சந்நி, கரநோய் (Peripheral Neuritis) விட சோபை, உளைமாந்தை, கிராணி, அதிசாரம், குன்மம், அத்தி சுரம், வயிற்றுளைவு, பிரமேகங்கள், நீரிழிவு, சுவாசகாசம், சயம், ஈளை, இளைப்பு, தமாகநோய் ஆகிய இந்நோய்களில் விக்கமும் சேர்ந்துண்டானால் அசாத்தியமென்றறியவும்.

**எந்தெந்த நோய்களில் இளைப்புடனே சுவாசம், விக்கல் இம் மூன்றும் சேர்ந்து தோன்றில் அசாத்தியமாகும்?**

(சதக நாடி.)

1. "தொகுத்திட்ட நீரிழிவு மேகசூலை
சுரவிக்கஞ் சந்திவலி தோடமாந்தம்,
மிகுத்திட்ட கிராணியதிசாரம் வாதம்
விடபாகந்திரள் பாண்டுசோகை காமாலை,
வகுத்திட்ட பெரும்பாடு மஞ்சள் நோவு
வாய்வு ரத்த பித்தமுடன் பல நோவுக்கும்,
பகுத்திட்ட யிளைப்புடனே சுவாசம் விக்கல்
பற்றினால் மரணமென்று பகுத்துச் சொல்லே."

(வேறு—கண்ணுசாமியம்.)

வெண்பா.

2. "சந்நி விடசோபைசார் குன்மம் நீரிழிவு,
துன்னுங்கிராணி சுரம் பேதி—பன்னுபிர,
மேகம் சயமிவற்றுள் மூச்சு விக்கல் மேல் வீக்கம்,
ஆகுமயிர் போமறி."

என்பதினால், நீரிழிவு, மேகசூலை, சுரம், வீக்கம், சந்நி, வலிநோய், மாந்தம், கிராணி, அதிசாரம், வாதம், விடபாகம், வாயுத்திரட்சி, பாண்டு, சோபை, காமாலை, பெரும்பாடு, மஞ்சள் நோய், வாய்வு, ரத்த பித்தம், ஆகிய இந்நோய்களில் இளநீர் புடனே சுவாசம், விக்கல் இவை சேர்ந்து தோன்றுமானால் பிணியாளன் பிழைப்பதில்லை என்றே அறியவும்.

**எந்தெந்த நோய்களில் மிகுந்த வாயு தோன்றினால் மரணமாகும்?**

(சதக நாடி).

1. "சொல்லுகின்ற விடபாகம் வீக்கஞ் சோகை
சூலைவலியழல் வாத நீரிழிவு மேகம்,
அல்லல் படுமிளைப்பிருமல் சுவாசகாசம்
யதிகசயஞ் சந்நி விடமாந்தமோடம்,
வெல்லுகின்ற கபரோகந்திரள் வியாதி
வீறான குன்மமத்தி சுரங் காமாலை,
வல்லமையாயிந் நோயில் வயிற்றுளைச்சல்
வந்தணுகில் மரணமென்று வசனிப்பாயே."

என்பதினால், விடபாகம், வீக்கம், சோபை, சூலை, வலிநோய், அழல் வாதம், நீரிழிவு, மேகம், இளைப்பிருமல், சுவாச காசம், சயம், சந்நி, விடம், மாந்தம், தோடம், கபரோகம், வாயுத்திரட்சி, குன்மம், அத்திசுரம், காமாலை ஆகிய இந்நோய்களில் வயிற்றுளைவும் சேர்ந்து உண்டானால் மரணம் நிச்சயமென்றறிக.

**எந்தெந்த நோய்களில் மிகுந்த வாயு தோன்றினால் மரணமாகும்?**

(சதக நாடி.)

1. "வசமான நீரிழிவு பிளவை ஈளை
மந்தாரகாசஞ்சயமி ரத்த பித்தம்,
நிசமானவுளைச் சலதிசாரஞ் சந்நி
நீண்ட சுரந்தோட ரத்தம் பிரமேகங்கள்,
விஷமான வீக்க நீர்க்கெற்பச் சூலை
வீச்சு வலி பெரும்பாடு மூல வாய்வு,
துசமான யிந்நோயில் கொழுத்த வாயுத்
தோன்றிடுகில் மரணமென்று திக்கலாமே."

(வெண்பா—கண்ணுசாமியம்.)

(வேறு)

2. "மந்தாரகாசமருவும் பெரும்பாடு,
தொந்தவதிசாரந் தோகையே—வந்தணுகும்,
கர்ப்பச் சூலைப்பிளவை காலி ரத்த பித்தமதில்,
பற்று வாய்வுத் தீராப்பார்."

என்பதினால்; நீரிழிவு, பிளவை, ஈளை, மந்தார காசம், சயம் ரத்த பித்தம், வயிற்றுளைவு, அதிசாரம், சந்நி, சுரதோடம், ரத்தப் பிரமேகம், விட வீக்கம், விட நீர், கருப்பச்சூலை, வீச்சு, வலி நோய், பெரும்பாடு, மூல வாயு ஆகிய இந்நோய்களில் பிகுந்த வாயுவும் சேர்ந்து தோன்றில் சாவு நிச்சயமென்றறியவும்.

**எந்தெந்த ரோகங்களில் சிறுநீர் அதிகரித்தாலும் குறைந்தாலும் நீது என்பர்?**

(வெண்பா—கண்ணுசாமியம்)

"வெப்புப் பிணியதனில் வெம்மேகத்தால் வருந்தில்,
தப்புமிகை நீரேதாளிறங்கில்—செப்பும்,
கிராணியிற் பாண்டிலில்களர் நீர் சுருங்கிற்,
பிராணன் பிரியுமெனப் பேசு."

என்பதினால்; நோயாளிக்குச் சுரரோகத்திலும், மேக ரோகத்திலும் சிறு நீர் அதிகரித்து இறங்கினாலும், கிராணி, பாண்டு, சோபை மூதலிய ரோகத்தில் சிறு நீர் குறைந்து இழியினும் உயிர்க்குத் நீது என்பர்.

**மேக ரோகத்திலுண்டாம் தோடக்குறி குணங்கள் (இளைப்பு, சுவாசம், விக்கல், வீக்கம், மயக்கம் இவை சேர்ந்துண்டாகில் சாவு நிச்சயமென்பர் மேகரோகத்தில்).**

(சதக நாடி)

1. "துதிப்பான மேகத்தில் நீரிழிவு மாகா,
தோன்றிய நீரிழிவு தன்னில் வாதமுமாகா,
மதிப்பான வாதத்தில் வயிற்றுளைச்சலாகா,
வருமுளைச்சல் தன்னில் வாய்வு கொழுத்துமாகா,
கெதிப்பான வாய்வதிலே விக்கலாகா,
கூண்ட விக்கல் தனிலிளைப்பு கொழுத்தலாகா,
கதிப்பான இளைப்பதிலே சுவாசம் வந்து
கலந்தாலும் மரணம் என்று கருதலாமே."

(வெண்பா—கண்ணுசாமியம்)

2. "மேகத்தில் நீரிழிவு மேவுமதில் வாத நோய்,
வேகவாதத்துள் வயிற்றுளைவு—சோக விக்கல்,
பன்னு விக்கல் தன்னில் பகரிளைப்புப்பாங்கதனிற்,
பின்னிளையாகாது பேசு."

3. "விள்ளுகிறேன் மேகமதில் வாய்வு மாகா,
விரைவான வாய்வதிலே திரட்சி யாகா,
கொள்ளுகின்ற திரட்சியதில் விக்கமாகா,
கூறியதோர் விக்கமதில் கயமூமாகா,
துள்ளுகின்ற சயமதிலே கபமூமாகா,
தோன்றுங்கபந்தனிலே ரத்தந் தோன்றலாகா,
தள்ளுகின்ற ரத்தமதில் சுவாசம் விக்கல்,
சார்ந்தாலும் மரணமென்று சாற்றலாமே."

4. "சாற்றுவது நீரிழிவில் பிளவையாகா,
சனமான பிளவையிலே தாகமாகா,
தோற்றமுள்ளதாகமதில் யனலுமாகா,
தியல்பான யனல்தனிலே மயக்கமாகா,
சீற்றமுறு மயக்கமதில் வியர்வையாகா,
சீர்கேடாம் வியர்வையிலே சுபமூமாகா,
பூற்றிருவே கபத்தனிலே விக்கல் வந்து,
பொருத்திடுகில் மரணமென்று புகலலாமே."

(வெண்பா—கண்ணுசாமியம்.)

(வேறு)

5. "நீரிற்பிளவை நிகழ்பிளவை யில்தாகம்,
ஓருமதில் தேகத்துறு மனலுந்—தேருமதில்,
சோரு மயக்கமுஞ் சொல் மயக்கத்தில் வியர்வை,
ஆரிற்றீதாமென்றறி."

6. "வேர்வைதனிற் கபமும் மேவுமதில் விக்கல் நோய்,
கார்முகில் நேர்கூந்தலாய் கண்டிடுமேல்—சீர்கொள்,
மருத்துவத்திற்றேர்ந்த மதியுடையாராவி,
தரித்திராதென்பர்சரி."

(இதன் பொருள்)

1. மேக நீர் வியாதியில் நீரிழிவும், நீரிழிவில் வாத ரோகம், வயிற்றுளைவு, மிகுந்த வாயு, விக்கல், இளைப்பு, சுவாசம் ஆகிய இக்குறி குணங்கள் ஒன்றின் பின் ஒன்றாகக் கிளைக்குமேயானால் நோயாளி மரணமடைவது நிச்சயம்.

2. நிற்க, மேக நீர் நோயில் வாயுவும், வாய்வதிலே திரட்சியும் வீக்கம், கய நோய், கபம், ரத்த பித்தம், சுவாசம், விக்கல் இவைகள் ஒன்றின் பின் ஒன்றாய்க் கிளைக்குமேயானால் நோயினன் மரணமாவான்.

3. நீரிழிவில் பிளவையும், பிளவையில் தாகம், சுரம், மயக்கம், வியர்வை, கபம், விக்கல் ஆகிய ரோகங்கள் ஒன்றின் பின் ஒன்றாய்க் கிளைக்குமேயானால் நோயாளி சாவது உறுதி என அறியவும்.

**மாந்த நோயிலுண்டாம் தோடக்குறி குணங்கள்**
**(இளைப்பு, சுவாசம், விக்கலுண்டாயின் மரணமாம்).**

(சதக நாடி.)

"கருதுகின்ற மந்தமதில் சுரமுமாகா,
கலந்த சுரந்தனில் விஷமே காணலாகா,
மருவுகின்ற விஷமதிலே வீக்கமாகா,
வரும் வீக்கந்தனிலே வயிற்றுப் பொருமலாகா,
பொருமலிலே கபரோகம் புளலாகா,
பொருந்து கபந்தனிலிளைப்புப் பூணலாகா,
வெருவிய தோரிளைப்பதிலே சுவாசம் விக்கல்,
மேலிடுகில் மரணமென்றே விள்ளலாமே."

என்பதினால், மாந்த நோயில் சுரமும், சுரத்தில் விட தோடம், வீக்கம், வயிறு பொருமல், கபம், இளைப்பு, சுவாசம், விக்கலாகிய இவை ஒன்றின் பின் ஒன்றாய்த் தொடருமேயாகில் நோயாளி சாவான் என்பது திண்ணம்.

பெரும்பாட்டிலுண்டாம் தோடக்குறி குணங்கள்.

(வெண்பா—கண்ணுசாமியம்)

"தேகத்துறு மனலும் தீதாமதி லெரிச்சல்,
வேகப்பெரும்பாடு வெண்ணிறமாய்ப்—போகவதில்,
நாற்றமேல் மூச்சு நவிலக்கப மயக்கம்,
தோற்றவுடல் சாயுஞ் சொல்."

என்பதினால், ஸ்திரிகளுக்குத் தேகவனல் கொண்டு எரிச் சலுண்டாகி மாதவிடாயிலேற்பட்ட உதிரம் வெண்ணிறமும், நாற்றத்துடனும் கூடியுள்ள காலத்தில், மார்பு படபடத்து மேல் மூச்சு, கபம், இருமல், மயக்கம் முதலிய உபாதைகள் தோன்றின் அவர்களது தேக நிலைமை படிப்படியாய்க்குன்றும். பரிகாரத் திற்கும் வசப்படாதென உரைப்பர்.

**குன்ம ரோகத்திலுண்டாம் தோட்சுறி குணங்கள்.**

(சதக நாடி)

1. "புகலுவதுகேள் அத்திவாயு வாகா,
பொருந்தியதோர் வாயுவதிலே குன்மமாகா,
தகைமைபெறும் குன்மமதில் பேதியாகா,
தங்காத பேதியிலே பொருமல் லாகா,
அகலமுறும் பொருமலிலே கபமு மாகா,
ஆங்காரக் கபத்தில் விக்கல் லணுகலாகா,,
சுகம் பெறவே விக்கலிலே மயக்கம் வந்து,
தோன்றிடுகில் மரணம் வந்து துடருந்தானே."

(வெண்பா—கண்ணுசாமியம்)

(வேறு)

2. "வாதத்திற் குன்மம் வளர் குன்மத்திற் பேதி,
யாதலதிற் பொருமலாங்கதனில்—வேதனை செய்,
பொல்லாக் கபமும் புனருமதில் விக்கல் நோய்,
கொல்லுமதின் மயக்கங் கூறு."

என்பதினால், வாத ரோகத்தில் குன்மம் உண்டாகும்போது (வாத குன்மம்) அத்துடன் பேதியும், வயிறு பொருமல், கபம், விக்கல், மயக்கம் இவை ஒன்றின்பின் ஒன்றாய்க் கிளக்குமேயானால் நோயினன் மரணமாவது நிச்சயமென்றறியவும்.

**சோபை ரோகத்திலுண்டாம் தோடக்குறி குணங்கள்.**

(சதக நாடி)

1. "துடரான பித்தமதிற் சோபை யாகா,
சோபையிலே வாயுவெழுந்து தொந்திப்பாகா,
இடரான வாயுவதிலே பாண்டு வாகா,
வெளிற் பாண்டுதனில் வயிற்றுக் கடுப்பு மாகா,
திடமான கடுப்பதிலே சீதமாகா,
சீதமதிலெழுந்து கபஞ்சேர லாகா,
தடமான கபந்தனிலே மயக்கம் விக்கல்,
தரித்திடுகில் மரணமென்று தயவாய்ச் சொல்லே."

(வெண்பா—கண்ணுசாமியம்)

(வேறு)

2. "சொல்லு பித்தத்திற் சோபை சோபைதனில் வாயு தொந்தம்,
வல்லவதிற் பாண்டுவன் பாண்டில்—நல்ல,
வயிற்றுக் கடுப்பு வளர் கடுப்பிற் சீதம்,
பயிலீற் கெடுதியெனப்பன்."

3. "சீதந்தனிற் கபமுஞ் சேர் கபத்தில் விக்கலுட
னோது மயக்கமிவையுற்றினு—மாதே கேள்,
கோதுதனை நீக்கிக் கூலகோர் தாம்போற்றத்
தீதிலுலகு புகுந்தோர்."

(இதன் பொருள்)

பித்த சோபையில் வாயுவும், வாயுவுடன் பாண்டு, வயிற்றுக் கடுப்பு, சீதம், விழல், கபம், மயக்கம், விக்கல் ஆகிய இவை ஒன்றின் பின் ஒன்றாய்த் தொடருமேயானால் மரணம் நிச்சயமென்றறிய வும்.

## சுர நோயிலுண்டாம் தோடக்குறி குணங்கள்.

(சதக நாடி)

1. "தயவான சுரந்தனிலே விடமு மாகா,
சார்ந்த விடந்தனிலே தோடந் தழைக்கலாகா,
பயமான தோடமதில் சந்நியாகா,
பாங்கான சந்நியிலே கபமு மாகா,
இயல்பான கபந்தனிலே விக்கமாகா,
விளங்கியதோர் வாய்வதிலே யிளைப்பு மாகா,
கயமான யிளைப்பதிலே சுவாசம் விக்கல்,
கலந்தாலும் மரணமென்று கழற்றலாமே."

(வேறு)

2. "இசைந்தபடி சுரந்தனிலே இளைப்பு மாகா,
இளைப்பான கபந்தனிலே விடமு மாகா,
உசந்தவிடந்தனிலே மயக்கம் வாயுவாகா,
உண்டான மயக்கமதில் சுவாச மாகா,
அசைந்திருக்குஞ் சுவாசமதில் வியர்வையாகா,
அனகவியர்வையிலே குளிர்ச்சியாகா,
வசைந்திருக்குங் குளிர்ச்சியிலே மயக்கம் விக்கல்,
வந்தாலும் மரணமென்று வழங்கலாமே."

(இதன் பொருள்)

சுர நோயில் விடமும், அந்துடல் தோடம், சந்நி, கபம், வீக்கம், வாய்வு, இளைப்பு, சுவாசம், விக்கல் இவை ஒன்றின் பின் ஒன்றாய்த் தோன்றில் மரணம் நிச்சயமாம்.

அல்லது சுர நோயில் இளைப்பு, கபம், விடம், மயக்கம், வாய்வு, சுவாசம், வியர்வை, சீதளம், விக்கல் இவை தொடர் பாகத் தோன்றுமேயானால் நோயினன் சாவது நிச்சயமென அறியவும்.

## அத்திசுரத்திலுண்டாம் தோடக்குறி குணங்கள்.

(சதக நாடி)

"கழறியதோரத்தியிலே காய்வுமாகா,
காய்வதிலே வாயுவெழுந்து கலக்கலாகா,
உளறிய தோர்வாயுவதிலே உளைச்சலாகா,
உண்டானவுளைச்சலிலே வீக்கமாகா,
கிளறியதோர் வீக்கமதிற் சீதமாகா,
குளிர் சீதமதனிற் கபம் கொழுகலாகா,
இளகியதோர் கபந்தனிலே மயக்கம் விக்கல்,
எழுந்தாலும் மரணமென்றிசைக்கலாமே."

என்பதினால், அத்தியில் சுரமும் (அத்தி சுரம்), அத்துடன் வாயுவு, தேக உளைச்சல், வீக்கம், சீதளம், கபம், மயக்கம், விக்கல் ஆகிய குறிகுணங்கள் தொடர்ந்து தோன்றுமானால் நோயினன் சாவது நிச்சயமென்றறிக.

## ஷயரோகத்திலுண்டாம் (இளைப்பு நோய்) தோடக்குறி குணங்கள்.

(வெண்பா—கண்ணுசாமியம்)

1. "சுரத்திற் கப நோயும் சொல்லுதில் வியர்வை
இரத்தமுடன் வாந்தி உண்டும்—பொருந்தாதே,
பேதியுடன் வீக்கம் பேசிடுங் காலாங்கே நீ
வாதிக்க நன்றல்ல வந்து."

2. "கபத்திற் சுரரோகம் காலை முடல்மென்மை
சுபமன்றத்தில் சந்தொல்லில்—விபத்தேயாம்
பேதிக்கமெய் குளிர்ச்சி பேச மயிர்க்கூச்சம்
கோதி லிவையாய்ந்துகொள்."

3. "கொள்ளுமிதனோடு கூறும் விலாச்சந்து
விள்ளநடுமுது குமீறிவலி—கொள்ளையிடத்
தோன்றின் மடமயிலே தோட மாங்கூற்றுவனுந்
தோன்றுங் குறிகளெனச்சொல்."

(இதன் பொருள்.)

1. க்ஷயரோகத்தில் மிகுசுரம் கபம், வியர்வை, இரத்தவாந்தி ஆகிய இவற்றுடன் பேதியும் விக்கமும் சேர்ந்து தோன்றுமானால் அந்நோயினன், சாவான் என்பது திண்ணம்.

2. அன்றியும் க்ஷயரோகத்தில் சுர மிகுதியும் உடல் மெலிவும் அசதி, ஆயாசம் ஆகியவையுண்டாயின் ஆபத்துக்கிடமாகும். இத்துடன் தேகக் குளிர்ச்சியும், மயிர்க் கூச்சமும் உண்டாயின் கொடிய தெனக் கொள்வர்.

3. மேலும், மேலே குறிப்பிட்ட வரன் முறையில் வந்த குறி குணங்களோடு விலாச்சந்து, நடுமுதுகு இவை அதிகமாக வலிக்குமாயின் எமன் போதருங்கால மென்றறிக."

மரணக்குறி குணங்கள் (வேறு)

(சதக நாடி)

1. "திண்ணமுடன் நீரடைத்து மலமுஞ்சிக்கி
சிறந்ததொரு நீர்பாய்ந்து சீதமேவி,
வண்ணமுள்ளதைகை காலும் பருத்து வீங்கி,
வயற் பொருமி நாவறண்டு வாந்தியாகி
எண்ணமுற மூச்சடைத்து விக்கலாகி
இளைப்பதிலே மயக்கமதாய் தேகமெல்லாம்
குண்ணெனவே குளிர்ந்திடுகில் மரணம்வந்து
சாருவது முறுதி யென்று சமைந்து சொல்லே."

2. "சமைத்தவண்ணத்தனை எடுத்து விக்கலாகி
சடமான வயற்பொருமிச் சரீரம் சோர்ந்து
இமைத்தவுடல் புடைத்தெழுந்து விலாவிரண்டும்
எடுத்தடித்து உடல் குளிர்ந்து சத்தியாகும்
இமைத்தவுடல் வெளுத்துப் புறங்கை கால் வீங்கி,
ஈண்டலிங்குமுட் சுருங்கி யிளைப்புமாகி
அமைத்த குலை வியர்வையினால் மரணம்வந்து
ஆனவுடலழியுமென யறிச் சொல்லே."

3. "அறிவான கண்டமதில் நோவுமாகி
யம்பரமே சிவந்து யழல்தானே மேவி
குறியானயண்டமுடன் முகமும் வீங்கி
குறுக்குவடிவயற் புறங்கைகால் கனத்து
வெறியாகத் தாகமுமாய் மயக்கமாகி
விக்கலுடல் மேல் மூச்சாய் வியர்வையாகி
மறிவான நயன மது கூசிப்பார்க்கில்
மரணம் வருமென்று திடன் வகுக்கலாமே."

4. "வகுப்பான நீர்மலமுமடைத்து விம்மி
வயிற்றிலே குறு குறுப்பாயாகித் தாகமாம்
பகுப்பான புறங்காலுங் கையும் வீங்கிப்
பரிதாபமிகவாகிப் பிரவேசித்துத்
தொகுப்பான மூர்ச்சையோடசதி யாகிச்
சொல்லரியமனமருண்டு சோகங்கொண்டு,
விகுப்பான கையதனால் சேட்டை செய்யில்,
விரைவாக மரணமென்று விள்ளலாமே."

5. "விள்ளுவென்சி லேற்பனமது மூலத்துற்று
மேலே கும்வேக மூச்சாய்ப் பிராணவாயுவை
துள்ளவே சேர்ந்து நெஞ்சடைப்புமாகித்
தொண்டையிலே அலைதிரைபோ லிரைந்து மோதி
மெள்ளவே கண் சிவந்து யருகே பார்த்து
மேனியெல்லாஞ் சோகமுமாய் வெளுத்துக் காட்டி
கள்ளவே குருவியர்வை வேர்த்து தானால்
காலனுயிர்வாங்குவது முண்மை தானே."

6. "உண்மையுடன் அடிவயிறு மூதுருத்தும் வீங்கி
யுறு மூலவக்கினியுங் கேடதாகி
வண்மையுடன் அன்னமதை வெறுத்துக் காட்டி
வயிற்பொருமிமேல் மூச்சாய் வாந்தியாகி
பெண்மையிலே கசநாடிக் குன்றி வாதம்
பித்தமதுவொடுங்கி வளர்கப மேற் பொங்கி
திண்மையுடன் மூச்செடுத்து மரணம் வந்து
சேருமென மூனோர்கள் தெளிந்தவாறே."

7. "பழிபாடாஞ்சேர்த்தும மொடுவாதஞ் சேர்ந்தால்
பலநோய்க்கு மரணம் வந்து பற்றுந்தானே."

(இதன் பொருள்.)

1. நீரும் மலமும் அடைபட்டு உடம்பு நீர் கோர்த்து, சீதளம் உண்டாய்க் கைகால்களை பருத்து வீங்கி, வயிறு பொருமி, தாவறண்டு, வாந்தி, மூச்சடைப்பு, விக்கல், இளைப்பு, மயக்கம், தேகம் சில்லிடல் ஆகிய இக்குறி குணங்கள் தோன்றில் மரணம் நிச்சயம்.

2. விக்கல், வயிறு பொருமல், மேனிவாடல், உடல் வீங்கல், விலாவிரண்டும் தூக்கித்தூக்கி மூச்சுவிடல், உடல் குளிரல், வாந்தி, உடல் வெளுத்தல், புறங்கால் கைகள் வீங்கல், லீங்கம், உட்சுருங்கல் இளைப்பு, வியர்வை ஆகிய இக்குறி குணங்கள் சேர்ந்து தோன்றில் நோயினன் உயிர் துறப்பான் என்பது நிச்சயம்.

3. கண்டத்தில் நோவு, மேனி சிவந்து காங்கையுண்டாய், அண்டமும், முகமும் வீங்கி, குறுக்கு, அடி வயிறு, புறங்கால் கைகள் கனத்து வீங்கி, தாகம், மயக்கம், விக்கல், மேல்மூச்சு, வியர்வை, கண் கூசல் இத்தீபாதிக் குறி குணங்கள் சேர்ந்து காணில் நோயினன் சாவது நிச்சயமாம்.

4. நீரும் மலமும் அடைப்பட்டு, வயிறு பொருமி இரைந்து, தாகம், புறங்கால் கைகள் வீங்கிப் பரிதாபமிஞ்சி, மூர்ச்சை, அசதி, மனமருளல், சோகம், கையால் சேட்டை ஆகிய இக்குறி குணங்கள் சேர்ந்து தோன்றுமாகில் மரணம் நிச்சயமென்றறிக.

5. ஐயம் அதிகரித்து வெகு மூச்சுண்டாய், பிராணவாயுவைத் தம்பித்து நெஞ்சடைத்து தொண்டையில் கோழை கட்டி, இரைந்து கண்கிவந்து அருகே பார்த்து, மேனி சோகமுடன் வெளுத்து, குருவியர்வையும் வியர்த்துதானால் மரணம் நிச்சய மென்றறிக!

6. அடிவயிறும் முதுகும் வீங்கியும், சடாரக்கினியுங் கெட்டு, அன்னம் வெறுத்து, வயிறு பொருமி மேல்மூச்சும், வாந்தியுமாகி, வாதபித்த மொடுங்கி ஐயமேலிட்டு கடுஞ் சுவாசமு முண்டாகில் மரணம் நிச்சயம்.

7. சேத்துமத்துடன் வாதஞ் சேர்ந்து தொந்தமாக வரக்கூடிய அனேகம் பிணிகள் மரணத்துக்கேதுவாகு மெனவும் கூறியுள் ளார்.

**சாத்தியா சாத்திய நாடிக்குறி குணங்கள் பற்றிய சில பொது வான அபிப்பிராயம்.**

*(சதக நாடி)*

"தெளிவான வாதபித்த சேத்து மத்தால்
சேர்த்துவரும் பல பிணியுறத்தினோடு
வளிவாக நாலாயிரத்து நானூற்று நாற்பத்தெட்டு,
வந்தணுகில் தேகமதில் வனு வியாதி,
நெளிவாகப் பித்தமோடு உஷ்ணமிஞ்சி,
நிலைத்தபிணி அவை-த்தால் தீரும் தீரும்,
பழிபாடாஞ்சேத்துமமொடு வாதஞ் சேர்த்தால்,
பலநோய்க்கு மரணம் வந்து பற்றுந்தானே."

என்பதினால்; வாதபித்த சேத்துமங்கள் தனித்து மிறியும் கலப் புற்றும் தேகத்தினிடத்தில் நாலாயிரத்து நானூற்று நாற்பத் தெட்டு பற்பல பிணிகள் திரமாயுண்டாகும். அவற்றுள் பித்த மூடன் உட்டிணங் கூடினுண்டாம் பிணிகள் வயித்தியத்தால் தீரும் எனவும்; ஆனால் சேத்துமத்துடன் வாதஞ்சேர்த்து உண் டாகும் அனேகம் நோய்கள் மரணத்துக் கேதுவாகுமெனவும் நூல்கள் கூறுகின்றன.

**நோய்கள் அசாத்தியமாயினும் குணமாக வேண்டின் கீழ் கண்ட விதிகள் அனுசரித்தல் நலமெனவும் கூறியுள்ளார்.**

*(சதக நாடி)*

1. "பற்று நோய் தீரவென்றால் தருமம் வேண்டும்,
பாங்கான குணம் வேண்டும் வணக்கம் வேண்டும்,
சித்திரமாய் அவுடதங்கள் செய்யவேண்டும்
செய்மருந்து சுத்தி வேண்டும் பத்தியம் வேண்டும்
மூத்திபெறும் வைத்தியன்மேல் கிருபை வேண்டும்
முன்னோர்கள் நூல் முறைபோல் நடக்கவேண்டும்
புத்தியுடனிப்படியே நடத்த பேர்க்குப்
பிணி தீருமென்று மனம் பொருந்திச் சொல்லே."

2. "பொருந்தியதோர் சதகமென்று நூறுஞ்சொல்லிப்
புகழ்பெரிய நிகண்டுதொல் காப்பிய புராணம்
அருந்தவருஞ்செய் காரிகை நன்னூ லிலக்கிய மிந்நூல்,
ஆனவிரிச் சொல் நேமி நாதத்தோடு
வருந்துபன்னூல் பாட்டி யலுமெழுதஞ் சொல்லும்
வரும்யாப்பு பொருத்தவிதி யலங்காரஞ் சொல்
திருந்தவடி யேயுரைத்தேன் அறிவுள்ளோர்க்குச்
சிறப்பாகச் சொல்லுவது உங்கள் சிறப்புதானே."

3. "சிறப்பாக வாராய்ந்து வாதம்பித்தம்
சேத்தும முந்தொந்தமுடன் தீரும் தீரா,
இறைப்பான சத்துவத்தின் பஞ்சபூத
முட்கிரிகை தசநாடி வாயு பேதம்,
நறைப்பாகத் தென்பொதிகை தன்னில் வாழும்
நன்முனிக்கு சத்குருபான்தான் கண்டு சொன்னார்.
அறைப்பாக நினையாமலுணர்ந்த பேர்க்கு
அம்புவியிலாதி யோர்வாழ்வுண்டாமே."

4. "உண்டான யிந்நூலையுணர்ந்த பேர்கள்
உலகுதனில் பெரியோர்களாத்ம ஞானி
கொண்டாடு மவித்தைமதி புத்தி யுண்டாம்
குருதெரிசனமும் பெருகி ஞான மூண்டாம்
வண்டாடும் பூமாது நிறைவாழ் வுண்டாம்
மகாமோட்சராயுட்சிய பதமே நல்கும்
பண்டோர்கள் நூல்முறையாராய்ந்து சொன்னேன்
பாங்கான சதக மென்னும் நாலுமுற்றே."

(இதன் பொருள்)

வியாதி அசாத்தியமாயிருப்பினும் அதனைத் தீர்க்க வென்றால் தருமம், நற்குணம், நல் ஒழுக்கம், நற் பழக்கம், வணக்கம், குரு பக்தி, தெய்வபக்தி முதலியன பண்டிதனுக்கும் பிணியாளனுக்கும் இயற்கையாகவே யிருக்க வேண்டும். பண்டிதன் பண்டைய சித்தர் நூல்களை எல்லாம் நன்கு ஆராய்ந்து கற்று, நன்கு முடிவு பெற்ற மருந்துகளைத் தயாரித்தும், நோய் நாடல், நோய் முதல் நாடல், மருந்து ஊட்டு முறை முதலிய சகலமும் அறிந்து அதன் பிரகாரம் செவ்வனே நடைமுறையில் அனுட்டிக்கவேண்டும். பிணியாளன் வயித்தியன்மேல் கிருபை வைத்தும், மருந்துகளைச் சரியாக ஏற்றும், பத்தியம் சரியாகக் காத்தும், பண்டிதனது கட்டளைப்படி நடந்து கொள்ளவும் வேண்டும். இவ்விதமாகப் பண்டிதனும் பிணியாளனும் ஒற்றுமைத்தால் அசாத்தியப் பிணிகளும் குணமாகக் கூடுமெனவும் கூறலாயிற்று.

**அவத்தை பத்தின் விவரம்.**

(திரட்டு நாடி)

1 "சாக்கிரவத்தை தானும் பிணைவெடி சார்ந்து நாறும்,
ஏக்குறுஞ்சி வேற்பனந்தா னெழும்பிடு மூச்சுவீரும்,
நோக்குறுஞ் சுழுத்தி தானே நுவன்றி டும்பல பேச்சாகு,
தாக்கி யதுரியந்தானே தப்பிதான் மயங்குஞ் சீவன்."

2 "சாவுரு முதலவத்தைத் தர்க்கங்கள் பேசும் ரெண்டில்,
மேவிட வுடம்பு நாறு மிக்க மூன்றாமவத்தை
பாவகத் தெளிவு நீங்கிப் பத்தும் நாலாமவத்தை
ஆவலாய் வெற்றி பேசி யசாத்திய சீதமாமே."

3 "சீதமஞ்சாமவத்தைத் தெளிவுற முகடு பார்க்கும்
மோதரமாறா மவத்தை யுடலது குளிர்ந்து காட்டும்
பேதமேழாம வத்தை பேதித்துப் பொசிப்புவேண்டும்,
ஆதியா னுரைத்த வெட்டில் கண்பஞ்சாடுமவத்தை
[ஓன்பான்."

4 "நீதிலாவுடல் வெளுக்கும் சீதமாந்நி தாம்பத்தில்
ஓதிய ஆயுள்வேதத் துரை விதிப்படியே முன்னோர்
பேதமாய்ப் புகலும் நீநி பெருமையை யறிந்துகொண்டு
ஓதுவர் கடத்தினோர்க்கு முறையி தென்றோது நூலே."

என்பதினால்; அவத்தை என்பது சாக்கிரம், சொற்பனம், சுழுத்தி முதலீய உயிர் நிலையுபாதி என்றும், மரண வேதனை, மரணவு பாதி, முடிவு, வேதனை எனவும் பொருள்படும். இங்கே மரணவு பாதி அல்லது மரண வேதனையையே குறிக்கும்.

மேற்கூறிய திரட்டு நாடியின் பிரகாரம்:

(1) முதலாவது சாக்கிரம் அவத்தையில் உடலீற் பிணடுவெடி நாற்றமும்;

(2) சொற்பன அவத்தையில் கபம் மேலிட்டு மூச்சு வீழும் எனவும்;

(3) சுழுத்தியில் பல பேச்சுகளுடண்டாகு மெனவும்;

(4) துரியத்தில் சீவன் மயங்குமெனவும் கூறப்பட்டுள்ளது.

அன்றியும்; (1) முதலாவது அவத்தையில் தர்க்கங்கள் பேசு மெனவும்;

(2) இரண்டாமவத்தையில் உடம்பு நாறு மெனவும்;

(3) மூன்றாமவத்தையில் தெளிவு நீங்குமெனவும்;

(4) நாலாமவத்தையில் ஆவலாய் வெற்றி பேசி அசாத்தியம்; சீதளமாகு மெனவும்

(5) ஐந்தில் தெளிவுடன் முகடு பார்க்கும்;

(6) ஆறில் உடல் குளிருமெனவும்;

(7) ஏழில் அன்னத்தை விரும்பும் எனவும்;

(8) எடடில் கண் பஞ்சடையுமெனவும்;

(9) ஒன்பதில் உடல் வெளுத்துக் காணும் எனவும்;

(10) பத்தில் சீதளம் மேலிட்டு நோயாளி மரணமாவான் எனவும் கூறியுள்ளார்.

**அவத்தை பத்து வேறு.**

(வல்லாதியின் நாடி)

1. "சுருக்கான அவத்தை பத்துஞ் சொல்லக் கேளு
துடியான முதலவத்தைப் பிணமே நாறும்
முருக்காயிரண்டு நலம் வேற்றுமை கூறும்
மூன்றுக்குந் தெளிவதன் நாற்றமாகும்
அருக்கான நாலிலைமே ளிளைப்பு காணும்
ஐந்துக்கு முகம் வேர்க்குமை ஆறுக்கப்பா
நறுக்கானவுடம் பதுவுங் குளிரு மேழில்
நன்றானயன்னத்தை நாடும் பாரே."

2 "நாடுமே யிருநான்கில் கண் பஞ்சாடும்
நலமான வொன்பதிலே வுடம்பு வேர்க்கும்
ஓடுமே பத்துக்கு மரணமாவார்
உத்தமனே யவத்தை பத்து முரைத்தேன் பாரு
தேடுமே பலதூஷமறிந்து கொண்டு
தேசத்தில் வயித்தியந்தான் செய்யவேண்டும்,
கூடுமே யசாத்தியஞ சாத்தியத்தின்
குணங் குறியுங் கண்டுமே கூறினேனே."

என்பதினால்; (1) முதலாவது அவத்தையில் பிணவெடி நாறு மெனவும்;

(2) இரண்டாமவத்தையில் நலம் பேசும் வேற்றுமை கூறு மெனவும்;

(3) மூன்றாமவத்தையில் சித்தம் கலங்குமெனவும்;

(4) நாலாமவத்தையில் இளைத்து மேல் சுவாசம் வாங்கு மெனவும்;

(5) ஐந்தாமவத்தையில் முகம் வேர்க்குமெனவும்;

(6) ஆறாமவத்தையில் உடல் குளிரும் எனவும்;

(7) ஏழாமவத்தையில் அன்னத்தை விரும்பும் எனவும்;

(8) எட்டாமவத்தையில் கண் பஞ்சடையுமெனவும்;

(9) ஒன்பதாமவத்தையில் உடல் வெளுக்கும், வியர்க்கும் எனவும்;

(10) பத்தில் சீதளமூண்டாய் நோயாளி மரணமாவான எனவும் கூறியுள்ளார்.

# அத்தியாயம் XIII

## மூக்குற்ற இயல்.

மூக்குற்றங்களின் இலக்கணங்களை இங்கு தெரித்துகொண்டு, அதற்கு மேல் நாடியைப்பற்றிய மற்ற விவரங்களை அறிவது நல்லது. ஆதலால் மூக்குற்றங்களின் வடிவத்தன்மை, வாழிடம், இயற்கைப் பண்பு, உடலில் செய்தொழில், பிரிவுகள் யாவும் இங்கு கூறுபாம்.

*(அத்தியாயம் 6—சித்தமருத்துவாங்கம் பக்கம் 49-59).*

### *(a)* வளி (வாதம்).

**(1) வளி வடிவத்தன்மை.**

நுண்மை (அணுத்துவம்).
தொய்மை (கடினமின்மை).
தண்மை (குளிர்ச்சி).
வெம்மை (உட்டிணம்).

தண்மை, வெம்மை ஆகிய இவ்விரண்டால் வரும் ஒப்புரவின்மை (சருச்சரை) என்பனவாம்.

**(2) வளி வாழுமிடம்.**

அபானம், மலம், இடகலை, உந்தியின் கீழ் மூலம், காமக்கொடி, இடுப்பு எலும்பு, தோல், நரம்புக் கூட்டம், கீல்கள், மயிர்க்கால்கள், ஊன் ஆகிய இடங்களில் வாழ்வதாகும்.

**(3) வளியின் இயற்கைப் பண்பு.**

இயற்கை நிலையில் நின்று : ஊக்கமுண்டாக்கல், மூச்சு விடல், மூச்சு வாங்கல், மனமொழி மெய்களுக்குச் செயலைத் தரல், மலம் முதலிய பதினான்கு வேகங்களை (விரைவுகளை) வெளிப் படுத்தல், சாரம் முதலிய ஏழு உடற்றாதுக்களுக்கும் ஒத்த நிகழ்ச்சியைத் தரல், ஐம்பொறிகட்கு வன்மையைக் கொடுத்தல் ஆகியவற்றில் உடற்குத் துணை புரிதலாம்.

**(4) வளி உடலில் செய்தொழில்.**

உடல் நோதல், குத்தல், பிளத்தல்போற் காணல், நரம்பு முதலியன குன்றல், நடுக்கல், இறுக்கமாதல், நீர்ப்பசையின்மை (வறட்சி), அசைத்தல், இளைத்தல், சூடைச்சல், தடி முதலிய வற்றால் அடிபட்டது போன்ற வேதனை, கை அல்லது கால் இழ விட்டுப் பெயர்தல், அதாவது பூட்டு நழுவல், உறுப்புத் தளர்ச்சி,

உறுப்புகள் தொழில் புரியாமல் மரம் போலக் கிடத்தல், **மலம்,** சிறுநீர் முதலியன தீய்தல் அல்லது அடைபடுதல், நீர்வேட்கை, கண்டைக்கால், தொடை முதலியன தொறுங்கிப் போவது போலத் தோன்றல், எறும்புக்குள் துளைப்பது போன்ற உணர்ச்சி, மயிர்க் கூச்செறிதல், கைகால்களை நீட்டவும், மடக்கவுமுடியாமை, எச்சுவையும் துவர்ப்பாயிருத்தல் அல்லது துவர்ப்பாக வாய் நீரூரல், தோல், கண், மலம், நீர் முதலியன கருத்துக் காணல், ஆகிய இவை வளியானது உடலில் செய்யும் தொழில்களாம்.

*(5) வளியின் (வாதம்) பிரிவுகள்—*

இஃது ஒன்றாயிருப்பினும் தன் இடம், தொழில் முதலிய வற்றால் பத்து வகைப்படும். அவை :

1. பிராணன் (உயிர்க்கால்).
2. அபானன் (கீழ் நோக்குங்கால்).
3. வியானன் (பரவுகால்).
4. உதானன் (மேல் நோக்குங்கால்).
5. சமானன் (நடுக்கால்).
6. நாகன்
7. கூர்மன்
8. கிருகரன் } உபபிராணாதி வாயுக்கள்.
9. தேவதத்தன்
10. தனஞ்சேயன்

என்பனவாம்.

**1. பிராணன்** (உயிர்க்கால்).—இது மூலாதாரத்திலிருந்து வெளிப்பட்டு மூக்கின் வழியாய் மூச்சு விடலாற் பன்னிரண்டுங்குல தூரம் சென்று, மறுபடியும் எட்டங்குலம் உள்ளுக்குப் பாய்ந்து, நாலங்குலம் வீணாய்ப்போம். மூச்சு வாங்கல், விடுதல் செய்யும், புசிக்கும் உணவுகளைச் செரிக்கப் பண்ணும்.

நாழிகை ஒன்றுக்கு முன்னூற்றுறுபது சுவாசமாக நாளொன் றுக்கு இருபத்தோராயிரத்து அறுநூறு சுவாசம் உண்டாகும். அவற்றில் பதினாலாயிரத்து நானூறு சுவாசம் உள்வாங்கி மூலாதாரத்துள்ளொடுங்கும். பாக்கி ஏழாயிரத்துயிருநூறு

சுவாசம் மட்டினும் வெளியாகிப் பாழாய்ப்போம். இவ்வேழா யிரத்துயிருநூறு சுவாசமுங்கூடப் பாழாகாமல் உட்செலுத்தினால் எப்போதும் பாலராயிருக்கலாமெனவும் நூல்கள் கூறுகின்றன.

2. **அபானன்** (கீழ் நோக்குங்கால்).—இது சுவாதிட்டானத் திலிருந்து வெளிப்பட்டுக் கீழ்நோக்கி மலசலத்தைத் தள்ளும். ஆசனவாயைச் சுருக்கும். அன்னசாரத்தைச் சேரவேண்டிய இடங்களில் சேர்ப்பிக்கும்.

3. **வியானன் (பரவுகால்).**—இது தோலிலிருந்து எழுபத் திரண்டாயிரம் (72,000) நாடி நரம்பு ரத்தக் குழாய்களிலும் சென்று, இவ்வுடலிலுள்ள அசையும் பொருள், அசையாப் பொருள் என்னுமிரண்டினுமிருந்து உறுப்புக்களை நீட்டவும் மடக்கவுஞ் செய்து; பரிசங்களையறியும். உண்ணும் உணவின் சாரத்தை அவ்விடங்களில் நிரப்பித்து உடலைக் காக்கும்.

4. **உதானன்** (மேல் நோக்குங்கால்).—இது, உதராக்கினியி லிருந்து தோன்றி உணவின் சாரத்தோடு கூடியிருந்து அதை அங்கங்கே நிறுத்தும். அதை வெளிப்படுத்தியும் கலக்கியும் வருதல் செய்யும்.

5. **சமானன்** (நடுக்கால்).—இது நாபியிலிருந்து கால் வரைக்கும் சமனாய்ப் பரவிப்பாய்ந்து, மற்ற வாயுக்களை மிஞ்ச வொட்டாமல் மடக்கிச் சரிப்படுத்திச் சேரப் பண்ணும் அறுசுவை களையும், தண்ணீர், அன்னம் ஆகியவற்றையும் சமப்படுத்தி உடலிலெல்லாம் சேரும்படி செய்யும்.

6. **நாகன்.**—இது எல்லாக் கலைகளையும் கற்கும்படி அறிவை எழுப்பும். நல்ல பண்களைப் பாடுவிக்கும். கண்களைத் திறக்கும் படிச் செய்யும். கண்களை இமைக்கும்படி செய்யும். மயிர்களைச் சிலிர்க்கப் பண்ணும்.

7. **கூர்மன்.**—இது, மனதிலிருந்து கிளம்பித் கண்ணிலிருந்து இமையைக் கொட்டுவிக்கும். கொட்டாவி விடப்பண்ணும். பலம் உண்டுபண்ணும். கண்களைத் திறக்கவும் மூடவும் பண்ணும். உலகப் பொருள்கள் யாவற்றையும் கண்களுக்குக் காண்பிக்கும். கண்களினின்றும் நீரை விழப் பண்ணும்.

8. **கிருகரன்**.—இது, நாவிலிருந்து நாவிற்சுவையும், நாசியிற் சுவையும் உண்டாக்கும். பசியை உண்டு பண்ணும். ஒன்றை நினைத்திருக்கச் செய்யும். போதற்றொழிலைச் செய்யும். தும்மலையும் இருமலையும் உண்டாக்கும்.

9. **தேவதத்தன்**.—இது வளைவு வடிவமாய்க் கிளம்பிச் சோம்பலையும், உடல் முரித்தலையுமுண்டாக்கும். தூங்கி எழுந்திருக்கும்போது அயர்ச்சியை உண்டாக்கும். கண்ணைப் பலவிடங்களில் ஓட்டி உலாவுவிக்கும். தூங்குதல், சண்டை கொள்ளல், தர்க்கம் பேசல், மிக்க கோபம் ஆகியவற்றை யுண்டாக்கும். பல பொருள்களைக் குறிக்கச் செய்து குதம், குய்யமென்னுமிடங்களில் இருக்கும்.

10. **தனஞ்சயன்**.—இது, மூக்கிலிருந்து தடித்து உடம்பு முழுமையும் விங்கப் பண்ணும்; காதில் கடல் போலிரையும்; இறந்துவிடின் காற்றெல்லாம் வெளிப்பட்ட பின்னர் மூன்றாவது நாளில் தலை வெடித்த பின் தான் போகும்.

*(வேறு.)*

**வளியைப் பற்றிப் பிற நூலுடையார் கொள்கைகளாவன :—**

1. **வியானன்**.—இது வெளியின் (ஆகாயம்) கூறு. வெளி எங்கும் நிறைந்திருப்பது போல இது உடல் முற்றும் பரவியிருக்கும். இருப்பிடம் தமாகம் (இருதயம்). இதன் தொழில் நடத்தல், உடல் உறுப்புகளை அசைத்தல், கண் இமைத்தல், விழித்தல் முதலியனவாம்.

2. **பிராணன்**.—இது வளியின் கூறு வளியைப் போலத் தமாகத் தினின்று மூக்குவரை அலைந்து நிற்கும். இது உயிருடன் கலந்து தலையை இடமாகப்பெற்று மார்பு, கழுத்து இவ்விடங்களில் வாழ்வதுமன்றி, மனம், புத்தி, உள்ளம், ஐம்பொறி இவைகளைத் தன் வயப்படுத்திக் காரியமிழ்தல், இருமல், தும்மல், ஏப்பம் விடல், மூச்சு விடல், மூச்சு வாங்கல், உண்ணும் உணவை உட்செலுத்த லாகிய தொழில்களைப் புரியும்.

3. **அபானன்**.—இது, தேயுவின் கூறு. எருவாயினின்று (குதம்) அடி வயிறு, இடுப்பின் பூட்டு, நீர்ப்பை, ஆண், பெண் குறிகள், தொடை ஆகிய இவ்விடங்களில் வாழ்ந்து வெண்ணீர் (விந்து), நாதம், மலம், சிறுநீர், கரு, இவற்றை வெளிப்படுத்தும்.

**4. சமானன்.**—இது, அப்புவின் கூறு. உடலின் நடுவான பக்குவாசயமே இடமாகப்பெற்று, வயிறு முற்றிலும் வாழ்ந்து, உண்ட உணவு, நீர்ப் பொருள் இவற்றைச் செரிப்பித்தற்குரிய தீயை விருத்தி செய்து, சாரத்தையும் திப்பியையும் வெவ்வேறாகப் பிரித்து; சாரத்தை உடலில் எல்லாப்பாகங்களுக்கும் பகிர்ந்து கொடுத்து வளர்க்கும்.

**5. உதானன்.**—இது, மண்ணின் (பிருதிவி) கூறு. மார்பை இடமாகக் கொண்டு கொப்பூழ், கழுத்து, மூக்கு இம்மூவிடங் களிலும் வாழ்ந்து பேச்சுக்கு முதற் காரணமாகயிருப்பது மன்றி; முயற்சி, மனோதிடம், உடல் நிறம், உடல் ஒளி, நினைப்பு ஆகிய இவற்றையும் உண்டாக்கும்.

**(b) அழல் (தீ, அனல், பித்தம்) :**

**(1) தீயின் வடிவத் தன்மை :**

வெப்பம்.

கூர்மை.

அது சேரும்பொருள் வேற்றுமையால் இளகல், நீராகல், கட்டல் முதலியன. அதாவது உப்பு வெய்யிலிலிட்டால் கட்டலும்; வெல்லம் வெய்யிலிலிட்டால் இளகலும்; நெய்யை வெய்யிலில் வைத்தால் நீராகலும் போலும்.

நெய்ப்பு.

நெகிழ்ச்சி.

இயக்கம் ஆகிய இவைகள் அழல் வடிவத் தன்மைகளாம். இயக்கம் என்பது: ஒருவர் இயக்க இயங்குந்தன்மையால், இயங்கும் பொருள், இயங்கப்படும்பொருள் என்னும் இரு பொருள்களுள் இயக்கமும் ஒன்றாகலின், இதுவும் அழலின் வடிவத்தன்மைவுடையதாம்.

**(2) அழல் வாழுமிடம்.**—பிங்கலை, பிராணவாயு, நீர்ப்பை, மூலாக்கினி, இருதயம், தலை ஆகிய இவைகள் அழல் வாழுமிடங் களாம்.

அன்றியும், கொப்பூழ், உந்தி, இரைப்பை, வியர்வை, நாளி ஓடுகின்ற நீர், செந்நீர், சாரம், கண், கோல் இவ்விடங் களையும் கூறுவர்.

"பிரிந்திடும்பித்தம் போராஞ்சலத்தினில்" எனத் திருமூலரும்;

"போமென்ற பித்தத்துக்குக்கிருப்பிடமே கேளாய்,
போரான கண்டத்தின் கீழதாகும்."

என யூகி முனிவரும் முறையே சிறுநீரும், கண்டத்தின்கீழிடமும் கூறினர்.

*(3) அழலின் இயற்கைப் பண்பு.*—அழலானது தனது இயற்கை திலையினின்று செரிப்பித்தல், வெம்மை, பார்வை, பரி, நீர் வேட்கை, சுவை, ஒளி, நினைப்பு, அறிவு, வன்மை, மென்மை என்பனவற்றை உண்டாக்கி உடற்குத்துணை புரியும்.

*(4) அழல் உடலில் செய்தொழில்.*—உடலில் வெப்பமுண்டாதல் —செந்நிறம் அல்லது மஞ்சள் நிறம் தோன்றல்—உண்ட உணவுப் பொருள்கள் பக்குவமடையும்போதும், செரிக்கும் சமயத்திலும் வெப்பமுண்டாதல், விவர்த்தல், மயக்கம் ஏற்படல், செந்நீர் தன் அளவில் மிகுதல் அவ்வாறு மிகுந்த செந்நீர் வெளிப்படுதல், தோல், கண், மலம், சிறுநீர் முதலியன மஞ்சள் நிறமடைதல், சீற்றம், வணக்கமின்மை, அசைவின்மை, நினைவு, வெறி, மெலிவு, எரிவு இவையுண்டாதல், எச்சுவையும் கைப்பாகவேனும், புளிப்பாக வேனும் காணுதல் ஆகியவை அழலின் தொழில்களாம்.

*(5) அழலின் பிரிவுகள்.*—அழல் தன் இடம், தொழில் வேற்றுமையால் ஐவகைப்படும். அவை :—

1. பாசகம் (அனற் பித்தம்).
2. இரஞ்சகம்.
3. சாதகம்.
4. ஆலோசகம்.
5. பிராசகம் என்பனவாம்.

*1. பாசகம் (அனற் பித்தம்).*—இது நீயின் பண்புடையது. விரைப்பைக்கும் பக்குவாசயத்திற்கும் இடையிலிருந்து, நீயின் குணத்தை மிகுதியாகப் பெற்று, நீர் வடிவமுள்ள பொருள்களை வறளச் செய்து, உண்ட உணவைப் பொருள்களைச் செரிக்கும்படி செய்யும்.

*2. இரஞ்சகம் (இரஞ்சக பித்தம்).*—இது செந்நீரை மிகுதிப் படுத்தும் பண்புடையது. இரைக் குடலிலிருந்து கொண்டு உணவிலிருந்து பிரிந்துண்டான சாற்றுக்குச் செந்நிறத்தைத் தருகிறது.

**3. சாதகப பித்தம்.**—இது நிறைவேற்றும் பண்புடையது. இது தமாகத்திலிருந்து மணம், புத்தி, பற்று இவற்றைக் கொண்டு விருப்பமான தொழிலைச் செய்து முடிக்கும்.

**4. ஆலோசக பித்தம்.**—இது கண்களுக்குப் பொருள்களைத் தெரிவிக்கும் பண்புடையது. இது கண்களில் வாழ்ந்துகொண்டு எல்லாப்பொருள்களின் வடிவத்தையும் அறிதலாகிய காரியத்தைச் செய்யும்.

**5. பிரகாச பித்தம்.**—இது தோலுக்கு ஒளியைத் தரும் பண்புடையது. தோலில் வாழ்ந்து கொண்டு தோலுக்கு ஒளியைக் கொடுத்து அதை ஒளிரச் செய்யும்.

## (e) ஐயம் (கபம்).

**1. ஐய வடிவத் தன்மை.—**

தண்மை.

நெய்ப்பு.

மந்தம்.

வழுவழுப்பு.

மென்மை.

திண்மை—முதலியவை ஐயத்தின் வடிவத்தன்மைகளாம்.

**2. ஐயம் வாழுமிடம்.**—சமானவாயு—சுழிமுனை—வெந்நீர் (விந்து)—தலை ஆணை (ஆக்கினை)—நாக்கு—உண்ணாக்கு—கொழுப்பு (நிணம்)—மச்சை—குருதி—மூக்கு—மார்பு—தாரம்பு—எலும்பு—மூளை—பெருங்குடல்—கண்—கீல்கள் என்னும் இவ்விடங்கள் ஐயம் வாழ்வதற்குரியவை.

**3. ஐயத்தின் இயற்கைப் பண்பு.**—ஐயம் தன் இயற்கை நிலையில்: நிலைத்தல்—நெய்ப்பு—கீல்களின் அமைப்பின் கட்டுகள்—பொறையுடைமை அதாவது பசி, நீர் வேட்கை, துயரம், கலக்கம், வெப்பம் இவைகளைப் பொறுத்துக்கொள்ளுதல் ஆகிய இவைகள் ஐயத்தின் இயற்கைப் பண்புகளாகும்.

**4. ஐயம் உடலின் செய்தொழில்.**—நெய்ப்பு—வல்மை—சொறிவு (தினவு)—தண்மை—பருத்தல், என்பில் ஏதோ பூசப்பட்டது போன்ற உணர்ச்சி—கீல்கள் தொழில் புரியாதிருத்தல்—உடல் வெளுத்தல்—ஊன்விரைவில் செரியாமை—மிகுதூக்கம்—நாவில்

இனிப்புச்சுவை தோன்றல்—தோல், கண், மலம், சிறுநீர் வெண்ணிறமடைதல்--தொழில் புரிவதில் கூர்மையின்மை ஆகியவை ஐயத்தின் தொழில்களாம்.

5. **ஐயத்தின் பிரிவுகள்.**—ஐயம் ஐவகைப்படும், அவை :—

(1) அவலம்பகம்.

(2) கிலேதம்.

(3) போதகம்.

(4) தற்பகம்.

(5) சந்திகம் என்பனவாம்.

1. **அவலம்பகம்.**—இது காற்றுப்பையாகிய நுரையீரலிலிருந்துகொண்டு தன் இயற்கை வன்மையால் திரிகஸ்தான்த்திற்கும்: உணவின் சத்தால் தமரகத்திற்கும் அடிப்படையாயிருந்து, தன் இயற்கை நெகிழ்ச்சித் தன்மையைக் கொண்டு, மற்ற நான்கு ஐயங்கட்கு பற்றுக்கோடாயிருப்பதால் "அவலம்பகம்" எனப் பெயராம்.

2. **கிலேதம்.**—இது இரைப்பையிலிருந்துகொண்டு, உண்ணப்பட்ட உணவுப் பொருளை நீர் முதலியவைகளை ஈரப்படுத்தி மெத்தெனச் செய்யும் தொழிலைப் புரியும்.

3. **போதகம்.**—இது சுவைப் பொறியாகிய நாவினின்று உண்ணுகிற சுவைகளை அறிவிக்கும் தொழிலைப் புரியும்.

4. **தற்பகம்.**—இது தலையினின்று கண்களுக்கு குளிர்ச்சியைத் தரும்.

5. **சந்திகம்.**—இது பூட்டுகளில் (கீல்களில்) நின்று இயற்கையாய் எல்லாக் கீல்களையும் ஒன்றோடொன்று பொருத்தித் தளரச் செய்து கொண்டிருக்கும்.

## (d) இரு குற்றக் கலப்பு.

இரண்டிரண்டு குற்றங்கள் ஒன்று கூடி தத்தம் இயற்கையளவில் மிகுதிபட்டிருக்கை. இதன் விவரங்கள் யாவும் பின்னால் "தொந்த நாடியில்" கூறப்படும்.

**இரு குற்றக்கலப்பு மூவகையாகவும், ஆறு பிரிவுகளாகவும் வகுத்துக் கூறுவர்.**

1. மூவகையாவன :—**(i)** வளி தீ (வாத பித்தம்) **(ii)** வளி ஐயம் (வாத கபம்) **(iii)** தீ ஐயம் (பித்த கபம்) என்பன.

2. ஆறு பிரிவுளாவன:—(i) வளி அழல், (ii) வளி ஐயம், (iii) அழல் வளி, (iv) அழல ஐயம், (v) ஐயவளி, (vi) ஐ ழல் எ ..பன வாம,

குறிப்பு :—இரு குற்றக் கலப்பில், (தொந்த ) ஒரு குற்றங் களின் இயற்கையளவில் "மிகுதியை" கணக்கிடவேஓமேயொழிய "குறைவைக்" கணக்கிடல் பொருத்தமன்று.

## (e) முக்குற்றம்.

வளி, அழல், ஐயம் மூன்றும் தத்தம் அளவில் மிகுந்தேனும் குறைந்தேனும் ஒன்று கூடி நிற்பது "முக்குற்றம்" எனப்படும். இதனைத் "திரிதோடம்" அல்லது "சன்னிவாதம்" எனவும் கூறுவதுமுண்டு. "ஆகிய நாடி மூன்றும் படபடென்றோடிற் சன்னி" என்பதினாலும்;

"ஆகிய நாடி மூன்றுமமர்ந்திடிற் சன்னியாமே."
என்பதினால் அறிக!

**வளி, அழல், ஐயம் இவற்றின் தனித்தனி இருப்பிடம் இயற்கைத் தொழில் முதலியன (சதக நாடி).**

(வேறு.)

**(1) வாதத்தின் இருப்பிடம், தொழில் முதலியன:**

"நெஞ்சிற்றிட்டவாதம பானத்தை பற்றி
நிறைந்திடையைச் சேர்ந்துநதிக்குக் கீழே நின்று
குளிர்ந்திட்ட மூலத்தூடெழுந்து காம
கொடியிடையைப் பற்றியெழுங்குணத்தைப்பாரே".

"குணமான வெலும்பு மேற்றொக்கை நாடி,
குழாமாகு மெழுபத்கிராயிரத்தைச் சேர்ந்து,
நிணமான பொருந்திடமும் ரோமக்காலும்,
நிறைவாங்கி வாங்கிஷிமெல்லாம் பறந்து,
மணமானவிந்து விழுமலநீர் பெய்ய
வழிகாட்டிக்கால் நாட்டி
வாதமெங்குங்கலந்ததானே".

வாதமானது அபானவாயுவைச் சேர்ந்து, இடுப்பினிடமாக (உந்தியின கீழ்) கீழிறங்கி, மூலாதாரத்தில் காமக்கொடி, இடைக் கலையைப் பற்றி அங்கே ஓடுக்கமுற்று, பின்னும் வியாபித்து என்புக்கு மேலே எழுபத்தீராயிரம் (72,000) நாடி நரம்புரத்தக் குழாய்களின் வழியாய் உரோமத்துவாரங்கள் தோறும் புகுந்து மாமிசத்தில் படர்ந்து, வித்து, நீர், மலம், வியர்வை, கரு முதலிய வற்றைக் கழியச்செய்யும் (வெளியேற்றும்). காற்றாகிய வாதம் எங்கும் வியாபித்துக்கலந்து நிற்குமென்றறிக!

**(2) பித்தத்தின் இருப்பிடம், தொழில் முதலியன:**

"தானான பித்தம்பிங்கலையைப்பற்றிச்
சாய்வான பிராணவாயுவு தன்னைச்சேர்ந்து
ஊனான நீர்ப்பையில் அணுகி மூலத்
துதித்தெழுந்தவக்கினியை உறவு செய்து
மானேகேளிருதயத்திலிருப்புமாகி
மயலாகி நினைவாகி மயக்கமாகி
கானான சிரந்தனிலே இரக்கமாகிக்
கொண்டு நின்ற பித்தநிலை கூறினோமே."

என்பதிற்கிணங்க;

பித்தமானது பிங்கலையைப் பற்றிப் பிராணவாயுவைச் சேர்ந்து கண்டத்தினிடமாக நின்று இரைப்பை, நீர்ப்பை முதலியவற்றின் தொழிலை நடத்தும் பொருட்டு சீவாக்கினி (உயிரக்கினி)-யை எழுப்பி இருதயத்தின் தொழிலை நடத்தும் என அறிக!

**(3) ஐயத்தின் இருப்பிடம், தொழில் முதலியன:**

"கூறினோம் சிலேற்பனமது சமானவாயு
கொழுகியடா சுழிமுனையைப் பற்றி விந்தில்
சீறியே சிரசிலாக்கினையைச் சேர்ந்து,
சிங்குவை யண்ணாக்கு நிணமச்சை ரத்தம்
மீறியே நிறங்கோணம் நரம்பெலும்பில்
மேவியதோர்மூளைபெருங்குடலிற் கண்ணில்
தேறியதோர் பொருந்திடங்களெல்லாஞ்
சேர்ந்து சிலேட்டுமமது வீற்றிருந்திடங்கண்டாயே."

என்பதிற்கிணங்க;

ஐயமானது சமான வாயுவைச் சேர்ந்து, சுழிமுனையைப்பற்றி, விந்தில் இருப்பிடமாகக் கொண்டு உச்சி வரையோடி சிரசில்

ஆக்கினையைச் சேர்ந்தது சிங்நுவை, அண்ணாக்கு, நிணம், மச்சை, ரத்தம், தோல், மூக்கு, நரம்பு, எலும்பு, மூளை, பெருங்குடல் கணகள், கில்கள் முதலிய இடங்களில் பரவி நிற்கும்.

**(f) முக்குற்றங்கள் — உடற்றாதுக்கள் ஏழு — இவற்றின் சேர்க்கையால் உண்டாகும் வேற்றுமை :**

வளி, அழல், ஐயம் மூன்றும் தம்முள் ஏதேனும் ஒன்று அல்லது பல, தன்னிலை, தன்னிலை விருத்தி, வேற்று நிலைவிருத்தி என்னும் இவற்றை அடைவதால், இவை பிருந்தேனும், குறைந்தேனும் நாடி நடை ஏற்படும்போது ஏழு உடற்றாதுக்களின் எண்ணற்ற வேற்றுமைகளுண்டாகும். இவ்வேழு உடற்றாதுக்களிலுமுண்டாகும் வேற்றுமைகளை அறிந்தால் முக்குற்றங்களின் வேற்றுமைகளையும் அறிய முடியும்.

**தன்னிலை.**

தன்னிலையாவது முக்குற்றங்களும் தத்தம் இடங்களில் இயற்கையாக நிலைப்படுவதையாகும்.

**தன்னிலை வளர்ச்சி.**

முக்குற்றங்களும் தத்தம் இடங்களில் வளர்ச்சியடைவதே தன்னிலை வளர்ச்சியாம்.

**வேற்றுநிலை வளர்ச்சி.**—வளர்ச்சியடைந்த முக்குற்றங்கள் தம்தம் இடம் விட்டு மீறி வேற்றிடங்களிற் பரவுமாயின் அது வேற்று நிலை விருத்தி எனப்படும் ;

**1. தன்னிலை வளர்ச்சியின் இலக்கணம்.**—தன்னிலை வளர்ச்சிக்குக்காரணமான குணமுள்ள பொருள்களில் வெறுப்பும், எதிரிடைக் குணமுள்ள பொருள்களில் விருப்பும் உண்டாவதே முக்குற்றங்கள் தன்னிலை விருத்தி (வளர்ச்சி)-யின் இலக்கணமாகும்.

**2. வேற்று நிலை வளர்ச்சியின் இலக்கணம்.**—கேடடைந்த குற்றம் அல்லது தொந்தங்களின் குறி குணங்கள் யாவும் காணப்படுவதாலும், ஏழு உடற்றாதுக்களாகிய உடற்கட்டு பிணிபட்டிருத்தலாலும் அறியலாம்.

3. முக்குற்றங்களின் தன்னிலைப் பற்றிய இலக்கணம் முன்னமேயே தெரிந்திருக்கிறோம்.

**வளி—அழல்—ஐயம் மூன்றும் தன்னிலை, தன்னிலை வளர்ச்சி, வேற்று நிலை வளர்ச்சியடையும் காலம் என்ன?**

1. **வளி**: தன்னிலை வளர்ச்சி.—முதுவேனிற்பருவம்.

வேற்று நிலை வளர்ச்சி.—கார்காலம். தன்னிலையடைதல்.—கூதிர்க்காலம்.

**N.B.**— முதுவேனிற் பருவத்தில் கால இயல்பால் செடிகளும் உடல்களும் வறட்சியடைவதுண்டு. அப்பண்பையுடைய வளியும் பன்பு வேற்றுமை காரணமாய் வேற்றுநிலை வளர்ச்சியடைய வேண்டியிருக்க அது தன் இயற்கை வெப்பத்தால் தன்னிலை வளர்ச்சியையே அடைகின்றது.

**2. அழல்.**

தன்னிலை வளர்ச்சி.—கார்காலம். வேற்றுநிலை வளர்ச்சி.—கூதிர்காலம். தன்னிலையடைதல்.—முன்பனிக்காலம்.

**N.B.**— கார்கால இயல்பால் நீரும் செடிகளும் புளிப்புத் தன்மையையடைவதால், அப்பண்பையுடைய பித்தம் வேற்றுமை நிலை வளர்ச்சியடைய வேண்டியிருக்க அது தனது தட்ப இயல்பால் தன்னிலை வளர்ச்சியையேயடையும்.

**3. ஐயம்.**

தன்னிலை வளர்ச்சி.—பின்பனிக்காலம்.

வேற்றுநிலை வளர்ச்சி.—இளவேனிர்க்காலம்.

தன்னிலையடைதல்.—முதுவேனிற்காலம்.

**N.B.**— பின்பனிக்கால இயல்பால் நீரும் செடிகளும், உடலும் நெய்ப்புப்பண்புடையன. அப்பண்பைப்பெற்ற ஐயமும், வேற்று நிலை வளர்ச்சியடைய வேண்டியிருக்க அது தன் தட்ப இயல்பால் தன்னிலை வளர்ச்சியையே யடையும் என அறிக!

**முக்குற்றங்கள் கால இயல்பைக் கடந்து நிற்கும் வேளை:**

மேற்கூறிய வளி, அழல், ஐயம், என்னும் மூன்று குற்றங்களும் காலஇயல்பால் தன்னிலை, தன்னிலை வளர்ச்சி, வேற்று நிலை வளர்ச்சி அடையக் கூடியனவாயிருப்பினும், அவை உணவு முதலிய காரணங்களால் அக்காலங்களில் அங்ஙனம் அடையாமல் வேற்றுமைப்படவுங்கூடும்.

*வளி, அழல், ஐயம் ஆகிய மூன்றும் வேற்றுநிலை வளர்ச்சியி னின்றும் தன்னிலைப்படும் இலக்கணம்.*

வளி, அழல், ஐயம், மூன்றும் வேற்றுநிலை வளர்ச்சி யடைந்தால், நீர்ப்பெருக்கு எங்ஙனம் விரைவாய்ப்பரவுமோ, அங்ஙனமே உடலில் விரைவாய்ப்பரவும். அப்பெருக்கு எப்படிச் சிறிது சிறிதாய் வற்றுமோ அதுபோலவே வேற்றுநிலை வளர்ச்சி யடைந்து உடல் முற்றும் பாவிய குற்றங்களும் சிறிது சிறிதாகவே தன்னிலைப்படும்.

*வளி—அழல்—ஐயம் ஆகிய முக்குற்றங்களே எல்லாப் பிணி களுக்குங் காரணமெனல் :*

எங்ஙனம் பலவகை வடிவ வேற்றுமையாய் அமைந்த மூலப் பிரகிருதி திரிபாயுள்ள உலகம் மூக்குணங்களை விட்டுத் தனித்து நிற்க இயலாதோ, எங்ஙனம் சிவபரம்பொருளின் முத்தொழில் களான ஆக்கல், காத்தல், அழித்தலாகிய மூச்சக்திகளும் சிவனை விட்டுப் பிரிந்திருக்க இயலாவோ, அங்ஙனமே பிணிகள் பலவும், ஏழு உடற்றாதுக்களினது வேற்றுமையையே காரணமாய்க் கொண்டு கிளைக்குமென்றாலும், உடலுக்குயிராய் நின்றியங்கும் சக்தியாகிய உயிர்த்தாதுவின் மூப்பிரிவும், மூக்குணங்களுமாகிய, வளி, அழல், ஐயம் என்னும் மூன்று குற்றங்களினுடைய இயற்கை, செயற்கைக் காரணங்களினின்றும், விலகியிருக்க முடியாது. உணவு அல்லது செயல்களாலான மிகுதி அல்லது குறைவின் காரணமாகப் பிணிகள் ஏற்படுவதாக வைத்துக்கொண்டாலும், அவைகள் முக்குற்றங்களைக் கேடடையச் செய்து அதன் பயனாய் உடற்றாதுக்களையும் வருத்தும் என அறிக!

(g) *யாக்கையின் இயற்கை இலக்கணம்*

உடலின் உணவாதி செயல்களால் மூக்குற்றங்களுள் எது மிகுதிப்பட்டுக் கரு உற்பத்தியில் சுக்கில சுரோணிதம் கலக் கின்றதோ, அக்குற்றமே முதற் காரணமாயிருந்து யாக்கையை அமைக்கும். அமைக்கப்பட்ட உடல் குற்றம் மிகுதியின் பெயரால் வழங்கும். எங்ஙனமெனில் வளிமிகுதியாலுண்டான உடலை வளி உடல் அல்லது வாத தேகம் என்றும், அழல் மிகுதியாலுண்டான யாக்கையை அழல் உடல் அல்லது பித்த தேகம் என்றும்; ஐய மிகுதியாலுண்டான உடலை ஐயவுடல் அல்லது கப தேகம் எனவும் வழங்கப்படும.

*(1) வளி உடலினன் (வாத தேகியின்) இலக்கணம்:* வளி உடலினனுக்கு வளிக்குற்றம் (தீயும், ஐயமும் இவ்விரண்டைக் காட்டிலும்) சற்று மிகுந்திருக்கும்.

மெலித்து உயர்ந்த உடல், பருத்த அடித் தொடைகள், நடத்தால் கீல்கள் நெட்டையிடுதல், தடித்த இமைகள், வட்டமாக விகாரித்து சாக்கண்போன்று சிறிது வெண்மை கலந்த கண்கள், குளிர்ந்த பார்வை, கறுமை வெண்மை கலந்து ஒளிரும் உடல் நிறம், கறுத்து முனை பிளந்த தலைமயிர், தெளிவான வார்த்தை, சில வேளை மளக்கலக்கத்துடன் தடுமாற்றமான வார்த்தை, தித்திப்பு, புளிப்பு, உப்பு, சூடுள்ள பொருள்களில் சிறிது விரும்பம், குளிர்ச்சியான பொருள்களில் வெறுப்பு. மிக்க உண்டி, ஆனாலும் அற்ப வன்மை, பெண்களிடம் அற்ப விருப்பம், வீரிய வளர்ச்சிக் குறைவு, புத்திரப் பெருக்கம், ஆண்மை, உணர்ச்சி, அறிவு இவை நிலை மீன்மை, விளையாட்டு, இசை, அவதிப்புச் சிரிப்பு, தொக்கணம், வேட்டையாடல் இவைகளில் விருப்பு. தகுதியின்மை, பகைமை, ஈகையின்மை, பொன்னாலான பொருள்களைக் கவர்தலில் நினைப்பு முதலிய குணங்களும்; புகழின்மையும்; அரைக் கண் மூடிய சிறு தூக்கமும்; அத்தூக்கத்தில் விண், மலை, காடு இவைகளில் தான் நடப்பது போலக் கனவும்; புலமைத்திறமையு முண்டாயிருக்கும்.

*(2) அழல் உடலினன் (பித்த தேகியின்) இலக்கணம்:* அழல் உடலினனுக்கு தீக்குற்றம் சற்றுமிகுந்திருக்கும். எலும்புகளிலும் கீல்களிலும் ஊன் குறைந்திருக்கும். எப்போது வெப்பம், வியர்வை, அற்ப துர்நாற்றம், தோல் சுருங்கித் திரைதல் முதலானவை பொருந்திய மேனி, மஞ்சளும், சிவப்புங்கலந்து ஒளிரும் நிறம். முகம், உள்ளங்கை, உள்ளங்கால் இவை சிவந்தும், மஞ்சள் நிறம் பெற்றும் இருக்கும். மெல்லிய இமைகள் உடையனவாய்.

வெயில், சீற்றம், பசி, கட்குடி இவற்றால் விரைவில் சிவக்கின்ற கண்கள், தலைமுடி சிறிது மஞ்சள் நிறம், உடலில் குறைந்த உரோமமும் நரையும், முகப்பருவுடன் கறுத்த மச்சங்கள், இளிப்பு, துவர்ப்பு, கைப்பு, குளிர்ச்சி, இவை பொருந்திய பொருள்களில் விருப்பு, அற்பவுண்டி, பசி, நீர்வேட்கை, சீற்றம், கூடு.

அச்சம் ஆகிய இவற்றைப் பொறுக்க முடியாத தன்மை.

தறுமணமாலை, சந்தனப் பூச்சு, பனி இவற்றில் விருப்பம். அற்ப சுக்கிலம், அற்ப காமம், பெண்களிடம் அற்ப விருப்பம்;

வீரம், பகை, துணிவு, மரியாதை, வல்லமை, தெளிந்த அறிவு, மிக்க வார்த்தை, ஒழுக்கம், நற் செய்கை, அடுத்தவரிடத்தில் அன்பு ஆகிய இப்பண்புகளும்;

உறக்கத்தில் பூக்கள் நிறைந்த கொங்குமரம், சரக்கொன்றை மரம், முருக்கமரம், மின்னல், சூரியன், வாயு, கொள்ளி நாற்புறமும் பற்றி எரிகின்ற வெளிச்சம்; இத்தகையவற்றைக் காண்கிற கனவும்; நல்ல இன்பமும், கல்வி, மேன்மையுமுண்டாயிருக்கும். இவன் முக்கால் வன்மையும் 65 வயதும் உடையவனாயிருப்பான்.

மேலும் கூறுவதாவது:—பித்த இயல்புடையவன், மிகுந்த பசி, பித்த உடல், நெறி மயக்கம், உடல் வெச்சனல், தாகம் பொறுக்காமை, மஞ்சள் அல்லது செந்நிறம்; கைகால்களில் செந்நிறம், தயிரியம், தரும குணம், கல்வி, மிக்க அறிவாற்றல், எதிலும் வெறுப்பு, பலபடப் பேசாமை, உடம்பில் மயிர்க்குறைவு, போகத்தில் பிரியம் ஆகிய இவைகளை உடையவனாவானென வேறு சில மேற்கோள்களாற் கூறப்பட்டுள்ளன.

(3) ஐய உடலினன் (கப தேகியின்) இலக்கணம்:

ஐய உடலினனுக்கு ஐயக்குற்றம் சற்று மிகுந்திருக்கும்;

நரம்புகள், எலும்புகள், மேல்கள் இவற்றைத் தசைகள் நிறைந்து மறைக்க, மேடுபள்ளமில்லாமல் மென்மையுடன் அழகிய உடல்.

பரந்த நெற்றியும், அகன்று உயர்ந்த மார்பும்; முழங்கால் அளவு நீண்ட கையும்; குறைவில்லாத் உறுப்புகள்; அகன்று, நீண்டு, கடைசி வந்த கரு விழியும், வெள்விழியும் ஒளியுடையனவனவாய்த் தெவிவாய்த் தூரப் பார்வையைத் தோற்றுவிப்பனவாய்ச் சுற்றிலும் கறுத்து நெருங்கிய இமை மயிருடன் எண்ணெய் தடவினது போல் மினுமினுத்து தோன்றும் அழகிய கண்களும்; மஞ்சட்சோளம், அறுகு முனை, பாணத்து ஒளி, கத்தி ஒளி, கோரோசனை, தாமரைப் பூ, பொன் முதலியவற்றை ஒத்த உடல் நிறமும்; ஐயப்பசையால் கறுத்து நெருங்கி முளைத்த உளையும், கொழுத்த யானை நடையும்; முகில், கடல்,

அரிமா, மூழவு இவைகளின் ஒலி போன்ற குரல் ஒலியும்; கைப்பு, துவர்ப்பு, காரப்புக் கூடிய வெப்பமான அற்பவுண்டி; அற்பவுண்டி எனினும் மிக்க வன்மையும்; பசி, நீர் வேட்கை, துயரம், அச்சம், சூடு ஆகிய இவைகளுக்கு பின்வாங்காத தன்மையும்; சாரம், வெண்ணீர், வழிவழித் தொடர்பு (சந்தானம்), ஏவலாளர், ஓழுக்கம், அறிவு ஆகிய இவைகளின் பெருக்கம்; சிறு குழவியானால், மிக்க அழுகை, சீற்றம், கடுஞ் சொல், கலக்கம் பொருந்திய அறிவு, திடம், மிக்க நீர்வேட்கை என்னும் இவையின்மையும்; சத்துவகுணம், நினைவு, வன்மை, மேலான அறிவு, மூன் ஆராய்ச்சி, பெரியோர்களிடம் அன்பு, வணக்கம், நீங்காத நட்பு, நம்பிக்கை, உண்மை, உறுதி, பொறுமை, நாணம், பொருத்தமான விடை, அறத்தில் விருப்பம், நன்றி மறவாமை, ஈகை, மிருந்த ஈகை, பிறர் நன்மதிப்பு, நற்செய்கை ஆகிய இப்பண்புகளும்; நல்ல தாக்கமும்—அத்தாக்கத்தில் பறவைகள் உள்ள தாமரைக்குளம், குளிர்ச்சி பொருந்திய மூகில், இவற்றைக் காண்கிற கனவும்; புலமைத் திறமையுடன் மிருந்த செல்வமும் உண்டாயிருக்கும்.

இந்த ஐயம் என்பதைத் திங்களின் இயற்கைத் தன்மை என்றே சொல்லுவர்.

(4) மேற்கூறிய வளி உடல், அழல் உடல், ஐயவுடல் இம் மூன்று உடலினர்க்கும் பொதுவாகத் "தூய உடலினர்" எனவும்; இம் மூன்றின் கலப்பினையுடைய தேகிக்கு "கலப்பு உடலினர்" என்றும் பெயராகும்.

இக்கலப்பு உடலினர்க்கு மேற்கூறிய பண்புகளை எல்லாம், குற்றங்களின் கலப்புக்குத் தக்கவாறு மாறுபட்டிருக்கும்.

**(5) ஐய உடலினன் பண்புகள்.**

(வேறு.)

ஐயவுடம்பின் இயற்கைப் பண்புடையவன், பெரியோர்கள் கதையைக் கேட்டல், வஞ்சம், சாகசகம், சூத்தம், இவற்றைப் பெற்றிருத்தல்; மணப்பூச்சில் விருப்பம்; வன்மையான உடல்; பெருமை; மிக்கச் செல்வம்; இந்திரியக் குறைவு; பிள்ளைப் பேற்றுக் குறைவு; பூணிலின்பம்; இனிப்புக் கைப்புகளில் விருப்பம்; வெய்யில் பொறாமை; உடல் நாற்றம்; வேர்வை; கண்ட நீர் உண்ணல்; இருமல்; கபம் அதிகமாகவும், வாதமும் பித்தமும் குறைவாகவுமிருத்தல்; சூடைபோன்ற நெற்றி;

நீலமயிர்; வன்மையுள்ள தோள்; இரண்டுபேச்சுப் பேசாமை; சங்கீதம் கேட்பதில் விருப்பம்; சுத்த உணவு மிகுதியாக உண்ணல்; சுகதேகம்; தாமரைமலர், போன்ற அழகு என்னும் இவற்றை இயற்கையாக உடையனாவான் எனவும் கூறியுள்ளார்.

(பக்கம் 60—65 சி. ம. சுருக்கம்)

## வலி, அழல், ஐயம், கலப்புக் குற்றம் முதலிய தேகக் குறிகள்.

(வேறு.)

[ப. சி. நாடி நூல், பக்கம் 74—76]

(சதக நாடி.)

(1) வாத தேகியின் இலக்கணம்.

(வாத தேகக் குறி.)

"கண்டாயோ வாதத்தாலெ மூந்த தேகம்,
கட்டிமையாய்த் தடித்திருக்குங் கருமை செம்மை
வண்டாருங் குழலாள் மேலற்பவாசை
வாய்வுமிகும் போக முறுமனஞ்சிக் கென்றல்
உண்டாலே அற்பவுண்டி எரிப்போடுண்ணு
மூறுதாது குறைச்ச லுடம்புகளை வசிதம்
பண்டோர்கள் நூல்முறையை நடக்கல் போதம்
பாங்கான அறிவிசைத்தல் திண்ணந்தானே"

என்பதினால், வாதத்தாலெடுத்த தேகம், கடினம், தடிப்பு, கருமை அல்லது செம்மை, தேகத்தில் வாய்வுப் பெருக்கம், சிற்றின்பக் காதல், தாது நட்டம், தேகவுளைச்சல், அன்னஞ் செல்லாமை முதலிய குணங்களாம்.

(2) வாத பித்த தேகக் குறி:

"தானமுற வாதத்தில் பித்தஞ் சேர்ந்தால்
சரீரகுறி மெலிவு நிறங் கருப்பேயாகும்
ஈனமுறப் பொய்யுடனே மெய்யுஞ் சொல்லும்
எரிப்புடனே தவர்ப்பதிக மூண்ண வேண்டும்
கானமருங் குழலார்மேல் மிகுந்த வாசை
கடிந்த மொழி மூன் கோபங் காட்டு மூள்ளம்
ஆனவுடல் நெடிதலது குறித்தலாகும்
அறிவு குறைந்திருக்குமென வறியலாமே."

என்பதினால், வாதபித்தத்தாலெடுத்த தேகம், மெலிவு, கறுமை நிறம், பொய்யும் மெய்யும் கலந்து பேசல், மைதுன அபேட்சை, அறிவின்மை, மூன்கோபம், கடினமொழி ஆகிய இக்குணங்களோடு உண்ணும் பண்டங்களில் காரம், துவர்ப்பு சுவையில் அதிக இச்சையுமுண்டாம்.

*(3) வாத ஐய தேகக் குறி :*

"திண்ணமுறுவாதத்தில் சேத்துமஞ் சேர்ந்த
தேக குணமதகரிபோல் நடக்குங் காயம்,
வண்ணமுறத்தூலமதாமுயர்ந்தமேனி,
வார்த்தை இடிபோலாகும் யோகமுண்டாம்,
நிண்ணயமாங்கலைக்ஞான மறிவுமுண்டாம்
நேரிழைமேல் மிகவாசை நிறமேசெம்மை
உண்ணுவது புளிப்பெரிப்பு அதிகம் வேண்டும்
உயர்ந்ததொரு காரஞ்சாரஞ் செய்வான்றானே"

என்பதினால், வாத ஐயத்தாலெடுத்த தேகம் தடிப்பு மதங் கொண்ட யானைபோல் அசைந்து நடத்தல், செம்மை நிறம், மாதர்மேல் இச்சை, ஸ்தூல சரீரம், உரத்த சூரல், சகல கலைக் ஞானங்களையும் அறியத்தக்க வல்லமை, யோகப் பயிற்சி மூதலிய குணங்களோடு உண்ணும் உணவுகளில் புளிப்பு, காரம் இவை போன்ற சுவைகளில் அதிக இச்சையுமுண்டாம்.

*(4) பித்த தேகக் குறி :*

"அறிவான பித்தத்தாலெடுத்த தேகம்
யறமெலிவு நிறம் வெள்ளையிலையோடு,
பிரியாத சுகலீலையற்பவுண்டி
பெரும்புளிப்புணவு கொள்ளல் பெரியோர்தம்மை
குறியாத வாசாரம் பண்ணல்புத்தி
சூழும்பிப்பின் தேறல் கலைக்ஞானபோதம்;
நெறியாகக் கற்றறிவு சொல்லல் வீரம்
நிலைப்புமதியில க்கமதி யறவுமாமே"—என்பதினால்,

பித்தத்தாலெடுத்த தேகம் நிறம் வெண்மை, அளவு கடந்த தேக வறட்சி; அற்ப வண்டி, சொற்ப நித்திரை, பெரியோர்களிடத்தில் மதிப்பு, மனக்குறப்பம், பல கலைகளையும் சரியாகக் கற்றல், தைரியம் ஆகிய குணங்களோடு உண்ணும் உணவில் புளிப்புச் சுவையில் அதிகப் பிரியமுண்டு என்பதாம்.

*(5) பித்த வாத தேகக் குறி :*

*"உறவான பித்தத்தில் வாதஞ்சேர்ந்து*
*வுறத்தெழுந்த தேகமது பொது நிறமேயாகும்.*

*நிறைவான குணங்கிருபை காட்சைவாமம்*
*நேர்மை சுகியன்குவிகை யோகமாய்கை.*

*மறவான கனவு நற்கந்தம் வேண்டும்*
*வாய்ஞானமதிகப்புத்தி குயில்போல் வார்த்தை*

*அறவானவுடல் வறட்சி பசி பொறுமையாகும்*
*சூடெரிப்புப் புளிப் பதிகமுண்ணுஞ் சொல்லை"*

என்பதினால், பித்தவாதத்தாலெடுத்த தேகம், செம்மை அல்லது வெண்மை நிறம்; சுகந்தவாசனைகளில் அதிகப்பிரியம்; அறிவுடைமை; குயிலின் குரலையொத்த தொனி, சினுக்கி ருமல், தேக வறட்சி முதலிய குணங்களோடு காரம், புளிப்பு சுவைகளில் ஆவலதிகம் என்பனவாம்.

*(6) பித்த ஐய தேகக் குறி :*

*"சொல்லுகின்ற பித்தமதிற் சேத்துமஞ்சேர்ந்த*
*சொரூபமது செண்பகப்பூ நிறமே மேனி,*

*வல்லியர்மேல் மிக வாசைபுளிப்பினிப்புண்ணும்*
*வாக்கியங்குரலோசை மனத்திடமேயாகும்*

*நல்லறிவு கற்கைமுதியோரைப் பேணும்*
*நடுநிலையே சொல்லு மதியோகமுண்டாம்*

*பல்லுயிர்க்குந்தானிரங்கிக்கிருபை செய்யும்*
*பாங்கான தருமமிகுந்திருக்குந்தானே"*

என்பதினால், பித்த ஐயத்தாலெடுத்த தேகம் செண்பகப்பூ நிறம், அளவு கடந்த மோகம், இனிமையான குரலோசை, கற்றோரை ஆதரிக்கும் நல்லெண்ணம், நடுநிலையான யோகாப்பியாசம், பல்லுயிரை ரெட்சிக்கும் தருமசிந்தை முதலிய குணங்களோடு புளிப்பு, இனிப்பு சுவையுள்ள பண்டங்களில் ஆசைமிகவுண்டு என்பதுவாம்.

*(7) ஐய தேகக் குறி :*

"தானான சிலேற்பனத்தாலெழுந்த தேகம்
கனத்திருக்கு மனம் பெலைக்குஞ்சரீரம் வேர்க்கும்,
மானார்மேல் மயலாகுஞ் சிவந்தமேனி
வானிடிபோற் குரலாகும் வணக்கமாகும்
ஆனாலோ பொய்யதை மெய்யாயுரைக்கும்
அறப்புசிக்குந் தித் திப்போடுண்ணுங்கைகால்,
ஊனாகக்கசிந்திருக்குங்காசங்கச்சல்,
உண்டாகுமென்று மூன்னோருரைத்தவாறே"

என்பதினால், ஐயத்தாலெடுத்த தேகம் சிவப்பு, கொழுமை, வியர்த்தல், மோகம், குமறலான குரலோசை, அடக்கம், ஒடுக்கம், பொய்யை மெய் போல் பேசல் ஆகிய குணங்களோடு இனிப்பு சுவையில் அதிகப் பிரியமுண்டு என்பதாம்.

*(8) ஐய பித்த தேகக் குறி :*

"வாறானசிலேற்பனத்தில் பித்தஞ் சேர்ந்தால்,
வளர்கோரோசனை நிறமாமேனி தானும்,
வீறான புளிப்பினிப்பு மெத்த வேண்டும்,
மெய்ரோமம் சிவப்பு வெடிக்குரலேயாகும்
பேறான சத்தியமொழிபொய் சொல்லாமை,
பிற்பலனாம் யோகமுண்டாம் பேதையோடு
கூறாத மையல் விளைபண்புகழ்ச்சி வீரம்.
கொண்டுமனத்திடந்தனைக்குறிக்கலாமே".

என்பதினால், ஐய பித்தத்தாலெடுத்த தேகம் சிவப்பு அல்லது பசுமை நிறம், செந்நிறமான தேகரோமங்கள், வெடிப்பான குரலோசை, சத்திய நெறி, பெண் வசியம், புகழ்ச்சி, தைரியம் முதலிய குணங்களோடு இனிப்பு, புளிப்பு சுவைகளில் அதிகப் பிரியமுண்டு என்பதுவாம்.

*(9) ஐய வாத தேகக் குறி :*

"குறிக்கின்றசிலேற்பனத்தில் வாதம் பற்றில்
கூண்டெழுந்த தேகமது தூல காயம்
பிறிக்கின்றவுடல் கறுமை செம்மையாகும்
பெருகு சூடவுண்டி புளிப்பெரிப்போடுண்ணும்
மறிக்கின்ற பெண்ணாசை வீரம் யோகம்
வாழ்க்கைக்கவிதான வித்தை மறைநூலாய்தல்
நெறிகொண்ட பெரியோரைப் போற்றலன்பு
நேசமுறுஞ் சிலேற்பனத்தில் வாதமாமே"

என்பதினால், ஐயவாதத்தாலெடுத்த தேகம் தடிப்பு, கறுமை அல்லது செம்மை நிறம், போகம் பிரியம், யோகசாதனையைக் கற்றறிதல், பல கலைகளை ஆராய்தல், பெரியோர் தம்மை ஆதரித்தல், தைரியம் முதலிய குணங்களோடு புளிப்பு, காரம் முதலிய சுவைகளில் இச்சை அதிகம் உண்டு என்பதாம்.

**வளி, அழல், ஐயமென்னும் முக் குற்றங்களின் மிகுதி—குறைவு இவற்றின் பண்புகள் கூறுவாம்.**

*(சி.ம. சுருக்கம் பக்கம் 66—67)*

**(1) வளி மிகு குணம்.**

1. உடல் இளைத்துக் கறுத்தல்.
2. சூடான பொருள்களில் விருப்பம்.
3. உடல் நடுக்கல்.
4. வயிறு உப்பல்.
5. மலக்கட்டு.
6. வன்மை குறைதல்.
7. தூக்கம் கெடல்.
8. ஐம்பொறிகளின்வன்மை கெடல்.
9. வாய்ப்பிதற்றல்.
10. தலை சுழற்றல்.
11. ஊக்கம் இன்மை.

**வளி குறை குணம்.**

1. உடல் நேர்தல்.
2. தாழ்ந்த சுரல்.
3. தொழில் குன்றல்.
4. அறிவுமங்கல்.
5. மூர்ச்சையுண்டாதல்.
6. ஐயவளர்ச்சியில் காணும் பிணிகளுண்டாதல்.

### (2) அழல் மிகு குணம்.

1. கண், மலம், சிறுநீர், தோல் இவைகள் மஞ்சள் நிறமடைதல்
2. பசி, நீர் வேட்கைமிகுதிப்படல்.
3. உடல் முற்றும் எரிச்சலுண்டாதல்.
4. குறைந்த தூக்கம்.

### அழல் குறை குணம்.

1. மந்தாக்கினி.
2. குளிர்ச்சி.
3. நிறக்குறைவு.
4. இயற்கை ஐயவளர்ச்சிக்குக் கேடு உண்டாதல்.

### (3) ஐயம் மிகு குணம்.

1. அக்கினி மந்தப்படல்.
2. வாய்நீர் ஊறல்.
3. ஊக்கம் குறைதல்.
4. உடல் கனமாகத் தோன்றுவதுடன் வெண்ணிறத்தையும் குளிர்ச்சியையும் அடையும்.
5. உடல் முற்றும் உள்ள கட்டுகள் தளரல்.
6. இரைப்பு, உப்பிசம், இருமல், மிகு தூக்கம் இவை உண்டாதல்.

### ஐயம் குறை குணம்.

1. தலை சுழற்றல்.
2. கீல்களில் பசை முற்றும் நீங்கி அவை தளர்ச்சியடைதல். இதனால் கீல் எலும்புகள் நன்றாக வெளியில் தோன்றுதல்.
3. ஐயம் வாழுமிடங்களில் ஐயம் குறைந்தும், நுரை ஈரலைப் பற்றிய ஐயம் கரைந்தும், நுரை ஈரல்யில்லாதது போலத் தோன்றியும், மயிர்க் கால்களினின்றும் வியர்வை பெருகியும் காட்டல்.
4. தமாகத்தில் படபடத்த ஒலி, ஆகியவைகளாம்.

### (4) உடற்றாதுக்கள் ஏழு (அல்லது உடற்கட்டு).

ஏழு உடற்றாதுக்களும் தத்தம் இயற்கைப்பண்போடு இருந்தாலன்றி அவைகள் செய்யும் தொழில் நன்கு நடைபெறா. ஆகவே அவைகளின் இயற்கைப்பண்புகள் முதலில் அறிதல் வேண்டும்.

## ஏழு உடற்றாதுக்களின் இயற்கைப் பண்பு கூறுகிறார்.

*(சி. ம. சுருக்கம் பக்கம் 66-69).*

1. சாரம்.—உடலையும், மனதையும் ஊக்கமூறச் செய்வது.

2. செந்நீர்.—அறிவு, வன்மை, ஒளி, செருக்கு, ஒலி இவைகளை நிலைக்கச்செய்வது.

3. ஊன்.—உடலின் உருவத்தை அதன் தொழிற்கிணங்க அமைத்தலும், என்பை வளர்த்தலுமாம்.

4. கொழுப்பு.—ஒவ்வோர் உறுப்பும் தத்தம் செயலை இயற்றும் பொழுது கடினமின்றி இயங்க அவற்றிற்கு நெய்ப்புப்பசை ஊட்டி உதவிபுரிவது.

5. எலும்பு.—உடலை ஒழுங்குபட நிறுத்தி வைத்தல்;

மேன்மையான உறுப்புகளைப்பாதுகாத்தல்: உடல் அசைவிற்கு அடிப்படையாயிருத்தல் ஆகிய செயல்களைச் செய்வதாம்.

6. மூளை.—என்புக்குள் நிறைந்து அவைகளுக்கு வன்மையும், மென்மையும் தருவது.

7. வெண்ணீர்.—தன்னையொத்த உருவப் பெருக்கிற்கு இடமாகிய கருத் தோற்றத்திற்கு மூதலாய் நிற்பது.

இவ்வேழு உடற்றாதுக்களும் தத்தம் அளவிலின்றும் மிகுந்தாலும், குறைந்தாலும், அதனதன் இயற்கைத் தொழில் வேற்றுமைப்படும். ஆகவே அவ்வேற்றுமைகளைக் கீழே காணவும்:—

1. சாரம் மிகு குணம்.—ஐய வளர்ச்சியால் உடலிற் காணும் கெட்டபண்புகள் எல்லாம் தோற்றுவிக்கும். அவை பசித்தீ குறைதல், மூதலானவை. (*Vide* ஐயம் மிகு குணம்.)

### சாரம் குறை குணம்.

1. தோல் சுரசுரப்படைதல்.
2. மெய்வருத்தம்.
3. இளைப்பு.
4. வாட்டம்.
5. பேரொலி கேட்கப் பொறாமை.

### 2. செந்நீர்—மிகு குணம்.

1. புருவம், உச்சி, கழுத்து, மார்பு, தொப்பூழ், உதடு, அண்டம், முழங்கால், கணுக்கால், இடுப்பு, காற்பெருவிரல், சுட்டு விரல், தோலின் உட்புறம், வெளிப்புறம் கொப்புளங்களுண்டாதல்.

2. இடப்பாட்டீரல் வீக்கம்.

3. கட்டிகள்.

4. சூலை.

5. பசியின்மை (அக்கினிமந்தம்).

6. குருதிவளி (இரத்தவாதம்).

7. குருத்தித்தீ (இரத்த பித்தம்).

8. குருதிச்சிறுநீர் (இரத்த மூத்திரம்).

9. மிகச்சிவந்த கண்.

10. சிவந்த செந்நீர்த்தடிப்பு.

11. சிவந்த நிறத்தோல்,

12. பெருநோய்.

13. காமாலை.

14. பயித்தியம் ஆகிய இவை உண்டாகும்.

### செந்நீர்—குறை குணம்.

புளிப்புங் குளிர்ச்சியுமுள்ள பொருள்களில் விருப்பு, நரம்புத் தளர்ச்சி, வறட்சி; உடலில் நிறம் குறைதல் ஆகிய இவை தோன்றும்.

### 3. ஊன் மிகு குணம்.

1. கண்டமாலை, கிரந்தி இவையுண்டாதல்.

2. கன்னம், வயிறு, தொடை, ஆண்குறி இவ்விடங்களில் கண்டு கண்டாகக் கட்டுதல்.

3. அத்துடன் கழுத்து முதலிய இடங்களில் ஊன் அதிகரித்தலு முண்டாகும்.

### ஊன் குறை குணம்.

1. ஐம்பொறிகட்குச் சோர்வு.

2. கீல்களில் நோயுண்டாதல்.

3. தாடையும், பிட்டமும், ஆண் குறியும், தொடையும் சுருங்கல் ஆகிய இவையுண்டாகும்.

4. கொழுப்பு—மிகு குணம்.—ஊண் மிகுதியால் நேரிடும் பிணிகளும்; களைப்பும், அற்ப உழைப்பினும் பெரு மூச்சு, பிட்டம், குறிகள், மார்பு, வயிறு, தொடை இவைகளில் தொங்கும், ஊனும் பெருகும்.

கொழுப்பு—குறை குணம்.—இடுப்பு வன்மையின்றி வலியுறுத்தலும் இடப்பாட்டரல் வளர்ச்சியும்; உடலிளைத்தலு மூண்டாகும்.

5. என்பு—மிகு குணம்.—என்புகளும் பற்களும் மிகுதிப்படும்.

என்பு—குறைகுணம்.—என்பு சந்துகளில் நோவும் பற்கள் கழலலும், நகங்களும் மயிர்களும் வெடித்தலும், உதிர்த்தலும் பெறும்.

6. மூளை—மிகு குணம்.—உடல் பாரித்தல், கண்கனத்தல், கை கால்களிலுள்ள விரற்கணுக்களின் அடி பருத்தல், சிறுநீர் குறைந்து போதல், அரிதில் தீரும் புண் இவையுண்டாகும்.

மூளை—குறை குணம்.—என்புகளில் தொளைவிழுதலும், திகைத்தலும்; கண்களில் இருள் கம்மலும் உண்டாகும்.

7. வெண்ணீர்—மிகு குணம்.—பெண்களிடத்தில் காதல் மிகுதலும், கல்லடைப்பு நோயுண்டாகுதலுமாம்.

வெண்ணீர்—குறை குணம்.—புணர்ச்சியில் வெண்ணீரும் சுரோணிதமும் பொறுத்துப் பொறுத்துத் துளித் துளியாய் விழுதல் அல்லது செந்நீர் வெளிப்படல், விதையில் குத்தலுடன் வலி; குறியில் அழற்சி மிகுதிப்பட்டு அது கறுத்தல் ஆகிய இவையுண்டாகும்.

(i) மலம்.

மலம் என்பது உடலினின்றும் கழிகின்ற பொருள், சிறு நீறும், வியர்வையும் இதிலடங்கும்.

) மலத்தின் இயற்கைப் பண்பு.—மலத்திற்கு உடலை நிலை நிறுத்துதலும், நீருக்கு உடலின் கசிவை வெளிப்படுத்தலும், வியர்வைக்குத் தோலின் கசிவை வெளிப்படுத்தலும் மயிர்களை நிலைபெறச் செய்தலுமாம்.

1. மலம்—மிகு குணம்.—வயிறுப்பல், இரைதல், கனத்தல் இவையுண்டாம்.

மலம்—குறை குணம்.—வயிற்றில் காற்று நிரம்பி இரைச்ச லிட்டுக் கொண்டு குடலைச் சுற்றிப் பரவி மூறுக்கிப்பிடிப்பது மன்றி சிலவேளைகளில் தமரகத்தினும் பக்கங்களிலும் நோயை யுண்டாக்கி, மேல் நோக்கி வருத்தத்தை உண்டாக்கும்.

2. சிறுநீர்—மிகு குணம்.—சிறுநீர் நாளத்தில் ஊசியாற் குத்துவது போன்ற துன்பத்தையும், சிறுநீரைக் கழித்த பின்பு மேலும் நீரைக் கழிக்கவேண்டுமென்கிற எண்ணத்தையு முண்டாக்கும்.

சிறுநீர்—குறை குணம்.—மிக்க முயற்சியுடன் நீர் துளித்துளி யாகவும், நிறமாறியும், சிலவேளைகளில் இரத்த நிறமாகவும் வெளிப்படும்.

3. வியர்வை—மிகு குணம்.—வியர்வை மிகுதியால் தினாற்றம், தினவு இவையுண்டாகும். உடல் சிதளிக்கும், களைப்பு முண்டாகும்.

வியர்வை—குறை குணம்.—மயிர் உதிர்தல்; உதிராதமயிர் விறைத்து நிற்றல்; தோல் வெடித்தல் ஆகிய இவற்றை யுண்டாக்கும்.

குறிப்பு.—இம்மலங்களைத் தவிர கண், மூக்கு, காது இவ்விடங் களிலும் மலம் கசியும்; இவ்வுறுப்புகளில் மலம் மிகுதிப்படுமாயின் அவ்வுறுப்புக் கனத்தலையும்; குறைவுபடின் இயற்கைக்கு மாறான பண்பையும் பெறும்.

மலங்கள் மிகினும் குறையினும் கெடுதியே விளையுமென்றாலும், உடலில் எப்போதும் சிறிதளவு மலமிருத்தல் அதன் இயற்கைப் பண்பாதலால் மலமிருதியினாலுண்டான கெடுதியைவிட மலக் குறைவினால் மிக்க கெடுதி நேரிடும்.

## (J) உடல் வன்மை.

**(i)** உடல்வன்மை மூத்திறப்படும். அவை: (1) இயற்கை வன்மை; (2) கால வன்மை; (3) செயற்கை வன்மை என்பனவாம்.

1. இயற்கை வன்மை உடலின் இயல்.—இது, சத்துவ, ரஜோ, தமோ குணங்களினின்றும் இயற்கையாகவே யுண்டாவதாம்.

2. காலவன்மை உடலின் இயல்.—இது ஆண்டாலும் (வயதாலும்) இளவேனில் முதலிய பெரும் பொழுதாலும் உண்டாவதாம்.

3. செயற்கை வன்மை உடலின் இயல்.—இது முக்குணங்களின் சேர்க்கையால் இயற்கையாக உண்டான உடலை அந்தந்த குணத் தன்மைக்கு உரிய உணவு, செயல்களாலும், உடற்கட்டுகளின் வன்மை கெடாவண்ணம் நிலை நிறுத்தக்கூடிய மருந்துகளாலும் காத்துக்கொள்வதால் உண்டாவதாம்.

**(ii) சத்துவம் முதலிய முப் பண்புகளையுடைய உடலினர் இயல்.**

1. சத்துவப் பண்புடைய உடலினர் இயல்.—அகத்தூய்மை; தெய்வக் கொள்கை; அறஞ்செய விருப்பம்; அறிவுடைமை; ஞானம்; அருள்; தவம்; பொறை; வாய்மை; மேன்மை; பேசாமை (மௌனம்); ஐம்பொறியடக்கம் என்னும் இயல் புடையதாம்.

2. இரசோகுண உடலினர் இயல்.—மிகுபேச்சு; மானம், சீற்றம்; வீண்பெருமை; பகைமை; மனவுக்கம்; மெய்யுணர்வு; வீரம்; தவம்; அறம்; கொடை; கல்வி; கேள்வி ஆகிய இவை இரசோகுண உடலினர் இயல்புகளாம்.

3. தமோ குண உடலினர் இயல்.—அச்சம்; அறிவின்மை; நெடுந்துயில்; பேருண்டி; சோம்பல்; நீதி வழு; ஒழுக்கவழு; வஞ்சகம்; மறதி; பொய்; சீற்றம்; காமம்; கொலை என்னும் இவை தமோகுண உடலினர் இயல்புகளாம்.

**(k) பதினான்கு வேகங்கள் (அல்லது விரைவுகள்).**

**(i)** பதினான்கு வேகங்களாவன:

1. அபானவாயு.
2. தும்மல்.
3. சிறுநீர்.
4. மலம்.
5. கொட்டாவி.
6. பசி.

7. நீர்வேட்கை (தாகம்).

8. இருமல்.

9. இளைப்பு.

10. தூக்கம்.

11. வாந்தி.

12. கண் நீர்.

13. சுக்கிலம்.

14. மூச்சு அல்லது உயிர்ப்பு என்பனவாம்.

இப்பதினான்கில் மலம், அபானவாயு என்னும் கீழ்வாய்வளி, தும்மல், சிறுநீர் என்னும் இவை நாள் தவறாமல் வெளிப்படுவன வென்பதும், இவற்றிற்கு அளவும் கூறப்பட்டிருக்கின்றது.

மலமும், சிறுநீரும் முறையே ஒரு நாளைக்கு மூன்று முறையும், ஆறு முறையும் கழிக்கவேண்டுமெனக் கூறுவர்.

"மும்மலம் அறுநீர்" என்பதாலறியவும்.

**(ii) இப்பதினான்கு வேகங்களைத் தடுத்தலாலுண்டாகும் நோய்களைக் கவனிப்போம்.**

1. வாதம் (கீழ்நோக்குங்கால்) :

இது "அபானவாயு" என்னும் "கீழ் வாய்வளி" அல்லது "கீழ் நோக்குங்கால்" அல்லது "கீழ்க்கால்" எனப்படும். இதனைத் தடுத்தலாலுண்டாகும் நோய்களாவன :—

மார்பு நோய், வாயு குன்மம், குடல் வாதம், உடம்பு முழுமையும் குத்தல், குடைச்சல்; வல்லை, மலசலத் தடை, பரித்தீமந்தம், ஆகிய இவை மிகுதியுண்டாகும்.

**N.B.—(a) வாதகுன்மத் தன்மைகளாவன :**

ஈரல், மார்பு இவற்றிலுள்ள ஈரம் வற்றுதல், வயிற்றில் எரிச்சல், பக்கங்களில் உளைதல்; தலை கனத்தல், நோதல், தலை மயக்கங்கொண்டு புளிப்பாய் வாந்தியாதல்; குடலில் வலியுண்டாதலாகிய குறிகுணங்களாம்.

**(b) குடல் வாதத் தன்மைகளாவன :**

ஒரு பக்கம் விதை உள்ளுக்கு இழுத்துக்கொள்ளல், அண்டத்தில் வலி சேர்ந்து தருத்தி போல் உப்புதல்; பிறகு அவ்வாயு வயிற்றி லேறுவதால் விதை காணப்படல்; இதனால் மிக வருத்தம் உண்டாதல் என்பதையாம்.

(c) வல்லை வாதத் தன்மைகளாவன :

வாள் போல் வயிற்றில் குறுக்கே வளர்ந்து சதைப்பற்றுள்ளதா யிருக்கும். நீளமாய்க் கோல் போலும் நேராய்க் கிடப்பதுமுண்டு. அன்னஞ் செல்லாது ; சொரித்திடாது ; துன்பத்தை விளைவிக்கும்.

2. தும்பல்:

தும்மலைத் தடுத்தலாலுண்டாகும் நோய்களாவன :

மூக்கிலிருக்கும் கிருகரனான வாயுவின் தொழிலாகிய தும்மலைத் தடுத்தால், அவ்வாயு வெம்மையூற்றை அடைந்து, இலேசாகி மேலுக்குக் கிளம்பி தலை முழுமையும் நோதல், இயல்பாயுள்ள இருவகையான பத்து இந்திரியங்களும் தெரித்து விழுவது போலத் தோன்றல் ; முகம் இழுத்தல் ; இடுப்பு வாயு முதலிய நோய்கள் உண்டாகும். (பத்து இந்திரியங்கள் என்பது ஞானேந்திரியமும்,, கருமேந்திரியமும் சேர்ந்து என அறிக.)

N.B.— "இடுப்பு வலி" ("இடுப்பு வாயு") அல்லது "அரை மேல் வலி" யின் தன்மைகளாவன :

வயிற்றுப் பொறுமல் ; விந்து நீர்த்தல் ; இடுப்பு, கைகள், கால்கள், பூட்டுகள் இவை கடுத்தல் ; சீதத்துடன் மலம் (பவ்வீ) கொஞ்சங்கொஞ்சமாய்க் கழிதல் ; சிறுநீர்க் கடுப்புடன் கொஞ்சங் கொஞ்சமாயிறங்கல்—முதலியவைகளாம்.

3. சிறுநீர்.

சிறுநீரை அடக்கினால்.—நீரடைப்பு, நீரிறங்கும் புழை புண்ணாதல் ; கீல்கள் நோதல் ; ஆண்குறி சோர்வுடன் குத்தல் ; கீழ்வாய்வலி வயிற்றினில் சேர்தல் ஆகியவையுண்டாகும். நீர்த் துவாரத்தில் சீ, குருதி முதலியவை சேர்ந்து, இறைச்சியைப் பொய்யாவி அவித்தது போன்ற புண் உண்டாதல் என்பவையாம். அன்றியும் ஆண் குறியின் துவாரம் நெருப்பு பட்டாற்போல் எரியும்.

4. மலம் (பவ்வீ).

மலமதை அடக்கினால்.—மலத்தைக் கீழ்த்தள்ளும் அபான வாயுவின் செயலை எதிர்க்கும்படியாகும். ஆதலால் அவ்வபானம் நெருங்கி அடக்கப் பெற்ற மலத்தைத் தள்ளும். அவ்வலியின் தன்மையூற்றால் சலதோடம், முழங்காலின் கீழ்த் தண்மையான

நோய் ஆகிய இவற்றையுண்டாக்கும். அவ்வளி வெம்மையுற்றால் மேலுக்குக் கிளம்பித் தலையிற் சேர்ந்து, தலை வலித்தல், ஒலியுடன் கீழ்க்கால் பறிதல், உடல் வன்மைக்குறைவு ஆகிய இவற்றுடன் வேறு பல நோய்களும் தோன்றி வருத்தும்.

வாயுவால் மலச்சிக்கல், தலைவலி, கண்ணீர் சொரிதல், ஆகிய இவைகளும் உண்டாகும்.

### 5. கொட்டாவி.

**கொட்டாவியை அடக்கினால்.**—முகம் வதங்கல்; இளைப்புக் குறி காணப்படல்; அளவோடு உண்ணினும் செரியாமை; நீர் நோய்; வெள்ளை நோய்; என்னும் இவற்றால் அறிவு மயங்கல் வயிற்றில் நோய் வருதல் முதலியவையுண்டாகும்.

### 6. பசி:

### 7. நீர் வேட்கை (தாகம்).

**பசியையும் நீர் வேட்கையையும் அடக்கினால்.**—உடலும், உடலில் அமைந்திருக்கிற அங்கங்களாகிய கருவிகளும், தத்தம் தொழில்களைச் சரிவரச் செய்யமாட்டா. அதனால் சூலை, பிரமை, உடல் இளைப்பு, முகவாட்டம், சந்துக்களிலெல்லாம் நோவு ஆகிய இவையுண்டாவனவாம்.

**N.B.**— இளைப்பு உண்டாகும் என்பது தக்க உணவு கிடைக்காவிடில், பல நாட்களாகப் பசியையடக்கி வருந்துவதால், மூலத்திற் சூடு கொண்டு, அச்சூட்டால் ஏழு உடற்றாதுக்களும் வற்றி, அதனால் வரக்கூடிய "க்ஷயம்" என்னும் இளைப்பு நோய் உண்டாகும் என்பதாம்.

### 8. காசம் (இருமல்).

### 9. இளைப்பு (ஆயாசம்).

**காசம் என்னும் ஈளை இருமலையடக்கினால்.**—மிக்க இருமல் நோயுண்டாய் வருத்தும். மூச்சு விடும்போது அம்மூச்சில் கெட்ட மணம் வீசும். அன்றியும் மார்பின் உட்கருவியாகிய இருதய நோயும், உண்டாகும்.

**"இளைப்பு" என்னும் "ஆயாசத்தை" அடக்கினால்.**—மிக்க வெப்பத்தாலுண்டாகும் நீர்பேகம் பெருகும். குன்ம நோயுண்டாகும். திடீரென்று அறிவைக் கெடுத்துத் தன்னையறியாதபடி செய்கிற மூர்ச்சை நோயும், குளிருமுண்டாகும்.

"காசம்" என்னும் சொல் களைப்பையும், இருமலையு மூணர்த்தும் சொல்லாம். இங்கு அது இருமலையுணர்த்திற்று என அறிக.

### 10. நித்திரை (தூக்கம்).

**தூக்கத்தை அடக்கினால்.**—நாள்தோறும் தலைக்கனம்; கண்கள் சிவத்தல், செவிடு, அரைப் பேச்சு முதலியவை யுண்டாகும்.

### 11. வாந்தி.

**வாந்தியை அடக்கினால்.**—புழுக்கடியால் உண்டாகக்கூடிய தடிப்புக் குட்டம் போன்ற தடிப்புகள்; நமை; பாண்டு; கண் நோய்கள்; பித்த விடபாகங்கள்; இரைப்பு; காய்ச்சல்; இருமல் ஆகிய இவையுண்டாகும்.

மேலும்,

"சத்தியால் பித்தத்தாமூம்;
பேதியால் வாதந்தாமூம்;
நசியம் அஞ்சனத்தால் ஐயந்தாமூம்."

என்பதிற்கிணங்க, மூக்குற்றங்கள் கேடடைந்தகாலத்தில் அவற்றைத் தக்கவாறு குறைக்க முன்னோர்கள் கூறியுள்ள பரிகாரத்தில் பித்தத்தைக் குறைக்க வழியாயிருக்கிற **வாந்தியை அடக்கினால்**, மேலும், மேலும் பித்தம் மிகுந்து அதன் செயலால் வரக்கூடிய தடிப்புக்குட்டம் போன்ற நோய்கள் உண்டாகு மென்றறிக!

புழுக்கடியானும் தடிப்புக் குட்டம் உண்டாகும். இன்னின்ன இடத்தில் கடித்தால் இன்னின்ன நோயுண்டாகுமெனவும் கூறி யுள்ளார். காலில் கடித்தால் திமிருண்டாம். கையில் கடித்தால் விரல் சூன்றும். உடம்பின் மேல் கடித்தால் தடிப்புக் காணும். கழுத்தில் கடித்தால் பொரிந்து காணும்.

### 12. விழி நீர்.

**கண்ணிலிருந்து வரும் நீரையடக்கினால்:**—தமரகவாயு, பீனிசங்கள், கண் நோய், தலையில் புண் ஆகிய இவைகளும், அப்புண்ணில் வளி கூடினால் சூன்ம நோயுமுண்டாகும் என்பர்.

### 13. சுக்கிலம்.

**விந்துவை அடக்கினால்.**—சுரம், நீர்க்கட்டு, கைகால்கள், கில்கள் இவற்றில் நோயுண்டாதல்; விந்து கசிந்து நீள்சீலை நனைதல், மார்படைப்பு, மார்பு துடிப்பு; வெள்ளை என்னும் இவையுண்டாகும்.

**N.B.— அபானவாயுவின் தொழில்:** மலம், நீர், விந்து ஆகிய வற்றைக் கீழ்த்தள்ளுவதென்பதை—

"நெழித்திட்டவாதம்-பாளத்தைப் பற்றி
மணமான விந்து விழுமல நீர் பெய்ய வழிகாட்டி."

என்பதாலறிக!

### 14. சுவாசம்.

**மூச்சை அடக்கினால்.**—இருமல், வயிற்றுப் பொறுமல், சுவை தெரியாமை, குலை நோய், காய்ச்சல், வெட்டை ஆகிய இவை யுண்டாகும்.

### (i) உடற்றீ விளக்கம்.

**உடற்றீ நான்கு வகைப்படும்:** அவை: (1) "சமானவாயு" தன் இயற்கையிடத்திலிருப்பின் "சமாக்கினி" என்றும்; (2) சமான வாயு இடந்தப்பின் "விஷமாக்கினி" என்றும்; (3) பித்தத்தைச் சூழ்ந்தால் "தீக்ஷணாக்கினி" என்றும்; (4) கபஞ்சேர்ந்தால்— "மந்தாக்கினி" என்றும் வழங்கப்படும்.

### 1. சமாக்கினி.

ஒருவன் வேண்டும் அளவு உட்கொள்ளுகின்ற உணவு, நீர்களை எல்லாம் முறைப்படி, கால அளவுக்கு மாறுபடாமல் நன்றாகச் சீரணிக்கச் செய்யும் தீயே "சமாக்கினி" என அறியவும்.

### 2. விஷமாக்கினி.

இஃது உண்ணப்பட்டவைகளை உடனே சீரணிப்பிக்காமல், நெடுநேரம் கழித்துச் சரிப்பிக்கும். அப்படிச் செரிப்பித்தாலும் அவைகள் விஷமச் சீரணமேயாகும்.

### 3. தீக்ஷணாக்கினி.

வெந்ததும், வேகாததுமான உணவுப் பொருள்களைப் புசித் தாலும் அதனை இரசத்தோடும் (சாரம்) கூடவே செரிப்பிக்கும்.

### 4. மந்தாக்கினி.

விருப்பத்தோடு உண்ட பாகமான உணவுப் பொருள்கள் உடனே செரிப்பிக்காமல் வாயுவால் வயிற்றிரைச்சல், குடலிரைச்சல், வயிற்றுப்பிசம், உடல் கனத்தல் என்னும் இவைகளை உண்டாக்கி நெடு நோத்திற்குப் பிறகு செரிப்பிக்கும்.

*(சி. ம. சுருக்கம்—பக்கம் 71-83).*

## ஐவகை நிலங்களும் பிணிகளும்.

### 1. குறிஞ்சி நிலம்.

இதில் வசிப்பவர்களுக்கு இரத்தத்தை உறிஞ்சுகின்ற சுரமும்; வயிற்றில் ஆமைக்கட்டியும் உண்டாகும். சிலேட்டுமமும் தங்கும்.

### 2. பாலை நிலம்.

இதில் வசிப்பவர்கட்கு வாதம், பித்தம், கபம் இவற்றால் விளைகின்ற பிணிகள் யாவும் தோன்றும்.

### 3. முல்லை நிலம்.

இதில் வசிப்பவர்கட்கு பித்தநோயுண்டாகும். அன்றியும் வல்லை நோய், வாத நோய்களும் உண்டாகும்.

### 4. நெய்தல் நிலம்.

இதில் வசிப்பவர்கட்கு வாத நோய்களுண்டாகும். மெலிந்த உடலைப் பெருக்கச் செய்யும். ஈரலைப் பெருக்கும். குடல் வாயுவையுண்டாக்கும்.

### 5. மருத நிலம்.

இதில் வசிப்பவர்கட்கு வாத, பித்த, கப தோடங்கள் யாவும் குணமாகும். வசிப்பதற்கேற்ற நிலம் இதுவே யாகும்.

## (ii)ஐந்திணைக் குணத்தின் தொகுப்பு.

குறிஞ்சியில் சிலேத்துமநோயும்;

முல்லையில் பித்த நோயும்;

நெய்தலில் வாத நோயும் உண்டாகும்;

மருத நிலத்தில் எக்காலத்திலும் எந்தவித நோய்களும் உண்டாகாது.


பாலை நிலத்தில் நீடித்து வாழ்வது யோகிகளாகயிருப்பினும் அரிதாகும்.

மருத நிலவாசமே நல்லதெனக் கொள்ளவும்.

(சி. ம. சுருக்கம்—பக்கம் 101-102).

## மருந்துண்ணும் காலம்.

(வெண்பா—கண்ணுசாமியம்).



1. "காரி புதன் திங்கள் கருத மருந்தாகாது, பாரினில் சுங்கன் பரிகாரம்—நேரன்று தேரகுருசேயுந்தான் தீதில்லை என்றும் பேரருக்கன்நன்றெனவே பேசு".

(வேறு வயித்தியக் குறள்).

2. "நோய்க்கவுழ்தமுண்ணில் ரவிகுருகுசனும், வாய்க்கும்படி ஏற்றும் நாள்".

3. "நைவினையோருக்கு நாளென்பதில்லை"

என்பதினால் (1) சனி, புதன், திங்கள் இம்மூன்று தினங்களிலும் மருந்துண்ணவாரம்பிக்கலாகாதென்றும்;

(2) வெள்ளிக்கிழமை மருந்து சாப்பிட எண்ணின் பிணி மிகுதிப்படும் எனவும்;

(3) வியாழன், செவ்வாய் இக்கிழமைகளில் மருந்துண்ண வாரம்பிப்பது நன்றே எனவும்;

(4) ஞாயிற்றுக்கிழமை எல்லாவற்றிற்கும் மேலான சிறந்த தினமென்றும் அறிகிறோம்.

நிற்க, ஞாயிறு, வியாழன், செவ்வாய் இம்மூன்று தினங்களும் மருந்து சாப்பிட ஆரம்பிக்கப் பொருத்தமான நாள்களாயினும், நோயினனின் நிலைமையறிந்து, அவசியத்தையும் அவசரத்தையும் கணக்கிட்டு நாள் பொருத்தம் பார்க்கத் தேவையில்லை என்பதையும் தெரியலானோம்.

**பிணியாளன் தலைவைத்துப் படுக்கவேண்டிய திசை இன்னதெனல்.**

*(வெண்பா—கண்ணுசாமியம்.)*

*"தொடுத்த பிணியாளர் தொல்லைவினை போக்க*
*படுக்கத் திசைகாணின் பாரில் வடக்காகா*
*உத்தமங்கிழக்காம் உயிர் வளரத் தெற்காகும்.*
*மத்திபமேற்காமதி"*

என்பதினால்; பிணியால் வருத்தமுற்றவர்கள் தம் நோயைப் போக்கத் தலைவைத்துப் படுக்கவேண்டிய திசைகளில் வடக்கு ஆகாது; நோய் அதிகரித்து உயிர் பிரியுமெனவும்; கிழக்கு உத்தம மானதென்றும்; தெற்கு ஆயுள் விருத்தி செய்யுமென்றும்; மேற்கு மத்திமமென்றும் அறிகிறோம்.

## அத்தியாயம் XIV

**"எண் வகைத் தேர்வு" அல்லது "பிணியறி முறைமை".**

'பிணியறி முறைமை' என்பது உடலைப் பிணித்தலாய நோயைத் தெரிந்துகொள்ளுகிற ஒழுக்கம் எனப்படும்.

விதியும் ஒழுக்கமும்: இது, 1. பொறியாற்றேர்தல்; 2. புலனாலறிதல்; 3. வினாதல் என்னும் விதிகளையும், அவற்றைத் துணையாகப் பற்றி ஒழுகும் ஒழுக்கங்களைக் குறிக்கும்.

**1. பொறி.**

1. மூக்கு.
2. நா (வாய்).
3. கண்.
4. தோல் (மெய்).
5. செவி என ஐவகைப்படும்.

**2. புலன்.**

1. நாற்றம் (மணம்).
2. சுவை.
3. ஒளி.
4. ஊறு.
5. ஓசை என ஐவகைப்படும்.

### 3. வினா.

வினா என்பது கேட்டறிதல், பொறியாற்றேர்தல், புலனாலறிதல், வினாதல் என்பது பிணியுற்றோனிடத்தும், பிணி தீர்ப்போனிடத்தும் உள்ளபொறி, புலன்கள் பிணிகளைத் தெளிவாயுணர்த்துமாகையால், மருத்துவன் தன்னை நோக்கி வந்த பிணியுற்றவனைப் பற்றி அறிய வேண்டியவற்றை அறிந்தும், தன் பொறி, புலன்களால் பிணியாளனுடைய பொறி, புலன் வழியாய் உணர்வதைக் கேட்டும், அவன் ஒருக்கால் எக்காரணத்தினாலோ தான் கேட்பதைச் சொல்லுவதற்கியலாதவனாயிருப்பின் அவன் சுற்றத்தாரைக் கொண்டு அறியக்கூடியவரை அறிந்தும், பிணியைக் கணித்தலைப் பற்றியே குறிக்கும்.

### 'எண் வகைத் தேர்வுகளாவன'.

மூற்கூறிபடி பிணியை அறியும் வழி, மருத்துவ நூல் வல்லோர்களால் எண் வகையாய் வகுக்கப்பட்டுள்ளது.

1. "நாடிப்பரிசம் நாநிறம் மொழிவிழி
மலம் மூத்திரமிவை மருத்துவராயுதம்"

என்பதினாலும்,

2. "மெய்க்குறி நிறந்தொனி விழிநாவிருமலம் கைக்குறி"

என்னும் தேரையர் வாக்கினாலும் அறிக.

**N.B.**— இதற்குமேல் 'நெய்க்குறி' என்பதும் ஒன்று உண்டு. அதனைப் பின்னால் கூறுவோம்.

### இருமலம்.

மருத்துவன் பிணியாளனது கழிவுப் பொருள்களை ஈ, எறும்பு முதலிய செந்துக்களைக்கொண்டு அறியலாம்.

### விழி.

மருத்துவன், தன் கண்களால் நோயாளியின் பொறிகளாகிய மூக்கு, நா (வாய்), கண், தோல் (மெய்), செவி மற்றும் சில அவயவங்கள் ஆகியவற்றின் இலக்கணங்களையும், கழிவுப் பொருள்களின் தன்மைகளையும் அறிதல் வேண்டும்.

அவற்றின் விளக்கம்.

1. மலம்.—இதன் நிறம், நுரை, இறுகல், இளகல்.

2. நீர்.—இதன் நிறம், எடை, மணம், நுரை, எஞ்சல்.

3. சுக்கிலம்.—இதன் நிறம் இளகலாகிய தன்மை.

4. கண்.—இதில் காணும், நிறம், ஒளி, சாறும்பீளை, வழியும் நீர்.

5. காது.—இதில் கழியும் குறும்பி அழுக்கு, மலினநீர், சீ, இரத்தம்.

6. மூக்கு.—இதில் வெளிப்படும் சளி, குருதி, அழுக்கு, மற்றும் மலினங்கள்.

7. நா (வாய்).—இதில் சுரக்கும் எச்சில், நிறம், வாயின் வழியாய் வெளிப்படும் கோழையின் நிறம், கனம், பேச்சின் தன்மை.

8. மெய்.—இதில் வடியும் வியர்வை, நிறம், தன்மை.

9. மயிர்.—நிறம் வளர்ச்சி வெட்டு, வெடிப்பு, உதிர்ப்பு.

10. நகம்.—நிறம், கீற்று, வெடிப்பு, வளர்ச்சி, வழவழப்பு, மினுமினுப்பு.

11. உதடு.—நிறம், உருவம், வெடிப்பு.

12. நெற்றி.—நிறம், ஒளி, சுருங்கல்.

13. பல்.—நிறம், உடைச்சல், ஒளி படிந்துள்ள மாசு, சொத்தை, தேய்வு முதலியன.

14. புருவம்.—எற்றம், இரக்கம்.

15. அண்ணம்.—நிறம், மற்றைய நிலைமை (கிரந்திப் புண் உண்டாய் அழுகிக் குடைந்து நாசித் துவாரம்வரை தசை எடுபட்டிருத்தல்) ஆகியவையாம்.

மெய்.—(தோல்) (Palpation) மருத்துவன் நாடியைக் குறிக்கும் காதுவின் இயக்க நிலைமையையும், தட்ப வெப்பங் களையும், மற்றுமுள்ள இதர உறுப்புகளின் தன்மையையும் தொட்டேனும், தடவியேனும், ஊன்றியேனும், விரலால் அழுத்தி யேனும், அளந்தேனும் தெரிந்துகொள்ளுதல் வேண்டும்.

செவி.— (Auscultation) மருத்துவன், தன் காதால் சுவாசாசயம், இருதயம் போன்ற உறுப்புகளின் நிலைமையையும் பேச்சின் ஒலிக் குறிப்பையும் உணர்ந்துகொள்ளுதல் வேண்டும்.

## சரிதை.

நோயாளியின் குடும்ப வரலாறு, அவனுடைய வயது, உடல் வன்மை, மனவுறுதி, பண்பு, செரிப்புத் தன்மை, இயற்கை, உணவு, தொழில், வாழுமிடம், அவ்விடத்தின் தன்மை, நோயின் வயது, நோய் தோன்றிய காலம், இடம், நோய் உண்டாவதற்கு முன் நோயாளியின் நிலைமை முதலியவற்றையும் கேட்டுத் தெரிந்து கொள்ளுதல் மருத்துவனது கடமையாகும்.

இவை நிற்க, நோயுற்றோன் பொருள்களின் மணத்தையும், பொருள்களைத் தொட்டும், தடவியும், அழுத்தியும், உணரும் அவனுடைய உணர்ச்சி எந்நிலையிலுள்ளது என்பதையும், தான் கேட்ட ஒலியைப் பிறருக்கு இயற்கையாய்த் தெரிவிக்கின்றானா, அன்றி வேறு வகையில் தெரிவிக்கின்றானாவென்பதையும், அறிந்து கொள்ள வேண்டுவது மருத்துவனுக்கு இன்றியமையாததாகும்.

## மலக்குறி.

மலத்தால் முக்குற்றமறிதல் (வயித்திய சிந்தாமணி) :

1. கருத்த நிறமுள்ளதும், சிக்கலுள்ளதும், வாத நோய்க்குள்ள மலமாம்.

2. சிறுத்தும், வெம்மையாயும், சிவந்தும், மஞ்சள் நிறமாயும் உள்ளவை பித்த நோய்க்குள்ள மலமாம்.

3. சீதமாகவும், வெண்மையாகவும் உள்ளன சீதள நோய்க்குள்ள மலமாம்.

4. எல்லா நிறங்களும் கலந்தன கலப்பு (தொத்த) நோய் மலமாம்.

## மலப் பரிசோதனை (தேரையர்யமகம்.)

1. மலமானது மஞ்சள் நிறமானால் வாதசேட்ப சுரம் அல்லது சுத்த வாத சுரம் என்றும்,

2. மலமானது சங்கினது நிறமானால் பயித்தியம் அல்லது சூன்மம் என்றும்,

3. மலமானது முல்லைப் பூ நிறமானால், செவிப் புண் என்றும்,

4. மலமானது மின்னலைப் போல பளபளப்பாயிருந்தால் நாட்பட்ட கொடிய ரோகம் என்றும்,

5. மலமானது வாளினது உறையைப் போல உள்ளே குழலாக் மேலே புன்மை நிறத்துடனே குழையாகக் கூராகிக் கீழே தொங்கிக்கொண்டு மலம் விழுமேயானால், அது நம்பக் கூடாத தான சேட்ப தொந்தரோகமென்றும், கூறப்பட்டிருக்கின்றன.

**மலக்குறியால் சாதல், சாவாமையதிதல்.**

சாதல் குறி :

மலம் வெள்ளாட்டுப் புழுக்கையைப் பார்க்கிலும் உலர்ந்து கெட்டிப்பட்டு வரண்டிருக்குமானாலும், பிணவெடி நாற்றம் சார்ந்திருந்தாலும், அப்படி மலம் போகும் நோயாளி இறந்து போவான்.

சாவாமை :

1. மலமானது கொஞ்சம் பக்குவமான குழம்பு போன்றும், இலைச் சாறு போன்றும், இருக்குமானால் நன்மை பயப்பதாகும்.

2. கடினமும் தளர்ச்சியுமில்லாத செம்பாகமாயிருக்குமானால் நன்மை பயக்கும். இதுவே திடமாம்.

3. மூன் மலத்தைப் பார்க்கிலும் மிகவும் செம்பையொத்த சிவந்த நிறமாயிருக்குமானால், நல்ல நடித்தரமான மலமென்று அறியவும்.

(—தே- -யமகம்).

**மலத்திலுண்டாகும் சுரக்குறியும் சாக்குறியும் :**

சுரக்குறி.

1. நோயாளியின் மலமானது மேகம்போன்று கறுப்பு நிறமாயிருந்தால், வாயுவாலுண்டான சுரமாம்.

2. மூள் முருக்கம் பூப்போன்று சிவந்த நிறமுள்ளதாயிருந்தால் பித்தத்தாலுண்டான சுரமாம்.

3. வெள்ளை நிறமுள்ள மலமானால், சிதளத்தாலுண்டான சுரமாம்.

4. பசுமஞ்சளையொத்த நிறமுள்ளதாயிருந்தால் வாயுவுடன் கபஞ் சேர்ந்த (வாத கப) சுரமாம்.

5. பாகிரிப் பூவைப் போன்று வெண் சிவப்பு நிறமுள்ளதாயிருந்தால் கபத்துடன் வாயு சேர்ந்த (கப வாத) சுரமாம்.

## சாதல் குறி.

1. மஞ்சாடி மரத்தின் பூவென செம்மஞ்சள் நிறமுள்ளதா யிருந்தால், சாதலையுண்டாக்கும் மூல வாயுவாகும்.

2. மந்தாரை மரத்தின் மலர்போன்று ரோஜாப்பூ நிறமுள்ள தாக யிருந்தால் சாதலையுண்டாக்கும், சன்னிவாத நோயாகும்.

3. தவளை போலக் கறுத்த நிறத்தையும், வறட்சியையும், கடினத்தையுமுடையதாயிருந்தால் அந்நோயாளி இரண்டு திங்களில் இறந்துவிடுவான் எனவும் அறிக.

## மூக்குற்றங்களின் மெய்நிறம்.

வாதரோகி உடல் கறுத்தும்; பித்தரோகியுடல் மஞ்சள் நிறம் அல்லது சிவந்த நிறம் சிலேத்துமரோகியுடல் வெளுத்தும், தொந்த ரோகியுடல் தொந்தத்திற்கேற்ப இரு கலப்பு நிறங்களைக் கொண்டும், சன்னிபாதரோகியுடல் பல நிறங்களையுடையதாயு மிருக்கும்.

## மெய் நிறத்தால் சாதலையறிதல்.

உடலில்,

1. சூரியனைப்போல் நற்சிவப்பும், மினுமினுப்பும் காணில் இரண்டு திங்களிலும்;

2. திங்களைப்போன்ற சிவந்த வெண்ணிறமும் மினுமினுப்புங் காணில் மூன்று திங்களிலும்;

3. செவ்வாயைப் போல செந்நெருப்பு நிறமும் மினுமினுப்புங் காணில் நான்கு திங்களிலும்;

4. வியாழனைப்போல் பொன்னிறமும், மினுமினுப்புங் காணில் ஐந்து திங்களிலும்;

5. வெள்ளியைப் போன்ற வெண்ணிறமும் மினுமினுப்புங் காணில் ஆறு திங்களிலும்;

6. சனியைப் போல் கறு நிறமும் மினுமினுப்புங்காணில் ஏழு திங்களிலும்;

7. கரும்பச்சை (சாமள) நிறமும் மினுமினுப்புங்காணில் எட்டு திங்களிலும் உயிர் நீங்குமெனத் "தேரையர்" யமகத்தில் கூறப்பட்டுள்ளன.

8. உடலில் மேற்கூறிய நிறங்களில்லாது மினுமினுப்பு மட்டிலும் காணுமாகில் அதற்கு மருந்து பயன்படாது என்னும், அஃது அக்கணமே அழியுமென்றும் அதே நூலில் கூறப் பட்டிருக்கின்றது.

**N.B.**— இயற்கனவே இது விவரம் கூறப்பட்டுள்ளது.

**உடலின் தன்மை வெம்மையால் முக்குற்றங்களறிதல்.**

1. வாதத்தால் பீடிக்கப்பட்ட நோயாளியின் உடல் சிறிது வெப்பமாயிருக்கும்.

2. பித்தப்பிணியாளர்க்கு உடல் மிகு வெப்பமாயிருக்கும்.

3. ஐய நோயினர்க்கு உடல் தட்பமாயிருக்கும். அன்றியும் வியர்வை விடுவதுமாயிருக்கும்.

4. கலப்பு நோயாளர்க்கு உடல் க[illegible]ங்கும் குற்றயளவாயிருக்கும்.

**ஊறு.**

பரிசத்தால் சாதலையறிதல்.

உடலில்—

1. முதலைத் தோல், ஆமையோடு, மீன்வாற்புறம், ஆகிய இவற்றைப் போன்ற பரிசமுடைய நோயாளிகளாயின் முறையே 12, 56, 45 நாள்களிலும்;

2. அதிகுளிர்ச்சி, அதி சீதோஷ்ணம், அதி வெப்பம் என்னும் தன்மையுடைய நோயாளிகளாயின் முறையே 12, 56, 45 சாமங் களிலும் மரணமடைவார்கள்.

3. மூக்கியமும் மிருதுவுமான இடங்கள் யானைத் தோல், மரம், கல் ஆகியவற்றின் பரிசமுடைய நோயாளிகளாயின் முறையே 12, 56, 45 நாழிகைகளிலும்.

4. மேற் கூறப்பட்ட அவ்விடங்களே தாமரை முள், உளி, அரம் ஆகியவற்றின் பரிசமுடைய நோயாளிகளாயின் முறையே 12, 56, 45 விநாடிகளிலும் மரணமடைவார்களெனவும் தேரையர்பகம் கூறுகின்றது.

## வியர்வை—ஐவகை

1. மலச்சிக்கல் நோய்.

2. சுரம் விட்ட உடம்பு.

3. வாத நோய்.

4. நிறைந்த சந்தி நோய்.

5. உயிர் நீங்குந்தறுவாய்,

ஆகிய இக்காலங்களில் நோயினர் உடலில் வியர்வைபெருகும்.

மேலும், வியர்க்கு மிடங்களைக் குறிப்பிடுமிடத்து உடம்பில் வாயு நிறைந்தவர்களுக்கும், சுரம் முழுதும் அடித்து விட்ட நோயினர்க்கும் உடம்பு முற்றிலும் வியர்வையுண்டாகும்.

மலச்சிக்கல் நோயினர்க்கு நெற்றியில் வியர்க்கும்.

உடம்பை விட்டு உயிர் நீங்கக்கூடிய நிலையிலிருப்பவர்க்குக் கழுத்தில் வியர்க்கும்.

சந்நி பாத நோயினர்க்குக் கீல்களில் வியர்க்கும். எனவும் கூறப்பட்டுள்ளது.

—(சி.ம. சுருக்கம். பக்கம் 204—205).

N.B.— வாந்தி பேதி நோயிலும் பிசின் போன்ற வியர்வை உடம்பெங்கும் உண்டாவதுண்டு.

### முக நிறமும் முக்குற்றங்களும்.

வாதப்பிணியினர் முகம் கறுத்தும், பித்தப் பிணியினர் முகம் மஞ்சள் நிறம் பெற்றும், சேத்துமப் பிணியினர் முகம் வெளுத்து மிருக்கும்.

அன்றியும் பித்தப் பிணியினர் முகம் தழல் நிறமாகவுமிருக்கும்

(திரட்டு நாடி—செய்யுள் 46-47).

### பல்லின் நிறத்தால் முக்குற்ற மறிதல்.

வாதரோகியின் பற்கள் கருத்திருக்கும். பித்தரோகியின் பற்கள் மஞ்சளித்திருக்கும். சேத்துமரோகியின் பற்கள் வெளுப்பா யிருக்கும். தொந்தரோகியின் பற்கள் கலப்புற்ற குற்றங்களுக்குத் தக்கவாறு கலப்பு நிறமாகயிருக்கும்.

## வாய் நீர்ப்பரீட்சை.

நோயாளியின் வாய் நீரைச் சோதிக்கும் விதம் எவ்வாறெனில்.

வாய் நீர்.

1. கள்ளைப்போலிருந்தால் வாத சுரமென்றும்;

2. நெய்யைப் போலிருந்தால் பித்த சுரமென்றும்;

3. எண்ணெயைப் போலிருந்தால் சேட்ப சுரமென்றும்;

4. வாய் நீர் வித்தியாசமான ருசிகரமாகயிருந்தால் காக்கை வலி என்றும்;

5. வாய் நீர் தண்ணீர் போலானால் வாத சன்னி எனவும்;

6. வாய் நீர் குழம்பு போலானால் பித்த சன்னி என்றும்;

7. வாய் நீர் மெழுகு பதம் போலானால் சேத்தும சன்னி எனவும்;

8. எச்சிலை உமிழ்ந்தால் ஆட்டு வாயிலிருந்து ஒழுகும் உமிழ் நீர் போலானால் வாத சக்தி என்றும்;

9. மானைப் போல் பாய்ந்தால் பித்த மாரக சன்னி சத்தி என்றும்;

10. மூள்ளம் பன்றியைப் போலானால் சேத்தும சன்னி மூர்ச்சை என்றும்;

11. மயிலிறகு வர்ணமானால் வாதமூலமென்றும்;

12. கிளியிறகு வர்ணமானால் பித்தமூலமென்றும்;

13. கொக்கிறகு நிறமானால் சிலேத்தும மூலமென்றும்;

14. எச்சிலையுமிழ்ந்தவுடனே கீழே குறுக்கிட்டு விழுந்தால் க்ஷயரோகமென்றும்;

15. நீண்டுகிடந்தாற்போல விழுந்தால் அரோசக ரோக மென்றும்;

16. உருண்டையாய் விழுந்தால் ருத்திர வாயு ரோக மென்றும் **தேரையர் யமகம் கூறுகிறது.**

## எச்சில் (வேறு).

எச்சில்,—

1. இளநீரைப் போன்றிருக்குமாயின் உத்தமோத்தமமென்றும்;

2. பாலைப்போன்று வெண்மையாகவும், சற்றுக் குழம்பாகவு மிருக்கின் உத்தம மத்திமமென்றும்;

3. வெண்ணெய் போலழுந்தி வெண்மையாயுமிருக்கின் மத்தி மோத்தமமென்றும்;

4. தயிரைப்போல வெண்மையும், சற்று அழுந்தியும் நீர் கலந்து மிருப்பின் மத்திம மத்திமமென்றும்;

5. குதிரைவாயினின்றொழுகும் நுரையைப்போன்றிருக்கு மாயின் அதமோத்தமமென்றும்;

6. களியைப் போன்று கடினமாயிருக்கில் அதமமத்திம மென்றும்;

7. ஓட்டிற் சுடப்பட்ட ஓட்டடையின் கடினத்தை ஒத்திருக்கின் அதமாதமம் என்றும்;

8. மாவைப் போல் வறட்சியாயிருக்குமாயின் அதமாதமத்திலு மதமம் எனவும்; இவ்விறுதிக்குறி அதிக சமீபத்தில் மரணத்தைக் கொடுக்குமென்றும் தேரையர் யமகம் கூறுகின்றது.

## சுவையைக் கொண்டு சாதல் குறியறிதல்.

1. கசப்பான பொருள் கைக்காமல், ஏனைய சுவையுள்ள பொருள்கள் கைத்தால் ஒருவாரத்திலும்;

2. இனிப்பான பொருள்கள் இனிக்காமல், மற்றச் சுவையுள்ள பொருள்கள் இனித்தால் ஒரு திங்களிலும்;

3. புளிப்புச்சுவையுள்ள பொருள்கள் புளிக்காமல், மற்றைய சுவையுள்ள பொருள்கள் புளித்தால் 15 நாட்களிலும்;

4. காரமாகிய பொருள்கள் காரமாயிராமல், ஏனைய பொருள் கள் காரமாயிருந்தால் அரை நாளிலும்;

5. உப்புக் கரிக்கும் பொருள்கள் உப்புக் கரிக்காமல் ஏனைய பொருள்கள் உப்புக் கரித்தால் ஓர் நாளிலும்;

6. துவர்ப்பான பொருள்கள் துவர்க்காமல், ஏனைய பொருள்கள் துவர்த்தால் ஒரு நாழிகையினும் இறப்பார்களென தேரைய யமகத்தில் கூறப்பட்டிருக்கின்றது.

குறிப்பு.—இவ்விதம் சுவை மாறுபடக்காணும் நோயினன் பெரும்பாலும் "சித்தப்பிரமை" யுடனிருப்பன் என்பதே தாற்பரியம். "பாம்பு விடம் தின்டியவிடத்தும்" சுவை மாறுபாடு யிருக்கக்கூடும்.

## சொல் ஒலியும் முக்குற்றங்களும்.

வாத நோயாளிக்குச் சமவொலியும்;

பித்த நோயாளிக்கு உயர்ந்த ஒலியும் (சிரித்துக் குழறிய தொனியும்); ஐய நோயாளிக்கு இன்னிசை போன்ற ஈனத் தொனியும்;

கலப்பு நோயாளிக்கு கலப்புக் குற்றச்சார்பான கலப்பொலியு மாயிருக்கும்.

## ஒலியினால் சாதல் குறியறிதல்.

1. வீணை, சங்கு, புல்லாங்குழல். பாச்சிகை, பறவை என்னும் இவைகளின் ஓசையைப் போன்ற ஒலியும்;

2. மலையின் அடிவாரத்தினின்றும், கிணற்றுக்குள்ளிலிருந்தும் பேசுவோரைப்போன்ற ஒலியும்;

3. தாரை, பேரி என்னும் வாத்திய ஒலியை ஒத்த ஒலியும்; ஆகிய இவ் வொலிகளையுடைய பினியாளர்கட்கு முறையே ஒரு நாழிகை, ஒன்றரை சாமம், ஒன்றே முக்கால் நாள், பதினோறே முக்கால் நாள், முப்பத்து மூன்றரை நாள், ஐம்பது நாள், அறுபத்து ஆறேமுக்கால் நாள், எண்பத்துமூன்றரை நாள், நூறு நாள், என்னும் இக்கணக்கின்படியான நாட்களில் மரண மாவார்கள் என்பதாகத் தேரையர் யமகம் கூறுகின்றது.

## கண்ணின் குறி.

வாத நோயாளிக்குக் கண்கள் கறுப்பாயும், கொஞ்சம் மப்பாயும், நீர்வடிந்துக் கொண்டுமிருக்கும்.

பித்த நோயாளிக்கு மஞ்சளாகவாவது சிவப்பாகவாவது இருக்கும்.

கப நோயாளிக்குக் கண்கள் பீளைசேர்ந்தாவது, வெளுத்தாவது இருக்கும்.

சன்னிபாத நோயாளிக்கு மஞ்சள் கலந்து செந்நிறமாகயிருக்கும்.

காமாலைப் பிணியாளர்க்கு மஞ்சளாகவேயிருக்கும்.

### காதின் தோற்றத்தால் முக்குற்றமறிதல்.

செவியினில் வாதஞ்சேர்ந்தால் சீழ், குறும்பி இவைகள் சேர்ந்து அடைத்துக்கொள்ளும்.

செவியினில் பித்தஞ்சேரில் நமைச்சலுடன் ஊறலுண்டாம்.

செவியினில் கபஞ்சேர்ந்தால் வீங்கிக் குத்தலுடன் இரத்தம் சொரியும்.

### (மூக்கு) மணத்தன்மையால் சாதலையறிதல்.

நோயாளி அடியிற்கண்ட பூக்களுக்குரிய இயற்கை வாசனையை அறியாமல் அதற்குபுறம்பான மற்றப் பூக்களிடத்தில் அவ் வாசனையைப் பெறுவானாகில் அவன் அவ்வப் பூக்களின் கீழ்க் குறிப்பிட்ட காலத்தில் உயிர் துறப்பான் என அறிக;

1. மூங்கிற் பூ எவ்வித வாசம் தருமோ, அதை அவன் உணராது, அவ்வாசனையை வேற்று மலர்களிடத்தில் காண்பானாகில் ஏழு விநாடியிலும்; அவ்வாறே, (2) வேங்கைப்பூ, (3) தாழம்பூ, (4) ஆத்திப்பூ, (5) கொன்றைப்பூ, (6) சிறு சண்பகப்பூ, (7) தாமரைப்பூ இவைகளிடத்தில் காண்பானாகில், முறையே 7 நாழிகையிலும்; 4 சாமங்களிலும்; 7 நாள்களிலும்; ஒரு திங்களிலும்; இரண்டு திங்களிலும்; ஆறு திங்களிலும் மரண மடைவான் என தேரையர் யமகம் கூறுகின்றது.

### சுக்கிலத்தன்மை.

பிணியாளனின் சுக்கிலம்—

(1) வெண்மையும், வெண்ணெய்க்கு நிகராயுமிருப்பின் உத்தமோத்தம மென்றும்;

(2) வெண்மையும், தயிருக்கு நிகராயுமிருப்பின் உத்தமத்தில் இரண்டாந்தர உத்தமமென்றும்;

(3) வெண்மையும், பாலுக்கு ஒப்பாகவும்இருப்பின் மத்தி மோத்தம மென்றும்;

(4) வெண்மையும் மோருக்கு ஒப்பாயுமிருப்பின் மத்திம மத்திமமென்றும்;

(5) தேனையும், அதன் நிறத்தையும் கனத்தையும் ஒத்திருந்தால் அதமோத்தமமென்றும்;

(6) நெய்யையும் அதன் நிறத்தையும், கனத்தையும் ஒத்திருந்தால் அதமமத்திமமென்றும்;

(7) கள்ளைப்போன்ற நிறமும் தடிப்புமிருப்பின் அதமாத மோத்தமம் என்றும்; (அதாவது தீர்வதற்குச் சிறிதுங் கூடாததும், மிகப் பொல்லாங்கையே விளைவிக்கத்தக்க தென்றும்);

(8) தண்ணீரைப் போலிருப்பின் சாரம் முதலிய உடற்றாதுக் களிலும் சற்றும் சாரமற்றவனென்றும், உயிருடனிருந்தாலும் பிணத்துக்கு ஒப்பானவனென்றும் உரைக்கடவாய் எனவும் தேரையர் யமகம் கூறுகிறது.

குறிப்பு.—வெண்ணீரைப் பெருக்கி வன்மைப்படுத்தக் கூடிய சிறந்த மருந்துகள் சித்தமருத்துவத்தில் உண்டு என்பதை ஞாபகப் படுத்திக் கொள்ளவும்.

## உறுப்புகளின் துடிப்பினால் சாதல் குறியறிதல்.

ஒரு பிணியாளனுக்கு கை கால், நெற்றி, கன்னம் ஆகிய இவ்வுறுப்புகளில் தொடர்ந்து துடிப்பு நேரிட்டால், முறையே ஓராண்டிலேனும், ஆறு திங்களிலேனும், மூன்று திங்களிலேனும், பத்து நாட்களிலேனும் உயிர் துறப்பான்.

இது நிற்க, சாதல் குறி (வேறு).

1. காது அடியோடு கேளாவிடின் ஏழு நாள்களிலும்;
2. கண்ணொளி ஒழிந்துவிடின் ஐந்து நாட்களிலும்;
3. மணத்தன்மை நீங்கின் மூன்று நாள்களிலும்;
4. பேச்சு ஒலி வேறானால் இரண்டு நாள்களிலும் உயிர் நீங்கும் என்பதாம்.

—(சி. ம. சுருக்கம். பக்கம்—209-210)

# அத்தியாயம் XV

## சிறுநீர் பரிசோதனை.

தோர்நீர்க் குறிநெய்க்குறி நூல்—(சி.ம. சுருக்கம்)

### நீர்நிறக்குறி.

**நிறக்குறி நெய்க்குறி நிச்சயத்தற்குரிய நீர் இலக்கணம்.**

"அருந்துமாறிரதமும் அவிரோதமதாய்
அல்கல் அலர்தல் அகாலஜூன் தவிர்ந்தழற்
குற்றளவருந்தி உறங்கி வைகறை
ஆடிக்கலசத் தாவியே காது பெய்
தொருமூகூர்த்தக் கலைக்குட்படு நீரின்
நிறக்குறி நெய்க்குறி நிரூபித்தல் கடனே"

என்பதினால்; உண்ணுகின்ற அறுசுவைப் பொருள்களும் ஒன்றுக் கொன்று வேற்றுமையடையாமலும், பசிக்குத் தக்கபடி குறைத்தல், அதிகரித்தல், காலந்தப்புதல் முதலிய குற்றங் களுண்டாகாவண்ணம் புசித்து உறங்கி, விடியற் காலத்தில் படிக பாத்திரத்தில் நீரை ஆவிபோகாதபடி பெய்த 3¾ நாழிகைக்குள் அதன் நிறக் குறியையும், அதில் எண்ணெய்விட்டுப் பார்த்து, காணப்படுகின்ற குறியையும் கவனித்து, பிணிகளின் நிரும், நீராத குறிகளை மெய்ப்பித்தல் முறையாம்.

**நோயுற்றோர்க்கு அவ்விதி (மேற்கண்ட விதி) விலக்காம்.**

"அருப்ப முற்றார்க்கவ்விதி விலக்கே."

என்பதால்; மிகவும் நோயுற்றாருக்கு மூற் சூத்திரத்தில் கூறிய விதிகள் விலக்காம். அதாவது எந்த நேரமாகயிருந்தாலும் அவசியமும், அவசரமும் இவற்றிற்குத் தக்கவாறு நீரைப் பிடித்துப் பரிசோதிப்பது கடமையாகும். எனினும் சந்தர்ப்பம் வாய்க்கின் அதிகாலையிலிறங்கும் நீரையும் பிடித்துப் பரிசோதிப்பது மிகவும் நல்லது.

**நீரின் பொதுக்குணம்.**

"வந்த நீர்க்கரிஎடை மனம் நுரை எஞ்சலென்
றைந்தியலுளவவை யறைநூத மூறையே."

என்பதால், இழிகின்ற நீருக்கு (1) நிறம், (2) எடை, (3) நாற்றம், (4) நுரை, (5) குறைதல் என ஐந்து இயல்கள் உண்டு.

## நிறத் தொகை.

"பீதம் செம்மையை கருமை வெண்மையென்
றோதைங்கொழுமையை யொத்துகு நீரே."

என்பதால்; நீரானது, (1) மஞ்சள், (2) சிவப்பு, (3) பச்சை, (4) கருமை, (5) வெண்மை என்னும் தனித்தனி ஐந்து நிறமுள்ளதாய் இறங்கும்.

## ஒவ்வொரு நிறத்திலும் காணும் உட்பிரிவுகள்.

"அரிசனத்தாறும் அருணத்து நான்கும்
அரிதத்தைந்தும் அஞ்சனத்தொரு நான்கும்
வெண்மையுள் இரண்டுமாய் விள்ளுஞ் சுருதியே."

என்பதால், மஞ்சள் நிறத்தில் ஆறுவகையும்; சிவப்பில் நான்கு வகையும்; பச்சையில் ஐந்து வகையும்; கறுப்பில் நான்கு வகையும்; வெண்மையில் இரண்டு வகையுமாய்ப் பிரியும் என அறிக.

## மஞ்சள் நீர் விகற்பம்.

"மஞ்சள் நீர்விகற்ப வண்ணம் புகலுதும்."
(பொருள்) மஞ்சள் நிறமுள்ள நீரின் நிறவகையைச் சொல்லுவாம்.

### 1. சீரண அபக்குவ நீர் நிறம்.

"நீரணும் வழுதுகு நீத்தம் நிறமெனின்
சீரணக்குறைவின் அபக்குவ நீரே."

என்பதால், நீரானது மழை முதலிய நீரால் நனைந்து ஊறிய வைக்கோலிலிருந்து ஒழுகுகின்ற நீரின் நிறமாயிருக்குமானால், அந்நீர் சீரணக் குறைவாகி யபக்குவக் குறைவாலுண்டானதாகும்.

### 2. சீரணப்பக்குவ நீரின் நிறம்.

"பாரில் துரிஞ்சிப் பழநிறம் பொருந்தில்
சீரணப்பக்குவ நீரெனத் தேரே."

என்பதால், நீரானது துரிஞ்சிப்பழ நிறத்தைப் பொருந்துமானால், அந்நீர் சீரணபக்குவத்தால் உண்டான தென்று அறிந்து கொள்க.

### 3. மிகுவெம்மையாலுண்டாகும் நீர் நிறம்.

"செம்மையும் நிசியும் சேர்ந்தெழு நிறமெனின்
வெம்மையுயர விளைந்தவிர் நீரே."

என்பதினால், நீரானது சிவப்பும் மஞ்சளும் கலந்து இழியுமானால், மிகுவெம்மையால் விளைந்த நீரென அது விளக்கும்.

4. சூட்டைத்தரற்குரிய நீர் நிறம்.

"காட்டின் நரந்தக்கனி நிறம் காணில்
சூட்டைத்தரற்குத் தொடருநி நீரே."

என்பதால், காட்டு நாரத்தம் பழத்தோலின் நிறமாய் வெளிப்படும் நீர், சூட்டைக்கொடுப்பதற்கு உண்டான நீராகும்.

5. அதிவுட்டிணை நீர் நிறம்.

"கொதியனல் நிறத்தின் கொள்கையேயாயின்
அதுவுட்டிணத்தை யடைந்த நீராமே."

என்பதினால், கொதிக்கின்ற தீயின் நிறத்தைப் பொருந்தி பிறங்கும் நீர், மிகு சூட்டினையடைந்த நீராகும்.

6. முன்னிலும் அதிவுட்டிண நீர் நிறம்.

"மீதமுங் குங்குமப் பூவுமாசெழி றரின்
ஏதிதன்மேல் வெப்பின்றெனு நீரே."

என்பதால், நீர் மஞ்சள் நிறமும், அதில் அரைத்த குங்குமப்பூ நிறமும், வரிவரியாய்ப் பொருந்தியிருக்குமானால் இதற்கு மேலாக வெப்புயில்லை என்று சொல்லத்தக்க தாகும்.

செம்மை நிற நீர் வேற்றுமை.

"செம்மைநீர் விகற்பச் செய்தி நவிற்றுவாம்."

(பொருள்) சிவப்பு நிறமுள்ள நீரினது பேதத்தைக் கூறுவாம்.

1. இரத்தம் பொங்கிய நீர் நிறம்.

"அரத்தமும் கருமையும் அண்ணிய கறைதரின்
இரத்தம்பொங்கலால் இறங்கிய நீரே."

என்பதால், செம்மையும் கருமையும் பொருந்திய நிறத்தைக் காட்டும் நீர் இரத்தம் பொங்குதலாலுண்டாகின்ற நீராகும்.

2. மிகு இரத்தக்கொதிப்பாலுண்டாகும் நீர் நிறம்.

"செக்கச் சிவந்த பன்னீர்ப்பூப் பகருறின்
மிக்குதூரச் கொதிப்பாலுரு நீரே."

என்பதினால், மிகுந்தச் சிவப்பு பன்னீர்ப் பூவின் நிறமாயின் அதிக இரத்தக் கொதிப்பாலிறங்கும் நீரென அறிக.

34. முன்னிலும் அதிகமாகப் பொங்குதலாலுண்டாகும் நீர் நிறம்

"கருமையுள் செம்மைசேர் கறையுஞ் சிவப்புந்
குருதிபொங்கிய குறிபுகல் நீரே."

என்பதினால், நீரில் கருப்பும் அதில் சிறிது செம்மையுங் கலந்த நிறமும், இவைகளையன்றித் தனித்த (4 அதிக சிவப்பு) நிறமும் உண்டாயிருக்குமானால், அஃது இரத்தம் பொங்கிய குறியைக் கூறும் நீராகும்.

### பச்சை நீர் வேற்றுமை இயல்.

"பச்சை நீர் விகற்பம் பண்ணாது மிவணே."

(பொருள்) பச்சை நீரின் வேகத்தை இங்கு கூறுவாம்.

**1. சீதள நீர் நிறம்.**

"கருமைச் சாமளக் கருவுறுமாயின்
வருசீதளத்தால் வாப்படு நீரே."

என்பதினால், நீர், கறுப்பு நிறத்தையும் சிறிது பச்சை நிறத்தையுங்கலந்தானால் சனித்துகொண்டிருக்கிற சீதளத்தினால் வருகின்ற நீராகும்.

**2. விஷத்தாலுண்டாகும் சீதள நீர் நிறம்.**

"இடத்துறு குணத்தை யேய்க்கு மெனிலோ
விடத்துறுசீதளம் மேலிடு நீரே."

என்பதினால்; நீர், ஆகாய நிறத்தை யொத்திருக்குமானால், விஷத்தினாலுண்டான சீதளம் அதிகரித்தலால் உண்டானதாகும்.

**குறிப்பு.—விஷமென்பது (1) கிருத்திரம விஷம்;** அதாவது நாபி முதலிய பூண்டுகளையாவது, பாம்பு முதலிய செந்துக்களின் விஷங்களையாவது மற்றொரு பொருளில் கலந்து கொடுக்கப் படுவதாம். இது **இடிமருந்தென்றும்** சொல்லப்படும்.

(2) அகிருத்திரம விஷம் என்பது தாவர விஷம். சங்கம விஷம் என இருவகைப்படும்.

**தாவர விஷம்** என்பது பூண்டு, செடி, கொடி, புல், மரம் ஆகிய இவற்றின் கிழங்கு வேர், பட்டை, பால், பிசின், இலை, பூ, காய், கனி முதலிய பொருள்களிலும், பாஷாண முதலிய தாதுப் பொருள்களிலும் இருக்கின்ற விஷமாம்.

**சங்கம விஷம்** என்பது அரவம், கீடம், தேள், சிலந்திப்பூச்சி, நாய், நரி முதலியவைகளின் கடியாலேற்படும் விடமாம்.

*(3) மிகு சீதள நீர் நிறம்.*

"தகுமொரு நீலச்சாயை காண்டிடினோ
மிகு சீதளத்தால் விகார நீரிதனால்
மருத்து நோய் பாலவிருத்தர்க்கு மாமே."

என்பதால், நீரில் ஒருவித நீலச்சாயை காணுமானால் மிகுந்த சீதளத்தினாலுண்டான தெனக்கொள்க. இந்நீரினால் பாலர்களுக்கும் விருத்தர்களுக்கும் வாதரோக உண்டாகும்.

*(4) வாத பித்த கபங்களைக் கெடுக்கும் நீர் நிறம்.*

"அம்ம நீலத்துரு வார்ந்துதடிக்கு மேல்
மும்மலச் சிதைவை மூகளப்பிக்கு நீரே."

என்பதினால், நீர் நில நிறத்துடன் கடித்துமிருக்குமானால், அது வாத பித்த கபங்களுக்குக் கெடுதியை யுண்டாக்குவதாகும்.

*(5) மேற்கூறிய மும் மலங்களை மிகவும் அதிகமாகக் கெடுக்கும் நீர் நிறம்.*

"சொக்கிலைப் பச்சையின் தோற்ற மூளதேல்
மிக்குமும் மலங்கெடவிழு நீர் கொடிதே."

(பொருள்) நீர், சொக்கமான இலைப் பச்சை போல நிறமுள்ளதாய் இருக்குமானால், வாத பித்த சிலேஷ்மங்கள் மிகவும் கெடுவதற்கு இழிகின்றதாகும். ஆதலின் இது கொடிய நீராகும்.

**கருமை நீர் நிற வேற்றுமை.**

"கருமை நீர் விகற்பம் கழறப்புகுவோம்."

(பொருள்) கருமை நீர் வேற்றுமையைக் கூறுவோம்.

*1. காமாலை நோயைத் தரும் நீர் நிறம்.*

"வான்மீக மெழிற்குன் மைக்குணு மூறினது
தான் காமாலை நோய் தருமஃதின்றெனில்
பித்த நோயேனும் பிறக்கப்பணிக்குமே."

என்பதினால், குங்குமப்பூ நிறத்துள் கருமை நிறம் தோன்றுமானால் அந்த நீர் காமாலை நோயையேனும், பித்த நோயையேனும் உண்டாக்கும்.

2. உதிரக் கெடுதி நீர் நிறம்:

"அம்மையுஞ் சிறிய செம்மையுஞ் சிவணினோ
அரத்தத்தழி வென்றறை தரு நீரே."

என்பதால், நீரானது மூன் சொல்லப்பட்ட குங்குமப்பூ நிறத்துடன் கலந்த கருநிறத்தோடு, சிறிது செம்மை நிறமுங் கலந்திருக்கக் காணில், அஃது இரத்தக் கெடுதியினாலுண்டாகிற நீராம்.

3. உதிரத் தழுக்கைக் காட்டும் நீர் நிறம்.

"கார்க்குள் புன்னரிக் கருவிரவிய தெனின்
ஆர்க்கத்தழுக்கை யறிவித்த நீரே."

என்பதினால், நீரில் கரிய நிறத்துடன் சிறிது பச்சை நிறமுங் காணப்படின், அஃது இரத்தத்தினுடைய அழுக்கைத் தெரிவிப் பதாகும்.

4. சிலேத்தும வாதக் கெடுதி நீர் நிறம்.

"மையும் வெளிறும் மருவிய சாயை யேல்
ஐயுயிர் மிகக் கொதி தழிவுறு நீரிது
காலாதீதக் கனல்பவத்துடையது
மாலாந்தருண சுரத்தர் விருத்தர்க்
குண்டாமை திரவியத்தூணாற் கொடிதே."

(பொருள்) கரிய நிறமும் வெண்ணிறமுஞ் சேர்ந்துண்டான நிறமுடையதுபோல் தோன்றின், அந் நீர் சிலேத்தும வாத தோடங்கள் அதிகமாய் கொதித்துக் கெடுதலைத் தருநீராம். அது நெடுங் காலத்திற்கு மூன் வெப்ப உற்பத்தியினாலுண்டானதாகும். அது மயக்கந் கொடுக்கிற தருண சுரக்காரருக்கும், கிழவருக்கும் உண்டாவது. அஃது ஐயப் பொருளை மிகுதியாயுண்பதா லுண்டாகிறதாகையால், கொடிய நீராம்.

வெண்மை நீர் நிற விகற்பம்.

"வெண்மை நீர் நிற விகற்பம் விரித்தினிதுரைப்போம்."

(பொருள்) இனி வெண்மை நிறமுடைய நீரினது வகைகளை விரித்துச் சொல்லுவாம்.

2. சுத்த சீதள நீர் நிறம்:

"வெண்மையுமுற்று மிகத் தெளிவுடைத்தேல்
உண்மையாஞ் சுத்த சீதளத்துதகமாம்
இந்நீர்வசப்படாடிதிவனுய்யுந்தரம்
மூந்நீர்ப் பெருக்கமிழ்வான் உய்தலொக்குமே'

என்பதினால்; நீரானது வெள்ளை நிறத்துடன் மிகுந்த தெளிவையுடைத்தாயிருக்குமானால், உண்மையாகிய சுத்த சீதளத்தினாலுண்டாகிய நீராகும். இந்த நீரானது மருந்து களுக்கு அடங்காது. இந்த நீருள்ள நோயாளி பிழைத்தல், கடல் பெருக்கில் முழுகியவன் பிழைப்பதை யொக்கும்.

2. சிலேத்மத்தின் கொதிப்பு நீர் நிறம்:

"அறவெளிர்ப்பிலும் சளியைப் போல் விழினது
மறவன் அதி கொதிப்பால் வருவனமே."

(பொருள்) நீர் மிகவும் வெளுத்தாலும், அதில் சளியைப் போல் விழுந்தாலும், அந்த நீர் ஐயத்தின் மிகுந்த கொதிப்பால் வருகின்ற நீராம்.

கூயம் நீர் நிறம்.

"அமிழ்தரியெனிலென்பற வுருக்கிய நீர்
அஃதேகய நோய் ஆக்கு மந்தத்தே."

(பொருள்) நீரானது பாலின் நிறத்தைப் பெற்றிருக்குமானால், எலும்பை மிகுதியாயுருக்கிய நீராகும். அந் நீரே கடைசியில் கய மென்னும் இளைப்பு நோயை உண்டாக்கும்.

கருப்பவிரணம் நீர் நிறமுந் தன்மையும்:

"காணிதில் சிழுங் கலத்திழி மணமுறின்
கருப்ப நாபிகளு ளுங்காம நாளத்துளும்
விரணமுண்டின்றேல் எய்தமஸ் மரியல
திருத்தலே திண்ணமென மனத்துன்னே."

(பொருள்) இறங்குகின்ற இந் நீரில் சீயுங் கலந்து, கெட்ட நாற் றமும் வீசுமானால், கருப்பப் பையினுள்ளும், கொப்பூழிடத்தி னுள்ளும், ஆண் குறித் துளையினுள்ளும் புண்ணிருக்கும். அவ்வாறு புண்ணில்லையானால், கல்லடைப்பு நோயுண்டாகும் என்றும், அல்லது அந் நோய் இருத்தலே திண்ணமென்றும் உள்ளத்தில் எண்ணக் கடவை.

கபம்—சந்நிவாதம்:

"விந்துவைப் போன்ற நீர் விறல் கப நோயையும்
பந்தித்த சந்நிபாதத்தையுந் தரும்."

என்பதினால், இந்திரியத்தைப் போன்ற நீரானது, வன்மை யுள்ள கப நோயையும் (கோழை நோய்களாகிய கூயம், சுவாசம், காசம் முதலியவை), உறுதியான சந்நி நோயையும் தரும்.

**உப்புறையாதது :**

"விடுமுழி உவருறா விடினது கொடிதே."

(பொருள்) நீர் விட்ட இடத்தில் அத் நீரினது உப்பு உரையா விட்டால் அந்த நீர் கெடுதியை விளைவிப்பதாகும்.

**வெப்பம் (கொடிய வெப்பநோய் நீர்) :**

"தக்கிரம் பாலெனத் தனித்தனியொழுகுமேல்
உக்கிர வெப்பத்துதி காள நீரே."

(பொருள்) நீரானது மோரைப் போலவும், பாலைப் போலவும் நிறமுள்ளதாய், தனித்தனி இறங்குமானால், அது கொடிய வெப் பத்தினால் உண்டான கூற்றுவனை யொத்த நீராம்.

**குண்டிக்காய் துர்ப்பலம் நீர் :**

"தீப்புலால் கழுநீர்ச் செயலெனிற் குண்டிக்
காய்த்துர்ப் பலத்தால் கதித்த நீராமத்
துர்ப்பலக் கபமும் சோரியும் கொதிப்புறப்
பற்பலாகப் பையப் பதிந்ததே."

(பொருள்) நீரானது, கெட்டுப் போன தசையைக் கழுவின நீரின் நிறம் பெற்றிருக்குமானால், குண்டிக்காயினது வன்மைக் குறைவாலுண்டான நீராம். அத்த வன்மைக் குறைவானது, கோழையுங் குருதியும் கொதிப்படைந்ததனால் பல நாட்களாய் மெல்ல மெல்ல மறைந்துண்டானதாகும்.

**தீரா நோய் நீரின் தன்மை :**

"தடிக்கினும் நெய்யின் தன்மை யொத்திடினும்
படிக்குளிரண்டு பாணியுந்தீதே."

(பொருள்) நீரானது கனப்பாயிருந்தாலும், நெய்ப்பசையை ஒத்திருந்தாலும், இவ்விரண்டு நீரும் இந் நிலவுலகத்தில் கொடி யதேயாகும்.

**நிற இலக்கணம்—(மாதாந்தரம்) வாதப் பிணி :**

"பாண்டரி நெய்யரி பற்றிய நீரெலாம்
தாண்டரி நோயே தருமெனுஞ் சிலநூல்."

(பொருள்) வெண்ணிறத்தையும் உதிர நிறத்தையும் பொருந்திய நீரெல்லாம், தாவுகின்ற வாத ரோகத்தையே தரு மென்று சில நூல் கூறும்.

**பித்தப் பிணி:**

"கனிபொம் மன்மாசுக்கனி நிறம் போன்றும்
கனத்த செளவீரக்களையது போன்றும்
சனித் தெண்ணெயின் தன்மையைப் போன்றும்
சாரிய நீரிவை சீரிய மெய்க்குளாம்
பித்தப் பிணியாற் பிறந்தன வென்றே
சித்தசாரனவம் தெளிய விரிக்குமே."

என்பதினால்; கனிந்த பொம்மன்மாசுப் பழத்தின் நிறத்தை ஒத்தும், கனமுள்ள செளவீரத்தின் ஒளியைப் பொருந்தியும், எள் நெய்யின் நிறத்தைப் போன்றும் இறங்கிய நீர், பித்த கோபத்தினால் பிறந்த பித்தப் பிணியைக் குறிக்குமென்று "சித்த சாரனவம்" என்னும் நூல் தெளிவுபட விரித்துக் கூறும்.

**பித்த காமாலை நீர் நிறம்:**

"மந்திரி நிறமாய் வரப்படு நீரும்
உந்திய எருவையை ஒத்துகு நீரும்
பித்துகாமாலைகளால் பிறந்தனவெனச்
சித்திய வித்தியாதரமது செப்புமே."

என்பதினால்; பித்த (மஞ்சள்) நிறமாய் இழிகின்ற நீரும், தள்ளப்பட்ட உதிரத்தை ஒத்து இறங்குகின்ற நீரும் பித்த காமாலை ரோகங்களால் பிறந்தன வென்று "சித்திய வித்தியாதரம்" என்னும் நூல் செப்பும்.

கபப் பிணி நீர் நிறம்:

"அருச்சுனத் தொடுநுரை புற்புதம் எழினும்
அருத்துநீரொக்கினும் அவியினை ஒக்கினும்
கலப்பெழில் உறினுமக் காண்டம் கபநோய்
தலைப்படுங்காலையில் சார்ந்திடு மென்பரே."

(பொருள்) வெண்ணிறத்துடன் நுரையும் குமிழியும் உண்டானாலும், குடித்தற்குரிய சுத்த நீரைப் போலிருந்தாலும், நெய்யை ஒத்திருந்தாலும், நிறம் பல கலந்து தோன்றினாலும், அந் நீரானது கபரோக முண்டாங் காலத்து இழியு மென்பர்.

**தொந்தப் பிணி நீர் நிறம்:**

"இன்னும் அம்மதமே இருந்தொந்த நீழல்நீர்
தன்னில் கருமைச் சாயையுண் டென்னுமே."

(பொருள்) இன்னமும் வேறுபட்ட கொள்கையுடையார் தொந்த நிறத்துடன் உண்டாகும் நீரின்கண், கருமை நிறமும் உண்டாகு மென்று கூறுவர்.

மேகரோகம், மகாரோகம் இவைகளின் நீர் நிறம் :

"புண்ணீர் மேகப்புன்கண் மாப்பிணி
நுண்ணில் நித்திய நாதியம் ஆமெனும்."

(பொருள்) நீரில் உதிரமானது காணப்படுமானால், மேகரோகம் அல்லது மகா ரோகம் உண்டாம் என்று "நித்திய நாதியம்" என்னும் நூல் மொழியும்.

சுரப்பிணி நீர் நிறம் :

"சுரப்பிணி அரிசனத்தோயங் காட்டுமே."

என்பதனால், சுரநோயில் மஞ்சள் நிறம் பொருந்திய நீர் வெளிப்படும் என்பர்.

அசாத்திய நீர் நிறம் :

"சுரமேனும் மேகத்துனி யேனும் இருக்கில்
பெருகிய மூத்திரம் பிரிக்கும் உயிரையே."

என்பதினால், சுரம் அல்லது மேக நோய் கண்டிருக்கும்போது அதிகரித்த நீர் உயிரைப் போக்குமென அறிக.

நிறை இலக்கணம்—

"அற்பமுங் கனமற்றதி தெளிவுறு மெனின்
வற்புறு சீதளம் மன்னிக் கனத்துக்
கபத்தை இளக்கலால் கண்ட நீர் இஃதே."

(பொருள்) நீர் கிறிதும் கனமின்றி இருத்தலுடன், மிகவும் தெளிந்து யிருக்குமாயின், இத் தன்மையுடைய நீர், வன்மையற்ற சீதளம், நிலைபெற்று, ஓங்கிய கபத்தை இளக்கலால் உண்டாகிய தென அறிக.

நீர்ப்பை, இந்திரிய வழி இவற்றின் மிக்க பலவீனத்தைக் குறிக்கும் நீர்.

"இது நீர்ப்பை யிந்திரியவழி இவற்றுண்
மூதிர்தர்ப்பலத்தான் முளைத் தெனக் கொள்க."

(பொருள்) இந் நீரானது, நீர்ப்பையிலும் இந்திரியம் தங்கு மிடத்திலும் மிகுந்த வன்மைக் குறைவால் உண்டாயிற்றென்று கொள்ளக் கடவை.

அன்றியும் ;

மும் மலங்களின் கெடுதி நீர் :

"மிக்குத் தடித்து விழுமேல் மலங்களின்
நற்குண வழுவை நன்கோது நீரே."

(இதனால்)

"வீக்கமும் பிடகமும் மேலிடும் இவை மறு
நாட்கு நாள் அல்கின் நலனாம் இவரின்
தொடில் சுடுங் கொடிய விடச்சுரம் அண்ணுமே."

என்பதால் மிகத் தடித்து இழியுமாயின் வாதபித்த கபங்களின் நற்குணக் கெடுதியை நன்றாகக் காட்டும் நீராகும். இதனால் வீக்கமும் (சோபையும்), கட்டிகளும் அதிகரிக்கும். இவ்விரண்டும் கண்ட நாள் தொடங்கி நாளுக்கு நாள் குறையுமானால் நன்மையாம். அதிகரிக்குமாயின் தொட்ட மாத்திரத்தில் சுடுவதான கொடிய விடவெப்புப் பிணி அணுகும்.

இயற்கை நீர் இலக்கணம் :

"மிகத் தடிப்பும் மிகத் தேறலும் இன்றெனில்
சுகத்தைத் தரும் மெய்ச் சுபாவ நீர் நன்றே."

என்பதினால், மிகுந்த கனமும் அதிகத் தெளிவும் இல்லாவிடின் சுகத்தைத் தருவதான உடலியற்கை நீராகும். இது நன்மையே.

மணவிலக்கணம் :

"ஓதமணத் தோடவ் வோதமொத் திறங்கும்
சீதளங் கம்மியதேகிகளுக்கே."

என்பதினால், சீதளங் கம்மிய தேகிகளுக்கு நீர்ப்பெருக்கத்துக் குள்ள நாற்றமுடன் அப் பெருக்கின் நிறத்தையும் கனத்தையும் ஒத்துச் சிறு நீரிறங்கும்.

சிறுநீர்ப்பை நாளப்புண்ணீர் மணம் :

"வெய்ய துர்க்கந்தம் வீசுநீர் மூத்திரப்
பைநாளமிவற்றைப் பற்று புண்குறியே
அம்மொழியின்றெனினிலமே முதலிய
மும்மலச் சுதமே மூலமென் றுணரே."

(பொருள்) கொடிய் மணம் வீசுகின்ற நீர், மூத்திரப்பை, மூத்திர நாளம் இவைகளைப் புண்பற்றி இருக்குமென்கிற குறியைக் காட்டுவதாகும். அங்ஙனமின்றெனில், வாத பித்த கபங்களின் கெடுதியே துர் நாற்ற நீருக்குக் காரணமென் றுணரக் கடவை.

**உட்டிணரோக நீர் மணம் :**

"மட்டிற் புளிமண மணத்திழிந் திடினஃ
துட்டிணப் பிணிபிணிப்புற் றெழுநீரே
முடிவிலவ்வுட்டிண முளரிவாயறல் போற்
படுசீதளச் சம்பந்தமாக்கிடுமே."

(பொருள்) அளவு கடந்த புளியின் மணம் கமழ்ந்து நீர் இறங்குமானால், அந்நீர் உட்டிணப் பிணி பற்றப்பட்டதனா லுண்டாகின்ற நீராகும். கடைசியில் அவ்வுட்டிணம் நோயாளியைத் தீயினின்று உண்டாகும் நீர் போலச் சீதளத்துடன் உறவாக்கி விடும்.

**உதிரம் மிகுதியாலுண்டாகும் நீர் மணம் :**

"இனித்த மணத்தோ டிறங்கி னெய் மிக்குச்
சனித்த விருத்தியைத் தழுவிய நீரே
அல்லதவ் விருத்தி யாலாம் பிணிக் குழாத்த
தல்லதில் லென்பதாய்த் தோர் மதமே."

(பொருள்) இனித்த மணத்தோடு இறங்குமானால் அந்நீர் உதிரம் மிகுந்து உண்டாகிய விருத்தியைத் தழுவிய நீராகும். அஃதல்லாவிட்டால் உதிர விருத்தியாலுண்டாகிய பிணிக் கூட்டத்தைப் பொருந்தியதேயன்றி வேறு ஆகாட்டாது என்பது மருத்துவ நூல் ஆராய்ந்தோர்களின் கொள்கையாகும்.

**பித்த சுபாவக் கெடுதி நீர் மணம் :**

"கருமான் மணமே கமழுமென்றாலது
குரவன் சுபாவ குணங்கெடு நீரே."

(பொருள்) கருநிறமுள்ள மானிலிடத் துண்டாகும் மணமே கமழுமானால், அது பித்தத்தின் இயற்கைக் குண விகற்பத் தாலுண்டாகிய நீராகும்.

**சரீரப்பசைக் கெடுதி நீர் மணம் :**

"புலால் மணங் கமழிற் பூதிய பசைக்கே
டலாதிலை யந்நீரக் குணமின்றெனில்
அடையுந்தத் தியென்றறையத் தான்மிகக்
கெடுதியெனவுங் கிளக்குஞ் சுருதியே."

(பொருள்) புலால் மணம் போல நீர் கமழுமானால், உடற்பசைக் கேடேயன்றி வேறொன்றுமில்லை. அந்நீருக்கு அக் குணம்

அச்சமயம் இல்லாதிருப்பினும், அக் குணம் அடைதற்கு அதுவே சமயமென்று அறிவாயாக. அந் நீரால் மிகக் கெடுதி நேரிடுமென்று மருத்துவ நூல் மொழியும்.

**நுரை இலக்கணம்—**

"பந்தமெய்ப் பசையிளகப்படும் பருவத்
தந்தர்ப் பூதமாய் அநில மூத்திரத்தில்
சம்பந்தப்படும் ததிநுரைப் புனலே."

(பொருள்) அவலம்பகம், தருப்பகம், கிலேதம், சந்திகம், போதகம் என்று உடலுறுதிக்காக இருக்கும் பசை இளகப்படும் காலத்தில், ஒருவரும் அறியாவண்ணம் வாயு சிறுநீரில் சம்பந்தப் படும். அப்பொழுது நுரை பொருந்திய நீர் இழியும்.

**காமாலை நீர் நுரையின் நிறம்:**

"அந்நுரை பீதம் கருமை செம்மை
மன்னுறு நிறந்தரின் வருங்காமாலையென்
றுன்னிப் புரப்பர் ஒப்பில் பிடகரே."

(பொருள்) மேற்கூறிய நுரை பொருந்திய நீர் மஞ்சள், கருமை, செம்மை நிறங்களைக் காட்டுமானால், காமாலை நோய் உண்டாகுமென்று எண்ணி மருத்துவ நூலாராய்ச்சியாளர்கள், கைதேர்ந்த வைத்தியர்கள் அதை வரவொட்டாமல் தடுத்துப் பாதுகாப்பர் எனக் கூறியுள்ளார்கள்.

**வாத முதலிய முக் குற்றங்களும் வன்மை குறையும்.**

**நீரின் நுரை இலக்கணம்—**

"நுரைதேய்த் தொழுகு நீர் நுவலரும் மும்மலம்
கரைய இளகிடும் காலத் தென்னே."

(பொருள்) நுரை குறைந்து இழியும் நீர் சொல்லுதற்கரிய வாத பித்த கபங்கள் தத்தம் வன்மையிற் குன்றித் தேயுங் காலத்து உண்டாவதென்று கூறுவாயாக.

**பாண்டு நோய் உற்பத்தியைக் காட்டும் நீரின் எஞ்சல் எஞ்சலிலக்கணம்—**

"இயற்கை நீர் சுருங்கினும் இதுவும் சலப் பொருள்
செயற்கை யாயிருந்தினும் சிறுத்த நீரிதுவும்
பாண்டு நோய்ச் சம்பவத்தைத் தருமிதில்
தூண்டுசாப் பேதியும் சோர்வும் பிறக்குமே."

(பொருள்) ஒரு காரணமுமின்றி இயற்கை யளவுக்குக் குறைந்து இழியும் நீரும்; நீர்ப் பொருள்களை மிகுதியா யுண்ணினும் குறைந்திழியும் நீரும்; பாண்டு நோய் உற்பத்திக்கு வழியாகும். இதனால் நீக்கக்கூடாத பேதியும், பாண்டு நோயுண்டாகும். அயர்வும் உண்டாகும்.

நெய்குறியின் சிறப்பு:

(அகவல்)

"ஐக்குறி கொடுவட வானிழ லமர்ந்தோர்
கைக்குறி தெரித்த நங்கடவுளைத் துதித்தே
மெய்க்குறி நிறந்தொனி விழி நாவிருமலம்
கைக்குறி முழுவதாவுங்கற்றார் தம்மினும்
பொய்க்குறி மெய்க்குறி புகலு மெவர்க்கும்
நெய்க்குறி யதனை யிந்நீணிலத்துரைப்பாம்."

(பொருள்) தென்முகத் தலைவனாய் வடிவங் கொண்டு கல்லால மரத்தின்கீழ் எழுந்தருளியிருந்து, ஒரு கைக்குறியினால் (நால்வர்க்குச்) சின்முத்திரையின் மெய்ப்பொருளை விளக்கிக் காட்டியருளிய நம்முடைய கடவுளைப் போற்றி செய்து, எண் வகை ஆராய்ச்சிகளையும் முற்றும் உணர்ந்தவர்களும், அக் குறி களில் மயங்கி ஒன்றை ஒன்றாய்க் கூறுகின்ற மயக்கந் தீர்ந்து உண்மையைப் பெற்று நோய்களை உள்ளவாறுணர்தற் பொருட்டு, ஐயந்திரிபில்லாமல் நோய்களை எடுத்துக் கூறும் நெய்க்குறி (நீரில் எண்ணெய்த் துளி விட்டுப் பார்த்தல்) நாலை இப் பெரிய உலகத்தில் சொல்வாம்.

குறிப்பு.—"நீள் நிலத்துரைப்பாம்" என்றது உலகத்துள்ள யாபேர்களும் தத்தம் உடலைத் தாங்களே நோய் வாய்ப் படாமல் பாதுகாத்துக் கொள்ள வேண்டும் என்னும் குறிப்பை உணர்த்து கின்றது.

மயங்கிக் கூறலாவது:

"பாவையே பித்தத்தோர் மலம் பார்த்திடில்—ஆவி
யேயெழுமந் நிறம் மஞ்சளே."

எனவும்;

"மலமுத்திரைக் குறி செப்பிடின் மலைமேற்பரி விளக்காம்
மலமானது புரியா மெனிற் மன்னிற் பெறுகாமே
மலமானது புல்லா மெனிற் மன்னிற் பெறுகாமே
மலருங் கவிரானாலஃதமைச்சன் பெறுகாமாம்
மகவான் கரியானாலது மறவன் சுரமாமே
மஞ்சட்கிணையானாலது மன்னைத் தொடு கபமே."

என்னும் செய்யுளில் கடை அடி "மஞ்சட்கிணையானால தா மன்னைத் தெற்று கபமே" எனவும் புகன்றிருக்கும் இவ்விரு வகை மஞ்சள் மலங்களின் வேற்றுமையை நன்குணராமல், இவை பித்தத்தின் மலமென்று கூறுதல் போன்றவையாகும். மற்றக் குறிகளையும் அவ்வாறே கொள்ளுதல் வேண்டும் என்பதேயாம்.

எண்ணெய் விட்டுப் பார்க்கும் நீரின் விதி :

"நிறக்குறிக் குரைத்த நிருமாண நீரிற்
சிறக்க வெண்ணெய்யோர் சிறுதுளி நடுவிடுத்
தென்றுறத் திறந்தொளி யேகாதமைத்ததி
னின்றதிவலை போம் நெறிவிழியறிவும்
சென்றது புகலுஞ் செய்தியை யுணரே."

(பொருள்.) நீர் நிறக்குறியால் நோயைக் கண்டு பிடித்தற் பொருட்டுச் சொல்லியிருக்கின்ற விதி பொருந்திய சிறு நீரில் ஒரு சிறிய துளி எண்ணெயை நடுவில் கையசைவினால் எண்ணெய்த் துளி சிதறாமல் விட்டு வெய்யிலானது அந்நீரில் படும்படி திறந்து, காற்றானது அதில் வீசி அந்த எண்ணெய்த் துளி ஆடாதபடி வைத்து, அச்சிறு நீரில் விடப்பட்டிருக்கின்ற எண்ணெய்த் துளியானது செல்லுகின்ற வழியில் கண்ணறிவையும், உயிரறிவையும் செலுத்தி, அத்துளி தெரிவிக்கும் நோய் விளக்கத்தை நீ தெரிந்து கொள்வாயாக.

வாதம் என்னும் வளிநீர் நெய்க்குறி :

"அரவென நீண்டினஃதே வாதம்"

(பொருள்.) எண்ணெய்த் துளி பாம்பைப் போல் நீண்டால் அது வளி நோயைக் காட்டும்.

இதனை,

"அணுகு நெய் பரம்பிற்காணில் அனில நோய்" என்பதாலும் அறிக.

பித்தம் என்னும் அழல்நீர் நெய்க்குறி :

"ஆழி போற்பரவின் அஃதே பித்தம்."

(பொருள்.) எண்ணெய்த் துளி மோதிரம் போல் இடைவிட்டுப் பரவினால் அந்நீர் பித்த நோயைக் காட்டுவதாகும்.

இதனை, "வட்டமாயின் தனிவிலாப் பித்த நோயாம்" என்பதாலும் அறிக.

**கபம் என்னும் ஐயநீர் நெய்க்குறி :**

"முத்தொத்து நிற்கின் மொழிவதென்கபமே.'

(பொருள்.) எண்ணெய்த் துளி விட்டது விட்டவாறே சிறிதும் பரவாமல் முத்துப்போல் நிற்குமானால் அந்நீர் ஐய நோயைக் காட்டுவதாகும். இதனை,

"முத்தெனின் ஐய நோய்தானே" என்பதாலுமறிக.

**தொந்த தோட நெய்க்குறி :**

"அரவிலாழியும் ஆழியில் அரவும்
அரவின்முத்தும் ஆழியில் முத்தும்
தோற்றில் தொந்த தோடங்களாமே."

என்பதினால், பாம்பில் மோதிரம், மோதிரத்தில் பாம்பும், பாம்பில் முத்தும், மோதிரத்தில் முத்தும் இரண்டிரண்டாய்க் கலந்திருந்தால் கலப்புக் குற்றங்களாம்.

**முக்குற்ற நெய்க்குறி :**

"அழுந்து நெய்த்துளி அதுவுமும்மலத்தில்
எழுந்தகுறிகளெல்லா மொன்றில்
தோற்றுவது முத்தோட மென்றுன்னே."

(பொருள்.) நீரில் எண்ணெய் விட்டால், அத்துளி அமுத்துவதும், முக்குற்றங்களில் தனித்தனியுண்டான நெய்க் குறிகளெல்லாம் ஒன்றினிடத்திலேயே காணப்படுவதும் முக்குற்ற மென்றுணர்ந்து கொள்க.

**தீரும் நோயின் நெய்க்குறி :**

"விருத்தப்படிவமும் தரித்துப் பரவலும்
தெரித்த நெய்க்குறிக்கினி வருத்தமென்னுலகீர்
ஆங்கப்பரவல்போல் நீங்கும் எப்பிணியுமே."

(பொருள்.) நீரில் விடும் நெய் வட்டவடிவமாகவும், மெல்லப் பரவலுமாகக் காணப்படுமானால், அந்நோயாளியைப் பற்றிய வருத்தம் ஒன்றுமில்லை. அந்நெய் எவ்வாறு பரவுகின்றதோ அவ்விதமே எவ்வித நோயும் நீங்கும்.

**இதுவுமது.**

"அரிவாகு நத்தை அரியாதனத்தை
அறிதருகுறியால் மறுவின்றுயிர்க்கே."

(பொருள்.) நெய்யானது திருமாலினது இடது தோளிலிருக்கும் சங்கினைப் போலவும், சிங்காசனத்தைப் போலவும் காணப் படுமானால், அந்நீரையுடைய நோயாளியின் உயிர்க்கு யாதொரு குற்றமுமில்லை.

"நாணயச் சத்தியை வினையைக் காணினோ
நாகுயிருடல் விடுத்தேகினும் மீளுமே."

(பொருள்.) நெய்யானது நல்ல குடைபோலவும், யாழைப் போலவும் காணப்படுமானால் அந்நீரையுடைய நோயாளியின் உயிர் உடலை விடுத்து வெளிப்பட்டாலும் மறுபடி வந்து சேரும் என்பதாம்.

**இதுவுமது.**

"முல்லையரும்பு குவளைப்பூவுஞ்
சொல்லிய துளியுள் தோற்றிடுமாயின்
இல்லை இல்லை நோயென்பது சரதமே."

(பொருள்.) நெய்யானது முல்லைமொட்டுப் போலவும், தாமரைப் பூப்போலவும் காணப்படுமானால், அந்நீரையுடைய உடலில் நோயில்லை என்பது உண்மை.

**தீரா நோயின் நெய்க்குறி.**

"எண்ணெய் விடின் சமேலெனப் பொங்கிப் பரவின்
திண்ணமப் பிணிக்குச் சிகிச்சையிங்கின்றே."

(பொருள்.) நோயாளியின் நீரில்விடும் எண்ணெய்த்துளியானது விரைந்து பொங்கி அந்நீர் முற்றும் பரவுமாயின், அந்நோய்க்கு இவ்வுலகத்தில் மருந்தில்லை என்க.

**இதுவுமது.**

"விடுதுளி சிதறி வெவ்வேறொன்றாமல்
கடுகெனப் பரவின் கைவிடல் முறையே."

(பொருள்.) நீரில் விட்ட எண்ணெய்த் துளி, வெவ்வேறாகக் கடுகைப் போலச் சிதறி விட்டால், அந்நோயாளிக்குப் பரிகாரம் செய்யாமல் விடுவதே நலம் என்பதாம்.

**இதுவுமது.**

"அவியு மூத்திரமு மணைந்தொன்றினாவி
அவியும் என்றால் கௌதமர் அறையே."

(பொருள்.) நீரில் விட்ட எண்ணெய்த் துளியும் நீரும், வேறுணர முடியாமல் ஒன்றுபடக் கலக்குமானால், அந்நோயாளியின் உயிர் நீங்குமென்பது கௌதமருடைய கொள்கையாம்.

**இதுவுமது.**

"ஓதுவநெய்த்துளி யுள்ளமுந்தில் தீதென
மாதவ கற்பம் மன்னப்பயிலுமே"

(பொருள்.) நீரில் விட்ட எண்ணெய்த் துளியானது அந்நீருக் குள்ளே அழுந்திவிடுமாயின், அந்நோய் தீராதென்று "மாதவ கற்பம்" என்னும் நூல் உறுதியாய்க் கூறும்.

**இதுவுமது.**

"அம்புகட் கம்முசலம் சூலமொடுவாள்
கும்பம் வெள்ளிலையெனக் குறிபடின் தீதே."

(பொருள்.) நீரில் விட்ட எண்ணெய்த் துளி அம்பு, வாள், இரும்புலக்கை, சூலம், ஈர்வாள், கும்பம், வெற்றிலை இவைகளில் ஒன்றின் குறியாகக் காணப்படின் தீரா நோயென அறிக.

"எருதறு கியாளம் இபம்புலி மறியரி
நானர வழுங்குபுள் நரிமர்க் கடகரம்
பூசைதேளி வற்றைப் போலுரு தோற்றின்
பேசுவதென்னைப் பிணி தணியாவே."

(பொருள்.) நீரில் விடும் துளியானது எருது, சிங்கம், ஆளி, யானை, புலி, ஆடு, பன்றி, மனிதன், பாம்பு, ஆமை, பறவை, நரி, குரங்கு, கழுதை, பூனை, தேள் இவற்றுள் ஏதேனும் ஒன்றாகத் தோன்றுமாயின் அந்நோயைத் தீர்ப்போம் என்று உறுதி சொல்வதில் பயனன்று (அந்நோய் தீராது என்பதாம்).

**தீரும் தீரா நோயின் நெய்க்குறி.**

(சத்தியா சாத்தியக் குறி.)

"சல்லடைக் கண்போல் தனித்தனித் துவாரமாய்ச்
சொல்லுமுன் அற்றிடில் தொடரென் கரமெனக்
கௌதமர் உரைப்பினும் கபத்தால் கண்படும்
தவியா வணங்கது சாத்தியம் என்பரே."

(பொருள்.) நீரில் விடும் நெய்த் துளியானது விரிந்து பல கண்களையுடைய சல்லடை போல் காணுமானால், அந் நோயாளியின் கையைப் பிடிப்பதேனென்று கௌதமர் சொன்னாலும், உடலில் கபம் இருத்தலின், அவ்வாறு காணப் படுமாதலால், அந்நோய் தீரும் என்பாருமுளர்.

**கரும சாந்தியின் பயன்.**

"கரும நோய் இவையெலாம் கண்ணுதல் அளித்தருள்
கருமகாண்டக் கடன்கண்டவ்வ வற்றை
ஒழிதுயர்மருந்துணின் உம்பரைப் போலச்
செழித்து நாற்பொருளும்சேர வாழ்குவரே."

(பொருள்.) நோய்கள் கருமத்தால் உண்டாவதால் மக்கள் சிவனார் செய்த கரும காண்டம் என்னும் நூலில் சொன்னபடி கரும சாந்தி செய்த பின்னர் உயர்ந்த மருந்துகளை உண்டால் நோய் தீர்ந்து தேவர்களைப் போலப் பல்லாண்டு நீடித்த வயதுடன் நாற்பொருளும் (அறம், பொருள், இன்பம், வீடு), ஒருங்கு கை கூடி நலமாய் வாழ்வார்கள்.

**நீர்க் குறி.**

"ஓங்கிய வாதத்தோர்க்கு
நீர்விழுங்குணமுரைக்கின்
பூங்கொடி கடுத்து தொந்து
சிறுத்துடன் பொருமி வீழும்
பாங்குடன் பித்தத்தோர்க்குப்
பசியநீர் சிவந்து காட்டி
ஏங்கவே சுருக்கதாக
வெரித்துடன் கடுத்துவீழும்"

(பொருள்) வாத நோயாளர்களுக்கு நீர் விழும்போது கடுத்து நொந்து சிறுத்துப் பொருமிவிழும். பித்த உடலினர்க்கு நீர் பசுமையாய்ச் சிவந்து எரிச்சலுடன் கடுத்திறங்கும்.

"வீழுமே சேத்துமத் தோர்
நீர்க்குணம் விளம்பக் கேளாய்
நாளுமே வெளுத் துறைந்து
நலம் பெற வீழுங் கண்டாய்
வாள் விழி மானே தொந்த
ரோக மானிடர்க்குத் தானே
தாழு நீர் பலநிறந்தா
னென்னவே சாற்றினோமே"

(பொருள்.) சேத்தும உடலினர் நீர் வெண்மை நிறமாகவும், உரைந்துமிருக்கும். தொந்த உடலினர் நீர், பல நிறமாக அதாவது குற்றத்தின் சேர்க்கைக்குத் தக்கவாறு இருக்கு மென்றறிக.

**அபிப்பிராயங்கள் (வேறு).**

"மூத்திரம் வெளுத்திருக்கும்
முனைந்திடும் வாதத்துக்கு
மூத்திரம் சிவப்பு மஞ்சள்
நிறமது பித்தத்துக்கு
மூத்திரம் நுரைபோல் காணும்
முதிர்ந்திடும் ஐயத்துக்கு
மூத்திர லட்சணத்தை
யுரைத்தினர் முனிவர்தாமே."

(பொருள்.) மூத்திரம் வாதத்தில் வெளுத்தும், பித்தத்தில் சிவப்பு மஞ்சளாகவும், ஐயமிகுதியில் நுரையைப் போலுமிருக்கும். என்று அறியக் கடவை.

**(வேறு.)**

**நீர் நெய்க்குறி (அறுசீர் விருத்தம்).**

"பிணியுள்ளோர் நீரையேற்றுப்
பொழுதுமுன் வைத்தபின்னர்
துணிவுறு துரும்பி லெண்ணெய்
தோய்த்தொரு துளியேவிட்டால்
அணுகி நீர்ப்பாம்பிற்காணின்
அதிலநோய் வட்டமாயின்
தணிவிலாப் பித்தநோயாந்
தங்குமுத்தைய நோயே."

(பொருள்.) நீரில் விடும் ஒரு துளி எண்ணெயானது பாம்பைப் போல நீண்டால் வாத நோயும், மோதிரம் போன்று இடைவிட்ட வட்டமாயிருந்தால் பித்த நோயும், முத்துப்போல் அப்படியே இருந்தால் ஐய நோயுமாகும்.

"தொந்தநோயுறு நீர்தன்னிற்
றுரும்பினிலெண்ணெய்தோய்த்தே
அந்த நீர்தன் மேல்விட்டால்
அது புல்லனுனிபோலாயின்
மூந்துறுவாத பித்த
மூயற்சி யென்றறியக் காட்டும்
கந்துரு வென்ன வெண்ணெய்
நின்றிடிற் கபமும் வாதம்"

(பொருள்.)—கலப்பு நோய் நீரில் எண்ணெய்த் துளி விட்டால் அது புல் முனை போல் பரவினால், வாத பித்த கலப்பு நோயென்றும், கந்துரு போல் பரவினால் கபவாத கலப்பு நோயென்றும், தெரிந்துகொள்ளல் வேண்டும்.

"வெய்யநீர் தன்னிலெண்ணெய்
மேலர்த்தங் கீழிற்பாதி

அய்யவிப்படியே காணின்
அது பித்தக் கபநோயாகும்

தய்யலே யுதிரம் போனீர்
எண்ணெயும் சமித்துத் தாழின்

உய்யுமாறில்லை சந்நி
வாதநீருரைத்த தாமால்"

என்பதினால், நீரில் விழும் எண்ணெய்த் துளி பாதி மேலும், பாதி கீழுமானால், அது பித்த கப நோயாகும். சிவந்த நீரில் விட்ட நெய்த்துளி நீரின்மேல் நிற்காமல் உள் அமுந்திடுமானால், அது சந்நிவாத நீராகும். இந்நீர்க்குறி அந்நோயாளி பிழைப்பான் என்பதையும் உணர்த்துவதாகும்.

"தோற்றிய வமூரிமீதில்
துளி எண்ணெய் விட்டுப்பார்க்கில்

ஏற்ற கண்ணாடி சிங்கம்
இயல்பக்கியாமை செந்நாய்

மாற்று குக்குடம் வராகம்
வானரம் பூனை நற்றேள்

பார்த்திபர் சூலந்தோன்றில்
பகரசாத்தியமதாமே"

(பொருள்.)—நீரில் ஒரு துளி எண்ணெய் விட்டு அது பரவும் முறையை உற்றுப் பார்த்துக்கொண்டிருப்போமானால், கண்ணாடி, சிங்கம், பறவை, ஆமை, செந்நாய், இவைகளைப் போலவும், குக்குடம், வராகம், வானரம், பூனை, தேள் இவைகளைப் போலவும், அரசர் கையிலிருக்கும் சூலம் போலவும், எண்ணெய்த் துளி பரவிக் காட்டுமானால் அந்நோய் தீராததாகும்.

"அங்கநீர் தன்மேலெண்ணெய்
துளி விடிலணையும் சங்கம்
துங்கமாம் வினைசொன்ன
குறளியும் பினாகம் வல்லி
இங்கியையது போற்சாய்கை
யிருந்திடிற் பிணியுந்தீரும்
செங்கையின் நெல்லிபோலத்
தெரிந்தவை செப்பினோமே"

(பொருள்.) நீரில் எண்ணெய் விட்டுப் பார்த்தால் அத்துளி சங்கு, வீணைக் குறியவள் உருவம், வில், கொடி என்னும் இவற்றைப் போல் பரவிக் காட்டுமானால் நோய் தீரும்.

**தீர்தல், தீராமைகளைக் குறிக்கின்றது (வேறு).**
**ஆசிரிய விருத்தம்.**

"இரவினில் வட்டில் வைத்தே
யேகின்ற சலத்தில் மீதே
இருளது புலருங்காலை
ஏற்கவே எண்ணெய் கொண்டே
ஒரு துளி விட்டுப் பார்க்கின்
உவந்துடன் பரவிற்றாயின்
உத்தம சாத்யமென்றே
யுரைத்தனருலகோர் கேட்கப்
பரவுதல் மந்தமாயின்
சாத்திய மந்தமாகும்
பவமஃதகமீதில்
பரிடாக் கட்டியாயின்
அரனயன் தேவராலு
மருந்தவ முனிவராலும்
அசாத்திய மென்று சொன்னார்
அறிவுளீரறிந்து கொள்வீர்"

என்பதினால்; நோயாளி இரவில் நன்றாய்த் தூங்கி விடியுந் காலையில் கழிகின்ற நீரை, ஒரு கண்ணாடிப் பாத்திரத்தில் பிடித்து, அதை வெய்யிலில் வைத்து, அதன் மேல் ஒரு துளி

எண்ணெய் விட்டுப் பார்த்தல், அஃது உடனே நன்றாய்ப் பரவு மாயின் நோய் விரைவில் தீருமென்றும்; விட்ட துளி விட்டபடியே பரவாமல் இருக்குமானால், அயன், அரன், தேவர்கள், முனிவர்கள், ஆகியவராலும் அந்நோய் தீர்க்க முடியாதென்றும் தெரிந்து கொள்ளவேண்டும்.

**(வேறு.)**

**அறுசீர் விருத்தம்.**

**வாதம், பித்தம், காமாலை நீர்கள்.**

"உடலுறு பிணியைக் காண
உண்மைவாகட நூல் சொல்லும்
படருமூத்திரக் குறிப்பைப்
பார்க்குங்கால் வாதம் வெள்ளை
திடமுறு பித்தஞ் சற்று
சிவப்பு மஞ்சள் போல் காணும்
புடைமிகச் சிவப்பு மஞ்சள்
போன்றிடிற் காமாலை யாமே."

என்பதினால்; உடம்பிலுண்டாயிருக்கும் பிணிகளை யறிவதற்கு உண்மையான மருத்துவ நூல் சொல்லும் குறிகளில் ஒன்றாக யிருக்கும் மூத்திரக் குறியை ஆராயின், அது வெள்ளை நிறமாயின் வாதநோயென்றும், சிவந்த மஞ்சள் நிறமாயின் பித்த நோய் என்றும், மிக்க செம்மஞ்சள் நிறமாயின் காமாலை நோய் என்றும் தெரிந்துகொள்ளவும்.

**கப நீர் நிறம்—வாதம், பித்தங்களின் நெய்க்குறி.**

**(வேறு) அறுசீர் விருத்தம்.**

"நிலமிகு கபமே யாகின்
நிறைநுரை போன்றிருக்கும்
இலகுமம் மூத்திரத்தில்
எண்ணெய்யை விட்டுப்பார்க்கில்
கலகஞ் செய் வாதத்திற்குக்
காணவே நீளமாய்ப்போம்
பெலனுறு மெய்யைவாட்டும்
பித்தமே சிதறிக் காட்டும்."

என்பதினால்; கபநோய்க்கு நீர் நுரைபோலிருக்கும்; அந்நீரில் எண்ணெய் விட்டுப் பார்த்தால் அந்த எண்ணெய்த் துளி, உடம்பிலிருப்பது வாத நோயாயின் நீளமாகவும், பித்த நோயாயின் சிதறியும், காண்பிக்கும்.

**கபம், முக்குற்றம், சாத்தியம், அசாத்தியங்களின் நெய்க்குறி.**

**(வேறு.)**

"சாற்றிய கபத்தினுக்குச்
சல்லடைக் கண் போற்காணும்
தோற்றிய மூத்தோடந்தான்
சொல் மூன்று குறியுங்காட்டும்
வேற்றொரு துளியாய் நின்றால்
விருதாகுஞ் சாத்தியந்தான்
ஆற்றியே மெல்லப் பரவின்
அது சுகசாத்தியந்தான்."

என்பதினால்; எண்ணெய்த் துளி கப நோய்க்குச் சல்லடைக் கண்கள் போல் கண் விழுந்தும்; முக்குற்ற நோய்க்கு மூன்றுக்குஞ் சொல்லப்பட்டிருக்கிற குறிகள் கலந்தும், காணப்படுவன வல்லாமல், தீராநோய்க்கு விடப்பட்ட துளி பரவாமலும், தீரும் நோய்க்கு மெல்லப் பரவியும் காட்டும்.

**கௌதமர்—தேரர் நெய்க்குறி பற்றிய கருத்து வேற்றுமை.**

**குறிப்பு—கௌதமர்.**

நூலில் எண்ணெய்த் துளி சல்லடைக்கண் போல விழுவதைத் தீராநோய்க் குறி என்றும்; அந்நோய்க்கு மருத்துவம் செய்யாமலே விட்டுவிடுவது நல்லதென்றும் கூறினர். தேரர் அவரது கொள்கையை மறுத்து அவ்வாறு கண் விழுதல் கபத்தாலென்றும், அது தீருநோய்க்குறியே என்றும் கூறினர். அதனை

"சல்லடைக் கண் போல் தனித்தனித் துவாரமாய்ச்
சொல்லு முனற்றிடில் தொடலென்கரமெனக்,
கௌதமரறையினுங் கபத்தாற் கண்படும்
தவியா அணங்கது சாத்தியமென்பரே."

என்னும் அகவற்பாவாலறிக.

இதனை ஆதரித்து "சாற்றிய கபத்தினுக்குச் சல்லடைக் **கண் போற்காணும்**" என்றார் இந்நூற்றலைவரும்.

ஈண்டுச் "சாற்றிய" என்னுஞ் சொல் "சாத்திய" எனவும் பாடமுண்டு.

விடப்பட்ட எண்ணெய்த் துளியானது பரவாமல் அப்படியே யிருந்தால் அசாத்தியக் குறி என்றதை;

"பவமது உதகமீதில்
பரவிடாக் கட்டியாயின்
அரனயன் தேவராலும்
அருந்தவ முனிவராலும்
அசாத்திய மென்று சொன்னார்
அறிவுளீர் அறிந்து கொள்ளீர்."

என்பதாலுமறிதல்வேண்டும்.

தீரா நோயின் நெய்க்குறி (வேறு):

"நீரினிலமிழ்ந்து போனால்
நிகழ்ந்திடும் சாத்தியந்தான்
வாரிடு மூலையாய்! கேளாய்
வளையல் பாத்திரத்திலன்றிப்
பாரினிற்கு யவன்செய்மண்
பாத்திரந்தனி லானாலும்
சார நீருகுத்து வெய்யில்
தன்னிலை வைத்துப்பார்ப்பாய்."

(பொருள்) நீரினில் விடும் எண்ணெய்துளியானது அதில் அமிழ்ந்து போனால், அந்நோய் நீராது. அவ்வாராய்ச்சிக்கு மண் சட்டியும் உதவும் என்பதாம்.

தீருநோய் நெய்க்குறி (வேறு):

"இன்னமுங் குறிகள் கேட்கில்
இப்படிப் பலவாறுண்டு,
இன்னுமந் நீரிலெண்ணெய்
விட்டுநாம் பார்க்குங்காலை
மன்னியவை பலங்கள்
மனிதர்போல் மச்சங்கோவில்
உன்னிய பிரகாரம் போல்
உயர்ந்திடு ஆனை போலும்."

(பொருள்) நிரில் எண்ணெய் விட்டால், அவ்வெண்ணெயானது வைபவங்கள், மக்கள், மீன், கோவில், கோவில் பிரகாரம், பெரிய யானை இவற்றைப் போலவும் தோன்றும். இவை தீரும் நோயைக் குறிக்கும்.

"மலைகுடை விருக்கம் வெண்சா
மரையுடன் தாமரைப்பூ

கொலை செய்யுமானைக் கொம்பு
குல்லாய் கண்ணாடி சங்கு

வலைவிழியாளே கேளாய்
மகர தோரணங்கள் பூமி

தலைமையாம் வீணைபோலும்
சவுக்கமாமனையே போலும்."

(பொருள்) மலை, குடை, மரம், வெசசாமரை, தாமரைப்பூ, யானையின் கொம்பு, குல்லாய், கண்ணாடி, சங்கு, மகர தோரணங்கள், பூமி, இசைக்கருவிகள் (உயர்ந்த வீணை போன்றவை), சதுரமாயிருக்கின்ற வீடு ஆகிய இவைகள் தோன்றுமாகில் நோய்கள் தீரும் என்றறியவும்.

தீரும் நோய் நெய்க்குறி (வேறு):

"பாகலிலைலையே வண்டும்.
பகருந்தாமரையின் மொக்கும்

ஏகசிங் காதனங்கள்
இவைகள் போலுருவங்கண்டால்

தேக மானிடரிடத்தில்
சேர்ந்திருந்திடுக்கண் செய்யும்

ரோகமே நிற்கமாட்டா
துரைக்குஞ் சாத்தியக்குறிப்பே."

(பொருள்) பாகலிலை, வண்டு, தாம்ரை மொக்கு, சிம்மாசனம் என்னும் இவைகள் போன்ற வடிவங்கள் காணப்படுமானால் இவைகள் தீரும் நோய்க்குறிகளென்று சில நூல்கள் சொல்லுவனவாம்.

தாமதசாத்திய நெய்க்குறி :

"மத்தளங் கொடியேபானை
மலமூண்ணும் பன்றி காட்டில்
வைத்திடு மிருக நாட்டில்
வாழ்ந்திடுங் குயவன் பண்ணுஞ்
சுத்தமாஞ் சக்கரம் போல்
தோன்றிடு முருவங் கண்டால்
சத்தியமாகச் சொன்னோம்
தாமத சாத்தியத்தான்."

என்பதினால், மத்தளம், கொடி, பானை, பன்றி, காட்டு விலங்கு, குலாலன் திகிரி என்னும் இவற்றைப் போன்ற வடிவம் எண்ணெய்யில் காணப்பட்டால் தாமத சாத்தியமென்று உண்மையாய்ச் சொன்னோம்.

தீரா நோய் நெய்குறிகள் (வேறு) :

"நாலுகா லொருகாலிந்த
ஞாலத்திலுளைக்கு மூன்று
காலுள மனிதர்காயம்
கனக்கவே பெருத்த மாந்தர்
மாலுறத் தலையில்லாத
மாந்தர் முன் கையிற் கத்தி
சூலமே யுலக்கை வில்லு
தோன்றிடு மரிவாள்பாம்பே."

(பொருள்) சிறு நீரில் இந்த உலகத்தில் சொல்லப்படுகின்ற ஒரு கால், மூன்றுகால்கள், நான்கு கால்களையுடைய மனிதர் போலவும் கையில் கத்தி, சூலம், உலக்கை, வில், அரிவாள், பாம்பு இவற்றைத் தாங்கியிருக்கும் மனிதன் போன்றும் காணப்படின் தீராவாம்.

"பூனையே எலியே யம்பு
புகல் நண்டு சுரைக்காய் கோழி
கானிடைப் புலி சூரங்கு
கண்ணழல் பொங்கு சிங்கம்
ஈனமில் குதிரை வெற்றி
லைக்கொடி மற்றுமுள்ள
ஊனமில் எருது காட்டில்
உழுன்றிடுங் கரடிதானே."

(போருள்) பூனை, எலி, அம்பு, நண்டு, சுரைக்காய், கோழி, புலி, குரங்கு, சிங்கம், குதிரை, வெற்றிலைக் கொடி, எருது, கரடி ஆகிய இவற்றின் வடிவங்களைப்போல் தோன்றில் அந்நோய் தீராவாம்.

"பறந்திடும் பட்சியாமை
பகருநற் றேளைப்போலும்
சிறந் தெண்ணெய் விட்டபோதில்
சிறியதாய்ச் சுருங்கினாலும்
புறந்தருங் கூந்தல் மானே
பொங்கியே பறந்திட்டாலும்
அறிந்திடுங் குறிகளெல்லாம்
அசாத்தியக் குறிப்புத்தானே."

(பொருள்) பறவை, ஆமை, தேள், பரவாமை, பொங்கிப் பரவல் என்னும் இவைகளெல்லாம் தீரா நோயின் குறிகளாவனவாம்.

"இவ்விதமூத் திரத்தி
னிலக்கண முற்றுமந்தச்
செவ்விய மருத்து முன்னோர்
செப்பிய வகைகளெல்லாம்
நவ்விபோல் விழியினாளே
நாட்டின் மானிடருக்காக
அவ்விய மில்லாநெஞ்சத்
தகத்திய னுரைத்ததாமே."

(பொருள்) நீரில் எண்ணெய் விட்டுப் பார்க்குங் காலத்தில் உண்டாம் குறிகள் யாவும் தமிழ் மொழியில் முன்னோர்கள் சொல்லியுள்ள மருத்துவ நூலின்படி அகத்திய முனிவர் சொன்னதாகும்.

சந்நிவாத நோய் தீரும் நோய் நெய்க்குறி (வேறு):

"இருமுடலிற் பினியிழிநீர்த் துரும்பாலிட்ட
எண்ணெய் செறிந்தசைந்து புதைந் தொன்றிற்பாதி
மருவிமிதக் கிற்சந்நிவாத நோயாய்
மாறுமிழிகின்ற தனிநீருள் வாய்ந்த

பரவரிய எண்ணெய்தானான்கு மூலை
பது ங்கண்ணாடி குடைபணிலந்தேரின்
உருளை சாய் மரந்திகழ்குண்டலி போற்றோன்றில்
ஊரா நோய் மாறுமிதை யுணர்ந்து கொள்ளே."

(பொருள்.) நீரில் விட்ட ஒரு துளி எண்ணெயில் பாதி கீழ் அழுந்தியும், பாதி மேல் மிதந்தும் தோன்றில் சந்நிவாத நோயும்; சதுர வடிவம், தாமரை மலர், கண்ணாடி, குடை, சங்கு, தேர் உருளை, சாய்ந்த மரம், குண்டலி, ஆகிய இவற்றைப் போற் காணப்படின் அந்நீரையுடைய நோய்கள் தீருவனவாம்..

**தீரும், தீரா நோய்களின் நெய்க்குறி (வேறு).**

"உணர்ந்த மெய்வழி நீரிலிட்ட எண்ணெய்
ஓங்கிய சோற்றுக்கும் யுங்குறளனுற்ற
இணங்கிய வெற்றிலை குதிரை யெருது போல
இருந்தாலெறிய நோய்போயினிது வாழும்
மணந்திகழ் புள்ளாமை நாய் சிங்கம் பன்றி
மாநாகம், குரங்கு, தேள் பூனை மனிதன்
இணங்கிய எண்ணெயிற் றோன்றிற் செத்தாரென்றே
இயம்புக நல்லறிவினா லிசைந்தோர் தாமே."

(பொருள்.) நோயாளியின் நீரில் விடப்பட்ட எண்ணெய்த் துளியானது சோற்றுக்கும்பம், குள்ளன், வெற்றிலை, குதிரை, எருது என்னும் இவற்றின் வடிவங்கள் காணப்படுமானால், மிகுந்த நோய் நீங்கி இன்பமாய் வாழ்வர் என்றும், பறவை, ஆமை, நாய், சிங்கம், பன்றி, பாம்பு, குரங்கு, தேள், பூனை, மனிதன் என்னும் இவைகள் போலக் காணப்படுமானால் நோய் நீங்காது துன்புறுவர் என்றும் உணர்வாயாக.

**தீரா நெய்க்குறி, தீருங்குறி (வேறு).**

"இசைந்த மெய்யிற் கழிந்த நீர் தனிலேயிட்ட
எண்ணெயிலே குறைத்தலை தோன்றிடுமேயாயின்
அசைந்த வுயிர் போனவனே யென்று சொல்க
அஃதொழிந்து நீரிலெண்ணெய் அதனின் மேலே
பகுந்தொரு நாமவட்டம் பட்டிருக்கில்
பற்றியநோய்தனிற் சாகான் பனைந்து வீங்கி
அசைந்து கனத்துப் புடைத்துத்திரண்டு விம்மி
அழுத கும்பம் போலு மூலையணங்கினாளே"

(பொருள்.) உடம்பிலிருந்து இறங்கிய சிறு நீரில் விட்ட எண்ணெய் தலையில்லாமுண்டம் போலக் காணப்பட்டால் இறந்துவிடுவான் என்றும், நாமவட்டம் போல் காணப்படுமானால் இறவான் என்றும் அறிக.

**சுரநீர் விகற்பம் (வேறு).**

"சுரமதிற் றெளிந்த நீர்தான்
சுகமறும் வாதங் காணும்
சுரமதிற் சுருக்கும் பச்சை
சுரபித்த வெட்டையாகும்
சுரமதிற் செவந்த நீர்தான்
தோடமுஞ் சந்நியுண்டாம்
சுரமதிற் சுணணம்போலத்
தோய்ந்திட வசாத்தியந்தான்."

(பொருள்.) சுரத்தில் தெளிந்த நீர் இழியுமானால் வாத நோயும், நீர் சுருக்குடன் மஞ்சள் நீர் இழியுமானால் பித்த வெட்டையும்; சிவந்த நீர் இழியுமானால் ஏழுவகைத் தோடங் களில் ஒரு தோடம் அல்லது சந்நியும் உண்டாகும்; சுரத்தில் இழியும் நீரின் அடியில் சுண்ணம் போல் படிந்திருக்குமானால் அசாத்தியமாகும்.

**வெகு மூத்திரக் குறி இலக்கணம்.**

"அன்னமே கேணீ மாந்தர்
அருந்து நீர் மிகவும் பொங்கித்
தன்னுளே சுவரு வண்ணம்
தங்கியே மிகுதியாகி
இந்நிற மில்லா நாளு
மிடைவிடா திறங்குமாயின்
வின்னமும் செய்யும் வெய்ய
வெகு மூத்திரத்தின் வாறே."

(பொருள்.) வெகு மூத்திரத்தின் தன்மைகளாவன; தாம் நாள்தோறும் குடிக்கும் நீர், நீர் வேண்டப்படும் கருவிகளில் சேர்ந்து தங்காமல் நீர்ப்பையிலேயே தங்கிப் பெருகுந் தன்மையை யடைந்து பலநிறமாக அடிக்கடி ஓய்வில்லாமல் இறங்கிக் கொண்டே இருப்பதாகும். இஃது அவ்வுடலுக்குக் கெடுதியை உண்டாக்கும்.

மேக நீர் விகற்பம் (வேறு).

"நீரினிற் சுண்ணம் போல
நின்றிடு னெலும்புருக்கி
நீரினி னீர்மோர் நெய்யோ
னின்றிடின் மேக வெட்டை
நீரினில் முன்னும் பின்னும்
நின்றிடிற் பிரமியந்தான்
நீரினி லெறும்பு மீக்கள்
நெருங்கிடில் சாத்தி யந்தான்."

(பொருள்.) நீரை ஒரு பாத்திரத்தில் பிடித்து வைத்தாலும் அல்லது நீரைவிட்ட இடத்தில் சுண்ணம் போல் படிந்து இருந்தாலும் எலும்புருக்கி நோயாம். நீரினில் நீர் கலந்த மோர் போலும், நெய்யைப்போலும் படிந்திருந்தால் மேக வெட்டையாம். நீர் போகு முன்னும், நீர் கழிந்த பிறகும் நீர்த்துளையை அடைத்திடின் பிரமியமாம். விட்ட நீரில் எறும்பும், ஈக்களும் மொய்த்தால் மதுமேக நோயையும் குறிக்கும். அந்நீரையுடைய நோயாளியின் நோய் தீராவாம்.

மூத்திர விலக்கணம் (வேறு).

"வாதரோக நந்தெளிந்தான் மஞ்சளித்தான் மற்றையது
சீத நுரைத்தாற் பலவாம் சேர்ந்தநோய்—ஈதகலா
மூத்திரத்தினுண்மையை மொழிந்தாம் இனிச் சொல்வாம்
நாத்திறத்திலுள்ள வகை நாம்."

(பொருள்.) நீர் தெளிந்திருந்தால் வாத ரோகத்தையும், மஞ்சளித்திருந்தால் பித்த ரோகத்தையும், வெளுத்து நுரைத் திருந்தால் கப ரோகத்தையும், மேற்கண்ட இலக்கணங்கள் இரண்டிரண்டாய்க் கலந்தால் தொந்த ரோகத்தையும் காட்டும். இந்நோய் இந்நிறங்களை விட்டு நீங்கா. ஆகையால் மூத்திர உண்மையைக் கூறினோம்.

நீர்க்குறிச் சிறப்பு.

"தர்க்க சாத்திரிகளானோர்
தங்களிற் றேர்ந்து நாடி
வர்க்கமாம் நாடி தன்னில்
வருவது மயக்க மென்றே

உற்ற நீர் பரீட்சையாய்ந்தே
யுரைத்தனரிதற்கு நோய்
மற்றொரு விதி நூலில்லை
மருத்துவக் கலை வல்லோர்க்கே."

(பொருள்.) மருத்துவக் கலை வல்லவருக்கு நோயைக் கணிப்பதற்கு நீர்க்குறியைக் காட்டிலும் வேறில்லை என்னலாம். ஏனெனில் மற்றக் கைக்குறியாகிய நாடியைக் கொண்டு நோயைத் திண்ணமாய்க் கணித்தற்கியலாது.

**குறிப்பு.**—இங்ஙனம் நீர்க்குறியைச் சிறப்பாகக் கூறியிருப்பினும், எண்வகைத் தேர்வுகளில் நாடியே சிறந்ததென மற்றொரிடத்தில் கூறியுள்ளதை ஞாபகத்தில் வைத்துக் கொள்ளவும்.

## இரத்த மிகுதி நீர் இலக்கணம்.

"விட்ட நீர் சிவந்திருக்கும்
வேற்றுமை கண்டபோது
மட்டிலா விரத்தமிஞ்சி
வளர்ந்ததாற் சிவந்ததோன்றும்
உட்டிண மிகுத்ததாலே
யுற்றநீரிறு கிற்றென்றே
இட்டமாயறி வதற்கிங்
கிடமென வியம்பலாமே."

(பொருள்) விட்ட நீரானது மிகச் சிவந்திருக்குமானால், அது சூருகிக் கொதிப்பால் ஏற்பட்ட நீராம். இக் கொதிப்பு உட்டிண மிகுதியினால் ஏற்பட்டு நீர் சுருங்குவதால் உண்டானதென்று கூறுதல் வேண்டும்.

## பித்தகோப நீர் நிறம்.

"மெத்த நீர் சிவந்து தோன்றி மெதுவுறத் தெளிந்து நின்றால்
பித்தத்தின் கொபமென்று பேசுதற்கிடமதாகும்
இத்தை மூலத்தின் வெப்பாற் எரிந்து—நீர் சிவந்ததென்றும்
வற்றிய வாட்சி தன்னால் வளமுறத்தெளிந்த தென்னே."

(பொருள்.) மூற்கூறிய நீரின் நிறத்தை காட்டிலும் அதிகம் சிவப்பானால் அந்நீர் பித்தமிகுதியினால் உண்டானதாம். இதை மூலச்சூட்டால் உண்டானதென்றும் செப்புவர்.

### சேத்துமகோப நீர் நிறம்.

"வளமுற வெள்ளையாகி வற்றி நீர்குறுகி நின்றால்
தெளிவுறச் சேத்துமத்தின் செய்கை யென்றுரைக்கும
குளிர்மையினாலே வெள்ளையாகிய குணமாமென்றும்
இளகு பச்சிரத்தந்தன்னா லிறுகின தென்றுஞ் சொல்லே."

(பொருள்) நீர் வெண்மை நிறம் பொருந்தி அளவினும் குறைந்திருந்தால் அது சேத்துமத்தாலுண்டான குணமாகும். குளிர்ச்சியினால் வெண்மை நிறமாகுமென்றும் குருதியின் குற்றத்தால் அளவிற் குறையுமென்றும் சொல்க.

### வாதகோப நீர் நிறம்.

"சொல்லரும் வெள்ளையாகித் தோயமும் தெளிவதானால், [வல்லப
மிகுந்த வாதம் வருத்திய குணமென்றோதாய்,
நல்லதோர் குளிர்மை தன்னால் நாடிய வெள்ளை யென்றே,
அல்லல்சேர் வரட்சியாலே யந்த நீர் தெளிவதாமே."

(பொருள்.) நீர் வெள்ளை நிறம் பொருந்தித் தெளிந்திருக்குமானால், அது வாத மிகுதியினாலுண்டானதாம். குளிர்ச்சியினால் வெண்மை நிறமும், வரட்சியினாலே தெளிவும் ஏற்பட்டதென அறிக.

### இரத்த மிகுதி பித்தவாதக் கலப்பு நீர்.

"அந்த நீர் கனத்திங்கிறுகலாய் நின்றாலிரத்தமிஞ்சி,
வந்தவிக் குணங்களாகு மற்றது வல்லாலூனை,
விந்தையா யந்த நீரில் மெல்லிதாயுகைத்து நின்றால்,
தொந்தித்தபித்த வாத மென்னுந் தொகையென வகைசொல் வாயே."

(பொருள்.) நீரானது கனத்து இறுகலாய் நின்றால், அஃது இரத்தக் கொதிப்பால் ஏற்பட்ட நீராம். ஈதன்றியும் தசை மென்மையாகக் கரைந்து அந் நீரில் கலந்து வெளிப்பட்டால், அது பித்த வாதக் கலப்பால் உண்டான தென்று பகருவாயாக.

### மக்கள் ஆண்டுக்கு தக்க நீரின் மாற்றம்.

"சேட்ட முன்சொன்ன வெல்லாம் சித்திடு மேதுக்
கென்றால்
மூட்டிய வயதினாலு முதிய காலத்தினாலும்
கோட்டு நட்சத்திரத்தின் குணங்களினாலும் வேறு
நாட்டமாய்ப் பித்தமிஞ்சி நவபல குணங்கள் காட்டும்."

(பொருள்.) இதுவரை நீருக்குச் சொல்லிய குணங்களெல்லாம் வயதினாலும், காலத்தினாலும் (பருவம்), உடுக்களின் மாற்றத் தினாலும் பித்தமானது அதிகப்பட்டுப் புதுப்புது குணங்களை உண்டுபண்ணும் என்பதாம்.

### உட்டிண நீர் (வேறு).

"நவமுறு சுரமுற்றோர்தந் நளினநீர் வெள்ளையாகி
உவருறத் தெளிந்து நின்றாலுட்டிண மென்று காண்பாய்."

(பொருள்.) புதிதாய்க் காய்ச்சல் கண்டவர்களுக்கு நீர் வெள்ளை நிறத்துடனும் உவர் பொருந்தின தெளிந்து மிகுந்தால் உட்டிண மென்று அறிவாய்.

### முறைக்காய்ச்சல் நீர்.

"அவமுறைக் காய்ச்சலானா லந்த நீர் கனத்திருக்கில்
கவனமுற்றடர்ந்த காய்ச்சல் கடுகவிட்ட கன்று போமே."

(பொருள்.) முறைக் காய்ச்சலுள்ளவர்கட்கு நீர் கனம் பொருந்தி இருந்தால், அந் நோய் விரைவில் தீருமென்றறிக.

### மூன்று நாள் மாறல் சுர நீர் (கபால உட்டிண நீர்).

"விட்ட நீர் சிவந்து தோன்றி மிகவுமே தெளிவதானால்
மட்டிது மூன்று நாளை மாறலென்று சைக்க வேண்டும்.
இட்டமாய் முகனை தன்னி லிருகியே சிவந்த பின்பு
கட்டுநீர் வெள்ளையாகிற் கபாலத்திற் சேரும் பித்தம்."

(பொருள்.) நீரானது சிவந்தும், மிக்க தெளிவுற்று மிருந்தால், அந் நீர் மூன்று நாட்களுக்கொரு முறை மாறி வரும் காய்ச்சல் என்பதை உணர்த்தும் நீரானது இறுகிச் சிவந்திருந்து பிறகு வெண்மை நிறத்தை யடையுமானால் அந் நீரையுடைய நோயாளிக்குக் கபாலத்தில் பித்தமானது சேரும் என்று அறிவாயாக.

### தலைகனப்பும், மயக்கமும் காட்டும் நீர்.

"என்ன முன் சொன்னதல்லால் ஏந்திய நீரின்மேலே
வன்னமாய்ப் பருவமுள்ள வளையமாய்ப் பரந்து நின்றால்
சென்னியுங் கனத்து மெத்த தியக்கமுற்றிருக்கு மென்று
பன்னுசாத்திரிகளாய்ந்து பகர்ந்ததைப் பகர்ந்ததாமே."

(பொருள்.) நீரைப் பாத்திரத்தில் பிடித்து வைக்க அந் நீரின் மேல் பரப்பில் வளையம் போல் பரந்து நின்றால் அந் நீரை யுடையவர் தலைகனத்து மயக்கமுற்றிருப்பர், என்பதேயாம்.

### இடத்தலை நோய் நீர்.

"பகரு நீரடியிற்றாழ்ந்து பற்றிய சிவப்பானாலும்
நிகர் மஞ்சள் நிறமானாலும் நீர் கொஞ்சம் தெளிவானாலும்
மிகவுமே சென்னி தன்னில் விதமான விடது பக்கம்
இகல்புரி நோவுண் டென்று இயம்புவா யியல்பினாலே."

(பொருள்.) நீரைப் பிடித்து ஒரு பாத்திரத்தில் வைக்க, அதன் அடியில் செந்நிறமா யிருந்தாலும், மஞ்சள் நிறமா யிருந்தாலும், நீர் கொஞ்சம் தெளிவுற் றிருந்தாலும் தலையின் இடது பக்கத்தில் மிகவும் கடுமையான நோயுண்டென்று நீ கூறுவாயாக.

### வலத்தலை நோய் நீர்.

"இயல்பிலாச் சுரத்சேதார்க் கின்ன மியமபுநீர்
வெள்ளையாகி
செயமறக் கறுப்புமாகித் தெளிந்திடு நீருமாகி
வயமுற விருந்தால் புத்தி வளர் சென்னி வலது பக்கம்
துயருற நோவுண் டென்று சொல்லலாந் துலக்கமாக."

(பொருள்.) சுரமுடையவர்க்கு நீர் வெண்மையாகியும் கருப்பாகியும் தெளிந் திருக்கு மானால், தலையின் வலப் பக்கத்தில் வருத்தத்தைத் தரக்கூடியநோயுண் டென்று தெளிவாய்ச் சொல்லலாம்.

### காய்ச்சலுடன் கூடிய மார்பு நோயைக் காட்டும் நீரின் நிறம்.

"துலங்குநீரடியிற் பாதி தோயமூஞ் சிவந்து தோன்றிக்
கலங்கி மேற்றெளிவுமாகிற் காய்ச்சலுங் கடினமாகி
மலங்கிட மார்பு நெஞ்சும் வாதையுற் றிருக்கு மென்றே
இலங்கு சாத்திர நூல் வல்லோ ரியாவர்க்கு மியம்பினாரே."

(பொருள்.) நீரை ஒரு பாத்திரத்தில் பிடித்து வைக்க அதன் அடிப் பாதி சிவந்தும், கலங்கியும்; மேற் பாதி தெளிவுற்று மிருப்பின் அந் நீரை யுடையவனுக்கு மார்பும் நெஞ்சும் வலித்தலும்; மிக்க காய்ச்சலும் மிருந்திருக்கு மென்று அறியவும்.

**நீர்க் குண்டிக்காயில் கல்லிருப்பின் அதனை உணர்த்தும் நீர்.**

"நார்த்ததி நீர்பால் போல நவையுற்றங் கிழியுமானால்
மாரற்பமுற்ற நீரி லடிமண்டிக் கிடந்ததானால்
பாரிந்த மெழுகு மாங்காய் பற்றிய கல்லினாலே
சீருற்ற செய்கை யென்று தெரிவுறச் செப்பலாமே."

(பொருள்) நீரானது தயிர் நீரைப் போலவும் அதாவது தயிர்த் தெளிவைப் போலவும்) பாலைப் போலவும் இழிய மானாலும், அந் நீரின் அடியில் வண்டல் இருந்தாலும் இந் நீரை யுடையவனுக்கு நீர்க்குண்டிக்காயில் கல்லிருப்பதால் இக் குணம் ஏற்பட்ட தென்று யாவரும் அறியச் செப்பலாம்.

**இரத்த தொந்தி வியாதி, ஈரல் சுரம் இவற்றைக் காட்டும் நீர்.**

"செப்பு நீர் சிவந்து சற்றே தெளிவுமா யிருந்த தென்னில்
துப்புறு மிரத்தத்தாலே தொந்திந்த வியாதி யென்பாய்
அப்புநீர் கலங்கிக் கொஞ்ச மாகவே கறுக்குமாகில்
வெப்பஞ் நீரல்தாவி வெதுப்பிய சுரமுண்டாமே."

(பொருள்.) நீரானது சிவந்து சிறிது தெளிவுற் றிருந்தால் இரத்த தொந்திப்பால் உண்டான நீரென்றும்; நீரானது கலங்கிச் சிறிது கறுத்திருக்குமாயின் வெப்ப மானது ஈரலைத் தாக்கியதால் உண்டான காய்ச்ச லென்றறிவாயாக.

**இதய நோய் நீர்.**

"உண்டறு கின்ற நீர்தானுயர் தலை முடியே போல
கண்டிடு மெழுக தாமாங் காயினில் வியாதி யென்று
விண்டிடச் செய்வா யிந்த விதமுறு சாத்திரத்தைக்
கொண்டு தேர்ந் திருக்குமே கூறிய குணம்மி தாமே."

(பொருள்.) பெய்கின்ற நீரானது தலை முடியின் நிறத்தை யொத்திருப்பின், தமாகத்தில் பிணியுண்டாகு மென்று அறியவும்.

**நெய்க்குறி (வேறு).**

"கோதறு நீரிலுள்ள குணங்களைக் கூறுகின்றோம்
ஈதலால் வியாதி தன்னை யின்ன தென்றறிய நல்ல
சோதனை தன்னை யாய்ந்து சொல்லு வேன் துலக்கமாக
காதுரக் கேட்பீர் மிக்க கல்வி சாத்திரங் கற்றீரே."

(பொருள்.) இனி நீரிலுள்ள பிணி களையறிய வேறொரு சோதனை யாகிய நெய் குறியைக் கூறுவேன்; கேட்பீராக!

### நெய்க்குறிக்குரிய நீரைச் சேகரிக்கும் நேரம்.

"கல்வி சாத்திரங்கள் கற்ற கனதவமுனிவராய்ந்து
சொல்லு மூத்திரப் பரீட்சைச் சோதனையதனைக் கேளீர்
அல்லிருட் சாமம்ரண்டு சென்றதற் கப்பால் நீரே
நல்ல பீங்கானில் வாங்கி நல்லெண்ணெய் விட்டுப் பாரே."

(பொருள்.) விடியற் காலை ஏறக் குறைய நாலு மணிக்கு விழுகின்ற நீரைப் பீங்கான் பாத்திரத்தில் பிடித்து வைத்திருந்து அந் நீரில் எண்ணெய் விட்டுப் பார்க்கவும்.

### இரத்த மிகுந்த வெப்பு நீர் நெய்க்குறி.

"விட்டதோர் துளியெண்ணெய் விசியே பரந்து தோன்றி
வட்டமாய் நின்றதாகில் வளர்ந்திடும் ரத்தமிஞ்சி."

(பொருள்.) நீரில் விட்ட எண்ணெய்த் துளி விசிப் பரந்து வட்டமாய் நின்றால், அஃது இரத்தம் பொங்கலால் உண்டான தென்று அறிவாயாக!

### இரத்தக் குறைவு நீர் நெய்க்குறி.

"விரைவுடன் கதிர்போல் நீண்டு வேற்றுமைக் குணங்கள் கண்டால்
குருதிதான் கெட்டு நாசம் குன்றிய குணமதென்னே."

(பொருள்.) நீரில் விட்ட எண்ணெய்த் துளியானது சீக்கிரமாகத் திரை போல நீண்டால் குருதி கெட்டு குறைந்ததாலுண்டான தென்று தெரிந்து கொள்ளவும்.

### பித்தமிகுதி நீர் நெய்க்குறி.

"காயத்தினீரி லெண்ணெய் கதிர் முனை நீண்டதானால்
தீயுற்ற பித்தமீறிச் செய்குணமிது வென்றெண்ணி
நீயுற்ற குளிர்மைகூட்டி நெகிழ்ந்திடப் பேதி கண்டால்
நோயற்றுப் போகுமென்று நுவன்றனர் நூல்வல்லோரே."

(பொருள்.) நீரில் விட்ட எண்ணெய்த் துளி கதிர் முனையைப் போல் நீண்டால், பித்த மீறியதா லுண்டான தென்றறிக. இந் நோயில் பேதியுண்டானால், நோயற்றுப் போகும் என்று நூல் வல்லோர் நுவன்றனர்.

LC:4:6 143266

### சீதமிகுதி நீர்நெய்குறி.

"வல்லநல் லெண்ணெய் துளியா வார்த்ததில் நெகிழாதாகில்
சொல்லருங் குளிர்மை மீறித் தோஷமுற் றெய்து மென்றும்."

(பொருள்.) நீரில் விட்ட எண்ணெய்த் துளியானது நெகிழாமல் அப்படியே யிருந்தால், சீதமிகுதியால் உண்டான தென்று அறிவாய்.

### அசாத்திய நீர்நெய்க்குறி.

"செய்ய நல்லெண்ணெய் தன்னைச் சிறுநீரில் விட்ட போது
ஐயமதுறவே தாழ்ந்தா லசாத்தியக் குறியே யாகும்
உய்வதுமரிதா மாதி யொருபொருளுடைய சித்தம்
எய்துவதே யல்லாம லெம்மனோரியம் பொண்ணாதே."

(பொருள்.) நீரில் விட்ட எண்ணெய்த் துளி நீரினுள் அமிழ்ந்தால் அசாத்தியம் என அறியவும்.

### குளிர்மை நீர்.

"செய்ய நாவறட்சியில்லை தெளித்த நீர் சுவையுமில்லை
நய்யவே குளிரு மேனி நடுங்கிடும் வாய் நீரூறும்
மெய்யுடல் கரமும் காலும் வெதும்பிடு மிரவிலேநீர்
பெய்வது மிகுதியாகில் பேசுவாய் குளிர்மையென்றே."

(பொருள்.) நீர் தெளிந்திருந்தாலும், இரவில் அதிகமாக நீர் கழிந்தாலும் அஃது உடலின் அதி சீதளத்தைக் குறிக்கு மென்க.

### மூலைப்பால் நீர்க்குறி (தீரும் தீரா நோயறிய).

"சூழவியாண்பிள்ளை பெற்ற கோதையர் மூலைப்பால் வாங்கிப்
பழுதுறு வியாதியுற்றோர் பசியநீர்தன்னில் விட்டால்
கலவறக் கலந்ததாகில் காரிய மிகவும் நன்றாம்
வளமுறக் கலவாதாகில் மரணமென்றறியலாமே."

(பொருள்.) ஆண் பிள்ளையைப் பெற்ற தாயின் மூலைப்பாலை பிணியுற்றோரின் நீரில் விட்டுப் பார்த்தால், அந்த நீரில் அது கலந்தால் தீருமென்றும், கலவா விட்டால் மரணமென்று **மறிவாயாக**

### பன்றிக் கொழுப்பால் மரணமறிய (வேறு).

"மரணமென் றறிவதற்கு வராகத்தின் கொழுப்பை வாங்கிச்
சரணத்தின் மேலுங் கீழும் தடவியே வழித்து நாய்க்குத்
தரணியிற் போடத் தின்றால் சமித்திடில் மிகவும் நன்றாம்
அரணித்து வாந்தி பண்ணி லவத்தை யென்றறியலாமே."

(பொருள்.) பன்றியின் கொழுப்பை நோயுற்றோரின் காலின் மேற்பக்கமும் கீழ்ப்பக்கமும் தடவி வழித்து நாய்க்கிட, அது அதைத் தின்று சரித்துக் கொள்ளில் நற்குறியாம். அது நாய்க்குச் சரிக்காமல் வாந்தியானால் துர்க்குறியாம்.

### குருதிக்குறி (நீரும்தீராமை).

"குறியின்னங்கூறக் கேளாய் குளிர்ந்த தண்ணீரை வாங்கி
இறுகிய வருத்தக் கார ரிரத்தத்தி லிரண்டு துளியே
உறுதியாய் விட்டுப் பார்க்க வள்ளுறத் தாழ்ந்தானன்று
மறுகியே நெகிழுமாகில் மரணமென் றறியலாமே."

(பொருள்.) நோயுற்றோரின் இரத்தத்தில் இரண்டு துளியைக் குளிர்ந்த தண்ணீரில் விட, அஃது உள்ளழுந்தின் நன்றாம். அது நெகிழுமாயின் மரணமாம்.

### மூத்திர நிறப் பரீட்சை (வேறு).

"மாணிக்கம் பால்பிரசமஞ்சளிஃது பிர
மாணிக்கம் பால்வரிசை மாறாநீர்—மாணிக்க
மூத்தமமாதி யொரு நாலு மந்தமூனே
யுத்தம மாதிமதியுன்."

(தேரன்யமகம்)

(பொருள்.) நோயாளியின் மூத்திரமானது மாணிக்கத்தைப் போல செந்நிறமா யிருப்பது அதமாதமம் என்பதும்; பால்போல் வெண்ணிறமாயிருப்பது அதம மென்பதும்; தேன் போன்ற நிறமா யிருப்பது மத்திம மென்றும், மஞ்சள் நிறமா யிருப்பது உத்தம மென்பதும் அறியலாம்.

"உத்தமமாதி யொருநாலு மந்தமூனே"—என்பது எதைக் குறிக்கிறதென்றால் உத்தமம், மத்திமம், அதமம், அதமாதமம் என்னும் நான்கையும் வரிசைப்படியே கடைசியை மூதலாகக் கொண்டு கூறியதாகும்.

(சி. ம. சுருக்கம்).

பிணியாளனின் நோய் வரலாறுக் குறிப்பு (நோயை எண் வகைத் தேர்வுகளால் ஆராய்ச்சிக் குறிப்பு).

Case Sheet—Siddha.

1. நோயினனைப் பற்றிய விசாரணை.

(i) பெயர் :

(ii) வயது :

(iii) இனம் (ஆண், பெண்) :

(iv) தொழில் :

(v) இருப்பிடம் (விலாசம்) :

(vi) நோயாகிய தெய்தி :

(vii) நோயின் தன்மை (முக்கியமான துன்பங்கள் இவை எனல்) :

(viii) நோயுண்ட காலம் (Diagnosis)

(ix) நோயுண்டான கிரமம் :

(x) இதற்குமுன் ஏதேனும் நோய்வாய்ப்பட்டிருந்தால் அதன் விவரம் :

(xi) நோயாளியின் உணவு, பழக்கவழக்கங்கள் இவை எனல் :

(xii) தடும்ப சரிதை :

(xiii) நோயாளியின் நிலைமை :

(xiv) நோயின் நிலைமை :

2. எண்வகை தேர்வுப் பற்றிய குறிப்புகள்.

(i) நாடி.—வளி, அழல், ஐயம், கலப்பு, முக்குற்றம் (சன்னி வாதம்) நாடிகளின் தன் நடை, புற நடை, இளைத்தல், கதித்தல், குதித்தல், துள்ளல், அழுந்தல், படித்தல், கலத்தல், முன்நோக்கு, பின்நோக்கு, பக்கம் நோக்கு, சுழலல் ஆகிய குறிகளை அறியலாம்.

(ii) பரிசம்.— (தொட்டுப்பார்த்தல்) — சூடாயிருத்தல், கொதித்திருத்தல், குளிர்ந்திருத்தல், சிலயிடம் குளிர்ந்தும் சிலயிடம் சூடாகவும் மிருத்தல், சிலயிடத்தில் இரண்டுமில்லா மலிருத்தல், முற்றும் சில்லிட்டிருத்தல், ..யிர்த்திருத்தல், மறத் திருத்தல், பிசுபிசுத்தல், தோல் வெடிப்பு, மயிர்த்தடித்தல், உதிர்தல், சிலிர்த்தல், மூக்கு சில்லிடல், விழி, மூக்கு, காது, உச்சி, உந்தி, உள்ளங்கால்கள், உள்ளங்கைகள் இவை குளிரல், மூக்கு நீளல், உடல் சுரசுரத்தல், தடித்தல், புடைகளுண்டாதல், தேமல்

பெறல், கட்டிகள், சொறி, பற்றுகள், சிரங்கு, புண், புரை, வீக்கம், தேகம் இளைத்தல் அல்லது பருத்திருத்தல் முதலிய குறி குணங்களை ஆராய்வதாம்.

(iii) நா.—வாத, பித்த, ஐய நிறம், பல நிறம், மாசற் றிருத்தல், மாப்படிந்திருத்தல், வாய் நீர் பெருகல், வறண்டிருத்தல், கறுத்திருத்தல், சிவந்திருத்தல், மஞ்சளித்திருத்தல், வெளுப்பா யிருத்தல், ரத்தம் போன்ற நிறமாயிருத்தல், புண்ணாயிருத்தல், மூட் பெறல், தோல் உரிந்திருத்தல், பிளவு பட்டிருத்தல், தடித்திருத்தல், ஓரங்களில் பள்ளம் போல் பதிந்திருத்தல், புற்று கஞ்டாயிருத்தல், பற்களின் நிலைமை, எயிறுகளின் நிலைமை, வாதச் சுவை, பித்தச்சுவை, ஐயச் சுவை, கலப்புச் சுவை, சுவை தெரியாமை, பேச்சின் நிலைமை, நாவு வெளியில் நீட்டினால் ஒரு புறமாகச்சாய்ந்திருத்தல், வாய் கோணலாயிருத்தல் ஆகிய இக்குறி குணங்களைக் கவனிப்பதாகும்.

(iv) நிறம்.—உடல் பரிசோதனையில் வாத, பித்த, ஐய நிறங்கள், கலப்பு நிறம் (கறுத்தல், மஞ்சளித்தல், சிவத்தல், நீலித்தல், வெளிரல்), முகம் சிவத்தல், வெளிரல், விழியும் பல்லும் கறுத்தல் முதலிய குறிகளை அறிதலாம்.

(v) மொழி.—(ஓசை)—நோயாளி பேசும் பொழுது உரத்த ஒலி, சம ஒலி, குரற் கம்மிய பேச்சு, தாழ்ந்த ஒலி, சிரித்தல், பிதற்றல், குழறல், சம்பந்தமில்லாத பேச்சு, பெருங்கூச்சலிடல், தன்னைப்பிடிப்பதாயும், அடிப்பதாயும் பேசல், வருந்திப்பேசல், மாற்றாருடன் வாதாடல், அரைப் பேச்சு, கபத்தோடு கூடிய பேச்சு, பேசாதபோது கபத்தோடு மூச்சுவிடல், மூச்சுத் தாங்கி தாங்கி விடுவதாகிய நுரை ஈரலின் ஒலி முதலிய குறிகுணங்களை அறிதலாம்.

(vi) விழி.—(கண்)—வாதக்கண், பித்தக்கண், ஐயக்கண், தொந்தக்கண், சிவத்தல், புண்ணாதல், வெளிரல், குளிதல், பருத்தல், நீலநிற மேறல், கலங்கல், நீர்வடிதல், வீங்கல், கண் மடல் கனத்தல், கண் மடல் வீங்கல், மயிர் உதிர்தல், புண்ணாதல், கண்ணில் பீளை சாரல், வெள்ளை விழியில் இரத்தம் உரைந் திருத்தல், கண்பார்வையின் நிலைமை, கருவிழி, வெள்விழி, மணி இவற்றில் புண் உண்டாதல், பலநோய்களுண்டாதல், கண் நோய்கள் தொண்ணூற்றாறையும் பற்றி ஆராய்தல் முதலியனவாம்.

(vii) மலம்.—இளகியது, குளம்பாகியது, விட்டக்கழிச்சல், திப்பிதிப்பியாகயிருத்தல், நீர்ப்பேதி, ஊன் நீர் போன்றது, கஞ்சித் தண்ணீர்போன்ற பேதி, மஞ்சள், சிவப்பு, கறுப்பு, வெண்மை,

பச்சை நிறங்கள், நுரைத்தது, செரித்தது, செரியாதது, கோழை, சீதம், சீழ், ரத்தம் இவை கலந்து மலம் போதல், புழுக்கை போலிருத்தல், கெந்தகநாற்றம், பிண நாற்றம், அடிக்கடி கழிதல், மலக்கட்டு, மலம் குறைதல், மலம் மிகுதல் ஆகிய குறி குணங்களை யறிதலாம். கடுப்புடன் மலம் போதல், அடிவயிறு வலித்து மலம் போதலாகிய குணங்களையும் கவனிக்கவும்.

(viii) நீர்—(1) நிறம்.—மஞ்சள், சிவப்பு, பச்சை, கறுப்பு, வெண்மை, செம்பு நிறம், கலப்பு நிறம், புகை நிறம் முதலியன.

(2) மணம்.—தேனாற்றம், தேன் மணம், இனித்த மணம், நிண மணம், பூ மணம், பழ மணம், புளியின் மணம், மானின் மணம், புலால் மணம் முதலியன.

(3) கலப்பு.—ரத்தம் கலந்திறங்கல், தூய நீர் போலிறங்கல், ஊன் கழுவிய நீர் போலிறங்கல், நூல் போல் வெள்ளை கலந் திறங்கல், முன் ரத்தம், பின்ரத்தமிறங்கல், கடுத்திறங்கல், எரிந் திறங்கல், சுண்ண நீர் போலிறங்கல், நெய், பால், தயிர், மோர், இவைபோலிறங்கல், நெய் போலெரிதல், சீழ் கலந்திறங்கல், கற்கள் கலந்திறங்கல், சவ்வு அல்லது தசை கலந்து இழிதல் ஆகிய குறி குணங்களை ஆராய்தலாம்.

(4) நுரை.—நுரைத்திருத்தல், குமிழி தோன்றல், நுரை குறைந்து இழிதல், நுரை பல நிறங்களோடு இழிதலாகியவையாம்.

(5) எஞ்சல்.—நீர் அளவில் குறைதல் அல்லது மிகுதல்; (சுபாவமாக நாள் ஒன்றுக்கு 50 அவுன்சு அல்லது ஆறு ஆழாக்கு என்னும் முக்கால் படி நீர் இறங்கக்கூடும்) நீரடைகல், நீர் பெருகுதல் நோய்களைக் கவனித்தல் முதலியன.

(6) தடவை.—தடவை மிகுத்தல் அல்லது குறைதல், சொட்டு சொட்டாயிறங்கல், சிறுத்திறங்கல், கடுத்திறங்கல், நீரடைத்தல், தன்னையறியாமல் நீரிறங்கல், நின்று நின்று இறங்கல் ஆகிய குறி குணங்களை ஆராய்தலாம்.

(7) நிறை.—நீர் கனத்தேனும், இலேசத்துவமாகவிறங்கல் மிகத்தடித்து நீரிறங்கல், விந்துவைப்போலிறங்கல், ஆகிய குறி குணங்களை ஆராய்தலாம்.

(8) சத்து (சுவை).—நீரைக்காய்ச்சினால் மூளைச்சத்து யிருத்தல், தித்திப்புச் சத்துயிருத்தல், சுண்ணச்சத்து, எண்ணெய்ச்சத்து, ஊன்சத்து, பாலாடைச் சத்து முதலியவை இருக்கிறதாவென ஆராய்தலாம்.

(9) நெய்க்குறி.—நீரில் நெய்த்துளி மிதத்தல், பரவல், அமுங்குதல், பாதி அமுங்கியும் பாதி மிதந்தும் நிற்றல், நெய்யோடு நீரும் கலத்தல், பாம்பு, மோதிரம், முத்து இவை போல் பரவல், கலப்பு வடிவங்கள் சேர்ந்து பரவல், நெய் பொங்கிப் பரவல், கடுகு போல் பரவல், சங்கு, சிங்காதனம், குடை, வீணை, முல்லை யரும்பு, தாமரைமலர் இவைபோல் பரவல், மற்றும் நெய்குறி நூலில் கூறிய அடையாளங்கள் முதலியவற்றை ஆராய்வதாம்.

3. நோய் நிதானம் (நோய் இன்னதென தேர்வு நிர்மாணித்தல்) (diagnosis)

4. நோய் தீரும், தீராவென ஆராய்தல் (Prognosis)

5. மருத்துவம் (பரிகாரம்) (Treatment)

6. பத்தியம் (Diet)

7. நாளுக்கு நாளாயிருக்கப்பட்ட நோயின் தன்மை (Daily progress)

8. நோய் குணமான விவரம் (Result)

9. நோயினன் குணமாகி வெளியேறிய தெய்தி (Date of Discharge)

இத்தியாதி விவரங்களைக் கவனித்து நோயை ஆராய்ந்து, அறிந்து, முன் பின் நன்றாய் ஆலோசனை செய்து பிறகு தக்க பரிகாரம் புரிதல் நலம் என்றறிக!

Case Sheet II

நோய் வரலாற்றுக் குறிப்பு.

(வேறு).

1. நோயினனைப்பற்றிய விசாரணை :

(i) பெயர்.

(ii) வயது.

(iii) இனம் (ஆண், பெண்).

(iv) தொழில்

(v) இருப்பிடம்.

(vi) பதிவாகிய தெய்தி.

(vii) நோயின் தன்மை (முக்கியமான தன்பங்கள் இவை எனல்).

(viii) நோயுண்டான கால அளவு (duration)

(ix) நோயுண்டான கிரமம்.

(x) இதற்கு முன் நோய் ஏதேனும் வந்திருப்பின், அதன் விவரம்.

(xi) நோயாளியின் உணவு, பழக்க வழக்கங்கள்.

(xii) நோயினனின் குடும்ப சரிதை.

(xiii) நோயினனின் தற்கால நிலைமை :—

(1) தாது (நாடி) : வாதம், பித்தம், ஐயம் இவற்றின் நடை.

(2) உடற்றாதுக்களின் நிலைமை.

(3) மலாதிக்கழிவு (மலம், மூத்திரம், வியர்வை முதலியவற்றின் நிலைமை) :

(xiv) காலம்—

1. நோயினன் வயது (பிராய காலம் கூறுக).
2. நோயுற்ற காலம் (பருவம்).
3. நோயின் கால அளவு.
4. பரிகாரம் செய்யும் பருவம்.

(xv) தேசம்—

1. பிறந்த திணை.
2. நோயுற்ற திணை.
3. பரிகாரத்திற்கு ஏற்ற திணை.
4. பரிகாரம் பெறும் திணை.

2. நோயினனின் தத்துவ இயல்பு—

1. மனோதத்துவம் (சத்துவ, ரசோ, தமோ, குணங்கள்) :

2. தேகத்துவம் (வாததேகி, பித்ததேகி, கபதேகி, தொந்த தேகி) :

3. தேகவன்மை—

(1) இயற்கை வன்மை.

(2) கால வன்மை.

(3) செயற்கை வன்மை.

4. தீயின் தன்மை—

(1) சமாக்கினி.

(2) விஷமாக்கினி.

(3) தீட்சணாக்கினி.

(4) மந்தாக்கினி.

5. மனோவிகற்பம் (Mental carditions)

6. தூக்கம் : (இது போன்ற ஏனைய குறி குணங்கள்).

7. நோய் நிலைமை.—

(i) சப்தம் (ஓசை, ஒலி)—

(a) தட்டியறிதல் (Percussion)

(b) காதுகளை அணைத்து அறிதல் (Asscul tation)

(c) தொனியாலறிதல் (Voice of the patient)

(ii) பரிசம் (தொட்டுப் பார்த்தல்) (Palpation)

(a) வெப்பதட்பமறிதல்

(b) விரல் கொண்டமுத்தி நீர்க்கோவை, வீக்கம், புரைகுழல் (கழலை) முதலியவற்றை அறிதல்.

(c) விரற்கொண்டு வளி, அழல், ஐயம் என்னும் நாடிகளின் மாத்திரைப்பிரமாணம், தொந்தம் முதலியவற்றைக் கணித்தல்.

(d) சலாகை முதலிய கருவிகளைக்கொண்டு புண், புரை, பகந்தரம் ஆகியவற்றை அறிதல்.

(iii) ரூபம் (Inspection) :—

(a) மருத்துவனின் கண்கொண்டு நோயினன் கண், காது, மூக்கு, தோல், நா, உதடு, பல், அண்ணம், தொண்டை, முகம் இவற்றின் அமைப்பு, தொழில், நிறம், பசை, தன்மை முதலிய குறிகுணங்களை உற்று நோக்கியறிதல். நீர், மலம், எச்சில், சளி, வாந்தி, வியர்வை இவற்றின் நிறம், மணம், எடை, நுரை, எஞ்சல், கலப்பு, தடவை, நெய்க்குறி முதலியவற்றையும் ஆராய்ந்து அறிதல்.

(b) நடத்தல், இருத்தலாகிய செய்கைகளைக் கொண்டறிதல்.

(iv) சுவை (ரசம்)—

(a) நோயினனின் நாவின் சுவை.

(b) மலம், மூத்திராதிகளின் சுவையை ஈ, எறும்பு முதலிய செந்துக்களைக்கொண்டு அறிதல்.

(v) நாற்றம் (கந்தம்)—

(a) வாய், எச்சில், மலம், நீர், வியர்வை, சீழ், வாந்தி முதலியவற்றின் மணம் பற்றிய நிலைமை.

(a) நீரைக் காய்ச்சி யறிதல்.

8. நோய் நிதானம் (நோய் இன்னதெனத் தேர்தல் முடிவு) (Diagnosis).

9. நோய் தீரும், தீராதென ஆராய்தல்.

10. மருத்துவம் (பரிகாரம்).

11. பத்தியம்.

12. நாளுக்கு நாள் இருக்கப்பட்ட நோயின் தன்மை.

13. நோய் குணமான விவரம் (Result).

14. நோயினன் குணமாகி வெளியேறிய தெய்தி.

இத்தியாதி விவரங்களைக் கவனித்து நோயை ஆராய்ந்து அறிந்து, முன் பின் நன்றாய் ஆலோசனை செய்து பிறகு பரிகாரம் பொருத்தமாகப் புரிவதுதான் உத்தமம் என்றறிக!

**Case Sheet III.**

## நோய் வரலாற்றுக் குறிப்பு.

### (வேறு).

1. நோயினனைப் பற்றிய விசாரணை அல்லது வினாதல்—

(1) பெயர்.

(2) வயது.

(3) இனம் (ஆண், பெண்).

(4) தொழில்.

(5) இருப்பிடம் (விலாசம்).

(6) பதிவாகிய தெய்தி.

(7) நோயின் தன்மை.

(8) நோயின் கால அளவு.

(9) நோயுண்டான கிரமம்.

(10) இதற்கு முன்பேதேனும் நோய்வாய்ப்பட்டிருந்தால் அதன் விவரம்.

(11) நோயினனின் உணவும், பழக்க வழக்கங்கள் இவை எனல்.

(12) நோயினனின் குடும்ப சரிதை.

2. பொறியால் தேர்தல்—

(1) நோயினனின் நிலைமை **(General Conditions).**

(2) எண்வகைத் தேர்வு.—

நாடி.—வாதம், பித்தம், ஐயம், தொந்தம், மூக்குற்றம், நாடிகள் இளைத்தல், கதித்தல், அழுந்தல், தங்கித்தங்கி எழும்பல், மெதுவாய் நடத்தல், நூல் போல் இளைதல், நாடி நடை புலப்படாமை.

2. பரிசம்.—வெப்பமாயிருத்தல், அதிகச் சூடாயிருத்தல், குளிர்ந்திருத்தல், சிலயிடம் குளிர்ந்தும் சிலயிடம் சூடாகவு மிருத்தல், உடல் முற்றும் சில்லென்றிருத்தல், வியர்த்திருத்தல், மறத்திருத்தல், பிசுபிசுப்பாயிருத்தல், தோல் விரிந்திருத்தல், உரோமம் தடித்திருத்தல், உதிரல், மயிர்சிலிர்த்தல், மூக்கு, காது,

நா, உச்சி, உள்ளங்கால் கைகள் குளிர்ந்து சில்லென்றிருத்தல், மூக்கு நீளல், மூக்கு வற்றியிருத்தல் (Thinning out of nose) தேமல், கொப்பளம், கட்டிகள், கழலை, சொறி, சிரங்கு, படை, விரணம், வீக்கம், ஊதல், உடல் சுரசுரத்தல், உடல் இளைத்திருத்தல், மெலிவாயிருத்தல், பருத்திருத்தல், கல்லீரல், மண்ணீரல், மற்றுமுள்ள உள் கருவிகள் (உள் அவயவங்கள்) பருத்திருத்தல், வேறு உள்பக்கம் கட்டிகள், கழலைகள் முதலியன கைக்குத் தட்டுப்படல்.

3. நா.—கறுப்பு, செம்மை, மஞ்சள், வெண்மை, கலப்பு நிறம்—சுத்தமாயிருத்தல், மாப்படிந்திருத்தல், மாசற்றிருத்தல், வாய் நீர் தன்னளவு, மிகுதி, குறைவு—வறண்டிருத்தல்—முள்போலிருத்தல், பருத்து அல்லது தடித்திருத்தல்—ஓரங்களில் பற்களால் பள்ளம் உண்டாயிருத்தல், சுவை இயற்கையாயிருத்தல் அல்லது அறுசுவைகளில் எச்சுவை அல்லது கலப்பு சுவைகள் மிகுதியாகத்தோன்றல், உள் நா வளர்ந்திருத்தல், இரு பக்கங்களிலும் உருண்டையாக தசை வளர்ந்திருத்தல், அண்ணாக்கு மஞ்சளித்திருத்தல், நாவில் புண்ணுண்டாயிருத்தல், நாவை வெளியில் நீட்டும்போது ஒரு பக்கமாகச் சாய்ந்து காணல், வாய் கோணலாயிருத்தல் முதலியன.

4. நிறம்.
5. மொழி.
6. விழி.
7. மலம்.
8. மூத்திரம்.
   (i) நிறம்.
   (ii) கணம்.
   (iii) கலப்பு.
   (iv) நுரை.
   (v) எஞ்சல்.
   (vi) தடவை.
   (vii) நிறை.
   (viii) சத்து.
   (ix) நெய்க்குறி.

No. I -ல் கண்ட பிரகாரம் அனுசரிக்கவும்.

இவையாவும் நோய் வரலாறு குறிப்பு

9. உடற்றாதுக்களின் நிலைமை—

(1) ரசதாது (சாரம்).
(ii) ரத்தம் (குருதி.)
(iii) மாமிசம்.
(iv) கொழுப்பு.
(v) எலும்பு.
(vi) மூளை.
(vii) வெண்ணீர் (சுக்கிலம், வித்து).

10. மலம்—

(i) மலம். Vide No. 7.
(ii) மூத்திரம். Vide No. 8.
(iii) வியர்வை.
(iv) கண்பீளை
(v) காது குறும்பி
(vi) மூக்கு மலம்.
(vii) குறி.
(viii) நகம்.
(ix) மயிர்
(x) பித்தம்.

11. மூக்குற்றங்களின் நிலைமை—

(1) வளி.—

(i) உயிர்க்கால்.
(ii) மேல் நோக்குங்கால்.
(iii) கீழ் நோக்குங்கால்.
(iv) நடுக்கால்.
(v) பரவுகால்.

(2) அழல்.—

(i) பாசகம் (அனற்பித்தம்).

(ii) ரஞ்சகம்.

(iii) சாதகம்.

(iv) ஆலோசகம்.

(v) பிராசகம்.

(3) ஐயம்.—

(i) அவலம்பகம்.

(ii) கிலேதகம்.

(iii) போதகம்.

(iv) தற்பகம்.

(v) சந்திகம்.

12. கருமேந்திரியங்கள்—

(i) வசணித்தல் (பேசல்).

(ii) நடத்தல்.

(iii) கொடுக்கல் வாங்கல்.

(iv) மலம், மூத்திரம் கழித்தல்.

(v) விந்துவிடல்.

13. பொறி புலன்கள்—

(i) ஒலி (காது)

(ii) ஊறு (மெய், உடல்)

(iii) ஒளி (கண்)

(iv) சுவை (நா)

(v) மணம் (மூக்கு)

} எண் வகைத் தேர்வில் பார்க்கவும்.

14. இதர அங்கங்கள் : பொறிபுலன்களால் ஆராய்தல்—

(i) மூளை.

(ii) தமரகம் (இருதயம்)

(iii) மண்ணீரல்.

(iv) நுரையீரல்.

(v) நீர்க்குண்டிக்காய்.

(vi) விதைகள்.

(vii) கல்லீரல்.

(viii) வயிறு.

(ix) சிறுகுடல்.

(x) பெருங்குடல்.

(xi) துணைக்குடல்.

(xii) மூத்திரப்பை, மூத்திர நாளம்.

(xiii) கருப்பை (பெண்களில்).

(xiv) கைகள்.

(xv) கால்கள்.

15. தேகம், இது எனல் (யாக்கை).—

(i) வாத உடல்.

(ii) பித்த உடல்.

(iii) ஐயவுடல்.

(iv) கலப்பு உடல்.

(v) முக்குற்றதேகி.

16. குணம்—இது எனல்.—

(i) சத்துவம்.

(ii) இராசதம்.

(iii) தமோகுணம் (தாமதம்).

17. மேற்கண்ட தேர்வுகளின் மூலம் அறியலான முக்கிய சில குறிப்புகள் (Summary findings)—

(i) குறி குணங்கள்.

(ii) குற்றம் அல்லது தோடம்.

(iii) குற்றமடைந்த உடற்றாதுக்கள்.

(iv) மலாதிகள்.

(v) உறுப்புகள்.

18. நோய் நிதானம் (நோய் இன்னதென முடிவு செய்தல்).

19. நோய் தீரும், தீராதெனல்.

20. மருத்துவம்.

21. பத்தியம்.

22. நாளுக்கு நாள் காணப்படும் நோயின்தன்மை அல்லது நோயின் நிலமை.

23. நோய் குணமான விவரம் (Result of treatment).

24. நோயினால் குணமாகி வெளியேறிய தெய்தி.

இத்தியாதி விவரங்களைக் கவனித்து நோயை ஆராய்ந்து அறிந்து முன் பின் நன்றாய் ஆலோசனை செய்து பிறகு தக்க பரிகாரம் புரிதல் மிகவும் நல்லது.

## அத்தியாயம் XVI

### தூது லட்சணம்.

(வெண்பா—கண்ணுச்சாமியம்.)

1. "செந்துகிலை மேற்கொண்டு செங்கை காற்றான் சொறிந்து,
வெந்தநந்தத்தைக்குற்றி விண்பார்த்துச் சந்தமுற
வைத்தியன் நெய்யாடும் வேளை களில் போயழைக்கில்,
சைத்தியத் தாற்றீதென்றே சாற்று."

2. "கம்பம் பிடித்துக் கவின் கூவரும்பற்றித்
தும்பிக் கரநெட்டைத்தாவிட்டுச்—செம்மையில்,
கொட்டாவி தன்னுடனே கூப்பிட்டால் நோயாளி
விட்டாவி போகும் விரைந்து."

3. "விரிந்த தலையும் வியன்தடியார்கையும்,
பரிந்தவுடல் சொரிந்தும் பையப்—புரிந்த
நலங்கிள்ளிக் கைக்கட்டி நாடி யழைக்கி
னிகபோக நீங்கு மியம்பு."

என்பதினால்; (1) வயித்தியனை அழைக்க வருபவன் சிவப்பு வஸ்திரத்தை உடுத்திக்கொண்டும் கைகால்களைச் சொறிந்து கொண்டும்; பல்லைக் குத்திக் கொண்டும்; ஆகாயத்தைப் பார்த்துக் கொண்டும் வந்தழைத்தானும்; அல்லது வயித்தியன் எண்ணெயிட்டுக்கொண்டிருக்கும்போது அழைப்பினும் நோயாளிக்குச் சீதளரோகத்தால் தீமை என்றறிக!

2. மேலும், கம்பத்தைப் பிடித்துக் கொண்டும் தும்மலுடன் நெட்டையும், கொட்டாவியும் விட்டுக் கொண்டும் வயித்தியனை வந்து அழைப்பின் நோயினனுக்குத் தீங்கு வருமென்றறிக!

3. தலைவிரித்தும், தடியைக் கைக்கொண்டும், உடம்பைச் சொரிந்து கொண்டும், நகத்தைக் கிள்ளியும், கைகளைப் பின்கட்டாகக் கட்டிக் கொண்டும் மருத்துவனை வந்தழைக்கின் நோயினன் தேருவது கடினம் என்பதையும் அறிவிக்கின்றன.

## தூது லட்சணம் (வேறு).

(வியாசர் நாடிநூல்—சி.ம. சுருக்கம்.)

மருத்துவரை அழைப்போனால் ஏற்படும் அறிகுறிகள்.

அறுசீர் விருத்தம்.

1. "மருத்துவன்றனையழைக்க வந்தவன்றன்னைப் பார்த்துத்,
திருத்தமாய்க் கிழக்கிலித்திரன் செப்பிடு நல்லதாகும்
எரிக்குமக்கினியின் திக்கிலிப் போதே மரணமென்க
பரித்திடுமெமன்றன் திக்கில், பயமொடு மரணந்தானே."

2. "நிருதியில் வந்தழைக்கில் நிச்சயஞ்சாவு சொல்வாய்,
வருணனில் வந்தழைக்கில் மத்திமம் வாயுமூலை,
திறமுடன் வந்தழைக்கில் தீராது சோகமென்க,
இருமைசொல் சூபேரன்மைசானம் நல்லதாமே."

மருத்துவன் செயலால் நன்மை தின்மையறிதல்.

3. "தண்ணீர்க்குடமு மாமிசமும் தயிர் பால் மீன் சந்தனம் பூவும்,
வண்ணப்படியேதான் காண வருவார் சாத்தியமென்றே சொல்,
நண்ணுங் கால் கை முகஞ்சுத்தி நற்பூசையசனஞ் செய்ய
எண்ணிக் கருமந்தான் சொல்லி எய்துஞ் சாத்தியந் தானறியே."

* தூதனாலறிந்து கொள்ளவேண்டிய தீராக குறிகள்.

1. "அந்தரந்தன்னைப் பார்த்து யாங்கழைத்திடில் மரணமாகும்,
விந்தைக் கை கால் பிடித்து வேண்டவே வியாதி மாறா
முந்தவே முகஞ் சுளித்து முன்கைகள் பின் கட்டாக,
வந்தவரழைத்தபோது மரணமென்றறிந்து சொல்லே."

5. "தலைதனைவிரித்துக் கொண்டுந் தடிகையிற் பிடித்துக் கொண்டும்,
கலகலென்றழைக்கும்போது கணமெனச்சாவு சொல்வாய்,
நலமிலாதுடல் சொறிந்து நகந்தனைக் கையாற்கிள்ளத்
சொலைவிலாச்சாத்தியமென்று சொல்லிவிடு தரணி
யோர்க்கே."

6. "சுவர்தூண் பிடித்துக் கொண்டழைக்கச் சொல்லப்போகாத
சாத்தியந்தான்,
விவரந்தப் பிப்பாயப்படினு மிகக் கொட்டாவி
நெட்டுயிர்ப்பும்,
அவமாய் நாக்குத் தான் குழற அழைத்தால் சாத்தியந்
தானறிவாய்,
புவனம் போற்று மகத்தியனார் புகலுந்துதனிலக்கணமே."

**N.B.—** வியாசர் எனப் பதினெண்சித்தர் நாடிநூலிலும், அகத்தியரென சித்தமருத்துவாங்கச் சுருக்கத்திலும் வரையப்பட்டிருக்கிறது.

(வெண்பா).

7. "கைகால் சொறிந்து கருது பல்லுந்தான் குத்தி
மெய்யிற் வடுப்பு கலைமேலுடுத்தி—நய்ய
வயித்தியனுக் கெண்ணையிடும் போதேயழைக்கில்தான்,
சைத்தியத்தில் சாவானே தான்."

தொடுகுறி (வேறு).

8. "வந்து புறங்கால் தொடிற்றாதன் வருடமிரண்டில் மரண
மென்க,
முந்து முழங்கால் தொடிலாறு மாதமுதலாய்த்தீதாகும்
பிந்துங்காலைத் தொடில் மரணம் பின்னைக்காதுதனைத்
தொடினும்,
சிந்திப்பாது மூன்று திங்கள் சென்றால் மரணந்தேன்
மொழியே."

9. "நெற்றிதொடினோ பதினைந்து நீள்புருவந்தொடிலொன்ப
தென்க,
கத்துங்கழுத்து மூன்றே நாள், கண்ணைத் தொடிலோ
நாளஞ்சாம்,
நத்து மூக்கு மூன்றே நாள் நாவைத் தொடினாளொன்றிற்
சாம்,
உற்றகுறியின் குணமிதென உரைத்தார் தமிழாலுயர்
தோரே."

## நோய் முதனாடல் திரட்டு.

10. "சங்கக் கமுத்தைத் தொடில் பேறாம் தரமாய்ச் செறியும் நெஞ்சாகில்
தங்கு முதரஞ் சல்லாபம் தலையிற்றொடிலோ பக்கிஷமாம்
பெரங்குமரையிற்றொடிற்கேடாம் பொலியுமுதுகு பிணி மீறும்
எங்கும் பரந்தழிழாய்ந்தோர் இயம்புந்தூதனிலக்கனமே."

11. "முன்னமே ஆணாய் வந்து மொழிந்தபின் பெண்ணாய் வந்தால்
முன்னமே கருமந்தீதாய்ப் பின்பு நன்றாகுமென்க,
முன்னமே பெண்ணாய் வந்து மொழிந்தபின் ஆணாய் வந்தால்,
சொன்னவை முன்பு நன்றாம் பின்னிடு காடதாமே".
(சி.ம. சுருக்கம்.)

(இதன் பொருள்)

1. மருத்துவனை அழைக்க வருகின்ற தூதுவன் மருத்துவனிருக்குமிடத்திற்குக் கிழக்காகிய இந்திரன் திக்கிலிருந்து அழைத்தால் நோய் தீரும் என்றும்;

தென்கிழக்காகிய அக்கினி மூலையிலிருந்து அழைத்தால் உடனே இறப்புண்டாகும் என்றும்;

தெற்காகிய எமன் திக்கிலிருந்து அழைத்தால் பயத்துடனே கூடின மரணமுண்டாகுமென்றும் அறியவும்.

2. தென்மேற்கு மூலையாகிய நிருதி திக்கிலிருந்து அழைத்தால் அந்நோயினன் இறத்தல் உண்மை என்றும், மேற்காகிய வருணன் திக்கிலிருந்து அழைத்தால் அந்நோய் நீங்குவது மத்திமமென்றும்;

வடமேற்காகிய வாயுதிக்கிலிருந்து அழைத்தால் அந்நோய் தீராதென்றும்;

வடக்காகிய குபேரன் திக்கிலிருந்து அழைத்தால் அந்நோய் தீர்ந்து நன்மையாகுமென்றும்;

வடகிழக்கு மூலையாகிய ஈசானத்திலிருந்து அழைத்தால் அந்நோய் தீரும் என்றும் அறியவும்.

சிலர் கிழக்கிலும் மேற்கிலுமிருந்து அழைத்தால் நோய் விரைவில் தீருமென்றும்;

## சித்த மருத்துவ நோய் நாடல்.

வடக்கிலுந் தெற்கிலுமிருந்து அழைத்தால் நோய் நாட்படத் தீரும் என்றும்;

நிருதி மூலையிலும் ஈசானிய மூலையிலுமிருந்து அழைத்தால் நோய் வெகுவிரைவில் தீருமென்றும்;

அக்கினி மூலையிலும் வாயு மூலையிலும்யிருந்து அழைத்தால் நோய் தீராதெனஞ் சொல்லியிருக்கிறார்கள்.

3. மருத்துவனை அழைக்கச் சென்ற தூதன் மருத்துவனிடஞ் செல்லுங்கால், அங்கு அம்மருத்துவன் தண்ணீர் முகத்தல், மாமிசம், தயிர், பால், மீன் ஆகியவற்றுள் ஏதேனுமொன்றை வாங்குதல், சந்தனம் இளைத்தல், பூத்திருத்தல் ஏதேனுமொன்றைச் செய்து கொண்டியிருப்பானேயாகில் அது தீரும் நோய் எனவும்;

கால் கழுவல், கை கழுவல், முகங் கழுவல், பூசை செய்தல், உண்ணல் முதலியவற்றுளொன்றைச் செய்து கொண்டிருப்பானேயானால் அது தீராத நோய் எனவும் தெரிந்து கொள்ளவும்.

இவையன்றியும் மருத்துவன் தண்ணீர் நிலையத்திலிருந்து குளித்தல், தன் இல்லாளுடன் உல்லாசமாயிருத்தல், தூங்குதல், வருத்தத் தோடிருத்தல், அழுதல், நோயால் வருந்தல், மலம் சிறு நீர் கழித்தல், முதலியனவும் நோய்த் தீராமையைக் காட்டும் குறிகளெனவும் கூறியுள்ளார்.

4. மருத்துவனை தூதனானவன் ஆகாயத்தைப் பார்த்துக் கொண்டே அழைத்தால் அந்நோயாளி இறந்து விடுவான் என்றும்;

தன்னுடைய கால் கைகளைப் பிடித்து வேண்டிக் கொண்டால் அந்நோய் தீராதென்றும்;

முகத்தைச் சுளித்துக் கொண்டும், முன்கைகளைப் பின்கட்டாகக் கட்டிக்கொண்டும் அழைத்தால் அந்நோயினன் இறந்து விடுவான் என்றும் கூறியுள்ளார்.

5. தலையை விரித்துக் கொண்டும், கையில் தடியுடனும் கலகலப்பாக மருத்துவனை வந்தழைப்பானாகில் நோயாளி சாவது நிச்சயமென்றும்;

உடலைச் சொறிந்து கொண்டும், நகத்தை விரலாற் கிள்ளிக் கொண்டும் வந்தழைப்பானாகில் அந்நோய் சாத்தியமென்று கூறுவாயாக.

6. தூதுவனானவன் மருத்துவனிடம் வந்து அங்குள்ள சுவரை யாவது தூணையாவது பிடித்துக்கொண்டு மருத்துவனை யழைத்தால், அந்நோய் தீராதென்றும்; பயந்தழைத்தாலும், கொட்டாவி பெருமூச்சு விட்டும் நாவு குழறிக் குழறி அழைத் தாலும் அந்நோய் தீராதென்றும் அறியவும்.

7. கைகால்களைச் சொறிந்து கொண்டும், பல்லைக் கடித்துக் கொண்டும், சிவப்பு வஸ்திரம் உடுத்திக் கொண்டும், வைத்தியன் எண்ணெயிட்டுக் கொண்டிருக்கும் போதும் வந்தழைப்பானாகில் சைத்திய நோயால் நோயினன் சாவான் எனவும் கூறுவாயாக.

8. தூதனானவன் மருத்துவனை அழைக்குங்கால் தன் பின் காலைத் தொடின் இரண்டு ஆண்டுகளிலும்;

முழங்கையின் மூன்பக்கத்தை தொட்டால் ஆறு திங்கள் களிலும்; இடது காலைத் தொட்டாலும், காதின் பின்பக்கத்தைத் தொட்டாலும் மூன்று திங்கள்களிலும் மரணம் உண்டாகு மென்றறிக!

9. தூதன் மருத்துவனை அழைக்குங் காலத்தில் நெற்றியைத் தொட்டால் பதினைந்து நாட்களிலும்; புருவத்தைத் தொட்டால் ஒன்பது நாட்களிலும், கழுத்தைத் தொட்டால் மூன்று நாட் களிலும், கண்ணை தொட்டால் ஐந்து நாட்களிலும், மூக்கைத் தொட்டால் மூன்று நாட்களிலும், நாவைத் தொட்டால் ஒரு நாளிலும் சாவுண்டாமென்றும் கூறியுள்ளார்.

10. பின் கழுத்தைத் தொட்டாலும், மார்பைத் தொட்டாலும், வயிற்றைத் தொட்டாலும் நன்மையுண்டாமென்றும்;

தலையிலும், அரையிலும் தொட்டால் தீமையுண்டா மென்றும், முதுகைத் தொட்டால் நோய் மிகுமென்றும் நூல்கள் கூறுகின்றன.

11. ஆண், பெண் இருவருள் முன்னர் ஆணும் பின்னவர் பெண்ணும் வந்தழைத்தால் நோயானது முன்னர் கெடுதிபோற் காட்டிப் பின்னர் நன்மையாகும்.

முன்னர் பெண்ணும் பின்னர் ஆணும் வந்தழைத்தால் முன்னர் நன்மைபோல காட்டிப் பின்னர் மரணமுண்டாகுமெனவும் அறிக.

# அத்தியாயம் XVII

"மணிக்கடைநூல்."

என்னும் அகத்திய சூடாமணிக்கயறு சூத்திரம் (இஃது வேடமாமுனிக்கு உபதேசித்தது. பக்கம்-115 ப.சி. நாடி நூல்.)

காப்பு.

1. "கமலக்கைமணிக்கையில் கயறு சூத்திரம்,
விமலனே நோக்கியே வேடமாமுனி
திமிலாம் பிணியது சேரச் செப்பியே,
அமலனாமுனிக்கு முன்னருளிச் செய்ததே."

2. "வாசவன்றேவருமாமுனி
வோர்களுக்குந்
தேசமறிந்திடச் செப்பிடுஞ்
சூத்திரம்
ஈசனேகரி முகாயிக்கயற்
நூலுக்கு
மோசமில்லாமலே முன்
வந்து காப்பதே."

நோயின்சாரம்.

1. "மணிக்கடை நால்விசல் தள்ளி வன்மையாய்,
தணிக்கிடைக்கயறு போட்டளந்து பார்க்கையில்,
கணித்திடும் விரல்தனைக் கண்டு சொல்லவே,
பிணித்திடும் நோய்களைப் பிரித்துரைக்குமே."

பத்துவிரற்கடை.

2. "குறைந்து விரற்கடை யிரைந்து காண்கிடில்,
விரைந்து வெண்பிணி வுடம்பிற் சார்ந்திடும்,
நிரைந்த காலுங் கையுடல் நெருங்கிடும்,
திரைந்த வயிற்றினில் திரளுங் குன்மமே."

ஒன்பதே முக்கால்.

3. "ஒன்பதே முக்கால் யுகந்து காண்கையில்,
எண்பதுடரையரையாப்பே யெய்திடும்,
வன்பொடு யிருமலும் வெட்சி தோன்றிடும்,
பின்பதோர் வருடத்தில் பீலிகை தோன்றுமே."

ஒன்பதரை.

4. "ஒன்பதுயரையது யுகந்து காண்கையில்,
வென்பொடுவுடம்பெல்லாம் வெளுத்துச் சூடதாம்,
துன்படுயிருவிழி காய்ந்து மூன்சுரம்,
நன்பதுமசனம் விட்டுடலும் வற்றுமே."

ஒன்பதேகால்.

5. "தீட்டிய ஒன்பதுகால்யுகந்து திண்ணமாம்,
ஈட்டில் சிறுக நீரித்து சூம்ந்திடும்,
சூட்டில் கண்விழித்துயிலுமில்லையே,
வாட்டியபினிசம் வந்து தோன்றுமே."

ஒன்பது.

6. "கழிந்திடுமொன்பது விரற்கடை காண்கையில்,
வழிந்திடுஞ் செவியிலுள்ளே சூத்துமந்தமாம்,
குழிந்திடுங் குறுக்கினில் கோரைவாயுவே,
அழிந்திடுமிருதுடை அயர்ந்து சூழுமே."

எட்டேமுக்கால்.

7. "எட்டினில் மூக்கால் காணில் யிலக்கிய வுடம்பு காயும்,
தொட்டிய குட்டம் போலே சில்விடம் பலவுந் தோன்றும்,
மூட்டிய வயிற்றினுள்ளே மூளை போலே வாயு சூத்தும்,
வெற்றிய கண்வாய் கைகள் வெளுத்திடும் பித்த ரோகம்."

எட்டரை.

8. * * * *
8. * * * *
விட்டுடனிருமலும் வெதுப்பு மேலெல்லாம்,
கிட்டிடுஞ் சிலையுங்கிரங்கி காணுமே."

எட்டே கால்.

9. "காட்டிய எட்டோடு கால்விரற் கடைக்,
கூட்டிய பித்தவாய் சூரைசுர மெயில்,
நாட்டிய பிரமியம் நவிலுங் காமியம்,
வாட்டிய சிரசில் நோய் வருமோராண்டிலே."

எட்டு.

10. "எட்டெனும் விரற்கடை வயது மாறிடில்,
கற்றெனும் வயிற்றினில் கதைத்துடல் வீக்கமாம்,
துட்டிய பீனிசம் தொண்டை நோதலால்,
கொட்டிய வயிற்றினில் குணமிதாமே."

ஏழேமுக்கால்.

11. "ஏழினில் முக்கால் காணில் எழும்பிடுங்கீழே மூலம்,
தாழ்வது ரெண்டு காலுந்தலை யாடுமகத்து நிற்கும்,
தோளது வருஷமாண்டாய் தோன்றிடுங்கண்ட மாலை,
நாளது செல்லச் சொல்ல நாசியில் ரத்தங்காணும்"

ஏழரை.

12. "ஏற்றமே முரையுங் கண்டால் எலும்பது உருகிக் காணும்,
காற்றது வயிற்றில் விம்மும் முகமெலாமெரிவு காணும்,
மூற்றவளூற்றுக் கண்ணுமுடம்பெல்லாங் காய்ச்சலுண்டாய்
தூற்றிய காலில் நோவுத்துடையில் விப்புருதியாமே.

ஏழேகால்.

13. ஏழது காலுங்கண்ணுமிடுப்பினில் வலியுமுண்டாம்,
மீளவுஞ்சிரசில் பித்த மிருதி கொண்டிருக்குங்கண்டாய்,
சூளது வினையினாலே துடரவே பாண்டு மூண்டு,
ஆளது காலும் கையும் சுமந்து நித்திரையும் பாழாம்."

ஏழு.

14. "திட்டமாயேழு கண்டால் சிரசிலே பித்தமேறி,
நட்டமாம் வாயில் ரத்தம்நவிலுறச் சயமுமாகும்,
மட்டவிற்காலுங்கையும் வந்திடுஞ்சிலந்தி தோணும்,
உட்டிணமிகுதியுண்டா மூலர்ந்திடு மலம் வியாதி."

ஆறேமுக்கால்.

15. "ஆறுடன் முக்கால் கண்டால் அண்டத்தில் வாய் வெ!ாகும்,
தேருமே கண்கள் ரெண்டுஞ் சிவத்திடு மயக்க முண்டாம்,
கூறிடு வருடமூன்றில் குருக்க நீரடைப் புண்டாகும்,
**வீறிட்ட** கைகால் நோவாம் விரைந்திடு முகத்தில் **தானே.**"

ஆறரை.

16. "அன்புடனாறினில் யாரையுங் காணவே,
வெம்பியவுடம்பெல்லாம் வெதுப்புத் தாகுமாம்,
கும்பியும் பொருந்திடுகுத்தல் மேலெல்லாம்,
வம்பினி லைசத்திடுமரண தேகமே."

ஆறேகால்.

17. "அன்னமே ஆறுடன் யமர்ந்துகால் கண்டால்,
மூன்னமே மூலமா மித்திசக் கிராணியாம்,
பன்னமே துயிலில்லாப் படுங்கழிச்சலாம்,
வன்னமும் வோறலாம் வலதுறை வினையே."

ஆறு.

18. "ஆறதாமங்குல மானதில் கண்டிடில்,
சேறுதலன்றியே சிலேற்பனம் நெஞ்சினில்,
ஊறவே யடைத்திடு மூள்ள மயங்கிடும்
மாறும் வேறாகவே மரணம்வந்திடும்."

அஞ்சேமுக்கால்.

19. "அஞ்சுடன் மூக்கால்அளந்து பார்க்கையில்,
மிஞ்சியேசன்னி நோய் மிகுதியாகிடும்,
அஞ்சவே மயக்சமும் அஸ்தியாக்கிடும்,
கஞ்சியே குடித்திடில் காலன் போலுமே."

அஞ்சரை.

20. "அஞ்சரை காணுங்கையால் யமர்ந்ததோர் நோயெல்லாம்,
மிஞ்சியே சிரசினில் விஷம தாகிடும்,
பஞ்சிபோல் மூக்கும் வெண்பல் கருகிடும்,
தஞ்சமாம் பத்துநாள் சாவது திண்ணமே."

அஞ்சேகால்.

21. "அஞ்சினில் கால் விரலதிகம் கண்டிடில்
மிஞ்சி போற்பாதமு மெய்யெல்லாங் குண்ணியே,
அஞ்சுவோர் போலவே துயிலும் பொருந்திடும்.
வஞ்சமுமாறு நாள் மரண மூங் கிட்டுமே."

அஞ்சு.

22. "அஞ்சுதான் விரலது யளந்து காண்கையில்,
மிஞ்சியேவுடலது வெளுத்துக் குளிர்ந்திடும்,
தஞ்சியே சிலேற்பனந்தடுத்துத் தொண்டையில்
நஞ்சிபோல டைத்துடல் பதறியே சாவதே."

நாலேமுக்கால்.

23. "நால்விரல் மேலே முக்கால் நவின்றிடக்கண்டிடில்,
ஆவுடல்தன்னை யாமறிவது கெட்டிடும்,
நாவுடன் வறண்டிடும் நடு நடுங்கிடும்,
சாவது ஏழுநாள் தன்னியல் பாகுமே."

நாலரை.

24. "நன்னறி நாலரை நாடி காண்கையில்,
பன்னறிபோலுடல் பற்றி ஸீங்கிடும்,
வன்னறிக் கண்களும் வளைத்து முள்விழும்
அன்னறி ஒன்பதிலாருஞ் சாவதே."

நாலேகால்.

25. "நாலுடன் கால் கண்டால் நடுக்கலுமாயுள்ள,
காலுங்கைய சந்திடுங்கறுக்கு மென்மூகம்,
காலவே நெடுமூச்சது தாண்டி வாங்கிடும்,
ஏலவே சாவது ரெண்டுநாளிற் சாவதே."

நாலு.

26. "தேட்டிய நாலது திட்டமாங் கண்டிடில்,
வாட்டியே முகத்தினில் மயங்கிடும் கண்களும்,
மீட்டிய காலுடன் ஸீக்கமு முற்றிடும்
தேட்டிய சாவது திண்ணமுமஞ்சிலே."

பதினொன்று.

27. "நண்ணிய பதினொன்று நாடி காண்கையில்,
எண்ணிப் பருத்துடல்யியம்பவில்லையா
அன்னல் செய் விதியன்றி அழிவதில்லையா
நண்ணியகாலனும் நமனுமில்லையே."

(வெண்பா.)

## நோய்முதனாடல் திரட்டு.

28. "இந்த முறை முனியியயம்பினாரொந்தனுக்கு
சுந்தரம் சாத்திரத்தில் சூட்சமாம் யிந்த
தரணியிலுள்ளோர் நோய் குணங்கள் தானறியவேண்டி
அரனுரைத்த தென்னலே அறி."

(இதன் பொருள்.)

மணிக்கடைக்கு மேல் நான்கு விரற்கடை தள்ளிக் கைச் சுற்றளவைக் கயிற்றினாலளந்து, கண்ட நீளம் அவரவர்களது கையினால் :—

1. பத்து விரற்கடையிருந்தால் உடல் வெதும்பி, வாயுவினால் நெஞ்சு, கால் கையிற் குத்தலும்; உளைவும், வயிற்றில் வாயுத் திரட்சியும் குன்மமுமுண்டாகும்.

2. ஒன்பதேமுக்காலுக்கு அரையாப்பு, பிளவை, வறட்சி இருமலுமுண்டாகும்.

3. ஒன்பதரைக்கு உடல் வெதும்பி வீங்கும். சூடுண்டாகும். விழிகாந்தும். உட்சுரம் மேகமுண்டாகும். அன்னத்தைத் தள்ளும்.

4. ஒன்பதேதாலுக்கு விழி காந்தும், நீர்கடுக்குச் சிறுத்து இறங்கும், நித்திரை வராது பீனிசம் உண்டாகும்.

5. ஒன்பதுக்குச் செவி மந்தம்; கண் புகைச்சல்; சூறுக்கில் வாய்வுடன் வலியுண்டாகும். இரு துடைகளும் அயரும். நடக்க வொட்டா.

6. எட்டேமுக்காலுக்கு உடல் காயும்; நில்விடத்தால் சூட்டம் போலுண்டாகும்; மூலவாயுவினால் வயிறு பொருமும்; கண் காசம், பீனிசமுமுண்டாகும்.

7. எட்டரைக்குத் தேகம் வெதும்பும்; வெட்டை, சிலந்தி, சூட்டம், சொறி, குடல் வாதம், தாது நட்டமுமுண்டாகும்.

8. எட்டேகாலுக்கு உடல் பருத்து வலித்து உளையும்; தலை வறட்சி, வலி, பீனிசம், வியர்வை, விஷத்தினால் இளைப் பிருமலுண்டாகும்.

9. எட்டுக்கு மேகாங்கை, வயிறு மந்தம், பொருமல், வாயுத் திரட்சியுண்டாம். அன்னத்தை வெறுக்கும். சுகமிராது. வேற்றுடல்படும்.

## சித்த மருத்துவ நோய்நாடல்.

10. ஏழேமுக்காலுக்கு மூலமெழும்பிக்கை கால் காந்தும்; தலையிடிக்கும்; மதத் திருக்கும்; இரண்டு வருடத்திற் கண்ட மாலையும், நாள் செல்லச் செல்ல நாசியில் இரத்தமுமுண்டாகும்.

11. ஏழரைக்கு எலும்புருக்கி; மேகம், வயிற்றுப்பொருமல், கண் எரிவு; ஆறு நாளில் உடம்பில் காந்தல்; கைகால் சந்து உளைவு; விப்புருதியுமுண்டாகும்.

12. ஏழேகாலுக்கு இடுப்பில் வாயுவுக்குத்து, வலி, பிடிப்பு, சிரசில் பித்தம், கண்வலி, பாண்டு, சோகை, கைகால் காந்தல், அதிக நித்திரையுமுண்டாகும்.

13. ஏழுக்குப் பித்தம் சிரசிலேறும்; வாயால் ரத்தம் விழும்; சயம், கால், கைகாந்தல், சிலந்திப்புண் உண்டாகும்; உஷ்ணமிகும்; மலந்தீயும்.

14. ஆறேமுக்காலுக்கு அண்டவாயுவு; கண்வலி, மயக்கம், மூன்று வருடத்தில் நீரடைப்பு, கல்லடைப்பு, கைகால் காந்தல், வலி, உளைவு, முகத்தில் வியர்வையுமுண்டாம்.

15. ஆறரைக்கு உடலில் வெதுப்பு, குத்தல், தாகம், அன்னத் துவேசம், சூடு, வாதமுமுண்டாம்.

16. ஆறேகாலுக்கு மூலக்கிராணி, புளியேப்பம், சக்தி, துடை வாழை, அரைச்சோறு போற் கழிதலு முண்டாகும்.

17. ஆறுக்கு இளைப்பும், நெஞ்சிற் கபமுமுண்டாம். இருபது நாளில் மரணமுமுண்டாகும்.

குறிப்பு.—ஐந்தேமுக்கால் முதல் நான்கு விரற்கடை வரை தேகத்தில் கண்ட பிணிகள் அதிகமாகிச் சீவன் பிரியும்.

18. அஞ்சேமுக்தாலுக்கு சன்னியுண்டாம். மயக்கம், மூர்ச்சை யுமுண்டாம். கஞ்சியே குடித்தாலும் மரணம் நிச்சயமாம்.

19. அஞ்சரைக்குப் பிணிகள் அதிகமாகி, விஷம் சிரசிலேறி, மூக்கு பஞ்சு போலும், பல் கறுப்பாயுமாறிப் பத்து நாளிற் சாவான்.

20. அஞ்சேகாலுக்குப் பாதமும் உடம்பும் குன்றிப் போய் தூங்குவது போலிருந்து மறு நாள் மரணமாகும்.

21. அஞ்சுக்கு உடல் வெளுத்துக் குளிர்ந்திடும்; தொண்டை யிற் கபமடைந்து, உடல் பதறிச் சாவது நிச்சயம்.

நோய்முதனாடல் திரட்டு

22. நாலேமுக்காலுக்கு உடலின் நிலைமையை நாம் அறிவது மூடியாததாகும். நாவறண்டு நடுக்க மூண்டாகும். ஏழு நாளில் மரணம் நிச்சயம்.

23. நாலரைக்கு உடல் வீங்கும். கண் குழி விழும். ஒன்பது நாளில் சாவாம்.

24. நாலேகாலுக்கு நடுக்கமுண்டாகும். காலுங்கையும் அசந்து போகும். முகங் கறுக்கும். நெடுமூச்சு வாங்கும். இரண்டு நாளில் மரணமாம்.

25. நாலுக்கு முகத்தில் மயக்கம். கால்களில் வீக்கம். சாவது அஞ்சு நாளில் திண்ணமாம்.

26. பதினொன்று விரற்கடையிருப்பின் உடல் பருத்திருக்கும்; விதியால் சாவு நேர்ந்தாலொழிய காலனுக்கும் நமனுக்கும் சாகானொரு நாளுமென்றறிக!

## அத்தியாயம் XVIII

### கிருமிகள் (புழுக்கள் அல்லது பூச்சிகள்) பற்றிய விளக்கம்.

பூச்சிகளுண்டாம் விதம்.

பூச்சிகள் அகம், புறம் காரணங்களாலுற்பத்தியாகும்.

அகக்காரணம்.—உடற்குள் பக்குவாசயத்தையும் குடலையும் பற்றி பெரிய பூநாகம், நீர்ப்பாம்பு (தட்டைப் புழு), நெல்மூளை (கொக்கிப்புழு), சன்னக் கிருமி, வெண்மைக் கிருமி, செம்மைக் கிருமி என்ற பல விதக் கிருமிகளும், கீரைக்கிருமி, கெர்ப்பப் புழு, திமிர்ப் பூச்சி முதலிய கிருமிகளும் உண்டாகும். இவை மலத்தைப் பற்றியுமுண்டாகுமென்பர். மலம், சிறுநீர், ரத்தம், சுக்கிலம், சீழ், சளி, வியர்வை இவற்றிலும் உற்பத்தியாவதுண்டு.

புறக்காரணம்.—இது உடலின் அசுத்தத்தையும்; அழுக்கையும் காரணமாகக் கொண்டு உண்டாகுமென்பர். இவ்விதமாகத் தலையிலுண்டாவதைப் "பேன்" என்றும், உடலின்மேல் உண்டாவதைச் "சீலைப்பேன்" என்றும் வழங்குவர். இவை கடிப்பதனால் தினவு, தடிப்பு, சிறிய கொப்புளங்கள் முதலியன உண்டாகும்.

வயிற்றுள் கிருமிகளிருப்பதனால் பலவிதமான குறி குணங்களை விளைவிக்கும்.

## சித்த மருத்துவ நோய்நாடல்

**குடற்கிருமிகளின் பொதுக்குறி குணங்கள்—**

உடல் நிறம் மாறல், சுரம், வயிற்றுவலி, மார்பு நோய், வெளுப்பு நோய், ஊதல் நோய், இருமல், வாந்தி, கயநோய், அருசி, அசீரணம், பேதி, வாய் நீரூறல், பிரேமை, சூலை, தொப்புழைச் சுற்றி வலி, வயிறுப் பல், தூக்கத்தில் பற் கடித்தல், மாலைக்கண், குழந்தைகளில் இசிவு, மூக்கில் புண் உண்டாதல், ஆகிய குறி குணங்களை விளைவிப்பதோடு, சில சமயம் குழந்தைகளில் இசிவு (தெற்கத்திற்கணை) உண்டாகும்போது பெரிய நாகப் பூச்சிகள் மேல் நோக்கி தொண்டையில் ஏறிச் சென்று வாந்தி செய்ய மூடியாதவாறு சுவாசக்குழல், நாசித்துவாரங்கள் இவற்றில் நுழைந்து அடைத்து மரணத்தையும் உண்டாக்குவதுண்டு. குழந்தைகள் நித்திரை செய்யும்போதும் இவ்விதம் மரணம் சம்பவிக்கக் கூடும்.

அன்றியும் குடற் கிருமியினால் இராணி, பவுத்திரம், மூலம், மலக்கட்டு, தேக காங்கை ஆகிய நோய்களுமுண்டாகும். மற்றும் சிலவகைக் கிருமிகளால் சுரம், மயிர் உதிர்தல், குட்டம், சொறி, சிறங்கு, படை, கரப்பான் முதலிய பலான சருமரோகங்களை யுண்டாக்கி நிறமாறச் செய்யும், சூறை நோயையும் விளைவிக்கும்.

(கை எழுத்துப் பிரதி.)

**குருநாடி நூலில் கூறிய கிருமியும் அதனாலுண்டாம் நோய்களும்—**

1. "சங்கையில் விஷகாப்பான் வருமாறேது
சாரமூடன் கிருமி விழுந்தன்மையேது
பொங்கியங்கே யூணுருகும்கிராணியேது
பூராயமானதொரு பவுத்திரமேது
தங்குமுளமூலமது தளர்வதேது
தாராளமாய் மலமூந்தளர்வதேது
கங்குலதுபோல் வருத்துங்காந்தலேது,
கருத்துடனேயிந்த வகைக் கருமங்கூறே."

2. "உட்டிணமே அதிகம் வருமிந்திரிய போகத்தா
லூனுருகியத்திலே வேவு கொண்டு
நட்டணமாய் வெந்தகொரு மச்சை தன்னில்
நாட்டமிட்ட கிருமியதுயணுகும் போது
மட்டுடனே கிருமியெல்லாம் பறந்தங்கேறி,
வகையுடனே மாங்கிஷத்தைத் தளைத்துமேவும்
திட்டமுடன் விடகரப்பான் பறந்துமேலே
தினவுடனே பரபரத்துச் சொறியுண்டாமே."

3. "சுக்கிலந்தானுட்டிணத்தால் வேவுகொண்டு,
சுகமான மலமது தான் கட்டுப்பட்டால்,
அக்குலத்தில் மலமிதிலே நாற்றமுண்டாம்,
அழுகியங்கே வெந்துருகி வாழும் போது,
சிக்கி மலந்தான் புழுத்துக் கிருமியுண்டாந்
தீவனங்கள் சென்றதினால் கிருமியெல்லாம்
புக்கி அங்கே பார்த்த திரிச்சரீரமெல்லாம்
பாபரத்து ஊத்தோறும் பசுமையாமே."

4. "வயல் தனிலே பூநாகமண்ணைத்தானே
வருந்தியது புத்துப்போல வத்தையாகும்
பயல்மொழி யீர்தேகத்தில் கிருமிதானே
பரந்துருகி குட்டம் போல் புள்ளி காணும்
மயல துவுங்கிருமியுந்தான் நடந்து புக்கில்
மேனியது சரசரென வெடித்துப் புண்ணாம்
கயல் பெருகும்குழல் மடவீர் சொல்லக் கேளீர்
கரகரத்துச் சொறி பெருகுங் கரப்பான் தானே."

(இதன் பொருள்.)

விஷகரப்பான் உண்டாகும் விதமும், கிருமி விழுந்தன்மையும், கிராணி, பவுத்திரம், மூலம், மலக்கட்டு, தேககாங்கை முதலிய பிணிகளுண்டாகும் வழியை ஆராயுமிடத்து உட்டிணமே காரணமெனக் கூறப்பட்டுள்ளது.

ஸ்திரீசங்க தோடத்தினால் அத்தீயில் சூடு கொண்டு கொழுப்பு, தசை யாவற்றையும் தாக்கி வேக்காடு அதிகமாவதால், அவற்றில் கிருமியுண்டாய்த் துளைத்து எங்கும் பரவி விடகரப்பான் என்னும் நோயை தேகமெங்கும் உண்டாக்கித் தினவுடன் சொறியையும் விளைவிக்கும்.

அதே உட்டிணகாரணத்தினால் மலம் தீய்ந்து கட்டுப்பட்டு நாற்றமுண்டாய் அழுகிக் கிருமிகளுண்டாய், நாம் உண்ணும் உணவிலேயே வளர்ந்து மேற்கண்ட ரோகங்களைப் பிறப்பிக்கும். குட்டம், வெடிப்புண், சொறி, கரப்பான், கிராணி, பகந்திரம், சுக்கிலப் பிரமேகம் முதலிய அனேக நோய்களுக்குத் தேகத் திலுண்டாம் கிருமிகளும் காரணமென்பர்.

மாரி, வாந்திநோய், முதலிய பல பிணிகள் கிருமியால் விளையக் கூடியதென நூல்களில் கூறப்பட்டிருக்கின்றன. கிருமியாலுண்டாம் நோய்கள் முக்கியமாய் "ஆறுவகை" என இரத்தினச் சுருக்க நாடியில் கூறப்பட்டிருக்கிறது. அவை மேற்கூறியுள்ள வயிறு பொருமல், புழுக்கடி, பவுத்திரம், சோகை, குட்டம், சுக்கில பிரமேகம் என்பவைகளாம்.

**2. கிருமியாலுண்டாம் பவுத்திரம் வரலாறு.**

(i) "பவுத்திரந்தான் வருங்குறியைப் பகர கேளீர்
பாதிலுள்ள உட்டிணத்தால் மலந்தான் சிக்கி,
குவித்து நின்று சீரடக்கிக் கொள்கையாலே,
கொண்டிறங்கிச் சிறு நாதன் கிருமியாலே,
தவிர்த்திருக்குங்கிருமி சென்று மூலந்தன்னில்
தட்டகத்தில் தண்டுமுதல் குத்திருக்கும்
குவித்திருக்குமுதரமட்டு மலர்ந்து நின்று
குழங்குலாயரிக்குமதன் குறியதாமே."

(ii) "பத்திநின்ற கிருமிசென்றுயரித்ததாலே
பவுந்திரந்தான் பலாக்காயின் முள்ளுப்போலே
குத்துடனே நொந்துகாத்து கிருமியுண்டாங்
கொப்பளித்துச் சீழ்ரத்தஞ் சலமுண்டாகும்.
தத்துவமும் மர்மமுஞ்சிறிது நாளிலேதான்
தவமுமது கிருமியெல்லாம் தட்டில் புக்கும்
சுத்தி நின்ற மூலத்தில் முறையே போல
தோன்றி நின்ற விருத்தியினால் சலமுண்டாமே."

என்பதனால், பகந்திரம் என்னும் பவுத்திரம் அல்லது பவுந்திரம் உண்டாவதற்குப் பலான காரணங்களிருப்பினும், பூமியின் உட்டிணத்தால் தேக உட்டிணம் அதிகரித்து, மலம் தீய்ந்து கட்டுப்பட்டும், மலத்தை வெளியாக்காமல் அடக்கி வைக்கும் கொள்கையாலே "சிறுநாதன்" என்ற கிருமியுண்டாகி, அவை கீழிறங்கி மூலந்தன்னில் (அபானத்தில்) கடித்து அரித்து விடும் எனவும்; அவ்விதம் கிருமிகள் சென்று தசைகளையும் ரத்தக்குழாய்களையும் அரித்ததால் பலாக்காய் முள்ளுபோல பவுத்திரங்களுண்டாய்க் குத்தலுடன் நொந்து உளைந்து மேலுங் கிருமிகளுண்டாய்க் கொப்பளித்துச் சீழ், ரத்தம், நீருமுண்டாகிக் கசியும். சிறிது நாளில் நோய் வலுத்துச் சுற்றிலும் மூலமுளை போல் தோன்றித் துவாரமுண்டாய் நீர் வடிந்துகொண்டிருக்குமென அறிக.

3. கிருமியாலுண்டாம் குட்டம் வரலாறு.

"குட்டமதுவிட கரப்பான் விடநீர்சூலை
சுரோணிதத்தால் தாதுகெட்டுத் தடிப்புண்டாகும்

மட்டறமே கிருமிசென்று மருவும்போது
வகையாய்க் கிருமியுட விடநீர் சென்று

குட்டமுடன் தேகமெல்லாம் பறக்கும்போது
குழிகுழியாய்க் கிருமியினீர்க் கொள்ளும்புள்ளி

தட்டறவே கிருமியுட நீரால்வந்த
சகலகுட்டம் விடகரப்பான் சாற்றலாமே."

கிருமியால் வரும் நோய்கள். (வேறு)—குருநாடி நூல்.

1. "கிருமியால் வந்ததோடம் பெருகவுண்டு
கேட்கலதின் பிரிவதனைக் கிரமமாக,
பொருமிவரும் வாயுவெல்லாங் கிருமியாலே
புழுக்கடிபோல் காணுமது கிருமியாலே
செருமிவரும் பவுத்திரங்கள் கிருமியாலே
தேகமதில் சோகைக் குட்டங் கிருமியாலே
துருமிவருஞ் சுரோணிதங் கிருமியாலே,
சூட்சமுடன் கிரிசைப்பால் தொழில் செய்வீரே."

என்பதனால், பொருமல், வாய்வு, புழுக்கடி, பவுத்திரம், சோகை, குட்டம், சுக்கிலப்பிரமேகம் ஆகிய ரோகங்கள் கிருமியாலேற்படுவதுண்டு. சோகை எனக்கூறியதால் வெளுப்பு (பாண்டு) நோயையும் குறிக்கும். அன்றியும் குன்மம், கயநோய், சுரம், பாண்டு, மலடு, பெருவயிறு, மகா என்பதினால், விடகரப்பான், விடநீர்சூலை, சுக்கில நட்டம் இவற்றால் தாதுக்கள் கெட்டுத் தடிப்புண்டாகும். அதில் கிருமியுண்டாய், கிருமியுட விஷநீர் தேகமெல்லாம் பரவி, குழிகுழியாய்ப் புள்ளிபுள்ளியாய்க் கிருமியுட விடநீரால் குட்டம், விடகரப்பான் உற்பத்தியாகுமென்றறிக!

4. கிருமியாலுண்டாம் கிராணி வரலாறு.

"கேளுமினிக் கிருமியால் வந்தகிராணியைத்தான்
கிருபையுடன் மூலத்தில் வேவுகொண்டு
நாளுமது கிருமியதின் குடலைச் சுற்றி
ரத்தமுண்டாஞ் சுரோணிதத்தால் மலமுங்கட்டி
மீளுவது வாய்வு சென்று விரவித்தானும்
விரவியங்கே கலந்திருக்கில் கிருமியெல்லாம்
கோளுமது பலவிதமாய்க் கழியும் பாலர்
குடிகெடுத்த கிருமிசெய்த கிராணிதானே."

என்பதினால், மூலத்தில் சூடுகொண்டு கிருமியுண்டாய் குடலைச் சுற்றிலும் வளைந்துகொண்டு ரத்தத்தையும் சுரோணிதத்தையும் கெடுத்து மலச்சிக்கலையுண்டாக்கி, அப்பால் வாயுமிகுந்து கலக்கும் போது பலவிதமான கழிச்சலையுண்டாக்குமென அறிக!

கிருமியாலுண்டாம் சுக்கிலப்பிரமேக வரலாறு.

"சுக்கிலத்தைத் தானரிக்குங் கிருமிசென்று
துடிக்கையுடன் பரபரத்துச் சொறிந்துவூறும்
சிக்கிமலஞ் செரித்துவிழுங் கிரிமியாலே
சீரென மூலமெல்லா மழுகிப்போகும்
தொக்குகின்ற விஷநரம்பு வீணாந்தண்டு
சூழ்ந்திருக்குங் கிருமிசென்று துன்னித்துன்னி
எக்குகின்ற பிரமேகம் எழும்புந்தானே."

என்பதினால், கிருமியானது சுக்கிலதாசயம் செய்து அதனை அரித்துப் பரபரத்து ஊறும். மலச்சிக்கலுடன் மூல மெல்லாங் கெட்டு வீணாதண்டிலுள்ள விஷ நாம்புவரை கிருமியானது சென்று துன்னித் துன்னி அதனையுங் கெடுத்து சுக்கிலப் பிரமேகத்தை விளைவிக்கும். "சுக்கிலப் பிரமியம்" என்றிருப்பது பொருத்தமாகும்.

# அத்தியாயம் XIX

## பிணி தொகுப்பு.

(இரத்தினச் சுருக்கம் நாடி நூல்)

1. "நாளடா நாற்பத்து நாலுநூறு
நயமுடனே நாற்பத்து எட்டுரோகம்."

2. "பாரப்பா வாதமது எண்பத்து நாலு
பருக்கவே பித்தமது நாற்பத்தி எட்டு
தாரப்பா சேத்துமங்கள் தொண்ணூற்றாறு
தனுர்வாயு மூந்நூறு சயமோ ஏழு
வேரப்பா பெருவயிறு எட்டதாகும்
வெகுசூலை யிருநூறு பாண்டுபத்து
நாரப்பா நேந்திரநோய் தொண்ணூற்றாறு
நறுசிலந்தி யறுபதுவுங்குன்ம மெட்டே."

3. "எட்டப்பா சந்நிவகை எழுபத்தாறு
எழுவையுடன் பொருகழலை தொண்ணூற்றைந்து
மட்டப்பா சுரமதுவே எண்பத்தைந்து
மகோதரநோய் ஏழுக்கும் சிரசில் வீக்கம்
மூட்டப்பா அஞ்சுக்கு மூடம்பில்வீக்கம்
உதிரவே பதினாறு பிளவைபத்து
குட்டப்பா படுவனது பதினொன்றாகும்
குமிழிநோய் ஏழுச்சும் பீலிஎட்டே."

4. "பீலியுடனுறு வசியமஞ்சதாகும்
பொரிகரப்பான் தொண்ணூறு கெண்டைபத்து
காலிநோய் குட்டமது இருபதாகும்
கதிர்வீச்சு மூன்றாகுந் திட்டையஞ்சு

சேலிநோய் சோபமது பதினாறுக்கும்
சொல்லிசுவு ஆறுக்கு மூர்ச்சை ஏழு,
வேலிநோய் படுவதிலே நாற்பத்தாறு
வெகுமூல மொன்பதாங் கழல்நோய் பத்தே."

5. "பத்தான பீனிசங்கடி விஷமெழுபத்தாறு
பிணிநாக்குப் பல்லுநோய் எழுபத்தாறு
கத்தாகுங் கிராணியது பிருபத்தைந்து
கண்ணுடனே மாலையது இருபதாகும்
கொத்தாகுமதி சாரமிருபத் தைந்து
கொள்கட்டி பனிரெண்டு கிருமியாறு
முத்தாகு மூட்டுநோய் மூப்பதுக்கும்
முதிர்ந்த நோய் இருபதுசத்தி அஞ்சே."

6. "அஞ்சாகுங் கல்லடைப்பு எண்பதாகும்
அதிர்வாயு தொண்ணூறு திமிர்நோய் பத்து
மஞ்சாகும் விப்புருதி பதினெட்டுக்கும்
வளர்மேக மிருபத்தோர் நீரோவைந்து
பஞ்சாகும் விடபாகம் பதினாறுக்கும்
பகர் காது நோய் பத்து விக்கல்பத்து
துஞ்சாகு மரோசியங்கள் அஞ்சதாகும்
சொல்மூக்கு நோய்பத்து உலகத்தாரே."

7. "குத்தாகுங் கடிதோஷம் ஐநூறுக்கும்
குறிகாயங் குத்துவெட்டு எழுநூறுக்கும்,
பத்தாருங் கிரந்தியுமே நாற்பத்தெட்டு
பறக்கின்ற பொறிவிடமோ எண்ணூறுக்கும்
மூத்தாகும் நாள்கிட்டும்பிற நீர்க்கோர்வை
முதிரவே யிருநூறு துடிநோய் நூறு
கொத்தாகும் பிள்ளைநோய் நூறதாகும்
கூறினேன் வியாதியுட விவரத்தானே."

என்பதினால்; அகத்தியர் இரத்தினச் சுருக்கம் நாடியின் பிரகாரம் மொத்தம் 4,448 பிணிகள் என்றும் அவற்றைப் பின்வரும் விவரப் படிக்குப் பிரித்துள்ளதாகவும் மேற்கண்ட செய்யுளில் கூறப் பட்டிருக்கிறது. மொத்தம் கணக்கில் சற்று வித்தியாச மிருப்பதையுங் காண்கிறோம்.

1. வாதநோய்—84
2. பித்த நோய்—48 (42 may be correct)
3. சேத்தும நோய்—96
4. தனுர்வாயு—300
5. காசநோய்—7
6. பெருவயிறு—8
7. சூலைநோய்—200
8. பாண்டு—10
9. கண் நோய்—96
10. சிலந்தி—60
11. குன்மம்—8
12. சந்தி—76
13. எழுவை, கழலை—95
14. சுரம்—85 (64 may be correct).
15. மகோதரம்—7
16. தலையில் வீக்கம்—5
17. உடம்பு வீக்கம்—16
18. பிளவை—10
19. படுவன்—11
20. கொப்புள் நோய்—7
21. பீலி நோய்—8
22. உறுவசியம்—5
23. கரப்பான்—90
24. கெண்டை—10
25. குட்டம் நோய்—20

26. கதிர் (அலகு) வீச்சு நோய்—3
27. திட்டை (பல்லீறு) நோய்—6
28. சோபை—16
29. இசிவு—6
30. மூர்ச்சை நோய்—7
31. படு (குலை) நோய்—46
32. மூல ரோகம்—9
33. அழல் நோய்—10
34. பிணிசம்
35. கடிவிஷம் 76
36. நாக்கு, பல் நோய்—76
37. கிராணி—25
38. மாலைக்கண்—20
39. அதிசாரம்—25
40. கட்டி—12
41. கிருமி—6
42. மூட்டு (கில்) நோய்—30
43. முதிர்ந்த (Chronic Joint disease) நோய்—20
44. சத்தி (வாந்தி)—5
45. கல்லடைப்பு—80
46. வாயுரோகம்—90
47. திமிர் நோய்—10
48. விப்புருதி—18
49. மேக நீர்—21
50. நீர் ரோகம்—5
51. விஷ பாகம்—16
52. காது நோய்—10
53. விக்கல்—10
54. அரோசியம்—5
55. மூக்கு நோய்—10

56. கடிதோடம்—500
57. காயம், குத்து, வெட்டு—700
58. கிரந்தி—48
59. பொறி (பறவை) விஷம்—800
60. புறநீர்க் கோவை—200
61. துடி (உதடு) நோய்—100
62. பிள்ளை நோய்—100 children diseases

ஆகமொத்தம்—4,448.

குறிப்பு.—இந்தக் கணக்கின்படி 34 நோய்கள் அதிகம் தெரிவதில், பித்த நோய் 42, சுரம் 64, என வைத்துகொண்டால் அதில் 27 குறையும். அப்படியிருந்தும் ஏழு அதிகமாயிருக்கிறது. (4,455). இதனைச் சுருக்கி ஐநூறு தொகையாகவும், மற்றும் பல கணக்காகவும் பற்பல நூலாசிரியர்கள் நோய்களை வகுத்துள்ளார்கள். இது பற்றியே :—

"வாளடா பெருநூலைச் சுருக்கி யானும்
வகையாக ஐநூறு தொகையாகச் சொன்னேன்."

என்பதாக இரத்தினச் சுருக்க நாடியில் கூறியுள்ளார்.

எவ்வகையாகயிருப்பினும், தற்கால நிலைமைக்கேதுவாக எழுதியுள்ள சிறந்த மருத்துவ நூல்களில் காணப்படும் நோய்களின் தொகுப்பை அறிந்து, அவற்றின் குறி குணங்கள் எண் வகைத் தேர்வுகளாலறிந்து கொள்ளும் சிறந்த வழிகளை மாணவர்கள் கவனித்துக் கற்றுக் கொள்ளல் சிறந்த சாதனமாகும். இன்ன நோய்களென்பதை எளிதில் அறிந்து பரிகாரம் செய்ய வசதியாகயிருக்கும்.

# அத்தியாயம் XX

## பிணிகளின் முதற் காரணம்.

சிற்சில நோய்களுக்கு முதற் காரணம் கூறுகிறார்.

(தேரையர்)

1. "வாதமலாது மேனிகெடாது—வளர்பித்தத்
தீதலாது சத்தியடாது—சேத்துமத்தின்
கோதமலாது விக்கலெடாது—குடற்றன்னில்
சீதமலாது சுரமும் வராது—தீரமாமே."

2. "மந்தமலாது வாயுவராது—அனிலபித்தத்
தொந்தமலாது மூலம் வராது—தொடர்வாத
பந்தமலாது குன்மம் வராது—பகர்பித்த
விந்தையலாது மேகம் வராது—தீரமாமே."

3. "அசீரணமன்றிச் சுரம் வராது—திரிதோடக்
காரணமின்றிச் சந்நி வராது—கபமான
நீரதுவுமின்றிச் சோபை வராது—நெடுவாதச்
சார்வதுவுமன்றிச் சூலை வராது—தவராதே."

4. "அபத்தியமின்றித் தோடவிகாரமு—மணுகாது
அபத்தியமின்றி ஔடதினீனமு—மணுகாது
கபத்தினையன்றிக் காசசுவாசங்—காணாது
விபத்தினையன்றி வியர்வை குளிர்ச்சி—வராதே."

(இதன் பொருள்)

1. தேஜஸ் (தேகத்தின் ஒளி) என்னும் அழகும், வன்மையும் கெடுவதற்கு முக்கியமான முதற் காரணம் வலிக்குற்றமேயாம்.

2. பித்தத்தின் கேடு வாந்தி நோய்க்கு முதற் காரணம்.

3. சேத்துமவாத தொந்தமலாது விக்கல் நோய் வராது.

4. ஆமம் என்னும் சீதம் குடலில் (அன்னாசயத்தில்) ஏற்படாது சுரம் வராது.

5. மந்தம்யில்லாது வாயு ரோகம் உண்டாகா!

6. வாதபித்தத் தொந்தமலாது மூல ரோகம் உண்டாகா!

7. வாத பந்தமில்லாமல் சூன்மம் வராது.

8. பித்தமிகுதியில்லாமல் மேகம் உண்டாகா!

9. அசீரணம் என்னும் மந்தம் அல்லாது சுரம் வராது.

10. மூக்குற்றங்களும் ஏககாலத்தில் குற்றமடையாமல் சந்நி பாதம் வராது.

11. ஐயமென்ற நீர்ச் சேர்க்கையின்றிச் சோபை என்னும் ஊதல் நோய் உண்டாகா!

12. வளிக்குற்றமின்றிச் சூலை ரோகம் உண்டாகா!

13. அபத்தியன்றி சப்த தோடங்களுண்டாகா!

14. அபத்தியமின்றி மருந்துகளின் குணம் கெடாது.

15. கபமிகுதியில்லாது காசம் சுவாசம் சயம் இவையுண்டாகா.

16. அதே கபமில்லாது வியர்வையும் குளிர்ச்சி என்றும் சீதளமும் இல்லை என்பர்.

## அத்தியாயம் XXI

### ஒட்டு நோய்கள் (Infection diseases)

**வேறு பெயர்கள்—தொத்து நோய், தொற்று நோய் என்பன.**

இயல்—ஒட்டு நோய் என்பது கீழ் கூறப்பட்ட நோய்களில் ஏதேனுமொன்று ஒருவரைப்பற்றியிருக்கும்போது அந்நோயினை மற்றவர்கள் நெருங்கினாலும் தொட்டாலும் அவர்களுக்கு அந்நோய் தொடரும் என்பர். தொற்று நோயுண்டாகக்கூடிய அணுக்கள் காற்றிலும், நீரிலும், உணவிலும் கலந்து உடலுக்குள் சென்றும் தொற்று நோய்களை விளைவிக்குமென அறிக! அங்ஙனம் தோன்றக்கூடிய நோய்களாவன; அம்மை; வாந்தி பேதி; மகாமாரி என்னும் பிளேக் நோய்; சிற்சில சுரங்கள், சீதபேதி; கண்நோய்; வலிநோய்; பெருநோய்; சிறங்கு; சொறி முதலியன.

குறிப்பு.—இந்நோய்களைப் பற்றிய விவரங்கள் யாவும் ஆங்காங்கு விளக்கப்படும்.

# அத்தியாயம் XXII

## உயிரனல் அல்லது உயிரக்கினி அல்லது சீவாக்கினி அல்லது குக்கியனல் என்பதென்ன?

"ஆதாரமான அழல் உஷ்ணமாச்சு
யணுகி வந்தபல பிணிக்கு மிறையேயாச்சு
பூதாதிதங்களுக்குத் துணைவனாச்சு
பொருந்தியதோர் தசவாயுக் கன்னையாச்சு
சூதான கருவிகளுக்குப் பிதாவுமாச்சு
சூட்சமுள்ள பிராணனிருப்பிடமுமாச்சு
வாதாதி உடலுயிர்க்கு விளக்குமாச்சு
மகத்தான வக்கினியாற் சுரமுமாச்சே."

என்பதினால்;

1. உடலுக்கு ஆதாரமாயுள்ள வாதாதி மூத்தோடங்கள், ஏழு உடற்றாதுக்கள், மலாதிகள், ஞானேந்திரியம், கருமேந்திரியம், மனசு, தசவாயுக்கள், தசநாடிகள் ஆகிய இவையாவும் சேர்ந்து உருவகப்பட்ட உடல் நன்னிலையில் யிருத்தற்குரிய அளவி லிருக்கும் "அழல்" "உயிரனலாகும்". சுருங்கக் கூறில் ஸ்தூல சூட்சம் பஞ்ச பூதமயமான உடல், உயிர் சேர்ந்திருக்கப்பட்ட தேகத்தை நன்னிலையில் வைத்திருக்கப்பட்ட "அழல்" "உயிரனல்" அல்லது "உயிரக்கினி" அல்லது "சீவாக்கினி" எனப்படும்.

2. உடலில் அமைந்துள்ள வாதாதி மூத்தோடங்களை யனுசரித்து வருகின்ற நோய்கள் பலவற்றிற்கும் தலைமை யுடையது சுரமாதலால், இதனை ("அழல்" என்னும் சுரத்தை) "பல பிணிக்கும் இறை" என்றார். இதனால் சுரமின்றிப் புலப்படும் நோய்களும் சில உண்டு என்பது தெரிய வருகிறது.

3. மனம், புத்தி, அகங்காரம் என்னும் அந்தக் காரணங்களுடன் ஓசை, ஊறு, ஒளி, சுவை, நாற்றம் என்னும் தன்மாத்திரை ஐந்தும் கூடிய "புரியட்ட காயம்" ஆகிய எட்டுக்கும் "உயிரனல் துணைவனாக" யிருக்கிறது.

4. உடலிற் பொருந்தியுள்ள வாயுவு ஒன்றை ஐந்தாகவும், அவற்றிற்கு அனுகுணமாக உபவாயுக்கள் ஐந்தையும் பிரித்துத் தோற்றுவித்து "அன்னைபோல் பாதுகாப்பதும்" உயிரனலே யாகும்.

5. சூதாடுகின்ற சொக்கட்டான் காய் அடிக்கடி நிலை மாறுதல் போல மாறுகின்ற நவக் கருவிகள் (அதாவது வளி, அழல், ஐயம் இம்மூன்றினாலேற்படும் நவத்துவாரங்கள்), இன்னும் உயிர்ப்புக் காதாரமாகிய மற்றக் கருவிகள் அதனதன் தொழில்களைப் புரிவதற்கு உயிரனல் "தந்தையைப் போல்" ஆதாரமா யிருக்கின்றது.

6. தூண் உருவமாகிய "பிராணன்" என்கிற உயிர் தங்கி யிருத்தற்கு உயிரனலே மூக்கிய காரணமாயிருக்கின்றது. அதாவது இருப்பிடமளிக்கிறது எனவும் சொல்லலாம்.

7. புறப் பொருளை ஒரு விளக்கு வெளிச்சத்தைக் கொண்டு அறிவது போல "உயிர் உடலை விட்டு நீங்கும், நீங்காதென்பதை அறிவதற்கு" உயிரனல் ஒரு விளக்கைப் போலிருக்கின்றது.

8. உயிரனல் தன்னிலை விட்டு மாறி புற நிலைப்புறங்களில் பரவுமாயின் "சுரம்" என்ற பெயரைப் பெறும்.

குறிப்பு.—உயிரனல்—அழல் என்னும் பித்தநாடியைக் குறிக்கும்.

800 009
143266
LC1416
N8J1